லெனின்

சமகாலத்தவர்களின் நினைவுகள்

CONNEMARA PUBLIC LIBRARY
5 MAR 1985
MADRAS
REFERENCE

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ 1980

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்கள்: வ. சண்முக சுந்தரம்
பூ. சோமசுந்தரம்

ТАКИМ БЫЛ ЛЕНИН
Воспоминания современников
На тамильском языке
Составитель: **Жук Г.**

© தமிழ் மொழிபெயர்ப்பு (சில மாறுதல்களுடன்)
முன்னேற்றப் பதிப்பகம், 1980

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Т $\frac{10103-657}{014(01)-80}$ 796—79 0103020000

பொருளடக்கம்

கம்யூனிஸ்டுகள் கட்சியின் நிறுவகர் தலைவர்

க. ம. கிரிஸிஸானவ்ஸ்கி
விளதீமிர் இலீச்சைப் பற்றி 9

ஆ. இ. உல்யானவா-எலிசாரவா
இலீச் பற்றிய நினைவுக் குறிப்புகளிலிருந்து . . 41

வ. அ. ஷெல்குனோவ்
பீட்டர்ஸ்பர்கில் விளதீமிர் இலீச் 59

வி. அ. கினியாசெவ்
நிகோலாய் பெத்ரோவிச் 63

த்செ. ச. பப்ரோவ்ஸ்கயா (ஜெலிக்சோன்)
புரட்சிகரக் கடந்தகாலத்தின் சில பகுதிகள் . . 72

மி. க. த்ஸ்ஹாகயா
லெனினுடன் சந்திப்புகள் 83

அ. வ. லுனச்சார்ஸ்கி
1905ஆம் ஆண்டில் லெனின் 91

அ. க. ஷ்லிஹ்தெர்
ருஷ்யாவில் பகிரங்கக் கூட்டத்தில் இலீச் நிகழ்த்திய முதல் உரை 99

க்ளா. தி. ஸ்வெர்த்லோவா
லெனின் இத்தகையவர் 109

நி. அ. செமஷ்கோ
பிராக் மாநாட்டில் 115

க. இ. பெத்ரோவ்ஸ்கி
மூதறிஞரான எங்கள் தலைவர் 120

புரட்சி மேதை

யா. ஸ்த. கனேட்ஸ்கி
பிப்ரவரி முதல் அக்டோபர் வரை 131
நி. இ. பத்வோய்ஸ்கி
1917ல் வி. இ. லெனின் 149
நி. அ. எமெல்யானவ்
கடைசித் தலைமறைவு வாழ்க்கை 201
ஏய். அப். ராஹ்யா
கட்சி இட்ட பணி நிறைவேற்றப்பட்டது! . . 212
மர். வ. பபானவா
1917 அக்டோபருக்கு முன்னுல் லெனின் . . . 233
வி. தி. போன்ச்-புருயேவிச்
நிலம் பற்றிய அரசாணையை விளதீமிர் இலீச் எழுதியது எப்படி 239

புதிய சமுதாயத்தின் மூலவர்

ந. க. குரூப்ஸ்கயா
அக்டோபருக்கு அடுத்த முதல் மாதங்கள் . . 247
கி. வ. சிசேரின்
லெனினும் வெளிநாட்டுக் கொள்கையும் . . 254
ஆல்பெர்ட் ரைஸ் வில்லியம்ஸ்
லெனினது அரசியல் தொலைநோக்கு . . . 269
ஸ்தி. க. கில்
1918 ஆகஸ்டு 30ல் 273
கி. ம. கிரிஸிஸானவ்ஸ்கி
சிந்தனையாளர், புரட்சியாளர் 280
ஹெ. ஓ. கிராப்தியோ
நீர்மின்நிலையம் கட்டுவோம் 292
அ. அ. ஸாரவ்
மாபெரும் வழியனுப்பு வார்த்தைகள் . . . 297

பேலா கூன்
கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில். 308

என்றென்றும் மக்களுடன்

வி. அ. கர்பீன்ஸ்கி
லெனின்—தலைவர், தோழர், மனிதர் 315

பி. அர். தனீலவ்
புத்தீலவ் தொழிற்சாலையில் லெனின் 321

கி. கு. கரல்யோவ்
தோழர் லெனினைப் பற்றி 324

ஆ. வ. இவனேவ்
லெனினது வரவேற்பறையில் புத்தீலவ் தொழிலாளி 332

ஆல்பெர்ட் ரைஸ் வில்லியம்ஸ்
கிரெம்ளினில் லெனினுடன் விவசாயிகள் . . . 337

அ. அ. வினக்ராதவ்
மறத்தற்கரிய நிகழ்ச்சி 341

இ. இ. பரிசோவ்
சுபோத்னிக் செய்கிருர் லெனின் 351

ஓ. இ. செர்னேவ்
கட்சி உறுப்பினன் அல்லாத, சைபீரிய விவசாயியான நான் விளதீமிர் இலீச்சைக் கண்டதும் இதுல் விளைந்ததும்... 354

மிகப் பெரியவர் மிக எளியவர்

யெ. தி. ஸ்தாசவா
போதகர், நண்பர் 361

கி. ஸெத்கின்
என் நினைவுகளில் லெனின் 378

அ. மி. கொல்லந்தாய்

லெனின் பெரியது பற்றிச் சிந்தித்தார், சிறியதை யும் மறந்து விடவில்லை 399

அ. செ. செரஃபிமோவிச்

லெனினது விருந்தினராக 404

ந. க. குரூப்ஸ்கயா

லெனினது மனித வடிவம் 411

இலீச்சுடன் உரையாடல் 414

ஆசிரியர்களின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகள். 419

கம்யூனிஸ்டுகள் கட்சியின் நிறுவகர் தலைவர்

விளதீமிர் இலீச்சைப் பற்றி

கிரிஸிஸானவ்ஸ்கி

1

விளதீமிர் இலீச் லெனின் வாழ்ந்த காலத்தில், அவருக்கு வெகு அருகில் இருக்கும் பேறு பெற்றிருந்த எங்கள் அனைவருக்கும் அவரைப் பற்றியே பேசுவதுதான் எல்லாவற்றிலும் உவப்பூட்டும் விஷயமாக இருந்தது. ஏனெனில் அவரது வடிவில் எங்களுடன் சேர்ந்து தொண்டாற்றுபவர் எத்தகைய மனிதர் என்பதை அவருடன் வாழ்ந்து பணியாற்றிய நாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் முன்னதாகக் கட்டாயம் புரிந்து கொள்ளவும் உணரவும் வேண்டியிருந்தது. ஆனால் இந்த மனிதரின் இயல்பிலிருந்த மிகப் பெரிய தன்னடக்கம் அவரைப் பற்றி உரையாடுவதற்கு எங்களை அனுமதிக்கவில்லை.

இப்போது, மிக விரிவான மக்கள் திரளுடன் எத்தகைய வலிமைமிக்க உறவுப் பிணைப்புக்கள் அவரை இணைத்திருந்தன என்பது எல்லோருக்கும் தெளிவாகியிருக்கும் சமயத்தில், உலகனைத்தும் அவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், அவரைக் குறித்து உரையாடுவது எங்களுக்கு முற்றிலும் வேறொரு காரணத்தால் கடினமாக இருக்கிறது: அவர் என்றென்றைக்கும் எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார் என்ற எண்ணத்தை ஏற்றுக் கொள்ள எங்களால் எவ்வகையிலும் முடியவில்லை.

கோடானுகோடி உழைப்பாளி மக்களது அசாதாரண அன்புக்குரிய ஒரு மனிதரை, முற்றிலும் அதீதமான மேதை வாய்ந்த ஒருவரை, விளதீமிர் இலீச்சின் வடிவில் நாம் இழந்து விட்டோம் என்பது இப்போது நிச்சயமாக மிகப் பெருந்தொகையான மக்களுக்குத் தெளிவாக விளங்கி விட்டது. அவருக்கு நிகரான ஒரு மனிதரை நமது நாடு

இது வரை பெற்றெடுக்கவில்லை என்பது எப்படி விவாதத்துக்கு இடமற்ற விஷயமோ அப்படியே அவர் கடந்து சென்ற வரலாற்றுப் பாதையின் மாபெரும் முக்கியத்துவமும் விவாதத்துக்கு இடமற்றது.

எனினும், இந்த மனிதரது மேதையின் மர்மத்தை உட்புகுந்து ஆராய்வதும், அவரை நம் எல்லோருக்கும் மேலே மிக மிக உயரத்துக்கு ஏற்றிய அவருடைய சிறப்பியல்புகளைச் சரியாகச் சித்திரிக்கும் வகையில் அவரது ஆளுமையின் அடிப்படைத் தன்மைகளை வெளிப்படுத்துவதும் அவ்வளவு எளிதல்ல....

இந்தப் பிரச்சினை மகத்தானது, கடினமானது: ''யுகங்களே முற்றுந் தீட்டும் போதும், முற்றுந் தீட்டப்படா உருவை!'' முதல் பார்வைக்கு அவர் பெருத்த உளப்பதிவு ஏற்படுத்தவில்லை. ஆனால், முதலாளித்துவப் புரட்சிகளுடன் ஒப்பிடும் போது பாட்டாளிப் புரட்சிகளின் தனிப்பட்ட சிறப்பியல்புகள் பற்றி மார்க்ஸ் என்ன சொன்னார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சாராம்சமான இயல்பே இந்தப் புரட்சிகளின் தலைமைப் பாத்திரமாகிய மக்கள் திரளின் செயல்களில் வெளிப்படாடோபத்துக்கும் பகட்டான நாடகத் தன்மைக்கும் இடந்தருவதில்லை என்பது உண்மையானால், பாட்டாளி வர்க்கத்தின் உண்மைத் தலைவர்கள் என்னும் பெருத்த வரலாற்று முக்கியத்துவமுள்ள பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கும் நபர்களிடமும், ஒரு வகையில் சொன்னால், சிறப்பான எளிமை வெளிப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு அல்லவா? என்னவாயினும் இம்மாதிரி வெளிப்பூச்சான, பகட்டான டாம்பீகம் இன்மை விளதீமிர் இலீச்சின் இயல்புக்குரிய சிறப்பாக விளங்கியது.

விளதீமிர் இலீச்சின் எளிய, அடக்கமுள்ள வெளித் தோற்றத்திலிருந்தே தொடங்குவோம். சாதாரணத் தொப்பி அணிந்த அவரது உயரமற்ற உருவம், எவ்வகைத் தொழிலாளர்களுக்கிடையிலும் கவனத்தைக் கவராமல் எளிதில் ஒன்றுகலந்து விடக் கூடும். கண்ணுக்கு இனிய

பழுப்பேறிய நிறமும் ஓரளவு கீழை நாட்டுச் சாயலும் உள்ள முகம்—லெனினது வெளித்தோற்றத்தைப் பற்றிச் சொல்லக் கூடியதெல்லாம் அநேகமாக இதுதான். ஏதேனும் குடியானவர் உடுப்பை அணிந்து கொண்டு வோல்காப் பிரதேச விவசாயி மக்களின் எந்தக் கூட்டத்திலும் விளதீமிர் இலீச் இவ்வளவே சுலபமாக ஒன்றிக் கலந்துவிட முடியும். கீழ்நிலையிலுள்ள இந்தப் பொதுமக்களிடமிருந்து நேரே வந்தது போன்ற, அவர்களுடன் இரத்த சம்பந்தம் உள்ளது போன்ற ஏதோ ஒன்று லெனினுடைய வெளித் தோற்றத்தில் காணப்பட்டது. ஆனால் விளதீமிர் இலீச்சின் விழிகளை, அசாதாரணமான, ஊடுருவி நோக்குகின்ற, உள் வலிமையும் ஆற்றலும் நிறைந்து ததும்பும் கரும்பழுப்புக் கண்களை உற்றுப் பார்த்ததுமே, அவர் சற்றும் சாதாரண வகையானவர் அல்ல என்பதை நாம் உணரத் தொடங்கி விடுவோம். விளதீமிர் இலீச்சின் புறவடிவை ஒரு சிறிது நெருங்கிக் கவனிக்கத் தொடங்கியவுடனேயே அவரது எளிய புறத்தோற்றம் காரணமாக ஏற்பட்ட ஆரம்ப மனப்பதிவு மறைந்து அவருடைய தனிச்சிறப்புள்ள மேதை நம் உள்ளத்தில் பதியும். விளதீமிர் இலீச்சின் பெரும்பாலான உருவப்படங்கள் இந்த உளப்பதிவை வெளியிட வல்லமை அற்றவை. வருங்காலத்தில் விளதீமிர் இலீச் ஆற்றவிருந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்ட செயல்களைப் பற்றிய முன்னுணர்வு எதுவும் அற்றவராயினும் பிரெஞ்சுச் சிற்பி ஒருவர், அவருடைய நெற்றியின் அற்புத வடிவமைப்பை வியந்து பாராட்டி, தனிச்சிறப்புள்ள ஆன்மிக அழகு பொலிவதாக அவர் கருதிய லெனினது தலையைப் போல் சிற்பஞ் செதுக்க அனுமதிக்குமாறு வேண்டி, பாரிஸ் நகரில் அவரை விடாது பின்தொடர்ந்தார் என்றால் அது இயற்கையே. பண்டைக்காலத்தின் மாபெரும் சிந்தனையாளர் சாக்ரட்டீசின் உருவச்சிலைகளில் காணப்படுவது போன்ற நெற்றி லெனினுக்கு அமைந்திருப்பதாக இந்தச் சிற்பி கூறினார்.

எனினும் லெனினுடைய ஆன்மிக இயல்பு, அவரது புறத்தோற்றத்தில் அல்ல, மக்களுடன் கலந்து அளவளா

வும் பொழுதுதான் மிக அதிக வன்மையுடன் வெளிப் பட்டது. அவரைப் பற்றி முன்னர் அறியும் வாய்ப்பு பெருத நபர்களிடையே அவருடன் இருக்கும் சந்தர்ப்பம் எனக்குப் பலமுறை கிடைத்தது. அம்மாதிரிச் சந்தர்ப்பங் களில், சந்தேகமின்றி நேரப் போவதை நான் எப்போதும் முன்கூட்டியே தெரிந்துகொள்வேன். அது என்னவென்ருல், விளதீமிர் இலீச் எங்கு தோன்றிஞலும் சரி, எத்தகைய சூழலில் தோன்றிஞலும் சரி, குறித்த விஷயம் பற்றி அவர் பேச நேர்ந்தால் விரைவில் அவர் எல்லோரது கவனத் திற்கும் மையமாக விளங்குவார் என்பதை முன்னரே கூற முடியும் என்பதே. கூச்சலும் ஆரவாரமும் நிறைந்த சொற்கள் எவற்றையும் அவர் உரைப்பதில்லே. ஆனல் அவர் சொல்லுவது எல்லாம் மிகுந்த முக்கியத்துவம் உள்ள தாகவும் பொருளாழம் செறிந்ததாகவும் துல்லியமாகவும் கருத்து வெளியீடு கொண்டதாகவும் திகழும் ஆதலால், அவ் வாறு பேசவல்ல மனிதரின் தனிச்சிறப்புள்ள மேதாவிலா சம் எல்லோருக்கும் தெற்றெனப் புலப்பட்டுவிடும்....

கடந்த நூற்ருண்டின் இறுதிப் பத்தாண்டின் தொடக் கத்திலிருந்த பீட்டர்ஸ்பர்க் நகர், பீட்டர்ஸ்பர்க் மாண வர் புரட்சிக் குழுக்கள் ஆகியவற்றின் காட்சிகள் எனது மனக்கண் முன் தோன்றுகின்றன. பீட்டர்ஸ்பர்கில் விளதீ மிர் இலீச்சின் நடவடிக்கைகளது முதற் காலகட்டத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு, இந்த அசாதாரண இளேஞர் முயன்று பெற விரும்பிய குறிக்கோள்கள் யாவை என்பதைக் காட்ட முயல்கிறேன். பெரிதும் இயற்கைத் திறமைகள் பெற்றவரும் உயிராற்றல் நிறைந்தவருமான விளதீமிர் இலீச் உல்யானவின் வடிவிலிருந்து உயர் மேதை லெனினே உருவாக்கிய அவரது பிரத்தியேகமான தனித்தன்மையின் சிறப்பான அம்சம் இதன் மூலம் ஓரளவு தெளிவாகும் என்று எனக்குத் தோன்றுகிறது.

விஞ்ஞான சோஷலிச போதனே, உழைப்பாளி மக்க ளுக்கு யாவற்றிலும் உயர்ந்ததும் யாவற்றிலும் முக்கிய மானதும் ஆகிய விஞ்ஞானம் என்று நாம் கருதுகிறேம். தலேசிறந்த முக்கியத்துவமுள்ள விஷயத்தைப் புரிந்து

கொள்வதற்கான திறவுகோலே இந்த விஞ்ஞானம் தருகிறது: எவ்வாறு வாழ வேண்டும், வாழ்க்கை அனைவருக்கும் எதிராக அனைவரும் நடத்தும் போராக இருப்பதிலிருந்து மாறி, ஒத்தியைந்த, மகிழ்பொங்கும், சோதர அமைப்பு ஆகுமாறு அதைச் சீரமைப்பதன் பொருட்டு எவ்வாறு போராட வேண்டும் என்று அது காட்டுகிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்குப் பரிணமிக்கும் கடினமான நிகழ்முறையைச் செயல்படுத்துவதற்கான போராட்டத்திற்கு விறல்மிக்க சாதனங்களை முன்கூட்டித் தயாரித்தவை மார்க்ஸ், எங்கெல்ஸ் இவர்களது நூல்களே ஆகும். எனினும் மேற்கு ஐரோப்பாவில் அரசியல் நிகழ்ச்சிகள் உருவான விதம் காரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபது ஆண்டுகள் வர்க்கப் போராட்ட முனையில் ஒப்பு நோக்கில் அமைதி நிலவிய ஆண்டுகளாக விளங்கின. மெதுவான பரிணாமம் நிகழ்ந்த இந்த ஆண்டுகளில் ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சி ஊட்டமும் உரமும் பெற்று விட்டது என்று எங்கெல்ஸ் வலியுறுத்தியது உண்மையே. ஆயினும், கடைசியாகப் பார்க்கும் போது, மார்க்ஸையும் எங்கெல்ஸையும் போன்ற வருங் காலத்தின் மாபெரும் கொல்லர்களால் உருவாக்கப்பட்ட விலைமதிப்பற்ற ஆயுதங்கள், அதே கட்சியின் நடவடிக்கைகளின் விளைவாக, இந்தச் ''சட்டபூர்வமான எதிர்க் கட்சியின்'' தீங்கற்ற ஆயுதக்கிடங்கில் சேமிப்பு வடிவில் வைத்துவிடப்பட்டன.

இந்த நிலையில் நமது நாட்டின் வடக்குச் சமவெளிகளில் தோன்றுகிறார் ஓர் அசாதாரண மனிதர். மார்க்சின் மேதையால் உருவாக்கப்பட்ட ஆயுதத்தின் தாக்கு திறனை வேறு எவரும் செய்யாத விதத்தில் அவர் மதிப்பிடுகிறார். அவருடைய கருத்துப்படி மார்க்சியவாதி முதன்மையாகப் புரட்சி வீரன். ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் இந்தச் சேமிப்பு ஆயுதக்கிடங்கை அவர் புயல் வேகத்தில் உடைத்து உட்புகுகிறார், சுவர்களிலிருந்து போர்க் கவசங்களைப் பிய்த்து எறிகிறார், சாளரங்களையும் கதவுகளையும் விரியத் திறக்கிறார், எச்சரிக்கை மணியை அடிக்கிறார்,

லட்சக் கணக்கான உழைப்பாளி மக்களைத் தம்பால் ஒன்று திரட்டுகிறார், முதலாளித்துவத்துடனும் அதன் ஏவலர்களுடனும் உயிருக்காக அல்ல, மரிக்கும் வரை போராடுவதற்காக அவர்களை மார்க்சின் ஆயுதங்களால் சன்னத்தர்கள் ஆக்குகிறார். இந்த மனிதர்தாம் விளதீமிர் இலீச் உல்யானவ் என்னும் இயற்பெயர் கொண்ட லெனின்.

கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த அரசியலே எல்லாவற்றிலும் சிறந்த அரசியல் ஆகும். இந்த அர்த்தத்தில், மார்க்சின் போதனைகளது வழிகாட்டும் கோட்பாடுகளால் சன்னத்தராயிருந்த விளதீமிர் இலீச் தலைசிறந்த அரசியல்வாதியாகத் திகழ்ந்தார்.

ஆனால் யதார்த்த உய்த்தறிவு எனப்படும் தனிப்பட்ட உணர்வையும் நல்ல அரசியல்வாதி கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். ருஷ்யாவின் மூன்று புரட்சிகளின் காலத்தில் விளதீமிர் இலீச் யதார்த்த நிலைமைகளை இம்மாதிரி உள்ளாழ்ந்து கிரகித்துக் கொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் சிறந்த முன்னுதாரணத்தை நமக்குத் துலக்கமாகக் காட்டினார்....

*1893ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் வி. இ. உல்யானவ் எங்களிடம்** வந்து சேர்ந்ததை, அதன் உயிரூட்டும் விளைவு காரணமாக இடிமழைப் பொழிவுடன் ஒப்பிடலாம். அந்தக் கணம் முதல் எங்களுக்குப் புது வாழ்வு தொடங்கி விட்டது. கோடைகாலத் தொழிற்சாலைப் பயிற்சியிலிருந்து 1893ல் ஆண்டு இலையுதிர் காலத்தில் திரும்பி வந்த நான், எங்கள் குழு முழுவதும் வழக்கத்துக்கு மீறிய உற்சாகப் பெருக்குடன் விளங்கக் கண்டேன். வோல்காக் கரையிலிருந்து எங்களிடையே வந்திருந்த எங்கள் புதிய நண்பர் விளதீமிர் உல்யானவ் மிகக் குறைந்த நேரத்தில் எங்கள் ஸ்தாபனத்தில் மைய இடத்தைக் கைப்பற்றிக் கொண்டதுதான் இந்த உற்சாகப் பெருக்குக்குக் காரணம்.

---

* இங்கு குறிப்பிடப்படுவது பீட்டர்ஸ்பர்க் மார்க்சிய வட்டம். இதில் பிரதானமாக தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களே இருந்தனர்.—(ப-ர்.)

''நரோத்னயா வோல்யா''* ஸ்தாபனத்தின் புகழ்பெற்ற கடைசி உறுப்பினர்களில் ஒருவரும் 1887ம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப் பெற்றவரும் ஆகிய அலெக்சாந்தர் இலீச் உல்யானவின் சகோதரர் அவர் என்பதே எங்கள் குழுவில் அவர் நட்புடன் வரவேற்கப்படுவதற்கு மிகச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது. பின்புறம் கண்ணோட்டி, 23 வயதினரான அப்போதைய லெனினுடைய உருவத்தை நினைவுகூர்கையில், வியப்பூட்டும் ஆன்மிகச் செம்மை, அருஞ்செயல் ஆற்றுவதற்கும் முடிவு வரை தன்னை அர்ப்பணிப்பதற்கும் இடையறாத ஆயத்தத் துக்கு ஒப்பான நிலையான உற்சாகம் ஆகிய சிறப்பான தன்மைகளை இதில் காண்கிறேன். குடும்பத் துன்ப நிகழ்ச்சியிலிருந்து, தமையனின் வீர ஆதர்சத்திலிருந்து ஒருவேளை இது அவருக்கு நேராக வந்திருக்கலாம். முந்தைய வீரப் புரட்சிப் போராட்ட மரபுடன் இது அவரை எங்களைக் காட்டிலும் வேறு வகையில் பிணைத்தது. எனினும் சடங்கு பாராட்டும் அளவுக்கு மார்க்சியவாதிகளாயிருந்த எங்களுக்கு இன்னும் அதிக ஆழ்ந்த மனப்பதிவு ஏற்படுத்தியது மார்க்சின் ஆயுதத்தைக் கையாள்வதில் அவருக்கு இருந்த ஆச்சரியகரமான திறமையும், புள்ளிவிவரத் தொகுப்புக்களிலிருந்து நேர்முகமாகப் பெற்ற, நாட்டின் பொருளா

---

* நரோத்னயா வோல்யா—1879ல் ஜாரின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காகப் உருவாக்கப்பட்ட இரகசிய ஸ்தாபனம். அதன் உறுப்பினர்கள் தனிப்பட்ட பயங்கரச் செயல்கள் புரிந்தார்கள். ருஷ்யாவின் விடுதலைப் போராட்டத்தின் முதலாளித்துவ-ஜனநாயக கட்டத்தில் மேலோங்கி இருந்தது. இது விவசாயி ஜனநாயகவாதிகளின் நலன்களைப் பிரதிபலித்தது. 1880ஆம் ஆண்டு முதல் புரட்சிகர நரோதியவாதம் அதன் புரட்சித் தன்மையை இழந்து விட்டது. சித்தாந்த ரீதியில் மார்க்சியத்தால் தகர்க்கப்பட்டு விட்டது. பாட்டாளி வர்க்க கட்டத்தின் துவக்கத்தில் விடுதலை இயக்கத்தின் தலைமை மார்க்சிய-லெனினியக் கட்சியைத் தனது தலைமையில் கொண்ட தொழிலாளி வர்க்கத்திற்கு மாறிச் சென்றது. —(ப-ர்.)

தார நிலைமை குறித்த சிறந்த, வியப்பூட்டும் அறிவுமே யாகும்.

''சந்தைகளைப் பற்றி'' என்னும் விஷயம் குறித்து எங்கள் வட்டத்தில் விளதீமிர் இலீச் உரையாற்றிய போது நான் அவரை முதன் முறை சந்தித்தேன். இந்த உரையில் விளதீமிர் இலீச் எங்களுக்கு முன் பளிச்சுப் பளிச்சென்று புள்ளிவிவர எடுத்துக்காட்டுக்களை வளமாக வாரி வழங்கியதைக் கண்ட நான், நமது சொந்தப் பொருளாதாரத்தை அறிந்து கொள்வதற்கு மார்க்சியம் எத்தகைய அச்சுறுத்தும் ஆயுதத்தைத் தருகிறது என்று உணர்ந்து அளவற்ற திருப்தி அடைந்தேன். வளரும் முதலாளித்துவத்திற்குச் சந்தைகள் அமைப்பது பற்றியது போன்ற மிகவும் சித்தாந்த ரீதியான பிரச்சினைக்குத் தனி வகையான ஸ்தூல அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டது எங்கள் வட்டத்தின் சில உறுப்பினர்களுக்கு ஓரளவு அதிர்ச்சியூட்டக்கூடச் செய்தது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வளர்ச்சி பற்றிய அவர்களுடைய குழப்பமான, செயற்கையான புனைவுகளை எல்லாம் ருஷ்யாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களின் அடிப்படையில் விளதீமிர் இலீச் குப்புறக் கவிழ்த்து விட்டார்.

வழுக்கையான முன்மண்டை, பெருத்த நூலறிவு, இவை காரணமாக விளதீமிர் இலீச் ''ஸ்தாரீக்'' (கிழவன்) என்ற கேலிப்பெயரைச் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அவரது இளமைத் துடிப்புள்ள விரைந்த இயக்கத்துக்கும் அவருக்குள் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த வாலிப ஆற்றலுக்கும் முற்றிலும் பொருந்தாததாக ஒலித்தது இந்தப் பெயர். ஆனால் இந்த இளைஞர் சுயேச்சையாகக் கையாண்ட ஆழ்ந்த நூலறிவு, வாழ்க்கைப் பிரச்சினைகளையும் பல்வித மக்களையும் அணுகுவதில் அவர் கடைப்பிடித்த சிறப்பான நைச்சியமும் விமர்சனத் திறமையும், நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா குருப்ஸ்கயா உண்மையுடன் குறிப்பிட்டது போல, செருக்குள்ள ஆசிரியர் மாதிரி இன்றி, முதன்மையாக நண்பர், தோழர் என்ற முறையில் அவர் எந்தத் தொழிலாளர்களை அணுகினரோ

அவர்களுக்கிடையே ஒருவராகக் கலந்துவிடும் அவரது சாமர்த்தியம்—இவை எல்லாம் நாங்கள் கொடுத்த புனை பெயர் அவருக்கு நிலையாகப் பொருந்துமாறு செய்து விட்டன. இந்தத் தனிவகையான "கிழவருடன்" நான் அறிமுகமான சில மாதங்களுக்கெல்லாம், இம்மனிதரின் முன்னிலையில், அவருடன் நட்புடன் உரையாடுகையில் மட்டுமே வாழ்வு ஏதோ சிறப்பான நிறைவு பெற்றுவிட்டது போல உணரலானேன். அவர் அப்பால் சென்றதுமே ஏனோ வண்ணங்கள் உடனே ஒளிமங்கின, எண்ணங்கள் அவர் பின்னேயே பாய்ந்தன....

எங்கள் குழுவில் இடம் பெற்றதும் விளதீமிர் இலீச் எங்களது முறைகளைத் தாமதமின்றிப் புரட்சிகரமாக்கத் தொடங்கினார். பொறுக்கியெடுக்கப்பட்ட தொழிலாளர்களின் சிறிய வட்டங்களில் "மட்டுமீறி ஆழ்ந்த" போதனை நடத்துவதிலிருந்து பீட்டர்ஸ்பர்கின் அதிக விரிவான தொழிலாளர் திரள் மீது செயல்படுவதற்கு மாற வேண்டும், அதாவது பிரசாரத்திலிருந்து கிளர்ச்சிக்கு மாற வேண்டும் என்று அவர் எல்லாவற்றுக்கும் முன்னதாகக் கோரினார். இந்த நோக்கத்துடன் பீட்டர்ஸ்பர்கில் இருந்த எல்லா மார்க்சியத் தொழிலாளர் வட்டங்களையும் "தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்ட கழகம்"* ஒன்றில் இணைத்தார்.

1894ம் ஆண்டுப் பனிக்காலம் தொடங்கி, பீட்டர்ஸ்பர்க் உளவுப் போலீசார் "அனுமதேயத் துண்டுப் பிரசுரங்கள்" கொண்ட "அவதூறான" இலக்கியத்தை அதிகரித்த அளவில் படித்துப் பார்க்க நேர்ந்தது. பண்பற்ற ஹெக்டோகிராப் முறையில் தயாரிக்கப்பட்டிருந்த போதி

---

* "தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகம்" 1895ம் ஆண்டு இலையுதிர்காலத்தில் வி. இ. லெனினால் ஒழுங்கமைக்கப்பட்டது. இது புரட்சிக் கட்சியின் கருவாக விளங்கியது. தொழிலாளி வர்க்க இயக்கத்தைச் சார்ந்து பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டத்தைத் தலைமை வகித்து நடத்தியது இது.—(பு-ர்.)

லும் இப்பிரசுரங்கள் பீட்டர்ஸ்பர்க் நகரின் பிரதான ஆலைகள், தொழிற்சாலைகளுக்குள் இந்தக் காலம் முதல் தான் மிகவும் குறிப்பிடத்தக்கவாறு பரவலாயின. தொழிலாளர்களுடன் எங்களது உரையாடல்களுக்கு அடிப்படையாக அமைந்தன இந்தப் பிரசுரங்கள். அன்றுடத் தேவைகளிலிருந்து, ஓர் அல்லது மற்ருரு தொழிற்சாலையில் உள்ள ஸ்தூல நிலைமைகளிலிருந்து தொடங்கி, தூய பொருளாதார நன்மைகளின் பொருட்டுத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் பாதையில் ஜாராட்சி அரசாங்கம் எழுப்பிய தடைகளிலிருந்தே தெளிவாகப் பெறப்படும் அரசியல் கோஷங்களுக்குக் கூடிய விரைவில் மாறுவதற்கு நாங்கள் இவற்றில் முயற்சி செய்தோம். அவசரக் கூட்டங்கள், முறையான மேதினக் கொண்டாட்டங்கள் ஆகியவையும், முடிவில் நிலையான இலக்கிய வெளியீடு ஒன்றை நிறுவுவதும்—கிளர்ச்சி கோஷங்கள் இட்டுச் சென்ற கடமைகளிலிருந்து இவை இயல்பாகத் தோன்ற வேண்டியிருந்தது. பிரச்சார வகைப்பட்ட குழுக்களில் கூடத் தொழிலாளர்களுடன் உறவாடுவது, எங்களது தொடக்கக் குழுவுக்கு, நயம் மிக்க போலீஸ் இயந்திரத்துடன் சமமற்ற கைகலப்பில் பேரிழப்புக்களுடன் தான் கட்டாயமாக முடியும் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிந்திருந்தோம். இந்த இயந்திரத்தின் உயிர் வடிவமாகத் திகழ்ந்தது அந்தக் காலத்து ''அரசாங்க'' பீட்டர்ஸ்பர்க் நகரம். கிளர்ச்சி பற்றிய தமது பிரசாரத்தின் மூலம் விளதீமிர் இலீச் எங்களைத் தொழிலாளி மக்கள் திரளுடன் எந்த விரிவான தொடர்புக்கு மாறுமாறு தூண்டிஞரோ அது இந்தத் திசையில் இன்னும் அதிக ஆபத்துக்கள் நிறைந்ததாயிருந்தது. கைதும் சிறைவாசமும் மாற்ற முடியாத விதி வடிவில் எங்களை நெருங்கிக் கொண்டிருந்தன என்று முன்கூட்டியே சொல்ல முடிந்தது. நாங்கள் எங்கள் சொந்த உறவுகளில் இடங் கொடுத்துவிட்ட அறிவுஜீவிகளுக்கு இயல்பான கட்டுப்பாடின்மைக்காக விளதீமிர் இலீச் எங்களைத் தாக்கியது இதனுல் இன்னும் சரியாயிற்று. காரியார்த்தமாக இன்றி, வெறுமே''நெஞ்சை

ஆற்றிக்'' கொள்வதற்காக அடிக்கடி ஒருவரையொருவர் சந்தித்ததன் மூலம் நாங்கள் வரம்பை மீறி விட்டோம். தவிர எங்களது அப்போதைய இரகசிய முறைகள் மிகவும் பாங்கற்றவையாக இருந்தன.

1895ம் ஆண்டு விளதீமிர் இலீச் கடுமையான நியுமோனியாவால் பீடிக்கப்பட்டார். உடல் நலத்தைச் சீர்படுத்திக் கொள்வதற்காக அவர் சிறிது காலம் வெளிநாடு செல்ல நேர்ந்தது. எனினும் இந்தப் பயணத்தின் முதன்மை நோக்கம் ''உழைப்பு விடுதலைக்'' குழுவுடன்* நேர்முகத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதே. இந்தப் பயணம் எங்களுக்கு எவ்வளவு பெருத்த முக்கியத்துவம் உள்ளதாயிருந்தது, லெனின் திரும்பி வருவதை நாங்கள் எவ்வாறு ஆவலே வடிவாக எதிர்நோக்கியிருந்தோம் என்பதை நீங்கள் எளிதில் கற்பனை செய்து கொள்ளலாம். ஆகக் கடைசியில் நாங்கள் விரும்பிய நாள் வந்தது. எங்களது ''கிழவர்'', பாதரசம் போன்ற ஓட்டமும் இயக்கமுமாக மீண்டும் எங்களிடையே வந்து சேர்ந்தார். ''உழைப்பு விடுதலைக்'' குழுவின் தலைவர்களான பிளெஹானவ், அக்செல்ரோத், ஸஸூலிச்** ஆகியோரைக் கண்டு பழகியதில் தமக்கு

---

* உழைப்பு விடுதலைக் குழு—முதல் ருஷ்ய மார்க்சியக் குழு. 1883ல் ஜெனீவாவில் பிளெஹானவால் நிறுவப் பட்டது. ருஷ்யாவில் மார்க்சியத்தைப் பரப்புவதில் இது பெரும் பணி ஆற்றியது.—(ப-ர்.)

** பிளெஹானவ் (1856—1918)—ருஷ்யன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகரில் ஒருவர். ருஷ்யாவில் முதன் முதலாக மார்க்சியத்தைப் பிரசாரம் செய்தவர். வி. இ. லெனினுடன் சேர்ந்து இஸ்க்ரா பத்திரிகை நடத்தினர். 1903 ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பின் சந்தர்ப்பவாதிகளுடன் சமரசப் போக்கை மேற்கொண்டார்.

அக்செல்ரோத் (1850 — 1928)—''உழைப்பு விடுதலைக்'' குழுவை நிறுவுவதில் பங்கு பற்றினர். 1900 முதல் இஸ்க்ரா செய்திப் பத்திரிகை ஆசிரியர் குழு உறுப்பினர். 1903 முதல் தீவிர மென்ஷிவிக்.

ஸஸூலிச் (1849—1919)—நரோதிய இயக்கத்திலும்

ஏற்பட்ட உளப்பதிவுகளைப் பற்றி அவர் எங்களுக்கு உயிரோட்டத்துடன் விவரித்தார். ஆயினும், பாரிஸ் நகரப் பாட்டாளிகளைச் சந்தித்தது பற்றிய அவரது வர்ணனை என் நினைவில் இன்னும் எவ்வளவோ துலக்கமாகப் பதிந்திருக்கிறது. மக்களிடையே தொண்டாற்றும் பிரெஞ்சுத் தொழிலாளர்கள் தங்களது பொதுவான பண்பாட்டுத் தரம், உயிர்த்துடிப்புள்ள கிரகிப்புச் சக்தி, தோழமையுள்ள சரச சுபாவம் ஆகியவை காரணமாக, மார்க்சியப் புரட்சியாளர்களின் எதிர்பார்ப்புக்கள் இயல்பாக இணைக்கப் படக் கூடிய மனிதர்களாக விளங்குகிறார்கள் என்றார் விளதீமிர் இலீச். இந்தச் சமயத்தில், விளதீமிர் இலீச்சின் வெளிநாட்டுப் பயணத்தின் தொடர்பாக பிளெஹானவ் ஸ்துரூவேக்கு* எழுதிய கடிதம் ஒன்று எங்களுக்கு அப்புறம் தெரிய வந்தது. ''உழைப்பு விடுதலைக்'' குழுவின் மீது விளதீமிர் இலீச் எத்தகையை உளப்பதிவு ஏற்படுத்தினார் என்பதை இந்தக் கடிதம் தெரிவிக்கிறது. தாம் வெளிநாடுகளில் தங்கியிருந்த பல ஆண்டுகளில் ருஷ்யாவிலிருந்து பெருந்தொகையான நபர்கள் தம்மிடம் வந்திருப்பதாகவும், ஆனால் இந்த இளைஞர் உல்யானவிடம் தாம் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்கள் வேறு எவரிடமும் கொள்ளவில்லை என்றும் பிளெஹானவ் அதில் எழுதினார். எனக்கு நினைவிருக்கிறபடி, விளதீமிர் இலீச்சின் வியப்பூட்டும் நூலறிவையும், அவரது புரட்சிகரப் பொதுநோக்கின் சீர்மையையும், ஊற்றெடுத்துப் பொங்கும் ஆற்றலையும் பிளெஹானவ் இக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

விளதீமிர் இலீச்சின் இந்த வெளிநாட்டுப் பயணம்

பிறகு சமூக-ஜனநாயக இயக்கத்திலும் தீவிரமாகப் பங்கு பற்றியவர். பிளெஹானவின் சகதோழர். இஸ்க்ரா ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு மென்ஷிவிசத்தின் தலைவருள் ஒருவரானார்.—(ப-ர்.)

* ஸ்துரூவே — ''சட்டபூர்வ மார்க்சியத்தின்'' பிரதிநிதி. இந்த மிதவாத-பூர்ஷ்வாப் போக்கு, மார்க்சியத்தைத் திரித்தது.—(ப-ர்.)

செயல்தொடர்பற்ற தன்மை கொஞ்சமும் கொண்டிருக்க வில்லை. அந்தக் கணம் முதல் நாங்கள் ''உழைப்பு விடுதலைக்'' குழுவுடன் நேர்முகத் தொடர்பு கொள்ளலானோம். இந்த அறிமுகத்தின் உதவியால் ருஷ்யாவில் எங்கள் நண்பர் குழாத்தை விரிவுபடுத்துவதில் தாமதமின்றி முனைந்தோம். நீஷ்னி-நோவ்கரத், மாஸ்கோ, இவானவோ-வஸ்நெசேன்ஸ்க், வில்னோ ஆகிய நகரங்களிலும் சில வோல்காப் பிரதேச நகரங்களிலும் இருந்த சமூக-ஜனநாயக வட்டங்களுடன் நாங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டது இந்தச் சமயத்தில்தான். வெளிநாட்டிலிருந்து கொணர்ந்த இன்னும் ஒரு பரிசினால் விளதீமிர் இலீச் எங்களை அளவு கடந்த மகிழ்ச்சிக்கு உள்ளாக்கினார்: அப்பொழுது பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியிருந்த நகலெடுக்கும் கருவியான மிமியோகிராப் ஒன்றை, தமது பெட்டியின் இரட்டைத் தளங்களுக்கிடையே மறைத்து எல்லை தாண்டிக் கொண்டுவருவதில் அவர் வெற்றி பெற்றார். அப்புறம் மிமியோகிராப், பீட்டர்ஸ்பர்க் பாட்டாளி வர்க்கத்தினருக்குக் கல்விப் பயிற்சி அளிப்பதற்குப் பெருந் தொண்டு ஆற்றியது.

எழுத்தாளர் என்ற முறையில் விளதீமிர் இலீச் அப்போது ஏராளமான படைப்புக்களை இயற்றினார். தமது மணி மணியான நுண்ணிய எழுத்துக்களால் பருத்த நோட்டுப் புத்தகங்களை விரைவிலேயே நிறைத்து விட்டார். இவற்றில் சிறப்பாக இரங்கத்தக்க ''நடுநாயகமாக'' விளங்கியது அக்காலத்திய நரோதியம். எங்களது கிளர்ச்சித் துண்டுப் பிரசுரங்களுக்கும் விஷயங்களின் தேவை மிகுதியாக இருந்தது. தவிர, ''உழைப்பு விடுதலைக்'' குழுவுடன் இலக்கிய ஒத்துழைப்புக்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப் பட்டது. இவ்வகையாக, தனிப்பட்ட தொழிலாளர் செய்தித்தாள் வெளியிடுவது என்ற எண்ணத்துக்கு நாங்கள் இயல்பாகவே வந்து சேர்ந்தோம். வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், விளதீமிர் இலீச் ஆழ்ந்த கவனத்துடன் செப்பஞ் செய்து, முக்கால் பங்குக்கு மேல் தாமே எழுதித் தயாரித்த ரபோச்சியே தேலோ (''தொழிலாளர் லட்சியம்'')

என்ற செய்தித்தாளின் முதல் இதழ் அச்சகத்துக்குப் போவதற்குப் பதிலாக அரசியல் போலீசாரின் கைகளில் நேரே சிக்கிக் கொண்டது. சமூக-ஜனநாயகக் கட்சியின் நடவடிக்கைகளுக்குரிய போக்கைப் பத்து ஆண்டுக் காலம் முழுவதற்கும் இந்த முதல் இதழே சரியான முறையில் திட்டப்படுத்தியிருந்தது என்பதை இதே கையோடு குறிப்பிட வேண்டும். பீட்டர்ஸ்பர்க் நகர ஆலைகள், தொழிற்சாலைகளிலிருந்து எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் ஸ்தூல விவரங்களின் அடிப்படையில், புரட்சிகர அரசியல் தொழிலாளி வர்க்கக் கட்சியின் இன்றியமையாமை தானே துலக்கமாகப் புலப்படும் எல்லை வரையில் பீட்டர்ஸ்பர்க் பாட்டாளிகளின் சுய உணர்வை எழுப்புவதற்கு நாங்கள் முயன்றோம். போதிய அளவு திறமையுள்ள வடிவிலேயே இதை நாங்கள் செய்தோம் என்று எனக்கு இப்போதுகூடத் தோன்றுகிறது. நான் அறிந்த வரையில் ரபோச்சியே தேலோ செய்தித்தாளின் இந்த இதழின் கட்டுரைகள் பெரும் பகுதி மீட்கப்படாது மறைந்து போய்விட்டன. அந்தக் காலத்தில் பீட்டர்ஸ்பர்க் புரட்சி வட்டங்களில் வினியோகிக்கப்பட்ட விளதீமிர் இலீச்சின் மற்ற கையெழுத்துப் பிரதிகளும் அவ்வாறே காணுமல் போய்விட்டன. ஆனுல், 'மக்களின் நண்பர்கள்' எனப்படுவோர் யார், சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போராடுகிருர்கள்?* என்னும் தலைப்புள்ள விளதீமிர் இலீச்சின் பிரசுரம், நல்ல வேளையாக, முக்கால் பகுதி எஞ்சியிருக்கிறது. ஒளிமிக்க, வன்மையான பகுப்பாய்வு, வருங்காலமுரைக்கும் முன்காணல் ஆகியவற்றின் காரணமாக விளதீமிர் இலீச்சின் இந்த ஆய்வுரை உண்மையிலேயே பிரமிப்பூட்டுவதாக விளங்குகிறது. இதை

---

* 'மக்களின் நண்பர்கள்' எனப்படுவோர் யார், சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போராடுகிருர்கள்? என்ற புத்தகம் லெனினுல் 1894ல் எழுதப்பட்டது. இந்த நூலில் லெனின் மார்க்சியத்தின் எதிரிகளை—மிதவாத நரோத்னிக்குகளைக்—கடுமையாகக் கண்டன விமர்சனம் செய்தார்.—(ப-ர்.)

இப்பொழுது படிக்கும் போது கூட அது முழுவதும் புதுமை கமழ்கிறது, ஆனால் அதன் வரிகளோ, பல ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டன. ருஷ்யாவிலும், அகில ருஷ்யப் புரட்சி யின் போக்கிலும் தொழிலாளி வர்க்கத்தின் பங்கு, விவ சாயிகளுடன் அதன் தொடர்பு, அரசியல் போராட்டத்தின் நேரான, திறந்த பாட்டை, ருஷ்யாவில் கம்யூனிஸ்டுப் புரட்சியின் வெற்றிகர விளைவுகளை முன்காணல், உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போக்குடன் நமது புரட்சிக் குள்ள மாற்றமுடியாத தொடர்பு—இவை எல்லாம் இந்தப் பிரசுரத்தில் மிக விளக்கமாக, உயிரோட்டத்துடன் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றோடுகூட, இந்தப் பிர சுரத்தில் விளதீமிர் இலீச்சின் இன்னுமொரு வலிமைமிக்க அம்சமும் புலப்படுகிறது. சுயேச்சையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கருத்துக்களைத் தூண்டி விழிப்புறச் செய்யும் பாதையில் குறுக்கே நிற்பவர்கள் அனைவரையும், தனது மாபெரும் வரலாற்று முக்கியத்துவமுள்ள பாத் திரத்தைப் பாட்டாளி வர்க்கம் சரிவரப் புரிந்துகொள் வதை எந்த வகையிலேனும் திரிக்க முற்படுபவர்கள் அனை வரையும் சீற்றத்துடன் விளாசித் தூக்கி எறியும் பயங்கர மான தர்க்கவாதியாக அவர் நமக்கு முன் காட்சி தரு கிறார்.

பீட்டர்ஸ்பர்கில் நான் விளதீமிர் இலீச்சைச் சந்தித்த ஆரம்பக் காலத்தில் அவர் இத்தகையவராகவே எனது உணர்வில் பிரதிபலித்தார். எந்தப் போக்கைப் பிறழ் வின்றிக் கடைப்பிடித்ததால் அவர் உழைப்பாளி மக்கள் திரளின் மாண்புமிக்க நண்பராகவும் ஆசானாகவும் ஆனாரோ அந்தப் போக்கை, தொடக்கத்திலேயே அவர் கண்டு கொண்டார் என்பதை நாம் பார்க்கிறோம். தமது வியப்பூட்டும் செயல்திறமை அனைத்தையும், தமது ஆவேச மிக்க உள்ளத்தின் ஆற்றல் முழுவதையும், எல்லாவற்றை யும் உட்கொள்ளும் ஒரே குறிக்கோளின் தொண்டுக்கு ஒருமுனைப்படுத்துவது அவருக்கு இயன்றது. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் திரளை ஒழுங்கமைத்தல், உயர்த்து தல், வாழ்க்கையின் அடிப்படைகளையே, உற்பத்தியின்

சமூக நிகழ்முறையில் மனிதனுக்கு மனிதன் நிலவும் உறவுகளையே தாமதமின்றி மாற்றியமைக்கும் பொருட்டுப் பயன்பாடுள்ள முறையில் உயர்த்துதல்—இதுவே அந்தக் குறிக்கோள்.

2

1895ம் ஆண்டின் குளிர்கால இறுதி வாக்கில் எங்களுக்கு மேலே மேகங்கள் வெளிப்படையாகத் திரண்டன. எல்லாவற்றிலும் மோசமாயிருந்தது என்னவென்றால், உளவாளிகளின் பின்தொடர்தல் சில சமயங்களில் ஓரளவு மர்மமான வடிவைப் பெற்றதுதான். இரகசிய முறையின் எல்லா விதிகளுக்கும் ஏற்ப, நமக்குப் பின் தடங்கள் தெரியாதவாறு அழிக்க முயன்றவாறு வீட்டிலிருந்து வெளியேறுவோம்; எனினும் வழியின் எங்கோ தொலை தூரக் கட்டத்தில் வெளிப்படையாகப் பின்பற்றும் உளவாளியின் உருவம் தரைக்கடியிலிருந்து எழும்புவது போன்று திடீரெனத் தென்படக் காண்போம். இத்தகைய அறிகுறிகள் தென்பட்டதன் காரணமாகப் பின்னர் நாங்கள் நிச்சயமாக எவ்வளவோ விவகார நுட்பத்துடன் செயல் புரிந்தோம்: பாஸ்போர்ட்டையும் செயற்களத்தையும் மாற்றிக் கொண்டோம். ஆனால் அந்தக் காலத்தில் நாங்கள் அனுபவமற்ற கற்றுக்குட்டிகளாக இருந்தோம். போதாக் குறைக்கு நேரடித் தாக்குதல் கொண்ட வீரச் செயல்களின் பால் நாட்டமும், ''நிதான அறிவு'' வாயிலாகப் பெறப்படும் சமரசங்களை ஏற்றுக்கொள்ள விருப்பின்மையும் உள்ள இயல்பான இளமைத் துடிப்பு வேறு. அது எவ்வாறாயினும், 1895, டிசம்பர் 8ந் தேதி நள்ளிரவில், ஷ்பாலேர் நாயா வீதியிலிருந்த, பீட்டர்ஸ்பர்க் ''ப்ரித்வரீல்கா'' (ஆரம்பச் சிறைக் கூடம்) என அழைக்கப்பட்ட விசித்திரமான கட்டிடத்தில் நாங்கள் அடைக்கப்பட்டோம். இந்த வீட்டின் அறைகளுக்குள் முழுதாகப் பதினான்கு மாதங்களை நாங்கள் கழிக்க நேர்ந்தது. செயல்முறையான புரட்சி நடவடிக்கைகளிலிருந்து முற்றிலும் தன்னந் தனிச் சிறைவாசத்தின் துன்புறுத்தும் கட்டுப்பாடுகளுக்கு மாறுவது,

நெருங்கிய நபர்களுக்கு ஏதேனும் விபத்து நேர்ந்திருக்குமோ என்ற சோர்வூட்டும் சிந்தனைகளாலும், அணித்தான வருங்காலம் பற்றிய மிகவும் மகிழ்வற்ற காட்சிகளாலும் உலப்புறுவது, நிச்சயமாக எளிதாயிருக்க முடியாது....

தனிப்பட்ட முறையில் எனக்கும் பெரும்பாலான மற்ற தோழர்களுக்கும் காப்பதும் உறுதிப்படுத்துவதுமான மதிப்பிடற்கரிய சாதனமாக விளங்கியது விளதீமிர் இலீச்சின் நட்பு. ஆரம்பச் சிறைக் கூடத்தின் அளவற்ற கடுமை கொண்ட கட்டுப்பாடு இருந்த போதிலும் சிறைச்சாலை நூல்நிலையத்தின் வாயிலாகவும் எங்களைக் காண வந்த நபர்களின் வாயிலாகவும் நாங்கள் ஒருவரோடொருவர் செயல்முறையில் தொடர்பு கொள்ள முடிந்தது....

விளதீமிர் இலீச்சுடன் நான் சிறைச்சாலையில் நடத்திய கடிதப் போக்குவரத்தின் விவரங்களை நினைவுபடுத்திக் கொள்ளும் நிலையில் நான் இப்போது இல்லை. எனினும் ஒரு விஷயத்தைத் தெளிவாக நினைவுகூர்கிறேன்: அவருடைய கடிதத்தைப் பெறுவதும் படிப்பதும் சிறப்பாகத் தென்பும் உற்சாகமும் ஊட்டும் ஏதோ 'டானிக்' பருகுவதற்கு ஒப்பாயிருந்தது. அதனுல் உடனேயே உற்சாகமும் உள்ளக் களிப்பும் உண்டாயின. இந்த மனிதரிடம் இருந்த ஏராளமான ஆன்மிகச் செல்வமும் தேவைப்படும் மற்ற மனிதனுடைய மனநிலை மீது நல்ல முறையில், அவசியமான பக்கத்திலிருந்து செல்வாக்கு விளைக்கும் திறமையும், இந்தக் குணங்கள் மட்டுமே கூட எல்லா நிலைமைகளிலும், விசேஷமாகச் சிறைச்சாலையில், அவரை முற்றிலும் ஈடற்ற தோழராகப் புரியக் கூடியவையாக இருந்தன.

ஆரம்பச் சிறைக்கூடத்தின் அறைகளில் சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்த விதத்தில், அவற்றின் அழிக்கம்பிகளின் ஊடாகச் சிறைச்சாலையின் முற்றத்தைப் பார்ப்பது சற்று எம்பினுல்தான் முடியும். இவ்வாறு செய்வது வெகு எளிதல்ல; போதாக் குறைக்குப் பூட்டிய கனத்த கதவின் துளை வழியாகச் சிறைச்சாலைக் காவலர்கள் அனேகமாக இடையீடின்றி நோட்டமிட்ட வண்ணமாயிருந்தார்கள்— கைதிகள் இம்மாதிரிச் செயல்கள் செய்யக் கூடாது என்

பதற்காக. ஆயினும், எனது அவதானிக்கையின்படி எனது அறையிலிருந்து தென்படும் உலாவுமிடத்தில் விளதீமிர் இலீச் கட்டாயமாகத் தோன்றும் நேரத்தில் இம்மாதிரி எம்பிப் பார்ப்பதிலிருந்து எந்த துர்ச்சக்தியும் என்னைத் தடை செய்ய முடியவில்லை. இத்தகைய தொலைவிலிருந்து இம்மாதிரிச் சந்திப்பு நிகழ்த்துவதற்கான வாய்ப்பு சில சந்தர்ப்பங்களில் மிகச் சாத்தியமானது என்று அவரும் உறுதி கொண்டிருந்தார். சிறைச்சாலைக் குறியீட்டெழுத்துக் களின்படி விரல்களால் சைகைகள் செய்வதன் மூலம் நாங்கள் தாமதமின்றி உரையாடத் தொடங்கினோம். அவ ருடைய அன்பு கனிந்த முகமும், அவசர அவசரமான இந்தச் சைகைகளும், உலாவுமிடத்தின் நடுவே நடைபோடும் கடு கடுப்பான காவலாளியைத் தம் வசமின்றியே அவர் ஏற இறங்கப் பார்ப்பதும், எல்லாம் என் நினைவில் இப்போதும் காட்சி தருகின்றன. இதோ அவர் ஏதோ விசேஷக் களிப் பார்ந்த இறுக்கத்துடன் என்னை நோக்கி, விரைவாகத் தந்தி பேசுகிறார்: ''உனக்குக் கீழே ஹஹோல்!''* என்று. நான் எனது சலிப்பூட்டும் அறையின் தரையில் விழுந்து, என் அறைத் தரையை ஊடுருவிச் சென்ற வெப்பக் குழாய் வளையத்தைச் சுற்றியிருந்த குறுகிய இடுக்கு வழியாக எனது கீழறைக்காரனை நோக்கிக் கத்துகிறேன்.... அந் தோ, எங்களது மிக தேர்ந்த இரகசிய முறையாளர், ராத் சென்கோ, பாதிக் கம்மிய குரலில் என்னை வரவேற்கிறார்: ''உண்மையாகவே நீயா இங்கு இருக்கிறாய்?'' என்று. ஆம், சிறைச்சாலை அதிகாரிகள் இம்முறை தவறு செய்து விட்டார்கள்: ஒரே வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள், வழக்கம் போல நடுநடுவே குற்றச் செயல் கைதிகளின் இடையீடு இன்றி, அருகருகே வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த நிலைமையை விளதீமிர் இலீச் தாமதமின்றிப் பயன் படுத்திக் கொண்டார். புதிதாகக் கைது செய்யப்பட்ட ராத்சென்கோவின் வாக்குமூலம் எங்களது வாக்குமூலங்

---

* ஹஹோல் என்பது உக்ரேனியர்களைக் குறிக்கும் வேடிக்கைச் சொல்.—(மொ-ர்.)

களுடன் ஒத்திருந்ததும் எங்களுடைய வழக்கு விசாரணை விவரங்களை அவர் நன்கு அறிந்திருந்ததும் சர்க்கார் வக்கீலுக்கும் அரசியல் போலீசாருக்கும் நிச்சயமாக மிகுந்த ஆச்சரியம் அளித்திருக்கும். தற்செயலாக அருகருகே இருக்க நேர்ந்த வாய்ப்பின் விளைவாக மட்டுமே இது சாத்தியமாயிற்று.

எங்கள் எல்லோருடனும் மிகவும் பயன்பாடுள்ள தொடர்பு வைத்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் சிறைக்கு வெளியில் சுதந்திரமாயிருந்தவர்களையும் விளதீமிர் இலீச் தமது செயல்பாட்டிலிருந்து விட்டுவைக்கவில்லை. இந்தக் காலத்தில் விளதீமிர் இலீச் ஏராளமான துண்டுப் பிரசுரங்களும் வேலைநிறுத்தங்கள் பற்றிய சிற்றேடுகளும் எழுதினார். துர்ப்பாக்கிய வசமாக ''நரோத்நயா வோல்யா'' கட்சியின் லாஹ்தா என்ற இடத்தில் உள்ள அச்சகம் முறிந்து போனதன் விளைவாக இவை பிரசுரமாகவில்லை. **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்ற விரிவான நூலையும் அவர் இந்தச் சமயத்தில் எழுதத் தொடங்கினார். சிறைக் குடியிருப்பில் இருக்கும்போது அவர் இந்நூலை முடித்து விட்டார். இலியீன் என்ற புனை பெயரில் இது வெளியிடப்பட்டது.

சிறையில் கழித்த 14 மாதக் காலம் முழுவதிலும் ஆரம்பச் சிறைக்கூடத்தின் நீண்ட நடைவழிகளில் ஒன்றிலாவது விளதீமிர் இலீச்சை ஒரு தடவைகூடச் சந்திக்க எனக்கு நேரவில்லை. உலாவுவதற்காகவோ விசாரணைக்காகவோ எங்களில் ஒவ்வொருவரும் வெளியே செல்லும் போது, கட்டிடத்தின் எதிர்ப் பகுதிகளிலுள்ள சிறைக் காவலர்களுக்குச் சந்திப்பின் அபாயத்தை அறிவித்து முன்னெச்சரிக்கை செய்வதற்காக நீண்ட சீழ்க்கை அடிப்பது உட்பட முன்னேற்பாடான முறைகள் எல்லாம் கையாளப் பட்டன. ஆனால் அதே நடைவழிகளில் பின்னல் கூடைகள் நிரம்பப் புத்தகங்கள் ஆரவாரத்துடன் எடுத்துச் செல்லப் படுகையில், இந்தப் புத்தகங்களை ஜீரணிப்பவர் விளதீமிர் இலீச்சாக மட்டுமே இருக்க முடியும் என்று நான் நன்றாக எண்ணிக் கொள்வேன். ஒரு புத்தகத்தில் விரைவாகக் கண்

ஞேட்டிய போது கூட நம்பமுடியாத துரிதத்துடன் அதை ஆழ்ந்து தெரிந்துகொள்ளும் வியப்பூட்டும் இயல்பு ஒன்று அவரிடம் இருந்தது. வேட்டை மிருகம் தானே கண்ணியில் பட்டுக்கொள்ளும் என்னும் ருஷ்யப் பழமொழி போலத் தான். சில வேளைகளில் பருத்த புத்தகம் ஒன்றை நம் கண் களுக்கு எதிரேயே புரட்டுவார் விளதீமிர் இலீச். ஆசிரியரை அம்பலப்படுத்தும் மேற்கோள்கள் அவருக்கு விரை விலேயே கண்ணில் பட்டுவிடும். அவர் படித்த நூல் எதுவாயினும் அதன் ஓரங்களில் எல்லாம் குறிப்புக்களாக அள்ளித் தெளித்திருக்கும், நல்ல கருத்துள்ள வரிகளின் கீழ் கோடிடப்பட்டிருக்கும். அம்மாதிரி ஒரு புத்தகத்தைப் படிக்கையில், நஞ்சுள்ளவையும் அளவுகடந்த துல்லியத் துடன் இலக்கில் தைப்பவையுமான ''ஹ்ம், ஹ்ம்!'', ''ஹா-ஹா!'' என்பன போன்ற வியப்புச் சொற்களில் வெளிப்படும் விளதீமிர் இலீச்சின் விமர்சனத்திலிருந்து வேறுபடுவது எவ்வகையிலும் இயலாது.

சிறைச்சாலைக்குள் விளதீமிர் இலீச்சினது நூல்பயிற்சி யின் உதாரணம் எங்கள் எல்லோரையும் எவ்வாறு தொற்றிக்கொண்டது என்பதையும், அவருடன் சேர்ந்து நாங்களும் சிறைவாசத்தை ஒருவகையான அதிப் பல் கலைக்கழகமாகப் பயன்படுத்திக்கொள்ள எவ்வாறு முயன் ரேம் என்பதையும் விவரிக்க வேண்டியதில்லை. எனினும் சிறைக் குடியிருப்பில் வசித்த காலத்தில் எங்கள் வட்டம் முழுவதற்கும் அவர் இதைக்காட்டிலும் பெரிய தொண்டு இந்தத் துறையில் ஆற்றினர்.

கிழக்கு சைபீரியாவுக்கு வந்த முதலாவது சமூக-ஜன நாயகவாதிகளில் எங்களது குழுவும் ஒன்று. ஆகவே, சிறைக்குடியிருப்பின் பழைய வாசிகள் அனைவரும் எங்களை ஆவலும் நம்பிக்கையின்மையும் கலந்த உணர்ச்சியுடன் நோக்கினர்கள். ஆனல் எங்கள் அனைவருக்குமிடையே சிறப்பாகக் கவர்ச்சியுள்ள புது வகை அரசியல் போராட்ட வீரராக விளங்கியவர் விளதீமிர் இலீச்தாம்.

விளதீமிர் இலீச், ஸ்தார்கவ், நான் மூவரும் மினு சீன்ஸ்க் பிரதேசத்தில் மூன்று ஆண்டுக் காலம் வசிக்குமாறு

விதிக்கப்பட்டிருந்தோம். ஸ்தார்கவும் நானும் தேஸீன்ஸ்கயே கிராமத்திற்கும், விளதீமிர் இலீச் ஷுஷென்ஸ்கயே கிராமத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தோம். எங்கள் கிராமத்திலிருந்து 100 வெர்ஸ்ட்டா (சுமார் 66 மைல்) தொலைவிலிருந்தது அது. நாங்கள் நிரந்தரத் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு இதனுல் தடை ஏற்படவில்லை. அதிலும் குறித்த நேரத்தில் கடிதம் எழுதுவதில் கருராக இருந்தவர் நிச்சயமாக விளதீமிர் இலீச்தாம். அநேகமாக வாரத்துக்கு இரு முறை அவரிடமிருந்து எங்களுக்குக் கடிதங்கள் கிடைத்து வந்தன. அவருடைய சொந்த வேலைகள் பற்றியும் விரிவான கடிதப் போக்குவரத்தின் விளைவாக அவருக்குக் கிடைத்து வந்த தகவல்கள் பற்றியும் இவற்றின் மூலம் நாங்கள் தெரிந்துகொண்டோம். இந்தக் கடிதப் போக்குவரத்து நிகழ்ந்ததற்குக் காரணம், விளதீமிர் இலீச்சின் கடிதங்கள் எப்போதும் ''சத்துள்ளவையாக'' இருந்ததும் எடுத்துக்கொண்ட விஷயங்களின் சாராம்சம் குறித்து ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட பதில்களைச் சுருக்கமான, சொற்செட்டுள்ள வடிவில் எப்போதும் தந்ததும் மட்டுமே அல்ல, இவ்விஷயத்தில் விளதீமிர் இலீச் கடைப்பிடித்த அசாதாரணமான கருரும் ஒழுங்கு முறையுங்கூட. கிடைத்த கடிதத்திற்குக் கூரிய, தர்க்கம் செய்யும் பதில் அவர் அனுப்பக் கூடும். ஆனுல் பதிலெழுதாமல் இருப்பதோ, அல்லது அதிலும் மோசமாக, தம்மிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அசட்டையாகப் பதிலளிப்பதோ முற்றிலும் அனுமதிக்கத் தகாதது என அவர் கருதினுர்.

சிறைக் குடியிருப்பில் வசித்த காலத்தில் எனக்கு விளதீமிர் இலீச்சிடமிருந்து கிடைத்த கடிதங்களின் கற்றை, பிற்காலத்தில் நான் எதிர்ப்படநேர்ந்த சங்கடங்கள், இடையருத போலீஸ் அபாயங்கள் ஆகியவற்றின் விளைவாக அழிந்து போயிற்று என்பதை நினைக்கவே எனக்குக் கைப்பாயிருக்கிறது. தமது சிறைக் குடியிருப்பு வாசத்தின் போது விளதீமிர் இலீச் ஈடுபட்டிருந்த தீவிரமான தயாரிப்பு வேலைபற்றிய தன்மைச் சித்திரிப்புக்கு விலைமதிப்பற்ற

விஷயாதாரங்களாக இந்தக் கடிதங்கள் பயன்பட்டிருக்கக் கூடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி விடுகிறேன். அந்தக் காலத்தில் அவர் எழுதிக் கொண்டிருந்த ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்னும் நூலின் பல்வேறு விஷயங்களுடன் தொடர்பு கொண்ட பிரச்சினைகளையும், எங்களுக்குக் கிடைத்த ருஷ்ய, ஜெர்மானிய இலக்கியங்களின் புது நூல்களையும், அந்த நாட்களில் சாராம்சமானவையும் உடனடியானவையுமாக எங்களுக்குத் தோன்றிய எல்லா விஷயங்களையும் குறித்து நாங்கள் இந்தக் கடிதங்களில் சர்ச்சை செய்தோம். எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் சுற்றிவளைக்காமல் நேரடியாக அதன் மையக்கருவை அணுகிவிடும் சிறப்பான பழக்கத்திலும் திறமையிலும் வெளிப்பட்ட விளதீமிர் இலீச்சின் சிறப்பியல்பையும் இந்தக் கடிதப் போக்குவரத்து நன்கு சித்திரித்திருக்கும் என்று எண்ணுகிறேன். அவரது இலக்கிய மொழியின் அசாதாரண எளிமைக்கும், ஒரு வகையில் சொன்னால் ஸ்படிகத் தெளிவுக்கும் இந்தச் சிறப்பியல்பே காரணமாயிருந்தது. ''கருத்துக்களில் பரப்பும் சொற்களில் செறிவும்'' என்ற கவி நி. அ. நெக்ராஸவின்* அறிவுரையை இந்த அளவுக்குக் கண்டிப்பாகப் பின்பற்றிய இன்னொர் எழுத்தாளரைக் காண்பது கடினமே.

விளதீமிர் இலீச் சிறைக் குடியிருப்பில் மேற்கொண்ட உழைப்பு மிக்க, நேரான வாழ்க்கை முறை ஷுஷென்ஸ்கயே கிராமக் குடியானவர்கள் மீது எத்தகைய உளப்பதிவை ஏற்படுத்தியது என்பது, அச்சில் வெளிவந்துள்ள அவர்களது நினைவுக்குறிப்புகளில் காணக்கிடைக்கிறது. அவரது சட்டக் கல்வி, ஓயாமல் புத்தகப்படிப்பில் முனைந்திருக்கும் வழக்கம், எல்லாவிதக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவும் உரிய நேரத்தில் சட்ட ஆலோசனை கூறவும் அவருக்கு இருந்த திறமை, இவை எல்லாம் அசாதாரண மனிதர் என்ற புகழை அவருக்கு விரைவில் ஏற்படுத்தி விட்டன.

---

* நெக்ராஸவ் நி. அ. *(1821—1877)*—சிறந்த ருஷ்ய கவிஞர்.—(ப-ர்.)

சிறைக் குடியிருப்பு வாசத்தின் முதல் ஆண்டிலேயே என்று நினைக்கிறேன், சில வாரங்கள் ஷூஷென்ஸ்கயே கிராமத்தில் தங்கியிருப்பதற்கு ஏதோ வியாஜத்தினால் அனுமதி பெற எனக்கு வாய்த்தது. விளதீமிர் இலீச் சுடன் இவ்வாறு சேர்ந்து வாழ்ந்தது என் நினைவில் ஒளியுடன் சுடர்கிறது. அந்த நாட்களில் அவர் இன்னும் முழுத் தனிமையில் வாழ்ந்து வந்தார். கடைசி நிமிடம் வரை சிந்தித்து வரையறுக்கப்பட்ட அவரது வேலை நாள் பெருத்த உழைப்புப் பகுதிகளும் இடையிடையே இன்றி யமையாத ஓய்வுத் துணுக்குகளுமாக அற்புதமாகப் பங்கீடு செய்யப்பட்டிருந்தது. வழக்கமாகக் காலை நேரத்தில் விளதீமிர் இலீச்சுக்கு உயிராற்றலும் ஊக்கமும் அளவு கடந்து பொங்கிப் பெருகும், குஸ்தி போடுவதற்கும் ஓடிச் சாடுவதற்கும் அவர் மகிழ்வுடன் முன்வருவார். இந்தக் காரணத்தினால் நானும் அவருடன் பலமுறை சிறிது மற் போர் புரிய நேர்ந்தது. எனது ஊக்கமிக்க எதிர்ப்பினால் அவருக்குத் திருப்தி ஏற்படும் வரை நாங்கள் மல்லாடு வோம். அதன்பின், சிறிய காலையுலாவலுக்குப் பிறகு, எங்கள் நூற்பயிற்சி தொடங்கும். இலக்கிய வேலை, புள்ளிவிவரத் தொகுப்புக்களிலிருந்து விஷயாதாரங்கள் தயாரித்தல், தத்துவப் பயிற்சி, ருஷ்ய, மேலை நாட்டுப் பொருளாதார நூல்களைப் படித்தல் ஆகியவற்றுக்கெல் லாம் குறித்த நேரம் மணிக்கணக்கில் ஒதுக்கப்பட்டிருந் தது. ஓய்வு நேரத்தில் கதைகள் படிப்போம்.

செய்தித்தாள்கள் மிகமிகத் தாமதமாகவே, ஒரே தடவையில் மொத்தமாக ஒரு கட்டு வீதம், எங்களுக்குக் கிடைத்து வந்தன. ஆனால் இந்தச் செய்தித்தாள்களைப் படிப்பதையும் முறைப்படுத்துவதற்கு விளதீமிர் இலீச் யுக்தி செய்தார்: அவர் அவற்றைப் பங்கீடு செய்து, தாம தத்துக்குப் பொருந்தும் இதழ்களை மட்டும், ஆனால் குறித்த நாளுக்கு உரியவற்றை மட்டுமே, ஒவ்வொரு நாளும் படிப் பார். அவருக்கு நாள்தோறும் செய்தித்தாள்கள் கிடைப் பதுபோலவும் தாமதம்மட்டுமே நிரம்ப ஆகிவிடுவதுபோல வும் இதனால் பிரமை ஏற்படும். பிந்தைய இதழ்களில்

அடங்கிய செய்திகளைத் துர் எண்ணத்துடன் செல்லி எடுத்தவாறு செய்தித்தாள்களின் இந்த லயத்தைக் கெடுக்க நான் முயன்ற போது விளதீமிர் இலீச் காதைப் பொத்திக் கொண்டு தம்முடைய முறையே சரியானது என்று உக்கிரமாக வாதித்தார்.

பனிக்காலத் தூய காற்று, விரைந்த நடை, ஸ்கேட்டிங் ஓட்டம், சதுரங்கம், வேட்டையாடுதல் ஆகியவை விளதீமிர் இலீச்சுக்குப் பெரிதும் உகப்பானவை. திறந்த வெளியில் இவ்வாறு பொழுது போக்கும் போது, அல்லது சதுரங்கம் ஆடும் போது, ஆகா, அவர் எத்தகைய குதூகலமான, உயிரோட்டமுள்ள, கலகலப்பான தோழராக விளங்கினுர்!

எங்களது சிறைக்குடியிருப்பு வாழ்க்கையின் வாரங்கள் இவ்வாறு ஒன்றன்பின் ஒன்ருகக் கழிந்தன. இந்த அசாதாரண மனிதரின், தமது அறிவுக் களஞ்சியத்தை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் வகையில் ஏதோ கொஞ்சமாவது முன்னேருமல் ஒரு நாளைக்கூட எங்கள் கண்களுக்கு முன்ஞல் நழுவ விடாத இந்த மனிதரின், இறுக்கம் மிக்க வேலை மும்முரம் அபார உற்சாகமூட்டி உயர்வுக்கு இட்டுச் செல்லும் விதத்தில் எங்கள் மீது செல்வாக்கு விளைத்தது. அவரது முன்னிலையில் ஒவ்வொருவனுக்கும் தான் இருப்பதைவிட இன்னும் மேலானவன் ஆக விருப்பமுண்டாயிற்று. அதோடு, ஒளியும் உயிர்த்துடிப்புள்ள மகிழ்வும் பொங்கும் இந்த மனிதரின் அருகிலேயே இருக்க அளவு கடந்த ஆர்வம் ஏற்பட்டது.

அந்தக் காலத்திய மினுசீன்ஸ்க் சிறைக் குடியிருப்பின் ''நேரமும் ஒழுக்க நெறியும்'' பற்றி இங்கே விவரிக்க எனக்கு உத்தேசமில்லை. ஒன்று மட்டும் குறிப்பிடுகிறேன்: விளதீமிர் இலீச்சைத் தலைமையில் கொண்ட எங்கள் சமூக-ஜனநாயகக் குழு, சிறைக் குடியிருப்பில் இருந்தவர்களுக்கிடையே முடிவில் வேற்றுமைக்குக் காரணமாயிற்று. இந்தச் சிறு உலகம் முழுவதும் இரு பகுதிகளாகப் பிளவுபட்டது. தொழிலாளி மக்கள் அனைவரும் எங்கள் தரப்பில் சேர்ந்தார்கள். திருமதி குஸ்கோவாவின் செய்தி

அவரது பிரசித்திபெற்ற க்ரேடோ (''நம்புகிறேன்''), நாங்கள் வசித்த மினுசீன்ஸ்க் ஸ்தெப்பி வெளியை அடைந்த போது சிறைக் குடியிருப்பில் இருந்த எங்களுக்குள் அது பற்றிப் பெருத்த கருத்துவேற்றுமை உண்டாயிற்று. பாட்டாளிகளுக்கிடையே அரசியல் பிரசாரம் செய்வது தீர்க்காலோசனையற்றது என்று நிரூபிக்கத் திருமதி குஸ்கோவா இந்தச் செய்தியில் முயன்றார். பாட்டாளிகளுக்கு அண்மைக் காலத்தில் பொருளாதாரப் போராட்டப் பாதைகள் மட்டுமே செப்பஞ் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், அரசியல் தன்மை கொண்ட போராட்டம் முழுவதும் ''உயர் குலத்தினரையே'', அதாவது மிதவாதித் திருவாளர்களையும் பிரபுவம்சத்தினர் அல்லாத எல்லா வகை அறிவுஜீவிகளையும் மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். இத்தகைய வால் பிடிக்கும் கொள்கை (அதாவது தொழிலாளி வர்க்க இயக்கத்தில் புரட்சிக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தல்), குறுகிய ருஷ்ய மிதவாதத்துக்கு முன் குலாம் போடுதல் ஆகியவற்றுடன் பாட்டாளி வர்க்கத்தின் உணர்வைத் திரிப்பதனால் ஏற்படும் எந்த விஷத்தன்மை தொடர்பு கொள்ளக் கூடியதோ அது அனைத்தையும், தூய பொருளாதாரப் போராட்டத்தின் விவகாரரீதியானவர்கள் போன்று நடிக்கும் ஆதரவாளர்களது பார்வை மந்தம் அனைத்தையும் விளதீமிர் இலீச் ஒருவர்தாம் சரியாக மதிப்பிட்டார். கிழக்கு சைபீரியச் சிறைக்குடியிருப்பு வாசிகளான 17 பெயர்களது கையெழுத்துக்களுடன் ருஷ்யா முழுவதிலும் வினியோகிக்கப்பட்ட கடிதத்தின் வடிவில் க்ரேடோவின் ஆசிரியைக்குத் தீவிரமான கண்டனம் முற்றிலும் விளதீமிர் இலீச்சால் வரையப்பட்டது*. இம்மாதிரிக் கணங்களில் விளதீமிர் இலீச் எப்போதும் மிகுந்த விழிப்புடனிருப்பார், இத்தகைய எதிரிகள் பால் அவருக்கு ஒரே ஆத்திரம் பொங்கும்.

---

* V. I. Lenin, *Collected Works* "The Protest by Russian Social-Democrats", Vol. 4, pp. 167—182.—(ப-ர்.)

சிறைக்குடியிருப்பு வாசம் முடிவை நெருங்கியது. அது முடிவதற்கு முன்னரே சைபீரிய ரயில்வேயில் வேலை செய்வதற்கு எனக்கு அனுமதி கிடைத்தது. அகன்ற யெனிசேய் ஆற்றின் கரையில் விளதீமிர் இலீச்சுடன் நான் உலாவிய கடைசிச் சந்தர்ப்பங்களில் ஒன்று எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. நிலவு வீசும் பனிக்கால இரவு. சைபீரிய வெண்பனியின் முடிவற்ற போர்வை எங்களுக்குமுன் சுடர்ந்தது. ருஷ்யா விரும்புவது பற்றிய தமது திட்டங்களையும் யோசனைகளையும் விளதீமிர் இலீச் உத்வேகத்துடன் எனக்கு விவரித்தார். கட்சியின் அச்சு வெளியீடு ஒன்றை ஒழுங்கமைத்தல், அதன் பதிப்பகத்தை வெளிநாடுகளுக்கு மாற்றுதல், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி ஸ்தாபனத்தினது கட்டிடம் முழுவதையும் கட்டுவதற்கு வேண்டிய தனிவகைப்பட்ட கட்டைகளை இந்த விதத்தில் வழங்கும் இம்மைய வெளியீட்டின் துணையால் கட்சியை நிறுவுதல்—இதுவே அவரது தர்க்கத்தின் சாரம். இத்தகைய கட்சிச் செய்தித்தாளின் பாத்திரத்தை அவர் அளவுமீறி மதிப்பிடுகிருர் என்றும், சிறைக் குடியிருப்பில் வசித்த நீண்ட காலத்தில் அவர் தம் விருப்பமின்றியே இலக்கியச் செயல்பாட்டுத் துறையில் மட்டுமே ஒரு தரப்பாக மிதமிஞ்சி ஈடுபட நேர்ந்ததுதான் இதன் காரணம் என்றும் எனக்கு முதலில் தோன்றியது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

விளதீமிர் இலீச் வகுத்த வழி எவ்வளவு ஆழ்ந்த முறையில் சரியானது என்பதை யதார்த்தம் முழுமையாகக் காட்டி விட்டது.

3

யதார்த்தம் என்ன காட்டியது என்ருல், சைபீரியச் சிறைக்குடியிருப்பு வாசம் முடிந்ததும் விளதீமிர் இலீச் வெளிநாடு சென்று முதலாவது அகில ருஷ்ய மார்க்சியச் செய்தித்தாள் ஆகிய இஸ்க்ராவை ("தீப் பொறி")* வெளி

* இஸ்க்ரா—சட்ட விரோதமான முதல் அகில-ருஷ்ய மார்க்சிய செய்திப் பத்திரிகை. 1900ஆம் ஆண்டில்

யிடத் தொடங்கிய கணம் நமது கட்சியின் வாழ்வில் திருப்பமுனையாக விளங்கியது என்பதேயே. எல்லோருக்கும் தெரிந்தது போலவே இஸ்க்ரா என்ற தலைப்புக்குக் கீழே பின்வரும் குறிப்பு இருந்தது: ''நெருப்புப் பொறியிலிருந்து ஜ்வாலை மூண்டெரியும்''. இந்த ஜ்வாலை, அடிமைப் படுத்தப்பட்ட உலகம் அனைத்திற்கு மேலும் செஞ்சுடர் வைகறையைத் தோற்றுவித்த பிரமாண்டமானஅக்டோபர் பெருந்தீயாக நம் கண்களுக்கு முன்னே உண்மையாகவே மண்டியெரிந்தது. பழைய இஸ்க்ரா இதழ்களின் பக்கங்களை இப்போது படித்துப் பார்த்தால், ருஷ்யாவின் பாட்டாளிகளுடைய புரட்சிச் சித்தத்தைத் தூண்டி எழுப்புவதில் அதன் அனல்வீசும் பிரசாரம் வகித்த அபார முக்கியத்துவத்தை ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். விளதீமிர் இலீச்சின் கருத்துப்படி இஸ்க்ராவின் கொடியின் கீழ் ஒன்று திரண்ட மேதையொளி திகழும் எழுத்தாளர்களின் பெரும் படையணியின் நடுவே அவரது இயக்குவிக்கும் மையமான உருவம், அவருடைய சாதாரணமான தெளிந்த சிந்தனைகள், சீற்றமும் துணிவும் நிறைந்த, பாட்டாளி வர்க்கக் குறிக்கோளின் பகைவர்களுக்கு எதிராகப் புதிய போராட்டங்களுக்கு இடைவிடாது அறைகூவி அழைக்கும் அவரது தழல்வீசும் சொற்கள், எல்லாம் எவ்வாறு தனிச்சிறப்புடன் ஒளிர்கின்றன என்பதை நீங்கள் காண்பீர்கள். தன்பால் மக்களை அழைத்து ஈர்க்கும் வழிகாட்டியாகவும், ஆபத்துக்கள் குறித்து எச்சரிக்கும் கலங்கரை விளக்கமாகவும், புரட்சி ஆவேசத்தையும் சித்தத்தையும் தட்டியெழுப்பிச் செயலில் ஈடுபடச் செய்யும் போர் முரசாகவும்

வி.இ.லெனினல் தோற்றுவிக்கப்பட்டது. ருஷ்யாவில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான மார்க்சியக் கட்சியை ஒழுங்கமைப்பதில் முக்கியமான பாத்திரம் வகித்தது. ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் ஏற்பட்ட தகராறு காரணமாக 1903 அக்டோபரில் லெனின் ஆசிரியர் குழுவிலிருந்து விலகினர். 52ஆம் இதழ் முதல் மென்ஷிவிக்குகள் இஸ்க்ராவைத் தமது ஏடாக்கிக் கொண்டார்கள்.—(ப-ர்.)

ஏககாலத்தில் விளங்கும் வகையில் கட்சி வெளியீட்டை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்குப் போதனையளிக்கும் ஆதர்சமாகப் பழைய இஸ்க்ரா என்றென்றும் திகழும். லெனினது போர்த்தந்திரத்தின், லெனினுடைய ''செயல்பாட்டில் மார்க்சியத்தின்'' யாவற்றையும் தகர்க்கும் பெரு விறலை முன்கண்டிராத வரலாற்று முக்கியத்துவமுள்ள அளவில் பின்னர் வெளிக்காட்ட வாய்த்த சக்திகள், இஸ்க்ராவினது கொடியின் கீழேயே ருஷ்யாவில் ஒன்று திரளத் தொடங்கின. ''போல்ஷிவிக்குகளின் இரும்புப் படைப்பிரிவுகளின்'' முதலாவது அணிகள் இந்தக் கொடியின் கீழேயே உருவாயின.

1903ம் ஆண்டு ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளிக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் நடந்தது. ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளிக் கட்சியின் புரட்சிகரப் பிரிவான போல்ஷிவிக்குகளுக்கும் சந்தர்ப்பவாதிப் பிரிவான மென்ஷிவிக்குகளுக்கும் இடையே இதில் பிளவு நேர்ந்தது. இந்தக் காங்கிரசின் சித்தப்படி நான் முதலாவது கூட்டப்பட்ட மத்தியக் கமிட்டி உறுப்பினஞக இருக்க நேர்ந்தது. இந்தக் காரணத்தால் ஜெனீவா மையத்துடன் மிகுந்த செயல்முறைத் தொடர்பு வைத்துக் கொள்ள எனக்கு வாய்த்தது.

மத்தியக் கமிட்டியின் முக்கியக் குழுவமைப்பு இடமாகக் கொண்டிருந்த அந்தக் காலக் கீவ் நகரில் தொடக்க நாட்களில் எங்களுக்கு மிகுந்த இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

வேலையை அனைத்து ருஷ்யப் பரிமாணத்தில் ஒழுங்கமைக்கும் பொறுப்பு மத்தியக் கமிட்டி மீது சார்ந்திருந்தது. முதன்முதலாக உருவான கமிட்டிகளின் தனித்தனியே பிரிந்துகிடந்த துண்டுகளை ஒன்றிணைத்து ஒரே முழுமை ஆக்க வேண்டியிருந்தது. தனது அழிவை ஏற்கெனவே மோப்பங் கண்டுகொண்டு விட்டதும் வரலாற்றின் மாபெரும் சடவேகம் காரணமாக இன்னும் வலிமையுடனிருந்ததும் ஆகிய ஜாராட்சியின் நேர்த்தியான போலீஸ் இயந்திரத்துக்கு எதிராக முற்றிலும் சமமற்ற நிலைமை

களில் போராடிக் கொண்டிருந்த தோழர்களின் சக்திக்கு முட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது.

விடுதலை அளிக்கும் மாபெரும் லட்சியம், மேலும் மேலும் கவனத்தை ஈர்க்கும் வகையில் இயக்கத்தில் வந்து கலந்துகொண்ட லட்சோபலட்சம் மக்களின் பிரசண்ட வெள்ளம், மிகச் சிறு தொகையினரான தேர்ந்த புரட்சி யாளர்கள், சொற்பப்பணம், இடையறுத ''சரிக்கட்டும்'' நிகழ்முறை, இடையறுத வீழ்ச்சிகள்—இந்தச் சூழ்நிலையில் தான் அனைத்து ருஷ்யப் பரிமாணத்தில் கட்சி இயந்திரத் தை முதன்முதலாக அமைக்க வேண்டியிருந்தது. கட்சியின் ஆரம்ப அஸ்திவாரத்திற்கான இந்தப் போராட்டத்தில் இஸ்க்ரா முறையாக வெளிவருவது எத்தகைய பிரமாண்ட மான முக்கியத்துவம் கொண்டிருந்தது என்பதை மிகை யாக மதிப்பிடுவது கடினம். எங்களது வீழ்ச்சிகள் எல்லாம் இருந்த போதிலும் போலீசாரின் அதிகார வரம்புக்கு அப் பால், விளதீமிர் இலீச்சின் தலைமையில் அறுவர் குழு வேலை செய்கிறது என்ற எண்ணமே மிகக் கடினமான கணங்களில் எங்களுக்கு ஆதரவளித்தது. 1903ம் ஆண்டில் நடந்த கட்சிக் காங்கிரசின் முதன்முதல் விளைவு, இஸ்க்ரா ஆசிரியர் குழுவிலேயே பிளவாக முடிந்தது என்றும் மைய வெளியீட்டில் எவருடைய முதன்மையான, நிர்ணயகர மான பங்கு எங்களுக்கு நீண்ட காலமாகத் தெரிந்திருந் ததோ, அந்த விளதீமிர் இலீச் முற்றிலும் தனியர் ஆக நேர்ந்தது என்றும் கிடைத்த தகவல் எங்களுக்கு எத்தகைய ஆழ்ந்த துயரம் ஏற்படுத்தியிருக்கும் என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

கீவ் நகரில் பொறுப்புள்ள நடவடிக்கைகள் நடத்துவது இந்த நிலைமைகளில் எனக்கு மிகவும் கடினமாகி விட்டது. எனவே சட்டப்புறம்பான பாஸ்போர்ட் ஒன்றை முயன்று பெற்றுக் கொண்டு நான் தாமதமின்றி ருஷ்யாவிலிருந்து வெளியேறினேன். நான் ஜெனீவா போய்ச் சேர்ந்த போது நாடு கடந்த ருஷ்யர்களின் சச்சரவு உண்மையாகவே கொதிகலம் போன்று தளபளத்துக் கொண்டிருந்தது. பழைய நண்பர்களைச் சந்தித்த போது, அவர்கள் எந்த

அளவுவரை ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டுகிறூர் கள் என்பதைக் கண்டு, எனக்கு அவர்களே அடையாளமே தெரியவில்லே. இந்த எறும்புப் புற்றின் பெரும்பான்மை யினர் தங்கள் தாக்குதலே விளதீமிர் இலீச்சுக்கு எதிராகத் திருப்பியிருந்தார்கள். பிளெஹானவின் முறையீடு நிறைந்த வசைச் சொற்பொழிவு எனக்குச் சிறப்பாக நிஜனவிருக் கிறது. இஸ்க்ராவின் பழைய ஆசிரியர் குழு ''வெல்ல முடியாத போர்க்கப்பற்படை'' எனத் தாம் கருதுவதாக வும், அதன் ஒற்றுமைக்காக,கட்சி உறுப்பினராகும் தகுதி பற்றிய பாராவின்* விளக்கத்தில் ஓர் அல்லது மற்ருெரு வகையில் விட்டுக் கொடுப்பதைக் காட்டிலும் எவ்வளவோ பெரிய தியாகங்கள் செய்வது சாலும் என்றும் அவர் வலியுறுத்திஞர்.

மும்முரமான பரபரப்பு நிறைந்த இந்த நாட்களில் நான் பெரும்பகுதி நேரத்தை விளதீமிர் இலீச் லெனினுட னேயே கழித்தேன் என்பது கூருமலே விளங்கும். அவரோ, ஆவேசப் படபடப்புள்ள இந்த எல்லா மனிதர்களுக்கும் இடையே யாவற்றிலும் மிக்க அமைதியும் பொறுமையும் கொண்டு சிறப்பாக ஒளிர்ந்தார். ஒரு விஷயத்தை நான் தெளிவாகக் கவனித்தேன்: ஆகக் குறைந்த அளவுக்கே என்னிடம் ''பிரசாரம் செய்வதற்கு'' அவர் திட்ட மிட்டு முயன்ருர்; நிகழ்ந்த பிளவின் நிலேமைகளே நானே விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து தெரிந்து கொள்ளுமாறு விட்டுவிட்டார். இம்முறை விதி என்பால் முற்றிலும் இரக்கம் காட்டவில்லே, நான் முன்னர் விவரித்துள்ள நமது புரட்சிகர அகில ருஷ்யச் சூழ்நிலேயின் தனி வகைப்பட்ட விவகாரவாதத்திலிருந்து இன்னும் விடுபடாதிருந்த என்

---

* கட்சி உறுப்பினராகும் தகுதி பற்றிய விதிகளின் முதல் பாரா குறித்து நடைபெற்ற போராட்டத்தின் சித் தாந்தக் கருத்து, கட்சி எத்தகையதாயிருக்க வேண்டும் என்பதாகும். ஒற்ணறக்கல் போன்ற, புரட்சிகரமான பாட் டாளிக் கட்சிக்கு லெனின்வாதிகள் ஆதரவாயிருந்தார் கள். மார்த்தவ் தரப்பினரோ, பரவலான, குட்டிபூர்ஷ்வா சந்தர்ப்பவாதக் கட்சிக்கு ஆதரவளித்தார்கள்.—(ப-ர்.)

மீது நடுவன் என்ற, சங்கடம் நிறைந்த பாத்திரத்தை அது சுமத்தியது. அண்மைக்கால நண்பர்களுக்குள் சமரசம் செய்து வைப்பதற்கு நான் உளமாரப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளலானேன்.

விளதீமிர் இலீச்சின் உள்ளார்ந்த ''நான்'' வியப்பூட்டும் முழுமை பெற்றிருந்த போதிலும் அவர் யதார்த்தத்தில் சாதாரணமாகக் காண முடியாத அளவு தன்னடக்கமும் தற்பற்றின்மையும் கொண்டு விளங்கினுர். எனக்கு நினைவிருக்கிறது: விளதீமிர் இலீச்சுடன் எனது ஒரு விவாதம் நள்ளிரவு வரை நீடித்தது. நமது அகில ருஷ்யப் புரட்சிகர நடைமுறைத் தேவைகளுக்கு அவர் எத்தகைய விசேஷ முக்கியத்துவம் அளிக்கிருர் என்பதை அறிவேன். ஆதலால், இதே நடைமுறைக்கு இந்தப் பிளவினுல் ஏற்படக் கூடிய நாசகரமான விளைவுகளை வருணித்து, சமரசம் செய்து கொள்வதன் இன்றியமையாமையை அவர் ஏற்றுக்கொள்ளும்படிப் புரிவதற்கு நான் முயன்றேன். நான் சொன்னேன்: ''விளதீமிர் இலீச், கடைசியில் எம் மாதிரி நிலைமை உருவாகியிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். பார்க்கப் போனுல் யதார்த்தத்தில் எல்லோரும், தீர்மானமாக எல்லோரும் உங்களுக்கு எதிராக இருக்கிருர்கள்! உங்கள் தரப்பில் வாக்களிக்கும் ஒரு சிலரிடையே கூட, முதன்மையாக உங்கள் பால் தங்களுக்குள்ள சொந்த ஈடுபாடு காரணமாகவே இவ்வாறு செய்பவர்கள் இருக்கலாம் என்று எனக்குப் படுகிறது. எனவே, நீங்கள் ஒருவர் எல்லோருக்கும் எதிராக இருக்கிறீர்கள் என்று ஆகிறது.''

வரலாற்று ரீதியான அறிவுக்கூர்மை படைத்திருந்தவர் விளதீமிர் இலீச் ஒருவர் மட்டுமே என்பதை அடுத்து வந்த நிகழ்ச்சிகள் தெற்றெனப் புலப்படுத்தி விட்டன. எவற்றின் உண்மை இயல்பைச் சராசரி மனிதர்களின் சாதாரணத் திரள் எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகே புரிந்து கொள்ள முடியுமோ அத்தகைய நிகழ்ச்சிகளை முன் காண்பதே மேதை என்றுல், புரட்சி நோக்கில் மென்ஷிவிக்குகளின் இழிவீழ்ச்சியை முன்னரே இவ்வாறு புரிந்து கொண்டதில்தான் விளதீமிர் இலீச்சின் மேதை வாய்ந்த

வரலாற்று அறிவுக்கூர்மை விசேஷத் துலக்கமாக வெளிப்பட்டது.

போல்ஷிவிசமும் மென்ஷிவிசமும் நிலைமைகளின் புற நிலைச் சாராம்சத்தை ஒன்றுக்கொன்று நேர் எதிரான முறையில் புரிந்துகொள்ளும் இருவேறு தன்மைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின. ஆனால் இந்த உண்மை ஐயந்திரிபற்ற தெளிவுடன் புலப்பட்டது நிகழ்ச்சிகளின் அடுத்து வந்த போக்குக்குப் பின்னரே, ருஷ்யச் சமவெளியில் மக்கள் எழுச்சியின் தடையரண்கள் எந்த அளவுக்கு வளர்ந்து பரவினவோ, அந்த அளவுக்கே....

இலீச் பற்றிய நினைவுக் குறிப்புகளிலிருந்து

உல்யானவா-எலிசாரவா

புதிய நண்பர்களும் புதிய தொடர்புகளும்

பீட்டர்ஸ்பர்குக்கு வந்து சேர்ந்த விளதீமிர் இலீச் மெதுவாக, கவனமாக புதிய நண்பர்களுடன் அறிமுகம் செய்து கொள்ளத் தொடங்கினர். அலெக்சாந்தர் இலீச்சின் தம்பி என்ற முறையில் தம்மை அரசாங்கம் மிகவும் காழ்ப்புடன் கண்காணித்தது என்பதை அவர் அறிந்திருந்தார். எதுவும் செய்வதற்கு முன்பாகவே எச்சரிக்கையற்ற வெட்டிப் பேச்சுக்களில் இளைஞர்கள் அடிக்கடி ஈடுபடுவதை அவர் கண்டார். எத்தகைய வெட்டிப் பேச்சும், வீண் வார்த்தைகளும் அவருக்குப் பிடிக்கா. புரட்சியை நிகழ்த்தப் போகிற வர்க்கம் என்று தமக்குத் தெரிந்த வகுப்புக்கு, தொழிலாளர்கள் வகுப்புக்குத் தமது அறிவையும் பணியையும் அவர் கொண்டு செல்ல விரும்பினர். தமது கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களுடன், சோஷலிச மனப்பான்மை கொண்டவர்கள், கம்யூனிச நம்பிக்கைகளையும் முன்னோர்களின் பழக்கங்களையும் கொண்டவர்கள் என்று சொல்லப்பட்ட விவசாயிகளோ, தன்னலம் அற்றவர்களும் உயிர்த் தியாகம் புரியத் தயாராக இருந்தவர்களும் ஆனால் தனியே நின்றவர்களுமான அறிவாளிகளோ புரட்சியை நிகழ்த்த மாட்டார்கள் என்னும் தம்மைப் போன்றே எண்ணிய மனிதர்களுடன் அறிமுகம் செய்து கொள்ள அவர் விரும்பினர். ருஷ்யாவில் புரட்சி தொழிலாளி வர்க்கத்தால்தான் நிகழ்த்தப்படும் அல்லது அது தோன்றவே தோன்ருது (பிளெஹானவின் சொற்கள்) என்று தம்மை போலவே உறுதியாக நம்பியவர்களை அவர்

தேடினுர். இத்தகையவர்கள் சமூக-ஜனநாயகவாதிகள்—அப்போது சிறுபான்மையாய் இருந்தனர். புரட்சிகர மனப்பான்மை கொண்ட படித்தவர்களில் பெரும்பாலோர் நரோதிய, அல்லது ''மக்கள் சித்தக்'' கருத்துக்கள் கொண்டிருந்தனர். நிறுவனம் அழித்தொழிக்கப்பட்டு விட்டதாலும் எந்தக் காரியமும் இல்லாததாலும் தீவிர வேலை செய்பவர் ஒருவருமின்றி, பேச்சுக்களும் கூச்சல்களுமே இருந்தன. இத்தகைய படிப்பாளித்தன அரட்டையிலிருந்து ஒதுங்கி இருக்க முயன்ருர் விளதீமிர் இலீச். பலாத்காரத்தை மேற்கொண்டு மற்றவர்களைக் கொல்லவும் தமது வாழ்வை அர்ப்பணிக்கவும் தயாராய் இருந்த ''மக்கள் சித்தத்தின்'' பிரதிநிதிகளையே போலீசும் அரசாங்கமும் மிகவும் ஆபத்தானவர்கள் என்று அப்போது கருதினர். அவர்களுடன் ஒப்பிடும் போது, தொழிலாளர்களிடையே அமைதியான பிரச்சாரத்தையே குறிக்கோளாகக் கொண்ட சமூக-ஜனநாயகவாதிகள் ஆபத்துக் குறைந்தவர்களாகத் தோன்றினர். ''இது ஒரு சிறு கும்பல், ஏதாவது அவர்கள் செய்வார்கள் என்ருல் எல்லாம் ஐம்பது ஆண்டுகளுக்கு அப்புறம்தான்'' என்று போலீஸ் துறைத் தலைவன் ஸ்வலியான்ஸ்கி சொன்ஞன்.

சமுதாயத்திலும் சமூக-ஜனநாயகவாதிகளைப்பற்றி கிட்டத்தட்ட இத்தகைய கண்ணேட்டமே நிலவியது. ருஷ்யாவில் நாடாளுமன்றம் எதுவும் அந்தக் காலத்தில் இருந்து வரவில்லை. எனவே, பொறுமையற்று, புரட்சிப் பணியாற்றத் துடித்த இளைஞர்களுக்கு, ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகள் அமைதியான ஒரு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள், மார்க்ஸ் நூல்களைப் படித்தபடி, ருஷ்யாவில் விடுதலை உதயமாகும் வேளைக்காகக் காத்திருந்தனர் என்று தோன்றியது. நல்ல அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால் சோம்பேறித் தனத்தையும் முதியவர்களுக்கு இயல்பான கணக்குப் பார்த்தலையும் மோசமான அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால் சுயநலத்தையும் மறைக்கவே மார்க்சின் புறநிலைத்தன்மை இங்கே பயன்படுகிறது என இவர்கள் கருதினர். தமக்கு வழிகாட்டுபவர்கள் என்று இளைஞர்

கள் கருதிய முதிய புரட்சிக்காரர்கள், கடுங்காவல் தண்டனை முகாம்களிலும் சைபீரியச் சிறைக் குடியிருப்புக்களிலுமிருந்து திரும்பியதும் மார்க்சின் ருஷ்யச் சீடர்களை இவ்வாறுதான் பார்த்தார்கள். சர்வ வல்லமை வாய்ந்த எதேச்சாதிகாரத்தை எதிர்த்து சூடு பறக்கும் கடுமையான போராட்டங்களை இளமைக் காலத்தில் அவர்கள் நடத்தியிருந்தனர். அவர்கள் புத்தகங்களையும், கல்லூரிப் பாடங்களையும் வீசியெறிந்துவிட்டு மக்களிடம் சென்றார்கள்.... எதேச்சாதிகார ஆட்சிச் சூழலில் எதுவும் ஒரு சிறிதும் மாறாதபோது, மக்களின் நிலைமை முன்பு போலவே மிகத் துயர்நிறைந்ததாக இருக்கையில், பெரிய பெரிய விஞ்ஞானப் புத்தகத் தொகுதிகளைத் தம்மைச் சுற்றிப் பரப்பி வைத்துக் கொள்வது சாத்தியம் என எண்ணிக் கொண்டிருந்த, வாலிபத் தன்மையற்றிருந்த இளைஞர்களை அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் பார்த்தார்கள். ஏதோவொரு கவலையற்ற தன்மையை இதில் அவர்கள் கண்டார்கள்.

ஒவ்வொரு காலமும் தனது கோரிக்கைகளை முன்நிறுத்துகிறது. மாறிவிட்ட சமுதாய நிலைமைகளில் சிந்திக்கத் தொடங்கியுள்ள இளந் தலைமுறையின் ஆதர்சங்களையும் விழைவுகளையும் பழைய தலைமுறையினர் புரிந்து கொள்ளாமலிருப்பது வழக்கம். ருஷ்யாவில் அரசியல் நிலைமைகள் முன்போலவே இருந்து வந்தன என்றால் பொருளாதார நிலைமைகள் கடுமையாக மாறத் தொடங்கி இருந்தன. முதலாளித்துவம் மேலும் மேலும் அதிகமான பகுதிகளைப் பிடித்துக் கொண்டிருந்தது. வளர்ச்சிப் போக்கு மேலை நாடுகளில் நிகழ்ந்தது போன்றே நம் நாட்டிலும் நிகழப் போகிறது என்பதும், அங்கு போலவே இங்கும் பாட்டாளி வர்க்கமே புரட்சித் தலைவனாக இருக்கப் போகிறது என்பதும் மேலும் மேலும் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாயிற்று. ஏதோ அலட்சியமோ, தீய சித்தமோ இதற்குக் காரணமல்ல என்றும் வளர்ச்சியின் போக்கு இத்தகையது என்றும் அதற்கு எதிராக மிகமிகத் தன்னலமற்ற எழுச்சிகளால்கூட ஏதும் செய்ய முடியாது என்றும்

புரிந்து கொள்ளாத பழைய நரோதியக் கண்ணோட்டத்தின் ஆதரவாளர்கள், குருட்டுத் தனமாக மேலை நாட்டு வழியில் செல்கிற மார்க்சியவாதிகள் தொழிற்சாலைக் கொதிகலத்தில் எல்லா விவசாயிகளையும் வேக வைக்கப் போகிறார்கள் என்று கருதினார்கள். விவசாயிகளுக்கோ அவர்களது நம்பிக்கைகளிலேயே கம்யூனிசக் கருத்துக்கள் குடிகொண்டிருக்கின்றன என்றும் மக்களுக்கு எண்ணற்ற துன்ப துயரங்களை, குறிப்பாகத் தனது ஆரம்ப காலக் கட்டத்தில் கொண்டுவருகிற முதலாளித்துவத்தின் கடிய வழியை இக்கருத்துக்களைக் கொண்டே அவர்கள் ஒருபுறம் விட்டுச் சென்று விடலாம் என்றும் நரோதியக் கருத்தினர் எண்ணினர். வரன்ட்ஸோவும் யுஜகோவும் மற்ற நரோத்னிக்குகளும் ''முதலாளித்துவம் இல்லாமலே கொண்டு செல்வது மேல்'' என்று சொல்லி, இந்த ''மேல்'' சாத்தியம் என்பதற்கான சான்றுகளைக் கண்டுபிடிக்க முயன்றனர். அறுவைச் சிகிச்சையின் அவசியத்தைப் புரிந்து கொள்ளாமல், இந்த அறுவையுடன் தொடர்புள்ள எல்லா வேதனைகளுக்கும் நோயாளியை அமைதியாக ஆளாக்கி, இந்த வேதனைகள் இல்லாமல் காரியம் நடத்துவது ''மேல்'' என்று முயலாத மருத்துவரின் கவலையற்ற வறட்சியான தன்மைக்காகச் சீற்றம் கொள்கிற மனிதன் போல அவர்கள் மார்க்சியவாதிகளின் மீது கோபம் கொண்டனர்.

கனிவு நிறைந்த ''முதலாளித்துவம் இல்லாத வழியே மேல்'' என்ற கண்ணோட்டத்தைத் தமது அந்தக் காலப் பேச்சுக்களிலும், முக்கியமாக நரோதியத்தை விமர்சனம் செய்த தமது முதல் நூல்களிலும் விளதீமிர் இலீச் குத்தலாகக் கிண்டல் செய்தார். **'மக்களின் நண்பர்கள்' எனப்படுவோர் யார்? சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போராடுகிறார்கள்?** எனும் நூலை வாசகர்களுக்கு நினைவூட்டுவோம். அந்தக் காலத்தில் விளதீமிர் இலீச் கொண்டிருந்த கருத்துக்களை மிகச் சிறப்பாக இது வெளியிடுகிறது. இந்த நூல் நோட்டுப் புத்தகங்களில் ஹெக்டோகிராபில் நகல் எடுக்கப்பட்டு கிழிந்து போகும் வரை இளைஞர்களால் படிக்கப்பட்டது.

இந்த நோட்டுப் புத்தகங்கள் தோன்றுவதற்கு முன்னரே, 1893 பனிக்காலத்தில் விளதீமிர் இலீச் நரோத்னிக்குகளுக்கு எதிராக மாஸ்கோவில் பேசினார். கிறிஸ்துமஸ் விடுமுறையில் எங்களிடம் அவர் வந்திருந்த போது இது நடந்தது. பண்டிகைகளின் போது மாலைநேரக் கூட்டங்கள் கூட்டப்படுவது வழக்கம். இத்தகைய ஒரு மாலைநேரக் கூட்டத்தில்தான் மாணவர் இருப்பிடத்தில் நரோத்னிக்குகளுக்கு எதிராகப் பேசினார் விளதீமிர் இலீச். பிரபல நரோத்னிக் எழுத்தாளரான வரன்ட்ஸோவுக்கு எதிராக அவர் பிரதானமாகத் தாக்குதல் தொடுத்தார். தமக்கு இயல்பான துணிவுடனும் தமது இயலறிவு அனைத்தையும் கையாண்டும் பற்றுறுதியின் முழு வலிமையுடனும் அவர் பேசினார். முன்பின் தெரியாத வாலிபரின் துடுக்குத்தனம் எதிர்த் தரப்பினருக்கு அளவுக்கு மீறியதாய்த் தோன்றியது; மார்க்சிய மனநிலை கொண்டிருந்த இளைஞர்கள் தமக்குக் கிட்டிய எதிர்பாராத ஆதரவு கண்டு பெருத்த மகிழ்ச்சி அடைந்தனர். புதிய மனிதர் வரன்ட்ஸோவுக்குச் சூடு கொடுத்துவிட்டு கூட்டத்திலிருந்து விரைவில் நழுவி விட்டதற்காக அவர்கள் வருந்தினர். காலாவதியாகிப் போன தனது கருத்துக்களை எரிச்சலூட்டும் உறுதியுடன் வரன்ட்ஸோவ் சொல்லிக் கொண்டிருந்ததால் ரகசியமற்ற சூழலில் அவரை அம்பலப்படுத்த வேண்டியிருந்ததற்காக தம்மைத் தாமே பின்னர் கடிந்து கொண்டார் விளதீமிர் இலீச். பண்டிகை நாட்களைப் போலீசும் கூடக் கொண்டாட விரும்பியதால் இந்தக் கூட்டம் நல்லபடியே முடிந்தது. தவிரவும் இலீச்சின் பெயர் யாருக்கும் தெரியவில்லை. அவரைப் ''பீட்டர்ஸ்பர்க்காரர்'' என்றே அழைத்தனர். ஆனால் அவருடைய பேச்சு மாஸ்கோ இளைஞர்களுக்குப் பெரிய முக்கியத்துவம் கொண்டிருந்தது. இளம் மார்க்சியவாதிகளுக்கு இது பல விஷயங்களைத் தெளிவுபடுத்திற்று. ஆதரவு தந்து அவர்களை முன்னேக்கித் தள்ளி விட்டது அது.

பீட்டர்ஸ்பர்கிலும் அந்தப் பனிக்காலத்தில் விளதீமிர் இலீச்சுக்கு வெகு சிலரே பழக்கமாகி இருந்தனர். தொழில்

நுட்ப வல்லுனர்கள் குழுவில் அவர் சேர்ந்தார்... பின்பு பாபுஷ்கின், ஷெல்குனேவ், போன்ற அரசியல் உணர்வும் செயலூக்கமும் பெற்ற சில தொழிலாளர்களுடனும், நரோத்னிக்குகளுடன் நடத்திய பொதுவான போராட்டத்தால் தமக்கு நெருங்கி வந்த ஸ்துருவே, பத்ரேசவ் போன்ற சட்ட பூர்வ மார்க்சிய இலக்கியவாதிகள் சிலருடனும், அவர் அறிமுகமானுர். 1903ல் நடந்த இரண்டாவது காங்கிரசில் ஏற்பட்ட பிளவு வரை பத்ரேசவ் இஸ்க்ரா செய்தித்தாள் வேலையில் அவரது நெருக்கமான தோழராய் இருந்தார். ஆனுல், பத்ரேசவிடம் புரட்சியாளருக்கு அன்னியமான தன்மைகள் இருப்பதையும், எல்லா முடிவுகளையும் அவர் மார்க்சிய போதனையிலிருந்து மேற்கொள்ளாமல் இருப்பதையும் சட்டபூர்வமான, பேராசிரியர் போன்ற, முதலாளித்துவ மார்க்சியத்தில் அவர் நின்று விடுவதையும், ஸ்துருவேயுடன் சேர்ந்து நரோத்னிக்குகளை எதிர்த்துத் தாக்கிய விளதீமிர் இலீச் அனைவருக்கும் முன்பாகவே கண்டார். எதிர்காலத்தில் அவர் ஒரு காடேட்டு* ஆகப் போகிருர் என்று விளதீமிர் இலீச் உணர்ந்தார். 1895ல் பத்ரேசவால் பதிப்பிக்கப்பட்ட **நமது பொருளாதார வளர்ச்சியின் தன்மைகள் பற்றிய தகவல்கள்** என்ற கட்டுரைத் தொகுதியில் இந்தத் தீய பிறழ்ச்சியை எதிர்த்து தூலின் என்ற புனைபெயரில் எழுதிய கட்டுரையில் உடனடியாகக் கடும் தாக்குதல் தொடுத்தார். முன்னர் பிளெஹானவ் வெளியிட்ட புத்தகம் செய்தது போல, இந்தக் கட்டுரைத் தொகுதி, தணிக்கைக் கட்டுப்பாட்டைத் தாண்டி வெளிவர முடியவில்லை. **வரலாற்றின்பால் ஒரு பொருண்மை வாதக் கண்ணேட்டத்தின் வளர்ச்சி பற்றி** என்ற தலைப் போடு பேல்ட்டோவ் என்ற புனைப்பெயரில் புத்தகத்தை எழுதியிருந்தார் பிளெஹானவ். நரோத்னிக்குகளை வன்மை

* காடேட்டுகள்—ருஷ்ய மிதவாத முதலாளித்துவத்தினது சட்டபூர்வ ஜனநாயகக் கட்சியின் சுருக்கப் பெயர். இக்கட்சி 1905ல் அமைக்கப்பட்டது. அரசியல் சட்டபூர்வ முடியரசை ருஷ்யாவில் நிறுவ வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தார்கள் காடேட்டுகள்.—(ப-ர்.)

யாகத் தாக்கி, புரட்சிகர மார்க்சியவாதிகளின் நோக்கு நிலையைத் திட்டவட்டமாக வெளியிட்ட இப்புத்தகம் பிளெஹானவ் சாமர்த்தியமாகப் பெயரிட்டிருந்ததால் தப்பியது. சில வறட்சியான புள்ளி விவரங்களே இருந்த போதிலும் தூலினுடைய கட்டுரையின் காரணமாக இந்தக் கட்டுரைத் தொகுதி எரிக்கப்பட்டு விட்டது. சில பிரதி களேயே காப்பாற்ற முடிந்தது. எனவே ஒரு சிலரே அப்போது விளதீமிர் இலீச்சின் கட்டுரையைப் படித் தனர்.

இவ்வாறாக, புரட்சிகர மார்க்சியத்துக்கும்—சமூக-ஜனநாயகம் — சட்டபூர்வ மார்க்சியத்துக்கும் இடை யிலுள்ள வித்தியாசத்தைத் தணிக்கையாளர்கள் விரைவில் கண்டு கொண்டார்கள். இந்த வேற்றுமையை நரோதியப் புரட்சியாளர்கள் சிலரும் கண்டனர். எனவே தங்கள் விரோதிகளான சமூக-ஜனநாயகவாதிகளும் உண்மையில் புரட்சியாளர்களே என்றும் சட்டபூர்வ மார்க்சியவாதி களுடன் இவர்களைப் போட்டுக் குழப்பக் கூடாது என்றும் கண்டனர். ருஷ்யா ''முதலாளித்துவப் பள்ளிக்குப் போகிறது'' (**ருஷ்யப் பொருளாதார வளர்ச்சி பற்றிய பிரச்சினைக்கு விமர்சனக் குறிப்புகள்** என்ற ஸ்துருவேயின் புத்தகத்தில் வருகிற வாசகம் இது) என்று நிர்ணயித்த சட்டபூர்வ மார்க்சியவாதிகள், இருந்து வருகிற அமைப்புடன் போராட வேண்டியது அவசியம் என்ற அர்த்தமுள்ள முடிவு எதையும் இதிலிருந்து பெறவில்லை. நமது சமுதாயக் கம்யூனின் முக்கியத்துவத்தை ஒத்துக் கொள்ளாத சில இளைய ''மக்கள் சித்தத்தினர்...'' சமூக-ஜனநாயகவாதி கள் அரசியல் போராட்டத்தை எதிர்க்காதது மட்டுமின்றி தமது பதாகையில் கூட அதனைப் பொறித்துக் கொள் கிறார்கள் என்று உறுதியாகத் தெரிந்து கொண்டு அவர் களை நெருங்கலாயினர். உதாரணமாக பீட்டர்ஸ்பர்கில் அச்சகம் ஒன்று (லாஹ்தின் அச்சகம்) வைத்துக் கொண் டிருந்த ''மக்கள் சித்தத்தினர்'' சமூக-ஜனநாயகவாதிகள் தமது துண்டுப் பிரசுரங்களையும் கையேடுகளையும் அங்கு அச்சிடலாம் என்று தாமாகவே ஆலோசனை கூறினர்.

சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளர்களுக்குத்தான் வேண்டுகோள் விடுகிருர்களே தவிர சமூகத்தின் வேறு எந்த வர்க்கத்துக்கும் அல்ல என்பதுதான் இரு போக்கு களுக்கும் உள்ள வித்தியாசம் என்றும், எனவே சமூக-ஜன நாயகப் போக்கும் புரட்சிகரமானதே என்றும் அவர்கள் கருதினர். அந்த அச்சகத்தில் விளதீமிர் இலீச் எழுதிய பல துண்டுப் பிரசுரங்களும் **அபராதங்கள் பற்றி** என்ற கையேடும் அச்சாயின. **வேலைநிறுத்தங்கள் பற்றி** எனும் இரண்டாவது கையேடு அச்சகத்தைப் போலீஸ் கைப் பற்றிய போது அழிக்கப்பட்டு விட்டது.

''பொருளாதாரவாதிகளுடன்'' போராட்டம்

நரோத்னிக்குகள், சட்டபூர்வ மார்க்சிஸ்டுகள் ஆகி யோரைத் தவிர ''பொருளாதாரவாதிகள்'' என்போருட னும் விளதீமிர் இலீச் போராட வேண்டியிருந்தது. தொழி லாளர்கள் அரசியல் போராட்டம் நடத்துவது தேவை யற்றதென்றும், தொழிலாளர் திரள் மத்தியில் அதற்கான கிளர்ச்சியே நடத்தக் கூடாது என்றும் சொன்ன போக்கு இது. அரசியல் ரீதியில் வளர்ச்சியே பெருதவர்களும் பெருந்திரளாக மன்னர் மீது இன்னும் நம்பிக்கை வைத் திருந்தவர்களுமான தொழிலாளர்களை அவர்களுடைய அன்றுடத் தேவைகள், கோரிக்கைகளின் நோக்கில் நாம் அணுகியே தீர வேண்டும் எனும் ஆரோக்கியமான இயல் பான ஆர்வத்திலிருந்து இது தோன்றியது. இப்போது மக் களை நோக்கி முதல் எட்டு எடுத்து வைப்பது பற்றிய விஷ யம் இது. அவர்களுக்கு விழிப்பூட்ட வேண்டியிருந்தது. தங்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆர்வத்தை யும் ஒன்றுசேருவதிலும், ஒற்றுமைப்படுவதிலும்தான் மீட்சிபெறும் வழியைக் காண முடியும் என்ற உணர்வை யும் அவர்களிடையே வளர்த்து, இந்த ஒற்றுமைக்கான முயற்சிகளில் அவர்களுக்கு உதவ வேண்டியிருந்தது. ஒன்றுசேர்ப்பதோ, கண்ணுக்கு முன்னல் உள்ள நேரடித்

தேவைகளின் அடிப்படையில்தான்—முதன்மையாக எஜமானர்களின் அடக்குமுறைக்கு முதலில் எதிர்ப்புத் தெரிவிப்பதன் அடிப்படையில்தான்—இயல்வதாய் இருந்தது. வேலைநேரம் அளவின்றி நீண்டு கொண்டிருந்ததற்கும் பல்வேறுவிதமான திருட்டுத்தனங்களால் ஊதியம் குறைக்கப்படுவதற்கும் எதிராகக் கிளர்ந்து எழும்படி அறைகூவல், மதிய உணவு நேரத்தில் சுடுதண்ணீர் வேண்டும் என்றும் நீராவிக் குளியல் மேற்கொள்வதற்காக சனிக்கிழமையில் வேலையைச் சற்று முன்னதாக முடிக்க வேண்டும் என்றும் அநியாயமான அபராதங்களை ஒழிக்க வேண்டும் என்றும் முரட்டுத்தனமும் மண்டைக் கனமும் கொண்ட மேஸ்திரிகளை நீக்க வேண்டும் என்றும் பிறவகைகளிலும் கோரும்படி அறைகூவல் ஆகியவற்றை மிகவும் அனுபவமற்ற, வளர்ச்சியற்ற தொழிலாளிகூடப் புரிந்து கொண்டார்.

இத்தகைய சாதாரணத் தேவைகளால் ஒன்றுசேர்ந்த அவர்கள் ஒற்றுமையாக, நட்புமுறையில், உறுதியாகப் போராடவும், பொது நலன்களைப் பாதுகாக்கவும் கற்றுக் கொண்டனர். இந்தப் போராட்டத்தில் கிடைத்த வெற்றியால் அவர்கள் தமது ஆற்றலை உணர்ந்தனர், இன்னும் அதிகமாக ஒன்றுபட்டனர். முதல் வேலைநிறுத்தங்களில் கிடைத்த வெற்றி—முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எந்த அளவுக்கு சிறியவையாகவும் நியாயபூர்வமாகவும் இருந்தனவோ, அந்த அளவுக்கு எளிதாக அவை நிறைவேற்றப்பட்டன—எந்தக் கிளர்ச்சியையும் விட வலுவாக அவர்களுக்கு உற்சாகமூட்டி முன்னேக்கித் தள்ளி விட்டது. நிலைமையில் பெறப்பட்ட மேம்பாடுகள் படிப்பதற்கும் மேலும் வளர்ச்சியுறுவதற்கும் அதிகமான வாய்ப்பை நல்கின. எனவே தொழிலாளர் திரளிடம் போன சமூக-ஜனநாயகவாதிகள் அனைவரும் பொருளாதாரத் தேவைகளிலிருந்தே தமது பிரச்சாரத்தைத் தொடங்கினர். விளதீமிர் இலீச்சின் துண்டுப் பிரசுரங்கள் ஒவ்வொரு ஆலையிலும் தொழிற்சாலையிலும் இருந்த தொழிலாளர்களின் இன்றியமையாத கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி, இதன் மூலம் பெருத்த மனப்பதிவை ஏற்படுத்தின. சமா

தான வழியில் கோரிக்கைகளை முதலாளிகள் நிறைவேற்ற வில்லை என்றால் வேலைநிறுத்தம் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. சில ஆலைகளில் வேலைநிறுத்தம் பெற்ற வெற்றி, இத்தகைய போராட்ட வழியை மேற்கொள்ளுமாறு மற்ற ஆலைத் தொழிலாளர்களையும் தூண்டி விட்டது.

சிறு குழுக்களில் வேலை—பிரச்சாரம்—நடத்துவதிலிருந்து பொதுமக்கள் மத்தியில் வேலை—கிளர்ச்சி—நடத்துவதற்கு மாறிய சமயம் அது. இவ்வாறு இத்தகைய மாற்றத்தை ஆதரித்தவர்களில் விளதீமிர் இலீச்சும் ஒருவராவார். பிரச்சாரத்துக்கும் கிளர்ச்சிக்கும் இடையில் இருந்த வேற்றுமையைப் பிளெஹானவின் சொற்கள் மிகவும் நன்ருகத் தெளிவுபடுத்தின எனலாம்: ''சிறு தொகையினருக்குப் பல கருத்துக்களைத் தருகிறது பிரச்சாரம், கிளர்ச்சியோ ஒரு கருத்தைத் திரளான பொது மக்களுக்குத் தருகிறது.''

ஒரு சிறிதும் வளர்ச்சியுருத தொழிலாளர்களை, மிக அவசியமான பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையிலேயே முதலில் அணுக வேண்டும் என்றால், இது ஓர் ஆரம்ப கட்டமாகத்தான் இருக்க வேண்டும் என்றும், முதல் உரையாடல்களிலும் முதல் துண்டுப் பிரசுரங்களிலுமிருந்தே அரசியல் உணர்வு வளர்ச்சியுறத் தொடங்க வேண்டும் என்றும் தொடக்கம் முதலே விளதீமிர் இலீச்சை விட நிர்ணயமாகச் சொன்னவர் எவரும் இல்லை. 1895 இலையுதிர் காலத்தின் இறுதியில், அவர் கைது செய்யப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, பீட்டர்ஸ்பர்கிலிருந்து நான் அவரிடம் வந்த போது நடந்த உரையாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது.

''அரசரை இரண்டாவது கடவுளாகக் கருதுகிற, பொருளாதாரக் கோரிக்கைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்களைக் கூட அச்சத்துடன் சுற்றி நோட்டம் விட்டபடிக் கையில் எடுக்கிற ஏதுமறியாத தொழிலாளர்களிடம் அரசியல் பற்றி எப்படிப் பேசத் தொடங்குவது? இத்தகைய பேச்சு அவர்களை நம்மிடமிருந்து தூரத் தள்ளி விடாதா?''

என்று இன்னும் உணர்வின்றி இருந்த மாஸ்கோத் தொழிலாளர்களை மனதில் கொண்டு நான் கேட்டேன்.

எல்லாம் அணுகல்முறையையே பொறுத்திருக்கிறது என்று விளதீமிர் இலீச் சுட்டிக்காட்டினார்.

''அரசருக்கும் இருக்கின்ற அமைப்புக்கும் எதிராக உடனடியாகப் பேசத் தொடங்கினால், அது தொழிலாளர்களை நம்மிடமிருந்து தூரத்தள்ளித்தான் விடும். ஆனால், அன்றாட வாழ்க்கை அனைத்தும் 'அரசியலால்' பின்னப்பட்டுள்ளதல்லவா? பலவகைப் போலீஸ் அதிகாரிகளின் முரட்டுத்தனம், தான்தோன்றித்தனம், முதலாளியுடன் தோன்றுகிற தகராறில் போலீஸ் அதிகாரிகளும் அரசியல் போலீசாரும் கட்டாயம் முதலாளிக்கு ஆதரவாகத் தலையிடுவது, அதிகாரம் படைத்த அனைவரும் வேலைநிறுத்தத்தை அணுகும் முறை—ஆகிய அனைத்தும் அவர்கள் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்று விரைவில் எடுத்துக் காட்டும். ஒவ்வொரு முறையும் இந்தத் துண்டுப் பிரசுரங்களிலும், கட்டுரைகளிலும் எடுத்துச் சொல்லி, ஆங்காங்கு இருக்கும் போலீசும் அரசியல் போலீசும் செய்கிற வேலையைச் சுட்டிக் காட்ட வேண்டும். இந்தத் திசையில் செலுத்தப்படுகிற சிந்தனை படிப்படியாக இன்னும் முன்னேறிச் செல்லும். இதனை ஆரம்பத்திலிருந்தே கோடிட்டுக் காட்ட வேண்டும், ஆலை முதலாளிகளுடன் நடத்துகிற போராட்டத்தின் மூலமாக மட்டுமே ஏதோ குறிக்கோளை அடைய முடியும் என்பது போன்ற மாயையை வளர்க்கக் கூடாது.'' உதாரணமாக, தொழிலாளர்களைப் பற்றி ஒரு புதிய சட்டம் போடப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதன் மூலம் தொழிலாளர்களுக்கு என்ன லாபம், ஆலை முதலாளிகளுக்கு என்ன லாபம் என்று விளக்கிச் சொல்ல வேண்டும். நாம் வெளியிடுகிற பத்திரிகையில் 'நமது மந்திரிகள் எதைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்?' என்று தலையங்கம் எழுதுவோம். நமது சட்டங்கள் என்பவை என்ன, யாருடைய நலன்களை அவை காப்பாற்றுகின்றன என்று தொழிலாளர்கட்கு இது எடுத்துக் காட்டும். நாம் வேண்டுமென்றே அரசரைப் பற்றிப் பேசாமல்

மந்திரிகளைப்பற்றிப் பேசுவோம். ஆனால் இது அரசியல் கட்டுரையாக இருக்கும். ஒவ்வொரு பத்திரிகை இதழும் இத்தகைய தலையங்கத்தைத் தாங்கி வர வேண்டும். இது தொழிலாளர்களிடம் அரசியல் உணர்வை ஏற்படுத்தும்.'' விளதீமிர் இலீச் எழுதிய இந்தக் கட்டுரை ரபோச்சியே தேலோவின் முதல் இதழில் உண்மையிலேயே அச்சாயிற்று. 1895 டிசம்பர் 9ல் விளதீமிர் இலீச்சும் நண்பர்களும் கைது செய்யப்பட்ட போது இப்பத்திரிகைப் பிரதிகள் கைப்பற்றப்பட்டதால் கட்டுரை படிக்கப்படவில்லை. தயாராகிக் கொண்டிருந்த ரபோச்சியே தேலோவின் முதல் இதழுக்கான மற்ற கட்டுரைகளைப் போலவே இக்கட்டுரையையும் நான் படித்திருந்தேன். மிமியோகிராபில் பத்திரிகையை அச்சிடுவது கடினமான வேலையாய் இருந்தது. இதழுக்கான தயாரிப்பு வேலை நீண்ட நாட்கள் நடைபெற்றது. இக்கட்டுரையில் மந்திரி எவ்வளவு கடுமையாகத் தாக்கப்பட்டார் என்றும், கட்டுரை எவ்வளவு எளிதில் விளங்குவதாயும் போர்க்குணம் நிறைந்ததாயும் இருந்தது என்றும் எனக்கு நினைவிருக்கிறது.

விளதீமிர் இலீச் அந்தக் காலத்தில் பொருளாதார விஷயங்களைப் பற்றித் துண்டுப் பிரசுரங்கள் எழுதினார் என்று பிந்தைய காலங்களில் சொல்லிக் கொண்டு தம்மை நியாயப்படுத்தி வந்த ''பொருளாதாரவாதத்தின்'' அக்கால ஆதரவாளர்கள் பலர் எந்த அளவுக்கு உண்மையைத் திரித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இது பற்றி நான் இவ்வளவு விவரமாகப் பேசுகிறேன். அரசியல் தலையங்கத்தைக் கொண்ட பத்திரிகை இதழ் கைப்பற்றப்பட்டு, விளதீமிர் இலீச் நான்காண்டுக்கும் மேலாகச் சிறையிடப்பட்டதானது இத்தகைய நியாயப்படுத்தல்களுக்கு ஓரளவு இடம் அளித்தது. ஆனால் சைபீரியச் சிறை முகாமுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் அவர் வெளியிலிருந்த சில காலமும், சிறையிலும் சைபீரியாவிலுமிருந்தும் அவர் இந்த விஷயத்தில் நிர்ணயமான கருத்து வெளியிட்டார். ''பொருளாதாரவாதத்தை'' மேற்கொண்டிருந்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டாமலிருப்பதற்கு

இதுவே போதுமானது. குஸ்கோவாவின் க்ரேடோ அறிக்கைக்கு சைபீரியாவிலிருந்து அவர் ஆட்சேபம் தெரிவித்ததை நினைவு கூர்வதே போதுமானது.

இத்தகைய தெளிவான அரசியல் போக்கு ஆரம்பம் முதலே விளதீமிர் இலீச்சின் இயல்பாக இருந்தது. மார்க்சின் போதனையைச் சரியாகப் புரிந்து கொண்டதால் இந்தப் போக்கு அவரிடம் உருவாயிற்று. மேலும் ருஷ்ய சமூக-ஜனநாயகத்திற்கு ஆரம்பமாக அமைந்த ''உழைப்பு விடுதலைக்'' குழுவின் கருத்துக்களுக்கு—உண்மையில் அதை நிறுவிய பிளெஹானவின் கருத்துக்களுக்கு—இசைவாக இருந்தது இது. பிளெஹானவின் கருத்துக்களை அவரது இலக்கிய நூல்களிலிருந்து நன்கு அறிந்திருந்தார் விளதீமிர் இலீச். மேலும் 1895 கோடைகாலத்தில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு அவருடன் நேரடியாக அறிமுகம் ஆனபோது அவற்றை இன்னும் நன்றாகத் தெரிந்து கொண்டார். நிமோனியாக் காய்ச்சலிலிருந்து மீண்ட பின் ஓய்வு கொள்வதும் சிகிச்சை பெறுவதுமே அவரது பயணத்திற்கான அதிகாரபூர்வமான காரணமாகும். அதிகாரபூர்வமற்ற காரணமோ ''உழைப்பு விடுதலைக்'' குழுவுடன் தொடர்பு கொள்வதாகும்.

தமது பயணத்தால் மிகவும் திருப்தியுற்றார் விளதீமிர் இலீச். அவருக்கு இது பெருத்த முக்கியத்துவம் வாய்ந்ததாய் விளங்கியது. அவரது கருத்தில் பிளெஹானவ் எப்போதும் மிகவும் மதிப்புக்குகந்தவராக இருந்தார்; அக்செல்ரோதுடன் அப்போது மிகவும் நெருங்கிப் பழகினார். திரும்பி வந்த பின், பிளெஹானவுடன் நல்ல தொடர்பு கொண்ட போதும் அது தொலை தூரத்து தொடர்பாகவே இருந்தது என்றும் அக்செல்ரோதுடனே மிக நெருக்கமான நட்புறவுத் தொடர்பு கொள்ள முடிந்தது என்றும் சொன்னார். இவ்விருவரின் கருத்துக்களையும் விளதீமிர் இலீச் வெகுவாக மதித்தார். பின்னர், சைபீரியாவிலிருந்தபடி, **ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் கடமைகள்** என்ற கையேட்டுப் பிரதியை அச்சிடுவதற்காக அவர்களுக்கு அனுப்பினார். இந்தப் பிரசுரத்தைக் கிழவர்கள் (பிளெஹான

வும் அக்செல்ரோதும்—மொ-ர்.) புகழ்ந்து பேசுகிருர்கள் என்று நான் அவருக்குச் சொன்னபோது அவர் எனக்கு எழுதிஞர்: ''அங்கீகாரம் வழங்கும் அவர்களின் (கிழவர் களின்) மதிப்புரை, நான் நினைத்துப் பார்க்கக் கூடிய வற்றிலேயே மிகவும் மதிப்பிற்கரியதாகும்.'' அவர்களைக் கண்டு வந்த பின், ருஷ்யாவில் சமூக-ஜனநாயகவாதிகளின் அரசியல் கட்சி அமைக்கின்ற வழியில் இன்னும் நிர்ணய மாகவும் ஊக்கத்துடனும் அடியெடுத்து வைத்தார்.

வெளிநாட்டிலிருந்து திரும்பிய விளதீமிர் இலீச் எங் களுடன் தங்கிஞர். தமது பயணத்தைப் பற்றி உரை யாடல்களின் போது நிறையச் சொன்ஞர். மிகவும் திருப்தி கொண்டவராய், உற்சாகம் ததும்புபவராய்—பிரகாசம் நிறைந்தவராய் என்று கூட நான் சொல்வேன்—அவர் இருந்தார். சட்ட விரோதப் புத்தகங்களை வெளிநாட்டி லிருந்து கொண்டுவர முடிந்ததுதான் இந்தப் பிரகாசத் துக்கு முக்கியமான காரணம்.

தமது குடும்ப நிலைமையின் காரணமாகத் தாம் கடு மையாகக் கண்காணிக்கப்படுவதை அறிந்திருந்த விளதீ மிர் இலீச், அனுமதிக்கப்படாத எதையும் கொண்டு செல்ல விரும்பவில்லை. வெளிநாட்டில் இந்தக் கட்டுப்பாட்டை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கவர்ச்சி மிக்க வலியதாய் இருந்ததால் இரட்டை அடிப்பாகம் கொண்ட பெட்டியை அவர் எடுத்துக் கொண்டார். அந்தக் காலத் தில் சட்ட விரோதமான நூல்களை எடுத்துச் செல்ல வழக்க மாகக் கையாளப்பட்ட முறை இது. நூல்கள் இரண்டு அடிப்பாகங்களுக்கு இடையே வைக்கப்பட்டன. வெளி நாட்டுப் பட்டறையில் இத்தகைய பெட்டி சுத்தமாகவும் கச்சிதமாகவும் செய்யப்பட்டது. ஆயினும் இந்த வழி போலீசுக்கு நன்கு தெரிந்திருந்தது. ஒவ்வொரு பெட்டி யையும் சோதனை போட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதில்தான் நம்பிக்கை முழுதும் இருந்தது. சுங்கச் சோதனையின் போது விளதீமிர் இலீச்சின் பெட்டியைத் தலைகீழாகக் கவிழ்த்துப் பார்த்ததுடன், தட்டித் தட்டி வேறு பார்த்தார்கள். அனுபவம் வாய்ந்த எல்லைக் காவல்

அதிகாரிகள் பெட்டியின் இரண்டாவது அடிப்பாகத்தைக் கண்டுபிடிப்பார்கள் என்பதை அறிந்திருந்த விளதீமிர் இலீச் தாம் மாட்டிக் கொண்டோம் என்று முடிவு கட்டி விட்டதாக எங்களிடம் சொன்ஞர். அவரை ஒன்றும் செய் யாது விட்டு விட்டார்கள் என்பதும், பீட்டர்ஸ்பர்குக்கு அவர் பெட்டியை அனுப்பிஞர் என்பதும், பெட்டி அங் கேயும் வெற்றிகரமாகச் சோதனையிலிருந்து தப்பியதும் அவருக்கு மிகச் சிறந்த மனநிலையை ஏற்படுத்தியிருந்தன. அந்த மனநிலையுடன்தான் அவர் மாஸ்கோவிற்கு எங்க ளிடம் வந்திருந்தார்.

பின்தொடரலும் கைதாவதும்

ஒளித்து வைக்கப்பட்டிருந்தது உண்மையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாம் என்றும், அப்போதைய பழக்கத் தின்படி மாட்டிக் கொண்டவரை உடனே கைது செய் யாமல் புத்தகங்கள் கைக்குக் கிட்டுகிற, அவற்றை விநி யோகிக்கிற, அனைவரையும் போலீஸ் பின்தொடரலாம் என்றும் இவ்வாறு பெரிய வழக்கு சோடிக்கலாம் என்றும் விளதீமிர் இலீச் சொன்னது அனேகமாகச் சரியாகவே இருக்கலாம்.

1895 இலையுதிர் காலவாக்கில் போலீசார் விளதீமிர் இலீச்சை மிகக் கவனமாகக் கண்காணித்தார்கள். அந்த ஆண்டு இலையுதிர்காலத்தின் இறுதியில், மேற்சொன்னபடி அவரைப் பார்க்க நான் பயணம் செய்த போது இது பற்றி அவர் என்னிடம் சொன்ஞர். தாம் கைது செய்யப்பட் டால் தாயாரைப் பீட்டர்ஸ்பர்கிற்கு வர விட வேண்டா மென்றும், தமக்குப் பரிந்து பேசுவதற்காகப் பல்வேறு அலுவலகங்களுக்கு நடந்து அலைவது தாயாருக்குச் சிறப் பாகக் கடினமாய் இருக்கும் என்றும், ஏனெனில் மூத்த மகனுக்காக இதே போல நடந்து அலைய வேண்டி நேர்ந்த தன் நினைவுகளைத் தாயாருக்கு அது ஏற்படுத்தும் என்றும் விளதீமிர் இலீச் கூறிஞர். அந்தப் பயணத்தின் போது

எனது சகோதரனின் வீட்டில் அப்போது உடல்நலம் வாய்ந்த வாலிப வயதுத் தொழிலாளராயிருந்த ஷெல்கு னோவுடன் நான் அறிமுகம் செய்து கொண்டேன்.

போலீஸ் ஒற்றர்களிடமிருந்து தாம் எப்படிப் பல முறை தப்பி ஓடினார் என்று விளதீமிர் இலீச் எனக்குச் சொன்னார். அவரது கண்பார்வை நன்றாக இருந்தது. கால்கள் துடியாக இயங்கின. உற்சாகத்துடனும் மகிழ்ச்சிமிக்க கடகடவென்ற சிரிப்புடனும் அவர் சொன்ன கதைகள் மிகவும் வேடிக்கையாக இருந்தன என்பது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு சம்பவம் குறிப்பாக என் நினைவில் பதிந்து விட்டது. விளதீமிர் இலீச்சை ஓர் ஒற்றன் விடாமல் பின்பற்றி வந்தான். விளதீமிர் இலீச் தாம் சென்று கொண்டிருந்த வீட்டிற்கு அவனைக் கொண்டுவர விரும்பவில்லை, அவனிடமிருந்து விடுபடவும் அவரால் முடியவில்லை. உடன் வந்த இந்த வேண்டாத வழிப்பயணியைக் கவனித்த இலீச், பீட்டர்ஸ்பர்க் வீடு ஒன்றின் ஆழ்ந்த வாயிலுக்குள் அவனைக் கண்டார்: அப்போது வாயிலைக் கடந்து சென்று அதே வீட்டின் ஒரு பகுதிக்குள் விரைவாக நுழைந்தார். தன் பதுங்கிடத்திலிருந்து பாய்ந்து வந்த ஒற்றன் தனது தடத்தை விட்டுவிட்டு அலை பாய்ந்ததை அங்கிருந்து பார்த்து மகிழ்ந்தார்.

''நான் வாயிற்காப்போன் நாற்காலியில் உட்கார்ந்தேன். அங்கிருந்த நான் எவருக்கும் தென்படவில்லை. ஆனால் கண்ணாடி வழியாக எல்லாவற்றையும் என்னால் பார்க்க முடிந்தது. அவனது கஷ்டமான நிலையைக் கண்டு களித்தேன். மாடிப்படி வழியே இறங்கி வந்த ஒருவர் வாயிற்காப்போனது நாற்காலியில் உட்கார்ந்து சிரித்துக் கொண்டே ஆடிக் கொண்டிருந்த ஆசாமியை வியப்புடன் பார்த்தார்'' என்றார் விளதீமிர் இலீச்.

பின்தொடர்வதிலிருந்து சில சமயங்களில் லாகவமாகத் தப்பி வர முடிந்ததென்றால், போலீசும், முகப்புச் சுத்தியாளர்களும் (அப்போது இவர்கள் வீட்டுப் போலீஸ் காரர்களாய் இருந்தார்கள்), ஒற்றர் மந்தைகளும் அதிக பலசாலிகளாக இருந்தனர். இரகசியக் கூட்டங்களில்

கலந்து கொள்வது, போலீசால் குறிக்கப்பட்டுக் கண் காணிக்கப்பட்ட தொழிலாளர் இருப்பிடங்களுக்குப் போவது, சட்ட விரோதப் புத்தகங்களைப் பெற்று அவற்றை விநியோகிப்பது, துண்டுப் பிரசுரங்கள் எழுது வது, அச்சிடுவது, விநியோகிப்பது போன்ற அனுமதிக்கப் படாத பலப்பல வேலைகளைச் சிறு கும்பலாக செய்து வந்த விளதீமிர் இலீச்சையும் அவரது நண்பர்களையும் அவர்கள் கடைசியாகப் பின்பற்றிப் பிடித்தே விட்டனர். வேலைப் பங்கீடு குறைவாக இருந்தது, பணியாளர்கள் குறைவாக இருந்ததே இதற்குக் காரணம். எனவே ஒவ்வொருவரை யும் போலீஸ் விரைவில் கண்டுபிடித்து விட்டது. தெரு வில் நடமாடும் போலீஸ் நாய்களைத் தவிர நம்பிக்கைக்கு உரியவர்களாக நடித்தபடிக் குழுக்களுக்குள் நுழைந்து விட்ட ஒற்றர்களும் இருந்தார்கள். இத்தகையவர்களில் ஒருவராக பல் வைத்தியரான மிஹைலொவ் என்பவர் இருந்தார். விளதீமிர் இலீச் பணியாற்றிய குழுவில் இவர் இருக்கவில்லையாயினும் மற்ற குழுக்களைப்பற்றி இவருக்குத் தகவல் தெரிந்திருந்தது. தொழிலாளர் குழுக்களிலும் இத்தகைய ஒற்றர்கள் இருந்தார்கள். மேலும் அன்றைய தொழிலாளர்கள் மிகவும் அப்பாவிகளாக இருந்ததால் தூண்டிலுக்குள் எளிதில் மாட்டிக் கொண்டனர். சட்ட விரோத வேலையில் ஆட்கள் அப்போது சில காலமே ''வாழ்ந்தார்கள்'': 1895 இலையுதிர்காலம் முதல்தான் இந்த வேலை பரவலாக நடக்கத் தொடங்கியது. டிசம்பர் 9ல் விளதீமிர் இலீச்சும் அவரது நண்பர்களில் பெரும் பகுதியினரும் ''நீக்கப்பட்டனர்.''

இவ்வாறாக விளதீமிர் இலீச்சினது பணியின் முதல் காலம் சிறைக் கதவுகளுக்குள் முடிவுற்றது. ஆனால் இந்த 2,5 ஆண்டு காலத்தில் பெரிய கால கட்டம் அவராலும், எங்கள் சமூக-ஜனநாயக இயக்கத்தாலும் கடக்கப்பட்டு விட்டது. விளதீமிர் இலீச் இந்தக் காலத்தில் நரோத்னிக்கு களுடன் தீர்மானமான போராட்டம் நடத்தினார். தமது மார்க்சிய சாரத்தை நிர்ணயமாக வெளிப்படுத்தினார். பல விதமான பிறழ்ச்சிகளிலிருந்து விலகி, ருஷ்யாவில் மார்க்

சியத்தைப் பரப்பத் தொடங்கிய, வெளிநாடுகளில் இருந்த ருஷ்ய மார்க்சியவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தினர். இதைவிட முக்கியமானது என்னவென்றால் தொழிலாளர்களுடன் அவர் தொடர்புகளை ஏற்படுத்தினர். அன்றைய ருஷ்ய நிலைமைகளில் கட்சி ஒன்று பிறக்குமா என்பதே சந்தேகத்துக்குரியதாகக் கருதப்பட்ட போது அத்தகைய கட்சி ஒன்றை அமைத்து அதற்குத் தலைவராகவும் விளங்கினர். கட்சியின் முதல் காங்கிரசில்*, அவரின்றியே, கட்சி உருவாக்கப்பட்டது. அப்போது அவர் சைபீரியச் சிறை முகாமில் வாழ்ந்து வந்தார். ஆனால் அவர்கொண்டு வந்த அழுத்தத்தின் காரணமாகவே கட்சி தோற்றுவிக்கப்பட்டது. பீட்டர்ஸ்பர்கில் முதல் அரசியல் நிறுவனமாக சமூக-ஜனநாயக அமைப்பை அவர் ஏற்படுத்திய பின்னர், முதல் அரசியல் பத்திரிகை ஏற்படுத்தப்பட்ட பின்னர், பீட்டர்ஸ்பர்கிலும் மாஸ்கோவிலும் முதல் பெரும் வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்ட பின்னர் இது தோற்றுவிக்கப்பட்டது.

---

* கட்சியின் முதல் காங்கிரஸ் 1898ல் நடைபெற்றது. —(ப-ர்.)

பீட்டர்ஸ்பர்கில் விளதிமிர் இலீச்

ஷெல்குருேவ்

1893ல் விளதீமிர் இலீச் பீட்டர்ஸ்பர்குக்கு வருவதற்கு முன்பே அங்கு மார்க்சியக் குழு இருந்தது, அறிவு ஜீவிகளும் தொழிலாளிகளும் தனித்தனிக் குழுக்களாக அமைந்திருந்தனர். மைய வட்டம் தொழிலாளிகளிடம் இருந்தது.

1891லும் 1892லும் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளிகள் மே தினக் கூட்ட அனுபவம் பெற்றிருந்தனர். பீட்டர்ஸ்பர்கில் தொழிலாளர் குழுக்கள் கணிசமாக இருந்தன. ஆனால் இதெல்லாம் ஏதோ ஒரு தற்செயல் தன்மை கொண்டிருந்தது.

விளதீமிர் இலீச் தமது பணியைத் தொடங்கிய போதே எங்கள் நிறுவனம் முழுதையும் அடிப்படையிலிருந்தே ஆராய முயன்ருர். குழுக் கூட்டங்களுக்கு விருப்பமுடன் வந்து சென்ருர். ஒவ்வொரு தொழிலாளர்-புரட்சியாளரையும் ஆர்வமுடன் கூர்ந்து கவனித்து வந்தார்.

எங்கள் சக்தியை அறிவார்ந்த முறையில் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வினியோகிப்பது பற்றிய பிரச்னை 1894ஆம் ஆண்டிலேயே தொழிலாளர்களான எங்களிடையே விவாதிக்கப்பட்டது. அதாவது ஏதாவது ஒரு தொழிற்சாலையில் எங்கள் மனிதர் ஒருவரும் இல்லை என்ருல், அந்தத் தொழிற்சாலை பெரியதாக இருந்தால், எங்கள் தோழர்களில் யாராவது ஒருவரை அங்கு அனுப்பி வைக்க முயன்ருேம். ஒவ்வொரு பெரிய தொழிற்சாலையிலும் எங்கள் மனிதர் ஒருவராவது இருக்குமாறு பார்த்துக் கொண்டோம்.

* * *

1895ன் வசந்த காலத்தில் கிளர்ச்சி பற்றிய ஒரு கையேடு பீட்டர்ஸ்பர்கில் வெளியாயிற்று. இந்தக் கையேடு கூட்டத்தில் படிக்கப்பட்டது. அறிவுஜீவிகள் ஏழு, எட்டுப் பேர் கலந்து கொண்டனர். விளதீமிர் இலீச், ஸ்தார்கவ், கிரிஷிஸானவ்ஸ்கி, வானேயிவ் ஆகியோரும் மற்றவர்களும் அங்கு இருந்தனர். கையேட்டைப் படித்தபோது அறிவுஜீவிகளில் ஒரு பகுதியினர் பிரசுரங்கள் மூலமாகக் கிளர்ச்சி செய்வதற்கான காலம் இன்னும் வரவில்லை என்ற கருத்தை வெளியிட்டனர். ஏதாவது ஒரு தொழிற்சாலையில் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டால், அப்போது எங்கள் தொழிலாளர்கள் இன்னும் வெகு குறைவாகவே இருந்தால், அவர்களும் கைது செய்யப்பட்டு விடுவார்கள், அதனால் வேலை நின்றுவிடும் என்று காரணம் சொல்லப்பட்டது.

இதற்காக பயப்பட வேண்டியதில்லை என்று விளதீமிர் இலீச் எடுத்துக் காட்டினார். கைதான ஒருவருடைய இடத்தில் அவரைப் போன்றவர்களும் அவரை விட பலசாலிகளுமான டஜன் கணக்கான புதிய தொழிலாளர்கள் தோன்றுவதற்குப் பிரசுரம் வகை செய்யும் என்றார் அவர். கூட்டத்துக்கு வந்திருந்த தொழிலாளர்கள் அனைவரும் பிரசுரம் மூலம் கிளர்ச்சி தொடங்குவதற்கு ஆதரவு தந்தனர்.

அச்சிட்ட மார்க்சியத் துண்டுப் பிரசுரங்கள் 1895ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில்தான் வெளியாகத் தொடங்கின. நான்கு அல்லது ஐந்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. ''சமூக-ஜனநாயகவாதிகள் குழு'' என்று பிரசுரங்களில் வழக்கமாகக் கையொப்பமிடப்பட்டிருந்தது. சில பிரசுரங்கள் வெளியிடப்பட்ட பின்னர் நிறுவனம் ஒன்று உருவாக்க வேண்டும் என்னும் பிரச்னையை விளதீமிர் இலீச் முன்வைத்தார். ''சமூக-ஜனநாயகவாதிகள் குழு''— என்பது எதையும் குறிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட நிறுவனம் இருக்கிறது என்று தொழிலாளி தெரிந்து கொள்ள வேண்டும்.

விளதீமிர் இலீச் ஆணையிட்டபடி 1895 ஆகஸ்டில் இர

கசியக் கூட்ட இல்லம் ஒன்று என்னுல் அமர்த்தப்பட்டது. வீட்டுக்காரர் ஒரு தொழிலாளர். விளதீமிர் இலீச், லியஹோவ்ஸ்கி, தஹ்தாரெவ், ஸ்தார்கவ் ஆகியோரும் பிறரும் இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து சென்றனர். அந்தக் காலத்தில் நேவா எல்லை நிலையப்பகுதியில் நான் ஓர் அமைப்பாளர் போலிருந்தேன். எனவே நானும் இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போவேன். ''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகம்'' என்னும் ருஷ்யாவின் முதல் மார்க்சியக் குழுவுக்கு இங்குதான் அடித்தளம் நிறுவப்பட்டது. நமது இளம் நிறுவனம் ஆங்கிலேயத் தொழிற்சங்கங்களின் வழியில் போய்விடக் கூடாது என்று விளதீமிர் இலீச் எங்களிடம் சொன்னுர். நிறுவனம் புரட்சிகர வழியில் நடைபோடுமாறு விளதீமிர் இலீச் குறிப்பாகப் பார்த்து வருகிருர் என்று ஏற்கெனவே தெரிந்தது. தொழிலாளியை அணுகும் போது பொருளாதாரத்தைப் பற்றியே அதிகமாகப் பேசும்படியும், அத்தியாவசியமான பொருளாதார நலன்களின் அடிப்படையிலேயே தொழிலாளர்களை ஒன்று சேர்க்கும்படியும் நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போதிலும் செய்கின்ற பணியின் அரசியல் அம்சத்தையும் மறந்துவிடக் கூடாது என்ருர் விளதீமிர் இலீச்.

''போராட்டக் கழகம்'' முதல் எட்டுகள் எடுத்து வைக்கும்போதே புரட்சிகர மார்க்சியப் பாதையில் அதனை விளதீமிர் இலீச் திருப்பி விட்டது எதிர்காலத்தில் பெரிய ஒழுங்கமைப்புப் பணி ஆற்றியது. 1895 டிசம்பரில் மார்க்சிய அறிவாளிகளின் தலைவர்கள் அனைவரும், பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களும் கைது செய்யப்பட்ட போதிலும், ருஷ்யாவில் அதுவரை காணப்படாத வேலை நிறுத்தம் ஒன்று 1896 மே மாதத்தில் பீட்டர்ஸ்பர்கில் வெடித்தது. முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். தொழிலாளர்கள் வேலைக்கு வர வேண்டாம் என்று நிர்ப்பந்திக்கப்பட்ட நாட்களான முடிசூட்டு விழா நாட்களில் தொழிலாளர்களுக்கு ஊதியம் தரப்படவில்லை. இந்த நாட்களுக்கு ஊதியம் தர

வேண்டும் என்பதே வேலைநிறுத்தத்தின் பிரதான குறிக்கோளாய் இருந்தது. அப்போது இரண்டாம் நிகோலாய் முடிசூடினார். வேலைநிறுத்தம் அது வரை காணப்படாத ஒன்ருக விளங்கியது. முடிசூடல் நாட்களுக்கு ஊதியம் வேண்டும் என்று விடுக்கும் கோரிக்கையிலேயே மன்னரின் ''மிக உயர்ந்த மாட்சிக்கு'' அவமதிப்பு தொனித்தது.

''போராட்டக் கழகத்தின்'' பணியால் நிகழ்ந்த வேலை நிறுத்தம் இரகசிய இயக்கமாக இருந்த தொழிலாளர் இயக்கத்தைப் பகிரங்கமாக்கியது. பெருமளவிலான தொழிலாளர்கள் ஏற்கெனவே துண்டுப் பிரசுரங்களை, பொதுவாகவே சட்ட விரோத இலக்கியத்தைப் படித்திருந்ததால் சோஷலிஸ்டுகளைப் பற்றி உரக்கவே பேசலாயினர். 1917ம் ஆண்டுப் புரட்சிக்குப் பொது ஒத்திகையாக விளங்கியது 1905ம் வருடப் புரட்சி என்ருல், 1905ம் ஆண்டுப் புரட்சியைத் தயாரிப்பதற்கு ஒரு முக்கியமான ஒத்திகையாக விளங்கியது 1896ஆம் வருடத்து வேலை நிறுத்தம் என்று கருத வேண்டும்.

நிகோலாய் பெத்ரோவிச்

கினியாசெவ்

புதிய கடற்படை ஆட்சிக் குழுவின் [New Admiralty] துறைமுகத்தில், கொல்லுப் பட்டறையில் 1884 முதல் 1889 வரை பணிபயில்பவராக இருந்து, மேஸ்திரியாக ஆகி விட்டேன். துறைமுகத்தில் நடந்த வேலை மிகவும் பயனற்ற நிலையில் இருந்தது. பின்பு பால்டிக் தொழிற் சாலையிலிருந்து இளம் மேஸ்திரிகள் சிலர் தொழிற் பட்டறைக்கு வந்தனர். பால்டிக் தொழிற்சாலையிலிருந்து''ஆபத்தானவர்கள்'' என்று அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என்பது பின்னர் தெரிய வந்தது. துறைமுகத்தில் உயிரோட்டத்தை அவர்கள் கொணர்ந்தனர். இயங்காமல் இருந்த இயந்திரங்களை அவர்கள் இயங்க வைத்தனர். இதன் காரணமாக ஊதியம் உயர்ந்தது.

இத்துடனேயே இந்த மேஸ்திரிகள் பட்டறையிலிருந்த இளைஞர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து தொழிலாளர்கள் மத்தியில் சோஷலிசப் பிரச்சாரம் நடத்தினர். குழுக்கள் நிறுவும் வேலை தொடங்கியது. இவற்றில் ஒன்றில் நான் இருந்தேன். குழுவில் ஏதோ உலக அறிவு பெற்ற நான், அங்கு தெரிந்து கொண்டவற்றை உடனே எனது நண்பர்கள் மத்தியில் பரப்பினேன். வாய்வழிப் பிரச்சாரத்தைத் தவிர, சோஷலிசக் கருத்துக்கள் நிறைந்த புத்தகங்களும் கைக்குக்கை வினியோகிக்கப்பட்டன. சட்ட விரோத இலக்கியமும் அவ்வப்போது எங்களுக்குக் கிட்டிற்று. அதனைப் பாதுகாப்பது கடினமாயிருந்ததால் அதனுல் அதிகப் பிரயோசனம் இருக்கவில்லை.

தொழிலாளர்கள் சரியான அரசியல் வளர்ச்சி பெறுவதற்காக ''ஜனநாயகப் பல்கலைக்கழகங்கள்'' என்று

அழைக்கப்பட்ட குழுக்கள் எங்கள் துறைமுகத்தில் நிறுவப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் மாணவர்கள் ஐந்து பேருக்கு மேல் இருக்கவில்லை. ''தொழிலாளி பல்கலைக்கழகத்துக்கு வர முடியவில்லை என்றால் பல்கலைக்கழகமே தொழிலாளியிடம் போகும்'' என்று சொல்லப்பட்டது. குழுவின் உறுப்பினர்களது வளர்ச்சிப் பணி வேகமாக நடைபெற்றது.

உயர் கல்வி நிலையங்களின் மாணவர்கள்தான் இக்குழுக்களின் தலைவர்களாகவும் அமைப்பாளர்களாகவும் விளங்கினர்.

*1894—1895*ல் ஸபரோஸெச், ஸ்தார்கவ் ஆகியோருடன் சேர்ந்து விளதீமிர் இலீச் பாடத் திட்டத்தை ஏற்படுத்திய போது எங்கள் தொழிலாளர் குழுக்களில் நடந்த வேலை மேலும் ஆழமானதாகவும் சரியானதாகவும் ஆயிற்று.

பெத்ரோகிராத் பகுதியிலும், வசீலியெவ்ஸ்கி தீவிலும், வீபர்க் பகுதியிலும், கோல்பினே குடியிருப்பிலும் தொழிலாளர் குழுக்கள் சிலவற்றை அமைத்து, உரை நிகழ்த்துவதற்குச் சில அறிவாளிகளை அனுப்பும்படி நான் கோரிய போது எங்கள் தலைமையகத்திலிருந்து சொன்னார்கள்: ''சரி, நிகோலாய் பெத்ரோவிச் உங்களிடம் வருவார். இவர் சிறந்த பணியாளர்களில் ஒருவர். எனவே குழுக்களில் உள்ளவர்கள் நம்பகமானவர்களாயும் காரியப் பற்றுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்''.

இந்த ஆணையை நிறைவேற்ற தொழிலாளர்களிடையிலிருந்து எனக்கு அதிகமாகத் தெரிந்தவர்களைக் குழு உறுப்பினர்கள் ஆக்கினேன். குழுவின் முதல் கூட்டம் பெத்ரோகிராத் பகுதியில், எனது அறையில் நடந்தது. மாடிப் படியிலிருந்து எனது அறைக்குத் தனிக் கதவு இருந்ததால் அறைக்கு யார் வந்தார்கள் என்பதை வீட்டுச் சொந்தக்காரர்கள் பார்க்கவில்லை.

குறித்த நேரத்தில் அறைக் கதவை யாரோ தட்டினார்கள். கதவைத் திறந்த நான் சுமார் 30 வயதான மனிதரைக் கண்டேன். அவர் சிறு செம்பட்டைத் தாடியும்,

''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்து''
உறுப்பினர்களிடையே வி. இ. லெனின். 1897



வி. இ. லெனின். *1910*

ஸ்விட்சர்லாந்திலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பி வரும் வழியில் ஸ்டாக்ஹோமில் நாடு கடந்து வாழும் அரசியல் வாதிகள் குழுவில் வி. இ. லெனின். 1917



செஞ்சதுக்கத்தில் **விசியோபுச்** (''குடிமக்களின் கட்டாய இராணுவ பயிற்சி'')துருப்புக்களிடம் லெனின் உரையாற்றும் காட்சி. *1919*

கிரெம்ளின் முற்றத்தில் வி. இ. லெனின் வி. தி. போன்ச்-புருயேவிச்சுடன். 1918

காஷிரோ மின்விசை நிலையம் திறக்கப்பட்டதை ஒட்டி நடைபெற்ற விழாவில் வி. இ. லெனினும், ந. க. குருப்ஸ்கயாவும் விவசாயிகள் மத்தியில் இருக்கும் காட்சி. 1920



கிரெம்ளினில் தமது படிப்பறையில் புத்தக அலமாரி முன்
வி. இ. லெனின். 1918

உருண்டை முகமும், ஊடுருவும் கண்களும் கொண்டவராய் இருந்தார். கண்கள் வரை தொப்பியை இழுத்து விட்டுக் கொண்டிருந்தார். கோடை காலத்திலும் கூட மேல் கோட்டு அணிந்திருந்த அவர் அதன் காலரைத் தூக்கி விட்டிருந்தார். எந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைப் பார்வையால் நிர்ணயிக்க முடியாதவராய் அவர் விளங்கினார். அறைக்குள் வந்த அவர் கேட்டார்: ''கினியாசெவ் இங்குதானே வசிக்கிறார்?'' ''ஆம்'' என்று நான் பதில் சொல்லவே அவர் கூறினார்: ''நான் நிகோலாய் பெத்ரோவிச்''. ''உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்'' என்றேன் நான். ''என்றால் நேரடியாக வர முடியவில்லை.... அதனால்தான் தாமதமாகி விட்டது. எல்லோரும் இருக்கிறார்களா?'' என்று மேல் கோட்டைக் கழட்டிக் கொண்டே கேட்டார் அவர்.

அவரது முகம் காரியப் பற்றும் தீர்மானமும் நிறைந்ததாய் இருந்ததால், அவரது வார்த்தைகள் என் வசமின்றியே கீழ்ப்படிய வைத்தன. நான் உடனடியாக அவரை அமைதிப்படுத்தி எல்லோரும் வந்து விட்டார்கள், கூட்டத்தைத் தொடங்கலாம் என்று கூறினேன்.

கூடியிருந்தவர்களின் அருகில் வந்து அவர்களுடன் அறிமுகம் செய்து கொண்டு, தமக்காக இடப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்து, நாங்கள் எந்த வேலைக்காகக் கூடியிருந்தோமோ அந்த வேலையின் திட்டத்தை விவரிக்கலானார். அவரது பேச்சு காரியப் பற்று நிறைந்ததாய், நிர்ணயமானதாய், நன்கு யோசிக்கப்பட்டதாய், மறுப்பு எதையும் பொறுத்துக் கொள்ளாதது போல இருந்தது. கூடியிருந்தவர்கள் அவரது பேச்சைக் கவனமாகக் கேட்டனர். யார், எங்கு எந்த ஆலையில் வேலை செய்கிறார், தொழிற்சாலைத் தொழிலாளர்களின் வளர்ச்சி எத்தகையது, அவர்களது கருத்துக்கள் என்ன, சோஷலிசக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களுக்குத் திறன் உண்டா, தொழிலாளர்களுக்கு யாவற்றிலும் அதிக அக்கறைக்குரிய விஷயங்கள் என்ன, அவர்கள் என்ன படிக்கிறார்கள் போன்ற அவரது கேள்விகளுக்கு எல்லோரும் பதிலளித்தார்கள்.

நாங்கள் புரிந்து கொண்டபடி, நிகோலாய் பெத்ரோவிச்சின் பிரதானமான சிந்தனை பின்வருமாறு: மனிதர்கள் தமது நலன்களைத் தெளிவின்றிப் புரிந்து கொண்டிருக்கிறார்கள், தாம் எவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அவற்றை பயன்படுத்திக் கொள்ளத் திறனற்றவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் ஒன்றுசேர்ந்து ஒருங்கிணைய முடிந்தால் மேம்பாடு அடைவதற்குத் தடையாக இருக்கிற அனைத்தையும் அழித்தொழிக்கக் கூடிய சக்தி தங்களிடம் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அறிவு பெற்றால் அவர்களால் தாமாகவே தமது நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும், அடிமை நிலையிலிருந்து தம்மை வெளியேற்றிக் கொள்ள முடியும், முதலியன.

நிகோலாய் பெத்ரோவிச் இரண்டு மணி நேரத்துக்கு மேல் பேசினார். எங்களுக்குப் புரியாததை அவர் நன்கு விளக்கிச் சொன்னதால் அவர் பேசுவதைக் கேட்பது எளிதாக இருந்தது. மற்ற அறிவாளிகளின் பேச்சுடன் இவரது பேச்சை ஒப்பிடுகையில் இது முற்றிலும் வேறு வகைப்பட்டது, தனியானது என்று தெளிவாகத் தெரிந்தது. அடுத்த கூட்டத்துக்கான நாள் குறித்துவிட்டு நிகோலாய் பெத்ரோவிச் போய்விட்ட பின்பு கூடியிருந்தவர்கள் என்னைக் கேட்டார்கள்: ''யார் இவர்? மிக நன்றாகப் பேசுகிறாரே.''

அவர்களுக்கு இக்கேள்விகட்கு பதில் சொல்வதற்கு என்னால் முடியவில்லை. ஏனெனில் அவர் யார் என்று அப்போது எனக்கே தெரியாது. அடிக்கடி—வாரம் ஒரு முறை—அவர் எங்களிடம் வந்தார். தமக்குக் கொடுக்கப்பட்ட மற்ற குழுக்களுக்கும் அவர் விஜயம் செய்து வந்தார். சோர்னயா ஆற்றுக்கு அருகில் திமீத்ரியெவ் எனும் தொழிலாளி வீட்டிலும் ஒரு குழுவை அமைக்க முடிந்தது. இந்தக் குழு தொலைவில் இருந்த போதும் நிகோலாய் பெத்ரோவிச் இதற்கும் விஜயம் செய்து வந்தார். வசீலியெவ்ஸ்கி தீவில் இருந்த குழுவுக்கும் அவர் சென்று வந்தார். இந்தக் குழுதான் நிகோலாய் பெத்ரோவிச்சுக்குத் துரதிருஷ்டவச

மானதாய் இருந்தது. அவரை அங்கு பின்தொடர்ந்து கொண்டிருந்தார்கள். இந்தக் குழுவில் இருந்த ஐவரும் 1894 நவம்பரில் கைது செய்யப்பட்டனர்.

மத்திய குழுவின் உறுப்பினராய் நான் இருந்ததால் மற்ற குழுக்களின் பிரதிநிதிகளும் அறிவாளிகளும் எனது வீட்டுக்கு வந்து கூடுவார்கள். இந்தக் கூட்டங்கள் இன்னும் அதிக இரகசியத் தன்மை நிறைந்ததாய் இருந்தன. இந்தக் கூட்டங்களுக்கும் நிகோலாய் பெத்ரோவிச்சே தலைவராய் இருந்தார். ஆனால் அவரது உண்மையான பெயர் என்னவென்று இங்கேயும் தொழிலாளர்களில் எவருக்கும் தெரியாது. நிகோலாய் பெத்ரோவிச் இந்தக் கூட்டங்களில் அறிவாளிகள்-பிரசாரகர்களைக் குழுக்கள் வாரியாக நிர்ணயித்தார். இந்தக் குழுக்கள் எப்படிப்பட்டவை, அவற்றில் என்ன படிக்க வேண்டும் என்பன பற்றியெல்லாம் அவர்களுக்கு நிகோலாய் பெத்ரோவிச் ஆணைகள் பிறப்பித்தார்.

1893ல் எனது பாட்டி இறந்து போனார். அவரது சொத்து வாரிசுரிமையாக எனக்கு வந்து சேர வேண்டி இருந்தது. இந்தச் சொத்து எனக்கு வந்து சேருவதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றித் தோழர்களிடமிருந்து நான் எப்போதும் ஆலோசனை பெற முடியும் என்பதால் அவர்களிடம் கேட்டேன். வழக்குரைஞரின் உதவியாளரான வி. இ. உல்யானவ் என்பவரிடம் செல்லும்படி அவர்கள் எனக்குச் சொன்னார்கள். அவரது முகவரியை நான் எழுதிக் கொள்ளக் கூடாது என்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுமாறும் சொன்னார்கள். அப்படியே எழுதத்தான் வேண்டும் என்றால் அவரது வீட்டு எண்ணுடனும் குடியிருப்புப் பகுதியின் எண்ணுடனும் 9 என்ற எண்ணைச் சேர்த்துக் குறியீடாக எழுதிக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள்.

வீட்டில் மணியடித்த போது வீட்டுக்கார அம்மாள் கதவைத் திறந்தார். உல்யானவ் வீட்டில் இல்லை என்றும் அவர் விரைவில் வந்து விடுவார் என்றும் கூறி, அவரது அறையில் காத்திருக்க என்னை அனுமதித்தார். அறைக்கு

இரண்டு சாளாரங்கள் இருந்தன. மேசை நாற்காலிகள் மிகக் குறைவாகவே இருந்தன: ஓர் இரும்புக் கட்டில், எழுதுமேசை, மூன்று-நான்கு நாற்காலிகள், ஓர் அலமாரி. அறையை நோட்டம் விட்ட நான் நினைத்தேன்: ''இவர் என்ன வழக்குரைஞர்? எனது விவகாரத்தை இவர் கவனிப் பாரா?...'' வீட்டு மணி அடித்தது. உடனே வீட்டுக்குள் ஓர் ஆண் வந்தார். ''நீங்கள் ஏற்கெனவே வந்து விட்டீர் களா?'' மேல் கோட்டைக் கழட்டி விட்டு சிறிது கசங்கி யிருந்த மேலங்கியைச் சரி செய்தார். ''ஒரு நிமிடம். ஆடை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன். பின்னர் வேலையைக் கவனிப்போம்.''

வழக்குரைஞரின் முகத்தைப் பார்த்த நான் திகைத்துப் போனேன்: ''இது நிகோலாய் பெத்ரோவிச் அல்லவா!'' நான் உணர்வு பெறுவதற்குள் உடை மாற்றிக் கொண்டு வந்த நிகோலாய் பெத்ரோவிச் அங்கு நின்று எனக்கு ஒரு நாற்காலியைக் காட்டியபடிச் சொன்னர்: ''எல்லாவற்றையும் ஒன்று விடாமல் வரிசையாகச் சொல் லுங்கள்.'' நாற்காலியில் அமர்ந்த பின், எனக்கு முடிந்த படி விஷயத்தைச் சொல்லத் தொடங்கினேன். அவர் அடிக்கடி குறுக்கிட்டு விஷயங்களை விளக்கிச் சொல்லும் படிக் கேட்டு, உண்மைகளை ஒன்றுக்குப் பின் ஒன்ருக என் னிடமிருந்து கறந்தார். ஒரு ஜெனரலிடம் வேலை செய்யும் போது எனது பாட்டி இறந்து போனுர் என்றும், அந்த ஜெனரலிடம் கல்லால் கட்டிய மூன்றுமாடி வீடு ஒன்று இருந்த போதிலும் பாட்டியின் சொத்தை அவர் அபக ரித்துக் கொள்ளக் கூடும் என்றும் அறிந்த நிகோலாய் பெத்ரோவிச் கைகளைத் தேய்த்தபடி வார்த்தைகளில் ஓர் அழுத்தத்துடன் சொன்னுர்: ''பார்க்கலாம். வெற்றி கிட்டினுல் வீட்டைப் பிடுங்கிக் கொள்வோம். இறந்து போன பாட்டி பண்ணையடிமையாக இருந்ததால் அவரது குடும்பப் பட்டியலைத் தேடி எடுப்பது வெகு கடினம் என் பதுதான் இதிலுள்ள கஷ்டம்.''

இவ்வாறு சொல்லியபடி ஒரு மனு எழுதினுர் அவர். எழுதிய பின், இதையெடுத்துக் கொண்டு நான் எங்கு போக

வேண்டும், யாரிடம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லி, தகவல் கிடைத்தபின் தம்மிடம் வரும்படிக் கூறினர்.

''நல்லது, இப்போது அடுத்த விஷயத்துக்குப் போவோம். குழுக்கள் எப்படி நடந்து வருகின்றன? தொழிற்சாலைகளில் உள்ள நிலைமை என்ன?'' என்று என்னைக் கேள்விகள் கேட்கத் தொடங்கினர் நிகோலாய் பெத்ரோவிச். பதில் சொல்லி முடிப்பதற்குள் அவர் அடுத்தடுத்துக் கேள்விகள் கேட்டார். என்னிடம் அவர் சொன்னர்: ''நேரடியாகக் குழுக்களுடன் சம்பந்தம் கொண்டிருக்கிறவர் நீங்கள் என்பதால், ஆலைகளில் நடப்பதென்ன, தொழிலாளர்கள் ஏன் அதிருப்தியுற்றிருக்கிறார்கள், அதற்கு யார் காரணம் என்பதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தொழிலாளர்களின் நலன்களையும், அவர்கள் அதிகமாக அக்கறை கொண்டிருக்கிற விஷயத்தையும் அவர்களை எப்படி அணுக வேண்டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.''

அவர் சொன்னவற்றைக் கேட்ட நான் இக்கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவது மிகவும் கஷ்டம் என்று உணர்ந்தேன். ஆனல், நிகோலாய் பெத்ரோவிச் அவ்வளவு உறுதியாக இதையெல்லாம் கூறியதால் மறுத்துச் சொல்ல எனக்குத் துணிவு வரவில்லை.

அவர் தொடர்ந்து சொன்னர். ''குழு ஒன்றை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். இதிலுள்ளவர்களுக்குத் தலைமை தாங்க வேண்டுமானல் இவர்களை விட அறிவில் நீங்கள் உயர்ந்திருக்க வேண்டும். நீங்கள் அதிகம் படிக்க வேண்டும். உங்களை நீங்களே வளர்த்துக் கொண்டு பிறரையும் வளர்க்க வேண்டும். நடனத்திற்குப் போவதில் உங்களுக்கு விருப்பம் என்று நான் கேள்விப்பட்டேன். அதை விட்டு விடுங்கள். முழு மூச்சுடன் வேலை செய்ய வேண்டும். நீங்கள் அரசியல் ரீதியில் வளர்ச்சியுற வேண்டும். அப்படியானல் குழுவில் நீங்கள் செய்யும் வேலையில் உங்களுக்கு ஆனந்தம் கிட்டும்.''

நாங்கள் பிரிந்தோம். என் மீது சுமத்தப்பட்ட கடமைகள் பற்றிய சிந்தனையால் எனக்குப் பாரமாக இருந்தது. அவரைப் பிரிந்து தெருவுக்கு வந்த போது நான் சற்றே எளிதாக உணர்ந்தேன். இவற்றையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது என்று நினைத்துப் பார்க்கத் தொடங்கினேன். ஸபரோஸெச்சை இரண்டு நாள் கழித்து நான் சந்தித்த போது, என்ன செய்யும்படி நிகோலாய் பெத்ரோவிச்—வி. இ. உல்யானவ்—எனக்கு ஆணையிட்டிருக்கிறார் என்று சொன்னேன். நான் கூறியதைக் கேட்ட ஸபரோஸெச் சிரித்துக் கொண்டே சொன்னார்: ''பரவாயில்லை, பரவாயில்லை. அவரது உதாரணத்தையே பின்பற்றுங்கள். அவரே மிக நிறைய வேலை செய்கிறார். நாமும் வேலை செய்து அவருக்கு உதவி செய்ய வேண்டும் அல்லவா?''

அன்று முதல் வி. இ. உல்யானவிடம் நான் அடிக்கடி சென்று வரலானேன். தொழிற்சாலையில் கிடைத்த தகவல்களை அவரிடம் சொன்னேன். புதிய ஆணைகளை அவரிடமிருந்து ஒவ்வொரு தடவையும் பெற்றேன்.

ஒரு நாள் அவர் சொன்னார்: ''பொறுங்கள், பொறுங்கள். மற்றவர்கள் நாம் சொல்வதைக் கட்டாயம் கேட்குமாறு செய்து, நிறுவன உரிமையை நாம் பெறுகிற காலம் வரும். அப்போது நமக்கு எளிதாகி விடும். நாம் சொல்வதைத் தொழிலாளர்கள் புரிந்து கொள்வது அவசியம். அப்போது நாம் ஆற்றல் பெறுவோம். நாம் விரும்புகின்றபடி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம்....''

பெருத்த உற்சாகத்துடன் வி. இ. உல்யானவ் இவ்வாறு சொன்னார். உயர்வு பெற்ற மனநிலையுடனும் வேலை செய்வதற்கான உறுதி மிக்க விருப்புடனும் அவரிடமிருந்து நான் பிரிந்தேன்.

விளதீமிர் இலீச்சிடமிருந்து நான் கேட்டதையெல்லாம் எனது பங்கிற்குத் தொழிற்சாலையில் எடுத்துச் சொல்ல முயன்றேன். தொழிலாளர்கள் நான் சொன்னதைக் கவனமாகக் கேட்டனர். என்பால் அவர்கள் கொண்டிருந்த போக்கு மாறியது. அவர்கள் எனக்கு மரியாதை தரத் தொடங்கினார்கள். ஆனால் இதெல்லாம் நீண்ட நாட்

கள் நடைபெறவில்லை. எனது பிரசாரம் பற்றிய வதந்தி கள் நிர்வாகத்தை எட்டின. நான் தொழிற்சாலையை விட்டுப் போக வேண்டியதாயிற்று.

ஒரு வழியாக வி. இ. உல்யானவிடம் வந்து சேர்ந்த என்னிடம் அவர் கேட்டார்: ''உங்களைக் கைது செய்து விட்டால் விசாரணையின் போது, நீதிமன்றத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியுமா?'' ''தெரியும்'' என்றேன் நான். தெரிந்த எதையும் சொல்லிவிடக் கூடாது, புகைப் படங்களோ முகவரிகளோ கையில் வைத்திருக்கக் கூடாது என்பது விசாரணையில் நடந்து கொள்வதற்கான உத்தியாகும். ''தெரியும் என்றால் எல்லாத் தோழர்களுக்கும் அதை விளக்கிச் சொல்லுங்கள்.... உங்களிடம் சேமிப்பு நிதி இருக்கிறதா? நூலகம் உண்டா? எத்தகைய புத்தகங்கள் அதில் இருக்கின்றன? நல்ல நூலகம் ஒன்றை நாம் உருவாக்க வேண்டும். என்னென்ன படிக்க வேண்டும் என்று திட்டமிட வேண்டும். கைது செய்யப் பட்டவர்களுக்கும் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டவர் களுக்கும் எப்படி உதவுவது என்று தெரிந்திருக்க வேண்டும். இதற்கெல்லாம் பணம் வேண்டும். கட்சி உறுப்பினர்கள் உறுப்பினர் கட்டணம் செலுத்துமாறு செய்ய வேண்டும். லாட்டரிகள் ஏற்படுத்தலாம். பணம் திரட்டுவதற்காக சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்த வேண்டும்.''

எங்கள் நிறுவனத்துக்குத் தேவையான அனைத்தையும் எனக்குக் கற்றுத்தர முயன்றார் விளதீமிர் இலீச். அவரிடம் ஒரு மணி நேரம் இருந்து விட்டு நான் வெளியேறினேன். முடிந்தவரை அனைத்தையும் செய்து முடிப்பதாக அவருக்கு வாக்குறுதி தந்தேன்.

அவர் கைதாகி விட்டார் என்று நான் விரைவில் அறிந்தேன். அவர் கைதானதற்குப் பின்னால் விரைவில் நானும் கைதானேன். நான் வியாத்கா குபேர்னியாவுக்கு அனுப்பப் பட்டேன்.

புரட்சிகரக் கடந்தகாலத்தின் சில பகுதிகள்

பப்ரோவ்ஸ்கயா (ஜெலிக்சோன்)

ருஷ்யப் புரட்சிகர சமூக-ஜனநாயகத்தின் வெளி நாட்டுச் சங்கத்தினது காங்கிரசினுடைய கொந்தளிப்பு மிக்க கூட்டம் 1903 அக்டோபரில் ஜெனீவாவில் நடந்தது. ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கலந்து கொள்ள இச்சங்கத்தின் சார்பில் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருந்த லெனின், சமர்ப்பித்த விவர அறிக்கைக்குப் பின் போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இடையில் இங்கு கடுமையான போராட்டம் துவங்கியது.

இத்தகைய சூழலில், கட்சி வேலையிலிருந்து சிறை வாழ்வால் இதுவரை பிரிக்கப்பட்டிருந்த புதிய மனிதருக்கு உடனடியாக எல்லா விஷயங்களையும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் காரியத்தின் ஆவணப் பகுதியை முதல் முறை பார்த்த பின்னரே, **ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் பற்றி** எனும் கையெழுத்து ஆவணத்திலிருந்த லெனினது வரிகள் பணியாளர்-நடைமுறையாளரின் கவனத்தைக் கவர்ந்தன. நிறுவனத்தில் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புத் தருவதற்காக வேலை செய்பவர்களை வெட்டிப் பேச்சாளர்களிலிருந்து பிரிக்கும் பொருட்டுக் கட்சி உறுப்பினர் எனும் கருத்தைக் குறுக்குவது அவசியம் என்று இவ்வாவணத்தில் பேசப்பட்டது.

விதிகளின் முதல் பாராவை வகுக்கின்ற—யாரைக் கட்சி உறுப்பினர் என்று கருதுவது என்ற—பிரச்னையிலேயே பணியாளர்-நடைமுறையாளருக்கு லெனினை ஆதரிக்காமல் இருக்க முடியவில்லை. முதலாளித்துவ அறிவு

ஜீவிகள் மத்தியிலிருந்து வந்த ''அனுதாபிகள்'' பற்றிய விஷயங்களில் நம் கட்சியில் பல இடங்களில் மிகப் பெரும் குழப்பமும் சிக்கலும் இருந்தது. இவர்களுக்கு கட்சிக் கட்டுப்பாடு என்பது இயல்பாகவே அன்னியமானதாக இருந்தது; தமது அமைதியையும், சட்டபூர்வத் தன்மை யையும் அச்சத்துடன் அவர்கள் காத்து நின்றார்கள். அவர் களைக் கட்சி உறுப்பினர்களாகக் கருதுவது கட்சியின் நலன் களுக்கு ஏற்றதாக இருக்கவில்லை.

இதனால்தான், மென்ஷிவிக்குகளோடு சேர்ந்தவர்கள் தாம் மேற்கொண்ட நிலை சரியானது என்று கடுமையாக வாதித்த போதும் அவர்களது வாதம் எடுபடவில்லை. நான் போல்ஷிவிக்குகளை நோக்கிக் கவரப்பட்டேன். அப் போது லெனினை நான் நேரில் அறிந்திருக்கவில்லை. ஆனால் எங்கள் கட்சி வாழ்க்கையின் முழு அமைப்பின் மீதும் நிறுவன பூர்வச் செல்வாக்குச் செலுத்திய இஸ்க்ரா வெளி வரத் தொடங்கியது முதல், குறிப்பாக **செய்ய வேண்டியது என்ன?** என்ற லெனினது பிரபலமான நூல் வெளிவந்த பின் அவருடைய பெயருடனேயே அனைத்தும் சம்பந்தப் பட்டிருந்தன. பீட்டர்ஸ்பர்கில் நான் கைதாவதற்கு முன்பு வரை நான் இஸ்க்ராவின் ஏஜெண்டாகப் பணியாற்றி னேன். ''காத்யா'' என்ற புனைபெயரில் நதேஸ்தா கன்ஸ் தன்தினவ்னா குருப்ஸ்கயா எழுதிய சங்கேதக் கடிதங்களி லிருந்துதான் நான் லெனினது நேரடியான ஆணைகளுக்குக் கீழ் வேலை செய்கிறேன் என்று தெரிந்து கொண்டேன்.*

லெனினைப் பார்க்க வேண்டும் என்று நான் மிக விரும் பிய அந்த நாள் வந்தது. எனது கற்பனையில் அவர் காட்சி தந்த மாதிரியே—மகத்தானவராகவும் எளியவராகவும்— அவர் இருந்தார் என்று நான் கண்டதும் உறுதி கொண் டேன். அவரை நான் முதலில் சந்தித்தது ''லன்தோல்த்'' எனும் ஹோட்டலில். அப்போதெல்லாம் ஜெனீவாவில் தற்காலிகமாகத் தங்கியிருந்த தோழர்களும்—காங்கிர

---

* அக்காலத்தில் ந. குருப்ஸ்கயா இஸ்க்ரா எனும் பத் திரிகையின் செயலாளராக வேலை செய்தார்.—(ப-ர்.)

சுக்குப் பின் தங்கியவர்கள், சைபீரியாவிலிருந்து ஓடி வந்தவர்கள், சிறையிலிருந்து வெளிவந்தவர்கள்—லெனினையும் இந்த ஹோட்டலில்தான் சந்தித்தனர். தற்காலிகமாக வெளிநாட்டில் வாழ நேர்ந்ததால் சலித்துப்போன இந்தத் தோழர்கள் அனைவரும் ருஷ்யாவிற்குத் திரும்பிச் சென்று சட்டவிரோதப் பணியாற்ற விரும்பினர். ஆனால் அவர்களை அனுப்பி வைப்பதற்கு போல்ஷிவிக்குகளிடம் அப்போது வசதி இருக்கவில்லை. இரண்டாவது காங்கிரசுக்குப் பின்பு கட்சியின் மத்திய நிறுவனங்கள் அனைத்தையும் மென்ஷிவிக்குகள் கைப்பற்றிக் கொண்டனர். அத்துடனேயே ருஷ்யாவில் ஆங்காங்கு இருந்த கட்சி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொழில் நுட்ப வாய்ப்புக்களையும் எடுத்துக் கொண்டனர். கட்சிக்கு உரியதாக இருந்த அச்சகத்தையும் பணத்தையும் அவர்கள் கைப்பற்றினர்.

கட்சி வேலையின் மூலம் எனக்கு நன்கு பழக்கமான சில தோழர்களான இஸ்க்ரா ஆதரவாளர்களுடன் ''லன்தோல்''துக்குப் போனேன். இவர்களும் ஜெனீவாவில் தற்காலிகமாகத் தங்க நேர்ந்தவர்களே.

என்னுடன் வந்த அனைவரும் வெகு நாட்களுக்கு முன்பாகவே உறுதி வாய்ந்த லெனின்வாதிகள், அப்போது சொல்லி வந்தபடி, ''நிர்ணயமானவர்கள்'', லெனின் மீது மனப்பூர்வமாகப் பற்றுக் கொண்டவர்கள். மென்ஷிவிக்குகள்மீது, குறிப்பாக லெனினுக்குத் துரோகம் செய்த பிளெஹானவ் மீது அவர்கள் வசை மாரி பொழிந்தார்கள்.

இத்தகைய தோழர்களுடன் கொண்ட தொடர்பு விரைவிலேயே ''நிர்ணயப்பட'' எனக்கும் உதவியது என்பது சொல்லாமலே விளங்கும். எனவே, முன்னால் மென்ஷிவிக்குகள் ''தமது நம்பிக்கையை'' என் மீது திணித்திருந்த போதும், லெனினை முதலில் சந்தித்த அந்த மாலைப் பொழுதிலேயே, நான் உளமார அவர் பக்கம் நின்றேன்.

''லன்தோல்''தில் லெனினுக்காக முன்பே காத்திருந்த சிறு குழு ஒன்றைக் கண்டோம். சீக்கிரமே நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா உடன்வர விரைவான நடையுடன் லெனின் வந்தார். நடக்கும்போதே நண்பர்களுக்கு வணக்

கம் சொன்னார். உள்கட்சி நிலைமையுடன் தொடர்புடைய சில பிரச்னைகள் பற்றி உடனடியாக எங்களுடன் உரையாடத் தொடங்கினார். மென்ஷிவிக்குகள் வம்புப் பேச்சுக்களால் கட்சியை நச்சுப்படுத்துகிறார்கள், காங்கிரசின் பெரும்பான்மை பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கட்டி விடுகிறார்கள், காங்கிரசால் தேர்ந்தெடுக்கப் பட்ட மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான போல்ஷிவிக்குகளின் மீது களங்கம் கற்பிக்கிறார்கள் என்றெல்லாம் அவர் சொன்னார். கட்சி விதிகளின் முதல் பாராவைப் பற்றி விவாதித்த போது வெளியான எண்ணங்களின் ஊசலாட்டமும் அறிவுஜீவித் தனித்தன்மையுமே கட்சியில் உருவான இந்த நிலைக்குக் காரணமாக இருந்தது. போல்ஷிவிக்குகளுக்குக் கடுமையானதாக இருந்த இந்த நிலைமையைச் சித்திரித்துக் காட்டிய விளதீமிர் இலீச், இருந்தாலும் நமது ஆட்களை ருஷ்யாவுக்கு அனுப்புவதில் தாம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அவர்கள் அங்கிருக்கும் கட்சி அமைப்புக்களுக்கு உண்மையான தகவல் தருவார்கள் என்றும் சுட்டிக் காட்டினார். போல்ஷிவிக்குகளிடம் பண வசதி மிகக் குறைவாகவே இருந்ததால் ஒரு சிலரே ருஷ்யாவுக்கு அனுப்பப்படுவார்கள், மற்ற தோழர்கள் தமது முறைக்காகப் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும் என்றார் அவர்.

லெனினது பேச்சு முடிந்த பின்பு அவருக்கும் நதேஸ்தா குரூப்ஸ்கயாவுக்கும் என்னை எனது தோழர்கள் அறிமுகம் செய்து வைத்த போது, மென்ஷிவிக் தலைவர்கள் என்னைக் கண்டு பேசியிருக்கிறார்கள் என்பதை அறிந்திருந்த விளதீமிர் இலீச் ''பயங்கர லெனின்'' இங்கிருப்பதால் இவ்விடம் வருவதற்கு நான் அஞ்சவில்லையா என்று வேடிக்கையாக என்னிடம் கேட்டார். எத்தகைய பயமும் எனக்கு இல்லை என்று நான் சொல்லக் கேட்ட அவர் தம் வீட்டிற்கு வரும்படி என்னை அழைத்தார். நதேஸ்தா கன்ஸ்தன் தீனவ்னாவும் அவருடன் சேர்ந்து எனக்கு அழைப்பு விடுத்தார். அவர்கள் என்னை நெடுநேரம் வருந்தி அழைக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை என்பது புரியக் கூடியதே.

லெனினுடன் சொந்த முறையில் அவரது வீட்டில் பேசுவது பற்றி நான் கனவு காணத்தான் முடிந்திருக்கும். முதல் சந்திப்புக்கு அடுத்த நாளே நான் செஷேரோனுக்கு—இங்குதான் விளதீமிர் இலீச்சும், நதேஸ்தா கன்ஸ்தன் தீனவ்னுவும், இவரது சைபீரிய வாசத்திலாகட்டும், அயல் நாடுகளிலாகட்டும், தமது மகளை விட்டுப்பிரியாத முதிய தாயார் யெலிஸவேத்தா வசீலியெவ்னு குருப்ஸ்கயாவும் ஒரு சிறு கோடைகால வீட்டில் தங்கியிருந்தனர்—நான் கிளம்பினேன்.

அந்த வீட்டில் கீழே சமையலறை இருந்தது. அருகே சிறிய அறை. இந்த அறையில்தான் தமது சிக்கலில்லாத வீட்டு விவகாரங்களைக் கவனித்துக் கொண்டு யெலிஸவேத்தா வசீலியெவ்னு வாழ்ந்து வந்தார். மரத்தாலான மாடிப்படி மேலேயிருந்த சற்றே பெரிய இரண்டு அறைகளுக்கு இட்டுச் சென்றது. விளதீமிர் இலீச்சின் அறையில் ஒரு பெரிய மேசையும் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு அறையில் சற்றே சிறிய மேசையும் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் கம்பளி விரித்திருந்த ஓர் எளிய இரும்புக் கட்டில், சில நாற்காலிகள், ஏனோ தானோ வென்று செதுக்குச் செய்யப்பட்டிருந்த சில புத்தக அலமாரிகள் ஆகியவை இருந்தன. பத்திரிகையிலிருந்து கத்தரித்து எடுத்த பகுதிகள், கையெழுத்துப் பிரதிகள், புள்ளிவிவரப் புத்தகங்கள், அட்டவணைகள் ஆகியவை விளதீமிர் இலீச்சின் மேசை மீது கிடந்தன.

விளதீமிர் இலீச் கரு நீல நிறத்தில் நீண்ட ருஷ்யச் சட்டையைக் கால்சராய்க்கு வெளியே தொங்கும் வகையில் அணிந்திருந்தார். இது அவருடைய கட்டுக்குட்டான உருவம் முழுமைக்கும் சிறப்பான ஒரு ''ருஷ்யத்'' தோற்றத்தைத் தந்தது. இங்கிருந்த சூழல் சடங்கு பாராட்டும் ஸ்விட்சர்லாந்து வாழ்க்கை அமைப்புடன் சம்பந்தமில்லாதிருந்தது. கடுமொழி பேசும் ''மகார்'' இங்கு முதல் முறை வந்த போது ''இங்கு ருஷ்ய ஆன்மா நிலவுகிறது, ருஷ்ய வாடை வீசுகிறது!'' என்று வியப்போடு கூறியது காரணம் இல்லாமல் அல்ல.

நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னுவும் விளதீமிர் இலீச்சும் என்னை மிகவும் அன்புடன் வரவேற்றனர். எனினும் இந்தச் சந்திப்பில் நான் எதிர்பார்த்தது கிட்டவில்லை. ''லன் தோல்'' தில் விளதீமிர் இலீச் சொன்ன விஷயத்தைத் தவிர இன்னும் ஏதாவது அவர் சொல்லி நான் கேட்க வேண்டும் என்று எண்ணினேன். ஆனல் அவரோ என்னிடமே விவரமாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். ருஷ்யாவில் நடக்கிற கட்சி வேலை பற்றிய மிகச் சிறு விவரம் பற்றியும், முழு நேரப் புரட்சியாளர்களான நாங்கள் சிறை புக நேர்ந்தால் வாய்ப்புக் கிட்டும் போது படிப்பதற்கு அந்த நேரத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது பற்றியும் கூடத் தெரிந்து கொள்வதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

1901ஆம் ஆண்டு ஹார்கவ் சிறையிலிருந்த போது இலியீன் என்ற பெயரில் சட்டபூர்வமாக வெளிவந்த **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்ற புத்தகம் எனக்குக் கிட்டியது என்று நான் சொல்லக் கேட்ட விளதீமிர் இலீச் மகிழ்ச்சியுற்றது நன்கு தெரிந்தது. ஆனல் தமது சந்தோஷத்தை மறைக்க முயன்றபடி என்னைக் கேலி செய்தார்: ''பாவம், பாவம், சிறைக் கொட்டடியில் சலிப்பூட்டும் நீண்ட அட்டவணைகளைப் படிக்க நேர்ந்திருக்கிறது உங்களுக்கு. உங்களுக்கு எனது அனுதாபம்!''

திவேர் நிறுவனத்தின் அன்றாட வாழ்க்கை பற்றி என்னிடம் மிக விவரமாகக் கேட்டார். இந்த நிறுவனம் கிராமத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது என்று நான் சொன்னதில் குறிப்பாக அவர் அக்கறை காட்டினர். **நாட்டுப்புற ஏழை மக்களுக்கு** என்ற தலைப்பில் அவர் எழுதிய கையேடு கிராமத்துக் குழுக்களுடன் உள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதில் பெரிய உதவி நல்கியது என்று நான் கூறிய போது, தாம் அடைந்த மகிழ்ச்சியை இந்தத் தடவை அவர் மறைக்கக்கூட முயலவில்லை.

வேடிக்கைக்காகவென்று நான் விளதீமிர் இலீச்சுக்குச் சொன்ன ஒரு சிறு தகவல், வேலை செய்ய நேர்கிற சூழலை முற்ற முழுக்க அறிந்திருக்க வேண்டிய அவசியம் பற்றி

அவரைப் பேச வைத்தது. தலைமறைவுச் சூழலில் கட்சி ஊழியர் எல்லாச் சில்லறை விவரங்களையும் முன்னதாகத் தெரிந்து கொண்டு எதற்கும் தயாராய் எப்போதும் இருக்க வேண்டும்.

விளதீமிர் இலீச் மிகவும் அக்கறை கொண்ட அந்தச் சம்பவம் நான் திவேரிலிருந்து கிளம்புவதற்குச் சில நாட்களுக்கு முன்பு நிகழ்ந்தது. அனுபவம் வாய்ந்த பழைய தோழர் ஒருவரைக் குழுவில் வேலை செய்வதற்காகக் கிராமத்துக்கு அனுப்பிய நாங்கள், அடுத்த நாள் அங்கிருந்து திவேர் கமிட்டியின் பெயருக்கு மூடி ஒட்டப்பட்ட ஒரு கடிதத்துடன் அவர் திரும்பி வந்ததைக் கண்டோம். இந்தப் பிரசாரகர் ''நமது ஆள் அல்ல'' என்றும் ''அவர் ஒரு பிரபு'' என்றும் எனவே அவரை இனிமேல் அனுப்ப வேண்டாம் என்றும் குழுவின் அமைப்பாளர் இக்கடிதத்தில் இரகசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். இதற்குச் சான்றாக ஒரு விவசாயியின் குடிசையில் இரவைக் கழித்த அவர் காலையில் எழுந்து கை கால் முகம் கழுவ முற்பட்ட போது சட்டைப் பையிலிருந்து சோப்புத் துண்டு மட்டுமின்றி பல் விளக்கும் பிரஷ் ஒன்றையும் வெளியிலெடுத்து ''பல் துலக்கத் தொடங்கினார், இவ்வாறு பிரபுக்கள்தான் நடந்து கொள்வார்கள், கிராமத்தில் எங்களுக்கு எந்தப் பிரஷும் தெரியாது'' என்று எழுதியிருந்தார்.

ஜார் காலத்து ருஷ்யாவிலிருந்த ''முற்போக்கான'' குபேர்னியாக்களில் ஒன்றாகக் கருதப்பட்ட திவேர் குபேர்னியாவிலிருந்த இக்கிராமத்தின் கலாச்சார மட்டம் இப்படி இருந்தது.

ஓர் இயற்கையான மையத்தை நோக்கிக் கவரப்படுவது போல நாங்கள் விளதீமிர் இலீச்சை நோக்கிக் கவரப்பட்டோம். எனவே நாங்கள் தனியாகவோ சிறு சிறு குழுக்களாகவோ விளதீமிர் இலீச்சின் நகர்ப்புற வீட்டுக்குச் சென்று அவர் வேலைக்குத் தொந்தரவு தராத நாள் ஒன்று கூட இருக்கவில்லை. எங்கள் வருகைகள் விளதீமிர் இலீச்சின் பெரும்பொழுதை வீணாக்கிய போதிலும், எங்களுக்குக் கனிவு மிக்க வரவேற்பு எப்போதும் கிடைத்து வந்தது.

நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னுவின் தாயார் தயாரித்த எளிய மதிய உணவு கூட எங்களுக்குக் கிடைப்பதுண்டு. சமையலறையில் நாங்கள் உணவு அருந்திேனும். நாங்கள் பலபேர் வந்திருந்தால் மாலே நேரங்களில் அங்கேயே தேனீருடன் உரையாடல் நடைபெறும்.

1904ஆம் வருடப் புத்தாண்டு தினத்துக்கு முதல் நாள்... வருகின்ற புத்தாண்டு ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் இன்னும் எழுச்சியைக் கொண்டு வரும். அது தீர்மானமான சமர்களுக்கு நம்மை இட்டுச் செல்லும். எனவே தோழர்களே, புத்தாண்டு இரவை எப்படியாவது மகிழ்ச்சியோடு கழிப்போம் வாருங்கள் என்று விளதீமிர் இலீச் எங்களிடம் சொன்னுர். நாங்கள் ஒரு குழுவாக கார்மேன் ஒபெராவுக்குச் சென்ருேம். ஒபெரா முடிந்த பின் எங்களுக்கு மிக விருப்பமான ''லன்தோல்த்'' ஹோட்டலுக்கு வந்தோம். ஆளுக்கொரு குவளே பீரோ, காப்பியோ குடித்தோம். அந்த இரவில் மிகவும் பிரகாசமாக ஒளியேற்றப் பட்டிருந்த ஜெனீவாத் தெருக்களில் உலாவக் கிளம்பினேம். வழக்கமான புத்தாண்டுக் கொண்டாட்டம் அங்கு நடந்து கொண்டிருந்தது. பழைய ஸ்விட்சர்லாந்தின் நல்லதொரு ஜனநாயக மரபு இது. மக்கள் அனேவரும் தெருவிற்கு வந்து விடுவார்கள்: பலர் முகமூடிகள் அணிந்திருப்பார்கள். வண்ண வண்ண விளக்குகள் சுடர் விடும். ஒருவருக்கொருவர் பழக்கமில்லாத மனிதர்கள் மகிழ்ச்சியோடு கலந்து பேசுவார்கள். இசை ஒலிக்கும். இளேஞர்கள் நடனமாடுவார்கள். மக்கள் மத்தியில் நாங்களும் மகிழ்ச்சியாய் இருந்தோம்.

பிலேன் பலே சதுக்கத்தின் வழியாக நாங்கள் நடந்து போன போது மென்ஷிவிக்குகளின் குழு ஒன்று எதிர்ப்பட்டது. இவர்களுக்கு இப்போதெல்லாம் நாங்கள் முகமன் சொல்வதில்லே. அவர்களில் ஒருவர் எங்களேப் பார்த்து, ''அசையாப் பாறைகள் போகிருர்கள்'' என்று வன்மத்துடன் கத்திஞர், அவர்களேப் பார்த்து நாங்கள் ''மெல்லுடல் கொண்டோருக்கு வழி விடுங்கள்!''என்று கூவினேம்.

அந்தப் புத்தாண்டு இரவு எங்களுக்கெல்லாம் தனிப் பட்ட மகிழ்ச்சி நிறைந்ததாய் இருந்தது. எங்களுடன் விள தீமிர் இலீச் இருந்தார்....

1904 புத்தாண்டு பிறந்த பின் போல்ஷிவிக்குகளின் காரியம் சீர்பட்டது. எங்கள் மனிதர்களை வேலை செய்ய ருஷ்யாவுக்கு அனுப்பி வைப்பதற்குச் சில வாய்ப்புகள் உருவாயின. இஸ்க்ராவைத் தோற்றுவிக்கிற காலத்தில் தமக்குப் பிரதான உதவியாளர்களில் ஒருவராய் இருந்த வரும், கீவ் சிறையிலிருந்து 1902 ஆகஸ்டில், இஸ்க்ரா ஆதரவாளர்கள் துணிச்சலுடன் தப்பியோடுவதற்கு ஏற் பாடு செய்தவர்களில் பிரதானமானவருமான நிகோலாய் எர்னெஸ்தவிச் பவுமானை முதன்மையாக அங்கு அனுப்பி வைத்தார் லெனின். பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் குழுக் களின் ஒழுங்கமைப்பாளர், பிரசாரகர் என்ற முறையில் 1896 லேயே அவரை அறிந்திருந்தார் விளதீமிர் இலீச்.

மத்தியக் கமிட்டியின் ருஷ்ய அலுவலகத்தை—போல் ஷிவிக் மையத்தை—மாஸ்கோவில் நிறுவும் பணி பவுமா னுக்கு இடப்பட்டிருந்தது. வட்டாரங்களின் நிலைமை யைப் பற்றிய தகவல் இம்மையத்துக்கு வந்து சேர வேண் டும். லெனினது ஆணைகளை வட்டாரக் கட்சி நிறுவனங் களுக்கு எட்டுமாறு இம்மையம் செய்ய வேண்டும்.

கீவ் சிறையிலிருந்து தப்பியோடியதில் பங்கு கொண்ட இரண்டாவது ஆசாமியான லித்வீனவுக்கு, போக்குவரத்து ஏற்பாடு, போல்ஷிவிக் இலக்கியத்தைச் சட்ட விரோத மாக ருஷ்யாவுக்குள் கொண்டு செல்லும் கடத்தல்காரர் களுக்கு உதவுவது, வட்டாரக் கட்சி நிறுவனங்களுக்கு சரியான முறையில் இவ்விலக்கியம் கிட்டுமாறு செய்வது, நம்மவர்கள் சட்டவிரோதமாக எல்லையைக் கடந்து போவ தற்கு ஏற்பாடு செய்வது ஆகிய வேலைகள் (இவை ''எல்லைப் பணிகள்'' என்று அழைக்கப்பட்டன) கொடுக்கப்பட்டன.

விளதீமிர் பப்ரோவ்ஸ்கி காகசசுக்கு அனுப்பப்பட் டார். கட்சியின் காகசஸ் இணைப்புக் கமிட்டியின் கீழ் வேலை செய்யுமாறு பணிக்கப்பட்டார். அங்கு பலர் கைது செய்யப் பட்ட பின்பு காகசஸ் நிறுவனங்கள் போல்ஷிவிக் சக்தி

களால் பலப்படுத்தப்பட வேண்டிய தேவைக்குச் சிறப்பாக உள்ளாயிருந்தன. அங்கு மென்ஷிவிக்குகளே இன்னும் சட்டாம் பிள்ளைகளாக இருந்தனர். அவர்களுடன் நடந்த போராட்டம் கடினமானதாக இருந்தது.

மர்தீன் லியாதவை, ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகளுடன் தொடர்பை ஒழுங்கமைப்பதற்காக பெர்லினில் தங்குமாறு விளதீமிர் இலீச் பணித்தார்.

இத்தோழர்கள் எல்லோரும் போன பின்பு ருஷ்யாவுக்கு அனுப்பப்படுவதற்காக நான் ஆவலுடன் காத்திருந்தேன். கடைசியில் எனது முறை வந்தது. ஆனால் நான் போக வேண்டியிருந்தது ருஷ்யா அல்ல, பெர்லின். இது எனக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது. ஜெனீவாவையும் நமது ''எல்லைப் பணியாளர்களையும்'' இணைக்கிற கண்ணியாக நான் பெர்லினில் வேலை செய்ய வேண்டியிருந்தது. வெளிநாட்டில் ஒற்றர்களை வைத்திருப்பதில் ஜார் அரசாங்கம் தாராளமாகவே இருந்தது. ஜெனீவா ஒரு சிறிய நகரம். எங்களை அங்கு ஒற்றர்கள் மிகவும் பின் தொடர்ந்து வேவு பார்த்து வந்தனர். எனவே சட்ட விரோதப் பணியாற்றுவதற்காக நமது ஆட்கள் ஜெனீவாவிலிருந்து ருஷ்யாவிற்குப் போவது புத்திசாலித்தனமாய் இருக்கவில்லை. ருஷ்யாவிற்குக் கிளம்புவதற்கு முன்பு வெளிநாட்டில் இன்னும் சில நாட்கள் தங்கி, பெரியதொரு நகரில் மக்களோடு கலந்து மறைந்து, அங்கிருந்து சந்தடியின்றி நழுவிவிட வேண்டியிருந்தது.

இத்தகைய நோக்கத்திற்கு மிகவும் தகுந்த நகரமாய் இருந்தது பெர்லின். ருஷ்யாவிலிருந்து வந்திருந்த இளைஞர்கள் ஆயிரக் கணக்கானோர் அங்கே பல்கலைக்கழகத்தில் படித்து வந்தனர், அல்லது மாணவ மாணவிகளைப் போல நடித்தவாறு சும்மா திரிந்து கொண்டிருந்தனர். பல ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வந்த இவர்கள் போலீசுக்குத் தெரிந்தவர்களாய் இருந்தனர், எனவே விசேஷமான சந்தேகத்துக்கு உரியவர்களாக இருக்கவில்லை. ஏற்கெனவே பெர்லினில் வசித்து வந்த மர்தீன் லியாதவ் எடுப்பாகத் தெரிந்தார். அவரை ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதி

கள் பலருக்கு வி. இ. லெனினுடைய பிரதிநிதி என்று தெரியும். அவரை போலீசுக்கும் தெரிந்திருக்கலாம். எனவே ருஷ்யாவுக்குப் புறப்படுகிறவர்கள், பெர்லினில் யாருக்கும் தெரியாத, ''சுத்தமான'' நபரான என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது.

ஜெனீவாவிலிருந்து, விளதீமிர் இலீச் இல்லாத இன்னொரு புதிய வேற்று நாட்டிற்குப் போவது கஷ்டமாய் இருந்தது. ஆயினும் எனக்கு அத்தியாவசியமாய் இருந்த ஒரு பிரச்னை பற்றி அவரிடம் ஆலோசனை கேட்கிற நல் வாய்ப்பு புறப்படுமுன் எனக்குக் கிட்டியது. உறுதியான தத்துவ அறிவோ, விசேஷமான கிளர்ச்சித் திறமையோ இல்லாத எனக்கு முழுநேரப் புரட்சியாளர், போல்ஷிவிக் மையத்தின் பிரதிநிதி என்று என்னை அழைத்துக் கொள்ளும் உரிமை உண்டா என்ற கேள்வி என்னை வாட்டி வந்தது. மையத்திலிருந்து, லெனினிடமிருந்து அனுப்பப்பட்டு வட்டாரக் கட்சி நிறுவனத்துக்கு வருகிற ஒருவரைத் தோழர்கள் மேலும் கீழும் பார்ப்பார்களே, அவரிட மிருந்து ஏதோ எதிர்பார்ப்பார்களே....

விளதீமிர் இலீச் நான் சொன்னதைக் கவனமாகக் கேட்டார். அவர் ஒருவரால்தான் அவ்வளவு கவனமாகக் கேட்க முடியும். நான் சொல்வதைக் கேட்டு முடித்த பின் உடனே அவர் பதிலளித்தார். முழுநேரப் புரட்சியாளர் கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் உரிமை முதன் மையாகத் தன்னலங்கருதாது கட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் தம்மை அர்ப்பணித்து விட்டவர்களுக்கு உண்டு என்றார் அவர். எவர்களுடைய சொந்த வாழ்க்கை கட்சி வாழ்க்கையுடன் ஒன்றாய் இணைந்து விடுகிறதோ அவர்கள் இவ்வுரிமை பெற்றவர்களாவர். புரட்சியாளர் களின் வட்டத்தைத் தலைவர்களின் சிறு வட்டமாகக் குறுக்கக் கூடாது. சோர்வற்ற, பொதுமக்களுடன் நேரடித் தொடர்புடைய நிரந்தரப் பணியாளர்கள் தேவை.

லெனினுடன் சந்திப்புகள்

த்ஸ்ஹாகயா

மகத்தான லெனினது கவர்ச்சி, அவரது மேதையின் கவர்ச்சி மிகப் பெரியதாக இருந்ததால், வாழ்க்கையின் கஷ்டமான பல நேரங்களில் அவரைப் பற்றிய நினைவே புதிய ஆற்றலைத் தந்தது, உண்மையான போல்ஷிவிக்குக்கு மிக அத்தியாவசியமான உற்சாகத்தையும் எதிர்கால நம்பிக்கையையும் வழங்கியது.

ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மூன்றுவது காங்கிரஸ் நடந்தபோது நான் இலீச்சை முதன் முதலில் சந்தித்தேன். அது 1905 ஏப்ரல்—மே மாதங்களில் நடந்தது. எங்கள் வேலையின் எதிர்கால வாய்ப்புகள் பற்றி காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்பு என்னிடம் லெனின் பேசினர். காங்கிரசைத் தொடங்கி வைக்கும்படி எனக்கு ஒழுங்கமைப்புக் குழு கூறினல் நான் மறுக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். இலீச்சின் தலைமையில் காங்கிரசின் தலைமைக் குழு அமைந்தது. அடிப்படை அரசியல் விரிவுரையைக் காங்கிரசில் அவர்தான் ஆற்றினர்.

நான் அவர் பேசுவதை முதல் முறையாகக் கேட்டேன். தமது விரிவுரையை மிக எளிதாக அவர் தொடங்கினர். மென்ஷிவிக்குகளின் இஸ்க்ராவில் வெளியான கட்டுரைகளில் காணப்பட்ட சந்தர்ப்பவாதக் கருத்துக்களைச் சீற்றத் துடன் கோடிட்டுக் காட்டினர். உறுதியான புரட்சிகர மார்க்சியக் குறிக்கோளை மென்ஷிவிக்குகளின் அழுகிப் போன கொள்கைகளுக்கு எதிர் நிறுத்தினர். சர்வதேசத்

தொழிலாளர் இயக்க வரலாற்றிலிருந்தும், குறிப்பாக புரட்சிகரமான 1905ஆம் ஆண்டின் முதல் மாதங்களில் ருஷ்யத் தொழிலாளர்கள் நடத்தி வந்த போராட்டத்திலிருந்தும் ஏராளமான மெய் விவரங்களை எடுத்துக் காட்டித் தமது எண்ணங்களை விளக்கினார். புரட்சியின் தத்துவவாதியாகவும் தலைவராகவும் அமைப்பாளராகவும் விளங்கியவரது உருக்கனைய தர்க்க வாதம் பிரதிநிதிகள் அனைவரையும் கவர்ந்ததால் அவரது பேச்சு முடியும் தறுவாயில் எல்லோரும் எழுந்து நின்றபடி வெகு அமைதியாக அவரது சொற்களைக் கேட்டனர்.

இலீச் பேச்சை முடித்த பின் கைதட்டல்களும் ஆரவாரமும் முடிவற்று ஒலித்தன. மாபெரும் புரட்சி வீரர், தத்துவவாதி, பேருரையாளர் எங்கள் முன்னே நின்றார்.

காங்கிரசுக்குப் பிந்தைய நாட்களில் இலீச்சுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. சுற்றியுள்ள மனிதர்களின் மீது பரிவும் அசாதாரணக் கவனமும் அவர் செலுத்துவதை உணர முடிந்தது. லண்டனிலிருந்து கிளம்புவதற்கு முன்பு உயிர்க் காட்சிச் சாலையையும் பிரிட்டிஷ் வரலாற்று மியூசியத்தையும் பார்ப்பதற்கு எங்களை அவர் அழைத்துச் சென்றதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். இதே போலப் பாரிசிலும் செய்தார். அங்கு ஈஃபிள் கோபுரம், உலக ஓவிய மியூசியமான லூவர், பியர் லாசேஸ் இடுகாட்டில் கம்யூன்காரர்களின் சுவர் ஆகியவற்றை அவர் எனக்குக் காட்டினார். இவற்றையெல்லாம் அவர் பல முறை பார்த்திருந்தார். எனக்குக் காட்டுவதற்காகவே அன்று விசேஷமாக வந்தார்.

லண்டனில் கார்ல் மார்க்சின் கல்லறைக்கும் நாங்கள் சென்றோம். இடுகாட்டின் வாயிலில் டைரெக்டர் உயரமான நெடுந்தொப்பி அணிந்து நின்றார். சிறு ஒழுங்கைகளைக் கொண்ட பிரம்மாண்டமான பூங்காவாக விளங்கியது கல்லறை. பெருஞ் செலவில் கட்டப்பட்ட நினைவுச் சின்னங்கள் அங்கு இருந்தன. ஏதோ சீமான் அல்லது சீமாட்டியினுடைய நாயின் சிலை கூட அங்கு இருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையாள

ரும், விஞ்ஞானக் கம்யூனிசத்தின் தந்தையும், முதல் அகிலத்தை நிறுவியவருமான கார்ல் மார்க்சின் கல்லறையை மட்டும், அங்கு பணி புரியும் கொத்துவேலைக்காரர்களின் உதவியின்றி எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. நாங்கள் ருஷ்யாவிலிருந்து வந்திருக்கிறோம் என்பதை அறிந்தவுடன் கார்ல் மார்க்சின் கல்லறையைத்தான் தேடிக்கொண்டிருப்போம் என்பதை ஊகித்தறிந்த அவர்கள் எங்களுக்கு அதனைக் காட்டினார்கள். கல்லறைக்கருகே நாங்கள் நீண்ட நேரம் நின்றிருந்தோம், பின்னர் போக அவசரப்படாமல் அங்கே உட்கார்ந்தோம். தமக்குத் தெரியாத ஏதோ ஒரு மனிதரின் கல்லறைக்கு அருகே நாங்கள் இருவரும் இவ்வளவு நீண்ட நேரம் இருந்ததைக் கண்டு அனேகமாகப் பதட்டப்பட்டுக் கொண்டிருந்த இடுகாட்டின் டைரெக்டர் பற்றி கேலியாக இலீச் சொன்னார்:

''கார்ல் மார்க்ஸ், ஃபிரீட்ரிஹ் எங்கெல்சின் அழியாத அமரத்துவச் சொத்துக்களை எல்லாம் நாம் எடுத்துச் செல்கிறோம், பின்தங்கிய ஜாராட்சி ருஷ்யாவில் கூட உலகத்து முதலாளிகள் அனைவரும் அஞ்சத் தக்க விதத்தில், அவற்றை உருவகப்படுத்தப் போகிறோம் என்பதை இந்த துரதிருஷ்ட பூர்ஷுவாவால் ஊகிக்க முடியாது.''

நாங்கள்—விளதீமிர் இலீச், நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு, நான்—காங்கிரஸ் முடிந்தபின் லண்டனிலிருந்து பாரிஸ் வழியாக ஜெனீவாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். அந்தக் காலத்தில் எல்லோருக்கும் வழக்கமாக ஏற்பட்ட சம்பவத்திற்கு பிரான்ஸ் நாட்டு எல்லையில், புலோனில் நாங்களும் ஆளானோம். ஜாரின் ஏஜெண்டுகளது வேண்டுகோளின்படி பிரெஞ்சுப் போலீஸ் எங்கள் பெட்டிகளில் (இவற்றில் காங்கிரசின் ஆவணங்களே இருந்தன) தடை செய்யப்பட்ட சிகரெட்டுகள் இருக்கின்றனவா என்று பார்ப்பது போல அவற்றைச் சோதனை போட்டார்கள். ''தடை செய்யப்பட்ட சரக்குக்கான'' சோதனை ருஷ்ய ஒற்றன் ஒருவனின் முன்னிலையில் நடத்தப்பட்டது. இலீச்சின் தீர்மானமான நடத்தை நிலைமையைக் காப்பாற்றியது. காங்கிரஸ் ஆவணங்கள் இருந்த கட்டைப் பிரிப்

பதற்கு இலீச் அனுமதிக்கவில்லை. அவர் உறுதியாகச் சொன்னார்:

''ஒரு சிகரெட்டும் அங்கு இல்லை. நாங்கள் புகை பிடிக்காதவர்கள். வர்த்தகர்களும் அல்ல. கையெழுத்துப் பிரதிகள்தான் அங்கிருக்கின்றன.''

சூழ்ச்சி பலிக்காமல் போகவே அவர்கள் எங்களை விட்டுவிட்டார்கள்.

* * *

விளதீமிர் இலீச் போன்ற ஓர் அசாதாரண மனிதரைப் பற்றி நினைத்துப் பார்க்கையில், அவரது மேதையின் பல் வகைச் சிறப்பு அனைத்தையும் அசாதாரண மனிதாபிமானத்தையும் அதனுடன் இணைந்த உருக்கனைய சித்தவுறுதி, குறிக்கோள் பற்றிய தெளிவு, உழைப்புப்பற்று ஆகியவற்றையும் உள்ளடக்கிவிட முடியாது என்பது தானாகவே பெறப்படும்.

பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும் எனும் புத்தகத்தை 1908ல் அவசரமாக எழுதி முடிக்கும் போது 19ஆம் நூற்றாண்டின் ஆங்கில பௌதிக விஞ்ஞானிகள், தத்துவவாதிகள் ஆகியோரின் சில புத்தகங்கள் அவருக்குத் தேவைப்பட்டது, எனக்கு நினைவுக்கு வருகிறது. ஸ்விட்சர்லாந்து நூலகங்களில் அவை இருக்கவில்லை. பிரிட்டிஷ் மியூசியத்திற்குப் போய் வேலை செய்வதற்காகவே ஜெனீவாவிலிருந்து லண்டனுக்கு அவர் சென்று வந்தார். அசாதாரணமான நேர்மையாளரும் கூரிய மார்க்சிய-லெனினியத் தத்துவ ஆயுதத்தைக் கட்சிக்கு வழங்கிய மாபெரும் விஞ்ஞானியும் புரட்சி வீரருமான மனிதரே இப்படிப் பணி புரிய முடியும்.

1916ன் வசந்த காலத்தில், முதல் ஏகாதிபத்தியப் போர் நடந்து வருகையில் நான் ஜெனீவாவில் இருந்தேன். ''இலீச் இப்போது லோசானில் இருக்கிறார். நாளையும் மறுதினமும் சர்வதேச நிலைமை பற்றி ஜெனீவாவில் ஆய்வுரை படிப்பார். அவர் உங்களைப் பார்க்க மிகமிக விரும்பு

கிறார்...'' என்று நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு ஜுரிச்சிலிருந்து எனக்குக் கடிதம் மூலம் தகவல் தந்தார்.

நான் உடல் நலமின்றி இருப்பினும் அவரது ஆய்வுரையைக் கேட்பதற்காக விரைந்து சென்றேன். வழக்கம் போல் அங்கு ஏராளமான கூட்டம். எப்போதும் போன்று குறிப்பிடப்பட்ட நேரத்தில், சரியாக இரவு எட்டு மணிக்கு இலீச் வந்தார். அவர் ஒருபோதுமே காலம் தாழ்த்தியதில்லை. மேடைக்குப் போவதற்கு முன்னுல் அவர் என்னைத் தேடிக் கண்டார். ஆய்வுரை வாசித்த பின்பு அன்று இரவே நாங்கள் சந்திப்பது என்று திட்டமிட்டோம். மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் முகாமிலுள்ள சமரசத்துக்கிடமற்ற எதிரிகளைச் சந்திக்க நேரும் போது நிகழ்கிற மாதிரியே, அறிக்கை நீண்டு உண்மையான அரசியல் விவாதமாகவே மாறிவிட்டது. எதிர்த் தரப்பினரும் அரைவாசி எதிர்த் தரப்பினரும் பேசியதைக் கேட்ட இலீச், தமது முடிவுரையில் தமக்கேயுரிய ஈடற்ற திறமையுடன் எதிரிகளை மோதி நொறுக்கினுர், ஊசலாட்டக்காரர்களின் சந்தேகங்களைப் போக்கினுர், கேட்டுக்கொண்டிருந்த மிகப் பெரும்பான்மையரிடம் பிரம்மாண்டமான உற்சாகத்தைக் கிளறிவிட்டார். சொல்லுகின்ற விஷயத்தை எளிமையாகவும் தெளிவாகவும் வடிவமைப்பதும், மார்க்சியத்தின் போலி ஆதரவாளர்களின் முகமூடியைக் கிழித்தெறிகிற பிரமாதமான திறமையும், முக்கியமான விஷயங்களைப் பிரித்துக் காட்டி இறுதியில் தமது எதிரிகளைக் கூட நம்ப வைக்கிற வல்லமையும் தான் லெனினது பேச்சு ஏற்படுத்திய செல்வாக்குக்குக் காரணமாகும்....

ஆய்வுரைக்குப் பின்பு நாங்கள் தெருவில் சந்தித்தோம். அவர் நீண்ட நேரம் ஆற்றங்கரையில் நடந்து கொண்டிருந்தார். வெளிநாட்டில் வாழ்ந்து வந்த ஜார்ஜ் என்னும் இளைஞரும் எங்களுடன் இருந்தார். அந்த நிலா இரவு அற்புதமாக இருந்தது. எங்கு நோக்கினும் அமைதி, நிசப்தம். எங்களுக்கு மிக நெருக்கமானதும் கிளர்ச்சி ஊட்டியதுமான விஷயம் குறித்து—ருஷ்யாவில் இருந்த நிலைமை பற்றியும், இரகசிய ஊழியர்களோடு தொடர்பு கொள்

வதில், போரினுல் விளைந்த கஷ்டங்கள் பற்றியும் லெனின் சொன்னுர். எனக்கருகில் ஒரு பெஞ்சியில் இலீச் அமர்ந்திருந்தார்.

''ருஷ்யாவில் அடுத்த புரட்சி வருவதை நாம் காணுவோமா இலீச்?'' என்று நான் இலீச்சிடம் கேட்டேன்.

எனது கேள்வி அவரது சிந்தனையைத் தடுத்திருக்க வேண்டும். அவர் லேசான வியப்புடன் என்னைப் பார்த்தார். கேள்விக்கு நேரடியாக விடையளிக்காமல் தமது முறைக்கு ஒரு கேள்வி கேட்டார்:

''தோழரே, உங்களுக்கு வயது என்ன?''

''ஐம்பதுக்கு மேலாயிற்று, உங்களுக்கு?''

''உங்களை விட வெகு தூரத்தில் இல்லை, நாற்பத்தைந்துக்கு மேலாயிற்று. அதனுலென்ன, நாம் புரட்சியைக் காணவில்லை என்ருல், அதோ அவர்—இலீச் ஜார்ஜைச் சுட்டிக் காட்டினுர்—எப்படியாயினும் காணுவார். நமது வேலையை நாம் தொடர்ந்து செய்வோம். நாம் முடிக்காத வேலையை அவர்கள், நமது இளைஞர்கள், தொடர்ந்து செய்வார்கள்.''

நான் சொன்னேன்:

''அன்புமிக்க இலீச்! எதுவாயினும் நானும் நீங்களும் கூடப் புரட்சியைக் காணுவோம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அது விரைவிலேயே வந்து விடும், கண்டிப்பாகப் பார்ப்போம்....''

அவர் கடகடவென்று சிரித்துவிட்டு இடைமறித்துச் சொன்னுர்:

''நல்லது தோழரே, இத்தகைய நிலைமைகளில் நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இது ஆரோக்கியமான, சரியான எதிர்கால நம்பிக்கை....''

ருஷ்ய போல்ஷிவிக்குகளின் காங்கிரஸ் அல்லது மாநாடு நடத்துவது பற்றி லெனின் ஏற்கெனவே யோசித்து வந்தார். நான் அவரிடம் கேட்டேன்: காங்கிரசையோ மாநாட்டையோ கூட்டுவது பற்றி அறிவிப்பதற்கு எத்தனை பிரதிநிதிகள் வேண்டும்? அவர் சொன்னுர்:

''பத்துப் பேர், ஏழு பேர் அல்லது ஐந்து பேர் இருந்தால் கூடப் போதும். ஆனால், அவர்கள் பொதுமக்களின் உண்மையான பிரதிநிதிகளாக, உண்மையான புரட்சியாளர்களாக, போல்ஷிவிக்குகளாக, மறைமுக ஊழியர்களாக இருக்க வேண்டும். பெத்ரோகிராது, மாஸ்கோ, காகசஸ், யூரல், தன்பாஸ், சைபீரியா ஆகிய பகுதிகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியாவது இருக்க வேண்டும். அனேகமாக அதுவே போதும். உண்மையான அகில ருஷ்யக் காங்கிரஸ் என்று இதனை அறிவிப்போம். நமது காலத்துக்கு ஏற்பத் தீர்மானம் போடுவோம். போர் என்பது போர்தான். போர் பற்றிய, புரட்சி பற்றிய பிரச்சினைகளை உழைக்கும் மக்கள் திரளின் இயக்கத்திற்கு ஏற்பவும் சரியாகவும் நாம் முடிவு செய்வோமானல், பிரதிநிதிகளின் எண்ணிக்கை அவ்வளவு பெரிய பாத்திரம் வகிக்காது. ஏனெனில் இத்தகைய காங்கிரசின் ஒவ்வொரு பிரதிநிதியும், காங்கிரஸ் உண்மையான போல்ஷிவிக்குகளில் பத்துப் பேர் அல்லது பத்துப் பேரை விடக் குறைவானவர்கள் அடங்கியதாக இருந்தாலும் வேறு சகாப்தங்களின் வேறு காங்கிரசுகளது டஜன் கணக்கான, நூற்றுக் கணக்கான பேரை விட மதிப்பு மிக்கவராக விளங்குவார்.''

இரவு நேரம் முழுதும் இலீச் நிறையப் பேசிக் கொண்டிருந்தார். ருஷ்யாவுடன் இன்னும் பரவலான தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால், நேரத்தை வீணாக்காமல் குறிக்கோளை நோக்கி அடியெடுத்து வைக்க வேண்டும், இங்கு மேற்கு ஐரோப்பாவில் முறையான புரட்சிப் பணியைச் செய்ய வேண்டும், ஜெர்மானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள் போன்றோருக்குப் புரட்சிக்காக அவர்களது பொதுமக்களைத் தயார் படுத்த உதவ வேண்டும். இந்தப் போரில் நெருக்கடிகள் தோன்றுவது சாத்தியம் மட்டுமல்ல, தவிர்க்கவியலாததும் கூட. இரண்டாவது அகிலத்தின் ஸ்டுட்கர்ட் காங்கிரஸ் (1907) நிறைவேற்றிய தீர்மானம், போர் மீது உண்மையிலேயே போர் தொடுக்க வேண்டுமென்றும் முதலாளித்துவத்தின் அழிவையும்

தோல்வியையும் விரைவுபடுத்த வேண்டுமென்றும் நம்மிடம் கோருகிறது.

எங்கெங்கும், எப்போதும், எல்லா நிலைமைகளிலும்... புரட்சிக்காக இடையருது விடாமுயற்சியுடன் பணி புரிய வேண்டும் என்று பொருள்பட்டன இலீச்சின் இவ்வார்த்தைகள்.

அனேகமாக உதய வேளையில் நாங்கள் பிரிந்தோம். ஒருவரை ஒருவர் தழுவி, இறுக்க கை குலுக்கி விட்டு, ஒரு வருடத்துக்குள் சந்தித்து ஒன்ருக ருஷ்யாவுக்குப் போவது என்று உறுதி கூறியபடி நாங்கள் பிரிந்தோம்.

''புரட்சிகர ருஷ்யாவுக்குப் போவோம்'' என்று அவர் தொடர்ந்து சொன்ஞர்.

1905ஆம் ஆண்டில் லெனின்

லூனச்சார்ஸ்கி

லெனின் பற்றிய எனது நினைவுகளிலிருந்து ஏதாவது சொல்லும்படி ஒவ்வொரு முறையும் என்னை யாராவது கேட்கும் போது வெட்கம் கலந்த வேதனைக்கு நான் ஆளாகிறேன். எப்படியோ, ஏதோ ஒரு முறையில், மிகவும் மறைமுகமான வழியிலாவது (ஏனெனில் அந்தக் காலத்தில் எதையும் எழுதி வைப்பது ஆபத்தாயிருந்தது) எனது நினைவுக்குப் பின்னர் பயன்பட்டிருக்கக் கூடிய நாட்குறிப்பு எதையும் நான் எழுதி வரவில்லை, குறிப்புக்கள் எடுத்து வைக்கவில்லை, என்பதற்காக என்னை நான் மன்னிக்கவே முடியாது.

மிக அருகில் லெனினை நான் கண்காணிக்க முடிந்த, பிரம்மாண்டமான அளவில் நடந்த மிகச் சுவையான சொந்த உரையாடல்கள், விதவிதமான கூட்டங்கள், குழு வேலைகள், வரலாற்றுப் பணிகளை அவர் செய்து முடிப்பதை நான் காண நேர்ந்த, ஏதேனும் ஒரு வகையில் நாங்கள் ஒன்றாய்ப் பங்கு கொண்ட, பலப்பல சம்பவங்கள்—இவையெல்லாம் மங்கலாகத்தான் எனக்கு நினைவிருக்கின்றன. கால வரிசையில் இவற்றை நிர்ணயிக்கக் கூடச் சில சமயங்களில் என்னால் முடியவில்லை.

1905ஆம் ஆண்டு நடந்த புரட்சிகரச் சம்பவங்களில் எனக்கு ஞாபகம் இருக்கிற மிக முக்கியமானவற்றை வாசகர்களுடன் சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள முயல்கிறேன். இவை புத்தகங்களிலிருந்து நான் தெரிந்து கொண்டவை அல்ல. எனது சொந்தக் கண்களாலும் காதுகளாலும் அறிந்தவை இவை.

1905 அக்டோபர் இறுதியில் அல்லது நவம்பர் தொடக்கத்தில் பீட்டர்ஸ்பர்கிலிருந்து லெனின் அனுப்பிய தீர்மானமான தந்தி ஒன்று எனக்கு வந்தது. இத்தாலியிலிருந்து உடனடியாகக் கிளம்பி ருஷ்யாவிற்கு, பீட்டர்ஸ்பர்கிற்கு வந்து சேர வேண்டும் என்று அதில் கண்டிருந்தது. நோவயா ழீஸின் (''புதிய வாழ்க்கை'') என்னும் பெரிய பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராக நான் பணியாற்ற வேண்டியிருந்தது. இந்தப் பத்திரிகை மீன்ஸ்கி, கார்க்கி ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்து போல்ஷிவிக் மத்தியக் கமிட்டி பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டது.

நான் உடனடியாகப் புறப்பட்டேன் என்று சொல்லவே வேண்டியதில்லை. பீட்டர்ஸ்பர்கிற்கு வந்து சேர்ந்த அன்றே பத்திரிகை அலுவலகத்துக்குப் போனேன்.

லெனினுடன் ஆரம்ப காலத்தில் நான் மேற்கொண்ட சந்திப்புகள் பத்திரிகையின் தீவிர வேலை சம்பந்தமாகவே இருந்தன. விளதீமிர் இலீச் மிக மிக மனக்கிளர்ச்சியுடனும் உற்சாகமாகவும் போராட்ட மனநிலை கொண்டுமிருந்தார். நிலைமை அபாயகரமாய் இருந்ததும், ஈட்டப்பட்ட வெற்றிகள் நழுவி விடக் கூடிய ஆபத்தும் அவர் கவனத்திலிருந்து மறைந்து விடவில்லை.

அன்றைய பீட்டர்ஸ்பர்க் சோவியத்தில்,* லெனின் நேரடியாக வேலை செய்யவில்லை. ஆனால் சோவியத்தில் இருந்த போல்ஷிவிக்குகளது குழுவின் வேலையை அவர்

---

* தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்—தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் அமைப்பு. 1905ஆம் வருடப் புரட்சியின் போது வேலைநிறுத்தப் போராட்ட அமைப்பாகத் தோன்றியது. புதிய புரட்சி அதிகாரத்தின் பாட்டாளி வர்க்கம், விவசாயிகள் ஆகியோரின் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகாரத்தின் கருநிலை அமைப்பாக பின்னர் இது மாறியது. 1905ல் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தால் தொடங்கப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத் அமைப்பதற்கான இயக்கம் 1917 அக்டோபரில் சோவியத் ஆட்சியை அமைப்பதற்கு இட்டு வந்தது.—(ப-ர்.)

வழிநடத்தினர், அத்துடன் இடையருத தொடர்பு கொண்டிருந்தார்.

பன்முகப்பட்ட, கொந்தளிப்பான வேலையைச் செய்து வந்தார் விளதீமிர் இலீச். ஏனெனில், பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, இன்னும் பல மாநில நகரங்கள் புரட்சியின் அதிர்ச்சிக்கும் வரவிருந்த பிற்போக்குக்கும் இடையில் தீவிர வாழ்க்கை நடத்தி வந்தன. அடிக்கடி குருதி கொட்டப் பட்டது. கறுப்பு நூற்றுவர்கள் படுகொலைகள் நடத்தினர். கிழக்கு ராணுவத்தின் தலைவிதி பற்றிய வதந்திகளுக்கு நடுக்கத்துடன் செவிமடுத்த அரசாங்கம், பெருகி வந்த அதனுடைய எரிமலைக் குழம்பு ஆங்காங்கு நடந்து வந்த தொழிலாளர் புரட்சி அலைகளுடனும் விவசாயக் கலகங்களுடனும் இணைந்து விடாமல் செய்ய முயன்றது.

நானும் நிறைய வேலை செய்து வந்தேன். இலக்கிய, பிரச்சார வேலைகள் அவை. ஆனால் அப்போது லெனின் செய்து வந்த மிகப் பன்முகப்பட்ட வேலைகளில் என் வேலை இணைந்தது—ஆரம்ப காலத்தில் என்பதை மீண்டும் சொல்லுகிறேன்—பத்திரிகை வேலையில் மட்டுமே.

நோவயா ழீஸினுக்கு விளதீமிர் இலீச் பெருத்த முக்கியத்துவம் கொடுத்தார். சட்டபூர்வமாக வெளியான இப்பெரிய பத்திரிகை 50 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் விநியோகமாயிற்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதுவரை இவ்வளவு பிரதிகள் போல்ஷிவிக்குகள் அச்சிட்டதேயில்லை. ஆரம்பத்தில் பத்திரிகை விசித்திர மான அமைப்பு கொண்டிருந்தது. போல்ஷிவிக்குகளான எங்களுக்கு அருகில், மீன்ஸ்கியின் நெருங்கிய நண்பர்களது பெரிய குழுவும் அதில் வேலை செய்து வந்தது. இழிநிலை இலக்கியச் சுவை கொண்ட கவிஞர்களும், காப்பிக் கடையில் பொழுதைக் கழித்த அராஜகவாதிகளும் மிகவும் அதி தீவிரமான இடது சாரிகள் என்று தம்மைக் கருதியபடி, போல்ஷிவிக்குகளுடன் இணைந்திருப்பது மிகவும் விறு விறுப்பாக இருக்கிறது என்று எண்ணிய கட்டுப்பாடற்ற கதம்பக் கும்பலும் இதில் இருந்தனர்.

''போல்ஷிவிக் குதிரையை'' பாதி இழிநிலைத் தன்மை

யுள்ள ''தயங்கும் பெண்மானுடன்'' சேர்த்து ஒரே வண்டியில் பூட்டுவது எவ்வகையிலும் சாத்தியமில்லை என்னும் தெளிவான முடிவிற்குப் பத்திரிகை ஆசிரியர் குழுவின் போல்ஷிவிக் பிரிவு விரைவிலேயே வந்தது. இதன் விளைவாக பலப்பல தகராறுகள் முளைத்தன.

நோவயா ழீஸினில் இருந்த மீன்ஸ்கியையும், ஒப்பீட்டு அளவில் குட்டி அறிவுஜீவிகளையும் விளதீமிர் இலீச் மிகச் சாதுரியமாக, எச்சரிக்கையோடு அணுகினார் என்று நான் குறிப்பிட வேண்டும். மேலும் வேலை செய்த சிலர் செய்த, எங்களுக்கு அறவே பழக்கமில்லாத பல்வேறு குறும்புகளையும் கண்டு அவர் கடகடவென்று சிரிப்பார்.

''இது உண்மையிலேயே வரலாற்றுச் சிறப்புள்ள விநோதம்!'' என்று அடிக்கடி சொல்வார்.

நோவயா ழீஸினை உள்ளே சுத்தப்படுத்தி முடித்த பின்பு, மிகப் பெரும் அளவில் சந்தாதாரர்களையும் வாசகர்களையும் கொண்டிருந்த, பீட்டர்ஸ்பர்கில் மட்டுமின்றி நாட்டிலேயே ஒருபெரும் பங்கு வகிக்கத் தொடங்கியிருந்த இப்பத்திரிகை ஜார் அரசாங்கத்தால் மூடப்பட்டது.

எங்கள் வேலையில் இப்போது கஷ்டம் வந்தது. அச்சுப் பத்திரிகை ஒன்றில்லாமல் இருக்க விரும்பாத நாங்கள் ஒரு பத்திரிகைக்குப்பின் மற்றொரு பத்திரிகையாக மாற்றி மாற்றி அச்சிட்டு வந்தோம்.* இன்னும் சரியாகச் சொன்னால், தலைப்புக்களை மாற்றிக் கொண்டிருந்தோம். சட்டபூர்வ மத்தியப் பத்திரிகையின் தலைப்பாக ஒவ்வொன்றும் கொஞ்ச காலமே இருந்தது.

பிரதான ஆசிரியராக விளதீமிர் இலீச்சே தொடர்ந்து

---

* நோவயா ழீஸின் 1905 டிசம்பர் 3ல் மூடப்பட்டது. 1906ல் பீட்டர்ஸ்பர்கில் முதல் போல்ஷிவிக் பத்திரிகையாக இருந்த வொல்னா (''அலை''). இது ஏப்ரல் 26 முதல் மே 24 வரை வெளிவந்தது. அதற்கு மாற்றாக வ்பெரியோத் (''முன்னோக்கு'') என்ற பத்திரிகை வந்தது. இது மே 26 முதல் ஜூன் 14 வரை வெளியாயிற்று. பின்னர் அச்சானது ஏகோ (''எதிரொலி''). இது 1906 ஜூன் 22 முதல் ஜூலை 7 வரை வெளியாயிற்று.—(ப-ர்.)

இருந்தார். முன்பு போலவே மிகப் பெரும் கவனத்துடன் எல்லாப் பிரிவுகளையும் கண்காணித்து வந்தார். நோவயா ழீஸினிலும் ஒன்று மாற்றி ஒன்ருய் வந்த மற்ற சிறிய பத்திரிகைகளிலும் நான் நீண்ட காலம் பத்திரிகைகளின் மதிப்பாய்வை எழுதி வந்தேன். நான் எழுதிய எந்தவொரு சிறு குறிப்பும் துண்டுத் தகவலும் விளதீமிர் இலீச்சால் பார்வையிடப்படாமல் இருக்கவில்லை. தந்திகள், செய்திகள் போன்றவற்றைத் தவிர மற்ற விஷயங்கள் முழுதும், லெனின் தலைமையில் நடந்த பத்திரிகை ஆசிரியர்களின் கூட்டத்தில் உரக்க வாசித்துக் காட்டப் பட்டது. தமது கட்டுரைகளையும் அவர் எங்களுக்குப் படித்துக் காட்டுவார். எல்லாவிதமான ஆலோசனைகளையும் திருத்தங்களையும் மிகவும் விருப்பத்துடன் காது கொடுத்துக் கேட்பார்.

வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் கூட்டு வேலையை, அதாவது ஒரு சரவைப் பிரதியின் அடிப்படையில் பலர் சேர்ந்து வேலை செய்து அதைச் செப்பம் ஆக்குவதை, லெனின் மிகவும் விரும்பிஞர்.

தவிர, வெவ்வேறு வகையான பலப்பல தகவல்கள் ஏராளமாக வந்து சேருகிற மையமாக பத்திரிகை இருந்ததால், இங்கிருந்து போர்க் களத்தைப் பார்வையிடுவது மிக எளிதாக இருந்தது.

இந்தக் காலம் முழுதும் இப்பத்திரிகையின் மூளையாகவும் இதயமாகவும் லெனின் விளங்கிஞர். வெகு தீவிரமாகவும் கூட்டாகவும் நட்புறவுடனும் நாங்கள் வேலை செய்த எப்போதும் உயிரோட்டமும், சமயோசித சாமர்த்தியமும் நிறைந்து சுடர்விட்ட இந்தத் தலைமையிடமிருந்து பேரானந்த உணர்ச்சி பெற்ருேம். மிகவும் வேறுபட்டவையாகவும், ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் இருப்பவையாகவும் தோன்றும் பல உண்மைகளை ஒரே நேரத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும் திறமை, நிகழ்ச்சிப் போக்கை மதிப்பிடுவதில் வியப்பூட்டும் விரைவு, விஷயத்தை வடிவமைப்பதில் துல்லியம்—இவற்றைத்தான் எங்கள் தலைவரிடம் நாங்கள் கண்டு வியந்தோம். எதிரிகளிடம் (எல்லா

எதிரிகளிடமும்—இவர்கள் நிறையப் பேர், பல வகை யானவர்கள்) பழகுவதில் ஒப்பற்ற, கவர்ச்சி மிக்க தந்திரம் இவற்றுக்கு மணமூட்டியது.

1905ஆம் ஆண்டு முழுதும், பிரதானமாக இரகசியம் கடைப்பிடிக்க வேண்டியிருந்த காரணத்தால் விரிவான பொதுக் கூட்டங்களில் பேசுவதை லெனின் தவிர்த்து வந்தார். ஆயினும் வெளியார் கலந்து கொள்ளாத கட்சிக் கூட்டங்களில், அவற்றில் ஏராளமானோர் இருந்த போதி லும், அவர் அடிக்கடி பேசினார். 1906 மே 9ல் பானினச் சீமாட்டி வீட்டில் நடந்த கூட்டத்தில் கார்பவ் என்ற புனைப்பெயரில் அவர் நிகழ்த்திய சக்தி வாய்ந்த அரசியல் உரைதான் விரிவான பொதுமக்கள் முன் அவரது ஒரே யொரு பகிரங்கப் பேச்சாக இருந்தது. நான் இந்தக் கூட்டத்தில் இருக்கவில்லை. அக்கூட்டத்தில் இருந்தவர் களின் வார்த்தைகளில்தான் நான் இது பற்றிப் பேசு கிறேன். யாருக்கும் தெரியாத இந்தக் கார்பவ் புகழ்பெற்ற லெனின்தானே தவிர வேறு யாருமல்ல என்ற பேச்சு மின்னல் வேகத்தில் ஹால் முழுதும் பரவியதாம். எனவே விளதீமிர் இலீச் ஓயாத பெருத்த ஆரவாரத்துடன் வர வேற்கப்பட்டாராம். அவரது பேச்சுக்கிடையில் உரத்த கையொலி இடைவிடாது எழுந்த வண்ணமாய் இருந்த தாம். பேச்சு முடிந்தபின் இதே போன்ற முடிவற்ற ஆரவாரத்துடன் அவர் வழியனுப்பப்பட்டாராம்.

லெனினதும் போல்ஷிவிக்குகளதும் செல்வாக்கு மகத் தானதாய் இருந்தது. அவர்கள் கையிலிருந்த சட்டபூர்வப் பத்திரிகைகள் என்ற பெரிய ஒலிபெருக்கிகளால் இந்தச் செல்வாக்கு இன்னும் வலுப்பெற்றது. ஆனாலும், பீட்டர்ஸ் பர்க் சோவியத்தும் மாநிலச் சோவியத்துக்கள் பலவும் இருந்தும் கூட தொழிலாளி வர்க்கம் அந்தக் காலத்தில் கொஞ்சமும் திட்டவட்டமாக ஒழுங்கமைக்கப்படாமல் இருந்தது என்று நேரடியாகச் சொல்லிவிட வேண்டும். அதே போலக் கட்சியும் மிக எளிதில் நொறுங்கக் கூடிய இயந்திரத்தையே கொண்டிருந்தது. 1917 அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்பின் போதும் குறிப்பாக கட்சி இயந்

திரமே வழிகாட்டும் தலைமை என்றும், புரட்சி என்னும் பிரம்மாண்டமான இயற்கைச் சக்தி முன்னே செல்லச் செல்லச் சுக்கானுக்குக் கீழ்ப்படிகிறது என்றும் உணரப் பட்ட அக்டோபருக்குப் பிந்தைய காலத்தில் நிகழ்ந்ததை விட பெருமளவுக்குத் தாமாகவே நிகழ்ச்சிகள் நடந்து வந்தன.

சம்பவங்களோ மிக விரைந்து நடந்து வந்தன. புரட்சி பேராபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்று பலமுறை லெனின் எங்களுக்குச் சுட்டிக் காட்டினர். அவரது பொதுக் கூட்டப் பேச்சுக்கள், கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து எல்லோரும் அறிந்திருப்பது போல கிராமத்து விவசாய மக்கள் திரளையும், படை வீரர்களையும் குறிப்பாக அப் போது கரைந்து கொண்டிருந்த கிழக்குச் சேனையின் படை யினரையும் புரட்சிக்குள் கவர்ந்திழுக்க வேண்டியது பெரு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அந்தக் காலத்திலேயே லெனின் கருதினர்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் உறுதியாக இணை வதையும், லெனின் வழங்கிய அன்றைய முழக்கமான: ''தொழிலாளி வர்க்கம் விவசாயிகள் ஆகியோரின் புரட்சி கர ஜனநாயக சர்வாதிகாரம்'' என்ற முழக்கத்தைச் செயல்படுத்துவதையும் போல்ஷிவிக்குகள் கொள்கைப் போக்காகக் கொண்டார்கள்.

பீட்டர்ஸ்பர்க் சோவியத்தின் முதல் அலுவலர்கள் அனைவரும் டிசம்பர் 3ல் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைதானது லெனின் உட்பட எல்லோரையும் மிகவும் கவலைக்குள்ளாக்கியது. அப்போதைய லெனினது மிகவும் கவலையுற்ற முகமும் பதட்டம் நிறைந்த பேச்சும் எனக்கு நன்கு நினைவில் இருக்கின்றன.

மென்ஷிவிக்குகளால் (உதாரணமாக பிளெஹான வால்) கண்டனம் செய்யப்பட்ட, 1905ல் மாஸ்கோ தொழி லாளர்களால் மேற்கொள்ளப்பட்ட டிசம்பர் எழுச்சி*

---

* இங்கு குறிக்கப்படுவது மாஸ்கோவில் டிசம்பர் மாதம் நடந்த ஆயுதந்தாங்கிய எழுச்சி. மாஸ்கோத்

போல்ஷிவிக்குகளிடமும் அவர்களின் தலைவர்களிடமும் முழுமையான அனுதாபத்தைப் பெற்றது. அரசாங்கம் தாக்குதல் தொடுக்க முற்பட்ட நிலையில் இயக்கத்தை இன்னும் உயர்ந்த வடிவத்துக்குக் கொண்டு செல்வதற்கான இந்த முயற்சி முற்றிலும் நியாயமானது, முழுதும் இயற்கையானது என்று லெனின் கருதினார். அளவற்ற பீதியும் கவலையும் நிறைந்த அந்த நாட்கள் எனக்கு நினைவில் இருக்கின்றன. மாஸ்கோவிலிருந்து செய்திகள் எப்போதும் உரிய நேரத்தில் வரவில்லை. வருகின்ற தகவல்களின் ஒவ்வொரு வரியையும், அங்கிருந்து வருகிறவரின் ஒவ்வொரு வார்த்தையையும் ஆவலுடன் பருகினார் லெனின்.

மாஸ்கோ எழுச்சிக்கு உதவுவதற்காக, குறைந்த பட்சம் பீட்டர்ஸ்பர்குக்கும் மாஸ்கோவுக்கும் இடையிலிருந்த தொடர்பைத் தடுத்து நிறுத்துவதற்காக, பீட்டர்ஸ்பர்கில் லெனின் தலைமையிலிருந்த போல்ஷிவிக் இயந்திரம் தன்னாலான அனைத்தையும் செய்தது. அப்போது பல விஷயங்கள் இதைப் பொறுத்ததாய் இருந்தன.

நிகோலாய் ரயில் பாதையில் வேலைநிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய, அல்லது குறைந்த பட்சம் தண்டவாளங்களைப் பெயர்த்துப் போட, எல்லாச் சக்திகளையும் பிரயோகிக்க வேண்டி இருந்த போல்ஷிவிக் குழுக்களில் நான் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. இருப்புப் பாதையில் பெருங்கிளர்ச்சிகள் அலை மோதின. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. ஆனால் எங்கள் சக்திகள் போதவில்லை. செம்யோனவ் படை மாஸ்கோவுக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. கிராஸ்னயா பிரேஸ்னியாவின் வீரத் தொழிலாளர்கள் முறியடிக்கப்படுவது நிச்சயமாகி விட்டது....

தொழிலாளர்கள் நகரக் காவற்படையினருடன் தொடர்ச்சியாக 9 நாட்கள் போராட்டம் நடத்தினார்கள். செம்யோனவ் படை பீட்டர்ஸ்பர்கிலிருந்து வந்ததால் போராட்டத்தின் முடிவு முன்கூட்டியே நிச்சயமாகி விட்டது. எழுச்சி கொடுமையாக நசுக்கப்பட்டது.—(ப-ர்.)

ருஷ்யாவில் பகிரங்கக் கூட்டத்தில் இலீச் நிகழ்த்திய முதல் உரை

ஷ்லிஹ்தெர்

1906 மே இறுதியில் நான் முதன் முதலில் லெனினைப் பார்த்தேன். ருஷ்யாவில் தலைமறைவு வாழ்க்கை நடத்திய, வெளிநாட்டில் குடியேருத, வெளிநாட்டில் அவரது நேரடித் தலைமையின் கீழ் பணியாற்ருத எங்களிடம், போல்ஷிவிக்குகளின் தலைவர், தோழர் (இவ்வார்த்தையின் சிறந்த பொருளில்) என்ற முறையில் அவர் மீது இருந்த மதிப்பும் கவர்ச்சியும் அப்போதே உறுதியாக நிலை பெற்றிருந்தன.

முதல் அரசாங்க டூமாவிற்கு நடந்த தேர்தலில் பெற்ற வெற்றியால் காடேட்டுகளுக்கு மிகவும் போதை ஏறியிருந்த காலம் அது. 1905ல் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் சேர்ந்து நடத்திய பெரிய எழுச்சிகளுக்கு விட்டுக் கொடுக்கும் வகையில் நிறுவப்பட்ட ருஷ்யாவின் சட்ட நிர்மாண சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் இடங்கள் மிதவாத முதலாளித்துவத்தின் கையில் இருந்தன. அறிவுஜீவிகளும் அதிகாரிகளும், குட்டி முதலாளிகளும் நகரத்து நடுத்தர வகுப்பாரும், கிராமத்து ஆசிரி*

* அரசாங்க டூமா — *ருஷ்யாவிலிருந்த பிரதிநிதிகள் சபை. பெயரளவில் சட்டமியற்றும் அமைப்பாக இருந்தது அரசாங்க டூமா. உண்மையிலோ இதற்கு எத்தகைய அதிகாரமும் இருக்கவில்லை.*

சமூக-ஜனநாயகவாதிகள்-போல்ஷிவிக்குகள் டூமாவைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் திரளுக்கு முன்னுல் ஜாரின் அரசியலையும், எதிர்க்கட்சிகள் என்று சொல்லிக் கொண்டு உண்மையில் ஜாரிசத்துக்கு ஆதரவு தந்த முதலாளித்துவ மிதவாதக் கட்சிகளையும் அம்பலப்படுத்தினர்.—(ப-ர்.)

யர்களும் மதகுருக்களும்—இவர்கள் அனைவரும் தமது வாக்குகளை காடேட்டுகள் கட்சிக்கு வழங்கினர். சவுக்கடி எதேச்சாதிகார ருஷ்யாவை ''மக்கள் விடுதலையின்'' அரசியல் சட்டப் ''பூங்காவாக'' மாற்றிவிடுவதாகவும், இங்கு ஒவ்வொரு சமுதாய வர்க்கத்துக்கும் ''எல்லோருக்கும் சமுதாய நீதி'' எனும் ''மாபெரும் கோட்பாட்டுக்கு'' ஏற்ப பொருளாதார அரசியல் நலன்கள் அனைத்தையும் அரசாங்க டூமா வழங்கும் என்றும் காடேட்டுகள் கட்சி வாக்களித்திருந்தது. எல்லா அரசியல் சுதந்திரங்களையும் (பத்திரிகை, பேச்சு, கூட்டங்கள் நடத்தும் உரிமை, தனி நபர்களுக்கும் அவர்களது இருப்பிடங்களுக்கும் சட்டக் காப்புரிமை) வழங்கப் போவதாகக் காடேட்டுகள் சொன்னார்கள். முதலாளிகள், நிலச்சுவான்தாரர்கள் ஆகியோரின் சொத்துக்களுக்கும் உற்பத்திச் சாதனங்கள், கருவிகள், நிலம் ஆகியவற்றுக்கும் சட்டக் காப்புரிமை எனும் ஒரேயொரு கட்டுப்பாடு மட்டும்தான் இருக்கும் என்றார்கள் காடேட்டுகள்.

அரசர் இரண்டாம் நிகோலாயின் அரசாங்கத்தை ''சுதந்திரம்'' பற்றிய போலித்தனமான அறிக்கை வெளியிடும்படி நிர்ப்பந்தித்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி எழுச்சியின் அலைகள் இன்னும் கொந்தளித்துக் கொண்டிருந்தன. 1905ஆம் ஆண்டு இறுதியின் புரட்சிகர நாட்களில், முன் அனுமதியின்றித் தொழிலாளர்கள் தாமே ஏற்படுத்திக் கொண்ட எட்டு மணிநேர வேலைநாளை நிரந்தரமாக உறுதிப்படுத்தி வருவது சாத்தியமே எனும் பெருத்த நம்பிக்கை தொழிலாளர் திரளிடம் இன்னும் இருந்தது; கிராமங்களிலும் சிற்றூர்களிலும் ''தீ விபத்துக்கள்'' இன்னும் நேர்ந்து கொண்டிருந்தன; அக்டோபரில் நடந்த மாபெரும் ருஷ்யப் பொது வேலைநிறுத்தமும், டிசம்பரில் மாஸ்கோவில் நடந்த ஆயுதந் தாங்கிய எழுச்சியும் தந்த புரட்சிகர அதிர்ச்சியிலிருந்து அந்த நேரத்தில் எதேச்சாதிகாரம் இன்னும் விடுபடவில்லை. இறுதியாக, புரட்சியால் கிளர்ச்சியூட்டப்பட்டிருந்த தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் ஆகியோரின் உழைக்கும் மக்கள் திரளை முறி

... 108 ... 1996

யடிப்பதற்காகச் செயல்தந்திரத் தயாரிப்பு நடவடிக்கைகளை அரசியல் போலீசும் பிரபுக் கும்பலும் இன்னும் முடிக்கவில்லை.

தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டிருந்த ஜார் அரசாங்கத்துக்கு "சமுதாய" வட்டாரங்கள் எனப்பட்டவற்றின், அதாவது மிதவாத முதலாளி வர்க்கத்தின் ஆதரவு தாற்காலிகமாகத் தேவைப்பட்டது. அரசாங்க டூமாவில் பிரதானமாக இருந்த, காடேட்டுகளைக் கொள்கைவாதிகளாகவும் கருத்து வெளியிடுபவர்களாகவும் கொண்டிருந்தது இந்த வர்க்கம். காடேட்டுகள் தமக்கு நீண்ட காலம் வேண்டுகோள் விடுக்கும்படி நிர்ப்பந்திக்கவில்லை. காடேட்டுகள் கட்சியின் அதிகார பூர்வப் பத்திரிகையான ரேச்சின் ("பேச்சு") தலைமையில் இருந்த முதலாளித்துவப் பத்திரிகைகள், "சமுதாய நம்பிக்கைக்குப்" பாத்திரமானவர்கள் அமைச்சரவையில் பங்கு கொள்வதன் மூலம் "சமுதாயமும்" அரசாங்கமும் ஒத்துழைப்பது தவிர்க்கவியலாதது என்று எல்லா விதங்களிலும் மிகவும் சுவாரஸ்யமாக விவாதித்துக் கொண்டிருந்தன. அரசாங்கத்தினரிடம் காடேட்டுகள் பருகிய பிரபலமான "ஒரு குவளைத் தேநீர்" பற்றிய வதந்தி பீட்டர்ஸ்பர்க் முழுதும் பரவியது. தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை ஒட்டி "தோட்டாக்களை மிச்சம் பிடிக்காதீர்கள்" என்று உத்தரவிட்ட நகர நிர்வாகத் தலைவன் ஜெனரல் திரேபவைக் காடேட்டுகள் கட்சியின் தலைவர் மில்யுக்கோவ் ரகசியமாகச் சந்தித்தது இவ்வாறு பெயர் பெற்றது.

அரசவைப் பிரபுக் கும்பலுடன் ஒப்பந்தம் முடிக்க ஏற்பாடு செய்தபடி, பத்திரிகைப் பிரசாரம் மூலமாகவும் பகிரங்கக் கூட்டங்கள் மூலமாகவும் சமுதாய அபிப்பிராயத்தைப் பதப்படுத்துவதில் காடேட்டுகள் கட்சி தீவிரமாக ஈடுபட்டிருந்தது. இத்தகைய ஒரு கூட்டத்தில்தான் நான் லெனினைச் சந்தித்தேன். நான் அந்தக் காலத்தில் பீட்டர்ஸ்பர்கில் காண நேர்ந்த மிகப் பெரிய கூட்டங்களில் ஒன்றாக இது இருந்தது. எல்லா இருக்கைகளிலும் சன்னல் விளிம்புகளிலும் ஆட்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் சுவர்களுக்

கருகிலும் நடைபாதைகளிலும் நெருக்கிக் கொண்டு நின்றிருந்தார்கள். நகரத்து அறிவுஜீவிகள் பீட்டர்ஸ்பர்க் ''ஜனநாயகவாதிகள்'' ஆகியோரான ''சுத்தமான'' மக்களே அங்கு அதிகமாக இருந்தனர். ஆயினும் தொழிலாளர்களும் ஏராளமாக வந்திருந்தனர். அவர்கள் ஹாலின் பலவிடங்களில் அமர்ந்திருந்தது அனுபவம் வாய்ந்த கண்களுக்குத் தெரிந்தது. அந்தக் காலத்தில் நன்கு தெரிந்தவரான வதவோசவ் என்ற காடேட்டுகள் கட்சியின் உறுப்பினர் உரை நிகழ்த்தினர். கூட்டத்தினர் அவர் சொன்னதை மிகவும் கவனமாகக் கேட்டனர்.

ஹாலின் மத்தியிலிருந்த நடைபாதையில் திடீரென்று ஏதோ ஒரு பரபரப்புத் தோன்றியது: மேடையை நோக்கி ஒரு சிறு குழுவினர் நெருக்கியடித்துச் சென்று கொண்டிருந்தனர். இவர்கள் மத்தியில் யாரோ, ஒருவரின் உயர்ந்த நெற்றியும் வழுக்கைத் தலையும் எடுப்பாகத் தெரிந்தன. மேடைக்கு இன்னும் 10—15 எட்டுக்களே இருந்தபோது அக்குழுவினர் நின்று விட்டனர். ஏராளமானவர்கள் நெருக்கி நின்று கொண்டிருந்ததால் மேற்கொண்டு போக முடியவில்லை. எனக்குத் தெரிந்த ஒரு சிலரை அக்குழுவில் நான் கண்டேன். என்னையும் அவர்கள் கண்டு விட்டனர். எனக்குத் தெரியாத தோழர் ஒருவரிடம் அவர்கள் ஏதோ சொன்னர்கள், தம்மிடம் வரும்படி என்னை அழைத்தார்கள். ஓரத்து வழியின் மூலமாக நான் கஷ்டப்பட்டு அவர்களிடம் போனேன்.

''லெனின்'' என் காதருகே ஒரு தோழர் கிசுகிசுத்தார்.

ஒருவர் என் கையை வலுவுடன் பற்றித் துடியாகக் குலுக்கியதை உணர்ந்தேன். அற்புதமான இனிமையும் கனிவும் நிறைந்த புன்னகையையும் ஊடுருவிச் சுடர் விடும் கண்களையும் கண்டேன்.

''பேசுவதற்காகப் பெயர் பதிவு செய்து கொண்டீர்களா?''

இவ்வாறு கேட்கவல்லவர் லெனின் மட்டுமே. கேட்கும் போது தமது கண்களாலும், குரலாலும், சைகைகளாலும் அவரே பதிலும் சொன்னர்.

''இல்லை'' என்று நான் பதில் சொன்னேன்.

''தவறாமல் பதிவு செய்து கொள்ளுங்கள். இதோ பேச்சுக்கான குறிப்புகள்.''

தாம் செய்வதாக ஏற்றுக்கொண்ட எந்தவொரு காரியத்தையும், அது பெரியதோ, சிறியதோ, லெனின் மட்டுமே இவ்வாறு ஒழுங்குறச் செய்ய முடியும். எல்லா வற்றையும் கணக்கிட்டு, ஆழ்ந்து சிந்தித்து, முன்னரே தயார் செய்தார் அவர்.

இந்தக் குறிப்புக்களின் சரியான வாசகம் எனக்கு நினைவில்லை. உழைக்கும் மக்களின் நலன்களை ஒரு சிறிதும் பாராது, முதலாளிகள் நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன் களுக்கு உட்பட்ட விதத்தில், நிர்ப்பந்தத்தின் காரணமாக ஜாரிசம் வழங்கிய சீர்திருத்தங்களைச் ''சட்டபூர்வமாகக்'' கட்டுப்படுத்துவதற்கும், புரட்சியை ஒழித்துக் கட்டுவதற் கும் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் விவசாயிகள் மீதும் தாக்குதல் தொடுப்பதற்காக அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து காடேட்டுகள் செய்து வரும் தயாரிப்புகளை அம் பலப்படுத்துவதுதான் இந்தக் குறிப்புகளின் பொதுக் கருத்து ஆகும்.

வதவோசவின் உரை முடிந்தது. விவாதம் தொடங் கியது. இரண்டு, மூன்று பேச்சாளர்கள் திரேபவிடம் காடேட்டுகள் குடித்த ''குவளைத் தேநீர்'' பற்றியும் காடேட்டுகள் கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நிகழ்ந்த ரகசிய ஒப்பந்தம் பற்றியும் சொன்னார்கள்.

அரசாங்க டூமாவின் உறுப்பினரான அகரோத்னிகவ் பேச அழைக்கப்பட்டார். இவர் இடதுசாரி காடேட், வழக்குரைஞர். ''தவறான கருத்தைத்'' திருத்தி விளக்கம் சொல்வதற்காக அவர் பேச முன்வந்தார். அரசாங்கத்து டன் எத்தகைய ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை, அரசாங்கப் பிரதிநிதி ஒருவருடன் தனிப்பட்ட, தகவல் பரிமாற்றப் பேச்சுவார்த்தைகளே நடந்தன. இவையும் கூட இப்பிரதிநிதியின் முன்முயற்சியால் மேற்கொள்ளப் பட்டவையே. இத்தகைய பேச்சுவார்த்தைகளில் அரசியல் துரோகத்தைக் காண்பது, தமது எதிரிகளின் மீது

''வாய்வீச்சுத் தாக்குதல்'' நடத்துவதாகும் என்று அவர் சொன்னார்.

....தங்குதடையின்றி, தன்னம்பிக்கையுடன் அகரோத்னிகவ் அழகாகப் பேசினார். ஆர்வம் ததும்பும் உற்சாக வார்த்தைகளால் தமது வாதத்தை அவ்வப்போது அவர் பலப்படுத்திக் கொண்டார்.

''சபாஷ், சபாஷ்!'' என்ற பாராட்டுகள் முழங்கின. கூட்டத்தின் ஒரு பகுதி உளக்கிளர்ச்சி கொண்டு கூச்சலுடன் ஆரவாரித்தது. மற்ற பகுதியோ குழம்பிக் கலங்கிப் போயிற்று: ''அகரோத்னிகவ் சொல்வது சரிதானே, பேச்சுவார்த்தைகள் என்பதும் ஒப்பந்தம் என்பதும் வேறு வேறு விஷயங்கள் அல்லவா....''

லெனின் கவனம் சிதறாமல் கூர்ந்து கண்காணித்து வந்தார். அகரோத்னிகவின் பேச்சைக் கேட்டு விட்டு தமக்கேயுரிய ஒரு தந்திரப் புன்னகை செய்தார். அவரது கண்கள் அந்தரங்கக் கேலியுடன் சிரித்தன. தகுந்த தாக்குதலுக்கு உள்ளாகப் போகிற மனிதரைப் பார்த்து அவர் அடிக்கடி அப்படிச் சிரிப்பது வழக்கம்.

அகரோத்னிகவ் பேசுவதற்கு முன்பே தாம் பேச வேண்டும் என்ற வேண்டுகோளுடன் கார்பவ் என்ற பெயரால் லெனின் துண்டுச் சீட்டு அனுப்பியிருந்தார். இன்னும் சிலர் பேசினர். ஆனால் கார்பவ் அழைக்கப்படவில்லை.

விளதீமிர் இலீச் பதட்டப்பட்டார்.

''என் பெயரைப் பதிவு செய்திருக்கிறார்களா இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார் அவர்.

இதைத் தெரிந்து வருவதற்காக எங்கள் குழுவிலிருந்து ஒருவர் மேடைக்குச் சென்றார். யாருக்கும் தெரியாத கார்பவ் என்ற ஒருவரைப் பேச அழைப்பதற்குத் தலைவர் கஷ்டப்படுகிறார் என்று தெரியலாயிற்று. போல்ஷிவிக்குகள் கட்சியின் மிகப் பிரபலமான உறுப்பினர்தான் இந்தக் கார்பவ் என்று அவருக்குச் சொல்லப்பட்டது.

''இப்போது கார்பவ் பேசுவார்.''

இதோ மேடையின் மீது லெனின் நின்றார். லெனினது கட்டுக் குட்டான உருவத்தைக் கூட்டத்திலிருந்தோர்

அலட்சியமாகப் பார்த்தனர். அவர்களுக்கு லெனினைத் தெரியாது. முறையான பேச்சாளர் இவர் என்று மட்டுமே அவர்களுக்குத் தெரியும். லெனின் பேசத் தொடங்கினர்:

''ஒப்பந்தம் ஒன்றுமில்லை என்றும் பேச்சுவார்த்தைகளே நடந்தன என்றும் அகரோத்னிகவ் சொல்கிறார். பேச்சுவார்த்தைகள் என்பவை என்ன? ஒப்பந்தத்தின் ஆரம்பம். ஒப்பந்தம் என்பது என்ன? பேச்சுவார்த்தைகளின் முடிவு.''

சச்சரவினது சாரத்தின் மிக எளிய, தெளிவான வடிவமைப்பு எல்லோரையும், ஆமாம் எல்லோரையும், திடீரெனப் பற்றி வியப்படையச் செய்தது எனக்கு நன்கு நினைவிருக்கிறது. இன்னும் சில வார்த்தைகளை, ஒப்பந்தத்திலும் உடன்படிக்கையிலும் முடிந்த பேச்சுவார்த்தைகளின் வரலாற்றுத் தகவல்கள் சிலவற்றை அவர் உதிர்த்தார். பேசுபவரைக் கூர்ந்து கவனித்தவாறு கூட்டத்தினர் அசைவற்று விடும் சந்தர்ப்பங்களில் மட்டும் வழக்கமாகத் தோன்றுகிற மௌனம் அங்கு குடிகொண்டது. குறிப்பிட்ட நேரத்தில் முதலாளித்துவத்தின் வர்க்க நலன்களை கச்சிதமான வார்த்தைகளில் சுருக்கமாகத் தந்தார் லெனின். ''மக்கள் விடுதலைக்காகப்'' போராடும் முதலாளித்துவக் கட்சியின் எதிர்ப்புரட்சிச் சாரத்தை எடுத்துக் காட்டினர். எதேச்சாதிகார அரசாங்கத்துடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்வது குறித்து ஒப்பந்தம் செய்து கொள்ள முடிகிற அந்தக் கணத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் எதிராக இந்தக் கட்சி பகிரங்கமாகத் திரும்புவது எதார்த்த பூர்வமாகத் தவிர்க்க முடியாதது என்று மெய்ப்பித்தார்.

திரேபவுடன் சேர்ந்து ''குவளைத் தேநீர்'' குடித்த பிறகு, 1905ஆம் ஆண்டுப் புரட்சியை விரைவில் நெருக்கிக் கொல்வதற்கான பேரம் தொடங்கியது. இந்தப் பேரம் வெற்றிகரமாக முடிந்து விட்டால் எட்டு மணிநேர வேலைநாள், பகிரங்கமாகக் கூட்டம் போடுவது, தொழிற்சங்கங்கள் நிறுவுவது போன்ற, புரட்சிகர எழுச்சியின் போது முன் அனுமதியின்றிச் செயல்படுத்தப்பட்ட

உரிமைகளைத் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் இழந்து விடுவர் என்பது மட்டுமின்றி, மூர்க்கத் தனமான அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்படும்.

இதனுல்தான் மிதவாத முதலாளித்துவத்தின் அதனுடைய ஆதரவாளர்கள் அனைவரின் எதிர்ப்புரட்சிச் சாரத்தையும் உழைக்கும் மக்கள் முன்னே அம்பலப்படுத்த வேண்டும் என்ருர் லெனின். நிலத்துக்காகப் போராட விவசாயிகட்கு வழிகாட்டியபடி அவர்களுடன் இணைந்து தொழிலாளி வர்க்கம் மட்டுமே முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சிச் சூழ்ச்சிகளை எதிர்த்து நிற்க முடியும். 1905ஆம் வருடத்து முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லுவதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியும் என்கிற உணர்வைத் தொழிலாளர்களுக்கு ஊட்ட வேண்டும்.

பெத்ரோகிராதில் வெளியாகிவந்த போல்ஷிவிக்குகள் கட்சியின் பத்திரிகையில் காணப்பட்ட விஷயத்தை விடப் புதிதாக லெனின் எதையும் சொல்லி விடவில்லை. எனினும், போல்ஷிவிக்குகள் கட்சியின் பத்திரிகைகளைப் படிக்கவே செய்யாத அல்லது எப்போதாவது படிக்கிற கூட்டத்தில் இருந்த பொதுமக்களை மட்டுமின்றி, எங்கள் தோழர்களையும் ''பெயர் தெரியாத'' கார்பவ் சொன்ன விஷயங்கள் புதுமையாலும் எதிர்பாராமையாலும் ஆட்கொண்டு விட்டன.

மேடையில் லெனினது விரைவான அசைவுகள், பிரச்னையின் பிரதான அம்சத்தை, சாரப் பொருளை மிக எளிதாகப் பிரித்துக் காட்டும் திறமை, அவரது சைகைகள், கனிவு நிறைந்த ஹாஸ்யமும் கடுமையான ஒருமுனைப் பாடும் நிறைந்த கண்கள், இறுதியாக விதவிதமான தொனிகள் ஆகிய யாவும் வைத்த கண் வாங்காது அவரைப் பார்க்குமாறு செய்து பேச்சைக் கேட்டவர்களைப் பற்றிக் கொண்டன.

சில நிமிடங்கள் சென்றன. உரத்த கரவொலிகளாலும் உற்சாகக் கூக்குரல்களாலும் மௌனம் கலையத் தொடங்கியது. கேட்பவர்களின் மனநிலை முற்றிலும் மாறி

விட்டது. அகரோத்னிகவ் பேச்சுக்குப் பின்னே கலக்க முற்றிருந்தவர்களின் கண்கள் கிளர்ச்சியும், மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கொண்டு சுடர் விட்டன. அகரோத்னிகவ் பேசிய பின் தாம் வெற்றி பெற்று விட்டதாக நினைத்திருந்த, இப்போது குழம்பிப் போய் அமைதியாகி விட்டவர்களை நோக்கி ''வம்பு செய்தீர்கள், வாங்கிக் கட்டிக் கொள்ளுங்கள்'' என்று அவர்கள் சொல்ல விரும்பியது போலிருந்தது.

பிரம்மாண்டமான அந்தக் கூட்டம் லெனினது போல்ஷிவிக் வாதங்களால் எங்களுக்கு ஆதரவாக மாறியது. ஒரே குரலில், மிகப் பெரும்பான்மை வாக்குகளால் கார்பவ்-லெனின் அறிக்கையின்படிப் பின்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது:

''படுகொலைகளுக்கு ஏற்பாடு செய்து இடைவிடாத போலீசின், ராணுவத்தின் தான்தோன்றி நடவடிக்கைகளை அதிகரித்து எதேச்சாதிகார அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளை ஏளனம் செய்கிறது, சுதந்திரம் வேண்டும் எனும் பொதுக் கோரிக்கைக்கும் நிலம் வேண்டும் எனும் விவசாயிகளின் கோரிக்கைக்கும் வன்முறையின் மூலம் பதிலளிக்கத் தயார் செய்து வருகிறது என்பதை இந்தக் கூட்டம் எல்லாக் குடிமக்களின் கவனத்துக்கும் கொண்டு வருகிறது.

'' 'மக்கள் விடுதலைக்' (காடேட்டு) கட்சி மக்களது கோரிக்கைகளை அச்சத்துடனும் முழுமையின்றியுமே வெளியிடுகிறது, அனைத்து மக்கள் அரசியல் சட்ட நிர்மாண சபையைக் கூட்டப் போவதாகத் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று இக்கூட்டம் அறிவிக்கிறது. மக்கள் விடுதலைக்கும் மக்களை ஒடுக்குகிற பழைய எதேச்சாதிகார ஆட்சிக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கிற இக்கட்சியிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

''அரசாங்க டூமாவில் இருக்கும் விவசாயிகள் ('உழைப்பாளர்') குழுவும் தொழிலாளர் குழுவும் தீர்மானமான, காடேட்டுகள் கட்சியை அறவே சார்ந்திராத

நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், ஒவ்வொன்றும் தன் சுயேச்சையான கோரிக்கைகள் மூலம் மக்களின் கோரிக்கைகளை முழுமையாகத் தெரிவிக்க வேண்டும் என்று கூட்டம் கோருகிறது.

''எதேச்சாதிகார அரசின் நடத்தையும், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோரின் தேவைகள் முற்றிலும் நிறைவேற்றப்படாமலிருப்பதும், டூமாவிற்கு வெளியே தீர்மான மான போராட்டம், மக்களின் சுதந்திரத்தையும் தேவைகளையும் நிறைவு செய்யத்தக்க ஒரேயொரு சாதனமான முழுமையான மக்கள் அதிகாரத்துக்கான போராட்டம் நடத்த வேண்டியதைத் தவிர்க்கமுடியாத தாக்குகின்றன என்பதைக் கூட்டம் சுதந்திரக் குறிக்கோளை மதிக்கும் எல்லோருடைய கவனத்துக்கும் கொண்டு வருகிறது.

''எல்லாப் புரட்சிகர மக்கள் பகுதியினருக்கும் பாட்டாளி வர்க்கம் முன்பு போலத் தலைமை தாங்கும் எனும் நம்பிக்கையைக் கூட்டம் வெளியிடுகிறது''*.

கிளர்ச்சி பொங்கிய, மகிழ்ச்சி நிறைந்த தொழிலாளர் குழுக்கள் வீடு செல்ல விருப்பமின்றி நடை கூடங்களிலும் தெருக்களிலும் கூடிக் கூடி நின்றன. இந்தக் கூட்டத்திலிருந்து சென்ற அவர்கள் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு அபரிமித உற்சாகம் வாய்ந்த உறுதியையும் புரட்சிகர நம்பிக்கையையும் கொண்டு போனார்கள்.

அந்தக் கூட்டம் லெனினுக்கு மிகவும் திருப்தி தந்தது என்று பின்னர் எனக்குச் சொன்னார்கள். பகிரங்க மேடையில் நடத்திய போராட்டம் அவருக்கு மிகவும் பிடித்துப் போனதால், பகிரங்கக் கூட்டங்களில் பேசுகின்ற ஆபத்திலிருந்து அவரை இழுத்துப் பிடிப்பதற்கு நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ன குருப்ஸ்கயா பெரும்பாடு பட வேண்டியதாயிற்று.

---

* V. I. Lenin, *Collected Works*, "Resolution Adopted by the Public Meeting in Countess Panina's Palace" (May 9, 1906), Vol. 10, p. 409.—(ப-ர்.)

லெனின் இத்தகையவர்

ஸ்வெர்த்லோவா

1906 வசந்த காலத்தில் நான் விளதீமிர் இலீச் லெனினை முதன் முதல் சந்தித்தேன். அது இவ்வாறு நடந்தது....1905 வருடத்தில் நடந்த முதல் ருஷ்யப் புரட்சியின் சூடு பறக்கும் நாட்களில், யூரல் பகுதியிலுள்ள எகதிரின் புர்க் (ஸ்வெர்த்லோவ்ஸ்க் அப்போது இப்படி அழைக்கப் பட்டது) நகரில் நான் கட்சி வேலை செய்து வந்தேன். 1906ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், போல்ஷிவிக்குகளின் யூரல் பகுதிக் கமிட்டியின் இளம் உறுப்பினராக இருந்த நான், 1906 ஏப்ரல் மாதம் ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக் ஹோமில் நடக்கவிருந்த ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழி லாளர் கட்சியின் நான்காவது காங்கிரசுக்கான பிரதிநிதி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ருஷ்யத் தொழிலாளர் களின் புரட்சிகரக் கட்சியின் காங்கிரஸ் வெளிநாட்டில் கூடியது. ஒவ்வொரு புரட்சியாளரையும் ஜார் அரசாங்கம் பின்தொடர்ந்து துன்புறுத்தி வந்ததால், தமது காங் கிரசை போல்ஷிவிக்குகள் ருஷ்யாவில் நடத்த முடியாம லிருந்தது.

இவ்வாறு, காங்கிரசுக்குச் சென்ற நாங்கள் ஐவர் முதலில் ரயிலிலும் பின்னர் கப்பலிலும் போய் இறுதியில் ஸ்டாக்ஹோமை அடைந்தோம்.

என்னைத் தவிர இன்னொரு பெண்ணும் குழுவில் இருந் தார். நடுத்தர உயரம். வயது 35—37 இருக்கும். நட்பைத் தூண்டும், இனிய முகம். அவர் மிக எளியவரா யும் அடக்கம் மிகுந்தவராயும் இருந்தார். எங்களிடையே தொடங்கிய பேச்சிலிருந்து பலமுறை அவர் வெளிநாடு

சென்றிருக்கிறார் என்றும், எங்களை விட நிறைய அனுபவம் வாய்ந்தவர் என்றும் தெரிந்தது. எங்கள் ஐவரில் அவரைத் தவிர, மற்றவர்கள் என்னைப் போலவே புதியவர்களாக இருந்தனர் என்றே எனக்கு ஞாபகம். எனவே வழித்துணைவரின் ஆலோசனைகள் சுவாரஸ்யமானவையாகவும் பயனுள்ளவையாகவும் இருந்தன. அவர் தமது பெயர் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா குரூப்ஸ்கயா என்று சொன்னார். சிறந்த மனிதராகவும், விளதீமிர் இலீச் லெனினது விசுவாசமான, மாற்றற்கரிய, மிக நெருங்கிய நண்பராகவும், மனைவியாகவும் இருந்த நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுடன், நீண்ட பல ஆண்டுகள் தொடர்ந்த எனது அறிமுகமும் நட்பும் இப்படித்தான் தொடங்கின.

ஸ்டாக்ஹோமுக்கு நாங்கள் மாலையில் வந்து சேர்ந்தோம். ஏற்கெனவே அங்கு காங்கிரஸ் தொடங்கி விட்டது என்று அறிந்தோம். அடுத்த நாள் முதன் முதலாக நான் கட்சிக் காங்கிரசில் கலந்து கொண்டேன், முதன் முதலில் லெனினைப் பார்த்தேன். காங்கிரஸ் கூட்டங்கள் இரண்டு வாரங்களுக்கு மேல், ஏப்ரல் 10—25ல் நடந்தன. இந்த நாட்களில் நான் பல முறை லெனினைப் பார்த்தேன், அவர் பேச்சைக் கேட்டேன். பிரதிநிதிகளுடன் அவர் இடையறாது நடத்திய உரையாடல்களில் கலந்து கொண்டேன்.

என் நினைவில் குறிப்பாகப் பதிந்தது என்ன? முதன்மையாக, விளதீமிர் இலீச் கடைப்பிடித்த அசாதாரணமான எளிமையும் அடக்கமும்தான். காங்கிரசில் கலந்து கொண்ட சாமானிய போல்ஷிவிக்குகளான நாங்கள், லெனினது நூல்கள், கட்டுரைகள், பேச்சுக்கள் ஆகியவற்றின் மூலம் அவரை நன்கு தெரிந்து வைத்திருந்தோம், அவரை நேசித்தோம். ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக அவர் அப்போதே விளங்கினார். எங்கள் அனைவருக்கும் கேள்விக்கிடமற்ற மதிப்புக்குகந்தவராகத் திகழ்ந்தார். இந்தத் தலைவர், இம்மாபெரும் மனிதர் தமது நடத்தையில் முதற்கண் மிக எளியவராக, சாதாரண மனிதராக இருந்தார். இந்த எளிமையே அம்மனிதரின் ஜீவனாக இருந்தது.

ஒரு நாள் விட்டு ஒரு நாளாக நடந்து வந்த காங்கிரசின் போல்ஷிவிக் பிரிவினது கூட்டங்கள் எனது நினைவுக்கு வருகின்றன. ஏதாவதொரு ஹோட்டலில் நாங்கள் கூடுவோம். இரண்டு-மூன்று அறைகளை எடுத்துக் கொண்டு கருத்துக்களையும் மனப்பதிவுகளையும் பரிமாறிக் கொள்வோம். காங்கிரசின் அடுத்த கூட்டங்களுக்கான திட்டம் வகுப்போம். இந்தக் கூட்டங்கள், வார்த்தையின் முழுமையான அர்த்தத்தில், அதிகாரபூர்வமானவையாக இருக்கவில்லை. தலைவரோ செயலாளரோ கூட்டத்துக்குக் கிடையாது. பேசுவதற்கு அங்கு அனுமதி கோருவதுமில்லை. உயிரோட்டமுள்ள, கூச்சல் மிகுந்த, இயற்கையான விவாதம் நடந்தது. இதன் மையமாக லெனின் எப்போதும் திகழ்ந்தார். ஒவ்வொருவரும் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கவும் தேவையான குறிப்பையோ அல்லது மகிழ்ச்சி நிறைந்த வேடிக்கையையோ தேவையான நேரத்தில் தரவும், அறிவார்ந்த ஆழமான ஆலோசனை வழங்கவும், மிகவும் குழப்பமான, சிக்கலான விஷயத்தை விளக்கிச் சொல்லவும் அவர் திறன் படைத்திருந்தார்.

ஒவ்வொரு உரையாடலும் விளதீமிர் இலீச்சின் ஒரு வேண்டுகோளுடன் முடியும்:

''செர்கேய் இவானவிச், இப்போது நீங்கள் ஒரு பாட்டுப்பாட வேண்டுமென்று நாங்கள் அனைவரும் கேட்டுக்கொள்கிறோம்'' என்பார் அவர்.

மாஸ்கோவாசிகளின் சார்பில் பிரதிநிதியாக வந்திருந்த செர்கேய் இவானவிச் கூசெவிற்கு அருமையான குரல் இருந்தது. வேண்டுகோள் வந்தவுடன் அவர் பியானோ அருகில் அமர்ந்து பாடத் தொடங்குவார். அவருடன் மற்றவர்களும் சேர்ந்து கொள்ளவார்கள். நீண்ட ருஷ்யப் பாடல் அங்கு பெருகி ஒலிக்கும். இசையை நேசித்தார் இலீச். நல்ல பாடலை விரும்பினார். அனேகமாக எங்கள் ஸ்டாக்ஹோம் உரையாடலில் ஒன்று கூடப் பாடலின்றி நடந்ததில்லை.

நண்பர்கள், ஒத்த சிந்தனையாளர்கள் மத்தியில் லெனின் எவ்வளவு எளிமையும் கவனமும் மிக்கவராக இருந்தா

ரோ, அவ்வளவு எதிரிகளுக்கு, மார்க்சிய விரோதிகளான மென்ஷிவிக்குகளுக்கு இரக்கம் காட்டாதவராக இருந்தார். காங்கிரஸ் நடக்கும் போது பொருள் செறிந்த வாதங்களையும், எதிரிகளைக் கொன்றழிக்கும் சான்றுகளையும், கிழித்தெறியும் கூராயுதங்களையும் பலமுறை அவர்கள் மீது பொழிவார். இதனால் அவர்களது கருத்துக்களின் சிக்கலும் தவறுகளும் மிகத் தெளிவாக எல்லோருக்கும் விளங்கும். கர்வமும் படாடோபமும் கொண்ட மென்ஷிவிக்குகளின் தலைவர்கள் வக்கற்றுக் கொக்கரித்துக் கொண்டிருந்த, எந்தப் புதரில் ஒளிந்து கொள்வது என்று தெரியாத, இறகு பிய்ந்த கோழிகளைப் போலக் காட்சியளித்தனர்.

இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. காங்கிரஸ் பிரதிநிதிகளான மென்ஷிவிக்குகள் மத்தியில் மனக் குழப்பம் கோலோச்சியது. புரட்சி தோல்வியுற்று விட்டது என்று பேசப்பட்டது. உண்மையிலேயே காலம் கடினமானதாய் இருந்தது. 1905ல் மாஸ்கோவில் நடந்த ஆயுதந் தாங்கிய எழுச்சி முறியடிக்கப்பட்டு விட்டது. ருஷ்யாவின் மற்ற நகரங்களில் தனித்தனியாகவும் துண்டு துண்டாகவும் நடந்த இதர எழுச்சிகளும் தோல்வியில் முடிந்தன. ஜார் மன்னரின் காவலர்கள் துணிவு கொண்டு புரட்சியாளர்களைப் பின்தொடர்ந்து துன்புறுத்தினர். தொழிலாளர் புரட்சியில் என்றைக்குமே நம்பிக்கை கொண்டிராத, நாட்டின் அரசியல் அதிகாரத்தை முதலாளிகளிடம் கொடுத்து விட வேண்டும் என்று கூறி வந்த மென்ஷிவிக்குகள் டிசம்பரில் நடந்த எழுச்சி ஒரு தவறு என்றும், பொதுவாகவே தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்தியிருக்கக் கூடாது என்றும் காங்கிரசின் மேடையிலிருந்து பிரகடனம் செய்தனர். இத்தகைய குரல்கள் காங்கிரசில் நிறைய ஒலித்தன. எங்கள் தோழர்களான போல்ஷிவிக்குகள் சிலரும் நம்பிக்கையிழந்து புலம்பத் தொடங்கினார்கள். ஆனால் லெனின் அப்படிப்பட்டவரல்ல! சிறப்பு வாய்ந்த சக்தியுடனும் ஆர்வத்துடனும் ஆற்றலுடனும் துரோகிகளுக்கும், சிணுங்கிக் கொண்டிருந்தவர்களுக்கும் நம்பிக்கையற்றவர்கட்கும்

சாட்டையடி கொடுத்தார் அவர். பிரதான போராட்டம் இப்போதுதான் தொடங்குகிறது, தீர்மானமான சமர்கள் இனிமேல்தான் வரவிருக்கின்றன, ஆயுதத்தைக் கீழே போட வேண்டியதில்லை என்றும் அதிகாரத்துக்காக ஆயுதந் தாங்கிய போராட்டம் நடத்தத் தொழிலாளி வர்க்கத்தைத் தயார்படுத்த வேண்டும் என்றும் போல்ஷிவிக்குகளான எங்களுக்குத் தவறுமல் விடாப்பிடியாகத் திரும்பத்திரும்ப ஒவ்வொரு உரையாடலிலும் அவர் சொல்லி வந்தார்.

1917க்குப் பின் பலமுறை லெனினைச் சந்தித்த நான், அவருடன் வேலை செய்து வந்த தோழர்களின் மீது அவர் விசேஷமான கவனமும் அக்கறையும் செலுத்தி வந்ததைக் கண்டு, மனிதர்களின் மீது, குறிப்பாகக் குழந்தைகள் மீது அவர் கொண்டிருந்த அளவற்ற நேசத்தைக் கண்டு எப்போதும் பரவசமடைந்திருக்கிறேன்.

1917 கோடையில் சைபீரியச் சிறைக் குடியிருப்பிலிருந்து பீட்டர்ஸ்பர்குக்கு நான் வந்தேன். அக்டோபர் புரட்சிக்கு சில நாட்களுக்கு முன்பு ''பிரிபோய்'' எனும் கட்சிப் பதிப்பகத்துக்குத் தலைமை தாங்கும் பொறுப்பைக் கட்சியின் மத்தியக் கமிட்டி என்னிடம் வழங்கியது.

பலமுறை நான் லெனினை அவர் வீட்டில் சந்தித்திருக்கிறேன். அவரது சிறிய, எளிய வீடு எனக்கு என்றென்றும் நினைவிருக்கும். விளதீமிர் இலீச்சும் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் தமது இயல்பிலேயே மிகவும் எளிமையும் அடக்கமும் நிறைந்தவர்களாய் இருந்ததால் அனுவசியமான எதையும் அவர்கள் சகித்துக் கொள்ளவில்லை.

விளதீமிர் இலீச் குழந்தைகளை மிகவும் நேசித்தார். 1920ஆம் ஆண்டு இறுதியில் கிரெம்ளினில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டது. அரசாங்கக் கட்டிடத்தின் இடது புறத்தில் இது இருந்தது. இடைவேளைகளின் போது பள்ளி வாயிலுக்கு அருகே குழந்தைகள் விளையாடுவர். லெனினை அவர்கள் அடிக்கடி சந்திப்பார்கள், அவரைச்சுற்றி வளைத்துக் கொள்வார்கள். உடனே அங்கு மகிழ்ச்சியும் கூச்சலும் மிகுந்த உரையாடல் தொடங்கும். 1921 இலையுதிர்காலத்

தில் பள்ளிக்கு அருகில் குழந்தைகள் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் பந்து இல்லை. பந்து கிடைப்பது அப்போது வெகு கடினமாயிருந்தது. கந்தல் துணிகளை உருண்டையாகச் சுற்றி கயிறால் கட்டி அவர்கள் விளையாடி வந்தனர். பக்கத்தில் சென்று கொண்டிருந்த லெனின் அங்கு நின்று விளையாட்டைக் கவனித்தார். லெனினைக் கண்ட குழந்தைகள் அவரைச் சுற்றிக் கொண்டு விளையாடுவதற்குப் பந்து இல்லை என்றும், எங்கேயும் அவர்களுக்குப் பந்து கிட்டவில்லை என்றும் புகார் செய்தனர். குழந்தைகள் சொன்னதை விளதீமிர் இலீச் மிகுந்த அக்கறையுடன் கேட்டார். கந்தல் துணிப் பந்தில் விளையாடுவது சரியில்லை என்று ஒத்துக் கொண்டு நிலவும் சூழலைக் குழந்தைகளுக்கு விளக்கினார். சோவியத் நாட்டில் எத்தகைய கஷ்டங்கள் இருக்கின்றன என்றும் எத்தனையோ பொருள்கள் நமக்குப் போதவில்லை என்றும் எடுத்துச் சொன்னார்.

பள்ளி மாணவர்களுக்காக ஏதும் செய்வது கஷ்டமாக இருந்தது. சில நாட்கள் கழித்து மாணவர்களுக்கு லெனின் தரும் பரிசு என்று, உண்மையான பந்து ஒன்றைப் பள்ளிக்குக் கொண்டு வந்த போது குழந்தைகள் அடைந்த மகிழ்ச்சியைப் புரிந்து கொள்வது சுலபமே. இப்படிப் பட்டவர் லெனின்.

பிராக் மாநாட்டில்

செமஷ்கோ

1912 ஜனவரி மாதம் பிராக் நகரில் நடந்த மாநாடு நமது கட்சியின் வளர்ச்சியில் ஒரு திரும்பு முனை என்று நியாயமாகவே கருதப்படுகிறது. இதிலிருந்து போல்ஷி விக்குகளின் அமைப்புகள் மென்ஷிவிக்குகளுடன் கொண் டிருந்த தொடர்புகளை இறுதியாக அறுத்துக் கொண்டு ஒரே போல்ஷிவிக் கட்சியாக ஒன்றுசேர்ந்தன.

போல்ஷிவிக்குகளுக்கு இந்த வெற்றி எளிதில் கிட்ட வில்லை. சட்டவிரோதமாயிருந்த பாட்டாளி வர்க்கக் கட்சியை ஒழித்து விட்டு, (''கலைத்துவிட்டு'') அதற்குப் பதிலாக சட்ட பூர்வமான, அதாவது அன்றைய ஜார் மன்னரின் அதிகாரி ஸ்தலீபினுக்கு உகந்ததான கட்சியை நிறுவ முயன்ற மென்ஷிவிக்-கலைப்புவாதிகளை எதிர்த்துப் போராட வேண்டியதாயிருந்தது. இடதுசாரிக் கலைப்பு வாதிகளான வாபஸ்வாதிகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. சட்டவிரோதக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தை ஒழுங்கமைப்பதற்காக சட்ட பூர்வ வாய்ப்புகளை (அரசாங்க டூமா, கூட்டுறவு அமைப்பு கள், தொழிற்சங்கங்கள் போன்றவை) பயன்படுத்த வேண் டிய அவசியத்தை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இறுதி யாக, கலைப்புவாதிகளைப் போலவே நடந்து கொண்ட, போல்ஷிவிக்குகள் மத்தியிலிருந்த சமரசவாதிகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. தொழிலாளர் இயக்கத்துக்குள் இருந்த விரோதப் போக்குகளை எல்லாம் எதிர்த்து நடந்த இப்போராட்டம், போல்ஷிவிக்குகளுக்கு எதிராக ஜார் அரசாங்கம் நடத்திய கொடிய அடக்கு

முறைகள், வேவு வேலைகள், வேட்டையாடல்கள் ஆகிய வற்றின் மத்தியில் நடந்தது.

பிராக் நகர் மாநாடு மறைமுக வேலையின் எல்லா விதிகளையும் கடைப்பிடித்தவாறு ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது ஆஸ்திரோ-ஹங்கேரிய முடியரசிற்குள் இருந்த செக் பகுதியின் சந்தடியற்ற, அமைதியான பிராக் நகரம் மாநாட்டுக்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பாரிஸ் நகரில் அப்போது ஒற்றர்கள் மொய்த்திருந்ததால் அங்கு மாநாடு நடத்துவது ஆபத்தாயிருந்தது.

மாநாட்டு ஏற்பாடுகளின் எல்லா விவரங்களையும் மிகப் பெரும் கவனத்துடன் விளதீமிர் இலீச் சிந்தித்திருந்தார். மாநாட்டின் வெற்றியில்தான் கட்சி ஒன்றுபடுவது அடங்கி யிருந்தது என்பதால் அவர் பதட்டப்பட்டார்.

மாநாட்டின் வெற்றியைத் தீர்மானித்தவை வெளி நாட்டில் இருந்த குழுக்கள் அல்ல, ருஷ்யாவில் வேலை செய்து வந்த அமைப்புகளே. இந்த அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகள் முழுமையான எண்ணிக்கையில் வர வேண் டும் என்பது குறித்தே மிக அதிகம் கவலைப்பட்டார் விளதீமிர் இலீச். ருஷ்யாவிலிருந்து வந்த ஒவ்வொரு செய்தியையும் கண்டு அவர் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

ருஷ்யாவில் பிராக் மாநாட்டுக்கான தயாரிப்பு வேலை களில் செர்கோ அர்ஜோநிகித்சே மிகப் பெரும் பங்காற் றினர். மாநாட்டைக் கூட்டுவதற்கான ருஷ்ய அமைப்புக் கமிஷன் இவர் தலைமையின் கீழ்தான் வேலை செய்து வந்தது.

பாரிசுக்கு அருகிலிருந்த லோன்ஜுமோவில் நடந்த கட்சிப் பள்ளியின் மூலம் வெளிநாட்டில் வாழ்ந்த போல் ஷிவிக்குகளான நாங்கள் செர்கோவை நன்கு அறிந்திருந் தோம். பள்ளியின் அன்றைய மாணவர்களிடையில் ஒல்லி யான, சீரான உடற்கட்டு கொண்டு அழகாகத் திகழ்ந்த ஜார்ஜியரான செர்கோ மிகவும் எடுப்பாகத் தெரிந்தார். அறிவுத் தாகமும் மிக ஆழ்ந்த காரியப் பற்றும் அவரைத் தனித்துக் காட்டின. உலகம் முழுதும் பிரபலமான பாரிஸ் நகரை முதன் முதல் பார்த்த இப்பள்ளியின் மாணவர்கள்

பாடத்திற்குப் பதிலாக சுவாரஸ்யமான உல்லாசப் பயணம் மேற்கொள்ள விரும்புவது உண்டு. பாட நேரத்தை இவ்வாறு பயன்படுத்துவதற்கு செர்கோ எப்போதும் தீவிர எதிர்ப்புக் காட்டுவார். ''பாடம் படிக்கத்தான் கட்சி நம்மை அனுப்பியிருக்கிறதே தவிர, பொழுது போக்குவதற்கு அல்ல'' என்பார் அவர். ஆசிரியரின் உரையைக் கவனமாகக் கேட்பார் செர்கோ, மாணவர்களுக்குப் புரியாமலிருந்த பிரச்னைகள் பற்றிய விவாதத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்வார். அவர் பள்ளிக் கல்வியை முடிக்கவில்லை. மாநாட்டுக்கான தயாரிப்பு வேலைகளுக்காக ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்புகளை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார் என்பது தெரிந்ததே. செய்யப்பட்ட வேலை பற்றி அவர் தந்த அறிக்கையை மாநாடு உயர்வாக மதிப்பீடு செய்தது.

பிராக் மாநாடு கூட்டுவதில் இருந்த கஷ்டங்கள் மிகப் பெரியவை. அரசியல் போலீசிடம் மாட்டிக் கொள்ளாமலிருப்பதற்காகப் பிரதிநிதிகள் மிகப்பெரும் எச்சரிக்கையுடன் ருஷ்யாவிலிருந்து பிராக் நகருக்குச் சென்றார்கள். இவர்களில் சிலர் வழியில் கைது செய்யப்பட்டனர்....

நாங்கள் எல்லோரும் ஒன்றாகப் போகக் கூடாது என்று திட்டவட்டமாகத் தடை விதித்திருந்தார் விளதீமிர் இலீச், ரயிலின் வேறு வேறு பெட்டிகளிலோ, பெட்டிகளிலுள்ள வேறு வேறு சிற்றறைகளிலோ நாங்கள் பயணம் செய்தோம். பிராகில் எங்களை செக்காரர்கள் வரவேற்று, தொழிலாளர்களின் சொந்த வீடுகளில் தங்க வைத்தனர். நாங்கள் ஒன்றாகக் கூடுவதற்கும் மாநாட்டுக் கூட்டங்கள் நடப்பதற்கும் மக்கள் இல்லம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. செக் தொழிலாளர்கள் தமது தேவைகளைப் பற்றிச் சுதந்திரமாக விவாதித்து வந்த, அல்லது ஒரு குவளை பீர் மதுவுடன் பத்திரிகை படித்தபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மக்கள் இல்லத்தின் பெரிய ஹாலுக்குள் நாங்கள் எத்தகைய பொறுமையுடன் நுழைந்தோம் என்பது எனக்கு நன்கு நினைவிருக்கிறது. ருஷ்யாவில் நாங்கள்

நடத்திய சட்டவிரோத வாழ்க்கையுடன் ஒப்பிடும்போது செக் தொழிலாளர்களின் வாழ்க்கை சொர்க்கமாகத் தோன்றியது.

விளதீமிர் இலீச் இட்டிருந்த ஆணையின்படி, விரும்பத் தகாத ஆசாமிகளின் கண்களில் படாமலிருப்பதற்காக, நாங்கள் இந்தச் ''சொர்க்கத்தில்'' தங்காமல் மாநாட்டுக் கூட்டம் நடந்த மாடிக்குப் படி வழியாக ஏறிச் சென்றோம். இது மூன்று சன்னல்களுடன் கூடிய சிறிய அறை என்று நினைவிருக்கிறது. இச்சன்னல்களின் வழியாக ஓடு வேய்ந்த வீடுகளைக் கொண்ட பழைமைச் சிறப்பு வாய்ந்த நகரத்தின் அழகிய காட்சி தெரிந்தது. ''தலைமைக் குழுவுக்கான'' நீண்ட சிறு மேசை அறையின் ஒரு மூலையில் இருந்தது. பக்கங்களில் பெஞ்சிகள் இருந்தன, தலைமைக் குழுவிற்கு முன்னால் மாநாட்டு உறுப்பினர்களுக்காக பெஞ்சிகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. மாநாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட, பாரிசில் வெளியான சட்ட விரோதப் புத்தகங்கள் மூட்டைகளாகக் கட்டப்பட்டுப் பக்கங்களிலிருந்த பெஞ்சிகளில் வைக்கப்பட்டிருந்தன.

தொழிலாளர்களின் இன்ஷூரன்ஸ் பற்றிய பிரச்னை குறித்த அறிக்கை என்னால் சமர்ப்பிக்கப்பட்டது. பாரிசிலேயே நான் வரைந்த தீர்மானத்தின் நகலை லெனின் கவனமாகச் சரிபார்த்திருந்தார். நகல் தீர்மானம் சிறுசிறு சொல்லமைப்புத் திருத்தங்களுடன் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அப்போதைய நிலைமையையும் கட்சியின் கடமைகளையும் பற்றி அறிக்கை சமர்ப்பித்தார் லெனின். மாநாட்டின் வடிவத்தையும், கட்சியின் அமைப்பையும் கடமைகளையும் நிர்ணயிக்க வேண்டியிருந்த அடிப்படைப் பிரச்சினை இதுவே ஆகும். இது சிறப்பு வாய்ந்த அறிக்கை என்று சொல்லவும் வேண்டுமா? விளதீமிர் இலீச் கருத்து வேற்றுமைகளை மூடிமறைக்காமல் வழக்கம் போலவே மிக வன்மையாகப் புட்டுப்புட்டுக் காட்டியிருந்த போதிலும், அவரது வாதங்களை ஊசலாட்டக்காரர்கள் கூட ஏற்காதிருக்க முடிய

வில்லை. அவ்வளவு சக்தி வாய்ந்ததாகவும் மறுத்தற்கரிய தாகவும் இருந்தது அறிக்கை.

மாநாடு முடிந்தபின்பு கோர்க்கிக்கு லெனின் எழுதினார்:

''அன்பு மிக்க அ. மா.!

''விரைவில் உங்களுக்கு மாநாட்டின் முடிவுகளை அனுப்பி வைக்கிறோம். கலைப்புவாதக் கழிசடைகளையும் மீறி கட்சியையும் அதன் மத்திய கமிட்டியையும் உயிர்ப்பிக்க முடிந்திருக்கிறது. எங்களுடன் சேர்ந்து நீங்களும் களிப்படைவீர்கள் என்று நம்புகிறேன்.''*

மென்ஷிவிக்குகள் விரட்டப்பட்டு, போல்ஷிவிக்குகள் சுயேச்சையான கட்சியாக உருவான பின்பு போல்ஷிவிக்குகளின் கட்சி உறுதியடைந்து வலுப்பெற்றது.

---

* V. I. Lenin, *Collected Works*, "To Maxim Gorky", Vol. 35, p. 23.—(ப-ர்.)

மூதறிஞரான எங்கள் தலைவர்

பெத்ரோவ்ஸ்கி

போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி கட்சி ஊழியர்களுடன் கிராகவில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் நான்காவது அரசாங்க டூமாப் பிரதிநிதிகளான மற்ற போல்ஷிவிக்குகளோடு நான் கலந்து கொண்ட போது 1912ம் ஆண்டு இறுதியில் லெனினைச் சந்தித்தேன் (இரகசியம் கடைப்பிடிக்கும் பொருட்டு இக்கூட்டம் ''பிப்ரவரிக் கூட்டம்'' என்று அழைக்கப்பட்டது). கூட்டத்தின் தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

விளதீமிர் இலீச்சின் அடக்கத்தையும் எளிமையையும் கண்டு தொழிலாளர்-பிரதிநிதிகளான நாங்கள் ஆச்சரியப் பட்டோம். அவர் வீட்டில்தான் கூட்டம் நடந்தது. அங்கேயே நாங்கள் மதிய உணவு அருந்தினோம் (நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு குரூப்ஸ்கயா உணவு தயாரித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் அவருக்கு உதவினர்). நீண்ட காலம் லெனின் வெளிநாட்டில் வாழ்ந்தபோதிலும், ருஷ்யத் தொழிலாளர்களின் மனநிலையை எவ்வளவு நன்ருக அறிந்திருந்தார் என்பதும், தொழிலாளர் இயக்கத்துடன் சம்பந்தமுடைய எல்லாப் பிரச்னைகளையும் எவ்வளவு துருவிப் பார்த்தார் என்பதும், சில தனி நிகழ்ச்சிகளை எவ்வளவு ஆழமாகப் பொதுமைப்படுத்தினர், புரட்சியாளர்-நடைமுறையாளர்களான எங்களுக்கும் இதனை எப்படிக் கற்றுக் கொடுத்தார் என்பதும் எங்களை வியப்புக்குள்ளாக்கின.

இதோ எடுத்துக்காட்டான ஓர் உதாரணம். கூட்டம் முடிந்த பின்பு டூமாப் பிரதிநிதிகளுடன் விளதீமிர் இலீச்

உரையாடினர். அவரவர் தேர்தல் தொகுதிகளில் எங்ஙனம் வேலை நடந்து வருகிறது என்று ஒவ்வொருவரிடமும் லெனின் கேட்டார். என்னுடன் உரையாடுகையில், 1897—1900 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 1912ல் தெற்குப் பகுதியில் தொழிலாளர் இயக்கம் எந்த நிலையில் இருந்து வருகிறது என்பது பற்றி அக்கறை காட்டினர். அப்போது தொழிற்சாலைகளில் உணர்வு பெற்ற தொழிலாளர்கள் எங்காவது ஒருவர்தான் இருப்பர் என்றும், இப்போதோ ஒவ்வொரு தொழிற்சாலையிலும் டஜன் கணக்கானோர், சில சமயங்களில் நூற்றுக் கணக்கானோர் இருக்கின்றனர் என்றும் நான் சொன்னேன்.

''பிற்போக்குக் காலம் முடிந்த பின்பு, இப்போது ஜனநாயகக் குடியரசு வேண்டும் என்ற கோரிக்கையைத் தொழிலாளர்கள் எப்படி அணுகுகிருர்கள்? ஒருவேளை கூச்சப்படுகிருர்களா, அச்சப்படுகிருர்களா, தயக்கம் கொள்கிருர்களா?'' என்று கேட்டார் லெனின்.

நான் அதிர்ச்சி அடைந்தேன். இந்த விஷயங்கள் எல்லாம் லெனினுக்கு எப்படித் தெரிந்தன? அவர் சொல்வது உண்மையே என்று நான் கூறினேன். உண்மையிலேயே, தொழிலாளர் கூட்டங்கள் சிலவற்றில் நான் உரை நிகழ்த்துகையில், ''ஜனநாயகக் குடியரசுக்காகப் போராட வேண்டும்'' என்று நான் கூறிய போது தொழிலாளர்கள் ஏதோ அச்சம் கொண்டனர். இது பிற்போக்கும் அடக்கு முறைகளும் கோலோச்சி வந்த காலத்தின் விளைவு,' தொழிலாளர்களுக்கு அச்சத்தையும் தயக்கத்தையும் ஊட்டி வந்த மென்ஷிவிக்குகளின் சீர்குலைவு வேலையின் விளைவு என்று லெனின் விளக்கினர்.

பிராவ்தா (''உண்மை'') பத்திரிகை எவ்வளவு பரவியிருக்கிறது என்பது பற்றி பின்னர் நான் லெனினுக்குத் தகவல் தந்தேன். ''பிராவ்தா பக்கங்களுக்கு இடையில் தனேட்ஸ்கி ஷாஹ்தேர் (''தனேட்ஸ்க் சுரங்கத் தொழிலாளி''), யூரல்ஸ்கி ரபோச்சி (''யூரல் தொழிலாளி'') என்ற தலைப்புகளில் துண்டுப் பிரசுரங்கள் வைத்தால் என்ன? என்று கேட்டார் லெனின்.

போல்ஷிவிக் கட்சியை வழிநடத்தி வந்த லெனின், முதல் உலகப் போர் நெருங்கி வருவதையும், பாட்டாளி வர்க்கப் புரட்சி தவிர்க்கவியலாதது என்பதையும் தெள்ளத் தெளிவாக முன்கண்டார். இதற்குச் சான்று பின்வரும் சம்பவங்கள்:

இது 1914 மே—ஜூனில் நடந்தது. இரண்டாவது அகிலத்தின் தலைவர் வண்டர்வேல்டே பீட்டர்ஸ்பர்குக்கு வந்தார். தொழிலாளி வர்க்கத்திற்குள் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டியது பற்றிப் பேசிக் கொண்டு, போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் இடையிலுள்ள பிளவை நீக்க முயன்றபடி, ருஷ்யப் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தை மென்ஷிவிக்குகளுக்குக் கீழ்ப்படியச் செய்ய அவர் விரும்பினார்.

பிராவ்தாவுடன் கூடவே நான்காவது அரசாங்க டூமாவிலிருந்த போல்ஷிவிக் பிரிவும் போல்ஷிவிக் கட்சியின் சட்டபூர்வ மையமாக இருந்தது. தொழிலாளர் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட போல்ஷிவிக் பிரதிநிதிகள் ''அறுவரைத்'' தவிர டூமாவில் குட்டி முதலாளித்துவ வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு மென்ஷிவிக் பிரதிநிதிகள் இருந்தனர். ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையோர் எந்தக் கட்சியின் பிரிவைப் பின்பற்றுகின்றனர் என்பதை ஆராய்வது தமது வேலை என்று வண்டர்வேல்டே அறிவித்தார். உண்மையிலோ போல்ஷிவிக் பிரதிநிதிகளை மென்ஷிவிக் பிரதிநிதிகளுடன் டூமாவில் ஒன்றுசேர்ப்பதற்கே அவர் முயன்றார். ஏகாதிபத்தியப் போர் மூண்டால் ஒன்றுசேர்க்கப்பட்ட சமூக-ஜனநாயகப் பிரிவு ஏகாதிபத்தியப் போருக்கும், போர்க் கடன்களுக்கும் ஆதரவாக டூமாவில் வாக்களிக்குமாறு செய்ய முயன்றார்.

இரண்டாவது அகிலத்தின் இந்த அரசியல் போக்கை லெனின் முன்கண்டார். வெளிநாட்டிலிருந்தபடி நான்காவது அரசாங்க டூமாவிலிருந்த போல்ஷிவிக் பிரிவை அவர் வழிநடத்தினார். வண்டர்வேல்டே பீட்டர்ஸ்பர்குக்கு வருவதை அறிந்த லெனின் அவரை வரவேற்கும் படியும், ருஷ்யா முழுதும் தொழிலாளி வர்க்கம் யாருக்குப் பின்னால்

செல்லுகிறது என்று அவருக்குக் காட்டும்படியும் போல்ஷிவிக் பிரதிநிதிகளான எங்களுக்கு ஆலோசனை சொன்னார். பிராவ்தா பத்திரிகை அலுவலகத்துக்கு வண்டர்வேல்டேயை அழைத்துச் செல்வதற்கு நான் பணிக்கப்பட்டேன். இங்கு இரண்டாவது அகிலத்துத் தலைவருக்கு முன்னால் முதன்மையாக போல்ஷிவிக் பிரதிநிதிகளே பேசினர். ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தின் நிலைமை பற்றிய உண்மையான சித்திரத்தை அவர்கள் தீட்டினர். பிராவ்தா அலுவலகத்திற்குத் தொழிற்சங்கங்களின் தலைவர்களும் செயலாளர்களும் வந்து, தொழிற்சங்கங்களில் இருக்கும் நிலைமை, அவற்றின் உறுப்பினர்களது எண்ணிக்கை, வசதிகள் போன்ற விஷயங்களை வண்டர்வேல்டேக்கு எடுத்துச் சொன்னார்கள். பிராவ்தா—அதாவது போல்ஷிவிக்குகள்—மேற்கொண்டுள்ள நிலையையே தொழிலாளர் திரளும் தொழிற்சங்கங்களும் ஆதரிக்கின்றன என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சொன்னார்கள்.

அரசாங்க டூமாவின் போல்ஷிவிக் உறுப்பினர்களும் மென்ஷிவிக் உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து நடத்திய கூட்டத்தில், பிராவ்தாவில் முன்வைக்கப்படுகிற கோட்பாடுகளின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தை ஒன்றுபடுத்த வேண்டும் என்று நாங்கள் சொன்னோம். மென்ஷிவிக்குகளுடன் நாங்கள் கொண்டுள்ள கோட்பாடு பூர்வமான கருத்து வேறுபாடுகள் அவர்களுடன் நாங்கள் ஒன்றுபடுகிற வாய்ப்பை நீக்குகின்றன என்று நாங்கள் சுட்டிக் காட்டினோம். இந்தக் கூட்டத்திற்குப் பின்பு தொழிற்சங்க அலுவலகங்கள் சிலவற்றுக்கு வண்டர்வேல்டே விஜயம் செய்தார். ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் மீது போல்ஷிவிக்குகளே மிக அதிகமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்று மெய்விவரங்களின் செல்வாக்கின் காரணமாக, அவர் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. எதுவும் கிட்டாமல் வண்டர்வேல்டே திரும்பிப் போனார்.

வியென்னாவில் நடத்தலாம் என்று பிரேரேபிக்கப்பட்ட இரண்டாவது அகிலத்தின் காங்கிரசுக்குச் செல்ல வேண்டிய பிரதிநிதிகளுக்கான தேர்தல், போல்ஷிவிக்குகளின்

பின்னுலேயே தொழிலாளர்கள் சென்ருர்கள் என்பதை எடுத்துக் காட்டியது. காங்கிரசுக்கான பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மை "பிராவ்தாகாரர்களுக்கே" கிட்டிற்று. மென்ஷிவிக்குகளான பிளெஹானவ்வாதிகளுக்கு ஓர் இடம் கூடக் கிட்டவில்லே. பிளெஹானவுக்கு மட்டுமாவது ஓர் இடம் கொடுக்கும்படி போல்ஷிவிக்குகளிடம் அவர்கள் கேட்டார்கள். "போல்ஷிவிக் கொள்கைகளே பிளெஹானவ் ஆதரிப்பார் என்ருல் ஓர் இடம் தருகிருேம்" என்று நாங்கள் பதிலிறுத்தோம். கட்சிப் பணிகளின் பல்வேறு முக்கியப் பிரச்னேகளுக்கான தீர்வுகள் காணவும் வண்டர்வேல்டே பீட்டர்ஸ்பர்க் வந்து சென்றது பற்றிய தகவல் தரவும் வெளிநாட்டிலிருந்த லெனினேப் பார்ப்பதற்காகச் சென்று வரும்படி பீட்டர்ஸ்பர்க் கமிட்டி உறுப்பினர்களும் போல்ஷிவிக் டூமா உறுப்பினர்களும் என்னேப் பணித்தனர். தொழிற்சங்கங்கள், தொழிலாளர் திரளின் மற்ற நிறுவனங்கள் ஆகியவை மேற்கொண்டுள்ள நிலே பற்றிய தகவல்களே நான் லெனினுக்கு எடுத்துச் சென்றேன். அப்போது லெனின் பரோனினில் வாழ்ந்து வந்தார். ஒரு விவசாயியின் சிறு வீட்டில் தங்கியிருந்தார். இந்த வீட்டிலே எங்கள் எல்லா ஆலோசனேக் கூட்டங்களும் நடந்தன.

வண்டர்வேல்டேயை எப்படி வரவேற்ருேம் என்று லெனினுக்குச் சொன்னேன். வண்டர்வேல்டே விஜயத்தையொட்டி நாங்கள் செய்ததை எல்லாம் விளதீமிர் இலீச் அங்கீகரித்தார். சரியான நேரத்தில் நான் வந்திருப்பதாகச் சொன்ஞர். இரண்டாவது அகிலத்தின் தலேமை கூட்டிய மாநாடு பிரஸ்ஸல்சில் அப்போது நடந்து வந்தது. போல்ஷிவிக்குகள் மென்ஷிவிக்குகளுடன் ஒன்றுசேருவது பற்றிய பிரச்னே அங்கு விவாதிக்கப்பட்டது. லெனின் பிரஸ்ஸல்சிலேயே இருப்பதாகவும் கூட்டத்துக்கு வர அவர் விரும்பவில்லே என்றும் மென்ஷிவிக்குகள் ஒரு வதந்தியைப் பரப்பிக் கொண்டிருந்தனர்.

1914 ஜூலே 16—18ல் நடந்த பிரஸ்ஸல்ஸ் மாநாட்டுக்கு ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின்

மத்தியக் கமிட்டியும் (போல்ஷிவிக்குகள்), நிறுவனக் கமிட்டியும் (மென்ஷிவிக்குகள்), பிளெஹானவின் ''யெதீன்ஸ்த்வோ'' (''ஒற்றுமைக்'') குழுவும் பிறவும் கலந்து கொண்டன. போல்ஷிவிக் கட்சி மத்தியக் கமிட்டியின் சார்பில் விளதீமிர்ஸ்கி, இனெசா அர்மாந்த், பபோவ் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இரண்டாம் அகிலத்துத் தலைவர்கள் எங்கள் தோழர்களைப் பெரிதும் தீய எண்ணத்துடனேயே அணுகினர். எங்களுக்குப் பிரதிகூலமான சூழல் அங்கு நிலவுவது பற்றி எங்கள் குழு லெனினுக்குத் தெரிவித்தது.

இரண்டாம் அகிலத்துத் தலைவர்கள் போல்ஷிவிக்குகளுக்கும் கலைப்புவாதிகளுக்கும் இடையில் ''சமரசம்'' செய்து வைப்பதாகவும், கட்சிக்குள் ''சமாதானத்தை'' ஏற்படுத்துவதாகவும் சொல்லிக் கொண்டு, கலைப்புவாதிகளின் சமரசவாத அரசியலை விமர்சனம் செய்வதை நிறுத்தும்படி போல்ஷிவிக்குகளிடம் கோரினர்கள். போல்ஷிவிக்குகள் மென்ஷிவிக்குகளுக்குச் சலுகைகள் கொடுக்கவில்லை. இரண்டாம் அகிலத்துச் சந்தர்ப்பவாதிகள் கட்சியின் உள் வாழ்க்கைக்குள் தலையிடுவதற்குச் செய்த முயற்சிகளை அவர்கள் ஒதுக்கித் தள்ளினர். பரோனினிலிருந்து போல்ஷிவிக் குழுவின் வேலையை லெனின் வழிநடத்தினர். ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினது மத்தியக் கமிட்டியின் அறிக்கையையும் மத்தியக் கமிட்டிப் பிரதிநிதிகளுக்கான ஆணைக் குறிப்புகளையும் லெனின் எழுதிக் கொடுத்தார். அறிக்கையை இனெசா அர்மாந்த் மாநாட்டில் வாசித்தார்.

நான் சொன்ன தகவல்களைக் கேட்ட விளதீமிர் இலீச், பீட்டர்ஸ்பர்கிலிருந்து நான் கொண்டு வந்திருந்த தகவல்கள், பத்திரிகைகள் அனைத்தையும் பிரஸ்ஸல்சிலுள்ள எங்கள் பிரதிநிதிக் குழுவின் உதவிக்காக அனுப்பச் சொன்னர். அவ்வாறே செய்யப்பட்டது. சர்வதேச சோஷலிஸ்டுத் தலைமையகத்துக்கு லெனினும் நானும் கையெழுத்திட்டு ஒரு தந்தி அனுப்பினேம். பீட்டர்ஸ்பர்குக்கு வண்டர்வேல்டே வந்து சென்றது பற்றிய தகவல்கள் தபால்

மூலம் அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன என்று தந்தியில் குறிப்பிட்டோம். இத்தந்தியின் நகல் போல்ஷிவிக் பிரதிநிதிக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. நாங்கள் அனுப்பிய தகவல்கள் மாநாட்டில் பெரிய கருத்துப்பதிவை ஏற்படுத்தின. மென்ஷிவிக்குகளின் நோக்கங்களை அம்பலப்படுத்துவதில் இவை பெரும் பங்காற்றின.

பிரஸ்ஸல்ஸ் மாநாட்டை யொட்டி, அப்போதைய சம்பவங்களைப் பற்றியும், போல்ஷிவிக்குகளை மென்ஷிவிக்குகளுடன் ஒன்றிணைப்பதற்கு முடிவெடுத்து அதன் மூலம் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் போல்ஷிவிக்குகள் செலுத்தும் செல்வாக்கை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் இரண்டாம் அகிலத்துத் தலைவர்கள் கடைப்பிடிக்கும் அரசியலைப் பற்றியும் மதிப்பீடு செய்தார் விளதீமிர் இலீச். சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திலுள்ள நிலைமை மாறுவதற்காகவும் தொழிலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் விசுவாசமானவர்கள் சோஷலிச அகிலத்தின் தலைமைக்கு வருவதற்கும் இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டும் என்று லெனின் குறிப்பிட்டார். ருஷ்யப் புரட்சியும் அனைத்துலகப் புரட்சியும் வெற்றி பெறும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் லெனின்.

இந்தக் காலத்தில் ருஷ்யாவில் புரட்சி மின்னல்கள் வெட்டின. ருஷ்யா முழுவதும் தொழிலாளர்களின் வேலை நிறுத்த அலைகள் வீசின. தன்பாசில் பேரளவான வேலை நிறுத்தங்கள் நடந்தன. பீட்டர்ஸ்பர்கில் வேலைநிறுத்த இயக்கம் போலீசுடனும் கசாக்குகளுடனும் நடந்த பகிரங்க மோதல்களாக வெடித்தது. வீபர்க் பகுதியில் தொழிலாளர் வட்டாரத்தில் தடையரண்கள் தோன்றின. புரட்சியலைகள் ஜார் அரசின் அஸ்திவாரத்தை மேலும் மேலும் பலமாக அரித்துக் கொண்டிருந்தன. விரைவில் புரட்சி வெற்றி பெறும் எனும் சிந்தனையை வெளியிட்ட லெனின், போல்ஷிவிக்-பிரதிநிதி ஒவ்வொருவரும் தமது ஸ்தானத்தில் இருக்க வேண்டுமென்பதால், வெளிநாட்டில் சீக்கிரம் வேலையை முடித்துவிட்டு ருஷ்யாவிற்குத் திரும்பும்படி

என்னிடம் கூறினர். சட்ட விரோதப் பிரசுரங்களை ஏராள மாக எடுத்துக் கொண்டு நான் ருஷ்யாவிற்குக் கிளம்பி னேன்.

அக்டோபர் புரட்சி முடிந்த பின்பு, சோவியத் அர சாங்கத்தின் தலைவராக லெனின் இருந்த போது, உலகம் முழுதுமுள்ள கோடிக்கணக்கான உழைப்பாளர்கட்கு அவர் பேர் நன்கு தெரிந்துவிட்ட போதும் அவர் அடக்கமான வராயும், தோழர்களிடம் கனிவானவராயும், மற்ற பணி யாளர்களின் கருத்துக்களை மிகப் பெரும் கவனத்துடன் அணுகுபவராகவும் இருந்தார். கட்சியின் கூட்டுத் தலைமை எனும் கோட்பாட்டை வகுத்துத் தந்த லெனின் தாமும் அதனைக் கடைப்பிடித்தார்.

இதோ லெனினது உருவத்தைத் தெளிவாகத் தீட்டும் ஒரு சித்திரம். 1920 ஏப்ரல் 5ல் ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி யின் போல்ஷிவிக்குகளின் ஒன்பதாவது காங்கிரஸ் பிரதி நிதிகள் லெனினது நெருங்கி வரும் 50ஆவது பிறந்த தினத் தைக் கொண்டாடினர்கள். இரண்டு பேர் பேசி முடித்த பின்பு, இதுவே முற்ற முழுக்கப் போதும் என்றும் கட்சி வேலைகள், சோவியத் கட்டுமான வேலைகள் போன்ற அத் தியாவசியமான பிரச்னைகள் பற்றிப் பேசுமாறும் லெனின் ஆலோசனை சொன்னர். ஆயினும் காங்கிரஸ் பிரதிநிதி கள் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை: அவர்கள் தமது உணர்ச்சிகளை, கனிவு நிறைந்த அன்பை வெளியிட விரும் பினர்கள். அப்போது விளதீமிர் இலீச் அங்கிருந்து போய் விட்டார். இது அவருக்கே இயல்பான ஒரு குணம். தம் மைப் பற்றிய புகழுரைகளை அவர் பொறுத்துக் கொண்ட தில்லை. கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் முறை எனக்கு வந்தது. விளதீமிர் இலீச் என்னைத் தொலைபேசியில் கூப் பிடுகிறர் என்று சொன்னர்கள். காங்கிரசில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று என்னை அவர் கேட்டார். "விள தீமிர் இலீச் லெனினின் 50ஆவது பிறந்த நாள் பற்றிப் பேசப்படுகிறது" என்று நான் பதிலளித்தேன். தலைவர் என்ற முறையில் இத்தகைய உரைகளைத் தடுத்து நிறுத்தும்

படி என்னிடம் அவர் உறுதியாகக் கோரினர். ஆனல் இங்ஙனம் செய்வது சாத்தியமாயிருக்கவில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு அடக்க உணர்வைப் போதித்தார் விளதீமிர் இலீச். நாம் சேவை செய்யும் கட்சியினதும் தொழிலாளி வர்க்கத்தினதும் நலன்களே முதலிடத்தில் இருக்க வேண்டும் என்று போதித்தார்.

புரட்சி மேதை

பிப்ரவரி முதல் அக்டோபர் வரை

கனேட்ஸ்கி

பிப்ரவரி புரட்சி* முழங்கிய போது நான் ஸ்டாக்ஹோமில் (ஸ்வீடன்) இருந்தேன். அப்போது வெளிநாடுகளில் வாழ்ந்த பல கட்சிக்காரர்கள் போல்ஷிவிக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். ருஷ்யாவில் நிகழ்ந்து வந்த சம்பவங்களையெல்லாம் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர் உடையணிந்தோர் ஆகியோர் மத்தியில் எப்படி மேலும் மேலும் அதிகமாகப் புரட்சி அலைகள் வீசிக் கொண்டிருந்தன என்பது கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

நெருங்கி வருகிறது புயல் என்று நாங்கள் உணர்ந்தோம். எனினும் அது இவ்வளவு திடீரென மூண்டு ஜாரிசத்துக்கு இப்படி உலை வைக்கும் என்று ஒருவரும் ஊகிக்கவில்லை. முதல் வேட்டுக்கள் கேட்டன. புரட்சியைப்

---

* *1917ஆம் வருடத்திய பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி—இது ருஷ்யாவில் நடந்த இரண்டாவது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி. இது ஜார் எதேச்சாதிகாரத்தைத் தூக்கியெறிந்து நாட்டில் இரட்டை ஆட்சியை—முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தையும், தொழிலாளர்கள், படைவீரர்கள் ஆகியோரது பிரதிநிதிகளது சோவியத்தையும்—ஏற்படுத்தியது.*

ஜாரிசத்தைத் தூக்கியெறிந்த பிப்ரவரிப் புரட்சி தன் முன்னே இருந்த பணிகளைச் செய்து முடிக்கவில்லை. எனவே புதிய புரட்சி நெருக்கடி தவிர்க்கவியலாததாயிற்று. லெனினால் வழிநடத்தப்பட்ட போல்ஷிவிக் கட்சி, முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை சோஷலிசப் புரட்சியாக மாற்றுவதற்கான போராட்டத்தைத் துவக்கியது.—(ப-ர்.)

பற்றிய முதல் தகவல்களை பிப்ரவரி கொண்டுவந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் வழக்கமாக இருப்பது போல வந்த தகவல்கள் துல்லியமாயின்றியும், தெளிவின்றியும், முன்னுக்குப் பின் முரணாயும் இருந்தன.

உண்மையான அதிகாரம் யாருடைய கையில் இருக்கிறது? மெய்யாகவே நிகோலாய்* இல்லையா? ஜாரின் மந்திரிகளை யார், எப்படிக் கைது செய்தனர்? இடைக்கால அரசாங்கத்துக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கும் இடையில் இருக்கிற பரஸ்பர உறவுகள் என்ன?

பரபரப்புக்காக மட்டும் இந்தக் கேள்விகளில் நாங்கள் அக்கறை கொள்ளவில்லை. 1905ஆம் ஆண்டுப் புரட்சியை நினைவு கூர்ந்த நாங்கள், புதிய புரட்சியின் தலைவிதி எப்படி இருக்குமோ என்று அஞ்சினோம். கட்சி நிறுவனங்கள் தலை மறைவாகி இருந்தன. வெடித்துக் கொண்டிருந்த, மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களை எட்டிப் பிடிக்குமளவுக்கு அவை உறுதி வாய்ந்தவையாய் இருக்கவில்லை. எதையும் தாங்கும் உறுதி வாய்ந்த தலைசிறந்த போல்ஷிவிக்குகள் சில நூறு பேர் சைபீரியாவில் சிறைப் பட்டிருந்தனர், அல்லது கடுங்காவல் தண்டனை பெற்றிருந்தனர். இவர்கள் மெதுவாகத்தான் பீட்டர்ஸ்பர்குக்கும் மற்ற நகரங்களுக்கும் திரும்பி வரத் தொடங்கி இருந்தனர். மேலும் தனது கைகளில் ஆட்சியைப் பற்றிக் கொள்ளவும், உகந்ததொரு தருணத்தில் ஜார் நுகத்தடிக்குப்பதிலாக "மிதவாத", "குடியரசுவாத..." நுகத்தடியைப் பூட்டுவதற்காகவும் முதலாளித்துவம் தனது சக்தியனைத்தையும் பிரயோகிக்கும் என்று திட்டவட்டமாகத் தெரிந்தது.

ஸ்காண்டிநேவியாவில் இருந்த போல்ஷிவிக்குகள் "இனி என்ன செய்வது?" என்பது பற்றி காரசாரமாக விவாதித்தார்கள். எல்லோரும் உடனடியாக ருஷ்யாவிற்குச் செல்வது என்றும், ஸ்விட்சர்லாந்தில் இருந்த விளதீமிர் இலீச்சுடன் "தொடர்பு கொள்வதற்காக" நான்

---

* இங்கு குறிக்கப்படுபவர் ருஷ்யாவின் கடைசிப் பேரரசர் இரண்டாம் நிகோலாய்.—(ப-ர்.)

அங்கேயே தங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. நாங்கள் விளதீமிர் இலீச்சுக்கு விவரமான தந்தி கொடுத்தோம். இருக்கிற நிலைமை பற்றி எங்களுடைய ஆய்வுரையைத் தந்து, அவரது யோசனையைச் சொல்லும்படிக் கேட்டு, அவர் ருஷ்யாவிற்கு உடனடியாகத் திரும்பிப் போக வேண்டும் என்றும், குறைந்த பட்சம் அவர் பின்லாந்திலாவது தற்காலிகமாக வசிக்கலாம் என்றும் நாங்கள் கருதுவதாகத் தந்தியை முடித்திருந்தோம்.

எங்கள் தந்தி மிகவும் குழந்தைத் தனமாக இருந்தது. எங்களது ''ஆலோசனைகள்'' அனுவசியமாக இருந்தன. ருஷ்யாவிற்குச் செல்வது பற்றிய பிரச்னை லெனினுக்கும் வெகுவாகக் கிளர்ச்சியூட்டி இருந்தது. ஆனுல் எப்படிப் பயணம் செய்வது என்பதே பிரதானமான பிரச்னையாக இருந்தது. வெளிநாடுகளில் இருந்தவர்கள் அனைவரையும் போல விளதீமிர் இலீச்சும் இங்கிலாந்து வழியாகச் செல்ல வேண்டும் என்று முதலில் கருதப்பட்டது. ஏனெனில், அப்போது பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. அரசியல் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருந்தன, வெளிநாட்டில் வாழ்ந்தவர்கள் சுதந்திரமாக ருஷ்யாவுக்கு வந்து கொண்டிருந்தனர், கடுங்காவல் தண்டனை பெற்றிருந்தவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்....

தெளிவானதாகப் பலருக்கும் தோன்றிய விஷயம் விளதீமிர் இலீச்சை எல்லா நேரங்களிலும் திருப்திப் படுத்தவில்லை. எங்கள் தந்திக்கும் பெத்ரோகிராதிலிருந்து தோழர்கள் அனுப்பியிருந்த இது போன்ற தந்திகளுக்கும் பதிலாக ஜூரிச்சிலிருந்து எனக்கு, ஸ்டாக்ஹோமுக்கு மார்ச்சு 30ல் பதில் தந்தி அனுப்பியிருந்தார் விளதீமிர் இலீச்:

''இங்கிலாந்து என்னை ஒருபோதும் ருஷ்யா செல்ல விடாது, தன் எல்லைக்குள் காவலில்தான் வைக்கும். மில்யுக்கோவ்* மோசம் செய்வார். யாரையாவது பெத்ரோ

---

* **மில்யுக்கோவ்** *(1859—1943)—1917*ல் இடைக்கால முதலாளித்துவ அரசாங்கத்தில் வெளி விவகார மந்திரி.

கிராதுக்கு அனுப்புங்கள். காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெர்மானியர்களுக்கு மாற்ருகப் பரிமாற்றம் செய்து கொள்ளத் தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்தின் மூலம் முயலுங்கள். இதுதான் ஒரே நம்பிக்கை. தந்தி கொடுங்கள். உல்யானவ்."

இந்தத் தந்தியுடன் கூடவே விளதிமிர் இலீச் எனக்கு ஒரு விவரமான கடிதமும் எழுதியிருந்தார். இக்கடிதம் மாபெரும் உலகத் தலைவரின் மேதையையும் கூரிய மதியையும் எடுத்துக் காட்டும் வரலாற்று ஆவணமாக விளங்குகிறது.

அனுப்பப்பட்டுள்ள தந்தி பற்றிச் சொல்லிவிட்டு அவர் எழுதுகிருர்:

"ஆங்கிலோ-பிரெஞ்சு ஏகாதிபத்திய மூலதனத்தின் எடுபிடியாளும் ருஷ்ய ஏகாதிபத்தியவாதியுமான மில்யுக்கோவ் (குழுவினர்) சர்வதேசியவாதிகள் ருஷ்யாவிற்குத் திரும்புவதைத் தடுப்பதற்காக எதையும், ஏமாற்று, துரோகம், எதையும், செய்யத் தயாராக இருப்பார்கள். மில்யுக்கோவ், கேரென்ஸ்கி* (இவர் வெறும் உளறுவாயர், எதார்த்தமாக ஆற்றும் பங்கின் நோக்கில் ருஷ்ய ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் ஏஜெண்டு) ஆகியோரின் மீது இவ்விஷயத்தில் வைக்கப்படும் மிகச் சிறு நம்பிக்கையும் தொழிலாளர் இயக்கத்துக்கும் நமது கட்சிக்கும் பெருநாசத்தை விளைவிக்கும். சர்வதேசியத்துக்குப் புரிகிற துரோகமாகக் கூட ஆகிவிடும்.... இந்த நேரத்தில் இங்கு உட்கார்ந்திருப்பது எங்கள் அனைவருக்கும் எத்தகைய சித்திரவதையாக இருக்கிறது என்று நீங்களே நினைத்துப் பாருங்கள்."**

ருஷ்ய முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் ஒரு தலைவர்.—(ப-ர்.)

* கேரென்ஸ்கி (1881—1970) — முதலாளித்துவ அரசாங்கத்தின் தலைவர். 1919ல் அவர் ருஷ்யாவை விட்டு வெறியேறி வெளிநாடு சென்ருர். தீவிரமான சோவியத்-எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.—(ப-ர்.)

** V. I. Lenin, *Collected Works*, "To Jakub Hanecki", Vol. 35, p. 308.—(ப-ர்.)

முதல் உலகப் போர் தொடங்கிய நாளிலிருந்தே அது ஓர் ஏகாதிபத்தியப் போர் என்று நிரூபித்த லெனின், போரில் ஈடுபட்ட நாடுகளில் இருந்த, இது ''பாதுகாப்புப்'' போரே என்று சொல்லிக் கொண்டிருந்த புரட்டர்களை ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி வந்த லெனின், கடிதத்தில் மேலும் எழுதுகிறார்:

''கேரென்ஸ்கியின் நேரடி உதவியுடனும், த்செயித்சேயின்* மன்னிக்கத்தகாத (மென்மையாகச் சொல்வதென்றால்) ஊசலாட்டங்களின் பயனாகவும் அரசாங்கம் ஏகாதிபத்தியப் போரைப் 'பாதுகாப்புப்' போர் என்று சொல்லித் தொழிலாளர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது, வெற்றிகரமாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளின் இறுதிச் செய்திகள் மேலும் மேலும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. 1917, மார்ச்சு 30ந் தேதியிட்ட, எஸ். பி. பி. செய்தி நிலையத்தின் தந்திச் செய்திப்படி, தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்தாலும்—அதாவது, பொதுவாக நம்பத்தகாததான இந்த நிலையத்தை நம்புவதானால்—ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தக் கோஷம் தம்மை ஏமாற்றுவதற்கு த்செயித்சே முழுமையாக இடம் கொடுத்து விட்டாராம், என்ன ஆனாலும், இந்தச் செய்தி உண்மை அல்ல என்றாலும்கூட, இம்மாதிரி ஏமாற்றின் ஆபத்து சந்தேகமின்றி மிகப் பெரிது. இதனுடன் போராடுவதில் கட்சியின் சக்தியனைத்தும் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய ஏமாற்றை ஏற்றுக் கொண்டால் நமது கட்சி என்றென்றைக்குமாகத் தன்னை அவமானப்படுத்திக் கொண்டதாக, அரசியல் ரீதியில் தற்கொலை செய்து கொண்டதாக ஆகும்....''**

---

* த்செயித்சே (1864—1926)—மென்ஷிவிக் கட்சியின் ஒரு தலைவர். 1917ல் சோவியத்துக்களின் மத்தியச் செயற்குழுத் தலைவரானார். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார்.—(ப-ர்.)

** V. I. Lenin, *Collected Works*, "To Jakub Hanecki", Vol. 35, p. 309.—(ப-ர்.)

சோஷலிஸ்டு-தேசபக்தர்களை மிகப் பெரும்பான்மை யாகக் கொண்டிருந்த பெத்ரோகிராத் சோவியத்தின் பல பட்டடை அமைப்பு அவருக்குக் கவலையைத் தந்தது. எனவே கடிதத்தில் நிலைமையைப் பற்றிய ஆய்வையும் துல்லியமான, தீர்மானமான ஆணைகளையும் தருகிறார்:

''தொழிலாளர், படைவீரர்களின் பெத்ரோகிராத் சோவியத்தில் பின்கண்டவர்கள் நிறையப் பேர், அனேக மாக பெரும்பான்மையாகக் கூட இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை: (1) ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் மிக ஆபத்தான ஏஜெண்டும், கூச்சல் வார்த்தைகளையும் வெற்று வாக்குறுதிகளையும் கடலெனப் பொழிந்து ஏகாதிபத்தியவாதத்தைக் கடைப்பிடிப்பவரும், அதாவது ருஷ்யாவின் தரப்பில் கொள்ளையடிக்கும் ஆக்கிரமிப்புப் போருக்கு வக்காலத்து வாங்கி நியாயம் கற்பிப்பவருமான கேரென்ஸ்கியின் ஆதரவாளர்கள்; (2) சோஷலிஸ்டு-தேச பக்தியின் பக்கம் வெட்கமின்றிச் சாய்ந்து காவுத்ஸ்கி வாதத்தின்* கீழ்மையையும் அபத்தத்தையும் பகிர்ந்து கொள்கிற த்செயித்சேயின் ஆதரவாளர்கள். இந்த இரண்டு போக்குகளுடனும் மிகக் கடுமையாக, மிகவும் கோட்பாடு பூர்வமாக, மிக விடாமுயற்சியுடன், மிகவும் ஈவிரக்கமின்றி நமது கட்சி போராடக் கடமைப்பட்டுள்ளது. கேரென்ஸ்கி குழுவினரின் சோஷலிஸ்டு-தேசபக்திகோ, அல்லது த்செயித்சே குழுவினரின் சோஷலிஸ்டு-சாத்துவீகவாதத்துக்கும் காவுத்ஸ்கிவாதத்துக்குமோ சலுகை தருபவரை விட நமது கட்சியிலுள்ள எவருடனும் உடனடியாகப் பிளவு கொள்வதையே சொந்த முறையில் நான் அதிகம் விரும்புகிறேன் என்று அறிவிக்க, பத்திரிகை

---

* காவுத்ஸ்கி *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜன நாயகத்தின் ஒரு தலைவர். துவக்கத்தில் மார்க்சியவாதியாக இருந்து பின்னர் மார்க்சியத்தை விட்டுக் கட்சி மாறினர். போல்ஷிவிக்குகளையும் சோவியத் அரசையும் எதிர்த்தார்.—(ப-ர்).

மூலம் அறிவிக்க, ஒரு விஞடியும் நான் தயங்க மாட்டேன்.''*

ஏகாதிபத்தியப் போர் பற்றியும் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் பற்றியும் அவர் புரிந்த வாதங்களும் இவையே போன்று மிகவும் பிரகாசமானவை. தேசியப் பிரச்னை பற்றிய வேலைத்திட்டம் குறித்தும் தெளிவாக இங்கு பேசப்படுகிறது:

''எப்போது வரை (1) நிலப்பிரபுக்களும், முதலாளிகளும், முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளும் ஆட்சியதிகாரத்தில் இருக்கிறார்களோ, (2) கேரென்ஸ்கியையும் மற்ற சோஷலிஸ்டு-தேசபக்தர்களையும் போன்ற முதலாளித்துவத்தின் நேரடி ஏஜெண்டுகளும் சேவகர்களும் ஆட்சியதிகாரத்தில் இருக்கிறார்களோ; (3) ஆங்கிலோ-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடன் ஜாரிசம் செய்து கொண்ட உடன்பாடுகள் அமுலில் இருக்கின்றனவோ (குச்கோவ்-மில்யுக்கோவின் அரசாங்கம் இந்த உடன்பாடுகளுக்கு விசுவாசமாக இருப்பதாக வெளிநாட்டில்—ருஷ்யாவிலேயே இவ்வாறு செய்ததா என்று தெரியாது—நேரடியாக அறிவித்தது). இவை கொள்ளைக்கார உடன்பாடுகள் கலீத்சியா, அர்மீனியா, கான்ஸ்டான்டிநோபிள் போன்றவற்றை ஆக்கிரமித்துக் கொள்வது பற்றியவை; (4) இந்த உடன்பாடுகள் பிரசுரிக்கப்படவில்லையோ, ரத்து செய்யப்படவில்லையோ; (5) ஆங்கிலோ-பிரெஞ்சு முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசுகளுடன் ருஷ்யா கொண்டுள்ள கூட்டு முற்றிலும் துணிக்கப்படவில்லையோ; (6) ருஷ்யாவில் அரசதிகாரம் ஏகாதிபத்திய முதலாளித்துவத்திடமிருந்து (வெற்று வாக்குறுதிகளும் ''சாத்துவிகவாத'' அறிக்கைகளும், அசட்டுத்தனமான காவுத்ஸ்கி, த்செயித்சே குழுவினர் அவற்றை எவ்வளவுதான் நம்பிய போதிலும், முதலாளித்துவத்தை முதலாளித்துவம் அல்லாததாக மாற்றிவிட மாட்டா) பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்குப்

---

* V. I. Lenin, *Collected Works*, "To Jakub Hanecki", Vol. 35, p.310.—(ப-ர்.)

போகவில்லையோ, அப்போது வரை போர் ருஷ்யாவின் தரப்பில் ஏகாதிபத்தியப் போராக இருப்பது நின்று விடவில்லை, நின்றுவிட முடியவும் செய்யாது. மூலதனத்தின் நலன்களிலிருந்து, ஏகாதிபத்தியக் கொள்கையிலிருந்து, மற்ற நாடுகளைக் கொள்ளையிடுவதிலிருந்து, வார்த்தைகளில் அன்றி, செயலில் வெட்டிக் கொள்ளவும் ருஷ்யர்களால் ஒடுக்கப்படும் மக்களினங்களை முற்றிலும் விடுவிக்கவும் ஆர்மீனியாவிலிருந்தும் கலீத்சியாவிலிருந்தும் படைகளை உடனே வாபஸ் பெறவும் இத்தகைய பிற செயல்களைச் செய்யவும் திறமையை விவசாயிகளின் மிக எளிய பகுதியினரின் ஆதரவைப் பெற்ற பாட்டாளி வர்க்கம் ஒன்று மட்டுமே பெற்றிருக்கிறது; (7) தனது தேசிய முதலாளித்துவத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டுவிட்டால், போரில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளுக்கும் உண்மையான நம்பிக்கையை ஊட்டுவதற்கும், சமாதானம் பற்றி அவர்களுடன் பேச்சு நடத்தத் தொடங்குவதற்கும்... பாட்டாளி வர்க்கம் மட்டுமே திறன் படைத்ததாகும்....''*

சிக்கலான அரசியல் பிரச்னைகளைத் தொழிலாளர்களுக்கு எப்படி விளக்கிச் சொல்வது என்பது பற்றி லெனின் தந்த அறிவுரைகள் நமக்கும் வெளி நாட்டில் உள்ள நம் சகோதரக் கட்சிகளுக்கும் மதிப்பிற்கரியவையாய் இருக்கின்றன:

''தொழிலாளர்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும். குச்கோவ், மில்யுக்கோவ் குழுவினரின் அரசாங்கம் ஏகாதிபத்திய அரசாங்கம் என்று சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் (இப்போதேயா அல்லது தேர்தலைப் பற்றிய பேச்சால் ஆளுவோர் மக்களை ஏமாற்றுமலிருந்தால், போர் முடிந்த பின்பு வரை தேர்தலைத் தள்ளிப் போடாமலிருந்தால் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்த பின்பா என்பதை, நேரத்தைப் பற்றிய பிரச்சினையை இங்கிருந்து முடிவு செய்யக் கூடாது), மூலதனத்திற்கும்

* V. I. Lenin, *Collected Works*, "To Jakub Hanecki", Vol. 35, pp. 310—311.—(ப-ர்.)

ஏகாதிபத்தியப் போருக்கும் எதிரியான பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் எல்லா அரசதிகாரத்தையும் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆரம்பத்தில் வழங்கிவிட வேண்டும். அப்போதுதான் எல்லா அரசர்களையும் எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களையும் வீழ்த்துவதற்கு அறைகூவல் விட அவர்களுக்கு உரிமை இருக்கும்.''*

மேலே சொல்லப்பட்ட கடிதம், அவரது தொலைவிலிருந்து எழுதிய கடிதங்களைப் போல், பெத்ரோகிராதுக்குக் காலந் தாழ்த்தாது என்னுல் அனுப்பி வைக்கப்பட்டது. பாட்டாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு பற்றி லெனின் ஸ்விட்சர்லாந்தில் இருந்த போதே சந்தேகமின்றி இருந்தார். புரட்சியின் ஆரம்ப நாட்களிலேயே வருகின்ற அக்டோபருக்கு வழியைக் கட்சிக்குச் சுட்டிக் காட்டினுர்.

மோதி வரும் அலைகளை அடக்கி விடுவதற்கும் புரட்சியை உண்மையில் ஒழித்துக் கட்டுவதற்கும், புரட்சி தொடங்கியதிலிருந்தே தன்னுலான அனைத்தையும் இடைக்கால அரசாங்கம் செய்து வந்தது. ஆனுல் அது திடுதிப்பென்று, மாட்டிக் கொண்டது. போதுமான அளவுக்குப் பலமற்றிருந்த அரசாங்கம் தனது ஜென்மப் பகைவனை போல்ஷிவிக்குகளின் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கத் துணியவில்லை. பெத்ரோகிராதிலிருந்த நம் தோழர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. ஸ்டாக்ஹோம் வழியாக, என் மூலமாகத் தொடங்கிய தந்தி, கடிதப் போக்குவரத்து அவர்களுக்குத் திருப்தி தரவில்லை. தேவையான அளவு நம்ப முடியாததாக இருந்த இந்த வழியில் எல்லாவற்றையும் பற்றிப் பேச முடியவில்லை. எனவே, ஸ்டாக்ஹோமிலிருந்த எங்களுக்கு நேரடியாகத் தகவல்கள் கொண்டுவந்த தமது போல்ஷிவிக் ''தூதரகத் தொடர்பாளர்'' மூலமாக அவர்கள் லெனினுடன் தொடர்பு கொண்டனர்.

---

* V. I. Lenin, *Collected Works*, "To Jakub Hanecki", Vol. 35 p. 312.—(ப-ர்.)

பிப்ரவரிப் புரட்சியின் முதல் வேட்டுக்கள் பல்வேறு வெளிநாட்டு நகரங்களிலிருந்த ருஷ்ய முதலாளிகளுக்கு அசட்டுத்தனமான குதூகலத்தைத் தந்தன. எங்கு பார்த்தாலும் அவர்கள் களிப்புக் கூத்தாடினர். அளவற்ற விருந்துகளுக்கு ஏற்பாடு செய்தனர். இவற்றில் வெட்டி அரட்டைகளில் ஈடுபட்டனர், ஏராளமான போதைப் பானங்களைப் பருகினர். அரசியல் காரணங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து விட்டு ருஷ்யாவிற்குத் திரும்பியவர்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டிக்கு விருப்புடன் பணம் கொடுத்தனர்.

இத்தகைய கமிட்டி ஸ்டாக்ஹோமிலும் ஏற்படுத்தப் பட்டிருந்தது. எல்லாவிதமான புரட்சிகரக் கட்சிகளும் நிறுவனங்களும் இதில் அங்கம் வகித்தன. என்னுல் இந்தக் கமிட்டியின் மீது அதிக நம்பிக்கை வைக்க முடியவில்லை. அதனிடமிருந்து பல விஷயங்களை நான் மறைக்க வேண்டியதாயிற்று. லெனினது வருகை பற்றிய உத்தேசத் திட்டத்தை நான் மிக மிக ரகசியமாக வைத்திருந்தேன். ஏனெனில் இந்தக் கமிட்டியின் மூலம் மில்யுக்கோவுக்குத் தகவல் தரப்பட்டு விடலாம் என்பதில் எனக்குச் சந்தேகமிருக்கவில்லை. இடைக்கால அரசாங்கம் எல்லாவிடங்களிலும் ஜாரினது பழைய தூதுவர்களையே அமர்த்தியிருந்தது. இவர்களை ஒரு துளியும் நம்ப முடியாமலிருந்தது. ஸ்டாக்ஹோமிலிருந்த கமிட்டியோ தூதுவருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தது....

விளதீமிர் இலீச்சின் வருகை பற்றி என்ன செய்வது? அவரது திட்டத்தை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதல்ல. ஜெர்மனியின் வழியாக விளதீமிர் இலீச் வருவதற்கு ''உதவி செய்யுமாறு'' ''மதிப்புக்குரிய'' இடைக்கால அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது அப்படியொன்றும் எளிதல்ல: மாட்சிமை தங்கிய நேசநாடுகள் இதற்கு என்ன சொல்லும்?

காலம் கடந்து கொண்டிருந்தது. விளதீமிர் இலீச்சோ இன்னும் ஸ்விட்சர்லாந்திலேயே அவதிப்பட்டு வந்தார். ஆமாம், மெய்யாகவே அவதிப்பட்டார். இந்தச் சித்திர

வதைகள் பயணத்துக்கு அவருக்கு ஒரு தனி வழியைச் சொல்லிக் கொடுத்தன.

விளதீமிர் இலீச்சிடமிருந்து திடீரென்று எனக்கு ஒரு தந்தி வந்தது. முக்கியமான கடிதம் ஒன்று எனக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அது வந்து சேர்ந்ததா என்பது பற்றித் தந்தி மூலம் தகவல் கொடுக்கும்படியும் அவர் கோரியிருந்தார். மூன்று நாட்கள் கழித்து ஸ்விட்சர்லாந்திலிருந்து ஒரு புத்தகம் எனக்கு வந்தது. அதன் அட்டைக்குள் இலீச்சின் கடிதத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று நான் ஊகித்தேன். அப்படியே நடந்தது. இலீச்சின் சிறு குறிப்பையும்... அவரது புகைப்படத்தையும் நான் கண்டு பிடித்தேன். குறிப்பில் ஏறத்தாழப் பின்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது: ''இனியும் காத்துக் கொண்டிருக்கக் கூடாது. சட்டபூர்வமாக வருவது பற்றிய நம்பிக்கைகள் அனைத்தும் வீணாகி விட்டன. எது நேரினும் உடனடியாக ருஷ்யாவுக்குப் போய்ச் சேர வேண்டியது அவசியம். அதற்கான ஒரேயொரு திட்டம் பின்கண்டவாறு: என்னைப் போலவே இருக்கிற ஒரு ஸ்வீடன்காரரைக் கண்டுபிடியுங்கள். எனக்கு ஸ்வீடிஷ் மொழி தெரியாது என்பதால் ஸ்வீடிஷ்காரர் செவிடாகவும் ஊமையாகவும் இருக்க வேண்டும். எதற்கும் உங்களுக்கு எனது புகைப்படம் ஒன்று அனுப்பியிருக்கிறேன்.''

குறிப்பைப் படித்த நான் விளதீமிர் இலீச் எப்படி அவதிப்படுகிறார் என்று உணர்ந்தேன். ஆயினும், இந்த அற்புதத் திட்டத்தைக் கண்டதும் இடிச் சிரிப்புச் சிரித்தேன் என்று நான் ஒத்துக்கொள்ள வேண்டும். மனச் சோர்வு மட்டுமே இத்தகைய திட்டத்தை உருவாக்கி இருக்கும்... அது சரி, புகைப்படம் எதற்காக? 1903ஆம் ஆண்டு முதல் விளதீமிர் இலீச்சை எனக்குத் தெரியும். நாங்கள் அடிக்கடி சந்தித்து வந்தோம். போர் தொடங்குவதற்கு முன்பு தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் ஒரே நகரத்தில், கிராகவில் வசித்தோம்... எனினும் வந்து சேர்ந்த புகைப்படத்தை உடனடியாக உபயோகித்தோம். இடதுசாரி ஸ்வீடன் சமூக-ஜனநாயகவாதிகளின் தினசரிப் பத்திரிகை

யான பலிதிகேனில் அது வெளியாயிற்று. அதற்குக் கீழே, ''ருஷ்யப் புரட்சியின் தலைவர்'' என்று வரோவ்ஸ்கியால் ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருந்தது....

இதற்கிடையே ஸ்விட்சர்லாந்தில் வாழ்ந்த ருஷ்யர் களுக்குள் சூடுபறக்கும் விவாதங்கள் நடந்து கொண்டி ருந்தன: ஜெர்மனி வழியாகச் செல்ல முடியுமா? அப்படி யானால் எந்த நிலைமைகளில் செல்வது?

இங்கிலாந்து வழியாகச் செல்வதற்கு இடைக்கால அரசாங்கம் உதவி செய்யும் என்ற நம்பிக்கைகள் எல்லாம் வீணான பின்பு, ஜெர்மானிய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்று ஸ்விட்சர்லாந்தில் தங்கி இருந்த ருஷ்யர்கள் முடிவு செய்தனர். ஸ்விட்சர்லாந்துக் காரரான தோழர் பிளாட்டென் பேச்சுவார்த்தைகளை நடத் தினார். ருஷ்யர்கள் குழு முழுவதாலும் வகுக்கப்பட்ட நிபந் தனைகள் ஜெர்மானிய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நிபந்தனைகள் பின்கண்டவை:

(1) போர் பற்றிய கருத்து வேறுபாடுகள் எவை ஆயினும் ஸ்விட்சர்லாந்து ருஷ்யர்கள் அனைவரும் பயணம் செய்வார்கள்.

(2) ருஷ்யர்கள் செல்கிற ரயில் பெட்டி தேச ஆளுகை வரம்புக்குப் புறம்பான உரிமையைப் பயன்படுத்தும். பிளாட்டெனின் உத்தரவு இன்றி பெட்டிக்குள் நுழைய ஒருவருக்கும் உரிமை இல்லை. பாஸ்போர்ட்டுகள் சாமான் கள் பற்றிய கட்டுப்பாடு எதுவும் இல்லை.

(3) அனுமதிக்கப்பட்ட ருஷ்ய நாட்டினரின் எண்ணிக் கைக்கு ஏற்ப ருஷ்யாவில் காவலில் வைக்கப்பட்ட ஆஸ் திரோ-ஜெர்மானியர்களைப் பரிமாற்றம் செய்து கொள் வதற்குப் பிரச்சாரம் செய்வதாக ருஷ்யா செல்வோர் பொறுப்பு ஏற்பார்கள்.

இந்த நிபந்தனைகள் இருப்பினும், மென்ஷிவிக்குகள் இவற்றை ஏற்றுக்கொண்ட போதிலும் புறப்படுவதற்கு அவர்கள் தயங்கினார்கள். பிரதிநிதிகள் சோவியத் பயணத் துக்கு ஆசி வழங்க வேண்டும் என்று அவர்கள் காத்திருந் தனர்.

ஏப்ரல் 7ஆம் தேதி விளதீமிர் இலீச் பின்கண்ட அவசரத் தந்தியை எனக்கு அனுப்பியிருந்தார்:

''20 பேர் நாளை புறப்படுகிறார்கள். டிரெல்லிபோர் கில்* லிந்த்ஹாகெனும் ஸ்ட்ரேமும்** கண்டிப்பாகக் காத் திருக்கட்டும்....

உல்யானவ்.''

இத்தந்தியைக் குடியேற்றக் கமிட்டியிடம் காட்டாது நான் ரகசியமாக வைத்திருந்தேன். ஸ்வீடன் எல்லைகளுக் குள் லெனின் நுழைந்த பின்பே அவரது பயணம் பற்றிச் சொல்லலாம் என்று இருந்தேன்.

நான் மால்மாவிற்குச் சென்று வருவது என்று முடிவு செய்தேன் (அங்கிருந்து டிரெல்லிபோர்க் துறைமுகத் துக்கு ஒரு மணி நேரப் பயணம்).

மால்மாவில் நான் நாள் முழுதும் பதட்டத்துடன் அலைந்து கொண்டிருந்தேன்... ''வருவார்களா? வழியில் ஜெர்மானியர்கள் அவர்களிடம் இழிசெயல் ஏதும் செய் யாமலிருப்பார்களா?'' இச்சிந்தனைகள் என்னை மிகுந்த கவலைக்குள்ளாக்கின. இறுதியாக அந்தி சாயும் போது உள்ளூர்த் தோழர் ஒருவருடன் டிரெல்லிபோர்குக்குப் போனேன். படகு கரையை நெருங்கிற்று. என்ன ஏமாற் றம்: இலீச்சைக் காணோம், மற்றவர்களும் இல்லை.

வருகின்ற நாளை நான் தவறாகக் கணக்கிட்டு விட் டேனா? அல்லது அவர்கட்கு வழியில் ஏதாவது நடந்து விட்டதா? எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. அடுத்த நாளுக்காகக் காத்திருக்க வேண்டியதுதான்.

மால்மாவுக்குத் திரும்பிப் போனோம். இரவு நேரம் மெதுவாகப் போயிற்று. அதையும் விட மெதுவாக நகர்ந் தது—அடுத்த நாள்.... மீண்டும் டிரெல்லிபோர்குக்குப் போனேன்... ஆனால் எங்கள் பயணிகளைப் படகு மீண்டும் கொண்டுவரவில்லை.

---

* டிரெல்லிபோர்க்—ஸ்வீடன் துறைமுகம். மறு பக்கத் தில் ஜெர்மானிய ஜஸ்னீட்ஸ் இருக்கிறது.—(ஆ-ர்.)

** இருவரும் ஸ்விட்சர்லாந்து சமூக-ஜனநாயகவாதி கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்.—(ஆ-ர்.)

மால்மாவுக்குத் திரும்பிச் சென்றேன். விஷயத்தை விசாரித்துத் தெளிவதற்காக ஏதேதோ திட்டங்களைக் கற்பனை செய்தேன். ஸ்டாக்ஹோமிலுள்ள எனது மனைவிக்கு டெலிபோன் செய்தேன். அங்கு ஒரு செய்தியும் இல்லை. ஸ்விட்சர்லாந்துக்கு அவசரத் தந்தி கொடுத்தேன். பதிலேதும் இல்லை. தோழரை மால்மாவில் விட்டேன். எனது டெலிபோனுக்காக அவர் அங்கு காத்திருக்க வேண்டும் என்று சொல்லி விட்டு நான் மூன்றுவது முறை டிரெல்லிபோர்க் போனேன்.

ஐஸ்னீட்சுக்குத் தந்தி கொடுக்க வேண்டுமென்று நான் சொன்ன போது, அங்கிருந்து படகு ஏற்கெனவே சென்று விட்டது... என்று நிலையத் தலைவர் சொன்னார்.

''ரேடியோ மூலம் படகுக்குத் தந்தி தர முடியாதா?'' என்று கேட்டேன் நான்.

''தரலாம். ஆனால் வேலை சம்பந்தமான தந்தி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.''

நிலையத்தில் ஜாரினது செஞ்சிலுவைச் சங்க விளம்பரத்தைக் கண்ட நான் நிலையத் தலைவருக்கு விளக்கினேன். வெளிநாட்டில் வாழ்வோர் குழு ஒன்றை ஏற்றுக் கொள்வதற்காக நான் செஞ்சிலுவைச் சங்கத்தால் பணிக்கப் பட்டிருக்கிறேன் என்றும், எனவே அக்குழு வருகிறதா, எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வருகிறார்கள் என்று படகுக் காப்டனிடம் கேட்க வேண்டும் என்றும், அப்போதுதான் நான் ரயிலில் டிக்கெட்டுகளுக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்றும் அவருக்குச் சொன்னேன். நிலையத் தலைவரை நம்ப வைத்து விட்டேன். அவர் காப்டனுக்குத் தந்தி கொடுத்தார்:

''திரு. உல்யானவ் படகில் இருக்கிறாரா? அவருடன் எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வருகிறார்கள் என்று திரு. கனேட்ஸ்கி கேட்கிறார்.''

இருபது நிமிடம் கழித்து பதில் தந்தி வந்தது:

''திரு உல்யானவ் திரு கனேட்ஸ்கிக்கு வணக்கம் தெரிவிக்கிறார். டிக்கெட்டுகளுக்கு ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறார்.''

ஆண்களும் பெண்களும் எத்தனை எத்தனை பேர் என்று தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நான் உயிர் பெற்றேன். நான் அடைந்த மாற்றத்தை நிலையத் தலைவர் புரிந்து கொள்ளவில்லை. உடனே டெலிபோனுக்கு விரைந்தேன். மால்மாவில் இருந்த தோழருக்கு லெனினது வருகை பற்றித் தகவல் கொடுத்தேன். ஸ்டாக்ஹோம் செல்லும் ரயிலில் உத்தேசமாக ஏற்பாடு செய்திருந்த இடத்தை உறுதி செய்து கொள்ளும்படியும் ரயில் நிலையத்தின் அருகிலுள்ள உணவு விடுதியில் இரவு உணவுக்கு ஆர்டர் செய்யுமாறும் அவரிடம் கேட்டுக் கொண்டேன். டெலிபோன் மூலம் மனைவியுடன் பேசினேன். தங்கு விடுதி முதலியவை பற்றிய மிச்சமுள்ள திட்டத்தை நிறைவேற்றும்படிக் கேட்டுக் கொண்டேன். ஜஸ்னீட்சிலிருந்து லெனின் ஏப்ரல் 13ந் தேதி தந்தி அடித்திருக்கிறார் என்று மனைவி எனக்குத் தகவல் தந்தாள்:

''இன்று ஆறு மணி டிரெல்லிபோர்க்.''

மால்மா வரை செல்ல டிக்கெட்டுகளுக்கு ஆர்டர் கொடுத்தேன். வெளிநாட்டில் வாழ்வோரின் குழு வருகிறது என்று சுங்க அதிகாரிகளை முன்னெச்சரிக்கை செய்தேன். நான் இன்ப வெள்ளத்தில் மிதந்தேன். சுங்க அதிகாரிகளிடம் நமது புரட்சிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தேன். அதன் முக்கியத்துவத்தையும் லெனின் அதில் வகிக்கும் பாத்திரத்தையும் பற்றி விளக்கினேன். அதிகாரிகள் நான் சொன்னதைக் கவனமாகக் கேட்டார்கள். சாமான்களைச் சோதனை போட மாட்டோம் என்று வாக்குறுதி தந்தார்கள். தமக்கு லெனினைக் காட்டிவிட வேண்டும்... என்று மட்டும் கேட்டுக் கொண்டார்கள்.

படகு கரையை நெருங்கியது. இச்சில நிமிடங்கள் எனக்கு ஒரு யுகமாக இருந்தன... கடைசியாக படகு கரை சேர்ந்தது. விளதீமிர் இலீச் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு, பழக்கமான தோழர்கள் பலர் ஆகியோரின் உருவங்கள் மெல்ல மெல்லத் தோன்றின....

ஆர்வம் பொங்கும் வரவேற்பு, கேள்விகள், பரபரப்பு, குழந்தைகளின் கூச்சல். என் கண்களில் ஆனந்தக் கண்

ணீர் வழிந்தது. ஒரு நிமிடத்தையும் இழந்து விடக் கூடாது. கால் மணி நேரத்தில் மால்மாவுக்கு ரயில் புறப் படவிருந்தது. சுங்க அதிகாரிகள் சாமான்களைச் சோதனை போடவில்லை. எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும்படி யும் புரட்சியின் தலைவரைத் தமக்குக் காட்டும்படியும் மட்டும் அவர்கள் கேட்டார்கள்....

நாங்கள் ரயில் பெட்டியில் உட்கார்ந்திருந்தோம். எத்தகைய சூழ்நிலையில் என்னுடைய தந்தியை அவர்கள் பெற்றுர்கள் என்று நான் அறிந்தேன்.

விஷயம் என்னவென்றுல், ஸ்வீடன்காரர்கள் போர்க் காலத்தில் தங்கள் நாட்டுக்குள் நுழைந்த அனைவருக்கும் விவரமான, சலிப்பூட்டும் கேள்விகள் அடங்கிய காகிதத் தைக் கொடுத்து பதில் எழுதச் சொன்ஞர்கள். இக்காகி தத்தை விளதீமிர் இலீச்சிடம் கொண்டுவந்தார்கள். தோழர்கள் அனைவருடனும் இலீச் பேசினுர். அனைவருடைய கைகளிலும் இந்த விவரக் குறிப்புக் காகிதம் இருந்தது. இதற்கு என்ன அர்த்தம்? ஜெர்மானியர்கள் தந்திரம் செய்திருக்கிறுர்கள் என்று முடிவு செய்தார் விளதீமிர் இலீச்: அவர்கள் விட்டு விட்டார்கள். ஆனுல் ஸ்வீடன் போலீ சாருக்குத் தகவல் கொடுத்திருக்கிறுர்கள். இப்போது இவர்கள் பிடித்துக் கொள்வார்கள்... ''இராணுவக் கவுன்சில்'' ஒன்று உருவாக்கப்பட்டது. என்ன செய்ய லாம்? இலீச் உண்மையான பெயரை எழுத வேண்டுமா, அல்லது கற்பனைப் பெயர் எழுதலாமா? திடீரென்று கையில் ஒரு காகிதத்துடன் காப்டன் தோன்றி, இங்கிருப் போரில் திரு. உல்யானவ் என்பவர் யார் என்று கேட்டார். தமது அனுமானம் சரியாகப் போயிற்று என்றும், தம்மைக் கைது செய்யப் போகிறுர்கள் என்றும் இலீச் நிச்சயம் கொண்டார். இனிமேல் எதையும் மறைக்கவியலாது. கடலில் குதித்து விட முடியாது. விளதீமிர் இலீச் தமது பெயரைச் சொன்ஞர். அப்போது எனது தந்தியின் வாச கத்தைத் தெரிவித்தார் காப்டன்....

நாங்கள் மால்மாவிற்கு வந்தாயிற்று. ஸ்வீடன் தோழர் எங்களுக்காகக் காத்திருந்தார்.... ரயில் நிலையத்துக்கு

அருகில் அருமையான உணவு தயார் செய்யப்பட்டிருந் தது. நான்கு நாள் பயணத்தால் களைத்துப் போயிருந்த, பட்டினி வயப்பட்டிருந்த பயணக் குழுவினர் ஸ்வீடிஷ் சிற்றுண்டியின் மீது ஆவலுடன் பாய்ந்தார்கள். தோழர் களில் ஒருவர் சொன்னார்: ''வெளிநாட்டில் வாழ்பவர்களை இப்படி உபசரிக்க முடிகிறது என்றால் ருஷ்யாவில் புரட்சி நடக்கிறது என்று இப்போது நான் நம்புகிறேன்....''

விசேஷ ரயில் பெட்டி தரப்பட்டது. பதினைந்து நிமி டங்களுக்குப்பின் நாங்கள் ஸ்டாக்ஹோம் நோக்கிச் சென் றோம். விளதீமிர் இலீச், நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா, நெருங்கிய தோழர்கள் ஆகியோர் ஒரு தனிச் சிற்றறை யில் இருந்தார்கள். இரவு நெடுநேரம் உரையாடல் நடந் தது. ருஷ்யாவிலிருந்து வந்த கடைசித் தகவல்கள் பற்றித் துருவித் துருவிக் கேட்டுக்கொண்டிருந்தார் விளதீமிர் இலீச். பாட்டாளி வர்க்கம் நடத்தப் போகிற போராட்டம், வளர்ந்து வரும் புரட்சியின் எதிர்காலம், அது எடுத்துக் கொள்ள வேண்டிய வடிவம் ஆகியவற்றை அவர் சுட்டிக் காட்டினார். அப்போது கேரென்ஸ்கி விசேஷமான தொரு பாத்திரம் வகிக்கவில்லையாயினும் அவரிடமிருந்து வரவிருக்கும் ஆபத்து பற்றிச் சொன்னார். ருஷ்யாவிலிருக் கும் கட்சிக்கும் வெளி உலகத்துக்கும் இடையில் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகப் பொதுவாக ''எந்தச் சூழலுக்கும் ஏற்றபடி'' வெளி நாட்டில் கட்சியின் குழு ஒன்று இருக்க வேண்டியது அவசியம் என்று விளதீமிர் இலீச் சுட்டிக் காட்டினார். கட்சியினது மத்தியக் கமிட்டி யின் வெளி நாட்டு அலுவலகம் ஒன்று உருவாக்கத் திட்ட மிடப்பட்டது. இதில் வரோவ்ஸ்கியும் நானும் இருப்போம் என முடிவாயிற்று. சற்றே தூங்கும்படி, காலை நான்கு மணிக்கே விளதீமிர் இலீச்சை வற்புறுத்த எங்களால் முடிந்தது.

லெனினது வருகை பற்றி மால்மாவிலிருந்த தமது அலுவலகத் தோழர்கள் மூலமாகத் தந்திச் செய்தி பெற்ற ஸ்டாக்ஹோம் நிருபர்களின் கும்பல் ஒன்று, ஸ்டாக் ஹோம் வருவதற்கு முன்பே ஏதோ ஒரு நிலையத்தில் ரயில்

பெட்டிக்குள் திடீரென்று நுழைந்தது. விளதீமிர் இலீச் அவர்களுக்குப் பேட்டி தரவில்லை. பத்திரிகைக்கான தகவல் ஸ்டாக்ஹோமில் தரப்படும் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது.

9 மணிக்கு நாங்கள் ஸ்டாக்ஹோம் வந்து சேர்ந்தோம். ரயில் நிலையத்தில் சினிமாப்படம் பிடிக்கப்பட்டது. பிறர் கண்டு கொள்ளப்படாமல் சென்று விடுவதற்கு விளதீமிர் இலீச்சால் முடியவே இல்லை.

அன்று முழுதும் ஒரு நிமிடம் கூட விளதீமிர் இலீச் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. ஸ்டாக்ஹோமில் ஒரு நாள் மட்டுமாவது ஓய்வு கொள்ள வேண்டும் என்கிற ஆலோசனையை அவர் கேட்கவும் விரும்பவில்லை. ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு விலைமதிப்பற்றதாக இருந்தது. வெளி நாட்டிலிருந்து வந்தவர்களின் (இவர்கள் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள்: போல்ஷிவிக்குகள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள், பூந்த்காரர்கள், அராஜகவாதிகள்) கூட்டம் நடந்தது. பயணம் பற்றி எல்லோரும் துல்லியமான விவரக் குறிப்புகள் தயார் செய்து கையெழுத்து இட்டார்கள். வெளி நாட்டு அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டது. எங்களுக்கு விளதீமிர் இலீச் விவரமான ஆணைகள் பிறப்பித்தார். கடைசியாக வந்த புதிய புத்தகங்களை வாங்குவதற்கு அவர் அவசரப்பட்டார், கட்சி சம்பந்தமான வேறு எவையோ தகவல்களைச் சேகரித்தார்.

சற்றே நிதானிப்பதற்குள் ரயிலுக்குப் போக வேண்டியதாயிற்று. மீண்டும் ரயில் நிலையம், பரபரப்பு, கூச்சல், குழப்பம், குழந்தைகளின் கூப்பாடு, அழுகை. எல்லோரையும் கவனித்துக் கொண்டார் விளதீமிர் இலீச். தோழர்களுக்கு வசதியாக இருக்கிறதா என்று கேட்டார். குறிப்பாகக் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டார். ரயில் நகர்ந்தது... மூச்சைப் பிடித்துக் கொண்டு மாபெரும் தலைவருக்கு இறுதி வாழ்த்துக்கள் தெரிவித்தோம். நாங்கள் நினைத்தோம்: ''இவர் புரட்சியைச் சரியான வழியில் செலுத்துவார்....''

1917ல் வி. இ. லெனின்*

பத்வோய்ஸ்கி

1917 ஏப்ரல் 3ம் தேதி அதிகாலை. பீட்டர்ஸ்பர்க் கமிட்டியின் செயற்குழு உறுப்பினர் என்ற முறையிலும் போல்ஷிவிக் கட்சியின் இராணுவ நிறுவனத்தின் தலைவர் என்ற முறையிலும், போல்ஷிவிக் கட்சியின் தலைமை அமைப்புகள் இருந்த, முந்தைய க்செசீன்ஸ்கயா மாளிகையில் நான் முறை வேலை பார்த்துக் கொண்டிருந்தேன்.

வெளியே இன்னும் இருட்டாக இருந்தது. திடீரென்று மணி கிணுகிணுத்தது. மூச்சு இரைத்துக் கொண்டு, பதட்டம் நிறைந்த மரியா இலீனிச்ஞ உல்யானவா அறைக்குள் நுழைந்தார்.

''என்ன நேர்ந்தது?''

''இன்று மாலை எனது சகோதரர் விளதீமிர் இலீச் வருகிறார். இதோ தோர்னியோவிலிருந்து அவர் கொடுத்த தந்தி இப்போதுதான் வந்தது'' (தோர்னியோ ஸ்வீடனுக்கும் பின்லாந்துக்கும் இடையில் இருக்கிற எல்லை நகரம்).

விளதீமிர் இலீச்சின் வருகைபற்றி தொழிலாளர்கள், படைவீரர்கள், மாலுமிகள் ஆகியோருக்கு எப்படித் தெரிவிப்பது என்பதே முதல் சிந்தனையாக இருந்தது. அன்றோ ஈஸ்டர் பண்டிகையின் இரண்டாவது நாள்: தொழில் நிலையங்கள் வேலை செய்யவில்லை. பத்திரிகைகள் வெளிவரவில்லை. படைவீடுகளிலிருந்து படைவீரர்

** இந்த நினைவுகளை 1924 பிப்ரவரியில் மாஸ்கோ தொழிலாளர்கள் கூட்டத்தில் பத்வோய்ஸ்கி விவரித்தார்.* —(ப-ர்.)

களும் மாலுமிகளும் பண்டிகைக்காக வெளியே விடப்பட்டிருந்தனர்.... உயிருள்ள தொடர்பை உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. க்செசீன்ஸ்கயா மாளிகையைக் கவசப் படைவீரர்கள் காத்து நின்றனர். பிப்ரவரி நாட்களில் மாளிகையை அவர்கள் கைப்பற்றி போல்ஷிவிக்குகளிடம் கொடுத்தனர். இந்தப் படைவீரர்கள் முந்தைய தொழிலாளர்கள். இவர்களை முழுமையாக நம்பலாம். இவர்கள் இடையே மிகவும் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்தவர் கியோர்கி வசீலியெவிச் ஏலின். கவசப் படையின் போல்ஷிவிக் குழுவிற்குத் தலைவர். இவர்தான் மாளிகையின் நிர்வாகி. இவரை அவசரமாக அழைத்தேன்.

சிறிது நேரம் கழித்து ஏலின் வந்தார். ஆஜானுபாகுவான உருவத்தில் காகசியத் தொப்பி அணிந்து பாங்கான வடிவம் கொண்டிருந்தார் அவர். அவருக்கு நான் தந்தியைக் காட்டினேன். சாதாரணமாக நிதானமாய் இருக்கும் அவரால் பதட்டத்தை மறைக்க முடியவில்லை.

''கவசப் படையின் போல்ஷிவிக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் உடனடியாக எழுப்புங்கள். அவர்களை மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், பீட்டர்ஸ்பர்க் போல்ஷிவிக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரின் வீடுகளுக்கும் லெனின் வருகை பற்றிச் சொல்லுவதற்காக அனுப்புங்கள். தொழிலாளர் விடுதிகள், இராணுவக் கப்பல்கள், படை வீடுகள் ஆகியவற்றுக்கு மிக விரைவில் தகவல் கொடுங்கள்'' என்று நான் சொன்னேன்.

லெனினுக்குத் தகுந்த வரவேற்புக் கொடுப்பதற்கு எப்படி ஏற்பாடு செய்வது என்று ஒரு கணம் யோசித்து விட்டு நான் சொன்னேன்:

''கவசக் கார்களை ரயில் நிலையத்துக்குக் கொண்டு போவோம்! பெத்ரோகிராத் போல்ஷிவிக் அமைப்பு எத்தகைய படைபலம் பெற்றிருக்கிறது என்று விளதீமிர் இலீச்சுக்குக் காட்ட வேண்டும்.''

ஏலின் திடுக்கிட்டார். பெரிய மனப் பதட்டத்தை அவரது முகம் பிரதிபலித்தது.

''இராணுவக் கார்களை வெளியே கொண்டு போ

வதற்குப் போர்க்கள நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் படும்'' என்று தணிந்த குரலில் கூறினுர் அவர்.

''இதைச் செய்தாக வேண்டும்'' என்று அவர் மீது வைத்த கண் வாங்காது சொன்னேன்.

ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டார் ஏலின். அவர் மனத்தில் பெருத்த போராட்டம் நடந்தது.

இப்போராட்டத்தில் அவரிடம் வெற்றி பெறப் போவது எது என்று அவர் முகத்தில் கண்டு பிடிக்க முயன்றேன் நான்: கட்சி மீது விசுவாசமும் போல்ஷிவிக் ஆண்மையுமா? அல்லது அனேகமாகத் தவிர்க்கவியலாமல் வரப் போகிற அடக்கு முறை பற்றிய பயமா? கலோமென்ஸ்கி தொழிற்சாலையில் தொழிலாளராக, இளைஞராக இருந்த போது 1905ல் நடந்த ஆயுதப் போராட்டத்தில் ஏலின் தமது அண்ணனுடன் சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டது என் நினைவுக்கு வந்தது. கவசக் கார்களை அவர் வெளிக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது!

....பொழுது சாய்ந்தது. வசந்த காலக் கதகதப்பு மிகுந்திருந்தது. விளதீமிர் இலீச்சின் வருகை பற்றித் தொழிலாளர்கள், படைவீரர்கள், மாலுமிகள் ஆகிய அனைவருக்கும் பரவலாக விரைவில் தகவல் கொடுக்க முடியாதோ என்ற பயம் தேவையற்றதாய்ப் போயிற்று, லெனின் திரும்பி வருவது பற்றிய செய்தி பெத்ரோகிராத் தொழிலாளர் பகுதிகளுக்கும் படைவீடுகளுக்கும் கடுகிப் பறந்தது. கிரன்ஷ்தாத் மாலுமிகளுக்கும் இது பற்றித் தெரிந்து விட்டது.

''லெனின் வருகிறுர்! லெனின் நம்முடன் இருப்பார்!'' இந்த வார்த்தைகளை ஆட்கள் மகிழ்ச்சியுடன் ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

பெத்ரோகிராதின் பரந்த பெருஞ் சாலைகளில் பிரெஞ்சுப் புரட்சி கீதத்தின் கொண்டாட்ட ஆரவாரங்கள் முழங்கின. விள்தீமிர் இலீச்சை சந்திப்பதற்காக வீபர்க் வட்டாரத் தொழிலாளர்கள் பின்லாந்து ரயில் நிலையத் துக்கு வரிசை வரிசையாகச் செல்கையில் இந்தக் கீதத்தை முழக்கினுர்கள். அதே வட்டாரத்தில் அப்போது இருந்து

வந்த மாஸ்கோ படைப்பிரிவும் அவர்களோடு சேர்ந்து சென்றது. முன்னால் சாம்பல் நிறக் குதிரையின் மீது, கையில் சிவப்புத் துணி கட்டிக் கொண்டு ஊர்வலத்தை ஒழுங்குபடுத்துகிற ஒருவர் சென்றார். அவருக்குப் பின்னால் ஆட்கள் பதாகைகளையும் முழக்க அட்டைகளையும் தாங்கிச் சென்றார்கள். செங்காவல் படையினர் அவர்களுக்குப் பின்னால் வந்தார்கள்.

ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள சதுக்கத்தில் வீபர்க் வட்டாரத் தொழிலாளர்கள், பழைய ஜார் மண்டபத்துக்குச் செல்கிற வழியின் மத்தியப் பகுதியைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அணி வகுத்து நிற்பதற்கு முன்னால் பதாகைகளையும் முழக்க அட்டைகளையும் தாங்கிக் கொண்டு தமது செங்காவல் படையினருடன் பெத்ரோகிராத் வட்டாரத் தொழிலாளர்களின் அணிகள் நெருங்கின. அவர்களுடன் எறிகுண்டுப் படைப் பகுதி வந்தது. அவர்கள் அனைவருமே வீபர்க்காரர்களுக்கு அருகில் இடம் பிடித்துக் கொண்டனர்.

நெருங்கி வந்த பிற சங்கீதக் குழுக்களின் இசை கேட்டது. புத்திலவ் தொழிற்சாலையினரின் பல அணிகள் சதுக்கத்தில் காணப்பட்டன. அவர்களுக்குப் பின்னால் பால்டிக், நேவ்ஸ்கி, ''திரிவுகோல்னிக்'', ''ஸ்கரஹோத்'' தொழிற்சாலைகள், அஹ்தேன்ஸ்கி வெடிமருந்துத் தொழிற்சாலை ஆகியவற்றின் தொழிலாளிகள் சென்றார்கள்.

பின்லாந்து ரயில் நிலையத்துக்கு முன்னால் இருந்த சதுக்கம் முழுதும் மக்களால் எள் விழ இடமின்றி நிறைந்திருந்தது. தொழிலாளர் அணிகளுக்குப் பின்னால் வந்திருந்த படைப்பிரிவுகளின் ஒழுங்கான வரிசைகள் நின்றன. சற்றே நேரங்கழித்து வந்த அணிகளுக்குச் சதுக்கத்தில் இடமிருக்கவில்லை. அவை அண்மையிலிருந்த தெருக்களில் நின்றன. எல்லோரும் ஆனந்தக் கிளர்ச்சி கொண்டிருந்தனர். திரும்பி வந்த புரட்சியாளர்களைச் சந்திப்பதற்காக பெத்ரோகிராத்வாசிகள் கடந்த மாதத்தில் பலமுறை ரயில் நிலையத்துக்குச் சென்றிருந்தார்கள். ஆனால் இத்தகைய சந்திப்பு இதுவரை நடந்ததில்லை....

கூடியிருந்தவர்களுக்கு மேலே பாட்டாளி வர்க்கத் தலைவருக்கு வரவேற்புக்களும் போராட்ட முழக்கங்களும் கொண்ட செம் பதாகைகளும் முழக்க அட்டைகளும் கடலாகக் காணப்பட்டன:

''லெனின் வாழ்க!''

''புரட்சித் தலைவர் வாழ்க!''

''எட்டுமணி நேர வேலைநாள் வாழ்க!''

''நிலம் விவசாயிகளுக்கே!''

''போர் ஒழிக!''

''புரட்சி வாழ்க!''

நேவாவிலிருந்து வந்து சதுக்கத்திற்குள் வீசிய காற்று பதாகைகளையும் முழக்க அட்டைகளையும் பிடித்து அசைத்தது. இளஞ் சிவப்பு நெருப்புச் சுவாலை சதுக்கத்தை மூடியிருப்பது போலத் தோன்றியது.

அமைதிக்கிடையில் திடீரென்று பெருத்த சங்கொலி கேட்டது. மக்கள் எச்சரிக்கையுடன் கூர்ந்து பார்த்தார்கள். தமது முகப்பு விளக்குகளின் நீண்ட ஒளிக் கதிர்களால் மக்கள் கூட்டத்தை ஊடுருவிக் கொண்டு, அந்தக் காலத்தில் மிகவும் கொடிய ஆயுதமாக இருந்த கவசக் கார்கள் இரண்டு மெதுவாக ஆடியபடி, உள்ளே நுழைந்தன.

''சொன்னபடிச் செய்துவிட்டார் ஏலின்'' என்று நான் மகிழ்ச்சி கொண்டேன்.

கவசக் கார்கள் பழைய ஜார் மண்டபத்தின் வாயிலை நோக்கிச் சென்றன. அவை அங்கு தோன்றியது சொல்லற்கரிய மகிழ்ச்சியை மக்களுக்குத் தந்தது. இடி முழக்கமாக ''உர்ரா'' என்ற சத்தமும் பலத்த கையொலியும் எழும்பின. கவசக் கார்கள் ஒரு சுற்றுச் சுற்றி இரும்பில் செய்த இரண்டு காவலாளிகளைப் போல ஜார் மண்டபவாயிலின் இரு மருங்குகளிலும் நின்று கொண்டன. சற்று நேரத்தில் இந்த வாயில் வழியே லெனின் செல்லவிருந்தார். துருவும் விளக்குகளுடன் லாரிகள் வந்தன. அவற்றின் ஒளியில் சதுக்கமும் மக்கள் திரளும் ரயில் நிலையமும், அசைந்தாடும் பதாகைகளும் செங்காவல் படையினர், படைவீரர்களின்

பளபளக்கும் துப்பாக்கிக் குத்தீட்டிகளும் அனைத்தும் மறத்தற்கரிய காட்சியைத் தந்தன.

பின்லாந்திலிருந்து ரயில் வந்து நிற்க வேண்டிய பிளாட்பாரத்தில் தொழிலாளர் குழுக்களும் செங்காவல் படைப் பிரிவுகளும் கிரன்ஷ்தாத் மாலுமிகளும் நின்றனர். அவர்களுக்கு இடையில் சங்கீதக் குழுக்கள் இருந்தன.

ரயில் வரத் தாமதம் ஆயிற்று... கடைசியாக சுமார் பத்தரை மணிக்கு லெனின் வருகையை அறிவிக்கும் ரயிலின் சீழ்க்கையொலி கேட்டது. கொண்டாட்ட நேரம் வந்தது.

உத்தரவு ஒலித்தது:

''கௌரவ அணி வகுக்க!''

செங்காவல் படையினரும் மாலுமிகளும் கௌரவ அணி வகுத்து அசையாமல் நின்றார்கள். சங்கீதக் குழு பாட்டிசைத்தது.

12ஆம் எண் ரயில் பிளாட்பாரத்தை நெருங்கிற்று. ஒரு ரயில் பெட்டியின் கதவருகே தோன்றினார் லெனின். சயில் பெட்டியின் முதல்படியில் இறங்கிய லெனின் ரந்திக்க வந்திருக்கிறவர்களைச் சுற்றி நோட்டம் விட்டார். தொப்பியைக் கழற்றி மகிழ்ச்சியுடன் அதனை ஆட்டினார்.

சந்திப்புக்கு ஏற்பாடு செய்தவர்கள் விளதீமிர் இலீச் பேசப் போகிறார் என்று அறிவித்தார்கள். அனைவரும் அமைதியானார்கள்.

''தோழர்களே!'' என்ற லெனினது முதல் வார்த்தையே எல்லோரையும் ஆட்கொண்டு விட்டது. உழைக்கும் மக்கள் திரள் மீது தாம் கொண்டிருந்த நேசத்தின் ஆழத்தையும் சக்தியையும் ஒவ்வொருவரும் உணரும் வண்ணம் விளதீமிர் இலீச் இந்த வார்த்தையை உச்சரித்தார். தொழிலாளர்களும் படைவீரர்களும் வீரஞ் செறிந்த போராட்டத்தின் மூலம் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தி, அரசியல் ரீதியில் மிகவும் பின்தங்கிய நாடாக இருந்த ருஷ்யாவை மிகவும் சுதந்திரமான ஜனநாயக அரசுகளில் ஒன்றாக சில நாட்களில் மாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னார்.

''ஆனால் மூலதனம் என்ற வேறொரு அரசனை உங்கள் மீது ஏற்றிவிட விரும்புகிறார்கள். அது நடக்காது! ஆலைகளும் தொழிற்சாலைகளும் முதலாளிகளுக்கு அல்ல, உங்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும்! நிலம் நிலப்பிரபுக்களுக்கு அல்ல, விவசாயிகளுக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டும்!'' என்றார் லெனின்.

''சோஷலிசப் புரட்சி வாழ்க!'' என்ற முழக்கத்துடன் லெனின் தமது சிற்றுரையை முடித்தார்.

தொழிலாளர்கள், படைவீரர்களின் சீரான அணிகள் தடுமாற்றம் கொண்டன. தாமாகவே அனைவரும் மௌனமாயினர். ஏனெனில் இத்தகைய வார்த்தைகட்கு அவர்கள் இன்னும் பழக்கப்படவில்லை. இதுவரை முதலாளித்துவ வர்க்கத்துக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் இருந்த முரண்பாட்டுக்கு மெருகிட்டு அத்துடன் தோழமை கொள்வதற்கு வேண்டுகோள் விடுவதற்கு சமூக-துரோகிகள் எல்லா வகையிலும் முயன்றனர். இப்போது நல்லபடியாக இருக்கிறது, எல்லாரும் சுதந்திரமானவர்கள், கூட்டம் போடலாம், எது பற்றியும் பேசலாம் என்று அவர்கள் சொன்னார்கள். போல்ஷிவிக்குகளிடம் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் ஆகியோரின் பொய்களை அம்பலப்படுத்துகிற, முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி கொள்ள பகிரங்க அறைகூவல் விடுக்கிற தெளிவான, தீர்மானமான வழி இருக்கவில்லை.

திடீரென்று இத்தகைய பேச்சு! எல்லோரும் உறைந்தது போலானார்கள், கலக்கமுற்றார்கள்; பின்பு கரவொலிகளும் ''உர்ரா'' என்ற ஆர்ப்பரிப்புக்களும் இடி முழக்கமாய்க் கேட்டன. லெனினை வரவேற்க வந்த தொழிலாளர்கள் முந்தைய ஜார் மண்டபத்து ஹாலுக்கு தமது தலைவரைக் கோலாகலமாகக் கூட்டிச் சென்றனர். பெத்ரோகிராத் சோவியத்தின் தூதுக்குழு அங்கு அவருக்காகக் காத்திருந்தது....

தொழிலாளர்கள், படைவீரர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட பெத்ரோகிராத் சோவியத், சமரச

வாதிகளான மென்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களையுமே அப்போது பெரும்பான்மையாகக் கொண்டிருந்த போதும் லெனினுக்கு வரவேற்புக் கொடுப்பதில் பங்கெடுத்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. பெத்ரோகிராத் சோவியத்திற்கு அப்போது தலைவராக இருந்த த்செயித்சேயின் தலைமையில் ஒரு தூதுக்குழுவை சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி அனுப்பியிருந்தது. திட்டமிடப்பட்ட சமரசவாதிகளின் கூட்டணியில் லெனினைச் சேர்த்துவிடுவதற்கு எண்ணிய த்செயித்சே அதற்கேற்றாற் போலத் தமது ''வரவேற்புப்'' பேச்சைத் தயாரித்திருந்தார்.

த்செயித்சே பாகாக உருகிப் பேசினார்: ''உங்கள் வருகையால் நாங்கள் ஆனந்தம் கொள்கிறோம். இந்தக் காலத்தில் சமாதான வழியில் செயல்பட்டு சோஷலிச சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைப்பதற்காகப் போராடியபடிப் புரட்சியும், தொழிலாளி வர்க்கமும் பெருவெற்றி ஈட்டியிருக்கின்றன. புரட்சிகர ஜனநாயக அணிகளில் நீங்கள் சண்டையை மூட்டிவிட மாட்டீர்கள் என்றும் நாங்கள் இவ்வளவு நன்றாகச் சரி செய்து வைத்திருக்கிற காரியத்தை எங்களுடன் சேர்ந்து தொடர்ந்து நடத்துவீர்கள் என்றும் நாங்கள் கருதுகிறோம்.''

சமரசவாத ''ஜனநாயகக்'' கூட்டணி அமைத்திருப்பது பற்றி த்செயித்சே பேசத் தொடங்கி, அதில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு விளதீமிர் இலீச்சுக்கு அழைப்பு விடுத்த போது லெனினது உருவம் முழுதும் பொறுமையின்மையையும் ஆத்திரத்தையும் வெளியிட்டது. வெறுப்புக் கொண்ட பார்வை ஒன்றைப் பேச்சாளர் மீது வீசினார் லெனின். விருட்டென்று அவரிடமிருந்து தலையைத் திருப்பிக் கொண்டார். தொழிலாளர்கள் அதிகமாக இருந்த பகுதியைக் கண்களால் தேடிக் கண்டு விட்டு கூட்டத்தை நோக்கி புன்னகை ஒன்று உதிர்த்தார். இந்தப் புன்னகை மேகத்தின் ஊடாக வெளிப்பட்ட சூரியக் கதிர் போல அனைவரது முகங்களிலும் பிரதிபலித்தது.

அப்போதே நல்லது எதையும் எதிர்பாராமல் தமது

உரையை முடித்துக் கொள்ள அவசரப்பட்டார் த்செயித்சே....

அவர் அங்கு இருப்பதையே கவனிக்காதது போல தொழிலாளர்கள், படைவீரர்கள், மாலுமிகள் ஆகியோரை நோக்கி லெனின் சொன்னார்:

''ருஷ்யப் புரட்சியின் வீச்சு உலகம் முழுதையும் கிளர்ச்சியடையச் செய்திருக்கிறது. அதன் பின்னே மற்ற புரட்சிகள் தோன்றும். எனினும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னுள்ள அடிப்படைப் பிரச்னைகளை பிப்ர வரிப் புரட்சி தீர்க்கவில்லை. ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் பாதி வழியில் நின்றுவிட முடியாது. படைவீரர் திரளுடன் சேர்ந்து முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைப் பாட்டாளி வர்க்க, சோஷலிசப் புரட்சியாகத் தொழிலாளி வர்க்கம் மாற்றி விடும்.''

செங்காவல் படையினர், தொழிலாளிகள், படைவீரர் கள், மாலுமிகள் ஆகியோர் எதைப் பற்றி மிக அதிகமாகச் சிந்தித்து வந்தனரோ, எதை இவ்வளவு நேரடியாக இதுவரை அவர்கட்கு யாரும் சொல்லவில்லையோ அதை ஆழ்ந்த கவனத்துடன் செவி மடுத்துக் கேட்டனர். இலீச் தொடர்ந்து சொன்னார்:

''ஜீவ மரணப் போராட்டம் தொடங்கி விட்டது. முத லாளித்துவத்துடன் பாட்டாளி வர்க்கம் நடத்தும் சமரில் எல்லா விதமான சோஷலிஸ்டு-துரோகிகளும் முதலாளித் துவத்திற்கு வால்பிடிப்பவர்களும் மிகக் கீழ்த்தரமான பங்கு வகிக்கின்றனர். அவர்களுடைய வழி தொழிலாளி வர்க்கத்துக்கு ஒவ்வாது! முதலாளிகளின் கைப்பாவை களான கட்சிகளுடன் 'ஐக்கிய முன்னணி' எதுவும் சாத் தியமில்லை!''

மேற்கொண்டு இங்கு செய்வதற்குத் தமக்கு ஏது மில்லை என்று த்செயித்சேக்கு முழுமையான உறுதி ஏற்பட்டது....

விளதீமிர் இலீச் தலை வாசற்படிக்கு வந்து அங்கு சிற்றுரை நிகழ்த்தினார். பின்னர் தோழர்கள் அவரைக் காரில் உட்கார வைத்தனர். ஆனால் அங்கிருந்த மக்கள்

திரள் மிகவும் மனக்கிளர்ச்சியுற்றிருந்ததால் அவர்களைக் கடந்து செல்ல முயல்வதே மிகவும் கஷ்டமாக இருந்தது.

விளதீமிர் இலீச் காரிலிருந்து வெளியே வந்தார். காரின் மீது ஏறி நின்று தொழிலாளர்களை நோக்கி ஒரு மிகச் சிறு உரை நிகழ்த்தினார். ''சோஷலிசப் புரட்சி வாழ்க!'' என்ற முழக்கத்துடன் பேச்சை முடித்தார். பின்னர் காரில் உட்காரப் போனார். ஆனால் அது சாத்தியமாக இருக்கவில்லை. ஏனெனில் மக்கள் தமது தலைவருடனேயே எந்நேரமும் இருக்க விரும்பினர். அப்போது ரயில் நிலையத்தின் வாயிலுக்கு வந்து காருக்கு அருகே நின்ற கவசக் காரில் ஏறிக்கொள்ளுமாறு நான் அவரைக் கேட்டுக் கொண்டேன்.

''அதில் நின்று கொண்டு கார் நகரும் போதே பேசலாம்'' என்று நான் சொன்னேன்.

தொழிலாளர்கள் விளதீமிர் இலீச்சைக் கைகளில் தூக்கி உயர்த்தி கவசக் காரில் ஏறி நிற்க அவருக்கு உதவினர்.

சதுக்கம் முழுதும் கேட்கும் வண்ணம் உரத்த குரலில் லெனின் தெளிவாக, உரையாற்றினார். இது ''பின்லாந்து ரயில் நிலையப் பேச்சு'' என்று பின்னர் பிரபலமாயிற்று. புரட்சியை இன்னும் பரவலாக்குமாறு விடுத்த ஆர்வம் மிக்க அறைகூவல் இது. பளிச்சிடும் சிந்தனைகள் வலது கையில் அடங்கியிருப்பது போல அக்கையை முன்னே வீசுகிற லெனினுக்கே உரித்தான கையசைவு, பின்லாந்து ரயில் நிலையத்தருகே கவசக் காரின் மீது நின்ற லெனினைப் பார்த்தவர்களின், அவரது பேச்சைக் கேட்டவர்களின் நினைவில் என்றென்றைக்குமாகப் பதிந்திருக்கும்....

தலைகள், பதாகைகள், குத்தீட்டிகள்... நிறைந்த கரையற்ற கடலுக்குப் பொறியாளர் பிரிவின் துருவும் விளக்குகள் ஒளியூட்டின. கவசக் கார் நகர்ந்தது. உருக்கு அணிகளின் ஊர்வலம் இது. இரவு இரண்டு மணியாய் இருந்த போதும் ஊர்வலம் சென்ற வழியில் மக்கள் தெருக்களுக்கு ஓடி வந்தனர், சாளரங்களின் வழியே பார்த்தனர். மக்கள் கூட்டமாக இருந்த இடங்களில் கவசக் கார்

நின்றது. விளதீமிர் இலீச் ஆற்றல் நிறைந்த சில வார்த்தைகள் பேசினார்.

க்ஷெசீன்ஸ்கயா மாளிகைக்கு ஊர்வலம் வந்தது. கவசக் கார் நின்ற பின்பு ஆட்கள் விளதீமிர் இலீச்சைக் கைகளில் தூக்கிக் கொண்டு மாளிகைக்குள் நுழைந்தனர். அவருக்கு அங்கு உபசாரம் செய்தனர். அவர் ஒரு கப் தேநீரை விரைந்து பருகி விட்டு, தமக்காகக் காத்திருக்கும் மக்களிடம் போக வேண்டும், அல்லது எல்லோரையும் இங்கு அழைத்து வர வேண்டும் என்று கூறினார். ''அங்கு பல்லாயிரக் கணக்கானோர் நிற்கிறார்கள், இங்கு சில நூறு பேரையே கூட்டி வர முடியும்'' என்று நாங்கள் பதில் சொன்னோம். லெனின் பால்கனிக்கு வந்து ஒரு சிற்றுரை நிகழ்த்தினார். ஆனால் தொழிலாளர்கள் கலைந்து செல்லவில்லை. அங்கேயே நின்று கொண்டிருந்தனர். அப்போது கட்சி மத்தியக் கமிட்டியின் வேறு உறுப்பினர்கள் அவர்களிடம் சென்றார்கள். விளதீமிர் இலீச் நாளை மீண்டும் பேசுவார் என்றும், பொதுவாகவே அவர் இனிமேல் மக்களுடனேயே இருப்பார் என்றும் கூடியிருப்பவர்களுக்கு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மூன்று மணி அளவில் தான் தொழிலாளர்கள் கலைந்தனர்.

இரண்டாவது மாடியிலிருந்த அறைகளில் ஒன்றில் தோழமை இரவு உணவு தயார் செய்யப்பட்டிருந்தது. லெனினைச் சுற்றியிருந்த நீண்ட மேசையருகே சுமார் 60 பேர் இருந்தனர். போல்ஷிவிக்குகளது பீட்டர்ஸ்பர்க் அமைப்பின் தீவிர உறுப்பினர்கள் அவர்கள். ஒவ்வொருவரிடமும் பதில் தேவையாயிருந்த ஏராளமான கேள்விகள் இருந்தன.

அடுத்திருந்த அறைகளில் மற்ற தோழர்கள்—தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் அனைத்து ருஷ்ய மாநாட்டில்* பங்கு கொள்ளப்

---

* தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் அனைத்து ருஷ்ய மாநாடு 1917 மார்ச்சு 29 முதல் ஏப்ரல் 3 வரை பெத்ரோகிராதில் நடந்தது.

பல்வேறு குபேர்னியாக்களிலிருந்து பெத்ரோகிராதுக்கு வந்திருந்த போல்ஷிவிக்குகள்—லெனினுடன் பேசுவதற்காகக் காத்திருந்தனர். அவர்களும் லெனினது பேச்சைக் கேட்க ஆவல் கொண்டிருந்தனர்.

அணித்தான கடந்த காலத்தில் நர்த்தகி க்செசின்ஸ்கயா ஆடம்பரமான விருந்துக் கொண்டாட்டங்கள் நடத்திய பெரிய ஹாலில் உரையாடலை வைத்துக் கொள்ளலாம் என்று ஒருவர் யோசனை சொன்னார்.

ஹாலின் ஓரத்து மூலை உரையாடலுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டது. சாதாரண மேசையும் நாற்காலிகளும் பெரிய சமையலறைப் பெஞ்சுகளும் கொண்டுவரப்பட்டன. விளதீமிர் இலீச், நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா, லெனினது சகோதரிகளான மரியா இலீனிச்னா, ஆன்னா இலீனிச்னா ஆகியோர் மேசையருகே உட்கார்ந்தனர். மற்றவர்கள் அரைவட்டமாக அமர்ந்தனர்.

தாமும் அரசியல் காரணங்களுக்காக வெளிநாடு சென்ற மற்ற ருஷ்யர்களும் ஸ்விட்சர்லாந்திலிருந்து தப்பி வருவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது பற்றி விளதீமிர் இலீச் எடுத்துச் சொன்னதோடு உரையாடல் துவங்கிற்று. போர் செய்து வந்த நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் போல்ஷிவிக்குகள் தாயகம் திரும்புவதற்கு எல்லாவிதமான தடங்கல்களையும் உண்டாக்கினர். தாங்கள் மூட்டிவிட்ட படுகொலைப் போருக்கு எதிராக வெளிநாட்டில் இருந்து கொண்டே லெனின் நடத்திய போராட்டத்தை அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். லெனின் ருஷ்யாவுக்குத் திரும்பி வந்தவுடன், விரைவான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகப் புரட்சியின் எல்லாச் சக்திகளையும் திருப்பி விடுவார் என்று போருக்கு ஆதரவாக இருந்தவர்கள், அஞ்சினர்.

ஏதோ மிகவும் சுவாரஸ்யமான சம்பவம் ஒன்றை

மாநாட்டில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களும் மிகப் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.—(ப-ர்.)

நினைத்துக் கொண்டு இலேசாகப் புன்னகை செய்தார். அவரது கண்கள் சுடர் விட்டன. பின்லாந்து வழியாகச் சென்ற போது படைவீரர்களைச் சந்தித்தது பற்றி அவர் சொன்னார். படைவீரர்கள் அதே ரயில் பெட்டியில் பயணம் செய்தனராம். லெனினுக்கும் அவர்களுக்கும் இடையில் உரையாடல் தொடங்கியதாம்.

''உடனடியாகப் போரை முடிக்க வேண்டிய அவசியத்தையும், நிலப்பிரபுக்களிடமிருந்து விரைவாக நிலத்தைப் பிடுங்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் பற்றி மிகவும் திடவுறுதியுடன் அவர்கள் பேசியதைக் கேட்க வேண்டும்.''

லெனின் தொடர்ந்து சொன்னார்: ''அவர்களில் ஒருவர் போரை எப்படி முடிக்க வேண்டும் என்று காட்சி பூர்வமாக எடுத்துச் சொன்னார். தரைக்குள் எதையோ பலவந்தமாகச் செலுத்துவது போல அந்தப் படைவீரர் மிக வேகமாகக் கையை வீசினார்: 'குத்தீட்டியைப் பூமிக்குள் புதைக்க வேண்டும். இப்படித்தான் போர் முடியும்!' என்று சொல்லிவிட்டு உடனே தொடர்ந்தார்: 'ஆனால் நிலம் கிட்டுகிற வரை கையிலிருந்து துப்பாக்கியை விட்டுவிட மாட்டோம்.' போரை நிறுத்துவதோ, விவசாயிகளுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதோ தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடமும் ஆட்சி மாறுதவரை சாத்தியமில்லை என்று நான் குறிப்பிட்ட போது, படைவீரர்கள் நான் சொன்னதை முழுமையாக ஒத்துக் கொண்டார்கள்!''

இது பற்றிச் சொல்லி விட்டு பெத்ரோகிராதிலும் சுற்று வட்டாரத்திலும் இருந்த நிலைமை பற்றி லெனின் துருவித் துருவிக் கேட்டார். பிப்ரவரிப் புரட்சியின் போது தொழிலாளர்கள் நடத்திய வீரஞ் செறிந்த போராட்டம் பற்றியும், சோவியத்தின் உறுப்பினர்கள், அதன் நடவடிக்கைகள் பற்றியும், மாவட்டங்களில் நடக்கும் கட்சி வேலை பற்றியும் பெத்ரோகிராத் போல்ஷிவிக்குகள் சொன்னார்கள். புரட்சியின் தன்மை, இடைக்கால அரசாங்கத்துடன் கொள்ள வேண்டிய உறவு ஆகிய இரண்டு பிரதான பிரச்னை

கள் பற்றி போல்ஷிவிக் அணிகளில் இது வரை தெளிவு ஏற்படவில்லை என்றுர்கள் அவர்கள். தெருக்களில், சதுக்கங்களில், ரயில் நிலையங்களில்—தொழிலாளர், படைவீரர் திரள்கள் எங்கு கூடினாலும் உடனடியாக கூட்டங்கள் நடக்கின்றன என்றும், இவற்றில் பங்கு கொள்கிறவர்கள் எதிரும் புதிருமான இரண்டு முகாம்களாகப் பிரிந்து விடுகிறுர்கள் என்றும் பெத்ரோகிராத்வாசிகள் சொன்ஞர்கள்.

தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துக்கு ஆதரவாக ஒரு சாரார் நிற்கிறுர்கள், உடனடியாகப் போரை நிறுத்த வேண்டுமென்றும் நிலப் பிரபுக்களின் நிலத்தைப் பிடுங்கி விவசாயிகட்குக் கொடுத்து விட வேண்டுமென்றும் பொருளுற்பத்தியில் தொழிலாளர்களது கட்டுப்பாட்டை நிறுவ வேண்டும் என்றும் இவர்கள் கோருகின்றனர்.

மாருக மற்றவர்களோ, இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவாக நிற்கிறுர்கள், மேற்கொண்டு போரை நடத்த வேண்டியது அவசியம் என்கிறுர்கள், படைவீரர் திரளை தொழிலாளர்கள் மீது ஏவி விடுகிறுர்கள், எட்டு மணி நேர வேலைநாளும் வேலைநிறுத்த உரிமையும் கோருகிற தொழிலாளர்களைப் போர்முனைக்கு உதவி செய்ய விரும்பாதவர்கள் என்று குற்றம் சாட்டுகிறுர்கள்.

பெத்ரோகிராத் போல்ஷிவிக்குகள் தந்த தகவலின் படி இந்தச் சச்சரவுகள் எல்லாம் நடந்து வருகிற கூட்டங்களைக் கூட போல்ஷிவிக்குகள் முற்றும் முரண்பாடாக மதிப்பீடு செய்தனர். கூட்டங்களில் புரட்சியின் அடிப்படைப் பிரச்னைகள் அனைத்திற்கும் தீர்வு காணலாம் என்று ஒரு சாரார் நினைத்தனர். புரட்சிக்கு முந்திய மறைமுக நடவடிக்கைகளின் மாதிரியில் சமூக-ஜனநாயகக் குழுக்களை வலை போலப் பரவலாக்குவதன் மூலமே புரட்சியின் சிக்கலான பிரச்னைகளை உண்மையான முறையில் புரிந்து கொள்ள மக்கள் திரளுக்கு மேன்மேலும் அதிகரித்து வரும் தேவையை நிறைவேற்ற முடியும் என்று மறுசாரார் கருதினர்.

கூட்டங்கள், குழுக்களின் பாத்திரம் பற்றிய விவாதத்தைப் பெரிதும் பொறுமையின்றிக் கேட்டுக் கொண்டிருந்தார் லெனின். இத்தோழர்களை இடைமறித்துப் பேச அவர் விரும்புகிறார் என்று தோன்றியது. ஆனால், தொழிலகங்களிலும் படைவீடுகளிலும் திட்டமிட்டபடி வேலை செய்து தொழிலாளர், படைவீரர் திரள்களை போல்ஷிவிக்குகள் எங்ஙனம் தம் பக்கத்தில் தவருது சேர்த்தார்கள் என்பது பற்றிய தகவல்களை விளதீமிர் இலீச் மிகவும் அக்கறையுடன் கூர்ந்து கவனித்தார்.

சைபீரிய போல்ஷிவிக்குகள் புதிய முறையில் வேலை செய்யத் தொடங்கியது வி. இ. லெனினுக்குக் குறிப்பாகப் பிடித்தது. சூழலின் சிறப்பியல்பை சைபீரியாக்காரர்கள் மிகச் சரியாகக் கணக்கிலெடுத்துக் கொண்டதையும், தமது கட்சி அமைப்புக்களின் வேலையை செயல் பூர்வமாக அவர்கள் உருவாக்கியதையும் விளதீமிர் இலீச் பாராட்டினார். எந்நேரமும் கூட்டம் போடுவதில் ஆர்வம் காட்டியவர்களையும் கட்சி தலைமறைவாய் இருந்த காலத்தில் மேற்கொண்ட வேலையின் வடிவங்களை ஆதரித்தவர்களையும், அவர் சாடினார்.

தமது உடல் முழுதையும் சதுக்கத்தின் பக்கம் திருப்பி, அந்தத் திசையில் கையை நீட்டி மனக்கிளர்ச்சியுடன் லெனின் தொடர்ந்தார்:

''அங்கே, சதுக்கங்களிலும் வீதிகளிலும் கோடிக் கணக்கான மக்கள் போர், நிலம், புதிய வாழ்க்கை அமைப்பு பற்றிய பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் சரியான வழியை வேதனையோடு தேடிக் கொண்டிருக்கிறார்கள். போல்ஷிவிக்குகளோ இந்த நேரத்தில் கூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், குழுக்களின் மூலமாக மக்கள் திரளைக் கைப்பற்றி விடலாம் என்று எண்ணுகிறார்கள்!

''புரட்சி என்பது ஒரு விழா அல்ல. நாம் ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்வதில் மட்டும் ஈடுபட்டிருக்கிற கேரென்ஸ்கிகளும் அல்ல. மிகப் பரவலான மக்கள் திரளுக்குப் பயிற்சி தந்து அவர்களை ஒன்றுசேர்த்து

ஒழுங்கமைக்கிற கடுமையான உழைப்பும் சள்ளை பிடித்த அன்றாட வேலையும்தான் புரட்சி என்பது. கிளர்ச்சியையும் பிரசாரத்தையும் அடியோடு மாற்றியமைக்க வேண்டியது அவசியம். போரை நிறுத்துவதற்காக, நிலத்திற்காக, பொருளுற்பத்தியின் மீது தொழிலாளர் கட்டுப்பாட்டுக்காக, உழைக்கும் மக்கள் திரளின் மற்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து வீரஞ்செறிந்த போராட்டம் நடத்த வேண்டியது அவசியம் என்று இயந்திரத்தின் அருகே வேலை செய்யும் தொழிலாளர்கட்கும், படை வீடுகளிலும், போர்க் கப்பல்களிலும்—குழுக்களுக்கும் தனித்தனி மனிதர்கட்கும்—பொறுமையுடன், சலிப்புக் காட்டாமல், விடாமுயற்சியுடன் விளக்கிச் சொல்ல வேண்டும்.''

இது ஒரு விவர அறிக்கை அல்ல. ஒரு பேச்சாகவும் இது இருக்கவில்லை. தமது தலைவருக்காகக் காத்திருந்து இப்போது அவரது ஒவ்வொரு வார்த்தையையும் ஆவலுடன் பருகிய பழைய கட்சி வீரர்களுடன், போராட்ட நண்பர்களுடன், லெனின் நடத்திய உளப்பூர்வமான உரையாடலே இது. விளதீமிர் இலீச் அங்கிருந்தவர்கள் எழுப்பிய எந்தவொரு கேள்விக்கும் பதில் சொல்லாமல் இருக்கவில்லை. இறுதியாக, கூடியிருந்தவர்களையும் கட்சி முழுதையும் மக்கள் அனைவரையும் மிகவும் பதட்டப்படுத்திக் கொண்டிருந்த பிரச்னைக்கு வந்தார். ருஷ்யப் புரட்சியின் தன்மையையும் அதன் உந்து சக்திகளையும் பற்றி அவர் பேசினார். இடைக்கால அரசாங்கத்துடன் கொள்ள வேண்டிய உறவு பற்றிச் சொன்னார். சொந்த மூச்சுச் சத்தத்தைக் கூட ஒருவர் கேட்கும் அளவுக்கு அங்கு மௌனம் நிலவியது.

உரையாடலின் இறுதியில் **நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்** என்னும் தமது ஆய்வுரைகளை **(ஏப்ரல் ஆய்வுரைகள்)** அங்கிருந்தவர்களுக்குப் படித்துக் காட்டினார். சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்து நடந்த உரையாடலுக்குப் பின் அனைத்து ருஷ்ய மாநாட்டின் பிரதிநிதிகள் அன்று காலையே உரை நிகழ்த்தும்படி விளதீமிர்

இலீச்சுக்கு ஆலோசனை கூறினர். சமூக-ஜனநாயகப் போக்குகளின் ஐக்கிய முன்னணி உருவாக்குவது பற்றிய பிரச்னை அங்கு விவாதிக்கப்படுகிறது என்று அறிந்த லெனின் பேசுவதற்கு உடனே ஒத்துக் கொண்டார். அதற்கு முன்பு மாநாட்டின் போல்ஷிவிக் பிரிவைக் கூட்டுமாறு ஆலோசனை சொன்னார்.

அனைவரும் கலைந்து செல்லத் தொடங்கினர்.

பலருக்கு லெனினது சிந்தனைகள் அவரவரது சிந்தனைகளாகவே இருந்தன. லெனின் இச்சிந்தனைகளை ஒரு சீரான அமைப்பாக ஒன்று கூட்டினார். அதற்கு தெளிவான துல்லியமான வடிவம் கொடுத்தார், செயல் பூர்வமான போராட்டக் குணத்தை அதற்கு வழங்கினார். இப்போது என்ன செய்ய வேண்டும் என்று எல்லோருக்கும் விளங்கிற்று.

ஆனால் கணிசமான அளவில் இருந்த மற்றவர்களுக்கு —இவர்களிடையில் பொறுப்பு வாய்ந்த கட்சி ஊழியர்களும் இருந்தனர்—புரட்சியின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு லெனின் தந்த தீர்வின் புதுமை பயத்தை உண்டாக்கிற்று. விளதீமிர் இலீச் நீண்ட காலம் வெளிநாட்டில் தங்கியிருந்ததால் ருஷ்ய எதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று அவர்களுக்குத் தோன்றியது. விளதீமிர் இலீச் முன்வைக்கிற செயல்தந்திரம், ஏற்கெனவே உருவாகியுள்ள பொது ஜனநாயக முன்னணியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தை வெளியேற்றி கட்சியை முழுமையாகத் தனிமைப்படுத்தி விடும் என்று அவர்கள் நினைத்தனர். இடைக்கால அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மையைப் பகிரங்கமாகக் காட்டுவதற்கு இது சமயமல்ல என்று அவர்கள் கருதினார்கள். சமரசவாதிகளிடம் லெனின் காட்டிய பொறுமையின்மையும் அவர்களுடன் உடனடியாக, ஒரேயடியாக முறித்துக் கொள்கிற சாத்தியக்கூறும் அவர்களைப் பயமுறுத்தின.

ஆட்சியை சோவியத்துக்களின் கைகளுக்கு மாற்றுவதற்காக விடாமுயற்சியுடன் தீர்மானமாகப் போராட வேண்டும் என்ற விளதீமிர் இலீச்சின் கோரிக்கை குறிப்

பாகப் புதுமையாகவும் புரியாததாகவும் அவர்களுக்கு விளங்கியது.

லெனினது வார்த்தைகளைக் கேட்டுத் திகைப்படைந்தவர்களும் இருந்தனர். பின்லாந்து ரயில் நிலையத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட பதட்டமூட்டும் வரவேற்பால் லெனின் அடைந்த பிரம்மாண்டமான உடலுலுக்கலே இந்த வார்த்தைகளை வரவழைத்தது என்று கூறும் அளவுக்கு அவர்கள் திகைப்புற்று இருந்தனர். ''தூங்கி எழுந்த பின் அவர் வேறு மாதிரிப் பேசுவார், இப்போது மனிதர்களைப்புற்றிருக்கிறார்'' என்று அவர்கள் நினைத்தார்கள். காலையில் அவர் ''வழிக்கு வந்து விடுவார்''....

ஆனால் காலையில்—ஏப்ரல் 4ல்—மாநாட்டுக்கு வந்த போல்ஷிவிக்குகளின் குழுக் கூட்டத்தில் பேசும் போதும் லெனின் வாயிலிருந்து எழுச்சியூட்டும் வார்த்தைகளே வந்தன. முதலாளித்துவத்துடனும் அதன் ஏஜெண்டுகளுடனும் போராட வேண்டும் என்ற அறைகூவலே ஒலித்தது.

புரட்சிக்கு முன்னால் அரசாங்க டூமா கூடிய தாவ்ரிசெஸ்கிய் மாளிகையில் மாநாடு நடந்தது. இம்மாளிகையின் ஒரு பகுதியில், மூன்றாவது மாடியின் விசாலமான ஒரு அறையில் இந்த மாநாட்டின் போல்ஷிவிக் பிரிவினது கூட்டம் நடந்தது.

விளதீமிர் இலீச் வருவதற்கு வெகு நேரத்துக்கு முன்பு போல்ஷிவிக் பிரதிநிதிகள் இங்கே கூடத் தொடங்கினர். ஆங்காங்கு பிரதிநிதிகளின் குழுக்கள் தன்னிச்சையாகத் தோன்றின. க்செசீன்ஸ்கயா மாளிகையில் இரவில் இருந்தவர்களிடமிருந்து லெனினது ஆய்வுரைகளைத் தெரிந்து கொண்ட இவர்கள் ஆர்வமுடன் அவற்றைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். லெனின் வருகை மகிழ்ச்சி ஆரவாரத்தைத் தோற்றுவித்தது. போல்ஷிவிக் பிரிவின் கூட்டத்தில் லெனின் தமது ஆய்வுரைகளைச் சமர்ப்பித்து அவற்றுக்கான ஆதாரங்களை விவரமாக விளக்கினார். முழுமையான உத்வேகம், ஆழம், திடவுறுதி ஆகியவை நிறைந்திருந்த அவரது தெளிவான பேச்சில் புரட்சியின் வாய்ப்புகள் மிக விவரமாக வெளிப்பட்டன.

விளதிமிர் இலீச்சின் வார்த்தைகளை மனந்திறந்த பேச்சாக எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். லெனினுடன் முழுமையாக ஒத்துக்கொள்ள வேண்டும், அல்லது அவரை முற்றுக நிராகரிக்க வேண்டும் என்று தெளிவாகத் தெரிந்தது.

தமது உரையை லெனின் முடித்ததும் கூட்டத்தில் பெருத்த உற்சாக ஆரவாரம் தோன்றியது. பின்னர் எண்ணிறந்த கேள்விகள் கேட்கப்பட்டன. இடைக்கால அரசாங்கத்துடனும் சமரசவாதிகளுடனும் கொள்ள வேண்டிய உறவுகள் பற்றியவையாகவே பெரும்பாலும் கேள்விகள் இருந்தன. சோவியத்துக்களின் குடியரசு என்ற கருத்தே எல்லோருக்கும் கிளர்ச்சியூட்டிக் குறிப்பான கவனத்தைக் கவர்ந்தது; லெனின் முன்வைத்த பணிகளைப் பாட்டாளி வர்க்க, ஏழை விவசாயிகள் சக்தியைக் கொண்டு நிறைவேற்றுவது சாத்தியமா, சமயத்துக் கேற்றதா என்கிற பிரச்னையைச் சுற்றியே சூடு பறக்கும் விவாதங்கள் நடந்தன. குறிப்பிட்ட ஆய்வுரை பற்றிப் பேச்சாளர்கள் எவ்வளவுதான் மறுப்புக்களைத் தெரிவித்த போதிலும், அவற்றுக்கு விளதீமிர் இலீச் பதில் சொன்ன பின்பு மறுப்புக்கள் மிகவும் அடிப்படையற்றவையாகிப் போயின. எனவே எந்தவொரு மறுப்பும் கணிசமான ஆதரவைப் பெறுமல் போயிற்று. விளதிமிர் இலீச்சின் பேச்சுக்காக அனைத்து ருஷ்ய மாநாடு நெடுநேரமாய் காத்திருப்பதால், விவாதத்தை விரைவில் முடிக்கும்படிக் கூட்டத் தலைமைக் குழுவிடமிருந்து வந்த ஆலோசனைகளால் போல்ஷிவிக் பிரிவின் கூட்டம் பலமுறை இடைமுறிக்கப்பட்டது.

போல்ஷிவிக் பிரிவின் கூட்டம் முடிந்த பின்பு கட்சி உறுப்பினர்களின் குழு ஒன்று அவரிடம் வந்தது. அவரது ஆய்வுரைகளுக்கு எதிராயிருந்த இக்குழு லெனின் பேச்சு* "ஜனநாயக அணிகளில் பிளவை ஏற்படுத்தக் கூடும்"

---

* லெனின் ஆய்வுரைகளுக்கு எதிராகப் பேசியவர்களின் குழுவிற்கு காமெனெவ் தலைமை வகித்தார். இவர் அப்போது பிராவ்தா பத்திரிகையில் ஆசிரியர் குழுவில் இருந்தார்.—(ப-ர்.)

என்பதால் மாநாட்டில் அவர் உரை நிகழ்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டது. சிரமத்துடன் இவ்வாலோசனையைக் கேட்ட பின்பு லெனின் மாநாடு நடந்த இடத்திற்குப் படி வழியாக விரைவாக இறங்கிப் போனார்.

சோவியத்துக்களின் சமூக-ஜனநாயகவாதப் பிரதிநிதிகளின் மாநாடு மென்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களையுமே மிகப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது. சில நூறு பிரதிநிதிகளில் போல்ஷிவிக்குகள் சுமார் ஒரு நூறு பெயரே இருந்தனர்.

வெளிநாட்டு வாழ்க்கையிலிருந்து லெனின் ருஷ்யாவிற்குத் திரும்பியதே ஒரு முக்கியமான அரசியல் சம்பவமாக இருந்தது. பல்வேறு கட்சிகளுக்கு இடையில் நடந்த போராட்டத்தின் சூடு பறக்கும் சூழலில் ஒவ்வொரு அரசியல்வாதியும் போல்ஷிவிக் தலைவரின் குரலை விரைவில் கேட்க வேண்டும், புரட்சியைப் பற்றி அவரது கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். மேலும் லெனினது ஆய்வுரைகள் பற்றிய தகவலும் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு ஏற்கெனவே எட்டி இருந்தது. இவ்வாய்வுரைகள் நண்பர்களிடம் பொங்கும் களிப்பையும் எதிரிகளிடம் கனலையும் வெறுப்பையும் மூட்டி விட்டிருந்தன.

யாரும் கவனிக்காதபடி வர முயன்று ஹாலுக்குள் நுழைந்து பேச்சாளரின் அருகில் அமர்ந்தார் லெனின். ஆனால் கூடியிருந்தவர்கள் விளதீமிர் இலீச்சைக் கவனித்து விட்டார்கள். ஹாலில் ''லெனின்.... லெனின்'' என்று கிசுகிசுத்தார்கள். எனவே அமைதி கலைந்தது. தனது பேச்சை யாரும் கேட்கவில்லை என்று கண்ட பேச்சாளர் உரையை விரைவில் முடித்துக் கொண்டார்.

''இப்போது தோழர் லெனின் பேசுவார்'' என்று மேடையில் அறிவித்தார்கள்.

விளதீமிர் இலீச் மேடை மீது ஏறினார். அவர் அங்கு தோன்றியதே, இதுவரை எல்லோரும் பிரமாதப்படுத்திக் கொண்டிருந்த அந்த ''ஒற்றுமைக்கு'' முடிவு நெருங்கி விட்டது என்பதைக் காட்டியது. லெனினது வருகையைக்

கரவொலியின் இடி முழக்கத்தால் வரவேற்ருர்கள் போல் ஷிவிக்குகள். எல்லோரிலும் அதிக நேர்மை கொண்ட, பிரதானமாகத் தாழ் படியினரான மென்ஷிவிக்குகள் பகுதியும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது. மற்ற சமரச வாதிகள் சிடுசிடுத்த முகத்தினராய் மயான அமைதியைக் கடைப்பிடித்தனர்....

சர்வதேச நிலைமை பற்றிய மதிப்பீட்டுடன் விளதீமிர் இலீச் தமது பேச்சைத் தொடங்கிஞர். இரண்டாவது அகிலத்துக் கட்சிகளின் துரோகத் தனமான கொள்கை கள், நடைமுறைகளுக்கு அவர் தமது பேச்சின் பெரும் பகுதியை ஒதுக்கிஞர். தொழிலாளி வர்க்கத்துக்கு அவை புரிந்த துரோகத்துக்குச் சாட்டையடி கொடுத்தார்.

சமரசவாதிகளுக்கு லெனின் சூடு கொடுத்தார். இவர் கள் முதலாளித்துவத்தின் எடுபிடிகளாகவும் ஏஜெண்டு களாகவும் தொழிலாளி வர்க்க அணிகளில் இருக்கிருர்கள் என்றும், குறுகிய தேசிய வெறியைக் கிளப்பி விட்டு ஒரு நாட்டின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் மற் ஞெரு நாட்டின் உழைப்பாளர்களுக்கு எதிராக ஏவி விட முதலாளித்துவத்துக்கு உதவி புரிகிருர்கள் என்றும் நன்கு தெரிந்த உண்மைகளின் அடிப்படையில் சொன்ஞர். சமூக-ஜனநாயகம் நாற்றம் வீசும் பிணமாக மாறி விட்டது என்று லெனின் சொன்ன போது மென்ஷிவிக்குகள் ஆவேசம் கொண்டனர். லெனின் மீது கொடிய வசைமாரி பொழியப் பட்டது. கூட்டத் தலைவர் அவரைப் பேச விடக் கூடாது என்று சமரசவாதிகள் கோரினர். சமூக-துரோகிகளின் தலைவர்கள் குருட்டுத்தனமான தமது ஆதரவாளர்களை அத்து மீறிய செயல்களுக்குத் தூண்டினர்.

இந்தக் கொந்தளிப்புக்கு இடையில் ஆத்திரப்படாமல் நின்ருர் விளதீமிர் இலீச். இந்தத் திரும்புமுனைக் காலத் தில் லெனினது முக்கியத்துவத்தையும் அவரது உண்மை யான பாத்திரத்தையும் புரிந்து கொள்ள வேண்டுமாஞல் அவரது முழு உருவமும் முகமும் எத்தகைய அமைதியும் சக்தியும் கொண்டு அப்போது திகழ்ந்தன என்று கவனித் திருக்க வேண்டும்.

சமரசவாதிகள் ஏகாதிபத்தியப் படுகொலைகள் தொடர்ந்து நடப்பதை ஆதரித்து முதலாளித்துவ இடைக் கால அரசாங்கத்துக்கும் ஆதரவாக நிற்பதால் போல்ஷி விக்குகளுக்கும் சமரசவாத-மென்ஷிவிக்குகளுக்கும் இடை யே எத்தகைய ஒற்றுமையும் சாத்தியமில்லை என்று கூறிய லெனினது அறிவிப்பையும் இதே போன்ற உக்கிரமான ஊளையும் உறுமலுமே வரவேற்றன. இவர்கள் ''புரட்சிப் பாதுகாப்பு'' எனும் சொல்லளவான முழக்கத்தில் மறைந்து கொண்டு நடைமுறையில் புரட்சியைக் காட்டிக் கொடுக்கிறார்கள், பாட்டாளி வர்க்க நோக்கத்துக்குத் துரோகம் புரிகிறார்கள், புரட்சிக் குறிக்கோளுக்கு உழைப் பாளர்களின் பரவலான பகுதியோர் காட்டும் விசு வாசத்தை முதலாளிகளின் நலன்களுக்குப் பயன்படுத்த முனைகிறார்கள். இந்த மக்கள் திரளின் அரசியல் அனுபவ மின்மையையும், உருவாகியுள்ள சிக்கலான சூழலை அவர் கள் புரிந்து கொள்ளத் திறனற்றிருப்பதையும் பயன் படுத்திக் கொண்டு, வர்க்க உணர்வு உழைப்பாளர்களுக்குச் சுட்டிக் காட்டும் சரியான பாதையிலிருந்து அவர்களை வழிபிறழ வைக்கிறார்கள்.

விளதீமிர் இலீச் பேசத் தொடங்கிய உடனேயே ஒன்றுக் கொன்று பகிரங்கப் பகைமை காட்டும் இரண்டு முகாம் கள் கூட்டம் நடந்த ஹாலில் உருவாயின.

லெனினது வார்த்தைகளைப் போல்ஷிவிக்குகள் ஆர வாரமான கைதட்டல்களால் வரவேற்ற போது மென்ஷி விக்குகள் ''ஒழிக!'' கோஷத்துடன் வெறுப்பை உமிழ்ந் தார்கள். வெறி கொண்ட வசவுகளையும் பயமுறுத்தல்களை யும் விளதீமிர் இலீச் மீது வீசினார்கள். லெனினது ஒவ்வொரு புதிய வாக்கியத்துடனும் இந்தப் பகைமை வளர்ந்தது.

இந்த மாநாட்டில் நிதானம், கலக்கமின்மை, அமைதி ஆகியவற்றைக் கொண்டிருந்தவர் விளதீமிர் இலீச் ஒரு வரைத் தவிர வேறு யாருமில்லை. தொழிலாளர்கள், படை வீரர்களது சோவியத்துக்கள் பற்றிய தமது கருத்தை வளர்த்தபடி, தமது வர்க்கத்துச் சர்வாதிகாரத்தின் உண் மையான வடிவமாக இச்சோவியத்துக்கள் திகழ்வதைத்

தொழிலாளி வர்க்கம் கண்டு கொண்டது என்று லெனின் சொன்னார். நிலப்பிரபுக்களிடமும் மதஸ்தாபனங்களிடமும் கிறித்தவ மடங்களிடமுமிருந்து நிலத்தைப் பிடுங்கி விவசாயிகளிடம் கொடுப்பதற்காகப் பண்ணையாட்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களையும் விவசாயிகள் கமிட்டிகளையும் உருவாக்க வேண்டும் என்றார் லெனின்.

''புரட்சி நமது நாட்டில் சோவியத்துக்களின் குடியரசைக் கொண்டுவர வேண்டும்'' என்ற வாசகத்தை மிகவும் திடவுறுதியுடன் விளதீமிர் இலீச் சொன்னதைக் கேட்ட போல்ஷிவிக்குகள் அனைவரும் ஒன்றாக எழுந்து நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சமரசவாதிகளும் அக்கணமே இருக்கையிலிருந்து குதித்தெழுந்தனர். அவர்கள் சீழ்க்கையடித்தார்கள், கூக்குரலிட்டார்கள், வெறியுடன் மேசைகளைத் தட்டினார்கள், கால்களைத் துவைத்தார்கள். ஹாலில் சொல்லற்கரிய கூச்சல் எழுந்தது. லெனினைப் பழிவாங்குவதற்காக சோஷலிஸ்டு-துரோகிகளின் ஒரு பிரிவு முஷ்டிகளை ஓங்கிக் கொண்டு மேடையை நோக்கிச் சென்றது. ஆனால் போல்ஷிவிக்குகள் அவர்களது வழியை மறித்தனர். மேடையில் உட்கார்ந்திருந்த மென்ஷிவிக் தலைவர்களான த்செயித்சே, த்செரெடேலி, போன்றோரை மரண பயம் கவ்விக் கொண்டது. வலது புறம் இருந்த தம்மையொத்த சிந்தனையாளர்களுக்கும் இடது புறம் இருந்த போல்ஷிவிக்குகளுக்கும் வேண்டுதல் விடுத்து ஒழுங்கை நிலைநாட்ட வீணாக முயன்றார்கள் அவர்கள். இவ்வாறு ஒரு பத்து நிமிடம் நடந்தது. பின்னர் புயல் அடங்கியது. ஆனால் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி விவசாயிகளிடம் கொடுக்க வேண்டும் என்று லெனின் சொன்ன போது, குறிப்பாக ரயில் பெட்டியில் படைவீரர்களைத் தாம் சந்தித்தது பற்றியும் போரைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியும் சொன்ன போது மீண்டும் கொந்தளிப்பு எழும்பியது. போல்ஷிவிக்குகள் புதிய மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், வலது பக்க பெஞ்சுகளிலிருந்தோ வெறிக் கூச்சல் கிளம்பியது.

விவாதம் எப்படி இருந்திருக்கும் என்று ஊகிப்பது கஷ்டமல்ல. ''கலகக்காரர்'', ''அராஜகவாதி'' போன்ற வார்த்தைகளால் சமரசவாதிகள் விளதீமிர் இலீச்சுக்குப் பட்டஞ் சூட்டினர்.

லெனினது எந்தவொரு ஆய்வுரையையும் சமூக-துரோகிகளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். எனினும் லெனினது பிரபலமான பேச்சு நாடு முழுதும் பரவிற்று. இது பற்றி விவாதிக்காத தொழிற்சாலையோ படைவீடோ ஒன்று கூட இருக்கவில்லை.

போல்ஷிவிக் பத்திரிகைகள் மூலமாகவும், தொழிலாளர்கள், படைவீரர்களைக் கொண்டு போல்ஷிவிக்குகள் அமைத்திருந்த தாய்நாட்டார் சங்கம் என்ற அமைப்புகளின் மூலமாகவும் போர்முனைக்கும் கிராமத்துக்கும் இந்த உரை பரவியது. லெனினிய உண்மை உழைப்பாளர்களின் மிகப் பரவலான மக்கள் திரள்களை எட்டுவதற்காக வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள், படைவீரர்கள், மாலுமிகள் ஆகியோரில் ஆயிரக் கணக்கானோர் எல்லா வகையிலும் முயற்சிகள் செய்தனர்.

ஆனால் புரட்சியின் விரோதிகளும் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. கீழ்த்தரமான அவதூறுப் பிரசாரத்தை அவர்கள் கிளப்பி விட்டனர். இப்பிரசாரத்துக்கு சமூக-ஜனநாயகக் கொள்கைமாறியான அலெக்சீன்ஸ்கி (இரண்டாவது அரசாங்க டூமாவின் மாஜி உறுப்பினர்) தலைமை தாங்கினார். போல்ஷிவிக்குகளை வெறித்தனமாக வேட்டையாடுவது அதிகமாயிற்று.

ஒவ்வொரு நாளும் நிலைமை மேலும் மேலும் கவலைக்குரியதாக ஆயிற்று. இடைக்கால அரசாங்கத்தின் மீது நம்பிக்கை என்ற முழக்கத்துடன் முந்தைய ஜார் காவல் படையினரின் முழுமையான பகுதிகள் தெருக்களில் பவனி வந்தன. வர்க்க உணர்வற்று இருந்த படைவீரர்களின் அறிவற்ற திரள்கள், சமூக உணர்வு இல்லாதவர்கள் ஆகியோரை போல்ஷிவிக்குகளைத் தாக்குவதற்கு எதிர்ப்புரட்சி முதலாளித்துவம் தயார் செய்து வந்தது.

புரட்சிக்கு ஆபத்தான காலம் வந்தது. ஒருவருக்கொருவர் வாதம் புரிகிற, சச்சரவிடுகிற மக்களின் கொந்தளிக்கும் கடலாகப் பெத்ரோகிராத் நகரம் முழுதும் மாறிவிட்டது. ஒருசாரார் லெனினை ஆதரித்தார்கள், மறு சாரார் அவரைத் திட்டினார்கள். பல வார காலத்துக்கு எங்கெங்கும் அவரைப் பற்றியே பேசப்பட்டது.

பெத்ரோகிராத் போல்ஷிவிக்குகளிடம் அப்போது லெனின் சொன்னார்:

''தோழர்களே, உங்களிடையே ஊசலாட்டக்காரர்கள் நிறைய இருக்கிறார்கள். தவறான வழியை லெனின் கைக்கொண்டிருக்கிறார் என்றும் அவர் அளவு கடந்து திடீரெனத் திரும்பிவிட்டார் என்றும் சிலர் சொல்கிறார்கள். பிரச்னையைக் காலம் தீவிரமாக முன்வைத்திருப்பதால் நானும் அதனைத் தீவிரமாக முன்வைத்தேன். மக்கள் திரள் நமது வழியில் வரத்தக்க விதத்தில் அவர்களிடையே நாம் பிரச்சாரம் செய்ய வேண்டியது இப்போது அவசியம். இவ்வாறு நீங்கள் செய்தீர்களானால் நாம் வெற்றி பெற்று விடுவோம்.''

போல்ஷிவிக்குகளின் பெத்ரோகிராத் நகர மாநாடு தொடங்குவதற்கு முன்பு மீண்டும் படைகளைத் தெருவில் பவனி வரச் செய்தது இடைக்கால அரசாங்கம். இந்தப் படை ஊர்வலம் விளதீமிர் இலீச்சைக் குறிப்பாகக் கவலையுறச் செய்தது. போல்ஷிவிக்குகளின் இராணுவ அமைப்பு ஒரு கம்பெனியையாவது நமது முழக்கங்களுடன் தெருவில் நடமாடச் செய்ய வேண்டும் என்று அவர் அறிவித்தார். போல்ஷிவிக்குகளிடமும் ஆயுதப் படைகள் இருக்கின்றன என்றும் ஆயுதங்களுக்கு எதிராக போல்ஷிவிக்குகளும் ஆயுதத்தை ஈடுபடுத்துவார்கள் என்றும் முதலாளி வர்க்கத்துக்குக் காட்ட வேண்டும் என்றார். மெய்யாகவே, போல்ஷிவிக்குகளுக்கு ஆதரவான படைப் பிரிவு தெருவில் தோன்றி, போல்ஷிவிக் முழக்கங்களுடன் சிறிய தொழிலாளர் ஊர்வலம் தெருவில் சென்றதுதான் தாமதம், இடைக்கால அரசாங்கம் அச்சம் கொண்டு தனது படைகளின் பவனியை நிறுத்தி விட்டது.

ஏப்ரல் 14ல் நமது கட்சியின் அனைத்து நகரப் பெத்ரோகிராத் மாநாடு தொடங்கியது. இதில் அப்போதைய நிலைமை பற்றி லெனின் விவர அறிக்கை வாசித்தார். சிறப்பான முழுமையும் தெளிவும், பரவலான வாய்ப்புகளும் லெனினது வெல்லற்கரிய தர்க்கப் பொருத்தமும் கொண்டு திகழ்ந்த இந்த அறிக்கை மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரின் மீதும் ஆழ்ந்த மனப்பதிவை ஏற்படுத்தியது. மாநாட்டில் பங்கு கொண்ட கொல்லந்தாய் இந்த அறிக்கை பற்றிப் பேசுகையில், புழுக்கம் நிறைந்த அறைக்குள் புகுந்து வீசி சூழலுக்கு உயிர்ப்பூட்டும் ''தூய காற்றுக்கு'' அதனை ஒப்பிட்டார்.

லெனின் வந்து சேர்ந்த அன்றைக்குக் கட்சித் தோழர்கட்கும் பின்னர் சோவியத்துக்கள் பிரதிநிதிகளின் மாநாட்டு போல்ஷிவிக் பிரிவினருக்கும் விவரித்த கருத்துக்களே பிரதானமாக இவையாகும்.

மாநாட்டுக்குப் பின்னர் சற்றும் குறையாத விடா முயற்சியுடனும் பொறுமையுடனும் கட்சிக்கு முன்னுள்ள கடமைகளைத் தொடர்ந்து விளக்கினார்.

நாம் முடிந்த அளவுக்குச் சிறப்பாக ஒன்றுபடுவதும் நிலைமையை முடிந்த அளவுக்குச் சிறப்பாகக் கிரகித்துக் கொள்வதும் இப்போது நம் முன்னுள்ள பணி என்று விளதீமிர் இலீச் கூறினார். நமது கிளர்ச்சியையும் பிரசாரத்தையும் மேற்கொண்டு படைவீடுகளுக்கும் விவசாய மக்கள் திரளுக்கும் கொண்டு சென்று தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுக்கு விரோதி அல்ல என்றும், பிப்ரவரியில் தொடங்கிய புரட்சி அதன் முடிவை நெருங்கவே இல்லை என்றும், புரட்சியைத் தொடங்கி விட்ட நாம் அதனை இறுதி வரை இட்டுச் செல்ல வேண்டும் என்றும், உழைப்பாளர்கள் அனைவருக்கும் இப்புரட்சி விடுதலையை நல்கும் என்றும், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோருடைய வாழ்நிலையின் அடித்தளத்தையே இது பறித்து விடும் என்றும், அதாவது அவர்களிடமிருந்து நிலம், ஆலைகள், தொழிற்சாலைகள், வங்கிகள் ஆகியவற்றைப் பிடுங்கி உழைப்பாளிகளின் கைகளில் அவற்றை வழங்கும் என்றும்

அவர்களுக்குப் புரியச் செய்ய வேண்டும். முதலாளிகள் நமக்கு எதிராக ஏவி விடப் பார்க்கிற படைவீரர்களின் மத்தியிலும் தொழிலாளர்கள் நடுவிலும் இவ்வாறு நாம் கிளர்ச்சி செய்தால் நாம் வெற்றி வாகை சூடுவோம்.

முதலாளித்துவத்தின் ஏஜெண்டுகளது செல்வாக்குக்கு உட்பட்டு, சிக்கலான சூழலைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கிற வர்க்க உணர்வு குறைவாயுள்ள படைவீரர்களின் மீது மிகச் சரியாகவும் மிக வேகமாகவும் செல்வாக்குச் செலுத்துவது எப்படி என்று விளதீமிர் இலீச் விளக்கினார்.

''நெடிய உரைகள் அவர்கட்குத் தேவையில்லை'' என்றார் அவர். ''நீண்ட பேச்சு நிறையக் கேள்விகளை எழுப்புகிறது. இறுதியில் படைவீரனின் கவனம் சிதறி விடுகிறது. எல்லாவற்றையும் அவனால் கிரகித்துக் கொள்ள முடிவதில்லை. விளைவு என்ன ஆகிறது என்றால், அவனை நீங்கள் திருப்திப்படுத்துவதில்லை, அவன் உங்களைப் பற்றி மனக்குறை கொள்கிறான். சமாதானத்தைப் பற்றியும் நிலத்தைப் பற்றியும் அவனுக்குச் சொல்ல வேண்டும். இதில் அதிகமாக விளக்கிச் சொல்ல ஒன்றுமில்லை. சில வார்த்தைகளிலேயே படைவீரன் உங்களைப் புரிந்து கொள்வான்'' என்று சொன்னார் விளதீமிர் இலீச்.

சமாதானம், நிலம், ஆலைகள் தொழிற்சாலைகள் மீது தொழிலாளர் கண்காணிப்பு ஆகிய மூன்று விஷயங்களை விளக்கிச் சொல்லும் திறனுள்ள மிக எளிய பிரசாரகர்கள் நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கானவர்களைப் படைவீரர்களிடம் அனுப்ப வேண்டும் என்று விளதீமிர் இலீச் கோரினார்.

இந்தக் கடிய பல்லாண்டுப் போரினால் படைவீரன் களைத்துச் சோர்ந்து போனதால் அவன் சமாதானத்தை நாடுகிறான். ஓய்வு கொள்ள, வீடு திரும்ப, பண்ணையைச் சரி செய்யத் தனது பலத்தையெல்லாம் கூட்டித் துடிக்கிறான். அவனுக்கு நிலம் வேண்டும். அவனது குடும்பம் பட்டினி கிடக்கிறது, அதற்கு உணவு தர வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். ஆலைகளையும் தொழிற்சாலைகளையும்

முதலாளிகளின் கைகளில் விட்டுவைக்கக் கூடாது, அவற்றைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவன் புரிந்து கொள்கிறான். பிரசாரகர் எந்த அளவுக்கு எளியவராக இருக்கிறாரோ, எந்த அளவுக்கு இம்மூன்று விஷயங்களையும் பற்றி அவர் கபடமின்றிப் பேசுவாரோ, அந்த அளவுக்கு விரைவாகப் படைவீரன் போல்ஷிவிசத்தை வந்து அடைவான். ஏனெனில் வர்க்க உணர்வின்றி அவன் போல்ஷிவிக்குகளை விட்டு விலகி ஓடுகிறான். அவனுக்கு அத்தகைய மனநிலையை ஊட்டியிருக்கிறார்கள். உண்மையிலோ போல்ஷிவிக்குகள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஒத்த கோரிக்கைகளையே அவனும் முன்வைக்கிறான்.

பிரசாரகர்களாகப் படைவீரர்களிடம் யாரை அனுப்பும்படி விளதீமிர் இலீச் ஆலோசனை கூறினார்? பிப்ரவரிப் புரட்சியில் தொழிலாளர்களைத் தவிர மிகப் பிரபலமான பங்கு வகித்தவர்கள் மாலுமிகள் என்றார் அவர். அவர்களைத்தான் படைவீரர்களிடம் அனுப்ப வேண்டும்! அவர்கள் படைவீடுகளுக்குச் சென்று சொல்லட்டும்: ''நாம் சகோதரர்கள். நீ துப்பாக்கி தூக்கி நிற்கிறாய், நானும் துப்பாக்கி ஏந்தியிருக்கிறேன். நாம் இருவரும் ஒரே வேலையைத்தான் செய்கிறோம். நீங்கள் ரத்தம் சிந்துகிறீர்கள், நாங்களும் ரத்தம் சிந்துகிறோம்.''

கிரன்ஷ்தாத்திலிருந்து சில நூறு மாலுமிகளை அழைப்பது என்று அப்போது நாங்கள் முடிவு செய்தோம். போல்ஷிவிக்குகளின் ராணுவ அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்தது. இவ்வமைப்பு இந்த வேலையில் எப்போதும் கவனம் செலுத்துமாறு செய்ய முயன்றார் விளதீமிர் இலீச்.

பிரசாரகர்களின் பெரும் படையே வந்து சேர்ந்தது! செய்ய வேண்டியதை அவர்களுக்குக் கற்றுத் தருகிற, விளக்கிச் சொல்கிற பொறுப்பு எனக்கு வாய்த்தது. இந்த வேலையைத் தம்மால் நிறைவேற்ற முடியுமா என்பதில் சிலருக்குச் சந்தேகம் வந்தது.

''படைவீடுகளுக்கு நாங்கள் எப்படிச் செல்வது? படைவீரர்கள் எங்களிடம் கேள்விகள் கேட்பார்கள், அவற்றுக்கு

நாங்கள் பதில் சொல்ல முடியாது'' என்றார்கள் மாலுமிகள்.

நான் கேட்டேன்:

''சமாதானத்தைப் பற்றி உங்களால் சொல்ல முடியுமா?''

''முடியும்'' என்றார்கள் மாலுமிகள்.

''நிலத்தைப் பற்றி உங்களால் பேச முடியுமா?''

''முடியும்.''

''பொருளுற்பத்தியின் மீது தொழிலாளர்கள் கண்காணிப்பை நிறுவ வேண்டும் என்பது பற்றி உங்களால் பேச முடியுமா? உங்களால் சில கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை என்றால், இக்கேள்விகட்கு பதில் தெரிந்து கொள்வதற்காக, அவர்கள் ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்து லெனினிடம் அனுப்பலாம் என்று சொல்லுங்கள்.''

பின்னர் விளதீமிர் இலீச் குழுவாரியாக அவர்களுடன் உரையாடினார். தமது ஆணைகள் மூலம் அவர்கட்கு அவர் உதவினார். படைவீரர் திரளைத் தம் பக்கம் கவர்வதற்கு எந்த வழியில் செயல்பட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். தொடங்கி விட்ட வேலையை இறுதி வரை செய்து முடிக்க வேண்டியது அவசியம் என்று அவர்களிடம் பிரதானமாகக் கோரினார் லெனின். ''வெற்றி கிட்டும் வரை படைவீட்டிலிருந்து வெளியேறாதே. நீ படைவீரர்களுடனேயே நீர் பருகு, உணவருந்து, உறக்கம் கொள். உனக்கு அவர்கள் உதை கொடுத்தால் அதை வாங்கிக் கொள்.'' என்று அனுப்பப்படுகிற மாலுமிகளுக்கு நாங்கள் அறிவுரைகள் வழங்கினோம்.

எனினும் அவர்கள் மனவமைதி கொள்வதற்காக, பல மாலுமிகளை ஒன்றாக அனுப்புவது என்று நாங்கள் முடிவு செய்தோம்.

சில மாலுமிகள் படைவீடுகளில் இரண்டு முதல் ஐந்து நாட்கள் வரை தங்கியிருந்தனர். சிலர் ஒரு வாரம் தங்கினர். பின்னர் திரும்பி வந்து குறிப்பிட்ட படைப்பிரிவு போல்ஷிவிக்குகள் பக்கம் இருப்பதாகச் சொன்னார்கள்.

இவ்வாறாக ஒரு பத்து நாளில் படைவீரர்களின் மனநிலையில் மாற்றத்தைக் கொண்டு வர முடிந்தது. பத்து நாட்களுக்குப் பின்னர் பதினொரு படைப்பிரிவுகள் மாலுமிகளை நம்பின, பொது நன்மைக்காகவே போல்ஷிவிக்குகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று புரிந்து கொண்டன. தொழிலாளர்கள், விவசாயிகளின் நன்மைக்காக, நிலத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்காகவும் சமாதானத்தை எட்டுவதற்காகவும் முதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஜெனரல்கள் ஆகியோரின் கைகளிலிருக்கும் ஆட்சியை தொழிலாளர்கள், விவசாயிகளின் கைகளுக்கு மாற்றுவதற்காகவுமே போல்ஷிவிக்குகள் போராடுகிறார்கள் என்று அவை புரிந்து கொண்டன.

பிரசாரகர்கள் பெத்ரோகிராத் நகரத்துப் படைவீடுகளில் மேற்கொண்ட, மிகச் சிறப்பாக ஒழுங்கு படுத்தப் பட்ட இந்த வேலை, சில படைப்பிரிவுகளின் எதிர்ப்புரட்சி அதிகாரிகளது பயங்கரவாதச் செயல்கள் நடைபெற்ற போதும் பெருத்த வெற்றி பெற்றது. படைவீரர்களின் உணர்வில் ஆழமான சுவடுகளைப் பிரசாரகர்கள் விட்டு வந்தார்கள். தொழிலாளர்கள் விவசாயிகளின் உண்மையான நண்பர்கள், கூட்டாளிகள் என்றும், தொழிலாளர்களின் தலைமை இல்லையேல் முதலாளிகள், அவர்களது எடுபிடி ஆட்களான மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் ஆகியோரின் செல்வாக்குக்குள் படைவீரர்கள் விழுந்து விடக் கூடும் என்று அவர்கள் மிக எளிய மொழியில் எடுத்துக் காட்டினார்கள். தொழிலாளர்களின் தலைமை இன்றி போர் நிறுத்தத்தைப் பெறுவதோ, பிரபுக்களின் நிலத்தை அடைவதோ விவசாயிகளால் முடியாது என்று படைவீரர்கட்கு அவர்கள் விளக்கினார்கள்.

சாதாரணப் பிரசாரகர்கள் படைவீடுகளில் மேற்கொண்ட பெருத்த வேலை பிரசாரத்தை மேலும் உயர்ந்த மட்டத்துக்கு இட்டுச் சென்று, போல்ஷிவிக்குகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுகிற பாதையில் செலுத்தி அதற்குத் திட்டவட்டமான தன்மையை வழங்கியது. ஒவ்வொரு படைவீட்டிலும் இருந்த வீரர்கள் தம் முன்னே

லெனின் வந்து பேச வேண்டும் என்று வற்புறுத்திஞர்கள். அவர்கள் லெனின் பேச்சைக் கேட்டார்கள்.

தொழிலாளர்கள், படைவீரர்கள், மாலுமிகள் ஆகியோரின் பிரம்மாண்டமான கூட்டம் ஒன்று விரைவில் கடற்படைக் கட்டடத்தில் நடைபெற்றது.[1] விசாலமான ஹால் நிரம்பி வழிந்தது. லெனின் பேச்சைக் கேட்க விரும்பியவர்கள் அனைவருக்கும் இடம் போதவில்லை. படிக்கட்டுகளிலும் கட்டடத்தின் வாயிலிலும் நிறையப் பேர் நின்றிருந்தனர்.

முதல் வார்த்தைகளிலிருந்தே லெனின் கூட்டத்தை ஆட்கொண்டு விட்டதால் பிரம்மாண்டமான அம்மக்கள் திரள் அவரது பேச்சை நிசப்தமாகக் கேட்டது. ஆட்சேபக் குரல் ஒன்று கூடக் கேட்கவில்லை. தகவல்களை ஆய்வு செய்த அடிப்படையில் லெனின் வந்தடைந்த முடிவுகளோ இடி முழக்கமெனக் கரவொலியை எழுப்பின.

போரின் ஏகாதிபத்தியத் தன்மையையும், யாருக்கு அதனுல் லாபம் என்பதையும், முதலாளிகளின் வெறி மிகுந்த லாப வேட்டைக்காக மக்கள் எத்தகைய சித்திரவதைகளையும் இழப்புக்களையும் அனுபவிக்க நேருகிறது என்பதையும் பற்றி விளதீமிர் இலீச் சொன்ஞர். பாதாளத்தின் விளிம்புக்கு மக்களை இட்டு வந்திருக்கிறது போர் என்றும், அதனை உடனடியாக முடிக்கவில்லை என்ருல் பட்டினியும் படுநாசமும் நாட்டினைப் பாழாக்கி விடும், ஏகாதிபத்திய மிருகங்களின் காலனியாக அதனை மாற்றி விடும் என்றும் அவர் கூறிஞர்.

லெனின் வெளியிட்ட ஒவ்வொரு சிந்தனையும் தொழிலாளர்கள், படைவீரர்களின் இதயங்களில் ஆழமாகப் பதிந்தது.

மிகவும் இறுக்கம் நிறைந்த நேரத்தில், போரில் நிகழ்த்திய விசேஷமான வீரச் செயல்களுக்காக தாம் பெற்ற கியோர்கி சிலுவைகள் பலவற்றை அணிந்து கொண்டு படைவீரர் ஒருவர் திடீரென்று கூட்டத்தின் வழியாக முட்டி மோதிக் கொண்டு வந்தார். அவர் மேடை மீது ஏறி, லெனினை நெருங்கி மார்பிலிருந்து சிலுவைகளைக் கழற்றி லெனினிடம் தந்தார்:

"பிராவ்தாவுக்காக வைத்துக் கொள்ளுங்கள்!"*

மற்ற படைவீரர்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். விரைவில் மேடையில் சிலுவைகளின் குவியலே உருவாகி விட்டது.

பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்குவது பற்றியும், அதனை விவசாயிகளுக்கு வழங்குவது பற்றியும் அதனை வினியோகிப்பதற்காக விவசாயிகளின் கமிட்டிகள் அமைப்பது பற்றியும் லெனின் கூறிய வார்த்தைகள் இன்னும் பெருத்த உற்சாக வரவேற்பைப் பெற்றன.

இடைக்கால அரசாங்கத்தின் முதலாளித்துவத் தன்மை பற்றியும், ஏகாதிபத்தியப் போரை நடத்துகிற அரசாங்கமாக அது விளங்குகிறது, நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் சித்தத்தையே இது செயல்படுத்துகிறது என்பது பற்றியும் லெனின் சொன்ன போது இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவாக ஒரு குரலும் கேட்கவில்லை.

அர்த்தமற்ற இந்தப் போரின் விளைவாக மாட்டிக் கொண்ட அடைசந்திலிருந்து மக்கள் வெளிவருவதற்கு ஒரேயொரு வழி போர் நிறுத்தமே என்று லெனின் விளக்கினார்.

லெனினது பேச்சு முடிந்த பின் மகிழ்ச்சி ஆரவாரம் கிளம்பியது. விலகி வழிவிட்ட படைவீரர்களுக்கு இடையில் அவர் நடந்து செல்கையில் அவர்களது முகம் ஒளிர்ந்தது. "இவர் நம்மவர், நம்மவர்" என்ற பேச்சு கேட்டது.

இந்த நேரத்தில், மாணவர்கள், இன்னும் தமது பக்கத்திலிருந்த படைப்பிரிவுகள், பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு அனேகமாக ஒவ்வொரு நாளும் முதலாளித்துவ வர்க்கம் ஊர்வலங்கள் நடத்தியது. இத்தகைய ஊர்வலங்கள் பெத்ரோகிராத் முழுதும் நடைபெற்றன.

---

* பத்திரிகை பிராவ்தாவுக்கு நிரந்தரமான பொருள் வகை அடித்தளம் இருக்கவில்லை. தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்கள் அனுப்பிய "பிராவ்தா நிதியின்" மூலம் பத்திரிகை நடந்து வந்தது.—(ப-ர்.)

நாமும் ஊர்வலம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார் லெனின். சமரசவாதிகளின் பக்கம் பெரும் பான்மை இருக்கிறது என்றும் சிறுபான்மையாய் நாம் வீதிக்கு வந்தால் அவர்கள் நம் மீது பாய்வார்கள் என்றும் அப்போது சண்டை நடக்கும் என்றும், நமது ஆதரவாளர் கள் ஒரேயடியாகப் படுகொலைக்கு ஆளாக நேரலாம் என் றும் கூறி நாங்கள் விளதீமிர் இலீச்சுக்கு மறுப்புத் தெரி வித்தோம்.

நாங்கள் சொல்வது சரியில்லை என்றும், படைவீரர் களைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை, எடுத்துச் செல்கிற முழக்கங்களில் உறுதியும் நம்பிக்கையும் கொண் டிருக்குமாறு நமது படைவீரர்களைத் தயார் படுத்த வேண் டும் என்று லெனின் விளக்கிச் சொன்னார். சண்டை மூளு மேயானால் எதிர்த் தரப்பிலிருக்கும் படைவீரர்களைப் பார்த்து, ''நாங்கள் உழைப்பாளிகள், நீங்களும் உழைப் பாளிகள், அப்படியானால் நாம் ஏன் இரு வேறு முகாம்களில் இருக்கிறோம்? நாம் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? நாங்கள் ஏந்தி வரும் முழக்கங்கள், உங்களை எங்களுக்கு எதிராக ஏவி விடுகிறவர்களுக்குப் பிடிக்காத தால்தான், எங்களுக்கு எதிராகச் செல்லுமாறு உங்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள்'' என்று நமது பக்கத்துப் படைவீரர்கள் சொல்லி அவர்களுடன் தோழமை கொள்ளுவதற்கு நாம் வகை செய்ய வேண்டும்.

''அப்போது அந்தத் தரப்பில் இருக்கும் படைவீரர் கள் நம் பக்கம் வந்து விடுவார்கள்'' என்று லெனின் சொன்னார்.

உண்மையில் அவ்வாறே நடந்தது. ருஷ்யா முழுவதும், உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்கள், விவசாயி களின் பொது நலனுக்காகவே நாங்கள் போராடுகிறோம் என்று, படைவீரர் உடை அணிந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் எங்கள் முழக்கங்களைப் புரிந்து கொள்ளத் தொடங்கிய போது அவர்கள் எங்கள் பக்கம் வரத் தொடங்கினர். ஆரம்பத்தில் தனித்தனிக் குழுக்களாக வந்தனர். பின்னர் முழு ரெஜிமென்டுகளும், டிவிசன்களுமே

இவ்வாறு வந்தன. லெனின் சொன்ன பாதையிலேயே சம்பவங்கள் சென்று கொண்டிருந்தன. எனினும், புரட்சி எந்த அளவுக்கு விரிவடைகிறதோ அந்த அளவுக்கு எதிரிகள் அதனை வீழ்த்தப் பார்ப்பார்கள் என்று அவர் எச்சரித்தார். இப்போது முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாங்கம் இருந்து வருகிற நிலைமையில் அது நீண்ட நாள் தாக்குப் பிடிக்க முடியாது, தனது துரோகத் தனத்தை அது கடைசி வரை கொண்டு செல்ல முயலும். அரசாங்கம் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பது குடியரசை நிர்மூலப் படுத்துவதாகவும் புரட்சியை முறியடிப்பதாகவும் அர்த்தப்படும்.

தொழிலாளி வர்க்கத்துடன் கொண்டுள்ள உறவை மோசமாக்கிக் கொள்வதற்கு முதலாளித்துவ வர்க்கம் முயற்சி செய்யும் என்றும் தொழிலாளி வர்க்கத்தை ஒரேயடியாக முறியடிப்பதற்காக அதனை உரிய காலத்துக்கு முன்பே ஆயுதத் தாக்குதல் தொடுக்குமாறு தூண்டும் என்றும் விளதீமிர் இலீச் கூறினர்.

விளதீமிர் இலீச் சொன்னதெல்லாம் விரைவில் அப்படியே நடந்தது. வெற்றி கிட்டும் வரை போர் நடத்த வேண்டும் என்று மில்யுக்கோவ் (இவர் அப்போது வெளி விவகார அமைச்சராக இருந்தார்) கூட்டணி அரசுகள் அனைத்துக்கும் குறிப்பு அனுப்பினர் என்பது தெரிந்ததே.

மில்யுக்கோவின் குறிப்பு தொழிலாளி வர்க்கத்துக்கும் குடியரசுக்கும் எதிராகப் போர்ப் பிரகடனம் செய்வதாகும் என்று கூறி, இடைக்கால அரசாங்கத்தின் கொள்கையைத் தொழிலாளி வர்க்கத்தின் முன் தோலுரித்துக் காட்டினர் விளதீமிர் இலீச்.

புரட்சிகரத் தொழிலாளி வர்க்கமும் படைவீரர்களும் தமது பதாகைகளையும் முழக்கங்களையும் தாங்கியபடி ஏப்ரல் மாதம் தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு புறம் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் மறுபுறம் முதலாளித்துவ வர்க்கமும் நிற்க நடைபெற்ற முதற் சமர் ஆகும் இது.

விளதீமிர் இலீச் ஆணையின்படிப் படைவீரர்களிடையே முன்னதாகவே பிரசாரப் பணி நடத்தியிருக்கவில்லை என்ருல் இந்தச் சமர் தொழிலாளி வர்க்கத்துக்குப் பெருத்த தோல்வியைத் தந்திருக்கும்.

தொழிலாளி வர்க்கம் தொடுத்த இத்தாக்குதலின் விளைவாகக் கூட்டணி அரசாங்கம் என்ற ஒன்று அமைக்கப்பட்டது. இதில் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளைத் தவிர சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் அங்கம் வகித்தனர்.

இது புரட்சியின் முதல் நெருக்கடி, முதல் திரும்பு முனை என்று விளதீமிர் இலீச் அப்போது சொன்ஞர். புரட்சி, ஒன்று முதலாளித்துவ வழியில் செல்லும்—அப்போது பிரெஞ்சு அல்லது அமெரிக்கக் குடியரசு போன்ற ஒன்று நமக்குக் கிட்டும்—அல்லது அது பாட்டாளி வர்க்கப் பாதையில் போகும் என்று இதற்கு அர்த்தம் என்ருர் லெனின்.

தொழிலாளி வர்க்கம் பெற்ற இந்த முதல் வெற்றிக்குப் பின் போல்ஷிவிக்குகளை விளதீமிர் இலீச் எச்சரித்தார்:

''போலி மயக்கத்துக்கு ஆளாகாதீர்கள். நம் தரப்பில் சிறு முன்னேற்றமே இது. கிட்டிய வெற்றியை நாம் மேலும் வளர்க்கப் போகிருேமா அல்லது அதனை இழந்து விடுவோமா என்பது நம்மைப் பொறுத்தே இருக்கும். அடுத்த சமருக்கு முதலாளித்துவ வர்க்கம் கடுமையாகத் தயாரிப்புச் செய்யும் என்பதையும் தொழிலாளி வர்க்கம் தேவையான அளவுக்கு ஏற்பாடுகள் செய்து கொள்வதற்குள், கூடிய விரைவில் இந்தச் சமர் நடந்து விட வேண்டும் என்பதற்காகத் தனது பலமனைத்தையும் செலுத்திப் பாடுபடும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.''

கிளர்ச்சி, பிரசாரத்தின் மூலம் முடிந்த அளவுக்கு அதிகமாக மக்கள் தொகையை எட்ட வேண்டும், தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற பணியைக் கட்சிக்கு முன்வைத்தார் லெனின்.

புரட்சியின் போக்கில் தனது வேலையில் கட்சி பெரிய முன்னேற்றங்களை ஈட்டியது. மே மாத இறுதியிலேயே

''கூட்டணி அரசு ஒழிக!'', ''சமாதானம் வேண்டும், உணவு கொடு, ஆலைகள், தொழிற்சாலைகள், வங்கிகளைத் தேசவுடைமை ஆக்கு, முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவோம்!'' என்னும் முழக்கங்களுடன் பெத்ரோகிராத், மாஸ்கோ, யூரல், பிற நகரங்கள், தொழில் மையங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்கள் நேரடியாகத் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தும் அளவுக்கு மக்களின் மனநிலை இருந்தது.

எனினும் விளதீமிர் இலீச் எங்களை மீண்டும் எச்சரித்தார்:

''நாம் வெற்றி பெற்று விட்டோம். ஆனால் இது இக்கட்டு நிறைந்த காலம் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். நிலைமை திடீரென்று தீவிரமாக மாறி விடலாம். அடைந்துள்ள வெற்றியை எல்லா வகையிலும் வளர்க்கவும் ஆழப்படுத்தவும் வேண்டும்.''

போரைத் தொடர வேண்டுமென்றும், அதிகாரம் முதலாளித்துவ வர்க்கத்திடம் இருக்க வேண்டுமென்றும் மக்கள் சித்தத்துக்கு மாறாகக் கருத்து வெளியிட்ட சோவியத்துக்களின் முதல் காங்கிரஸ் நடந்த போது இது நிகழ்ந்தது. போர்முனையைப் பலவீனப் படுத்தாமல் இருப்பதற்காகப் படைவீடுகளில் இன்னும் கண்டிப்பான இராணுவ ஒழுங்குமுறையை அமல்படுத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் கருத்து வெளியிட்டது. இதைத்தான் கேரென்ஸ்கி விரும்பினார். படையினருக்கு எதிராக முந்தைய தண்டனைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று இவர் கோரினார்.

சோவியத்துக்களின் முதல் காங்கிரசில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மக்களுக்கு எதிராகப் போனதால், மக்கள் பின்பற்றக் கூடிய நமது சொந்த முழக்கங்களுடன் நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது என்று விளதீமிர் இலீச் அறிவித்தார். இவ்வாறாக இங்கு இரண்டு விதமான போக்குகள் மோதிக் கொள்ளும்: ஒரு போக்கு உழைப்பாளர்கள் அனைவரது நலன்களையும் வெளியிடுவது. மற்றொரு

போக்கோ சமரசவாதிகள், முதலாளித்துவ வர்க்கம் ஆகியவற்ருல் ஏமாற்றப்பட்டவர்களின் மனநிலையைக் கொண்டது. இவர்கள் இன்னும் குறைவான வர்க்க உணர்வு கொண்டவர்கள், கல்வியறிவற்றவர்கள், வளர்ச்சியடையாதவர்கள், தமது விரோதிகளான முதலாளித்துவ வர்க்கத்துடனும் எல்லா விதமான சோஷலிஸ்டு-துரோகிகளுடனும் கூடச் செல்கிறவர்கள். சமாதானம், நிலம், தொழிலாளர் கண்காணிப்பு ஆகிய முழக்கங்களை நாம் இப்போது வெளியிட வேண்டியது அவசியமாகும் என்ருர் விளதீமிர் இலீச்.

போல்ஷிவிக் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. தொடக்கத்தில் அது ஜூன் 10ஆம் நாளில் நடத்தப்படலாம் என்று குறிக்கப்பட்டது. ஆனல் சமரசவாதிகளான மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் ஆகியோரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த எல்லா நிறுவனங்களும், முதன்மையாக பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியும், பெத்ரோகிராத் சோவியத்தும் மற்ற சில சோவியத்துக்களும் ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக ஒன்றுசேர்ந்து விட்டன. போல்ஷிவிக்குகள் படுகொலைக்கு ஏற்பாடு செய்கிருர்கள் என்றும், கூட்டாக வேலை செய்ய அவர்கள் விரும்பவில்லை என்றும், ஒன்றுசேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்த அவர்களுக்கு விருப்பமில்லை என்றும் எல்லா சமரசவாத, முதலாளித்துவக் கட்சிகளும் கூச்சல் போடத் தொடங்கின.

அப்போது லெனின் சொன்ஞர்:

''சரி. நாம் ஒன்ருக ஆர்ப்பாட்டம் நடத்துவோம். நாம் அவர்களுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினல் பொதுவான முழக்கங்களுடனேயே போவோம் என்று சமரசவாதிகளான மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களும், நினைப்பது வீணே. இல்லை. ஒவ்வொரு தொழிற்சாலையும், ஒவ்வொரு ஆலையும், ஒவ்வொரு படைப் பிரிவும் தமது சொந்த முழக்கங்களுடன் செல்லட்டும்.''

போல்ஷிவிக்குகள் பின்கண்ட முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்:

''பத்து மந்திரிகள்-முதலாளிகள் ஒழிக! சோஷலிச அரசாங்கம், தொழிலாளர்கள், விவசாயிகளின் அரசாங்கம் வாழ்க! ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!''

''நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் ஒழிக! விவசாயிகளின் கையில் நிலத்தைக் கொடு! ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் தொழிலாளியின் கண்காணிப்பில் வை!''

''ஏகாதிபத்தியம் ஒழிக! முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போர் வாழ்க!'' முதலியன.

ஜூன் மாதம் 18ஆம் நாள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று சோவியத்துக்களின் அனைத்து ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் முடிவு செய்யப்பட்டது. மார்சோவ் சதுக்கத்தில், சமரசவாதிகளின் தலைவர்களும் அரசாங்கத்தில் இருந்த அவர்களது பிரதிநிதிகளும் கூடியிருந்த மேடைகளுக்கு முன்னே, ஒன்றுக்குப் பின் ஒன்றாக தொழிற்சாலைகள், ஆலைகள், படைப்பிரிவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளர்களும் மாலுமிகளும், படைவீரர்களும் போல்ஷிவிக் முழக்கங்களுடன் அணிவகுத்துச் சென்றனர்.

போல்ஷிவிக் முழக்கங்களுடன் தொழிலாளர்களும் படைவீரர்களும் சோவியத்துக்களின் அனைத்து ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியைக் கடந்து செல்லுகையில் சமரசவாதிகள் பிடரியில் அறைபட்டது போன்று காட்சியளித்தனர். தொழிலாளர் வர்க்கம், படைவீரர் திரள் ஆகியவற்றின் சித்தத்தை இந்த ஆர்ப்பாட்டம் முழுமையாக வெளிக்காட்டியது.

போல்ஷிவிக்குகள் தயார் செய்யப்பட்ட முழக்க அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் எதுவும் புரிந்து கொள்ளாமல் அவற்றைச் சுமந்து செல்கிறார்கள் என்றும் எரிச்சல் அடைந்த சமரசவாதிகள் அறிவித்தனர்.

இதற்கு லெனின் பதில் சொன்னார்:

''உங்கள் பக்கம்தானே பலமிருக்கிறது, உங்களது கோஷங்களுடன் அவர்கள் ஏன் செல்லவில்லை? நீங்களே

காண்கிறபடி, பகட்டான தொப்பிகள் அணிந்தவர்கள் தான் உங்களது முழக்கங்களைத் தாங்கிச் செல்கிறார் கள்.''

ஜெர்மானியர்களுக்கு எதிராகப் போர்முனையில் தாக்குதல் நடத்தத் தயாரிப்புகள் செய்யப்பட்டு வந்த தால், மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் களும் இந்த ஆர்ப்பாட்டத்தை ஓயாமல் ஒத்திப்போட்டு வந்தனர். இத்தாக்குதல் வெற்றி பெற்றால் போல்ஷிவிக்கு கள் அரசாங்கத்தின் கைகளில் இருப்பார்கள் என்றும், அப்போது ''நமது அரசாங்கம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்று பாருங்கள். இத்தகைய அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்று நீங்கள் விரும்புவதானால் உங்களைத் தூக்கிலிட வேண்டும், சுட்டுக் கொல்ல வேண்டும்'' என்று சொல்ல முடியும் எனவும் அவர்கள் நம்பினர். தாக்குதல் வெற்றி பெறவில்லை என்றாலோ, போல்ஷிவிக்குகள் படை வீரர்களைப் பிளவுபடுத்தியதால்தான் இவ்வாறு நடந்தது என்று அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

இதையெல்லாம் மிகத் துல்லியமாகக் கண்டார் விளதீமிர் இலீச். சோஷலிஸ்டு-துரோகிகளின் சதிகளை அம்பலப்படுத்துவதற்குக் கட்சியின் சக்திகள் அனைத்தை யும் அவர் திருப்பி விட்டார்.

நடந்தது ஆர்ப்பாட்டம். தொழிலாளர்களும் படை வீரர்களும் தம்மிடையே கிசுகிசுத்துக் கொள்வதை நான் கண்டேன். ஆர்ப்பாட்டக்காரர்களின் அணிகளுக்குள் நான் சென்றேன். அவர்களுடன் உரையாடினேன். ஏதாவது தீர்வுகள் காணாமல் அவர்கள் மார்சோவ் சதுக்கத்திலிருந்து வெளியேற விரும்பவில்லை என்று தெரிந்தது. கணிசமான பயன் ஏதாவது அவர்கட்குக் கிட்ட வேண்டும். தொழி லாளர்களின் கைகள் தினவெடுத்தன. ''நமது முழக்கங் களுடன் நாம் போவோம். புயல் வீச்சு எல்லாவற்றையும் துடைத்தகற்றுவது போல, தொழிலாளர்கள் விவசாயி கட்கு எதிராக வருகிற அனைத்தையும் துடைத்தெறி வோம்'', என்கிற மனநிலை அவர்களிடம் இருந்தது என்று எனக்குத் தோன்றியது.

ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னே மில்யூதினுடன் நான் விளதீமிர் இலீச் வீட்டுக்குப் போனேன். அங்கு மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் சிலரைக் கண்டேன். தொழிலாளி வர்க்கத்தை ஆர்ப்பாட்டம் திருப்திப்படுத்தவில்லை என்று நான் சொன்னேன். தமது காரியத்தை அவர்கள் செய்து விட்டதாகவும், தமது கோரிக்கைகளை முன்வைத்து விட்ட தாகவும், திருப்தி கிட்டவில்லை என்பதால் சித்தத்தின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து சக்தியின் ஆர்ப்பாட்டத்தை நடத்த வேண்டும் என்றும் தொழிலாளர்கள் கருதினர். ஒன்று தொழிலாளர்களை ஏமாற்றம் கவ்விக் கொள்ளும், அல்லது தமது கோரிக்கைகளை நடவடிக்கை மூலம் நிறை வேற்றிக் கொள்வதற்கு அவர்கள் தயார் செய்யத் தொடங்குவார்கள். தொழிலாளர்களும் படைவீரர்களும் இந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பின் எழுச்சி மேற்கொள்ள ஆர்வத்துடன் முயல்வார்கள் என்பதே இப்போது பிரச்னை இருக்கும் நிலை.

ஜூன் 18 ஆர்ப்பாட்டம் புரட்சியின் இரண்டாவது நெருக்கடி என்றும், தொழிலாளர்களை எழுச்சி மேற்கொள் ளுமாறு ஆத்திரமூட்டுவதன் மூலம் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் முயலும் என்றும், இது நமக்கு மிகவும் ஆபத்தான, கொஞ்சமும் விரும்பத்தகாத தருணம் என்றும் விளதீமிர் இலீச் சுட்டிக் காட்டினார். அணித்தான காலத்தில் எழுச்சி மேற்கொள்ளுமாறு தூண்டப்பட்டால் தொழிலாளர்கள் பெருந் தோல்வி அடைவார்கள்.

''உடனடியாக எழுச்சி மேற்கொள்ளாதவாறு தொழி லாளி வர்க்கத்தையும் படைவீரர்களையும் இழுத்துப் பிடிக்க வேண்டும், இதனை மிகவும் உறுதியாகத் தொழி லாளர்கட்கு இப்போது விளக்கிச் சொல்ல வேண்டும். இதுவே நமது பணி. இதன் மூலமே புரட்சி காப்பாற்றப் படும் என்று ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தின் ஆத்திர மூட்டலுக்குத் தொழிலாளி வர்க்கம் ஆட்பட்டு விடாத படியும், காலம் கனிவதற்கு முன்னல் தாக்குதல் தொடுக் காதபடியும் பார்த்துக் கொள்வதற்கு எல்லா முயற்சி

களையும் செய்ய வேண்டும்'' என்று விளதீமிர் இலீச் சொன்னர்.

ஜூன் மாத இறுதியில், போல்ஷிவிக்குகளது இராணுவ நிறுவனத்தின் அனைத்து ருஷ்ய மாநாடு கூட்டப்பட்டது. இதில் விளதீமிர் இலீச் உரையாற்றினர். போர்முனைப் பிரதிநிதிகளும் பின்னணிப் பிரதிநிதிகளும் இராணுவ நிறுவனத்தின் மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டனர். தாக்குதல் தொடுப்பதிலிருந்து படைவீரர்களை இழுத்துப் பிடிக்க முடியாது என்றும், படைவீரர்களுக்கு எதிரான முந்தைய தண்டனைகளை மீண்டும் கொண்டு வருவதற்கும் படைவீரர்களின் கமிட்டிகளது முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கும் எல்லாவகையிலும் முயல்கிற கேரென்ஸ் கியாலும் ஜெனரல்களாலும் அவர்கள் எரிச்சலூட்டப்பட் டிருக்கிருர்கள் என்றும் மாநாட்டில் சொல்லப்பட்டது. சுருங்கச் சொன்னல், முதலாளித்துவ வர்க்கமும் கூட்டணி அரசாங்கமும் உண்டாக்கி வருகிற ஒழுங்கீனங்களைப் படை வீரர்கள் இடையருது, ஒவ்வொரு எட்டிலும் கண்டார் கள். இந்த மாநாட்டில் படைவீரர் திரள்களின் மனநிலை மிகத் தெளிவாக வெளிப்பட்டது. தொழிலாளர்கள் மீதும் படைவீரர்கள் மீதும் செல்வாக்குச் செலுத்துவதற்கு விளதீமிர் இலீச் முயன்ருர். ஆனல் இதில் அவருக்கு முழு வெற்றி கிட்டவில்லை.

இயந்திரத் துப்பாக்கிப் பிரிவின் படைவீரர்கள் தாக்கு தல் தொடுக்க முடிவு செய்திருக்கிருர்கள் என்று ஜூலை 3ல் தகவல் வந்தது. தொழிலாளர்கள், விவசாயிகளின் கைகளில், சோவியத்துக்களின் கைகளில் ஆட்சியை ஒப் படைக்கும்படிக் கோருவதற்காகப் பனிக்கால அரண்மனை யை நோக்கி அவர்கள் சென்ருர்கள். இந்தத் தாக்குதலை நடத்தாமல் தடுப்பதற்காக நமது கட்சியினது இராணுவ நிறுவன உறுப்பினர்கள் முயன்ருர்கள். அவர்கள் படை வீடுகள் அனைத்துக்கும் சென்ருர்கள். தாக்குதலைத் தடுக்க முயன்ருர்கள். நாட்டிற்குள்ளும் போர்முனையிலும் சோவி யத்துக்களின் அதிகாரத்துக்காக இப்போதுதான் மக்கள் திரளின் இயக்கம் தொடங்கி இருக்கிறது என்பதால், சிவப்

பாகிவிட்ட பெத்ரோகிராதின் தொழிலாளர்களும் படை வீரர்களும் மேற்கொள்கிற எழுச்சி வாகை சூடிவிட்டால் கூட, அது விரைவில் ஒடுக்கப்பட்டு விடும் என்று அவர்கள் விளக்கினுர்கள். சில படைப்பிரிவுகளில் எழுச்சி மேற் கொள்ளாமலிருக்கப் படைவீரர்கள் சம்மதித்தனர். ஆனுல், எழுச்சியைத் தொடங்கி விட்ட இயந்திரத் துப்பாக்கிப் படைப்பிரிவு மற்ற படைப்பிரிவுகளுக்குத் தூதுக்குழுவை அனுப்பி விட்டு தாவ்ரிசெஸ்கிய் அரண்மனையை நோக்கி நகர்ந்தது என்று அன்று மாலையே செய்தி வந்தது. அதற்குப் பின்னுல் எறிகுண்டுப் படைப்பிரிவும் மாஸ்கோ படைப்பிரிவும் பிறவும் சென்றன. இராணுவ நிறுவனம் அவற்றைத் தடுத்து நிறுத்த இன்னும் முயன்றது. ஆனுல் இயந்திரத் துப்பாக்கி வீரர்கள் எதையும் செவி மடுக்கத் தயாராயில்லை. ஆட்சியைக் குத்தீட்டிகளில் சுமந்து வந்து போல்ஷிவிக்குகளிடம் தரப்போவதாக அவர்கள் அறிவித்தனர்.

க்செசின்ஸ்கயா மாளிகையின் முன் இயந்திரத் துப் பாக்கிப் பிரிவு போருக்கு ஆயத்தமாக அணிவகுத்து நின்ற போது நான் மாளிகையின் பால்கனியிலிருந்து உரையாற்ற நேர்ந்தது. கடைசி வழியை மேற்கொண்டு நான் சொன் னேன்:

''தோழர்களே, உங்களுடன் சேர்ந்து நாங்கள் ஐந்து மாதங்களாகப் போராடுகிறேம். உங்களது ஒவ்வொரு எட்டுக்கும் நாங்கள் ஒளியூட்ட முயல்கிறேம். புரட்சியின் நலன்களுக்குத்தான் நாங்கள் சேவை செய்கிறேம் என்று நீங்கள் உண்மையிலேயே நம்பவில்லையா? புரட்சியின் நலன்கள் உங்களுக்கு மதிப்பு மிக்கதாஞல் நீங்கள் இவ் வாறு செய்யாதீர்கள்.''

அப்போது படைவீரர்களில் பலர் கூச்சலிட்டார்கள்:

''இது பேச்சுக்கான நேரமல்ல! இப்போது காரியம் செய்ய வேண்டும்!''

படைவீடுகளுக்கு அவர்களை மீண்டும் அழைத்த போது இயந்திரத் துப்பாக்கிப் பூட்டுக்களின் கிலுகிலுத்த ஓசை தான் கேட்டது.

அன்றைய நிலைமை இப்படி இருந்தது. குருதிப் பெருக்குடன் முடிந்த ஜூன் மாத எழுச்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு விளதீமிர் இலீச்சும் கட்சி முழுதும் சக்தி அனைத்தையும் செலுத்தி முயன்றனர். நாங்கள் அனைவரும் தலைமறைவாகிவிட நேர்ந்த போதும் தொழிலாளி வர்க்கத்தையும் போல்ஷிவிக்குகளையும் முற்றுக முறியடித்துவிட முதலாளித்துவ வர்க்கத்தால் முடியவில்லை. இந்த எழுச்சியில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்ட மாலுமிகள் பலர் மிகவும் தொல்லைக்குள்ளாயினர். சில படைப் பிரிவுகள் கலைக்கப்பட்டன. படைவீரர்கள் சமரசவாதிகளின், முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்பில் இன்னும் இருந்த வேறு படைப்பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

வேறு எவரையும் விட விளதீமிர் இலீச் அப்போது மிக அதிக ஆபத்துக்கு உள்ளாகி இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் மீது தாம் வைத்திருந்த மாபெரும் நம்பிக்கையை லெனின் மீண்டும் வெளிக்காட்டினுர். இந்த நம்பிக்கைதான் அவரைக் காத்தது. வீபர்க் வட்டாரத்துத் தொழிலாளர்களிடம் போனுர் விளதீமிர் இலீச். வீபர்க்காரர்கள் உண்மையில் அவரைக் காத்து, அவர் பின்லாந்துக்குச் செல்ல உதவி செய்தனர். எழுச்சிக்கான ஏற்பாடு செய்வதற்கு, சக்திகள் அனைத்தையும் சோதித்துப் பார்ப்பதற்கு, நிலைமைகளைப் போராட்ட ரீதியில் விமர்சித்து அவற்றை மதிப்பீடு செய்வதற்கு, பின்னர் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து அதனை வெற்றி கொள்வதற்கு இங்கிருந்துதான் லெனின் அக்டோபர் முற்பாதியில் பெத்ரோகிராத் வந்தார்.

ஜூலை மாதத் தோல்விக்குப் பின்பு நான் வீபர்க் வட்டாரத்தில் விளதீமிர் இலீச்சிடம் சென்றேன். அங்கு மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் சிலரைக் கண்டேன். லெனின் ஒரு கேள்வியுடன் என்னை எதிர்கொண்டார்:

''நமது காரியங்கள் எப்படி இருக்கின்றன?''

இதைவிட மோசமாக இருக்க முடியாது என்று சொன்னேன் நான்.

''இந்தச் சம்பவம் முழுதையும் நம்மால் தவிர்க்க

முடியவில்லை. ஜூலை மாதத் தோல்வி புரட்சியின் மூன்றாவது நெருக்கடி ஆகும். சில காலத்துக்கு அது முதலாளித்துவ வர்க்கத்துக்கு உதவி செய்யும். ஆனால் இறுதியில் புரட்சிக்குப் பயனுள்ளதாகவே இருக்கும்'' என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார் லெனின்.

பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் லெனினது மேதை மிக்க முன்னறிவிப்பை உறுதி செய்தன.

ஜூலை நாட்களுக்குப் பின்னர் தலைமறைவாகிவிட்ட விளதீமிர் இலீச் எல்லாவற்றையும் உடனே தெளிவாகப் புரிந்து கொள்ள முயன்றார். ஜூலை மாதத்தில் பாட்டாளி வர்க்கம் தொடுத்த தாக்குதலிலிருந்து பெற வேண்டிய பாடத்தை நாங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், தீர்மானமான எழுச்சிக்குத் தயார் செய்ய வேண்டும் என்றும் எங்களுக்கு எழுதினார். ஜூலையில் நாம் தோல்வியுற்றதற்குக் காரணம் வெற்றி பெறுகிற அளவுக்கு நமது அமைப்பு முதிர்ச்சி பெறாமல் இருந்ததே ஆகும். எனவே, எழுச்சியின் வழியில் உறுதியாகவும் தீர்மானமாகவும் நின்று காரியத்தைக் கடைசி வரை கொண்டு செல்லத் தக்க விதத்தில் கட்சியையும் தொழிலாளி வர்க்கத்தையும் எழுச்சிக்குத் தயார் படுத்த முயற்சிகள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டும். ஜூலை நாட்களுக்குப்பின் உடனடியாக இந்த முழக்கத்தை விளதீமிர் இலீச் முன்வைத்தார்.

இதற்குப் பின்னர், விளதீமிர் இலீச் சொன்னது சரி என்று தொழிலாளி வர்க்கம் காண்பதற்கு முன்னால் போதுமான அளவு காலம் சென்றது, நிறையச் சம்பவங்கள் நடந்தன.

இந்தக் காலத்தில் நடந்தது என்ன?

ஜூலை சம்பவங்களின் விளைவாகத் தொழிலாளி வர்க்கம் நிராயுதபாணியாக்கப்பட்டது. செங்காவல் படையினர் தலைமறைவாக நேர்ந்தது. புரட்சிகரப் படைப்பிரிவுகள் கலைக்கப்பட்டன. தொழிலாளி வர்க்கம் பெற்றிருந்த வெற்றிகள் அதனிடமிருந்து பிடுங்கப்படத் தொடங்கின. புரட்சிகர மனநிலை கொண்ட தொழிலாளர்களைச் சிறிது

சிறிதாக வேலை நீக்கம் செய்யவும் தொழிலாளர்களின் ஒரு பிரிவை மறு பிரிவின் மீது ஏவி விடவும் தொடங்கினர் கள் எஜமானர்கள். தொழிலாளி வர்க்க அணிகளைக் குலைக்கவும் பாட்டாளி வர்க்கத்தின் மீது தீர்மானமான தாக்குதல் தொடுப்பதற்காகத் தனது அணிகளைப் பலப்படுத்திக் கொள்ளவும் எல்லா வழிகளிலும் முயன்றது முதலாளித்துவ வர்க்கம். புரட்சியைக் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டுமென்கிற தனது ஆவலில் முடியரசு முறைக்குத் திரும்பி வரவும் அது தயாராயிருந்தது. இதையெல்லாம் விளதீமிர் இலீச் கண்டார், எல்லாவற்றையும் பற்றி எங்களை எச்சரித்தார். ஜூலை நாட்களுக்குப் பின்பு முதலாளித்துவ வர்க்கம் ஒரேயடியாக வலது புறம் திரும்பும் என்று அவர் சொன்னார். எப்போதும் போலவே அவர் சொன்னது சரியாயிற்று.

போல்ஷிவிக் கட்சியைச் சட்ட விரோதமானது என்று அறிவிக்கும் யோசனையைச் செர்னேவும்* கேரென்ஸ்கியும் கொண்டுவந்தனர். பல்வேறு விதமான மாநாடுகளின் திரை மறைவில் புரட்சி நிறுவனங்களை ஒழித்துக் கட்டுவதற்குச் செயல் பூர்வமான ஏற்பாடுகள் இரகசியமாக நடந்து வந்தன. எதிர்ப்புரட்சி தலை தூக்கியது. இராணுவ சர்வாதிகாரத்துக்குத் தயாரிப்பு நடந்தது. கர்னீலவ், கலேதின் தலைமையில் புரட்சிகரப் பெத்ரோகிராதை எதிர்த்துப் போராடுவதற்கு ஜெனரல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வாருக புரட்சியை முறியடிப்பதற்கான தயாரிப்புகள் இரு முனைகளிலிருந்தும் நடந்து வந்தன.

கர்னீலவ் கலகம் தொடங்கியது. இதைத் தயாரிப்பதில் செயல்பூர்வமான பங்கு வகித்தது கூட்டணி அரசாங்

* செர்னேவ் (1876—1952)—சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் கட்சியின் தலைவருள், தத்துவாசிரியருள் ஒருவர். இது ருஷ்யாவில் இருந்த ஒரு குட்டிமுதலாளித்துவக் கட்சி. முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாய அமைச்சர்.—(ப-ர்.)

கம். கர்னீலவ் கலகம் வெற்றி பெற்றிருந்தால் சோவியத்துக்கள் ஒழிக்கப்பட்டிருக்கும், இறுதி வெற்றி வரை போர் நடத்தப்பட்டிருக்கும், படைவீரர் கமிட்டிகள் கலைக்கப்பட்டிருக்கும், கடைசியில் புரட்சி அழிவுற்றிருக்கும்.

கர்னீலவின், எனவே முதலாளித்துவ வர்க்கம் அனைத்தினதும் தாக்குதல் தொழிலாளர்களின் கண்களைத் திறந்துவிட்டது. கலகக்கார ஜெனரல்கள் இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு வாய்ப்புத் தராமலிருப்பதற்காகக் கர்னீலவுக்கு எதிராகப் புரட்சிகரச் சக்திகள் அனைத்தையும் போல்ஷிவிக்குகள் தட்டியெழுப்பியதை அவர்கள் கண்டார்கள். பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் செல்கிற பாதைகள் வேறு வேறு, என்று போல்ஷிவிக்குகள் சொல்வது சரியே என்பதை இப்போதுதான் தொழிலாளி வர்க்கம் முற்றுக அறிந்து கொண்டது.

ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு ஏற்பாடு செய்வதற்கு மிகவும் செயல்பூர்வமான ஒழுங்கமைப்புப் பணி மேற்கொள்ள போல்ஷிவிக் கட்சிக்குச் சரியான நேரம் வந்துவிட்டது என்று விளதீமிர் இலீச் சுட்டிக் காட்டினர். முதலாளித்துவ வர்க்கம் தனது எதிர்ப்புரட்சிச் சாராம்சத்தைக் காட்டியது. போல்ஷிவிக்குகளின் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மீது, இனி மேலும் மேலும் அதிகச் செல்வாக்குப் பெறும் என்று சொன்னர் அவர். மாஸ்கோ, பெத்ரோகிராத் சோவியத்துக்களுக்கு நடந்த மறு தேர்தல்களில் போல்ஷிவிக்குகள் அவற்றில் நிர்ணயமான பெரும்பான்மை பெற்றனர்.

தொழிலாளி வர்க்கம் போல்ஷிவிக்குகளின் முழக்கங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதற்கும் இப்போது எழுச்சி மேற்கொள்ளத் தருணம் வந்து விட்டது என்பதற்கும் இது மிகவும் நம்பகமான சான்ருக விளங்குகிறது என்று தலைமறைவு இடத்திலிருந்து எழுதினர் லெனின். இப்போது நாம் தாமதம் செய்தால் புரட்சியை நிர்மூலமாக்கி விடுவோம். ஏனெனில், புரட்சியை ஒடுக்குவதற்காக ஜெர்மானியர்களுடன்

முதலாளித்துவ வர்க்கம் ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடும்.

எழுச்சிக்கான தயாரிப்புக்களை வலுப்படுத்தும்படி விளதீமிர் இலீச் செப்டம்பர் மத்தியிலிருந்து கோரினார். ஆபத்துகள் நிறைய இருந்த போதிலும், அக்டோபர் ஆரம்பத்தில் பின்லாந்திலிருந்து பெத்ரோகிராத் வந்து எழுச்சிக்கான தயாரிப்புகளில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டார் விளதீமிர் இலீச். வீபர்க் பகுதியில் தொழிலாளர் வட்டாரத்தில் குடியேறிய அவர், பொறுப்புள்ள கட்சி உறுப்பினர்கள், போல்ஷிவிக்குகளின் இராணுவ நிறுவன ஊழியர்கள் ஆகியோரைக் கொண்ட சட்ட விரோத மாநாடுகள் கூட்டினார். இந்த மாநாடுகளில் எழுச்சி பற்றிய பிரச்னையை மீண்டும் முன்வைத்து, இதற்குத் தடையாக இருந்தவர்களுடன் தீர்மானமாகப் போராட்டம் நடத்தினார்.

''எழுச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று பாட்டாளி வர்க்கத்தை நோக்கி அவர் அறைகூவல் விட்டார். கட்சி மாநாடுகள், கூட்டங்களுக்குக் கடிதம் வரைந்து, எழுச்சி பற்றிய பிரச்னையை இதில் தெளிவாகவும் துல்லியமாகவும் முன்வைத்தார். செங்காவல் படை மீது லெனின் அதிகக் கவனம் செலுத்தினார். அதற்கு ஆயுதம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

விளதீமிர் இலீச் எழுச்சியின் வேலைத்திட்டத்தை முன்வைத்து மேதை மிக்க போர்த்தந்திர நிபுணராக இத்திட்டத்தை வகுத்துத் தந்தார். பிரதம தளபதியாக இருந்து இதனை நிறைவேற்றுவதற்குத் தலைமை தாங்கினார். பாலங்கள் அனைத்தையும், மத்தியத் தொலைபேசி நிலையத்தையும், தண்ணீர் வினியோகப் பகுதியையும், ரயில் நிலையங்களையும், தந்தி அலுவலகங்களையும் முதலில் பிடித்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர். கட்சியின் இராணுவக் காரியங்களை எல்லா நேரங்களிலும் வழிநடத்திவந்த இராணுவ நிறுவனம் எழுச்சியை நடத்த வேண்டும், மக்கள் திரள் முழுதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறு பெத்ரோகிராத் சோவியத்தில்

இராணுவ-புரட்சிக் கமிட்டி உருவாக்கப்பட்டது. போல் ஷிவிக்குகளதும் ''இடதுசாரி'' சோஷலிஸ்டுப்-புரட்சி யாளர்களதும் இராணுவ நிறுவனங்களுடன் சேர்ந்து புரட்சிக்கு இது நேரடியாகத் தலைமை தாங்க வேண்டி இருந்தது.

மிகவும் தீர்மானமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று விளதீமிர் இலீச் எங்களிடம் கோரினார். அக்டோபர் 23ல் எல்லாப் படைப்பிரிவுகளுக்கும் எங்கள் கமிசார்களை அனுப்பினோம். படைப்பிரிவுகள் இவர் களுக்குக் கீழ்ப்படிய வேண்டி இருந்தன. இதன் மூலம் பெத்ரோகிராத் நகரக் காவற்படையின் தலைமை உண்மை யில் தொழிலாளர்கள், விவசாயிகளின் கைகளுக்கு மாறிற்று.

முதலாளித்துவ வர்க்கத்தின் கோட்டைகளைப் பிடிப் பதற்கும் இடைக்கால அரசாங்க உறுப்பினர்களைக் கைது செய்வதற்கும் பெருமுக்கியத்துவம் தந்தார் விளதீமிர் இலீச். முதலாளித்துவ வர்க்கத்தின் அரண்களைக் கைப் பற்ற முடியவில்லை என்றால் இது போராட்டத்தை மிகவும் நீட்டி விடும் என்றும், இடைக்கால அரசாங்க உறுப்பினர் களைக் கைது செய்யவில்லை என்றால், இவ்வுறுப்பினர்கள் ருஷ்யா முழுதுக்கும் பரவி சோவியத்துக்களின் ஆட்சிக்கு எதிராக எழுச்சிகளைத் தூண்டி விடுவார்கள் என்றும் விளதீமிர் இலீச் நன்கு புரிந்து கொண்டிருந்தார்.

முதலாளித்துவ வர்க்கம் எல்லாவிதமான ஜனநாயக மாநாடுகளையும் கர்னீலவ் கலகத்தையும்* நடத்திக் கொண்டிருந்த போது, முதலாளித்துவ நிறுவனத்துக்கு எதி ராக நிறுத்துவதற்காக சோவியத்துக்களின் காங்கிரசைக் கூட்டுவது அவசியம் என்று விளதீமிர் இலீச் கருதினார். பெத்ரோகிராத், மாஸ்கோ சோவியத்துக்களுக்கு

---

* 1917, செப்டம்பர் 14—22ல் பெத்ரோகிராதில் நடந்த ''ஜனநாயக மாநாடு'' எனப்பட்டதும் 1917, ஆகஸ்டு 25ல் தொடங்கிய (கர்னீலவ்) கலகமும் இங்கு குறிக்கப்படுகின்றன.—(ப-ர்.)

நடந்த தேர்தல்களில் போல்ஷிவிக்குகள் பெருவெற்றி பெற்ற பின்பு இன்னும் தீவிரமாக அவர் இதனை வற்புறுத்தினார். அக்டோபர் 20ல் சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரசைக் கூட்டலாம் என்றும், காங்கிரசுக்கு முன்னால் எழுச்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் விளதீமிர் இலீச் ஆலோசனை கூறினார். காங்கிரஸ் கூடி தனது சித்தத்தை வெளியிடும் போது எழுச்சி மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாது போகலாம் என்று சிலர் சொன்னார்கள்.*

அவர்களைக் கண்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தார் விளதீமிர் இலீச்.

''போராட்டம் இன்றி யாராவது ஆட்சியைக் கொடுத்ததைப் பார்த்திருக்கிறீர்களா? போராட்டத்தின் மூலமே ஆட்சி அடையப்படுகிறது. எவையேனும் பிரகடனங்கள் மூலமாக ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்துக்கு ஆட்சியை வழங்குவதில்லை. எந்தப் பிரகடனமும் இந்த ஆட்சியைப் பாதுகாப்பதும் இல்லை'' என்றார் அவர்.

காங்கிரஸ் எப்போது கூடுகிறது என்பதைச் சார்ந்ததாய் இராமல் எழுச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் கோரினார்.

''இப்போது இதற்கு மிகவும் ஏற்ற தருணம். எனவே அவசரம் காட்ட வேண்டும். எழுச்சி நடந்த பின்பு சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் வேலை செய்வது எளிதாக இருக்கும்'' என்று அவர் கூறினார்.

இந்த நேரத்தில் கேரென்ஸ்கியும் அவரது அரசாங்கமும் ஜெர்மானியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பெத்ரோகிராதை ஜெர்மானியருக்குத் தந்து விடுவதற்

---

* எழுச்சி நடத்த வேண்டிய காலம் பற்றி லெனினுக்கு எதிராக திரோத்ஸ்கி பேசினார். சோவியத்துக்களின் காங்கிரசும் எழுச்சியும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும் என்று இவர் சொன்னார். காமெனெவும் ஸினோவியேவும் எழுச்சிக்கு எதிராகப் பேசினார்கள். வளர்ச்சிக்கு ''நாடாளுமன்ற'' வழியே சிறந்தது என்று இவர்கள் கருதினர்.—(ப-ர்.)

கும் புரட்சிப் படைகளை அங்கிருந்து அகற்றி விடுவதற்கும் அதன் மூலம் புரட்சியை உள்ளிருந்தே பலவீனப்படுத்தி, போர்முனையில் அது பெற்ற வெற்றிகளை அழித்தொழிப்பதற்கும் இப்பேச்சுவார்த்தைகள் நடந்தன.

எழுச்சியைத் தொடங்குமாறு எங்களை மிக மிக அவசரப்படுத்தினார் விளதீமிர் இலீச். எழுச்சி தொடங்கிய பின்பு மிகத் துடியாகப் புரட்சியை வெகுவாக விரிவாக்கும் படியும், நகரத்தின் கேந்திரப் பகுதிகளை உடனடியாகக் கைப்பற்றும்படியும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அக்டோபர் 24ஆம் நாள் இரவு புரட்சியின் தலைமையகமான ஸ்மோல்னி மாளிகைக்கு லெனின் வந்து எழுச்சியை வழிநடத்துகின்ற பணிகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டார். இரண்டு மூன்று வார்த்தைகளே எழுதப்பட்டிருந்த துண்டுச் சீட்டுகளுடன் தூதுவர்களை எங்களிடம் அவர் அனுப்பிய வண்ணமாய் இருந்தார். ''மத்தியத் தொலைபேசி நிலையமும், தந்தி நிலையமும் கைப்பற்றப் பட்டு விட்டனவா?'', ''பாலங்களும் ரயில் நிலையங்களும் கைவசம் ஆயினவா?'' போன்ற வாசகங்கள் அவற்றில் எழுதப்பட்டிருக்கும். எங்கள் படை வினியோகங்கள் அனைத்தையும் சரி பார்க்க வேண்டும் என்று வாய் வார்த்தைகளிலும் துண்டுச் சீட்டுகளிலும் அவர் வற்புறுத்தினார். குறிப்பிட்ட இடத்தில் உண்மையில் நம்பகமான ஆள்தான் இருக்கிறாரா, குறிப்பிட்ட வீதி படை திரள்வதற்கேற்ற தொடக்க நிலையிலிருக்கிறதா, அது கைப்பற்றப்பட்டு விட்டதா என்று அவர் கேட்டார்.

எதிர்ப் புரட்சி இடைக்கால அரசாங்கம் இருந்த பனிக்கால அரண்மனையைக் கைப்பற்றுவதற்குக் குறிப்பாகப் பெருமுக்கியத்துவம் தந்தார் விளதீமிர் இலீச்.

பனிக்கால அரண்மனையை அக்டோபர் 25 காலையில் கைப்பற்றலாம் என்று நாங்கள் எண்ணியிருந்தோம். ஆனால் எதிர்பாராத தாமதங்கள் ஏற்பட்டு வந்தன. படைவீரர்கள் மிகவும் மெதுவாக நகர்ந்தனர், கிரன்ஷ்தாத்திலிருந்து மாலுமிகள் காலந் தாழ்ந்து வந்தார்கள் போன்றவை காரணங்களாயின.

பனிக்கால அரண்மனையைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட தாமதம் லெனினையும் ஸ்மோல்னி மாளிகையில் இலீச்சுடன் வேலை செய்தவர்களையும் மிகவும் பதட்டப்படுத்தியது.

காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை எங்கள் அனைவருக்கும் ஏராளமான துண்டுச் சீட்டுகள் அனுப்பினார் விளதீமிர் இலீச். எல்லாத் திட்டங்களையும் நாங்கள் நாசமாக்குகிறோம் என்று அவர் எழுதினார்: காங்கிரஸ் தொடங்குகிறது, பனிக்கால அரண்மனையை இன்னும் நாம் கைப்பற்றவில்லை, இடைக்கால அரசாங்க உறுப்பினர்களைக் கைது செய்யவில்லை. சோவியத்துக்களின் காங்கிரசில் அறிக்கை தரத்தக்க விதத்தில் பனிக்கால அரண்மனையை உடனடியாகக் கைப்பற்றும்படியும் அமைச்சர்களைக் கைது செய்யும்படியும் அவர் கோரினார்.

....உழைப்பாளர்களது ஆட்சிக்கான வழியில் எதிரிகளின் கடைசி எல்லை நிலையமாக விளங்கியது பனிக்கால அரண்மனை....

ஆனால், நாங்கள் விடுத்த இரண்டு இறுதி எச்சரிக்கைகளுக்குப் பின்னும் இடைக்கால அரசாங்கம் சரணடைய விரும்பவில்லை. அப்போது ''அவ்ரோரா'' விடுத்த வேட்டு பொதுத் தாக்குதலை முன்னறிவித்தது. பெத்ரோ-பாவ்லவ்ஸ்க் கோட்டையிலிருந்து வந்த பீரங்கிப் படைப்பிரிவின் குண்டுமாரியின் காப்பில் எங்கள் அணிகள் பனிக்கால அரண்மனைக்கு நெருக்கமாகச் சென்று வலுவான துப்பாக்கித் தாக்குதல் தொடங்கிஅரண்மனைக்குள் நுழைய முடிந்தது.

....படைவீரர்கள், மாலுமிகள், செங்காவல் படைவீரர்கள் ஆகியோர் வாயிலை நோக்கி நெருங்கினார்கள். அச்சத்தால் உறைந்து போய் கடமையால் கட்டுண்ட ஜங்கெர்கள் கதவினருகே காவலுக்கு நின்று கொண்டிருந்தார்கள்.

''இங்கு இடைக்கால அரசாங்கம் இருக்கிறது!''

''ஒழிக!'' தாக்குதல் தொடுத்தவர்கள் இவ்வாறு ஆர்ப்பரித்து அறைக்குள் பாய்ந்தார்கள். பெத்ரோகிராத்

இராணுவ-புரட்சிக் கமிட்டியின் செயலாளர் அன்தோனவ்-அவ்சேன்கோ அவர்களுக்குத் தலைமை தாங்கினார்.

''பெத்ரோகிராத் சோவியத்தின் இராணுவ-புரட்சிக் கமிட்டியின் பெயரால் இடைக்கால அரசாங்கம் வீழ்த்தப் பட்டது என்று அறிவிக்கிறேன். நீங்கள் கைது செய்யப் பட்டிருக்கிறீர்கள்'' என்று மரண பயம் கொண்டிருந்த மந்திரிகளைப் பார்த்து அன்தோனவ்-அவ்சேன்கோ ஆணை யிட்டார். மந்திரிகள் பின்னர் பெத்ரோ-பாவ்லவ்ஸ்க் கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது பற்றி லெனினுக்குத் தகவல் தரப்பட்டது. இடைக் கால அரசாங்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக் கின்றனர், இப்போது கோட்டையில் இருக்கின்றனர் என்ற தகவலை மௌனமாகக் கேட்ட விளதீமிர் இலீச் உடனே ஸ்மோல்னி மாளிகையிலிருந்த தமது அறைக்குள் சென்றார். நாற்காலியில் அமர்ந்து, முழங்கால் மீது புத்தகத்தை வைத்து, நிலம் பற்றிய அரசாணையை வரையத் தொடங்கினார்.

ஆட்சி கைப்பற்றப்பட்டது பற்றிய கிளர்ச்சி எல் லோரையும் ஆட்கொண்டிருந்தது. விளதீமிர் இலீச்சோ நாளைய தினத்தைப் பற்றி யோசித்தார்: நாளைக் காலை நிலம் பற்றிய அரசாணை வரவில்லை என்றால் அடுத்த அடி எடுத்து வைக்க முடியாது. பாதுகாப்புக்கு வீரர்களை நிறுத்துவதற்காக ஸ்மோல்னி மாளிகைக்கு நான் வந்த போது அவரை இந்த மாதிரித்தான் பார்த்தேன். அப் போது இரவு இரண்டு மணி.

கடைசித் தலைமறைவு வாழ்க்கை

எமெல்யானவ்

ஜூலை நாட்களுக்குப் பின்பு லெனின் சட்ட விரோத மனிதர் என்று இடைக்கால அரசாங்கத்தால் அறிவிக்கப் பட்டார். அவரைக் கண்டுபிடித்துத் தருபவருக்கு ஏராள மான பணம் தருவதாக கேரென்ஸ்கி வாக்களித்தார். இந்த நாட்களில் தொழிலாளர்களின் வீடுகளில் ஒளிந் திருக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார் விளதீமிர் இலீச். அவர் முன்னர் வசித்த வீட்டில் பலமுறை கவனமாகச் சோதனை போடப்பட்டது.

பெத்ரோகிராதில் தங்கியிருப்பது விளதீமிர் இலீச் சுக்கு ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் ஆபத்தானதாக மாறிக் கொண்டிருந்தது. இதை விட நம்பகமான இடத் தில் லெனினை மறைத்து வைப்பதென்று கட்சியின் மத்தியக் கமிட்டி முடிவு செய்தது: என்ன நேரினும் இலீச்சைக் காப்பாற்றுவது அவசியமாய் இருந்தது.

ரஸ்லீவ் ரயில் நிலையத்தின் அருகில் ஒரு சிறு தனி வீட்டில் நான் வசித்து வந்தேன். மத்தியக் கமிட்டியின் அத்தாட்சியுடன் என்னிடம் ஒருவர் வந்தார். செஸ்த்ரோ ரெத்ஸ்க் தொழிற்சாலையின் மூலம் இவரை எனக்கு நன்கு தெரியும். அவர் சொன்னார்:

"தோழர் எமெல்யானவ், லெனினை மறைத்து வைக் கும் வேலையை மத்தியக் கமிட்டி உன்னிடம் ஒப்படைத் திருக்கிறது."

"மிகுந்த மகிழ்ச்சி" என்று நான் பதிலிறுத்தேன். கல வரமூட்டும் பொறுப்பு உணர்ச்சி என்னை உடனே ஆட் கொண்டு விட்டது: லெனினைப் பாதுகாக்க வேண்டுமே! நான் சொன்னேன்:

"மறைத்து வைக்கிறேன். ஆனால் எப்படி என்று தான் எனக்கு இன்னும் தெரியவில்லை."

''இது பற்றி நன்கு யோசி.''

அவர் போய் விட்டார். நான் மனைவியுடன் கலந்து பேசினேன். அவளும் கட்சி உறுப்பினரே. வீட்டிற்குள் லெனினை மறைத்து வைப்பது ஆபத்தானது. என் வீட்டைச் சுற்றிலும் நகர்ப்புறவாசிகள் நிறைந்திருந்தார்கள். எங்கள் இருவருக்கும் ஒரே நேரத்தில் ஓர் எண்ணம் உதித்தது: ரஸ்லீவ்வாசிகள் ஏரியின் மறு கரையில் புல் அறுப்பதற்காக அடிக்கடி பின்லாந்துக்காரர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். கூலிக்கு அமர்த்தப்பட்ட புல் அறுப்பவராக, ஏரியின் அக்கரையிலுள்ள சிறு குடிசையில் இலீச்சைக் குடியேற்றுவது என்று நாங்கள் முடிவு செய்தோம்.

மத்தியக் கமிட்டியால் அனுப்பப்பட்டவர் அடுத்த நாள் வந்தார். எனது திட்டத்தை அவருக்குச் சொன்னேன்.

''சாமர்த்தியமான யோசனை!'' என்று ஒத்துக் கொண்டார் அவர்.

விரைவில் அவர் என்னிடம் மீண்டும் வந்தார். எனது யோசனையை மத்தியக் கமிட்டி அங்கீகரித்துவிட்டதாகச் சொன்னார். பெத்ரோகிராதிலிருந்து ரஸ்லீவுக்கு லெனினை எப்படிப் பாதுகாப்பாகக் கூட்டி வருவது என்ற பிரச்னை எழுந்தது.

''இரவு இரண்டு மணிக்கு வருகிற ரயிலின் மூலமாக அழைத்து வருவதே சாலச் சிறந்தது. இந்த ரயிலில்தான் பலபட்டடையான ஜனங்களும், வெகு நேரங் கழித்துப் போகிற குடிகாரர்களும் செல்கிறார்கள். இந்த வண்டிக்கு 'குடிகார ரயில்' என்றே பெயர். இதில் போவதுதான் மிகவும் பாதுகாப்பானது'' என்றேன் நான்.

மற்ற விவரங்கள் பற்றியும் நாங்கள் பேசி முடிவு செய்தோம். ஜுலை 11ல் நான் பெத்ரோகிராதுக்குக் கிளம்பினேன். அப்போது பெத்ரோகிராதில் கடலோர ரயில் பாதையின் கடைசி நிலையம் நோவயா திரேவ்னியா. நான் முன்னதாகவே மூன்று டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டேன். காத்திருப்போருக்கான ஹாலிலும் பிளாட்பாரத்திலும் ராணுவத்திலிருந்து ஓடி வந்தவர்கள் நிறையப்

பேர் இருந்தனர். எனவே அந்த இடங்கள் போலீசால் சோதனையிடப் படலாம். ஆகையால் சரக்குவண்டிகள் செல்லும் வழியின் மூலமாக லெனினை அழைத்துச் செல்வ தென்று நான் முடிவு செய்தேன். இருப்புப் பாதைகளின் மீது நின்று கொண்டிருக்கிற சரக்குப் பெட்டிகளுக்குக் கீழே புகுந்து வர வேண்டியிருந்தது. ஆனல் ரயிலுக்குப் போக இந்த வழிதான் மிகவும் பாதுகாப்பானது.

குறித்த நேரத்தில் லெனினையும் அவருடன் வந்த ஸ்தாலினையும் அல்லிலூயெவையும் பல்ஷயா நேவ்காவுக்கு அருகில் சந்தித்தேன்.

விளதீமிர் இலீச் என்னிடம் கிசுகிசுத்தார்:

''முன்னல் போங்கள். வழியைக் காட்டுங்கள்.''

முன்னதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை வழியாக அவர்களை ரயிலுக்குக் கூட்டி வந்தேன். தோழர்கள் கண் களால் மட்டும் இலீச்சிடம் விடை பெற்றனர்கள். விரைவில் ரயில் நகர்ந்தது. விளதீமிர் இலீச் ரயில் பெட்டியின் கதவருகே உட்கார்ந்தார். நான் கவலையுற்றேன்.

''அங்கே உட்கார்ந்தால் நீங்கள் விழுந்து விடலாம்.''

''நான் வேண்டுமென்றேதான் அப்படி உட்கார்ந்திருக் கிறேன். ஏதாவது அசம்பாவிதம் நேருமானல் கீழே குதித்து விடுவேன்'' என்றார் அவர்.

என் வீடு ரஸ்லீவ் ரயில் நிலையத்திலிருந்து ஐந்து நிமிட நடை தூரத்தில் இருந்தது. எனது மனைவியின் பெயர் என்ன என்று வழியில் கேட்டார் விளதீமிர் இலீச்.

''நதேஸ்தா கந்திராதியெவ்ன.''

வீடு வந்தது. வீட்டுக்குள் நுழைந்தோம். லெனின் எனது மனைவிக்கு வணக்கம் தெரிவித்து விட்டுக் கூறினர்:

''நதேஸ்தா கந்திராதியெவ்ன, என்னைப் பற்றி யாரிட மும் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு வரிடமும் பேசக் கூடாது! உரையாடல்களில் எனக்கு ஆதரவாகப் பேசாதீர்கள், என்னைப் பற்றிச் சச்சரவிடா தீர்கள்....''

இரகசிய நடவடிக்கை விதிகள் தனக்குத் தெரியும் என்றும், குழந்தைகளுக்கும் கூட அது தெரிந்ததே என்றும்

என் மனைவி லெனினுக்கு உறுதியளித்தார். எனக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டார் லெனின்.

''ஏழு பேர்.''

ஒவ்வொருவர் பெயரும் என்னென்ன என்று கேட்டு அவர்களுடன் அறிமுகம் செய்து கொண்டார் லெனின்.

சமையலறையிலிருந்து உலர்புல் பரணுக்குச் சிறு படிக்கட்டு சென்றது. பரணில் மேசையும் நாற்காலியும் போட்டேன். கமகமத்த உலர்புல் மீதே விளதீமிர் இலீச்சுக்கு நான் படுக்கை போட்டேன். அங்கு வசிக்க லெனினுக்குப் பிடித்துக் கூடப் போயிற்று. ஆனால் நிலைமை கவலைக்குரியதாக இருந்தது. நகர்ப்புற வாசிகளும் பக்கத்து வீட்டுக்காரர்களும் விஷயத்தைத் துருவித் தெரிந்து கொள்ளும் ஆவல் உடையவர்கள். பழமொழி சொல்கிற படி, இசைகேடாக ஏதேனும் நேர்வது சகஜம் தானே! ஏரியின் அக்கரைக்கு இலீச்சை விரைவாக அழைத்துச் செல்வது அவசியமாயிற்று. புல் வெட்டப்படுகிற இடத்தை இதற்காக வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அங்கே குடிசை ஒன்று அமைத்து, அத்தியாவசியமான அனைத்தையும் கொண்டு போக வேண்டியதாயிற்று. சுருங்கச் சொன்னால் குறை கூறவே இடமில்லாதபடி ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது. இதற்கு சில நாட்கள் சென்றன. லெனினிடம் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் வந்தனர். முதல் முறை எனது மனைவி—நான் அப்போது ஏரியின் மறு கரையில் இருந்தேன்—அவர்களை லெனினிடம் போக அனுமதிக்க விரும்பவில்லை. வந்தவர்களில் இருவரை அவளுக்கு நேரில் தெரியாது. பின்னர் சங்கேத வார்த்தைகள் ஏற்படுத்தப்பட்டன.

ஏரியின் அக்கரையில் எல்லாம் தயாரான பின்பு ஏரியின் வழியே இலீச்சைப் படகில் கூட்டி வந்து குடிசையில் குடியேற்றினோம். கிளைகளைக் கொண்டு கட்டப்பட்டு வைக்கோல் வேய்ந்தது இந்த எளிய குடிசை. இப்போது லெனினுக்குக் கருங்கல்லில் ''குடிசை'' என்ற நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ள இடத்தில் அது இருந்தது. குடிசைக்கு அருகே வெட்டிய அடிமரத்தின் மீது உட்கார்ந்திருப்பது

போல லெனினை ஓவியர்கள் சில சமயம் வரைகிறார்கள். உண்மையில் அப்படி இருக்கவே இல்லை. குடிசைக்கு அருகில் லெனின் வேலை செய்வதற்காக அடர்ந்த புதரில் ஒரு சிறு சதுக்கத்தை நான் சுத்தப்படுத்தினேன். பச்சைப் புதர் படர்ந்த சவுக்கை போல இருந்தது இது. அடிமரம் அங்கு ஒன்றும் இல்லை. மணையாகப் பயன்பட்ட ஒரு துண்டுக் கட்டை இருந்தது. குடிசைக்கு அருகில் சமையல் இடம் அமைக்கப்பட்டது. சமையல் பாத்திரம் கவட்டுக் கம்புகளில் தொங்கியது.

கொசுக்கள் பிடுங்கித்தின்றன. குறிப்பாக இரவு நேரத்தில் அவற்றின் தொந்தரவு அதிகமாக இருந்தது. அவை கடிக்காதபடிப் போர்த்துக் கொள்வது சாத்தியமாயிருக்கவில்லை. இதற்குப் பழகிக் கொள்ள வேண்டியதாயிற்று. உணவையும் பத்திரிகைகளையும் என் மனைவியோ மகனோ படகில் கொண்டு வந்தனர். விளதீமிர் இலீச்சுக்குப் பத்திரிகைகள் நிறையக் கிடைத்தன. அப்போது வெளி வந்து கொண்டிருந்த எல்லாப் பத்திரிகைகளும் அவருக்கு வந்தன. நிறையப் பத்திரிகைகள் வாங்குவதால் சந்தேகம் ஏதும் வந்து விடக் கூடாது என்பதற்காக எனது பையன்களில் யார் யார் எந்தெந்தப் பத்திரிகை வாங்க வேண்டும் என்று ஒழுங்கு படுத்தியிருந்தோம்.

லெனின் எவ்வாறு மறைமுகமாக வெளிநாட்டிற்குச் சென்றார் என்று பத்திரிகைகளில் குறிப்புகள் வந்தது எனக்கு நினைவிருக்கிறது: நீர் மூழ்கிப் படகுகளும் விமானங்களும் உபயோகப்படுத்தப்பட்டதாகச் செய்திகள் வந்தன. லெனின் நீர் வழியில் வெளியேறி மறைந்தார் என்ற ஒன்று மட்டுமே உண்மை: ஆனால் நீர் மூழ்கிக் கப்பலில் அல்ல, சாதாரணமான இரு துடுப்புப் படகில்தான் அவர் இடம் மாறினார். இத்தகைய செய்திகளைப் படித்த விளதீமிர் இலீச் விழுந்து விழுந்து சிரித்தார். முதலாளித்துவக் கூலிக்கார எழுத்தாளர்களை ''அற்பக் கோணங்கிகள்'' என்று வர்ணித்தார்.

லெனின் நிறைய வேலை செய்தார்—படித்தார், எழுதினார். தோழர்கள் அவரிடம் அடிக்கடி வந்து சென்றனர்.

ஸ்தாலின் இரண்டு முறை வந்து சென்ருர். அர்ஜோ நிகித்சே பலமுறை விஜயம் செய்தார். ஜெர்சீன்ஸ்கியும் ஸ்வெர்த்லோவும் விளதீமிர் இலீச்சைப் பார்த்துப் போனுர்கள். ரஸ்லீவ் ஏரிக்கரையில் இருந்த எளிய குடிசை புரட்சியின் உண்மையான தலைமையகமாக இருந்தது.

காலம் சென்றது. இலையுதிர்காலம் நெருங்கியது. அடிக் கடி மழை பெய்யத் தொடங்கியது.

மெல்ல மெல்லக் குளிர் அதிகமாகிக் கொண்டு போயிற்று. குளிருக்குகந்த கதகதப்பான ஆடைகள் அனைத்தையும் என் மனைவி வீட்டிலிருந்து எடுத்து வந் தாள். ஆனுல் குளிரிலிருந்தும் ஈரத்திலிருந்தும் இவையும் எங்களைப் போதுமான அளவு காப்பாற்றவில்லை. பல்வேறு விதமான வதந்திகள் வேறு பரவத் தொடங்கின: லெனின் செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிற்சாலையில் கருமானுக நடித்தவாறு ஒளிந்திருக்கிருர், லெனின் கோடை வாசஸ் தலத்தில் மறைந்திருக்கிருர் என்பன போன்றவை வதந்தி கள்.

இதை விட நம்பகமான, பாதுகாப்பான இடம் ஒன்று லெனினுக்காகத் தேட வேண்டிய நேரம் வந்து விட்டது. லெனினைப் பின்லாந்துக்கு அனுப்பி வைப்பது என்று மத்தியக் கமிட்டி முடிவு செய்தது.

ராய்வோலில் வசித்து வந்த செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிலாளர்கள் எல்லையைக் கடந்து செல்வதற்கான அனுமதிச் சீட்டுக்கள் வைத்திருந்தனர். புதுப்புனைவுப் பணியில் ஈடுபட்டிருக்கிறவன், சோவியத்தின் பிரதிநிதி, ஒரு குழுவின் தலைவன் என்ற வகையில் தொழிற்சாலை இயக்குநர் திமீத்ரியேவ்ஸ்கியின் அறைக்குள் என்னுல் போக முடிந்தது. அவர் கையெழுத்துக்காக அவரது மேசையின் மீது அனுமதிச் சீட்டு இருந்ததை நான் கண் டிருந்தேன். சற்று முன்னதாகவே நான் தொழிற்சாலைக்கு வந்து விட்டேன். அங்கிருந்த வாயில் காப்போர் எனக்கு நன்கு தெரிந்தவரே. இயக்குநரின் மேசையிலிருந்து ஐந்து அனுமதிச் சீட்டுக்களை எடுத்து லெனினிடம் கொண்டு வந்தேன். இவனேவ் என்ற பெயருடைய சீட்டை அவர்

தேர்ந்தெடுத்தார். விளதீமிர் இலீச்சுக்கு ஒப்பனை செய்து, தலையில் டோப்பா அணிவிக்கப்பட்டது. தோழர் லேஷென்கோ வந்து அவரைப் போட்டோ பிடித்தார். செஸ்த்ரோரெத்ஸ்கின் இராணுவச் செயலகத்தினுடைய உண்மையான முத்திரை பெற முடிந்தது. இவனேவ் அத்தாட்சிப் பத்திரத்தில் இவனேவ் போட்டோவில் இடப்பட்டிருந்த முத்திரையின் பாதியுடன் பொருந்தும் விதத்தில் லெனின் படத்தின் மீது முத்திரை இடப்பட்டிருந்தது.

அனுமதிச் சீட்டு லெனினுக்கு வழங்கப்பட்டது. அனுமதிச் சீட்டை அவர் கூர்ந்து பார்த்தார். வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''நன்றாகச் செய்திருக்கிறீர்கள்! கெட்டிக்காரர்கள்!''

பின்லாந்து செல்லும் ரயில்பாதை வரை காட்டுப் பாதையில் சென்று, ரயிலின் மூலம் இலீச்சைப் பெத்ரோகிராதுக்கு அழைத்துச் சென்று, எஞ்சின் கரிதள்ளுபவர் வேடத்தில் போல அவரைப் பின்லாந்துக்கு அனுப்ப வேண்டிய வேலைதான் பாக்கியிருந்தது. பின்லாந்து போல்ஷிவிக்குகளிடம் இந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது.

பெத்ரோகிராதுக்கு இலீச் செல்லவிருந்த நாளில் மத்தியக் கமிட்டியிலிருந்து ஒருவர் வருவார் என்று காத்திருந்தோம். புதருக்குப் பின்னால் யாரோ ஒருவர் தென்பட்டார்.

''அங்கு வருவது யார்?'' என்று கேட்டார் இலீச்.

''பக்கத்து வீட்டுக்காரர்'' என்றேன் நான்.

''எதற்காக வருகிறார்?''

''புல் அறுக்க உங்களை வேலைக்கு அமர்த்த வருகிறார் போலும். நீங்கள் மிக நன்றாக வைக்கோற் போர் போட்டிருக்கிறீர்களே!''

பக்கத்து வீட்டுக்காரர் நெருங்கி வந்து வணக்கம் சொன்னார்.

''இங்கே புல் அறுத்தது யார்?''

''ஒரு பின்லாந்துக்காரர்.''

''ருஷ்ய மொழி பேசுவாரா?''

''மாட்டார்.''

''என்னிடம் வேலை செய்ய அவர் வருவாரா?''

''மாட்டார். கூப்பிடாதே!''

''வருந்துகிறேன். எனக்கு உடல் நலமில்லை. மகனுக்கோ வேலை செய்ய முடியாது. புல் அறுப்பவர் ஒருவரைத் தேட வேண்டும்....''

பக்கத்து வீட்டுக்காரர் போய் விட்டார். இலீச் எழுந்தார். வழக்கம் போல வேடிக்கையாகச் சொன்னார்:

''என்னை வேலைக்கு அனுப்பாமலிருந்ததற்காக நன்றி, நிகோலாய் அலெக்சாந்தரவிச்!''

மாலையில் விளதீமிர் இலீச், நான், அவரை அழைத்துப் போக வந்திருந்த தோழர்கள் அனைவரும் காட்டுப் பாதையின் மூலம் பின்லாந்து செல்லும் ரயில் பாதைக்குக் கால் நடையாகச் சென்றோம். இருட்டாக இருந்தது. திபூனி ரயில் நிலையத்துக்கு வந்து, பெஞ்சின் மீது அமர்ந்தோம். இரகசியத் திட்ட விதிகளைக் கறாராகக் கடைப்பிடிப்பவரான லெனின் இங்கும் முறைப்படி நடந்து கொண்டார். உட்கார்ந்த உடனே எழுந்து நின்று அவர் சொன்னார்:

''நீங்கள் இங்கு உட்கார்ந்திருங்கள். நான் புதரில் மறைந்திருக்கிறேன்.''

இந்த எச்சரிக்கை உணர்வு கொஞ்சங் கூட அனுவசியமாக இருக்கவில்லை. லெனின் மறைந்ததுதான் தாமதம், ரயில் நிலையத்து அறைக்குள்ளிருந்து இடையில் வாள் அணிந்த ஒரு மனிதர் வெளிவந்தார். பிளாட்பாரத்தைச் சுற்றி நோட்டம் விட்டபடி எங்களை நோக்கி வந்தார் அவர்:

''உங்கள் அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டுங்கள்.''

தோழர்களிடம் பின்லாந்து பாஸ்போர்டுகள் இருந்தன.

''உன்னிடம் அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதா?'' என்னைப் பார்த்துக் கேட்டார் அவர்.

''செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிற்சாலையின் அடையாள வில்லைதான் இருக்கிறது.''

''இந்த நேரத்தில் நீ ஏன் இங்கு இருக்கிறாய்?''

''ஏன்? காரிய நிமித்தமாய்த்தான் வந்திருக்கிறேன்.

நான் புல்வெட்டும் இடம் இங்கு இருக்கிறது. இரவைக் கழிக்கிறேன் இங்கே. தண்ணீர் குடிக்க விரும்பினேன். தண்ணீர் குடிக்க ரயில் நிலையத்துக்கு வந்தேன். இந்த பின்லாந்துக்காரர்களைக் கேட்டேன், இவர்கள் பதிலேதும் சொல்லவில்லை.''

இந்த ஆசாமி எதிரி ஒற்றர் படையின் அதிகாரி என்று இதற்குள் கண்டு கொண்டு, லெனினுக்கு எத்தகைய ஆபத்து வந்திருக்கிறது என்று அறிந்து கொண்டேன். ''முன்னரே நிலையத்தைச் சுற்றிப் பார்க்காதது எனது தவறு, எனது கவனமின்மை'' என்று நினைத்தேன். பெத்ரோகிராதுக்குச் செல்லும் ரயிலிலிருந்து அதிகாரியின் கவனத்தை எந்த வகையிலாவது திருப்புவது என்று முடிவு செய்தேன்.

''என் பின்னே வா!'' அதிகாரி உத்திரவிட்டார்.

''நான் ஏன் வர வேண்டும்?''

''வா!'' எனது கையைப் பற்றினார் அவர்.

அறையில் துப்பாக்கிகள் பிடித்திருந்த சிவில் அதிகாரிகளும் மாணவர்களும் நிறைய இருந்தனர்.

அதிகாரி மேசையருகே உட்கார்ந்தார். கை கால்களை விரித்துக் கொண்டு நானும் அலட்சியமாக உட்கார்ந்தேன்.

''நீ யார் என்று சொல்!''

''நான் செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிற்சாலையின் தொழிலாளி.''

''தொழிலாளியா? நீ எப்படி நடந்து கொள்கிறாய்! எழுந்து நில்! இவனைச் சோதனையிடுங்கள்!''

பெத்ரோகிராத் தோழர் ஒருவரின் பிரதிநிதிச் சீட்டை அவரிடம் சேர்ப்பதற்காக வழியில் என்னிடம் லெனின் கொடுத்திருந்தார். அதனை வீசி விடுவதற்கு எனக்கு அவகாசம் கிட்டவில்லை.

''நீ ஒரு போல்ஷிவிக்!''

''சீட்டு என்னுடையதல்ல. நான் செஸ்த்ரோரெத்ஸ்கில் வேலை செய்கிறேன், வசிக்கிறேன்.''

''புதிர் போடாதே.... எத்தனை ஆண்டுகளாய்த் தொழிற்சாலையில் வேலை செய்கிறாய்?''

''முப்பது வருடங்களாய்.''

''அப்படியானால் நீ அதிகாரிகள் எல்லோரையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அனைவரது பெயர்களையும் சொல்.''

நான் வரிசையாகப் பெயர் சொன்னேன். சிற்றதிகாரிகளின் பெயரையும் விடவில்லை. கடியாரத்தில் முள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. நேரத்தைப் போக்குவதற்காக கலாட்டா செய்து குழப்பம் ஏற்படுத்த நினைத்து அதிகாரிக்கு உதை கூடக் கொடுக்க முடிவு செய்தேன். ஆனால் சந்தர்ப்பம் எனக்கு வசதி செய்து தந்தது.

அதிகாரி திடீரென்று கேட்டார்:

''தொழிற்சாலையின் தலைமை மருத்துவர் யார்?''

''கிரேச். ஐயோ, அந்த ஆள் ஓர் ஊழல் பேர்வழி!''

ஆவேசம் கொண்டு அதிகாரி குதித்து எழுந்தார்.

''என் மாமாவைக் கேவலப் படுத்துமளவுக்கு நீ எப்படித் துணிந்தாய், அயோக்கியனே!''

ரயில் வந்தது. இது பற்றி அதிகாரிக்குத் தகவல் கொடுத்தார்கள். ஆனால் அவர் எதையும் கவனிக்கவில்லை. அவர் உட்கார்ந்தார். என்னவோ எழுதத் தொடங்கினார். என்னைப் பார்த்துச் சீறினார்: ''நான் உன்னைச் சுட்டுக் கொல்கிறேன்!''

கதவு லேசாகத் திறந்தது. இடுக்கு வழியே தோழரின் முகத்தை இனம் கண்டு கொண்டேன். அப்படியானால் இலீச் ஏற்கெனவே ரயிலில் இருக்க வேண்டும்!

அதிகாரி எழுதிக் கொண்டிருந்த போது இரண்டாவது ரயில் வந்தது. இது பெத்ரோகிராதிலிருந்து வந்தது. ரிவால்வரை நீட்டியபடி என்னை பிளாட்பாரத்துக்குக் கூட்டி வந்தனர். ஒரு ரயில் பெட்டியில் என்னைத் தள்ளிப் பூட்டினர். வண்டி போகும் போது குதிப்பதில்லை என்று முடிவு செய்தேன். செஸ்த்ரோரெத்ஸ்கில் உள்ள தோழர்கள் துணை செய்வார்கள் என்று நம்பினேன்.

பெலோவோஸ்திரவில் ரயில் பெட்டிக்குள் சிற்றதிகாரி ஸ்மிர்னோவ் வந்தார். அவர் எனக்கு நன்கு பழக்க

மானவர். எங்கள் செஸ்த்ரோரெத்ஸ்க் சோவியத்தில் அவரும் ஓர் உறுப்பினர்.

''தோழர் எமெல்யானவ், நீ எப்படி இங்கு இருக்கிருய்?''

''உங்கள் அதிகாரிகள் என்னைக் கைது செய்துள்ளனர்.''

ரயில் பெட்டியின் கதவைத் திறந்தார் அவர்:

''ஓடி விடு!''

மெதுவாக வீடு வந்து சேர்ந்த நான் உடனே படுத்துக் கொண்டேன். நான் மிகவும் களைத்துப் போயிருந்தேன். கூச்சல் கேட்டு நான் விழித்தேன். என் மனைவி அழுது கொண்டிருப்பதைக் கண்டேன்: ''என்ன செய்து விட்டார்கள். என்ன செய்து விட்டார்கள்!''

எங்களிடையே தொடர்பாய் இருந்த பெண்மணி வந்திருக்கிருள். நான் தூங்குவதைப் பார்க்காமல் என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிருள்:

''அவரைக் கைது செய்தார்கள். ஆனால் அவர் போய் விட்டார் என்று தெரிகிறது.''

அவள் லெனினைப் பற்றித்தான் பேசியிருக்கிருள் என்று முடிவு செய்த என் மனைவி துக்கம் தாங்காது புலம்பத் தொடங்கி விட்டாள். நான் கட்டிலிலிருந்து குதித்தெழுந்தேன்—எல்லாம் தெளிவாயிற்று.

பின்னர் மகிழ்ச்சிச் செய்தி வந்தது: லெனின் நல்லபடியாக பின்லாந்து போய்ச் சேர்ந்துவிட்டார்!

விரைவில் ரஸ்லீவுக்கு எங்களிடம் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ வந்தார். அவர் விளதீமிர் இலீச்சைக் காண்பது அவசியமாயிருந்தது. இதற்காக எல்லை வழியாகப் பின்லாந்துக்குப் போவதற்கு அனுமதிச் சீட்டு பெற வேண்டியிருந்தது. ராய்வோலிலிருந்த எனது நண்பரான ஓர் எழுத்தர் இத்தகைய அனுமதிச் சீட்டு தயார் செய்தார். அவர் சார்ஜண்டு மேஜரிடம் கையெழுத்து வாங்கி முத்திரை பதித்துக் கொடுத்தார். நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞவும் அகாப்யா அதமானவா என்ற பெயர் கொண்ட ராய்வோல்காரர் போல நல்ல படியாக எல்லையைத் தாண்டிச் சென்று விட்டார்.

கட்சி இட்ட பணி நிறைவேற்றப்பட்டது!

ராஹ்யா

ரஸ்லீவில் இனியும் தங்கியிருப்பது பாதுகாப்பற்றது என்பதால் விளதீமிர் இலீச் லெனின் பின்லாந்துக்குப் புறப்பட வேண்டும் என்று எனது பழைய நண்பரான அலெக்சாந்தர் ஷத்மானிடமிருந்து நான் அறிந்தேன்.

ஒரு தடவை விவரங்கள் எதுவும் கூறுமல் அலெக்சாந்தர் என்னிடம் சொன்னுர்:

''ஏய்னே, உனக்கு பின்லாந்து எல்லே நன்கு தெரியும். பத்திரமாக அதனைக் கடந்து செல்வது சாத்தியமா என்று பரிசோதிக்க வேண்டும்.''

விஷயம் லெனினே அனுப்புவது பற்றியது என்று தெரியாமல், ஆனுல் விஷயம் என்னவோ முக்கியமானது என்று உணர்ந்தபடி, கட்சி முறைப் பணிகளே மேற்கொண்டு பழகி விட்டதால் ஷத்மானுடன் எல்லேயைப் பரிசோதித்து வரக் கிளம்பினேன்.

லெனினே அனுப்ப வேண்டும் என்று ஷத்மான் ஏன் உடனே என்னிடம் சொல்லவில்லே? பல்லாண்டு காலமாக வகுக்கப்பட்ட மறைமுக வேலே குறித்த விதிகளே அதற்குக் காரணம். இவற்றின்படி அந்தக் காலத்தில் லெனினது பெயரை நாங்கள் உரக்கச் சொல்லுவதே இல்லே.

தானுக ஒருவன் செய்யாத குற்ற ஏற்பை அவனது அறிவை மயக்கி அவனது மூளேயிலிருந்து போலீசார் பிடுங்கி விடக் கூடும் என்று நாங்கள் அறிந்திருந்தோம். மனிதத் தன்மையற்ற சித்திரவதைகளால் ரகசியத்தை

அவர்கள் கறந்து விடலாம். எனவே, லெனின் எங்கிருக்கிருர் என்று கேட்காமலிருக்கக் கூட எங்களில் ஒவ்வொருவரும் முயன்ருேம்.

எனவேதான் யாரை அனுப்ப எண்ணம் கொண்டிருக்கிருர் என்று எனக்குச் சொல்லாமலே போல்ஷிவிக் ஷத்மான் என்னுடன் சேர்ந்து எல்லையைச் சோதித்தார். எல்லையைக் கடக்கப் போகிறவர் யார் என்பதைப் பொருட்படுத்தாமலே நாங்கள் திட்டம் வகுத்தோம்.

திவர்ட்சோவயா சதுக்கத்திலிருந்த கேரென்ஸ்கி அலுவலகத்தின் பணியாளர்களும் எழுத்தர்களுமாக இருந்த எங்கள் தோழர்கள் மூலமாக அனுமதிச் சீட்டுக்கள் பெற்ருேம். எனது பிள்ளைப் பருவத்து நண்பராயும் பள்ளித் தோழராயும் இருந்த எஸ்தோனியாக்காரர் ஒருவர் அங்கே வேலை செய்து வந்தார். பின்லாந்து எல்லையை எந்த இடத்திலும் கடப்பதற்கான அனுமதிச் சீட்டு எனக்குக் கொடுத்தார். இந்த அனுமதிச் சீட்டு இன்னுங்கூட என்னிடம் இருக்கிறது. அதில் எனது புகைப்படமும் அலுவலக அதிகாரிகளது முத்திரையும் இருக்கின்றன. எல்லைப் பகுதியின் நகர்ப்புறத்தில் வாழ்கிற ஒரு பின்லாந்துக்காரரைப் போலப் பாவித்து எனக்குத் தரப்பட்ட இந்த ஆவணத்தின் மூலம் 1917ம் ஆண்டுக் கோடைகாலம் முழுதும் கால்நடையாகவோ வாகனம் மூலமாகவோ எல்லையைக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டேன். இதே போன்ற ஓர் அனுமதிச் சீட்டை ஷத்மானும் இவ்வாறே பெற்ருர்.

செஸ்த்ரோரெத்ஸ்க் முதல் மய்னேவ் வரை எல்லையை நாங்கள் பரிசோதித்தோம். எல்லைப்புறச் சிற்ருறு செஸ்த்ராவின் கரையோரம் சுமார் 10 மைல் தூரம், ஒரு நாள் முழுதும் நடந்து பார்த்தோம்.

சுங்க அதிகாரிகளையும் எல்லைக் காவல் வீரர்களையும் நாங்கள் வழியில் சந்தித்தோம்.

எந்தப் பக்கத்தில் இருந்தோம் என்பதைப் பொறுத்து பின்லாந்துக்கோ ருஷ்யாவுக்கோ போகிருேம் என்று அவர்களுக்குப் பதில் சொன்னேம். சரியான நேரத்தில் நாளை வேலைக்குச் செல்வதற்காக ருஷ்யாவுக்குப் போகிருேம்

என்றும், சொந்த வீட்டை நோக்கி பின்லாந்துக்குப் போகி றோம் என்றும் சொன்னோம்.

''ஏன் வாகனத்தில் செல்லாமல் கால்நடையாய்ப் போகிறீர்கள்?''

''நடந்து போக விருப்பமாய் இருந்தது.''

''ஏன் இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்?''

''இங்குதான் அருகில் நாங்கள் போக வேண்டும்.''

''அங்கே நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''கோடைகால வீட்டில் வசிக்கிறோம்.''

''ஏன் நீங்கள் இரண்டு பேராகச் செல்கிறீர்கள்?''

''தனியாகப் போனால் சலிப்பாக இருக்கும்.''

''உங்கள் உறவினர்கள் எங்கே இருக்கிறார்கள்?''

''வீட்டில்.''

மரியாதையாக, ஆனால் கண்டிப்பாக எங்கள் அனு மதிச் சீட்டுக்களை அவர்கள் பரிசோதித்தார்கள். எங்கள் முகங்களுடன் புகைப்படங்களை ஒப்பிட்டுப் பார்த்தனர். கண்களைப் பார்த்தார்கள், பக்கவாட்டில் பார்த்தார்கள். எங்களைத் திருப்பி நிறுத்தினார்கள், குனிந்து பார்த்தார் கள், உயரே நின்று பார்த்தார்கள். தொப்பிகளைக் கழற்றினார்கள். எல்லாப் புறங்களிலுமிருந்து பார்வை யிட்டார்கள்.

லெனினைக் கண்டுபிடிக்கிற வேலை எல்லோருக்கும் தரப் பட்டிருந்தது. எனவேதான் கடந்து செல்பவர்களை இவர் கள் அவ்வளவு கவனமாகச் சோதனையிட்டனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் லெனினது புகைப்படம் இருந்தது. எங்களைச் சுற்றிப் பார்த்தபடிக் கைகளில் புகைப்படத்தை வைத்துக் கொண்டு எங்களில் யாரேனும் லெனினோ என்று பார்த்தார்கள்.

நாங்களோ மழமழப்பாக முகச் சவரம் செய்து கொண்டு உண்மையான அறிவுஜீவிகளைப் போல உடை அணிந்திருந்தோம். நான் எப்போதும் பௌலர் ஹாட்டு அணிவது வழக்கம். நாங்கள் இயல்பாக, சகஜமாக நடந்து கொண்டோம்.

அனேகமாக ஒவ்வொரு கிலோமீட்டர் தூரத்திலும் காவலாளிகள் எதிர்ப்பட்டனர். இந்தச் சோதனைகள் மீண்டும் மீண்டும் நடந்தன. மறுபடியும் விசாரணை. உருவத்தையும் புகைப்படத்தையும் திரும்பவும் ஒப்பிட்டுப் பார்ப்பது.

இந்த வழியில் எல்லையைக் கடந்து செல்வது சாத்திய மில்லை என்ற முடிவுடன் நாங்கள் ருஷ்யாவுக்குத் திரும் பினோம்.

ஷத்மானிடம் நான் கேள்வி கேட்டேன்:

''அப்படியானால் தோழர் லெனினைத்தானே அனுப்பி வைக்க வேண்டும்?''

''ஆமாம். இது பற்றிச் சொல்லக் கூடாதாயினும் நீ நம்பகமானவன் என்று எனக்குத் தெரியும்.''

''எல்லையைத் தாண்டப் போகிறவர் லெனின் என்று நானுந்தான் ஊகித்தேன்.''

''வேறு வழிகள் நமக்கு மிச்சமில்லையா?'' என்று ஷத் மான் கேட்டார்.

''அனுமதிச் சீட்டுக்கள் மிகக் கவனமாகச் சோதிக்கப் படுகின்றன என்பதாலும் புகைப்படம் நபருடன் ஒத் திட்டுப் பார்க்கப்படுகிறது என்பதாலும் மோசமாகத் தயார் செய்யப்பட்ட அனுமதிச் சீட்டு மாட்டிக் கொடுத்து விடும் என்பது தெளிவாயிற்று. எனவே சட்ட விரோத மான தோழரை, குறிப்பாக அவரை அனுப்பி வைப்பது ஆபத்தானது.''

''அதாவது இந்த வழி நமக்கு லாயக்கில்லை?''

''லாயக்கே இல்லை.''

''அப்படியானால் வேறு வழி தேவை.''

அப்போது 1906ம் ஆண்டு பரிசோதிக்கப்பட்ட ஒரு வழியை நான் காட்டினேன். மாஸ்கோவில் நடந்த பிரேஸ் னியா எழுச்சிக்குப் பின்பு, தோழர்களை ரகசியப் போலீ சாரிடமிருந்து மறைத்தபடி ரயில் எஞ்சின்களில் ஏற்றி எல்லைக்கு மறு புறம் அனுப்பியிருக்கிறோம்.

நான் சொன்னேன்:

''அவரை ரயில் எஞ்சினில் ஏற்றி அனுப்புவோம். ஒரு பயணியைப் போல ரயில் பெட்டியில் உட்கார்ந்து கொள்ளுமாறு கரிதள்ளுபவரிடம் சொல்லுவோம். கரிதள்ளுபவரின் இடத்தில் லெனின் உட்கார்ந்து கொள்ளட்டும். யாரும் சந்தேகப்படாத விதத்தில் இவ்வாறு அவரை அழைத்துச் செல்வோம்.''

''யார் ஏற்றிச் செல்வார்?''

''எஞ்சின் டிரைவர் கூகோ யாலவா.''

கூகோ ஷத்மானின் குழந்தைப் பருவ நண்பர். எனக்கோ, உடன் வேலை செய்ததால் அவரைத் தெரியும். 1905 முதல் 1907 வரை ரயில் எஞ்சின் தொழிலாளர்களின் குழுவில் அவருக்கு நான் உதவியாளனாக இருந்தேன். நாங்கள் செய்ததே போன்ற வேலையைச் செய்த அவர் தன்னலமற்ற தோழர் என்று எனக்குத் தெரியும். அமைதியான, நிதானமான, பெருந்தன்மை கொண்ட அவரை நான் முற்றாக நம்பினேன்.

''கூகோ யாலவா வழக்கம் போல எஞ்சினைத் தயார் செய்து கால அட்டவணைப்படி ரயிலை ஓட்டுவார். காலகாலத்துக்கும் புகழ் ஈட்டும் வண்ணம் அவர் இதனை நிறைவேற்றுவார்.''

எந்த இடத்தில் அவர் லெனினை ஏற்றிக் கொள்வார், ரயில் எஞ்சின்களும் பெட்டிகளும் மேலும் கீழும் மிகக் கவனமாகச் சோதிக்கப்படுவதால், எஞ்சினில் ஒரு நிமிடம் கூட அதிகப்படி ஆள் இல்லாதவாறு கரிதள்ளுபவனின் இடத்துக்கு லெனினை எப்படி மாற்றிக் கொள்வார் என்பது இன்னும் தெளிவாகாமல் இருந்தது. யாலவா லெனினை எஞ்சினில் ஏற்றிக் கொண்டு, கரிதள்ளுபவரை ரயில் பெட்டிக்கு மாற விடுவதற்குத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

லெனினைக் கடத்துவதற்கான திட்டத்தை எஞ்சின் டிரைவர் யாலவாவுடன் சேர்ந்து அவரது வீட்டில் தீட்டினோம்.

வழக்கம் போலப் பெத்ரோகிராதிலிருந்து ரயில் கால அட்டவணைப்படிக் கிளம்பும். வீபர்க்குக்கும் ராய்வோலுக்

கும் அது போகும். நாங்களோ, தெரியோக் வரைதான் இலீச்சை அழைத்துச் செல்ல வேண்டும்.

எல்லை பெலோவோஸ்திரவில் இருந்தது. அங்கும் அனுமதிச் சீட்டுக்கள் கவனமாகப் பரிசோதிக்கப்பட்டன. கால அட்டவணைப்படிப் பரிசோதனைக்காக 20 நிமிட நேரம் ரயில் நிற்கும், சில சமயங்களில் ஒரு மணி நேரம் கூட நிற்பதுண்டு. விசேஷ எல்லைக் காவல் படையினர் ரயிலுக்குள் விரைவாக நுழைவார்கள். நிலையத்துக்கு ரயில் வருவதற்கு முன்னால் ரயில் பெட்டிகள் கண்டக்டர்களால் மூடிப் பூட்டப்படும்.

பின்லாந்துக்காரர்களுடையவும் ருஷ்யர்களுடையவும் அனுமதிச் சீட்டுக்கள் சோதிக்கப்படும். நிலைமை மிகச் சங்கடமானது.

நாங்கள் பின்வருமாறு முடிவு செய்தோம்: விளதீமிர் இலீச் பெத்ரோகிராதிலிருந்து 9 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள உதேல்னயா வரை எங்களுடன் வாகனத்திலோ நடந்தோ வர வேண்டும், இலீச் எஞ்சினில் ஏறிக் கொண்டு எல்லையிலுள்ள பெலோவோஸ்திரவுக்கு 23 கிலோமீட்டர் பயணம் செய்வார், பின்னர் அதே ரயிலில் பின்லாந்து பூமியில் தெரியோக் வரை பயணம் செய்வார். அங்கிருந்து கால்நடையாகவோ குதிரை மீதோ, அடர்ந்த காடுகளின் நடுவே இருந்த, பர்வியாய்னென் என்ற பெயர் கொண்ட பின்லாந்துக்காரரின் வீட்டுக்குச் சென்று அங்கு மறைந்து வாழ்வார்.

பயணம் மிகவும் சிக்கலானது என்று சொல்லவே வேண்டாம். துணிவுச் செயல்கள் நிகழ்வதை முன்னதாகவே பார்க்க முடிந்தது. ஆனால், பயணம் நல்லபடியாக முடிந்தது என்பது தெரிந்ததே. ரஸ்லீவ் ஏரிக்கரைச் சகதியிலிருந்து இரண்டு சிவப்பு ஏரிகளின் கரைகளுக்கு லெனின் சென்று விட்டார். இந்த ஏரிகளுக்கு இடையில் அமைதி தவழும் பின்லாந்துக் கிராமமான யல்காலா இருக்கிறது.

* * *

நானும் ஷத்மானும் ரஸ்லீவுக்கு மாலையில் வந்தோம். இந்தக் கடலோர ரயில் நிலையத்தில் எத்தகைய சோதனைகளும் நடக்கவில்லை. ரஸ்லீவ் ரயில் நிலையத்திலிருந்து எமெல்யானவ் வீடு வரை, ஏரிக் கரை வரை நாங்கள் நடந்து சென்றோம். ரஸ்லீவ் வழியாகப் படகு மூலம் எங்களை எமெல்யானவ் கூட்டிச் சென்றார்.

நடந்து சென்றோம். வழியில் வைக்கோற் போர் இருந்தது. அதனருகில் ஒருவர் நின்றிருந்தார். நான் அவரைக் கடந்து செல்ல இருந்தேன். ஷத்மான் என்னிடம் சொன்னார்:

''ஏய்னோ, இங்கே வா.''

நெருங்கிச் சென்றதும் நான் திகைத்துப் போனேன். என் முன்னே லெனின் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன். நான் அவரை முன்னர் கவனிக்கவில்லை.

நான் மன்னிப்புக் கோரினேன்:

''தோழர் லெனின், நான் உங்களை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. மன்னித்து விடுங்கள்.''

விளதீமிர் இலீச் சிரித்தார்:

''என்னை அடையாளம் தெரிந்து கொள்ளாமலிருப்பது ரொம்பவும் நல்லதே.''

நாங்கள் புல் தரையில் உட்கார்ந்தோம்.

நானும் ஷத்மானும் வைக்கோல் போரின் பக்கம் போன போது படகைக் கரையில் ஒதுக்கமாக வைத்து விட்டு எமெல்யானவ் எங்களருகே வந்தார்.

உதேல்னயா வரை எந்த வழியில் செல்வது என்பது பற்றிய திட்டத்தை விவாதித்தோம்.

செஸ்த்ரோரெத்ஸ்க் கிளைப்பாதையின் ரஸ்லீவ் பிளாட்பாரத்திலிருந்து பின்லாந்து ரயில் நிலையம் வரை செல்வது என்றும், நிலைமையைப் பொறுத்து அங்கிருந்து டிராம் மூலமாகவோ நடந்தோ பின்லாந்து ரயில் பாதையின் உதேல்னயா நிலையம் வரை செல்வது என்றும், பின்லாந்து ரயில் எஞ்சினில் கரிதள்ளுபவராக லெனின் ஏறிக் கொள்

ளும் வரை எனது தொழிலாளி நண்பரான எமீல் கால்ஸ் கியின் வீட்டில் லெனின் தங்கியிருப்பது என்றும் ஷத்மா னும் நானும் திட்டமிட்டிருந்தோம். இதற்கு மாருன வேருெரு திட்டத்தை எமெல்யானவ் முன்வைத்தார். பின் லாந்து ரயில் பாதையில் ஏதாவது ஒரு முனே வரை கால் நடையாகப் போய், அங்கு ரயில் பிடித்து உதேல்னயா நிலேயம் வரை போவது என்பது அவரது திட்டம். எமெல்யானவின் திட்டம் சிறந்ததாக இருந்தது. எனவே அவரது வழிகாட்டலின் கீழ் செல்வது என்று முடிவு செய்தோம்.

லெனினது பொருள்கள் வைக்கோல் போருக்குள் இருந் தன. எமெல்யானவின் புதல்வர்களில் ஒருவர் அவைகளே எடுத்து வைத்திருந்து பின்னர் வருகின்ற உத்திரவுப்படி அவற்றை உரிய இடத்தில் சேர்க்க வேண்டும். அங்கு இருந்த பொருள்களே எல்லாம் பத்திரமாக வைத்திருப் பதற்கு எல்லா நடவடிக்கைகளேயும் மேற்கொள்வதாக நாங்கள் வாக்களித்தோம். லெனின் எழுதிய குறிப்புகளின் துண்டுக் காகிதங்கள் அங்கு இருந்தன.

நாங்கள் ஒற்றையடிப் பாதை வழியே போனது நினே விருக்கிறது. முன்ஞல் எமெல்யானவ் போஞர். லெனின் மிகவும் உற்சாகமாக இருந்தார். காட்டுப் பாதையில் சென் ரேம். முற்ரு நிலக்கரி காலுக்கடியில் கனன்று கொண் டிருந்தது. பாதையில் புகை பரவிற்று. மூச்சுவிடுவதற்குக் கஷ்டமாக இருந்தது. நாங்கள் வழிதவறிப் போனேம். எரிந்து கொண்டிருந்த காட்டை நோக்கி, காட்டுத் தீயை நோக்கி நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். முற்ரு நிலக்கரி தரைக்கடியிலும் எரிந்து கொண்டிருந்தது. எரி யாத மெல்லிய நிலப் படலம் பளு தாங்காமல் பிளந்து விடக் கூடும். பூமிக்குள்ளே, கனன்று கொண்டிருந்த முற்ரு நிலக்கரியில் விழுந்து விடக் கூடிய அபாயத்துடனேயே நாங்கள் நடந்து கொண்டிருந்தோம்.

காற்று வழி காட்ட, காற்று வீச்சின் எதிர்த் திசையில் நடந்தபடிக் காட்டிலிருந்து வெளியேறத் தொடங்கினேம். மூச்சுத் திணறச் செய்யும் மஞ்சள் புகை காற்றில் நிறைந்து

இருட்டாக்கியது. வானமோ பூமியோ இரவின் இருட்டில் தெரியவில்லை. உலக வழக்கில் சொல்வது போல நீரையும் நெருப்பையும் கடந்து சென்று கொண்டிருந்தோம். வழி தெரிந்த நிபுணரான எமெல்யானவ் முன்னால் போனார். நெருப்பிலிருந்து மீள்வது என்கிற விருப்பம் தவிர வேறு உணர்ச்சி ஏதும் எங்களிடம் இல்லை.

காலுக்குக் கீழே பூமி நெகிழ்ந்தது. பூமிக்குக் கீழிருந்து புகை வந்தது. இறுதியாகப் புகை சூழ்ந்த பகுதியிலிருந்து வெளியேறினோம். இலீச் அமைதியாக எங்களுடன் வந்தார். ஆனால் பாதை மட்டும் ஒரேயடியாகத் தவறி விட்டது.

காட்டினூடே, கருகிப் போன காட்டுப் புல்லினூடே பாதையின்றிச் சென்று கொண்டிருந்தோம். ஒரு சிற்றாற்றை நெருங்கினோம். ஆறு அமைதியாகப் பெருகியது. கரைகள் தாழ்வாக இருந்தன.

சிற்றாற்றின் அந்தப் பக்கம் வண்டித் தடம் ஒன்று தென்பட்டது. ஆற்றுத் தண்ணீரைத் தாண்டி யாரோ சென்றிருக்க வேண்டும். தண்ணீர் ஆழமில்லை என்று நாங்கள் முடிவு செய்தோம். ஆடைகளை முழுமையாகக் கழற்றி விட்டோம். ஒவ்வொருவரும் ஆடையைக் கையில் தூக்கிக் கொண்டோம். தண்ணீருக்குள் இறங்கினோம். விளதீமிர் இலீச் சிரித்தார்.

தண்ணீர் எங்கள் மார்பு வரை வந்தது. தண்ணீர் மட்டத்தை மழை உயர்த்தியிருந்தது. சாதாரணமாக இந்தச் சோர்னயா ஆற்றில் முழங்கால் அளவே தண்ணீர் இருக்கும். ஆற்றைக் கடந்து ஆடை அணிந்து கொண்டோம்.

திசைகாட்டி எங்களிடம் இருக்கவில்லை. நட்சத்திரங்களைக் கொண்டு கிழக்குத் திசையை நிர்ணயித்து ஒற்றையடிப் பாதை வழியே போனோம்.

திடீரென்று ரயில் நிலையத்தைக் கண்டோம். நாங்கள் நின்றோம். இங்கு சந்தேகத்துக்குரிய நபர் என்று ஜங்கெர்களால் எமெல்யானவ் கைது செய்யப்பட்டு ரயில் நிலையக் கட்டிடத்துக்குள் கூட்டிச் செல்லப்பட்டார். அவர்

கெட்டிக்காரராக நடந்து கொண்டு காலை வரை அங்கு உட்கார்ந்திருந்தார்.

நாங்கள்—லெனினும், ஷத்மானும், நானும்—ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்த ஒரு பள்ளத்திற்குள் பதுங்கிக் கொண்டோம். ஆயுதந்தாங்கிய ஐங்கெர்களின் குரல்கள் எங்களுக்குக் கேட்டன. ஏரியில் மீன் நிறைந்திருப்பது போல இவர்கள் ரயில் நிலையத்தில் நிறைந்திருந்தனர்.

நிலையத்தின் பெயர்ப் பலகை வரை ஊர்ந்து சென்று அதில் எழுதியிருப்பதைப் படித்தேன்: ''திபூனி''.

பின்னர் நகர்ப்புற ரயில் எப்போது கிளம்புகிறது என்று அறிந்து வருவதற்காக ஷத்மான் ரயில் நிலையத்துக்குப் போனார். அவரும் ஐங்கெரால் பிடித்துக் கொள்ளப் பட்டார். இந்த நேரத்தில் சீழ்க்கையொலி கேட்டது. பெலோவோஸ்திரவிலிருந்து வந்த ரயில் நிலையத்தை நெருங்கியது.

நிலையக் கட்டிடமான மர வீட்டின் அருகில் மட்டுமே பிரகாசமாக இருந்தது. சுற்றிலும் இருட்டாக இருந்தது. ரயில் நின்றவுடன் லெனினும் நானும் ரயில் பெட்டிக்குள் விருட்டென்று ஏறிக் கொண்டோம். ஷத்மான் ஐங்கெர்களுடன் வாதாடிக் கொண்டிருந்ததையும் அவர்கள் அவரைப் பக்கத்து ரயில் பெட்டிக்குள் தள்ளியதையும் நாங்கள் கண்டோம்.

பெட்டிக்குள் நுழைந்தோம். அது காலியாகவும் இருட்டாயும் இருந்தது. நாங்கள் உட்கார்ந்தோம்.

ரயில் நகர்ந்தது. வெண்-சிவப்பு-பச்சை விளக்குடன் கண்டக்டர் பெட்டிக்குள் நுழைந்தார். ஒரு பழைய நண்பரைப் போல அவர் எனக்கு வணக்கம் சொன்னார். டிக்கெட்டுகள் வாங்க எங்களுக்கு நேரமிருக்கவில்லை என்று நான் சொன்னேன்.

''சரி, ஓசியில் ஏற்றிப் போகிறேன்.''

அரட்டைப் பேர்வழியான கண்டக்டர் பின்பு அரசியல் பற்றிப் பேசத் தொடங்கினார். நடந்து வந்த சம்பவங்களைப் பற்றியும் லெனினைப் பற்றியும் பேசலானார்.

''இந்த லெனின் ஒரு ஜெர்மன் ஒற்றர். அவருக்கு, லெனினுக்கு, 25 லட்சம் ரூபிள் கொடுத்திருக்கிறார்களே, எதற்காக என்ற கேள்வி எழுகிறது!'' என்றார் அவர்.

இது முதலாளித்துவ அவதூறு என்று நான் மெய்ப்பிக்க முயன்றேன்.

''தொழிலாளியான உன்னை முட்டாளாகவும், மரமண்டையாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்று நீ புரிந்து கொள்ள வேண்டும்.''

லெனின் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு, பேச்சில் கலந்து கொள்ளாமல் உட்கார்ந்திருந்தார். கண்டக்டர் தம்மைக் கண்டு விடுவார் என்று அவர் அஞ்சியிருக்கக் கூடும்.

ரயில் வேகமாகப் போயிற்று. சுமார் 50 நிமிடம் பயணம் தொடர்ந்தது. பெட்டியில் நாங்கள் மூவர் இருந்தோம். கண்டக்டரின் கைவிளக்கு மட்டுமே ரயில் பெட்டிக்கு ஒளி தந்தது.

இவ்வாறாக அரசியல் பற்றிக் கண்டக்டருடன் பேச்சு நடத்தியபடி, அருகிலேயே பெட்டியில் மௌனமாக லெனின் உட்கார்ந்திருக்க, லெனினது பண்புகள் பற்றி விவாதித்தபடி உதேல்னயா நிலையம் வரை வந்து விட்டோம். அங்கு இறங்கி அரட்டைப் பேர்வழியான கண்டக்டரிடம் விடைபெற்றுக் கொண்டோம். லெனின் நட்பு முறையில் வலுவாக அவருடன் கை குலுக்கினார்.

பின்னர் நாங்கள் கால்நடையாகப் புறப்பட்டு இரவு வெகு நேரங் கழித்து கால்ஸ்கியின் வீட்டை அடைந்தோம். என் மனைவி அங்கு எங்களுக்காகக் காத்திருந்தாள். அவள் மூன்று இரவுகள் காவல் பணி புரிந்தாள். சன்னல் வழியே வெளி முற்றத்தை எட்டிப் பார்த்து சந்கேதச் சைகையைக் கண்டு எங்களை உள்ளே விட்டாள்.

நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தோம். எங்களுடன் ஷத்மான் இருக்கவில்லை. ரயில் உதேல்னயா நிலையத்தில் நின்ற போது அவர் அங்கு இறங்காதது எங்களுக்கு வியப்பைத் தந்தது.

இருட்டில் இடம் அறியாமல் நிலையத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் முன்னதாகவே ஒஜெர்கி நிலையத்தில் அவர் இறங்கி விட்டதால், அங்கிருந்து உதேல்னயா வரை கால் நடையாக வர வேண்டியதாயிற்று என்று நாங்கள் பின்னர் அறிந்தோம்.

எச்சரிக்கையாக கால்ஸ்கியின் வீட்டுக்குள் விளக்கேற்றி நாங்கள் சூடான தேநீர் பருகினோம். கிசுகிசுவென்று பேசிக் கொண்டோம். கண்டக்டரைப் பற்றி சந்தோஷத்துடன் வேடிக்கையாகப் பேசினார் லெனின். முதலாளித்துவப் பத்திரிகைகளின் அவதூறுகளைத் தொழிலாளியின் சிந்தனையிலிருந்து இன்னும் அகற்ற முடியாததற்காக எங்களைக் கடிந்து கொண்டார். அவருக்குக் கண்டக்டர் மிகவும் பிடித்துப் போனார். அவர் சொன்னார்:

''அவரது முகம் நேர்மையானது, கபடமற்றது. நினைக்கிறவற்றை அப்படியே அவர் சொன்னார்.''

கொஞ்சம் கொறித்து விட்டு (கால்ஸ்கி மிகவும் ஏழ்மையில் வாழ்ந்தார்) தரையில் பத்திரிகைகளின் மீது படுத்துக் கொண்டோம்.

மிகவும் நேரமாகி விட்டிருந்தது. அப்போது இரவு நான்கு மணி.

வீடு முழுதும் உறங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று சங்கேத ஒலியில் கதவு தட்டப்பட்டது. எங்களைத் தவிர ஷத்மானுக்கு மட்டுமே இது தெரியும்.

என் மனைவி கதவைத் திறந்து விட்டாள். நாங்கள் ரயிலில் ஏறவில்லை என்று நினைத்திருந்த ஷத்மான் அறைக்குள் வந்தவுடன் ஆச்சரியப்பட்டார். நாங்கள் தரையில் இருந்தபடி அவரைக் கண்டு கடகடவென்று சிரித்தோம்.

அப்போது லெனின் எங்களிடம் சொன்னார்:

''நமது இரகசிய நடவடிக்கை ஒன்றும் மிகச் சிறப்பானதல்ல. நீங்கள் அசட்டுத்தனமான மறைமுக ஊழியர்கள். உங்களிடம் வரைபடமோ ரயில்வே கால அட்டவணையோ இல்லை.''

''நாம் வருகிற மார்க்கம் எங்களுக்கு எதிர்பாராததாய் இருந்தது'' என்று நாங்கள் லெனினுக்கு முன்னால் நியாயப்படுத்திக் கொள்ள முயன்றோம்.

காலையில் ஷத்மான் பெத்ரோகிராதுக்குக் கிளம்பினார். அங்கிருந்து ரஸ்லீவ் சென்று நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா வையும் எமெல்யானவின் மனைவியையும் திபூனியில் எமெல் யானவ் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று எச்சரிப்பது அவருடைய நோக்கம். கையெழுத்துப் பிரதிகள் எல்லா வற்றையும் மறைத்துவிடுவது அவசியமாய் இருந்தது. ஏனெனில் எமெல்யானவ் கைதானதைத் தொடர்ந்து அங்கு சோதனையிடப்படலாம்.

ரயில் எஞ்சினில் பின்லாந்துக்கு லெனின் பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்வதற்காக நான் பெத்ரோ கிராதுக்குக் கிளம்பினேன்.

அடுத்த நாள் இரவு கால்ஸ்கியின் வீட்டிலிருந்து லெனின் என்னுடன் வெளியே வந்தார். அவர் டோப்பா அணிந்திருந்தார். ஒப்பனை செய்து கொள்ளவில்லை. வைக் கோல் போரிலிருந்து அவர் கிளம்பும் போது எப்படி இருந் தாரோ அப்படியே அப்போதும் உடையணிந்திருந்தார்.

உதேல்னயா ரயில் நிலையத்தின் நிர்ணயம் செய்யப் பட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில், கடைசி ரயில் வருகிற சமயம் நாங்கள் வந்து சேர்ந்தோம். அங்கு ஒரு நிமிடமே ரயில் நிற்கும். நிலையத்தின் பக்கத்தில் அல்லாமல் பாதையின் எதிர்ப்புறத்தில் இருட்டில் என்னுடன் தயா ராய் நின்றார் இலீச்.

அதனால்தான் ஓட்டி வந்த ரயில் நிலையத்தை நெருங் கிய போது யாலவா எங்களைக் கவனிக்கவில்லை.

ரயில் நின்றதுதான் தாமதம். விளதீமிர் இலீச் எஞ்சினில் ஏறிக் கொண்டார். கரிதள்ளுபவர் உடனே வெளியே வந்து என்னுடன் சேர்ந்து எஞ்சினுக்கு அருகில் இருந்த முதல் பெட்டியில் உட்கார்ந்து கொண்டார்.

யாலவா சொன்னார்:

"எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த எளிய தொப்பி அணிந்த, எனக்கு அறிமுகமில்லாத ஒருவர் நான் இருந்த ரயில் எஞ்சினில் ஏறினார். அவர்தாம் லெனின் என்று ஒப்புக்கொள்வது கஷ்டமாய் இருந்தது. ஆனால் நான் ஒப்புக்கொண்டேன்."

ரயில் கடகடத்தது. சன்னல்கள் மூடப்பட்டிருந்தன. நாங்கள் உட்கார்ந்து கொண்டு, பீதியுடன் சத்தத்தைக் கூர்ந்து கேட்டோம். ஒவ்வொரு நிறுத்தத்திலும் வெளியே எட்டிப் பார்த்தோம்.

போலீசார் லெனினைக் கைது செய்ய முயன்றால் நாங்கள் சுடுவது என்று முடிவு செய்திருந்தோம். யாலவா எஞ்சினில் இருந்தார். நாங்கள் எஞ்சினுக்கு அடுத்த ரயில் பெட்டியில் இருந்தோம். லெனினைக் கைது செய்வதைத் தடுப்பதற்கு நாங்கள் தயாராய் இருந்தோம்.

நானும் ஷத்மானும் ஆயுதந் தரித்திருந்தோம். லெனினைக் கைதுசெய்ய விடாமல், அவரது பாதுகாப்புக்காக அனைத்தையும் செய்திருப்போம்.

எல்லையில் ரயிலோட்டும் குழுவினரின் அத்தாட்சிப் பத்திரங்களையும் போலீசார் சோதனையிடக் கூடும். இதற்காக செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிலாளி இவனோவ் கான்ஸ்தன்தீன் பெத்ரோவிச்சின் அத்தாட்சிப் பத்திரம் வைத்திருந்தார் லெனின்.

யாலவா எஞ்சினை அமைதியாக ஓட்டினார். சட்ட விரோதத் தோழர்களைக் கடத்திக் கொண்டு போவதில் பெருத்த அனுபவம் பெற்றிருந்தார் அவர். பின்லாந்து எல்லையில் அவர் ஒருபோதும் சிக்கிக் கொண்டதில்லை. 1906ம் ஆண்டில் காயம் பட்டிருந்த தோழர் ஒருவரைக் கூட எல்லையில் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்.

ரயில் கடகடத்ததால் கரிதள்ளுபவனுடன் எஞ்சின் டிரைவர் பேச்சுக் கொடுப்பது சாத்தியமில்லாமலிருந்தது. இலீச் அடுப்புக்குள் விறகுக் கட்டைகளை வீசிக் கொண்டிருந்தார்.

பெலோவோஸ்திரவ் வரை, எல்லை வரை நல்லபடியாக வந்து சேர்ந்தோம். அத்தாட்சிப் பத்திரங்கள் சோதிக்கப்படுவது தொடங்கிற்று. ரயில் பெட்டிகள் மூடப்பட்டிருந்தன. வெளியே குதிப்பதற்கு எங்களால் முடிந்திராது. ரயில் எஞ்சினில் அத்தாட்சிப் பத்திரம் சோதிக்கப்பட்டால் பெரிய களேபரம் நடந்திருக்கும்—

விளதீமிர் இலீச் கைதாகி இருக்கலாம். நாங்கள் ஓர் உதவியும் நல்க முடிந்திராது.

ஆனால் சாதுரியம் நிறைந்த யாலவா மிக எளிதாக எல்லாவற்றையும் ஏற்பாடு செய்திருந்தார். தமக்கு மிக அருகில் போலீசார் வந்து விட்டதைக் கண்ட அவர் ரயிலிலிருந்து எஞ்சினை விடுவித்துக் கொண்டு தண்ணீர் பிடிப்பதற்கென்று முழு வேகத்தில் எஞ்சினை ஓட்டிச் சென்றார். மூன்றாவது மணி அடிக்கும் வரை அவர் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தார். நீர்க் குழாய்க்கு அருகில் நின்று மூச்சிரைத்துக் கொண்டிருந்தது எஞ்சின். மூன்றாவது மணி அடித்த பின்பு உடனடியாகப் பெட்டிகளை நெருங்கி, இணைப்பை மாட்டிக் கொண்டு உரத்த சீழ்க்கையொலி தந்து வண்டியைக் கிளப்பி விட்டார். சில நிமிட நேரத்தில் எல்லையின் அந்தப் புறம், பின்லாந்திற்குள் நாங்கள் இருந்தோம். சாதுரியமிக்க யாலவா இப்படித்தான் பின்லாந்துப் போலீசின் கண்ணில் மண்ணைத் தூவிவந்தார்.

அசம்பாவிதம் ஏதுமின்றி தெரியோகிற்கு வந்து சேர்ந்தோம். எஞ்சினிலிருந்து இலீச் இறங்கினார். நாங்கள் பெட்டிகளிலிருந்து வெளி வந்தோம். அப்போது பதினொரு மணி. இரவு நேரம். பருவநிலை குளுகுளுவென்று நன்றாய் இருந்தது.

இலீச் லாகவமாக எஞ்சினிலிருந்து குதித்து, ''போய் வருகிறேன்'' என்று யாலவாவிடம் சொல்லிக் கொண்டார். யாலவா ராய்வோல் பாதையில் வீபர்குக்குத் தொடர்ந்து போனார். எனது மாமனாரான பர்வியாய்னெனின் குதிரையைத் தேடுவதற்கு லெனின் எங்களுடன் வந்தார்.

யல்காலா கிராமத்தில் இருந்த என் மாமனார் வீட்டுக்குத்தான் இலீச் சென்றார்.

பர்வியாய்னெனின் குதிரைக்கு என்ன நேர்ந்தது என்பது இப்போது நினைவுக்கு வருகிறது: எஞ்சினின் காது கிழிக்கும் ஊதலால் பயந்து அது பிய்த்துக் கொண்டு ஓடி விட்டது. குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்த சிறுவனால் அதனைச் சமாளிக்க முடியவில்லை. மோப்பம் பிடிக்கும்

ஒற்றர்கள் நிறைந்த தெரியோக் நிலையத்தில் தங்காமலிருப்பதற்காக நாங்கள் கால்நடையாகப் போக நேர்ந்தது.

லெனினும் நானும் சேர்ந்து நடந்தோம். நாங்கள் அமைதியாகப் பேசிக் கொண்டு மெதுவாக நடந்தோம். எப்போதும் போல இலீச் நல்ல மனநிலை கொண்டிருந்தார். வழக்கமான எங்கள் அரசியல் பேச்சு தொடர்ந்தது. உள்ளூர் மக்களிடையே என்ன வேலை நடந்து கொண்டிருக்கிறது என்று என்னிடம் மெதுவாக விசாரித்தார் இலீச்.

மூன்று கிலோமீட்டர் நடந்த பின்பு பர்வியாய்னெனின் குதிரை எங்களை எட்டிப் பிடித்தது. நாங்கள் விரைவாக இடம் போய்ச் சேர்ந்தோம்.

* * *

1917ன் செப்டம்பர் மாதம் பெத்ரோகிராதில் இறுக்கம் நிறைந்த மன நிலை நிலவியது. தொழிலாளர்கள் துணிவுடன் போராட்டத்தில் இறங்கத் தொடங்கினார்கள். பொதுமக்களின் செயல் வேகம் அதிகரித்தது. முக்கியமான சம்பவங்கள் நெருங்கி வருவது உணரப்பட்டது.

தோழர் லத்தூக் (பின்லாந்துக்காரர்) வீட்டில் வீபர்க் நகரில் வசித்து வந்த விளதீமிர் இலீச்சின் குறிப்பு ஒன்றை நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா மூலம் நான் பெற்றேன். தம்மிடம் வந்து, பெத்ரோகிராதுக்குத் தாம் பாதுகாப்பாகப் பயணம் செய்ய ஏற்பாடு செய்யும்படி அவர் அதில் எழுதியிருந்தார்.

நான் எல்லாவற்றையும் செய்து முடித்தேன். விளதீமிர் இலீச்சும் நானும் நல்லபடியாக பெத்ரோகிராதுக்கு வந்து சேர்ந்தோம்.

லெனின் குடி புகுந்த இருப்பிடம் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவால் அமர்த்தப்பட்டது. வீபர்க் நெடுஞ்சாலையில், லான்ஸ்கயா என்ற பெயருள்ள டிராம் நிலையத்தில் பணி புரிபவரின் வீட்டில் இருந்தது அது. வீட்டுக்காரர்களை எனக்குத் தெரியாது. மறைமுக நடவடிக்கை நோக்கங்களின் காரணமாக நான் அவர்கள் யார் என்று விசா

ரிக்கவில்லை. விளதீமிர் இலீச்சுக்கு அவர்களைத் தெரியும் என்பதே எனக்கு முற்றிலும் போதுமானதாக இருந்தது. முழுதும் தலை நரைத்த ஒரு பெண்மணியைப் பலமுறை கண்டேன். சங்கேத முறையில் நான் கதவு தட்டியதும் அவர் கதவைத் திறப்பார், கான்ஸ்தன்தீன் பெத்ரோவிச் (விளதீமிர் இலீச்) வீட்டிலிருக்கிறாரா என்று நான் கேட்டதும் அவர் என்னை உள்ளே விடுவார்.

நான் பின்னர் அளவு கடந்து வேலையில் மூழ்கி இருந்ததால் பின்லாந்திலிருந்து பெதரோகிராதுக்கு வந்தவுடன் விளதீமிர் இலீச்சுக்கு இருப்பிட வசதி செய்து கொடுத்த மனிதர்கள் யார் எனறு கேட்பதற்கு முற்றிலும் மறந்து விட்டேன்.

பெத்ரோகிராதுக்கு வந்தவுடன் விளதீமிர் இலீச் ஜுர வேகத்துல் வேலை செய்யத் தொடங்கினார். பிராவதாவுக்குக் கட்டுரைகள் எழுதினார். சில தோழர்களை வீட்டில் சந்தித்தார், தமது முன்முயற்சியால் கூட்டப்பட்ட கூட்டங்கள் பலவற்றில் கலந்து கொண்டார். மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுடன் கூட்டங்கள் நடந்தன. அக்டோபர் 16ல், லெஸ்னோவில், வட்டார டூமா கட்டிடத்தில் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களைத் தவிர இன்னும் பல பொறுப்புள்ள தோழர்கள் பங்கெடுத்துக் கொண்டு நடந்த கூட்டம் எனது நினைவில் இருக்கிறது. இந்தக் கூட்டங்களில் ஆட்சியை மேற்கொள்வது பற்றிய பிரச்சினையை உறுதியாக முன்வைத்தார் விளதீமிர் இலீச்.

போக்குவரத்துச் சாதனங்கள் மோசமாக இருந்ததால் விளதீமிர் இலீச் பணித்த வேலைகளை நிறைவேற்றுவது சில சமயங்களில் மிகவும் கடினமாக இருந்தது. எனவே நான் வெகுவாகக் கஷ்டப்பட்டேன். இந்த வேலைகளையோ நிறைவேற்றியே ஆக வேண்டியிருந்தது. இல்லையேல், மரியாதையாக, ஆனல் கடுமையாகக் கடிந்து கொள்வார் விளதீமிர் இலீச்.

அவர் தந்த வேலைகளின்படி தொழிற்சாலைகளுக்கும் கூட்டங்களுக்கும் நான் சென்றேன். அங்கு தொழிலாளர்களின் மனநிலையை அறிந்தேன். கூட்டங்களில் நிறை

வேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல்களைக் கொண்டு வந்தேன். இதே நோக்கத்துடன் படைவீடுகளுக்கும் போனேன். நான் பார்த்த, கேட்ட எல்லா விஷயங்களையும் பற்றி மாலையில் விளதீமிர் இலீச் கேள்விகள் கேட்பார்.

இறுதியாக அக்டோபர் 24ல், நேவா ஆற்றைக் கடப்பதற்கான பாலங்கள் அனைத்தையும் இணைப்பைப் பிரித்துத் தூக்கி விடுவதென்று கேரென்ஸ்கி அரசாங்கம் எண்ணம் கொண்டிருப்பதாக நான் தகவல் பெற்றேன். ஊருக்குள் காவல் ரோந்து அதிகமாயிற்று. படைவீரர் பிரிவுகளால் பாலங்கள் காவல் புரியப்பட்டன.

விளதீமிர் இலீச்சின் இருப்பிடத்துக்குப் போவதென்று நான் தீர்மானித்தேன்.

அவரிடம் வந்து நடந்து வரும் சம்பவங்கள் குறித்துச் சொன்னேன். பாலங்களைக் கேரென்ஸ்கி அரசாங்கம் பிரித்து உயர்த்தி விட முடிந்தால் ஒவ்வொரு வட்டாரமும் தனிமைப் படுத்தப்பட்டு ஒடுக்கப்படும் என்று நான் சொன்னேன். வீபர்க் பகுதியில் மட்டும் செங்காவல் படையினர் கைகளில் ஆட்சி உண்மையில் இருந்தது. இப்படை சரியானபடி ஆயுதந் தரித்திருக்கவில்லையாயினும் ஆயுத பாணியாக ஒன்றுசேர்ந்து இருந்தது. தலைமை அலுவலகம் கூட இருந்தது. விளதீமிர் இலீச் நான் சொல்வதைக் கேட்டு விட்டுப் பின்வருமாறு அறிவித்தார்: ''ஆம், இன்றைக்குத் தொடங்கி விட வேண்டும்.'' நாங்கள் தேநீரும் சிற்றுண்டியும் அருந்தினோம். விளதீமிர் இலீச் அறையின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு நடந்தபடி ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தார்.

ஸ்மோல்னி மாளிகைக்கு முடிந்த அளவு விரைவாகச் செல்ல வேண்டியது அவசியம் என்று அவர் திடீரென்று சொன்னார். டிராம்கள் அனேகமாக நின்று போயிருக்கும் என்பதால் அங்கு செல்லச் சில மணி நேரமாகலாமே என்று நான் நினைத்தேன். நடந்துதான் போக வேண்டும்.

யாராவது அவரை அடையாளம் கண்டு விட்டால் அவர் எவ்வளவு பெரிய ஆபத்துக்கு உள்ளாகக் கூடும் என்று எடுத்துச் சொல்லி இத்திட்டத்தைக் கைவிடுமாறு

அவரை வற்புறுத்தத் தொடங்கினேன். ஸ்மோல்னி மாளிகைக்கு விளதீமிர் இலீச் போகாமல் தடுப்பதன் மூலம் புரட்சி சம்பந்தமாகப் பெருங் குற்றம் புரிகிறேன் என்று எனக்கு அப்போது புரியவில்லை.

எனது காரணங்களை விளதீமிர் இலீச் ஒத்துக் கொள்ளவில்லை. ''ஸ்மோல்னி மாளிகைக்குப் போவோம்'' என்று அவர் உறுதியாகச் சொன்னார்.

பாதுகாப்பை முன்னிட்டு எதற்கும் வேஷம் போட்டுக் கொள்வது என்று முடிவு செய்தோம். முடிந்த அளவுக்கு அவரது ஆடையை மாற்றினோம். அழுக்குத் துணியால் கன்னத்தில் அவருக்குக் கட்டுப் போட்டோம். நெற்றியை மறைத்த தொப்பி ஒன்றை அவருக்கு அணிவித்தோம். ஸ்மோல்னி மாளிகைக்குள் போவதற்கு எனது சட்டைப் பையில் இரண்டு அனுமதிச் சீட்டுக்கள் வைத்திருந்தேன். அனுமதிச் சீட்டுக்கள் தாறுமாறாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. ரப்பரால் பழைய பெயர்கள் அழிக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக பெத்ரோகிராத் சோவியத் உறுப்பினர்களின் இல்லாத பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. மை கொட்டிப் பரவி இருந்ததால் இது போலிச் சீட்டு என்று எடுப்பாகத் தெரிந்தது. இதை விட நல்லவை இல்லாததால் இருக்கிற போலிச் சீட்டுக்களைக் கொண்டு உள்ளே நுழைந்து விடுவதென்று முடிவு செய்தோம்.

ஸ்பாலெர்னயா வீதியில் கணிசமான தொலைவு சென்று விட்டிருப்போம். அப்போது குதிரை மேல் இரண்டு ஜங்கெர்கள் வருவது தெரிந்தது. எங்களுக்கு அருகில் வந்து ''நில்! அனுமதிச் சீட்டைக் காட்டு!'' என்று ஆணையிட்டனர். ''நீங்கள் போங்கள், நான் இவர்களைச் சமாளிக்கிறேன்'' என்று விளதீமிர் இலீச்சிடம் கிசுகிசுத்தேன். எனது பையில் இரண்டு ரிவால்வர்கள் இருந்தன. முரட்டுத்தனமாக அவர்களுடன் நான் வாக்குவாதம் நடத்தத் தொடங்கினேன். அனுமதிச் சீட்டுக்கள் அமுலுக்கு வந்திருக்கின்றன என்று யாருக்கும் தெரியாது என்றும் எனவே அவற்றைக் காலாகாலத்தில் பெற்றுக் கொள்ள எங்களுக்கு முடியவில்லை என்றும் சொன்னேன். இந்த நேரத்தில் விளதீமிர்

இலீச் மெதுவாக எங்களிடமிருந்து தள்ளிப் போனார். ஜங்கெர்கள் சவுக்குகளைக் காட்டி என்னை மிரட்டியபடி, அவர்களைப் பின்தொடர்ந்து வரும்படி என்னிடம் கோரினார் கள். நான் தீர்மானமாக மறுத்தேன். நாடோடிகள் என்று அவர்கள் எங்களைக் கருதியதால் எங்களைப் பிடித்து இழுக்க வேண்டாம் என்று இறுதியில் முடிவு செய்ததாகத் தெரிந்தது. பார்ப்பதற்கு நாங்கள் சரியான நாடோடிகள் போலத்தான் இருந்தோம். ஜங்கெர்கள் போய் விட்டார் கள்.

கணிசமான அளவு நடந்து சென்று விட்டிருந்த விளதீமிர் இலீச்சை நான் எட்டிப் பிடித்தேன். இருவருமாகத் தொடர்ந்து நடந்தோம்.

ஸ்மோல்னி மாளிகையை நெருங்கினோம். அதன் வாயில் களில் கூட்டம் கூட்டமாக மக்கள் நின்றிருந்தனர். பெத் ரோகிராத் சோவியத் உறுப்பினர்கட்கு முன்னர் கொடுக் கப்பட்டிருந்த வெள்ளை நிற அனுமதிச் சீட்டுக்களை இப் போது சிவப்பு நிறத்தில் மாற்றி விட்டார்கள் என்று அங்கு தெரிந்தது. இந்தத் தடை இன்னும் மோசமானதாக இருந் தது. மேலும் அங்கு காத்திருந்த மக்களில் எங்கள் தோழர் களில் யாரையும் காணவில்லை. ஸ்மோல்னி மாளிகைக்குள் போக முடியாததற்காக கூட்டம் ஆத்திரம் கொண்டிருந் தது. நான்தான் எல்லோரையும் விட அதிகமாக ஆத்திரம் கொண்டு உரக்கக் கூவிக் கொண்டிருந்தேன். எரிச்சல் கொண்டு போலி அனுமதிச் சீட்டுக்களைக் காற்றில் ஆட் டியபடிக் கத்தினேன். பெத்ரோகிராத் சோவியத்தின் முழு உரிமை பெற்ற உறுப்பினனை என்னை எப்படி உள்ளே அனுமதிக்காமல் இருக்கிறார்கள் என்று கூச்சலிட்டேன். கண்காணிப்பை மதிக்க வேண்டாம் என்றும் ஸ்மோல்னி மாளிகைக்குள் எல்லாவற்றையும் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் நான் முன்னால் நின்ற தோழர்களைப் பார்த்துக் கூக்குரலிட்டேன். ஜேப்படித் திருடர்கள் செய்வது போல இடித்து நெருக்கினேன். இதன் விளைவாகக் கண்காணிப் பாளர்கள் தூரத் தள்ளப்பட்டனர். நாங்கள் மாடிக்குச் சென்றோம். அங்கிருந்த ஓர் அறைக்குப் போனோம். கட்சி

யின் தலைமைக் குழுவில் இருந்த தோழர்கள் பலர் அங்கு விரைவில் வந்து சேர்ந்தனர். தோன்றியுள்ள நிலைமைபற்றி அனாவசிய வார்த்தைகள் இன்றி விவாதிக்கத் தொடங்கினோம்.

இந்த நேரம் நகரத்தில் சண்டை நடந்து கொண்டிருந்தது. துப்பாக்கிகள்-இயந்திரத் துப்பாக்கிகள் எழுப்பும் வெடிச் சத்தம் நன்றாகக் கேட்டது....

1917 அக்டோபருக்கு முன்னால் லெனின்

பபானவா

ஜுலை 4ல் நடந்த சம்பவங்களுக்குப் பின்னே கட்சியின் வீபர்க் கமிட்டி, கட்சி வேலைகளுக்காக எனது இருப்பிடத்தைப் பயன்படுத்துவது என்று தீர்மானித்தது. எனது இருப்பிடம் வீபர்க் பகுதியில் வீட்டின் கடைசி மாடியில்இருந்தது. அதன் சன்னல்கள் பக்கத்து வீட்டுத் தோட்டத்தைப் பார்த்திருந்தன. தனிமைப் பட்டிருந்தது என்ற அளவில் இது மிகவும் வசதியாக இருந்தது.

எனது இருப்பிடத்தை நான் கட்சிக்கு அளித்து விட வேண்டும் என்று சுமார் ஆகஸ்டு மாதத்தில் இறுதியாக முடிவெடுக்கப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் நான் குடும்பத்தை வெளியேற்றிவிட வேண்டும். இந்த முடிவு பற்றி எனது சகோதரிக்குச் சொன்னேன். அவள் எனது குழந்தைகளை உஃபா குபேர்னியாவிலிருந்த என் பெற்றோர்களிடம் கூட்டிச் சென்றாள்.

விளதீமிர் இலீச் பின்லாந்திலிருந்து நேராக என்னிடம் வந்தார். எனக்கு நினைவிருக்கிறது, அவர் வந்தது வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு, ஐந்து மணி வாக்கில். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே இருந்த லான்ஸ்கயா நிலையத்திலிருந்து அவர் வந்தார். சிறிது நேரங் கழித்து நதேஸ்தா கன்ஸ்தன்தினவ்னா வந்து சேர்ந்தார். இலீச் தமக்காகத் தயார் செய்யப்பட்டிருந்த அறைக்குள் போனார், தம் அறையிலேயே மாலைச் சிற்றுண்டி அருந்தினார், காலையில்தான், தேநீர் மேசை அருகே எங்கள் அறிமுகம் நிகழ்ந்தது. நதேஸ்தா கன்ஸ்தன்தினவ்னாவும் இருந்தார். விளதீமிர் இலீச் டோப்பா அணிந்து கொள்ள

மறந்து விட்டு வெளியே வந்தது எனக்கு நினைவிருக்கிறது. முதல் நாளிலிருந்தே உண்மையான இலீச்சாக அவர் தென்படத் தொடங்கினார். தம்மைப் புதுப் பெயர் (அப்போது அவரது அத்தாட்சிப் பத்திரத்தில் செஸ்த்ரோரெத்ஸ்க் தொழிலாளரின் பெயர் இருந்தது) சொல்லி அழைக்கும்படி எவ்வளவுதான் அவர் எனக்குச் சொன்ன போதிலும் நான் எப்போதும் அதை மறந்து விடுவேன், இலீச்சோ தமது டோப்பாவை அணிந்து கொள்ள மறந்து விடுவார். டோப்பாவைப் பற்றி உறுதியாகவும் வற்புறுத்தலுடனும் நினைவூட்ட வேண்டியது எனது கடமையாகும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. டோப்பா இலீச்சுக்கு மிகவும் தொந்தரவாக இருந்தது. எப்போது பார்த்தாலும் அவர் அதனைச் சரி செய்து கொண்டிருப்பார், அல்லது தாம் அதை நன்றாக அணிந்திருக்கிறாரா என்று கேட்டுக் கொண்டிருப்பார்.

டோப்பாவுக்கும் இலீச்சுக்கும் கொஞ்சங் கூட ஒத்து வரவில்லை. அக்டோபர் 24ல் (நவம்பர் 6ல்) ஸ்மோல்னி மாளிகைக்கு வந்த இலீச் மேல்கோட்டையும் தொப்பியையும் கழற்றி மாட்டுகையில் தொப்பியுடன் சேர்த்து டோப்பாவையும் கழற்றி மேல்கோட்டின் பைகளுக்குள் திணித்து விட்டார். அப்போது பல்வேறு பகுதிகளிலிருந்தும் ''இலீச்! இலீச்!'' என்ற குரல்கள் எழுந்தன. அப்போதுதான் அவருக்கு விஷயம் புரிந்தது. தலையை அவர் தொட்டுப் பார்த்தார். ஆனால் காலங் கடந்து விட்டது. இத்துடன் இலீச் டோப்பாவுடன் செய்த மறைமுக வேலை முடிவுற்றது.

ஆரம்பத்தில் உலாவுவதற்குக் கூட வீட்டிலிருந்து வெளியே வர மறுத்தார் இலீச். மாலை நேரங்களில் பால்கனிக்கு வரும்படி நான் சொன்ன ஆலோசனையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏதாவது அசம்பாவிதம் நடந்து வீட்டிலிருந்து கதவு வழியாகவன்றி சன்னல் வழியாக வெளியேற நேர்ந்தால் தெரிந்து நடந்து கொள்வதற்காக வீடு முழுதையும் காட்டும்படி இருவரும் மட்டும் இருக்கும் போது என்னிடம் கோரினார் இலீச்.

இதன் மூலம் இலீச் என்ன சொல்ல விரும்பினுர் என்று முதலில் நான் புரிந்து கொள்ளக்கூட இல்லை. வீட்டைக் காட்டினேன். மூன்ருவது அறைக்கு வந்த போது நான் பால்கனியைச் சுட்டிக் காட்டியவுடன் இலீச் மகிழ்ச்சியுடன் புன்னகை செய்து சொன்ஞர்:

''மிக நல்லது. வடி குழாய் எப்படிப் போகிறது, எனது அறைக்குப் பக்கத்தில்தான் இருக்கிறதா என்று இப்போது சரியாக நிர்ணயிக்க முடியும். ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்தால் அதன் மூலம் கீழே இறங்கி விடலாமே.''

அவர் பால்கனிக்கு வந்து, சன்னல்களை எண்ணிப் பார்த்துச் சொன்ஞர்:

''அறை சரியாகவும், கச்சிதமாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.''

அந்தக் காலத்தில் பெத்ரோகிராதில் வெளியாகிக் கொண்டிருந்த பத்திரிகைகள் அனைத்தையும் வழக்கமாக விளதீமிர் இலீச் பார்ப்பார். பத்து மணிக்கு நான் வேலைக்குப் போவதற்கு முன்ஞல், எல்லாப் பத்திரிகைகளையும் வாங்கி வருவது என் பொறுப்பில் இருந்தது. இந்த வேலையில் காலை எட்டு மணி முதலே நான் ஈடுபட வேண்டி இருந்தது. எல்லாப் பத்திரிகைகளையும் வெஸ்ஞெவிலேயே வாங்கி விட அடிக்கடி முடியாது. நகருக்குச் செல்ல வேண்டும். அங்கேயும் தேட வேண்டி வரும். சில நேரங்களில், பத்திரிகைகள் வாங்கி வரும் வேலை காலை உணவுக்குப் பின் சுமார் காலை 10—11 மணிக்குதான் செய்ய முடியும்.

பத்திரிகைகளின் மூலமாக சமுதாய வாழ்க்கையை மிக வேகமாகப் புரிந்து கொண்டார் விளதீமிர் இலீச். சம்பவங்களின் போக்கைக் கருராகக் கவனித்து வந்தார். எனவே ஏதோ ஒரு குறிப்பிட்ட பத்திரிகை ஏதாவது காரணத்தால் கிடைக்கவில்லை என்ருல் அவர் மிகவும் அதிருப்தி கொள்வார். பத்திரிகை சம்பந்தமான எனது கடமைகள் பற்றி எனக்கு வழக்கமாக மாலையிலிருந்தே எடுத்துச் சொல்வார், வாங்கி வராத பத்திரிகை எண்களின் பட்டியலை என்னிடம் கொடுப்பார்.

விவசாயப் பிரதிநிதிகளின் அனைத்து ருஷ்ய சோவியத்தினது இஸ்வேஸ்தியாவின் வெளிவந்த எல்லா இதழ்களையும் வாங்கி வரும்படி ஒரு முறை அவர் என்னிடம் சொன்னது நினைவிருக்கிறது. நான் அவ்வாறே செய்தேன். எத்தனை இதழ்களை நான் வாங்கி வந்து தந்தேன் என்று நினைவில்லை, ஆனால் மிக நிறைய, சுருங்கச் சொன்னால், ஆராய்ச்சி செய்வதற்கு ஏராளமான இதழ்கள். இரண்டு நாட்கள் விளதீமிர் இலீச் மிக நீண்ட நேரம், இரவு நேரங்களில் கூட வேலை செய்தார். பின்னர் காலையில் அவர் சொன்னார்:

''சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் அனைவரையும் நான் உள்ளும் புறமும் தெரிந்து கொண்டேன் என்று தோன்றுகிறது. அவர்களுடைய விவசாயிகளின் கோரிக்கையைப் படிக்க வேண்டியதுதான் மிச்சம்.''

ஓர் இரண்டு மணி நேரம் கழித்து என்னை அழைத்தார். கையால் பத்திரிகையை (அவர் கைகளில் **விவசாயிகள் இஸ்வேஸ்தியா** இதழ் இருந்ததைக் கண்டேன்) தட்டியபடி மகிழ்ச்சியுடன் சொன்னார்:

''242 வட்டாரப் பிரதிநிதிகள் கோரிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். நிலம் பற்றிய சட்டத்திற்கு அடிப்படையாக இதனை வைப்போம். இடதுசாரி சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் வெட்டிக் கொள்வதற்கு எப்படிச் சிந்திக்கிறார்கள் என்று பார்ப்போம்.''

பலப்பல இடங்களில் நீல நிறப் பென்சிலால் கோடுகள் இடப்பட்டிருந்த பத்திரிகை இதழை எனக்குக் காண்பித்தார்.

242 விவசாயப் பிரதிநிதிகளின் இந்த எடுத்துக்காட்டான கோரிக்கை பற்றி இன்னும் பல நாட்கள், நெடு நேரம் நிறையச் சொல்லிக் கொண்டிருந்தார் இலீச்.

அக்டோபர் 24. பிற்பகல் நான்கு மணியளவில், எனது வேலையிடங்களில் ஒன்றான, வசீலியெவ்ஸ்கி தீவிலுள்ள தெவ்ரியேன் பதிப்பகத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது பாலங்கள் பிரித்து உயர்த்தப்பட்டு, இராணுவத்தின் ஆயுதத் தாக்குதல் நகரத்தில் நடந்து

வருகிறது என்று அறிந்தேன். நான் எனது வேலையை உடனடியாக விட்டுவிட்டு, நடந்து வரும் சம்பவங்களைப் பற்றித் தகவல் பெறுவதற்காக வீபர்க் கமிட்டிக்கு முதலில் போனேன்.

கமிட்டியில் கொஞ்சமும் தெளிவற்ற தகவலே எனக்குக் கிடைத்தது. அதனுடன் லெனினிடம் வந்தேன். பாலங்கள் இணைக்கப்பட்டு விட்டனவா என்பதை அறிந்து வருவதற்கு என்னை உடனடியாக மீண்டும் கமிட்டிக்கு அனுப்பினார் விளதீமிர் இலீச். மேலும் ஒத்திப் போடக் கூடாது, ஆயுதத் தாக்குதல் தொடுக்க வேண்டியது அவசியம், அவர் இன்று ஸ்மோல்னி மாளிகையில் இருக்க வேண்டும் என்று தாம் கருதுவதாகச் சொல்லும் துண்டுச் சீட்டை நதேஸ்தா கன்ஸ்தனதீனவ்னா மூலம் கொடுக்கும் படிக் கேட்டுக் கொண்டார்.

மாலை சுமார் ஒன்பது மணிக்கு நான் வந்து பாலங்கள் இணைக்கப்பட்டு விட்டன என்று அறிவித்தேன்.

மீண்டும் ஒரு துண்டுச் சீட்டுடன் நதேஸ்தா கன்ஸ்தன் தீனவ்னாவிடம் என்னை அனுப்பினார். நான் பதினொரு மணிக்குள் திரும்பி வரவில்லை என்றால், தாம் அவசியம் என்று கருதுகிறபடி நடந்து கொள்ளப் போவதாகச் சொன்னார்.

வீபர்க் கமிட்டியில் மீண்டும் மறுப்புத் தெரிவிக்கும் பதிலே கிடைத்தது. ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு பதினொரு மணிக்குள் சேர்ந்து விடுவதற்காக அவசரமாக வந்தேன். பத்து நிமிடம் முன்னதாகவே வந்து விட்டேன். ஆனால் விளதீமிர் இலீச்சை வீட்டில் காணவில்லை. விளக்கு வெளிச்சம் இல்லாத வீட்டுக்குள் நுழைந்து முதலில் ஒரு கணம் தடுமாறினேன். விளக்கை ஏற்றி வீட்டைச் சுற்றிப் பார்த்தேன். எல்லா அறைகளிலும் கதவுகள் விரியத் திறந்து கிடந்தன. சாப்பாட்டு மேசையின் மீது இரவு உணவு அருந்தி முடிக்காமல் இருந்தது. மூன்றாவது காலி உணவுப் பாத்திரத்தின் மீது குறுகலான நீண்ட துண்டுச் சீட்டு வைக்கப்பட்டிருந்தது. "நான் எங்கு போவதை நீங்கள் விரும்பவில்லையோ அங்கு போய் விட்டேன். மீண்டும் சந்திக்கும் வரை... இலீச்."

விளதீமிர் இலீச்சின் இரகசியக் கையெழுத்து இன்றி அவரது உண்மையான, சுருக்கமான ''இலீச்'' என்ற கையெழுத்தைக் கண்ட நான் ஏனோ முழு அமைதி பெற்றேன். விளதீமிர் இலீச்சுக்கு எதுவும் நேருமோ என்ற பயம் எதுவும் என்னிடம் தோன்றவில்லை. எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்: என்ன செய்கிறோம் என்று இலீச்சுக்குத் தெரியும்: எனினும் இலீச்சைப் பின்தொடர்ந்து ஸ்மோல்னி மாளிகைக்குச் செல்வது என்று முடிவு செய்தேன். அவர் தமது மேல் கோட்டையும் தொப்பியையும் டோப்பாவோடு சேர்த்து 100ம் நம்பர் அறையில் கழற்றிக் கொண்டிருந்த போது அங்கே அவரைக் கண்டேன்.

நிலம் பற்றிய அரசாணையை விளதீமிர் இலீச் எழுதியது எப்படி

போன்ச்-புருயேவிச்

பனிக்கால அரண்மனை புரட்சிகர, போல்ஷிவிக் படையினரால் கைப்பற்றப்பட்டவுடனே, இராணுவத் தலைவர்களின் மெதுவான நடவடிக்கையினால் மிகவும் பதட்டப் பட்டிருந்த விளதீமிர் இலீச் இறுதியாக நிம்மதிப் பெருமூச்சு விட்டார். அவர் உடனடியாகத் தமது எளிய வேஷத்தைக் கலைத்துவிட்டு, தமது நீண்டகால அரசியல் நண்பர்கள் சூழ, சம்பவங்கள் நிறைவு பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள், படைவீரர்களின் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்தின் கூட்டத்திற்கு வந்தார்.

பிரசங்க மேடையில் விளதீமிர் இலீச் தோன்றிய போது, இடி முழக்கமாக, அதைவிடவும் மேலாக, உண்மையிலேயே திகைப்பூட்டும் மனித உணர்ச்சிகளின் புயல் ஹாலில் வீசியது. கூட்டம் தொடங்கியது. மீண்டும் வாழ்த்துக்கள், மீண்டும் முழக்கங்கள், மீண்டும் மகிழ்ச்சி.... வரலாற்றுப் புகழ் வாய்ந்த இந்தக் கூட்டம் இவ்வாறு கொந்தளிப்புடன் ஆர்வம் ததும்ப நடந்தது.

இறுதியில் எல்லா வேலைகளும் முடிந்தன. இரவு வெகு நேரம் கழித்து இரவைக் கழிப்பதற்கு எனது வீட்டுக்கு வந்தோம். ஏதோ சாப்பிட்டோம். இரவு உணவுக்குப் பின்பு, மனக்கிளர்ச்சி கொண்டிருந்த, ஆனால் களைப்புற்றிருந்த விளதீமிர் இலீச் ஓய்வு கொள்வதற்குத் தேவையான அனைத்தையும் செய்து தர முயன்றேன். தனியாய் இருந்த ஒரு சிற்றறையில் கிடந்த எனது படுக்கையில் படுத்துக் கொள்ளும்படி அவரை வற்புறுத்துவதற்குள் போதும்

போதுமென்றாகி விட்டது. அங்கு அவர் பயன்படுத்திக் கொள்வதற்கு எழுதுமேசை, காகிதம், மை, நூல்கள் ஆகியவை இருந்தன.

பக்கத்து அறையிலிருந்த சோபாவில் நான் படுத்தேன். விளதீமிர் இலீச் தூங்குகிறார் என்று முற்றிலும் உறுதியான பின்புதான் நான் கண்ணை மூடுவதென்று முடிவு செய்தேன். பாதுகாப்புக்காக சங்கிலிகள், கொக்கிகள், பூட்டுகள் ஆகிய அனைத்தையும் போட்டு நுழைவுக் கதவுகளை எல்லாம் மூடினேன். பலவந்தமாக அறைக்குள் நுழைந்து விளதீமிர் இலீச்சைக் கைது செய்யவோ கொலை செய்யவோ யாராவது முயலக் கூடும் என்று எண்ணி ரிவால்வரை உபயோகத்துக்குத் தயார் செய்தேன். இது நமது முதலிரவுதானே. எதற்கும் தயாராய் இருக்க வேண்டும்! அவசரத்தில் எதையும் மறந்து விடக் கூடாது என்பதற்காக, ஸ்மோல்னி மாளிகை, வட்டாரத் தொழிலாளர் கமிட்டிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் தொலைபேசி எண்களையும் தோழர்களின் தொலைபேசி எண்களையும் ஒரு தனிக் காகிதத்தில் குறித்துக் கொண்டேன்.

விளதீமிர் இலீச் ஏற்கெனவே தமது அறையில் மின் விளக்கை அணைத்து விட்டிருந்தார். அவர் தூங்குகிறாரா என்று காது கொடுத்துக் கேட்கிறேன். ஒன்றும் கேட்கவில்லை. தூங்கி விழுந்தேன். நான் கண்களை மூடப் போன நேரத்தில் விளதீமிர் இலீச் இருந்த அறையில் திடீரென்று விளக்கு எரிந்தது. அனேகமாக ஒரு சந்தடியும் இல்லாமல் அவர் கட்டிலிலிருந்து எழுந்தது எனக்குக் கேட்டது. ஓசை இன்றி எனது அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்து, நான் தூங்குகிறேன் (நான் அப்போது தூங்கவில்லை) என்று உறுதி செய்து கொண்டு, ஒருவரையும் எழுப்பி விடாமலிருப்பதற்காக விரல் நுனிகளில் மெதுவாக நடந்து எழுது மேசையை நெருங்கினார். அதனருகே அமர்ந்து மைப்புட்டியைத் திறந்து, ஏதோ காகிதங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு எழுத்து வேலையில் மூழ்கினார்.

அவர் எழுதினார், அடித்தார், படித்தார், குறிப்பெடுத்தார், மீண்டும் எழுதினார். கடைசியில் சுத்தமாகப் பெயர்த்

தெழுதத் தொடங்கினார். அப்போது விடிந்து கொண்டிருந்தது. பெத்ரோகிராதின் இறுதி இலையுதிர்காலக் காலை நேரம் தொடங்கிக் கொண்டிருந்தது. அப்போது விளதீமிர் இலீச் விளக்கை அணைத்து விட்டு படுக்கையில் படுத்து கண்ணை மூடினார்.

காலையில் எழுந்திருக்க வேண்டிய நேரத்தில், வீட்டிலிருந்த அனைவரையும் எச்சரித்தேன். இரவு முழுதும் விளதீமிர் இலீச் வேலை செய்து கொண்டிருந்ததால் ஐயத்திற்கிடமின்றிப் பெரிதும் களைத்துப் போயிருப்பார், சத்தமில்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னேன். அவரை யாரும் எதிர்பார்க்காத போது அவர் திடீரென்று அறையிலிருந்து தோன்றினார். நன்கு உடை உடுத்தியிருந்தார். ஆற்றல் நிறைந்தவராய், புத்துணர்ச்சி கொண்டவராய், தெம்பும் மகிழ்ச்சியும் கொண்டு வேடிக்கைச் சிரிப்புடன் அங்கு நின்றார் அவர்.

''சோஷலிசப் புரட்சியின் முதல் நாள் வாழ்த்துக்கள்!'' என்று அவர் எல்லோருக்கும் வாழ்த்துச் சொன்னார். அவர் முகத்தில் களைப்பின் சாயலையே காணவில்லை. நன்கு தூங்கி விழித்தவர் போல் அவர் காணப்பட்டார். உண்மையிலோ, மிக பயங்கரமான, இருபது மணி நேர வேலை நாளுக்கும் பின் அதிகமாய்ப் போனால் அவர் இரண்டு—மூன்று மணி நேரம்தான் உறங்கியிருப்பார். தேநீர் பருகுவதற்காக எல்லோரும் கூடிய போது, எங்கள் வீட்டில் இரவைக் கழித்த நதேஸ்தா கன்ஸ்தன்தினவ்னா வெளியே வந்தார். அப்போது விளதீமிர் இலீச் தமது கோட்டுப் பையிலிருந்த சுத்தமாக எழுதப்பட்ட காகிதங்களை வெளியே எடுத்து, புகழ் பெற்ற தமது நிலம் பற்றிய அரசாணையை எங்களுக்கு வாசித்துக் காட்டினார்.

''இதைப் பிரகடனப்படுத்திப் பிரசுரித்து, பரப்ப வேண்டியதுதான் மிச்சம்! இதனை வாபஸ் பெறுவதற்கு அப்போது யாரேனும் முயன்று பார்க்கட்டும்! இல்லை, நடவாது, விவசாயிகளிடமிருந்து இந்த அரசாணையைப் பிடுங்கி நிலப்பிரபுக்களுக்கு நிலத்தைத் திரும்பத் தருவதற்கு எந்தச் சக்தியாலும் முடியாது. இது நமது

அக்டோபர் புரட்சியின் மிக முக்கியமான மாபெரும் சாதனை. இன்றைக்கே விவசாயப் புரட்சி நிறைவேற்றப் பட்டு உறுதி செய்யப்படும்.''

ஆங்காங்கு நிலப் போராட்டமும் ஒழுங்கீனங்களும் பல இருந்து வரும் என்று யாரோ அவரிடம் சொன்ன போது, அவர் இதெல்லாம் சில்லறை விஷயம் என்றும், இதெல்லாம் சரியாகிவிடும் என்றும், அடிப்படையைப் புரிந்து கொண்டு, அதை உணர்வில் நிறைத்துக் கொள்ள வேண்டியதுதான் அவசியம் என்றும் உடனடியாகப் பதி லிறுத்தார். சோவியத்துக்களின் காங்கிரசுக்கு விடுக்கப்பட்ட பொதுக் கட்டளைகளில் பிரதிபலித்த, தமது பிரதிநிதி களுக்கு விவசாயிகள் விடுத்த எல்லாக் கட்டளைகளினதும் கோரிக்கைகளைத் தாம் இதற்கு அடிப்படையாகக் கொண் டிருப்பதாகவும் இதன் காரணமாக இந்த அரசாணை விவசாயிகளால் வரவேற்கப்படும் என்றும், விவரமாக விளக்கத் தொடங்கினர்.

''இதெல்லாம் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் தந் ததே. அவர்களிடமிருந்து நாம் கடன் வாங்கிக் கொண்ட தாகச் சொல்லுவார்கள்'' என்று யாரோ ஒருவர் குறிப் பிட்டார்.

விளதீமிர் இலீச் புன்னகை செய்தார்:

''சொல்லட்டும். விவசாயிகளின் நியாயமான எல்லாக் கோரிக்கைகளையும் நாம் எப்போதும் ஆதரிக்கிறோம் என்று அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். விவசாயி களை, அவர்களது வாழ்க்கையை, அவர்களது விருப்பங் களை நாம் நெருக்கமாக அணுக வேண்டும். ஏதாவது சில முட்டாள்கள் சிரித்தார்கள் என்றல்—சிரிக்கட்டும். சோஷ லிஸ்டுப்-புரட்சியாளர்கள் விவசாயிகளின் மீது ஏகபோகம் வகிப்பதற்கு விட்டுவிட நாம் ஒருபோதும் தயாராய் இல்லை. நாம் பிரதானமான அரசாங்கக் கட்சி. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்னைக்கு அடுத்து மிக முக்கிய மானது விவசாயிகள் பிரச்னையாகும்.''

அன்று மாலையே நில அரசாணையைக் காங்கிரசில் பிர கடனம் செய்ய வேண்டியிருந்தது. டைப்ரைட்டரில் நகல்

எடுக்கக் கொடுத்து, மறு நாள் பிரசுரமாகும் வண்ணம் பத்திரிகையில் அச்சுக் கோர்க்கக் கொடுப்பதென்று முடிவு செய்தோம். எல்லாப் பத்திரிகைகளிலும் எல்லா அரசாங்கத் தகவல்களும் கண்டிப்பாக அச்சிடப்பட வேண்டும் என்ற அரசாணையை வெளியிடும் எண்ணம் அப்போதே விளதீமிர் இலீச்சுக்குத் தோன்றியது.

நில அரசாணையை உடனடியாக 50 ஆயிரம் பிரதிகளுக்குக் குறையாமல் அச்சடித்து, கிராமத்துக்குத் திரும்புகிற படைவீரர்கள் அனைவருக்கும் வழங்குவது என்று முடிவு செய்தோம். ஏனெனில் அவர்கள் மூலமாக மிக உட்பகுதிகளில் உள்ள மக்கள் திரளுக்கும் மிக வேகமாக இவ்வரசாணை பரவும் என்று எண்ணினோம். சில தினங்களில் இந்தப் பணி வெகு சிறப்பாகச் செய்து முடிக்கப்பட்டது.

கால்நடையாகவும் பின்னர் டிராமிலும் ஸ்மோல்னி மாளிகை நோக்கி நாங்கள் விரைவில் போனோம். தெருக்களில் செம்மையான ஒழுங்கு நிலவுவதைக் கண்ட விளதீமிர் இலீச்சின் முகம் சுடர் விட்டது. மாலை நேரத்துக்காக ஆர்வமுடன் காத்திருந்தார் விளதீமிர் இலீச். இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் சமாதானம் பற்றிய அரசாணை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடனே நிலம் பற்றிய அரசாணையை மிகத் தெளிவாக வாசித்தார். காங்கிரஸ் இதனை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

அரசாணை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பெத்ரோகிராத் பத்திரிகைகள் அனைத்துக்கும் ஆட்கள் வசமும், மற்ற நகரங்களுக்கு அதனைத் தபால் மூலமாகவும் தந்தி மூலமாகவும் நான் அனுப்பி வைத்தேன். நமது பத்திரிகைகள் அதை முன்கூட்டிச் சட்டத்தில் முடுக்கி வைத்திருந்தன, எனவே காலையில் லட்சக் கணக்கான பத்துலட்சக் கணக்கான மக்கள் அதைப் படித்தனர். உழைக்கும் மக்கள் அனைவரும் உற்சாகத்துடன் அதனை வரவேற்றனர். முதலாளித்துவ வர்க்கமோ தனது பத்திரிகைகளில் சீறியது, குரைத்தது. ஆனால் அவற்றை அப்போது சட்டை செய்தது யார்?

விளதீமிர் இலீச் வெற்றிக் குதூகலம் கொண்டிருந்தார்.

''ருஷ்யாவின் வரலாற்றில் இது ஒன்று மட்டுமே நீண்ட காலத்துக்குச் சுவடு விட்டுச் செல்லும்'' என்றார் அவர்.

வளமை வாய்ந்த புரட்சிப் படைப்பின் சகாப்தம் பெரிதும் வெற்றிகரமாகத் தொடங்கியது. பத்திரிகைகளில் வந்ததைத் தவிர, நிலம் பற்றிய அரசாணை எத்தனை பிரதிகள் படைவீரர்கட்கும் விவசாயிகட்கும் இடையில் வினியோகிக்கப்பட்டது என்று அறிந்து கொள்ள விரும்பி வெகு காலமாக அக்கறை கொண்டிருந்தார் விளதீமிர் இலீச். சிறு பிரசுரமாக அது பலமுறை அச்சிடப்பட்டது. குபேர்னிய, மாவட்ட நகரங்களுக்கு மட்டுமின்றி ருஷ்யாவின் எல்லாச் சிற்றூர்களுக்கும் ஏராளமான பிரதிகள் இலவசமாக அனுப்பப்பட்டன.

உண்மையிலேயே எல்லோரும் அறிந்த ஒன்றாக இருந்தது நிலம் பற்றிய அரசாணை. விளதீமிர் இலீச் பெருமளவான தமது சக்தியையும் ஆற்றலையும் செலவிட்ட, அவர் பிரம்மாண்டமான முக்கியத்துவம் தந்த புதிய சோஷலிசச் சட்டத் தொகுப்புகளின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்றான நிலம் பற்றிய இந்தச் சட்டத்தைப் போல அனேகமாக வேறெந்தச் சட்டமும் இவ்வளவு பரவலாக அச்சிடப்படவில்லை.

புதிய சமுதாயத்தின் மூலவர்

அக்டோபருக்கு அடுத்த முதல் மாதங்கள்

குரூப்ஸ்கயா

ஆட்சியை மேற்கொண்ட சில நாட்களில் விளதீமிர் இலீச்சும் நானும் ஸ்மோல்னி மாளிகையில் முன்பு மகளிர் வகுப்பறையாக இருந்த ஒரு சிறிய அறையில் குடியேறினோம். இத்தகைய அறைகள் ஸ்மோல்னி மாளிகையில் நிறைய இருந்தன. 1918 மார்ச்சில் மாஸ்கோவிற்குப் போவது வரை நாங்கள் அங்கு தங்கியிருந்தோம்.

விளதீமிர் இலீச்சை நான் இடை விட்டு விட்டுத்தான் பார்த்தேன். ஆனால் மாலை நேர உலாவல்கள் எனக்கு நன்கு நினைவிருக்கின்றன. அப்போது இலீச் எத்தகைய பாதுகாப்பும் இல்லாமல் இருந்தார். அவரை அப்போது நேரில் அறிந்தவர்களும் கொஞ்சமே. நேவா நதிக் கரையில் உலாவுவது எங்களுக்கு மிகவும் விருப்பமானதாக இருந்தது. வழக்கம் போல நடக்கும் போது இலீச் ஆர்வமுடன் பேசினார், அவருக்குக் கிளர்ச்சியூட்டிய விஷயங்களை விவரித்தார்.

சோவியத் ஆட்சி வெளியிட்ட முதல் அரசாணைகளே நாட்டினது சமுதாய வடிவத்தை மாற்றி விட்டன, பரஸ்பர உறவுகளை மாற்றி விட்டன, பலப்பல பிரச்னைகள் புது முறையில் முன்வைக்கப்பட்டன, வேலையின் எல்லாத் துறைகளிலும் பிரம்மாண்டமான கட்டுமான வாய்ப்புகளைத் திறந்து விட்டன. இதுவரை முற்றிலும் கேள்விப்படாத பிரம்மாண்டமான நிர்மாண வேலைகளின் அடித்தளங்கள் முதல் மாதங்களிலேயே நிறுவப்பட்டன. உழைக்

கும் மக்கள் திரளின் புரட்சிகர எழுச்சியும், துல்லியமாக ஆழமாகச் சிந்தித்து இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்குவதும் ஒன்றிணைய வேண்டியதின் பிரம்மாண்டமான முக்கியத்துவத்தை அக்டோபரில் ஆட்சியை மேற்கொண்டது மிகச் சிறப்பாக நிரூபித்தது.

மக்கள் திரளின் உணர்வையும் உற்சாகத்தையும் ஓயாது மேலுயர்த்தி, அவர்களது கைகளால் சமுதாய அமைப்பையே மறுநிர்மாணம் செய்தபடி வாழ்க்கை முழுவதையும் மாற்றி அமைக்க வேண்டி நேர்ந்தது. ''ஒழுங்கமைப்பே சோஷலிசக் கட்டுமானத்தின் அச்சாணி'' என்றார் இலீச். தொழிலாளி வர்க்கம் அனைத்தையும், தொழிலாளி வர்க்கத்தின் பின் செல்லும் விவசாயிப் பகுதிகளையும் சார்ந்து நின்று நாட்டை நிர்வகிப்பது எப்படி? இன்னும் அனுபவம் இல்லை.

இலீச்சை மிகவும் ஆட்கொண்டிருந்த அப்போதைய சிந்தனைகள் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற சிற்றேட்டிலும், அனைத்து ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின், 1918 ஏப்ரலில் நடந்த கூட்டத்தில் அவர் சமர்ப்பித்த அறிக்கையிலும் பிரதிபலித்துள்ளன. சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகளில் இலீச் எழுதினார்: ''உலக வரலாற்றில் முதல் முறையாக ஆட்சியை வென்று அடைகிற காரியத்தையும் சுரண்டலாளர்களை நசுக்குவதையும் பிரதான அம்சங்களில் சோஷலிஸ்டுக் கட்சி செய்து முடித்திருக்கிறது. நிர்வாகக் கடமைகளை மிக நெருக்கமாக அதனுல் அணுக முடிந்திருக்கிறது. சோஷலிசப் புரட்சியின் மிகக் கஷ்டமான (மிக மனநிறைவு அளிக்கிற) இந்தக் கடமையைத் தகுதியுடன் செய்து முடிப்பவர்களாக நாம் விளங்க வேண்டும். வெற்றிகரமான நிர்வாகத்துக்கு அத்தியாவசியமானது எது என்று தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும். நம்பச் செய்கிற திறமையைத் தவிர, உள்நாட்டுப் போரில் வெற்றியடைகிற திறமையைத் தவிர, நடைமுறையில் ஒழுங்கமைக்கிற திறமை அத்தியாவசியமாகும். இதுதான் மிகக் கஷ்டமான பணி. ஏனெனில், கோடிக்கணக்கான மக்களது வாழ்க்கையின்

மிக ஆழமான, பொருளாதார அடித்தளங்களைப் புது முறையில் ஒழுங்கமைக்கிற காரியம் அது.''*

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற சிற்றேட்டில், கீழ்மட்டத்திலிருந்து கணக்கெடுத்தல் கண்காணிப்பு ஆகியவற்றை ஒழுங்கமைக்க வேண்டிய அவசியம் பற்றி எழுதினார், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டிய அவசியத்தையும், மக்கள் தொகையின் கல்வியறிவு, கலாசாரம் ஆகியவற்றை உயர்த்த வேண்டியதின் அவசியத்தையும், வேலை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டிய கடமையை மக்கள் திரளின் முன்வைக்கு வேண்டிய அவசியத்தையும் பற்றி எழுதினார், போட்டியைப் பற்றியும், உழைப்புக்கு உணர்வு பூர்வமான அணுகல் முறைய மக்கள் திரளிடம் உயர்த்த வேண்டியது பற்றியும், உணர்வுபூர்வமான ஒழுங்கு பற்றியும், மக்கள் தொகையில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் அரசு நிர்வாகத்தில் ஈடுபடுத்த வேண்டியது பற்றியும் எழுதினார்.

அக்டோபருக்குப் பிந்திய முதல் மாதங்களில் இலீச்சால் சிந்தித்து எழுதப்பட்ட சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் என்ற சிற்றேட்டை இப்போது மீண்டும் படிக்கும் போது செயலுக்கான வழிகாட்டியாக அது இப்போதும் விளங்குவதைக் காண்கிறோம். ஒவ்வொரு ஒழுங்கமைப்பாளரும், ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் இந்தச் சிற்றேட்டைப் படிக்கும் போது அக்டோபருக்குப் பிந்திய 15 ஆண்டுகளில் நாடு கடந்து வந்துள்ள பாதை முழுதையும் இன்னும் தெளிவாக அறிவார், தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளர் திரளும் இந்த ஆண்டுகளில் எத்தகைய பிரம்மாண்டமான வேலை செய்திருக்கின்றன, இந்த வேலையில் அவை எப்படி வளர்ந்திருக்கின்றன என்று இன்னும் தெளிவாக உணருவார், இந்த ஆண்டுகளில்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, மூன்றும் பாகம், ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்'', பக்கங்கள் 118—119.—(ப-ர்.)

கட்சித் தலைமையின் ஒப்பு நிறையையும் முக்கியத்துவம் அனைத்தையும் இன்னும் ஆழமாக உணருவார்.

இந்த மறுநிர்மாண வழியில் பிரம்மாண்டமான கஷ்டங்கள் இருந்தன. தொழிற் துறையில் பாதியைப் போர் அழித்து விட்டிருந்தது, சிற்றளவு விவசாயமே, அதன் மிகவும் பின்தங்கிய வடிவங்களே நாட்டில் ஆதிக்கம் வகித்தன, குட்டி முதலாளித்துவ இயல்பு மேலோங்கி இருந்தது, கலாசாரமின்மை குரூரமாய் இருந்தது, பழைய வாழ்க்கை முறை ஆழமாக வேர் விட்டிருந்தது, நிலப் பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் சேவை செய்யத் தக்க விதத்தில் அரசு இயந்திரம் முழுதும் வைக்கப்பட்டிருந்தது. அமைப்பு முழுதும் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தது. எல்லாக் கஷ்டங்களையும் சமாளிக்கவும், அவற்றை வழியிலிருந்து அகற்றவும், வாழ்க்கை முழுதையும் அடிப்படையிலேயே மாற்றியமைப்பதற்காக தினம் தினம் போராட்டம் நடத்தவும் பிரம்மாண்டமான இறுக்கமும், சிந்தனையின் பிரம்மாண்டமான தெளிவும், நடைமுறை உத்தியின் பிரம்மாண்டமான நெளிவு சுளிவும் தேவையாய் இருந்தன.

அக்டோபருக்கு முன்பு நமது நாடு இருந்த நிலையையும் இப்போது அது அடைந்திருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதுவரை கேள்விப்படாத வித்தியாசத்தைக் காணலாம். மிகக் கீழ் மட்டத்திலிருந்தவர்களும் உணர்வுபூர்வ வாழ்க்கைக்கு உயர்ந்து விட்டார்கள். தொழிற்துறை வளர்ச்சி, கூட்டுப்பண்ணை அமைத்தல், விவசாயத்தை இயந்திர மயமாக்கல், தொழிற்சங்கங்களின் வளர்ச்சி, கட்சி, கம்சமோல், பயனீர் இயக்கம் ஆகியவற்றின் வளர்ச்சி, கலாசாரக் கட்டுமானத்தின் வளர்ச்சி, பெண்கள் மத்தியில் நடைபெறும் வேலையின் வளர்ச்சி, சோவியத்துக்களின் வளர்ச்சி முதலிய, எந்தத் துறையை நாம் எடுத்துக் கொண்டாலும் தாமே சான்றுகளாக விளங்கும் புள்ளி விவரங்களைப் பார்க்கலாம். வாழ்க்கை முழுவதும் புது முறையில் ஒழுங்கமைக்கப்படுகிறது. ஒழுங்கமைப்பின் வீச்சு முற்றிலும் வேறானது.

ஸ்மோல்னி மாளிகையின் மாடியில் இலீச் வேலை செய்தார். அவரது அறைக்கு எதிரே ஒரு சிறிய வரவேற்பு அறை இருந்தது. ஒன்றுக்குப் பின் ஒன்ருக தூதுக்குழுக்கள் அவரிடம் வந்தன. போர்முனையிலிருந்து வந்த படைவீரர்களிடம் லெனின் ஒரு முறை பேசியது எனக்கு நினைவிருக்கிறது. சன்னல் அருகே சுவற்றில் சாய்ந்தபடி இலீச் நின்று கொண்டிருந்தார். எதையோ விளக்கிச் சொன்ஞர், சான்று காட்டினுர். படைவீரர்கள் தோளோடு தோள் சேர்த்து நெருங்கி நின்று அவர் சொல்வதை அசைவின்றிக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது இத்தகைய தூதுக்குழுக்கள் நாள்தோறும் நிறைய வந்தன.

எப்போதும் மக்கள் நிறைந்திருந்த அன்றைய ஸ்மோல்னி மாளிகையின் சூழ்நிலையில் இலீச்சின் வேலை நடைபெற்றது. ஸ்மோல்னி மாளிகையை நோக்கி எல்லோரும் வந்தார்கள். இயந்திரத் துப்பாக்கிப் படைப்பிரிவு ஸ்மோல்னி மாளிகையைப் பாதுகாத்தது. இந்த இயந்திரத் துப்பாக்கிப் படைப்பிரிவு அக்டோபருக்கு முன்ஞல் வீபர்க் பகுதியில் பணியாற்றியது, முற்றிலும் வீபர்க் தொழிலாளர்களது செல்வாக்கின் கீழ் இருந்தது. ஜூன் 3ல் இயந்திரத் துப்பாக்கிப் படைப்பிரிவு முதல் முதலாகத் தாக்குதல் தொடுத்து சண்டையில் குதிக்கத் தயாராய் நின்றது. எழுச்சியாளர்களை நன்ருகத் தண்டிக்க வேண்டுமென்று கேரென்ஸ்கி முடிவு செய்தார். கேரென்ஸ்கியின் ஆட்சிகள் அவர்களை நிராயுதபாணிகளாக்கி, சதுக்கத்துக்குக் கூட்டிச் சென்று அவமானப்படுத்தினுர்கள். இதஞல் இப்படைவீரர்களோ, இடைக்கால அரசாங்கத்தை இன்னும் கடுமையாக வெறுக்கத் தொடங்கினுர்கள். அக்டோபரில் அவர்கள் சோவியத் ஆட்சிக்காகப் போராடினுர்கள், பின்னர் ஸ்மோல்னி மாளிகையின் பாதுகாப்பை மேற்கொண்டார்கள். இலீச்சையும் அவர்கள் பாதுகாத்தார்கள். உண்மையில் சொல்லப் போனுல் இந்தப் பாதுகாப்பு பழங்கால மாதிரியில் இருந்தது....

இலீச்சின் உணவுக்கு ஏற்பாடு செய்வதில் ஒரு நேரத்தில் இடை நிறுத்தம் நிலவியது. நாள் முழுதும் நான்

வேலையில் ஈடுபட்டிருந்தேன். சில வேளைகளில் மரியா இலீனிச்னு வீட்டிலிருந்து இலீச்சுக்கு எல்லாவிதமான உணவையும் கொண்டு வந்தார். ஆனுல், உண்மையான, ஒழுங்கான பராமரிப்பு இருக்கவில்லை. இப்போது உயர் ஓவியப் பள்ளியை முடித்துவிட்ட ஒருவர் என்னிடம் ஒருநாள் ஒரு விஷயம் சொன்னுர். அவரது தாயார் ஸ்மோல்னி மாளிகையில் இருந்து உணவு விடுதியில் சுத்தம் செய்பவராக வேலை பார்த்தாராம். யாரோ உணவு விடுதிக்குச் செல்கிற சத்தத்தை அவர் ஒரு தடவை கேட்டாராம், எட்டிப் பார்த்தாராம்: மேசைக்கருகே இலீச் நின்று கறுப்பு ரொட்டித் துண்டையும் பூவாளை மீன் துண்டையும் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். சுத்தம் செய்பவரைக் கண்டு சிறிது குழப்பமுற்று ஒரு புன்னகையுடன் சொன்னுராம்: ''ரொம்பவும் பசித்தது''. அவர் என்னிடம் ஒரு போதும் எது பற்றியும் புகார் சொன்னதில்லை. புகார் இல்லாமலேயே சரியான சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தெரிந்தது. ஷத்மானின் தாயார் விரைவில் பக்கத்து அறையில் குடியேறி இலீச்சையும் என்னையும் தமது பராமரிப்பில் ஏற்றுக் கொண்டார்.

இலீச் செய்து வந்த கொந்தளிப்பு மிக்க வேலையை நேரடியாகக் கவனிக்கும் வாய்ப்பு எனக்கு அப்போது கிட்டவில்லை. எல்லாப் பக்கங்களிலும் பழையது இடித்துத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. பிரம்மாண்டமான நிர்மாண வேலை நடந்து வந்தது. இந்த வேலையில் இலீச் நேரடியாக முனைந்திருந்தார். அந்த வேலை பற்றி இலீச் சொன்ன விவரங்களிலிருந்தும் இலீச்சைக் காண வந்த தோழர்கள் தமது வேலை பற்றி என்னிடம் கூறியபோது அவர்களுடன் நடந்த உரையாடல் வாயிலாகவும் நான் தெரிந்து கொண்டேன். எல்லாப் பக்கங்களிலும் விரிந்து பரவியது புரட்சி· கலாசாரத் துறை வேலையில் நான் முற்முக மூழ்கி இருந்தேன். இந்த வேலை மிக முக்கியமானது என்று இலீச் கருதினுர். கலாசாரம் சோஷலிசத்தைக் கட்டுவதற்கு அத்தியாவசியமான சாதனைகளை ஒன்றிணைக்கிற சிமெண்ட், அது இல்லாமல் சோஷலிசத்தைக் கட்டியமைக்க முடியாது

என்று கருதினர் அவர். கட்டுமான வேலையின் இந்தத் துறையில் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று கருதினர். ஆனல் வழக்கத்தை விடக் குறைவாகவே அப்போது இப்பிரச்னைகள் பற்றிப் பேசினர். சோவியத் ஆட்சியின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கிற, பிரம்மாண்டமான முக்கியத்துவமுள்ள தீர்மானமான பிரச்னைகள் அவர் முன்னே நின்றன.

லெனினும் வெளிநாட்டுக் கொள்கையும்

சிசேரின்

விளதீமிர் இலீச்சின் வெளிநாட்டுக் கொள்கையை ஒரு சீரான அமைப்பாக எடுத்துச் சொல்ல இன்னும் நேரம்* வரவில்லை. சோவியத் குடியரசிடம் சீராக வகுக்கப் பட்ட அமைப்பாக வெளிநாட்டுக் கொள்கை இருக் கிறது என்று வெகு காலத்துக்கு முன்பே எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டது. உள்நாட்டுக் கொள்கையின் சோவியத் அமைப்பை விட இன்னும் புதுமையாக இது விளங்குகிறது. முதலாளித்துவ அரசுகளுக்கு இடையில் சோஷலிச அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் வேலைத் திட்டத்தை நிறுவுவதற்கு அக்டோபர் புரட்சிக்கு முன்னால் ஒருபோதும் முயற்சி செய்யப்படவில்லை. சோவியத் குடியர சின் வெளிநாட்டுக் கொள்கையை முறையாக வகுக்கப் பட்ட ஒரு திட்டமாக விளதீமிர் இலீச்சே ஒருபோதும் முன்வைத்ததில்லை. அக்கொள்கையின் சீரும் முழுமையும் அவர் மனதில் இருந்தன. இந்தத் துறையில் தமது கருத் துக்களைத் திட்டவட்டமான எண்ணிறந்த சந்தர்ப்பங்களில் அவர் வெளியிட்டார். அவரது வெளிநாட்டுக் கொள்கை யின் சில பொதுவான கோட்பாடுகளும் சில அடிப்படை யான கருத்துக்களும் மாத்திரம் அவரால் பொதுவான வடிவில் முன்வைக்கப்பட்டன. விளதீமிர் இலீச் லெனின் காரியங்களை நிர்வகித்த காலத்தில் அனுசரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை பற்றிய தகவல்கள் எல்லாம்

---

* இந்த நினைவுக் குறிப்புகள் 1924ல் எழுதப்பட்டன. —(ப-ர்.)

சேகரிக்கப்பட்டு, முறைப் படுத்தப்பட்ட பின்னர், நமது காலத்தின் கூர்மையான பிரச்னைகள் பலவும் வரலாறாகி விட்ட பின்பு, சோவியத் குடியரசின் வெளிநாட்டுக் கொள்கையை, விளதீமிர் இலீச் புரிந்து கொண்டபடி, ஒரு சீரான அமைப்பாக நிலை நிறுத்தலாம்.

அரசு வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் விளதீமிர் இலீச் மிகத் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்த காலத்தில், நான் எனது பணித் துறையில் அவருடன் அனேகமாக இடையறாத தொடர்பு கொண்டிருந்தேன். சோவியத் குடியரசின் முதல் வருடங்களில் ஒரு நாளைக்குப் பல தடவை அவருடன் நான் தொலைபேசியில் பேசினேன். நேரடியான சொந்த உரையாடல்களைத் தவிர, ஒரு சிறிதே முக்கியத்துவமுள்ள அப்போதைய வெளிநாட்டுக் காரியங்களின் எல்லா விவரங்கள் பற்றியும் அவருடன் அடிக்கடி மிக நீண்ட உரையாடல்கள் நடத்தினேன். ஒவ்வொரு பிரச்னையின் சாரத்தையும் உடனடியாகப் புரிந்து கொண்டு, உடனடியாக அதற்கு அரசியல் விளக்கத்தைத் தந்து, விளதீமிர் இலீச் எப்போதும் வெளிநாட்டு நிலைமை பற்றி மிகச் சிறந்த பகுப்பாய்வைத் தமது பேச்சுக்களில் தந்தார். அவரது ஆலோசனைகள் (அடிக்கடி உடனடியாக இவற்றைத் தந்தார்), இன்னொரு அரசாங்கத்துக்கான பதிலின் வாசகமே, வெளிநாட்டுக் கொள்கைக் கலைக்கும் நெளிவு சுளிவுக்கும் மாதிரிகளாகத் திகழ முடியும்.

ஜெர்மனி விடுத்த இறுதி எச்சரிக்கைக்குப்* பின்னே எழுந்த சச்சரவுகளின் போது வெளிநாட்டுக் கொள்கை பற்றி வி. இ. லெனினுடன் நான் முதன் முறையாகத் தொடர்பு கொண்டேன். தலைமறைவாய் இருந்த புரட்சிக் கட்சியின் முந்தைய கருத்துக்களிலிருந்து ஆட்சியில் உள்ள

---

* 1918 ஜனவரி 27ல் சமாதான ஒப்பந்தத்துக்காக பிரெஸ்டில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் குடியரசுக்கு, சோவியத் பகுதிகளை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொள்கிற சமாதானம், அல்லது மேலும் போர் நடத்துவது என்னும் இறுதி எச்சரிக்கை விடுத்தனர்.—(ப-ர்.)

அரசாங்கத்தின் அரசியல் எதார்த்தத்துக்குத் திடீரென்று மாறுவது எங்கள் எல்லோருக்கும் அளவு கடந்து கஷ்டமாக இருந்தது. விளதீமிர் இலீச்சுடன் நான் நடத்திய முதல் உரையாடலின் போது ''ஆபாசமான'' சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டிய அவசியத்துக்கு இணங்க என்னுல் முடியவில்லை. எனினும் மாற்றம் என்னிடம் வந்து விட்டது. நான் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்குக்குக் கிளம்பினேன். ப்ஸ்கோவுக்கு முந்திய இறுதி நிலையங்களில் ஒன்றை நாங்கள் அடைந்த போது ஜாரின் சைனியம் ஓட்டம் எடுத்துக் கொண்டிருந்த நிலைமையில் அனேகமாக ஒரு நாள் நாங்கள் அங்கு தங்க வேண்டியதாயிற்று. அப்போது பின்கண்ட வாசகம் கொண்ட தந்தி ஒன்று விளதீமிர் இலீச்சிடமிருந்து எங்களுக்கு வந்தது: ''நீங்கள் தயக்கம் காட்டினுல் அது அனுமதிக்கத் தகாதது.'' எங்களது சித்தத்துக்கு மாருக நாங்கள் தங்க நேர்ந்திருக்கிறது என்றும் முதல் வாய்ப்புக் கிட்டிய உடனேயே மேற்கொண்டு பயணம் செய்வோம் என்றும் அவருக்குப் பதில் அனுப்பினேம்.

மற்றவர்களால் சிந்திக்க முடியாத அவரது அரசியல் எதார்த்தம் தவறு செய்வதிலிருந்து எங்களைப் பலமுறை காப்பாற்றியது. மனப்பதிவுகளுக்குக் கீழ்ப்படிந்து விடுகிற போக்குக் கொண்ட மற்ற தோழர்கள் இத்தகைய தவறுகள் செய்தார்கள்.

பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கைக்குப் பின்பு ஜெர்மன் ராணுவம் எல்லைக் கோடுகள் எதையும் மதிக்காமல், முன்னேக்கி, குறிப்பாக உக்ரேனியப் பகுதியிலிருந்து படிப்படியாக நகர்ந்தது....

பீதியும் புகலின்மையும் கொண்ட சில நடவடிக்கைகள் விளதீமிர் இலீச் நேரடியாகத் தலையிட்டதால் தவிர்க்கப்பட்டன. விளதீமிர் இலீச்சின் யோசனைகளின் படி சோவியத் அரசாங்கம் சகிக்க முடியாத நிலைமை உருவாவதைச் சுட்டிக் காட்டிப் புதிய பேச்சுவார்த்தைகள் தொடங்கலாம் என்று ஜெர்மன் அரசாங்கத்துக்கு ஆலோசனை சொன்னது. இவ்வாறு தொடங்கப்பட்ட பேச்சு

வார்த்தைகளின் விளைவாக ஜெர்மனியுடன் பிற்சேர்க்கை ஒப்பந்தங்கள் ஆகஸ்டில் செய்து கொள்ளப்பட்டன, ஜெர் மானியர்கள் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து குடி மக்களின் வெளியேற்றம் தொடங்கியது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் தோன்றிய எல்லாத் திடீர்ச் சிக்கல்களை யும் கூர்ந்து கவனித்து வந்தார் விளதீமிர் இலீச். சமயத்துக் கேற்ற சலுகைகளையும் எதிர்த்தரப்பின் அளவு கடந்த கோரிக்கைகளுக்கு எல்லையிட வேண்டிய சந்தர்ப்பங்களில் காட்டிய உறுதியையும் அவர் ஒன்றிணைத்தார்.

புரட்சிகரத் தலைநகரான மாஸ்கோவிற்கு, ஜெர்மானிய இராணுவ முடியரசின் பிரதிநிதியான மிர்பாஹ் பிரபு வந்ததானது இயற்கையாகவே இடைவிடாத கஷ்டங்களை, சில சமயங்களில் அனேகமாக மீள வகையற்ற நிலைமை களைத் தோற்றுவித்தது. பிரெஸ்ட் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டிய அவசியத்தை விளதீமிர் இலீச் சுக்குச் சுட்டிக் காட்டிய, பிறரால் சிந்திக்க முடியாத அரசி யல் எதார்த்தத்தையே இடையறாத இக்கஷ்டங்களுக்குத் தீர்வு காணும் போதும் அவர் பிரயோகித்தார். கடுமை யான நிலைமை, விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்கிற போதே, சோவியத் அரசின் சுய கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் அவர் எப்போதும் பாடுபட்டார், உறுதி காட்ட வேண்டிய எல்லையைக் காணத் திறன் கொண்டிருந்தார். ''இந்தக் கோரிக்கை அபத்தமானது, இதை நிறைவேற்ற இயலாது'' என்று அவ்வப்போது அறிவித்தார் அவர். போர்க் கைதி களைப் பரிமாறிக் கொள்வது பற்றிய பேச்சுவார்த்தை களில் அடிக்கடி தப்பபிப்பிராயங்கள் எழுந்தன. இப் பேச்சுவார்த்தைகளின் விவரங்களில் நேரடியாகத் தலை யிட்டார் விளதீமிர் இலீச், எவற்றுக்கு அப்பால் விட்டுக் கொடுப்பது அனுவசியம் என்று எல்லைகள் வகுத்தார்.

மிர்பாஹ்* சீமான் கொல்லப்பட்ட சந்தர்ப்பம் மிகக்

---

* சோவியத் ருஷ்யாவில் ஜெர்மானியத் தூதராக இருந்தவர் மிர்பாஹ். சமாதான ஒப்பந்தத்தைச் சீர்

கடுமையான நிலைமையைத் தோற்றுவித்தது. ஜெர்மன் இராணுவக் கட்சியின் தரப்பில் உடனடியாகத் தாக்குதல் தொடுக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்தது. அந்த நேரத்தில் நான் விளதீமிர் இலீச்சுடன் நீண்ட உரையாடல்கள் பல நடத்தினேன். மாஸ்கோவின் மீது தாக்குதல் தொடுப்பதில் ஜெர்மனிக்கு எத்தகைய கஷ்டங்கள் இருக்கும் என்று அவர் முற்றிலும் சரியாக மதிப்பீடு செய்தார். ஆயுதந்தாங்கிய ஜெர்மன் படைப்பிரிவை மாஸ்கோவிற்கு அனுப்பப் போவதாக ஜெர்மானிய அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரிக்க வேண்டியது அவசியம் என்று கருதிய விளதீமிர் இலீச் எங்கள் பதில் ஏற்படுத்தும் விளைவுகளைக் காண முழு அமைதியுடன் காத்திருந்தார். நுண்ணுணர்வு லெனினை ஏமாற்றிவிடவில்லை. செய்து கொள்ளப்பட்ட சமரச உடன்பாடு என்னுடன் நடத்திய உரையாடல்களின் போது அவர் நிலைமையை மதிப்பீடு செய்ததற்குப் பொருத்தமாக இருந்தது.

அர்கான்கெல்ஸ்கைப் பிடித்துக் கொண்டு தெற்கு நோக்கி நகர்ந்து, கிழக்கு முனையில் செக்கோஸ்லோவாக்கியர்களின் உதவியுடன் செயல்பட்டு தெற்கு முனையில் வெண்காவல் படையினரான அலெக்சேயிவின் ''சுய விருப்பத் தொண்டர் சேனையை'' முன் தள்ளியபடி ஆகஸ்டில் ஆன்டான்ட்* உண்மையில் நமக்கு எதிராகப்

குலைத்து ஜெர்மனியுடன் போரைத் தூண்டிவிட முயன்ற இடதுசாரிச் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களால் 1918 கோடைகாலத்தில் மாஸ்கோவில் இவர் கொல்லப்பட்டார்.—(ப-ர்.)

* **ஆன்டான்ட்**—ஏகாதிபத்திய அரசுகளின் (இங்கிலாந்து பிரான்ஸ், ருஷ்யா) கூட்டு. இது 1907ல் முழுமை பெற்றது. ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளைக் கொண்ட முக்கூட்டுக்கு எதிரானது இக்கூட்டு. ஏகாதிபத்திய உலகப் போரின் போது (1914—1918) அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகள் ஆன்டான்டுடன் சேர்ந்து கொண்டன. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்பு இக்கூட்டின் பிரதான உறுப்பினர்களான இங்கிலாந்து, பிரான்ஸ்,

போர் நடத்திய போது போரிட்டு வந்த இரு ஏகாதிபத்தியக் கூட்டணிகளின் பகைமையை, முன்னேக்கி வந்த ஆன்டான்டின் தாக்குதலை பலவீனப்படுத்துவதற்குப் பயன்படுத்த முயன்ருர் விளதீமிர் இலீச்....

தொடக்க காலமான இந்தக் கடிய நேரத்தில் பெர்லினில் நமது ராஜிய நடவடிக்கைகளில் பிரதான அம்சமாக இருந்தது சோவியத் குடியரசுடன் பொருளாதார ஒத்துழைப்பு மேற்கொள்ள ஜெர்மானிய அரசியல் வட்டாரங்கள் அக்கறை கொள்ளுமாறு செய்வதாக இருந்தது. இக்கொள்கையை மிகச் சிறப்பாக அமுல் நடத்திய தோழர் இயோஃபெ, ருஷ்யாவை இரண்டாவது உக்ரேனியாவாக மாற்றி விடுவதன் மூலம் அதை ஒரு பாலைவனம் ஆக்கி விடுவார்கள் என்றும் வளர்ந்து வரும் சோவியத் ருஷ்யா அவர்கட்குத் தரவிருக்கும் பொருளாதார லாபங்களை இழந்து விடுவார்கள் என்றும் ஜெர்மானியத் தொழில்-வர்த்தக வட்டாரத்தினருக்கு எடுத்துக் காட்டினுர். இதையொட்டி அன்னிய மூலதனத்தை ஈர்ப்பதற்கும் பெருத்த சலுகைகளை அதற்கு நல்குவதற்குமான தமது திட்டங்களை விளதீமிர் இலீச் திண்ணமாக உருவாக்கினுர். இந்த விஷயம் பற்றி மிகச் சுவாரஸ்யமான உரையாடல்கள் பலவற்றை அவருடன் நடத்தினேன். இறுதியாக அன்னிய மூலதனத்துக்கு சலுகைகள் அளிப்பதற்கான திட்டம் ஜெர்மன் அரசாங்கத்துக்கும், கர்னல் ரெய்மோன்ட் ராபின்ஸ் என்ற நமது அமெரிக்க நண்பருக்கும், ஒரே நேரத்தில் தரப்பட்டது. பின்னவர் அதைத் தம்முடன் அமெரிக்காவுக்குக் கொண்டுபோனுர்.

வெற்றி வாகை சூடி வந்த ஜெர்மானிய ஏகாதிபத்தியம் நம்மை ஒரு புறம் நெருக்கியதும் மேலும் மேலும் கோரிக்கைகளை விடுத்துவந்த ஆன்டான்ட் மறுபுறம் நம்மை நசுக்கியதும் அந்தக் காலத்தில் எல்லையற்ற கஷ்ட நிலைமை

அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவை சோவியத் நாட்டுக்கு எதிராக இராணுவத் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தன.—(ப-ர்.)

நமக்குத் தோன்றக் காரணமாக இருந்தன. ஜப்பானியர்கள் விலாடிவாஸ்ட்டாக்கைப் பிடித்துக் கொண்டது பற்றிப் பேசுவதற்காக ஆன்டான்ட் பிரதிநிதிகள் வந்தது எனக்கு நினைவிருக்கிறது. இராணுவத் தலையீட்டைத் தொடங்கி விட்ட ஆன்டான்டின் பாசாங்கு நிறைந்த அறிக்கைக்குப் பாதி ராஜிய முறையிலும் பாதி சுருக்கென்று தைக்கிற விதத்திலும் பதிலளிக்குமாறு விளதீமிர் இலீச் மிக விவரமாக எனக்கு அப்போது ஆலோசனை சொன்னார்.

கிடைத்துள்ள இடை ஒய்வைக் கூடுமான வரை நீட்டுவதும் நமக்கு எதிராக ஆன்டான்டின் எதிர்பார்க்கப்பட்ட அடுத்த நடவடிக்கைகளைத் தள்ளிப் போடுமாறு செய்வதுமே அப்போது நமது பிரதானப் பணியாக இருந்தது. ஆன்டான்டுடன் உடன்படிக்கை செய்து கொள்ள நான் தொடர்ந்து முயன்று வந்தேன். இந்த முயற்சிகள் தோல்வியடைந்து விட்டால் கூட இவை நம்மைப் பயமுறுத்தி வந்த முறிவைத் தள்ளிப் போடவாவது செய்யும். இந்த நேரத்தில் விளதீமிர் இலீச் தொலைபேசி மூலம் நாள் தோறும் உரையாடி எனக்கு மிக நுண்ணிய ஆலோசனைகள் தந்தார். அற்புத நெளிவு சுழிவையும் எதிரியின் அடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் திறனையும் அப்போது அவர் வெளிக்காட்டினார். அச்சமயத்தில் தோன்றிய கூரிய கருத்து வேறுபாடுகள் அவரது நேரடித் தலையீட்டின் மூலமே மீண்டும் சரியாக்கப்பட்டன. பிரெஞ்சுத் தூதுவர் நூலான்ஸ் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியில் நிகழப் போகிற இராணுவத் தலையீடு பற்றிப் பேசிய பிறகு, அவரைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டுமென்று கோரி, அவரை ஒரு தனிப்பட்ட மனிதர் என்றே நாங்கள் கருதுவதாகக் கூறினோம். கடிதம் எழுதத் தடை விதிப்பது போன்ற பலப்பல நடவடிக்கைகளை அவருக்கு எதிராக முதலில் மேற்கொண்டோம். ஆனால், நாங்கள் எல்லா வழியிலும் நீட்டுவிக்க முயன்று வந்த இடை ஒய்வை இதன் மூலம் சீர்குலைத்து விடுவோம் என்பது உடனடியாகத் தெளிவாயிற்று. விரும்பத் தகாத விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடிய அனுவசியமான நடவடிக்கைகளை நிறுத்துவதற்காக

உடனடியாகத் தலையிட்டார் விளதீமிர் இலீச், மீண்டும் அவருடன் நான் நடத்திய மிகவும் சுவாரஸ்யமான உரை யாடல்களுக்குப் பின்பு பிரெஞ்சு இராணுவத் தூதுக் குழுத் தலைவர் ஜெனரல் லாவெரெனுடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தினேன். அவருக்கு விளக்கிச் சொல்ல நாங்கள் வீணாக முயன்றோம். மூர்க்கமான சண்டையில் தனது சக்தியனைத்தையும் ஒன்று திரட்டிய பிரான்ஸ், எப்படியும் ஜெர்மனியின் கிழக்கு முனையை உடனடியாக மீண்டும் திறக்க விரும்பியது. சண்டையை மீண்டும் தொடங்குவது எங்களால் இயலாது என்று லாவெரெனுடன் நடத்திய பேச்சுக்களிலும் மற்ற சந்தர்ப்பங்களிலும் நான் எவ்வள வுதான் எடுத்துச் சொல்லிய போதிலும், ஜெர்மனிக்கு ஒரு கிழக்கு முனையை எங்களுக்கு எதிராகவாவது உருவாக்கு வதில் புதிய முயற்சிகளை ஆன்டான்ட் மேற்கொள்ளவே அது வகை செய்தது. ஐரோப்பியக் கண்டத்தின் இராணுவ அரசியலில் பிரான்ஸ் வகிக்கும் பிரம்மாண்டமான முக் கியத்துவத்தை இப்பேச்சுக்களில் எடுத்துக்காட்டி இலீச் எனது கண்களைத் திறந்து விட்டார். லியூபெர்சாக் பிரபு வின் வருகை குறித்து விளதீமிர் இலீச் காட்டிய அக்கறை எனக்குக் குறிப்பாக நினைவில் இருக்கிறது.... புதிய ருஷ்ய மக்கள் இராணுவத்தின், செஞ்சேனையின் முதல் முளைகளைக் கண்ட இந்த இளம் பிரெஞ்சு அதிகாரி பெரு மகிழ்ச்சியை வெளியிட்டார்.

அதே சமயம், இங்கிலாந்தின் உலகு தழுவிய பாத் திரத்தை மதிப்பீடு செய்த விளதீமிர் இலீச், நம்மிடம் விசேஷமாக அனுப்பப்பட்ட லொக்கார்த் மூலம் அந்த நாட்டுடன் உடன்பாடு செய்து கொள்வதற்கு நாங்கள் செய்து வந்த முயற்சிகளை மிகக் கவனமாகக் கண்காணித்து வந்தார். செக்கோஸ்லோவாக்கியர்களின் கலகம் இங்கி லாந்தின் அரசியலை நேரடித் தலையீட்டுக்கான பாதையில் செலுத்தாத வரை இந்த உடன்பாடு சாத்தியமே என்று ஒரு சமயம் தோன்றியது. நமக்கு எதிராக எல்லா நாடு களுடனும் வரிசையாக ஒப்பந்தம் செய்து கொள்ள இங்கிலாந்து முயலும் என்று என்னிடம் பேசும் போது

விளதீமிர் இலீச் முன்னறிவித்தார். நெளிவு சுழிவு காட்டும் இங்கிலாந்து நம்முடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள முயலும் என்று நான் சொன்னேன். ''நம்முடன் கடைசியாக, மற்றவற்றுக்குப் பிறகு'' என்று பதிலளித்தார் விளதீமிர் இலீச்.

ஆன்டான்ட் நம்மீது பகிரங்கத் தாக்குதல் தொடங்கி, சதி வேலையாலும் சோவியத் நாட்டுக்கு உள்ளே கலகத்தை மூட்டி விடும் முயற்சிகளாலும் அதை வலுப்படுத்தியதுமே பலமான பல அடிகள் தந்து இதற்குப் பதிலளிக்க வேண்டியது அவசியம் என்று விளதீமிர் இலீச் கருதினார். இத்தகைய சமயங்களில் நெளிவு சுழிவு காட்டுவது அல்ல, உடனடியாக சக்தியைப் பிரயோகிப்பது அவசியமாய் இருந்தது. எனினும் பெருவாரியான கைதுகள் போன்றவை நடந்த இந்த நேரத்தில் கூட, அனாவசியமான சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டுத் தேவையான இடங்களில் நெளிவு சுழிவு காட்டினார். வலோக்தாவில் இருந்த ஆன்டான்ட் தூதர்களுக்கு அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினோம், மாஸ்கோவிற்கு வரும்படி ஆலோசனை கூறினோம். இதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் அவர்கள் ருஷ்யாவிலிருந்து சரியான முறையில் வெளியேறினார்கள். இது அவர்களது அரசுகளுடன் மேற்கொண்டு உறவாடுவதை எளிதாக்கியது. ஆன்டான்டுடன் உறவுகள் மிகவும் கூர்மையடைந்திருந்த இந்த நேரத்தில்தான் சமாதான ஆலோசனையுடன் நாம் ஆன்டான்டை அணுக வேண்டும் என்று முதல் தடவையாக விடாப்பிடியாக லெனின் சொன்னார். இங்கிலாந்துக்கு என்னதான் வேண்டும் என்று அமெரிக்கக் கான்சல் பூல் மூலமாக முதல் முறையாக அதனைக் கேட்டோம். பின்னர் நமது நண்பராக இருந்த, நார்வேத் தூதரகச் செயலாளர் ஹிருஸ்தியான்சென் மூலம் சமாதான ஆலோசனையை முறையாக அனுப்பினோம்....

ஆன்டான்ட் படைகளோ அதன் கூட்டணிப் படைகளோ வரும் வரை ஜெர்மானியப் படைகள் அவை இருக்கிற இடத்திலேயே இருக்க வேண்டும் என்றும், அவை

வந்த பின் ஆட்சி அவற்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அப்போது ஆன்டான்ட் கோரியது. ஜெர்மன் குடியரசு ஆன்டான்டின் முடிவை நிறைவேற்றியபடி சோவியத் குடியரசுக்கு எதிராகத் தலையிடுவதற்கான தயாரிப்புகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டது. காஜே*, காவுத்ஸ்கி ஆகியோரின் அரசியல் இப்படி இருந்தது. ஆனால் ஜெர்மானியப் படைகள் தமது தலைமையின் ஆணைகளை மதிக்காமல் வீடு நோக்கிப் போயின.

ஜெர்மன் படைகள் வெளியேறிய அதே நேரத்தில் தேசிய சோவியத் குடியரசுகள் உருவாக்கப்பட்டன. விளதீமிர் இலீச்சின் தேசிய வேலைத்திட்டம் முதல் முறையாக இங்கு நிறைவேறியது. ''முழுமையான பிரிக்க முடியாத'' வெண்காவல் படை ருஷ்யாவுக்கு ஆதரவு தருவது, அல்லது சிறிய தேசிய இனங்களிடம் எதிர்ப் புரட்சி இயக்கங்களைத் தோற்றுவிப்பது ஆகிய இரண்டுக்கும் இடையே சிக்கிக் கொண்டிருந்த நமது எதிரிகளின் மீது இது ஆழ்ந்த செல்வாக்குப் செலுத்தியது. ஆன்டான்ட் அரசியலின், குறிப்பாக பிரெஞ்சு அரசியலின் இந்த உள் முரண்பாடு நமது எதிரிகளுக்குப் பெருங்கேடாய் முடிந்தது.

எதிரிகளுக்கு நாம் விடுத்த செய்திகளில் சமாதான யோசனையை முன்வைக்குமாறு தலையீடு நடந்த காலம் முழுவதிலும் விளதீமிர் இலீச் விடாப்பிடியாக வற்புறுத்தி வந்தார். இது நமது பலவீனம் பற்றிய கருத்தை ஏற்படுத்தும் என்று அவர் ஒரு சிறிதும் அஞ்சவில்லை. மாறாக, ஆன்டான்ட் நாடுகளில் நிலவும் போர்க் குணம் மிக்க தலையீட்டு வாதத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்குச் சக்தி மிக்க சாதனங்களில் இது ஒன்று என்று அவர் கருதினார்.

பிரின்சேவ் தீவுகளில் நடக்கப் போகிற மாநாட்டுக்கு நமக்கு அழைப்பு வரவிருக்கிறது என்ற செய்தி கிடைத்தவுடனேயே, அழைப்பு வருவதற்காகக் காத்திருக்காமல்

---

* காஜே (1863—1919)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தலைவருள் ஒருவர், சந்தர்ப்பவாதி.—(ப-ர்.)

நமது சொந்த ஆலோசனையை ஆன்டான்டின் முன் வைப்பது அவசியம் என்று விளதீமிர் இலீச் எண்ணினர். ஆன்டான்டிற்குப் பொருளாதார லாபம் ஏற்படும் வாய்ப்பை வலியுறுத்துவது பற்றிய அவரது சிந்தனை வளர்ச்சியடைந்த வடிவில் முதன் முறையாக இப்போது முன்வைக்கப்பட்டது. விளதீமிர் இலீச்சின் வெளிநாட்டுக் கொள்கையில் பிரதானமானவற்றுள் ஒன்ருக இந்தச் சிந்தனை விளங்கியது. இது படிப்படியாக மேலும் மேலும் வளர்ச்சியடைந்தது. விளதீமிர் இலீச்சுடன் நடத்திய விவரமான விவாதங்களின் விளைவாக, 1919 பிப்ரவரி 4ல் அனுப்பிய குறிப்பில், நமது கடன்களை ஏற்றுக் கொள்வதற்கு நாம் முதன் முறையாக இணங்கினேம். இந்த இணக்கத்தை அமுல் படுத்துகிற முறையை இப்போது முடிவு செய்யாமல் விடுவது என்று கூறி சலுகைகள் குறித்த தொகுப்பை அப்போதே ஆன்டான்டிடம் முன்வைத்தோம். அமெரிக்க தூதுச் செய்தியாளர் புல்லித்திடம் வழங்கப்பட்ட ஆலோசனைகளில் இச்செயல்திட்டம் மேலும் வளர்ச்சி பெற்றது. நமது ஆலோசனைகளின் ஒவ்வொரு வார்த்தையும் விளதீமிர் இலீச்சால் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்த ஆலோசனைகள் அமுலிலிருக்கும் கெடு உடனே குறிக்கப்பட்டது. இதன் பின் இவை செல்லுபடி ஆக மாட்டா. அப்போது விளதீமிர் இலீச் சொன்ஞர்: ''இப்போது நமது ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ருல், இத்தகைய லாபகர நிபந்தனைகள் மறுபடியும் அவர்களுக்குக் கிட்டா.''

சில மாதங்கள் சென்றன. விளதீமிர் இலீச் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்டு தயாரித்த சமாதான ஆலோசனைகள், மீண்டும் உருவான முதலாளித்துவ பால்டிக் அரசுகள், பின்லாந்து ஆகிய நமது அண்டை நாடுகளின் முன் வைக்கப்பட்டன.... சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் மீண்டும் ஒரு திரும்பு முனையாக விளங்கியது இது. விளதீமிர் இலீச்சின் ஈடற்ற நெளிவு சுழிவும் அரசியல் எதார்த்தமும் முழுமையாக இதில் வெளிப்பட்டன. சோவியத் நாட்டுக்கு அருகில் முதலாளித்துவ தேசியக்

குடியரசுகள் முற்ருக உருவாகிவிட்ட உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. அண்டை நாடுகளுடன் சமாதான அரசியலுக்கும் நட்புறவுகளுக்கும் உறுதியாகவும் தெளிவாகவும் அடிப்படைகளை அவர் நிறுவிஞர். நம்முடன் முதன் முதலாக போர் நிறுத்த ஒப்பந்தமும் பின்பு சமாதான உடன்படிக்கையும் செய்து கொண்டது எஸ்தோனியா. தேவையற்ற எதிர்ப்புக்களை விலக்கி சமாதானத்திற்காக கணிசமான சலுகைகள் தந்து, அதே நேரத்தில் எதிர்த் தரப்பின் மிகையான கோரிக்கைகளை நிராகரித்து மீண்டும் பேச்சுவார்த்தைகளின் எல்லா விவரங்களிலும் எவ்வளவு கவனமாக விளதீமிர் இலீச் ஈடுபட்டார் என்று எனக்கு நினைவிருக்கிறது....

1919 இறுதியிலிருந்து ஆன்டான்டின் பெரிய அரசுகளுடன் உறவுகளை ருஷ்யா புதுப்பிக்கத் தொடங்கியது. நவம்பரில் தோழர் லித்வீனவ் கோப்பன்ஹேகனுக்குப் போனர், 1920 ஆரம்பத்தில் தோழர் கிராசின் லண்டனுக்குச் சென்ருர். எதிர்த் தரப்பு நமக்கு ஏதாவது வலை விரிக்காமல் மிக எச்சரிக்கையாகப் பார்த்துக் கொண்டு, ஒவ்வொரு ஆலோசனையையும் கவனமாகப் பரிசீலித்தபடி இங்கிலாந்துடன் வர்த்தக உடன்பாடு செய்து கொள்ளும் வழியை விளதீமிர் இலீச் உறுதியாகக் கடைப்பிடித்தார்.

மாநாடு நடத்துவது பற்றிய ஆங்கிலேய ஆலோசனையைத் தொடர்ந்து இந்த நேரத்தில் விளதீமிர் இலீச்சுடன் சுவாரஸ்யமான பலப்பல உரையாடல்கள் நடத்தினேன். குறிப்பிட்ட நேரத்தில் இந்த ஆலோசனை ஆங்கிலேய-பிரெஞ்சு ஆலோசனையாக மாறிற்று. இந்தக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை (விராங்கெலின் திடீர் அங்கீகாரம் வரை) சோவியத் ருஷ்யா குறித்து ஒரு மிதமான போக்கைக் கடைப்பிடித்த பிரான்ஸ், இங்கிலாந்துடன் சேர்ந்து சமாதான மாநாட்டுக்கு ஒத்துக் கொண்டது. இந்த ஆலோசனையால் நமக்கு வரவிருக்கும் பிரம்மாண்டமான லாபங்களை முழுமையாக மதிப்பீடு செய்தார் விளதீமிர் இலீச். எனினும் இதில் ஒரு பெரிய ''ஆனல்'' இருந்தது. சோவியத் குடியரசுக்கும் பால்டிக் அரசுகளுக்கும்

இடையிலுள்ள உறவுகளை இந்த மாநாடு விவாதிக்க வேண்டி இருந்தது. வேறு மாதிரியாகச் சொன்னால், நமது அண்டை நாடுகளுடன் நாம் கொள்ளுகிற உறவுகளுக்கு உயர் நடுவராக இருக்க ஆன்டான்ட் முயன்றது. இதன் காரணமாக ஆங்கிலோ-பிரெஞ்சு மாநாட்டு ஆலோசனையை நாம் முற்றிலும் சரியாக நிராகரித்தோம். ஜெர்மன் மூலதனத்துடன் பொருளாதார ஒத்துழைப்பைச் சரிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சிகளை அப்போதே மிக ஆழ்ந்த அக்கறையுடன் விளதீமிர் இலீச் அணுகினார்.

போலந்துடன் நடந்த பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்தில் விளதீமிர் இலீச்சுக்குத் தலைசிறந்த எண்ணம் ஒன்று தோன்றியது: கிளெமென்சோவும்* கர்சனும்** போலந்துக்கு வாக்களித்ததை விட அதிக அளவு பிரதேசத்தைத் தருவதாகப் போலந்திடம் கூறுவது என்பதே இந்த எண்ணம். ரீகாவில் பேச்சுவார்த்தைகள் நடந்த போது விளதீமிர் இலீச் தொலைபேசி மூலம் ஆலோசனைகளின் விவரங்களைப் பற்றி விவாதித்தார். இறுதியில் இப்போது இருக்கிற வடிவத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி வற்புறுத்தினார்.

நமது கிழக்கத்திய கொள்கையின் ஒவ்வொரு எட்டிலும் விளதீமிர் இலீச் காட்டிய பிரம்மாண்டமான அக்கறை பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஆப்கனிஸ்தானத்து விசேஷத் தூதுக் குழுவுடன் நடந்த அவரது நீண்ட நேரச் சந்திப்பு எனது நினைவுக்கு வருகிறது. துருக்கியுடன் நடந்த மாஸ்கோ மாநாட்டில் ஒவ்வொரு நாள்

---

* கிளெமென்சோ (1841—1929)—பிரான்சின் அரசியல் மற்றும் அரசுப் பிரமுகர். சோவியத் குடியரசுக்கு எதிரான முற்றுகையும் இராணுவத் தலையீடும் ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—(ப-ர்.)

** கர்சன் (1859—1925)—ஆங்கில அரசாளர், அரசுறவுத் துறையாளர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான வெளிநாட்டு இராணுவத் தலையீட்டை ஏற்பாடு செய்தவருள் முக்கியமானவர்.—(ப-ர்.)

மாலையிலும், அன்றைய தினம் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று தொலைபேசி மூலம் விளதீமிர் இலீச் துருவித் துருவிக் கேட்டதும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் தலைவிதியை மிக உயிர்ப்புள்ள அக்கறையுடன் அவர் அணுகியதும் எனக்கு நினைவுக்கு வருகின்றன. பாரசீக அரசாங்கத்துடன் நட்பு முறை உறவு கொள்கிற கொள்கையையும் அவர் விடாப்பிடியாகக் கடைப்பிடித்தார்.

1921ஆம் வருடம் இங்கிலாந்துடன் பூர்வாங்க உடன்பாடு செய்து கொள்வதற்கு முன்னால் இந்தப் பிரச்னை விளதீமிர் இலீச்சாலும் என்னாலும் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டும் என்று தீர்மானமாக வற்புறுத்தினார் விளதீமிர் இலீச். எனினும் 1921ல் வெளிநாட்டு அரசியலில் அவர் நேரடியாகப் பங்கு கொள்வது குறையத் தொடங்கியது. கூட்டு விவாதம் அந்த இடத்தை இறுதியாகப் பிடித்துக் கொண்டது. எல்லாக் காரியங்களின் விவரங்களையும் விளதீமிர் இலீச் புகுந்து ஆராய்வது முன்னை விட வெகுவாகக் குறைந்தது.

1921—1922 பனிக்காலத்தில் விளதீமிர் இலீச் நீண்ட காலம் ஊருக்கு வெளியே வாழ்ந்திருந்த போதிலும் ஜெனோவா மாநாடு கூட்டுவது பற்றிய பிரச்னைகளில் நெருக்கமாகவும் ஆர்வமுடனும் அக்கறை காட்டினார். இது பற்றி அவர் பல குறிப்புகள் எழுதினார். ஜெனோவாவில் சோவியத் பிரதிநிதிகள் நிகழ்த்திய பேச்சுக்களின் பொது உள்ளடக்கம் அவரது குறிப்புகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. பழைய கடன்கள் பற்றிய பிரச்னையின் தீர்வை நமக்குப் புதுக் கடன்கள் வழங்கப்படுவதுடன் இணைக்கும் எண்ணம் அவருடையதே. ஜெனோவாவுக்குக் கிளம்புவதற்கு முன்னால் மாநாட்டுத் தொடக்கத்தின் போது நிகழ்த்த வேண்டிய நமது உரையின் வாசகம் விவாதிக்கப்பட்டு, நமது முந்தைய பேச்சுக்களைப் போன்றே குற்றஞ் சாட்டும் வாக்கியங்களைச் சேர்க்குமாறு சொல்லப்பட்ட போது, விளதீமிர் இலீச் ஏறத்தாழப் பின்வருமாறு எழுதினார்: ''பயங்கர வார்த்தைகள் வேண்டாம்.''

1922 இலையுதிர்காலத்தில் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு மாஸ்கோவில் நான் ஆறு வாரம் தங்கினேன். துருக்கிப் பிரச்னை அப்போது பிரதானமாக இருந்தது. லோசான் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடந்தன. விளதீமிர் இலீச் மிகத் துடியாகப் பங்கு கொள்ள வேலைத் திட்டம் விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை லோசானில் நாங்கள் ஆதரித்துப் பேசினோம். சோவியத் அரசின் சர்வதேசக் கொள்கைக்கு அவர் செலுத்திய இறுதியான பெரிய பங்கு இது. ஜலசந்தி பற்றிய பிரச்னை விவாதிக்கப்பட்டதுதான் நான் அவருடன் நிகழ்த்திய கடைசி உரையாடல். இதுவே அவரை நான் கடைசியாகச் சந்தித்ததும் ஆகும்.

லெனினது அரசியல் தொலைநோக்கு

ஆல்பெர்ட் ரைஸ் வில்லியம்ஸ்

1918 வசந்தகாலத்தில், ஜெர்மனியில் புரட்சி நடக்கப் போவது சாத்தியம் எனும் சிந்தனையைக் கண்டு உலகம் முழுதும் நகைத்துக் கொண்டிருந்த போது, கெய்சரின் இராணுவம் கூட்டணி அரசுகளின் படைகளை பிரான்சில் சிதறடித்துக் கொண்டிருந்த போது, இந்த ஆண்டில் கெய்சரின் அரசு வீழ்ச்சியடைவதைக் காணலாம் என்று என்னுடன் பேசுகையில் லெனின் குறிப்பிட்டார். அவ்வாறே நடந்தது. ஒன்பது மாதங்கள் கழித்து கெய்சர் வில்ஹெல்ம் தனது சொந்த மக்களிடமிருந்தே தப்பி ஓடினார்.

நான் புறப்படுவதற்கு முன்னால் லெனினைப் பார்த்தேன். அப்போது ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தை என்னிடம் கொடுத்தார்:

''அமெரிக்கத் தோழர் ஆல்பெர்ட் ரைஸ் வில்லியம்ஸ் மூலமாக அமெரிக்க சோஷலிஸ்டு-அகிலத்தவர்கட்கு எனது வாழ்த்துக்களை அனுப்புகிறேன். நாகரிக நாடுகள் அனைத்திலும் இறுதியில் சமுதாயப் புரட்சி நிகழ்ந்தே தீரும் என்று உறுதியாக நம்புகிறேன். அமெரிக்காவில் அது நிகழும் போது ருஷ்யப் புரட்சியை அது பெரிதும் விஞ்சி விடும்.''

இந்தக் கடிதத்தை லெனின் வேகமாகவும் எளிதாகவும் ஒரேயொரு முறை மட்டும் நிறுத்தியும் எழுதினார். ''இறுதியில்'' என்ற வார்த்தைக்குப் பொருத்தமான ஆங்கில வார்த்தை அவருக்குக் கிட்டவில்லை. "ultimately" என்று நான் சொல்லிக் கொடுத்தேன்.

''ஆமாம், புரட்சி வெற்றி பெறும். சீக்கிரமாக இது நடக்கலாம், அல்லது''—அவர் தலை நிமிர்த்தி என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார்—"wltimately. இருபது வருடங்கள் இதற்குப் பிடிக்கலாம். எப்படியாயினும் நாங்கள் ஏற்கெனவே தொடங்கி விட்டோம். பாட்டாளி வர்க்கப் புரட்சி யுகத்துக்குள் உலகம் நிர்ணயமாக நுழைந்து விட்டது'' என்ருர் அவர்.

என்னிடம் கடிதத்தைக் கொடுத்தபடி லெனின் சொன்ஞர்:

''அமெரிக்காவுக்கு நீங்கள் எப்போது போகப் போகிறீர்கள்?'' (இது நடந்தது 1918 ஏப்ரலில்.)

''நான் இன்னும் நிர்ணயமாக முடிவு செய்யவில்லை'' என்றேன் நான்.

''விலாடிலாஸ்ட்டாக் வழியாக நீங்கள் போக நினைத்தால் விரைவாகப் புறப்படுங்கள். இல்லையேல் சைபீரியாவில் அமெரிக்க இராணுவம் உங்களைச் சந்திக்கும்.''

இத்தகைய சொற்களை மாஸ்கோவில் கேட்பது அப்போது மிகவும் விசித்திரமாக இருந்தது. ஏனெனில், புதிய ருஷ்யாவின்பால் அமெரிக்கா மிகவும் நட்பார்ந்த உணர்ச்சி கொண்டிருப்பதாக நாங்கள் அனைவரும் நம்பினோம்.

''அப்படி ஒன்றும் நடக்காது!'' என்று நான் மறுப்புக் கூறினேன். ''ரெய்மோன்ட் ராபின்ஸ்* கருத்துப்படி மிக விரைவில் சோவியத் அரசாங்கம் அமெரிக்காவால் அங்கீகரிக்கப்படும் என்பதற்கான நம்பிக்கை இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?''

''ஆமாம்'' என்ருர் லெனின். ''ஆனல் ராபின்ஸ் அமெரிக்க மிதவாத முதலாளித்துவத்தின் பிரதிநிதி. இது அமெரிக்கக் கொள்கையை நிர்ணயிப்பதில்லை. நிதி மூலதனம்தான் அமெரிக்கக் கொள்கையை வழிநடத்துகிறது. சைபீரியாவின் மீது ஆதிக்கம் அதற்கு வேண்டும். சைபீ

---

* ராபின்ஸ் ரெய்மோண்ட்—ருஷ்யாவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் அமெரிக்கப் பிரிவினது தலைவர்.—(ப-ர்.)

ரியாவைப் பிடித்துக் கொள்வதற்காக அது அமெரிக்கப் படைவீரர்களை அனுப்பும்.''

இத்தகைய கண்ணேக்கு நடக்காத ஒன்ருக எனக்குத் தோன்றியது. எனினும் 1918 ஜூன் 29ல், விலாடிவாஸ்ட்டாகில் அமெரிக்க மாலுமிகள் இறங்கியதை எனது சொந்தக் கண்களால் பார்த்தேன். அப்போது முடியரசுவாதிகளும் செக்கோஸ்லோவாக்கியர்களும் ஜப்பானியர்களும் மற்ற கூட்டணியாளர்களும் சோவியத் குடியரசின் கொடியை இறக்கி ஜார் ருஷ்யாவின் கொடியை ஏற்றினுர்கள்.

லெனினது முன்னறிவிப்புகள் அடிக்கடி இவ்வாறு நிறைவேறியதால் எதிர்காலம் பற்றிய அவரது கருத்து விசேஷ அக்கறையை எப்போதும் ஏற்படுத்திற்று. நோதோவுக்கு லெனின் அளித்த பிரசித்தமான பேட்டியின் சாரத்தை 1919 ஏப்ரலில் **நான்** என்ற பாரிஸ் பத்திரிகையில் வந்தபடி அப்படியே தருகிறேன்:

''எதிர்கால உலகமா?'' என்று திரும்பக் கேட்டார் லெனின். ''நான் தீர்க்கதரிசி அல்ல. உறுதியுடன் ஒன்று மட்டும் என்னுல் சொல்ல முடியும்: முதலாளித்துவ அரசு —இதற்கு இங்கிலாந்து உதாரணமாகத் திகழ்கிறது— மடிந்து கொண்டிருக்கிறது. பழைய அமைப்பு இனிப் பிழைக்காது. போர் தோற்றுவிக்கிற பொருளாதார நிலைமைகள் புதிய அமைப்புக்கு இட்டுச் செல்லும். மனித இனத்தின் வளர்ச்சி திரும்ப முடியாத விதத்தில் சோஷலிசத்துக்குப் போகும்.

''அமெரிக்காவில் ரயில்கள் தேசவுடைமையாக்கப்படும் என்று யார்தான் சில ஆண்டுகளுக்கு முன் நம்பியிருக்க முடியும்? தானியம் அனைத்தையும், அரசின் நலன்களுக்கு மிகச் சிறப்பாகப் பயன்படுத்தும் பொருட்டு, வாங்கி வைக்கிறது அரசாங்கம். அரசுக்கு எதிராக சொல்லப்படுவதெல்லாம் இந்தப் போக்கிற்குத் தடையாக இருக்கவில்லை. குறைகளைச் சரி செய்வதற்காக புதிய கண்காணிப்புச் சாதனங்களைக் கண்டுபிடிக்கவும் வகுக்கவும் வேண்டியது அவசியம். அரசு உயர் ஆட்சியாக இருப்பதைத் தடை

செய்ய முயல்வதெல்லாம் வீணே. ஏனெனில் வருவது வந்தே தீரும், சொந்தச் சட இயக்கத்தின் காரணமாக அது வரும். 'தின்றால் தெரியும் பணியார ருசி' என்று ஆங் கிலேயர்கள் சொல்வார்கள். சோஷலிசப் பணியாரம் எப்படி இருக்கிறது என்று நீங்கள் என்ன வேண்டுமானா லும் சொல்லுங்கள், ஆனால் எல்லா மக்களும் இப்பணி யாரத்தை ருசித்துப் பார்ப்பார்கள், மேலும் மேலும் ருசித்துப் பார்ப்பார்கள்.

''தொகுத்துச் சொல்வோம். ஒவ்வொரு மக்களினமும் தமது சொந்த விசேஷப் பாதையின் மூலம் சோஷலிசத் துக்குப் போகிறது. மாறுகின்ற வடிவங்களும் வழிகளும் பலவிதமாய் இருக்கும். ஆனால் இவையெல்லாம் ஒரே குறிக்கோளை நோக்கிச் செல்கிற புரட்சியின் பல்வேறு கட்டங்களே. பிரான்சிலோ ஜெர்மனியிலோ சோஷலிச அமைப்பு நிறுவப்பட்டால் அங்கு அவ்வமைப்பு ருஷ் யாவை விட எளிதாக நிலையுற்று வலுவுறும். ஏனெனில் ருஷ்யாவில் இல்லாத நிறுவனங்களின் வடிவங்களும், எல்லா விதமான அறிவுத் திறச் சாதனங்களும் வசதிகளும் சோஷலிசத்திற்கு மேற்கு நாடுகளில் கிட்டும்.''

1918 ஆகஸ்டு 30ல்

கில்

முதலில் நாங்கள் கூட்டம் நடந்த தானிய மார்க்கெட்டுக்குப் போனேம். அங்கு மக்கள் நிறைய இருந்தனர். கூட்டம் நல்ல முறையில் முடிந்தது. பின்பு மிஹெல்சோனின் முந்திய தொழிற்சாலைக்குப் போனேம். அது செர்பூஹோவ்ஸ்கயா தெருவில் இருந்தது. அங்கு நாங்கள் இருமுறை போய் வந்திருந்தோம். நேரடியாக முகப்புக்குள் நுழைந்தோம். முகப்பில் மக்கள் நிறைந்திருந்தனர். காரில் எங்களருகேயோ, முகப்பிலேயோ எத்தகைய பாதுகாப்பாளரும் இருக்கவில்லை. தொழிற்சாலைக் கமிட்டியினரோ வேறு யாருமோ விளதீமிர் இலீச்சை எதிர்கொள்ளவில்லை. காரிலிருந்து தன்னந்தனியாக இறங்கி அவர் தொழிற்கூடத்தை நோக்கி வேகமாகப் போனர். நான் காரைத் திருப்பி முகப்பிலிருந்து வெளியேறுவதற்கு வசதியாக, தொழிற் கூடத்திலிருந்து 10 எட்டு தூரத்தில் நிறுத்தினேன்.

10—15 நிமிடம் கழித்து கைப்பையுடன் ஒரு பெண் என்னருகே வந்தாள். பின்னர் நடந்த விசாரணையில் இவள் தான் கொலைகாரி கப்ளான் என்று தெளிவாயிற்று. அவள் என்னிடம் கேட்டாள்:

''லெனின் வந்து விட்டார் போலிருக்கிறதே!''

நான் பதில் சொன்னேன்:

''யார் வந்திருக்கிறர் என்று எனக்குத் தெரியாது....''

அவள் சிரித்து விட்டுச் சொன்னள்:

''அதெப்படி? நீங்கள் காரோட்டி, யாரைக் கூட்டிச் செல்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?''

''எனக்கு எப்படித் தெரியும்? ஏதோ பேச்சாளர். கொஞ்சம் பேரா போகிறுர்கள்! எல்லோரையும் தெரிந்து கொள்வது கஷ்டம்'' என்று அமைதியாக பதில் சொன்னேன்.

என்னிடமிருந்து அவள் போய்விட்டாள். தொழிற் சாலேக்குள் அவள் நுழைந்ததை நான் பார்த்தேன்.

நான் நினைத்தேன்: ''இவள் ஏன் என்னை நச்சரித்தாள்? எவ்வளவு விடாப்பிடியானவள்.'' யாரைக் கூட்டி வந்திருக்கிறோம், யார் வந்திருப்பது என்பதில் ஆர்வம் காட்டுபவர்கள் ஏராளமானவர்கள் அனேகமாக எப்போதும் இருந்த தாலும், சில வேளைகளில் ஆட்கள் காரைச் சூழ்ந்து அதனைக் கூர்ந்து பார்ப்பதுண்டு ஆகையாலும் இந்தப் பெண்ணின் வார்த்தைகளை நான் சட்டை செய்யவில்லை. எங்களிடம் ஒரேயொரு கருரான விதி மட்டும் இருந்தது: வந்திருப்பது யார், எங்கிருந்து வந்தார், அடுத்து எங்கே போகிறுர் என்பதை யாருக்கும் ஒருபோதும் சொல்லக் கூடாது. ஒரு மணி நேரம் கழித்து, என்று நினைக்கிறேன், முதல் பெரும் மக்கள் கூட்டம்—அதிகமாகத் தொழிலாளர்கள்—வந்தது. கூட்டம் முகப்பு முழுவதையும் அனேகமாக நிறைத்தது. கூட்டம் முடிந்து விட்டதென்று தெரிந்து கொண்ட நான் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்தேன். காரை ''ஸ்டார்ட்'' செய்தேன். சில நிமிடங்கள் கழித்து மற்றொரு பெரும் கூட்டம் தொழிற்சாலேயிலிருந்து வெளியே வந்தது. இக்கூட்டத்தின் நடுவில் லெனின் நடந்து வந்தார். நான் காரோட்டி இருக்கையில் அமர்ந்து கியரைப் போட்டேன். தம்மிடம் பற்பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களுடன் விளதீமிர் இலீச் பேசிக் கொண்டிருந்தார். காரை நோக்கி அவர் மிகவும் மெதுவாக நடந்து கொண்டிருந்தார். காருக்கு மூன்று எட்டு தூரம் இருக்கையில் அதன் கதவுக்கு எதிரே நின்று காரில் அமரத் தயாரானுர். கூட்டத்திலிருந்த ஒருவர் கதவைத் திறந்து விட்டார். இந்த நேரத்தில் இரண்டு பெண்களுடன் விளதீமிர் இலீச் பேசிக் கொண்டிருந்தார். உண்டிப் பொருள்களைக் கொண்டு செல்வது

பற்றி அவர்களுக்கு அவர் விளக்கினுர். நான் விளதீமிர் இலீச்சின் பின்கண்ட வார்த்தைகளேக் கேட்டேன்:

''கொள்ளை லாப வேட்டைக்கு எதிரான படைகள் பல தவருன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பது உண்மையே. ஆனுல் இதெல்லாம் சந்தேகத்திற்கிடமின்றி மறைந்து போகும்.''

பேச்சு இரண்டு-மூன்று நிமிடம் நீடித்தது. விளதீமிர் இலீச்சின் பக்கவாட்டில் இன்னும் இரண்டு பெண்கள் நின்றிருந்தனர். அவர்கள் அவரை நோக்கிச் சற்று முன்னுக்கு நகர்ந்திருந்தார்கள். விளதீமிர் இலீச் கூட்டத்தால் நெருக்கமாகச் சூழப்பட்டிருந்தார். காரை நோக்கிக் கடைசி எட்டுக்களை எடுத்து வைக்க அவர் விரும்பிய போது திடீரென்று வெடிச் சத்தம் கேட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் உடலைப் பாதி திருப்பி விளதீமிர் இலீச்சைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெடிச் சத்தம் வந்த திசையை நோக்கி ஒரு கணத்தில் தலையைத் திருப்பிய நான் காரின் முன்பக்கத்து இடது புறம் ஒரு பெண்ணைக் கண்டேன். அவள் விளதீமிர் இலீச்சின் இடது தோள் பட்டைக்குக் குறி வைத்திருந்தாள். ஒன்றுக்குப் பின் ஒன்ருக இன்னும் இரண்டு குண்டுகள் வெடித்தன. நான் கார் எஞ்சினை உடனே நிறுத்திவிட்டு, கைத் துப்பாக்கியை எடுத்து விரைவாக அவளது தலையை நோக்கிக்குறி வைத்தவாறு அவள் மேல் பாய்ந்தேன். அவள் ரிவால்வரை எனது காலின் பக்கம் வீசிவிட்டு வெளிவாசலை நோக்கிக் கூட்டத்துக்குள் புகுந்து ஓடினுள். சுற்றிலும் ஏராளமான மக்கள் நின்றிருந்ததால் நான் அவள் ஓடும்போது சுடத் துணியவில்லை. ஏனெனில் தொழிலாளர்களில் யாரையாவது கொன்று விடுவேன் என்று உணர்ந்தேன். அவளைப் பின்தொடர்ந்து சில எட்டுகள் ஓடினேன். திடீரென்று எனக்கு நினைவு வந்தது: ''விளதீமிர் இலீச் தனியாக இருக்கிருரே... அவருக்கு என்ன ஆயிற்று?'' நான் நின்றேன். ஒரு விஞடி அமைதி நிலவியது. பின்னர் எல்லோரும் கூச்சலிட்டார்கள்: ''கொன்று விட்டார்கள், கொன்று விட்டார்கள்...'' திடுக்கிட்ட கூட்டம் நெருக்கியது. பயங்கர நெரிசல் தோன்றியது. நான்

திரும்பிப் பார்த்தேன். விளதீமிர் இலீச் நிலத்தில் விழுந்து கிடந்தார். நான் அவரிடம் ஓடினேன். இந்த நேரத்தில் சுட்டவள் கூட்டத்திற்குள் மறைந்து விட்டாள்.

நான் விளதீமிர் இலீச்சை நெருங்கி முழந்தாள் படியிட்டு அவரிடம் குனிந்தேன். அவர் நினைவிழக்கவில்லை. அவர் கேட்டார்:

''அவனைப் பிடித்து விட்டார்களா இல்லையா?''

அவரைச் சுட்டது ஓர் ஆண் என்றே அவர் நினைத்திருக்கிறார்.

கடுமையாக மாறிப் போன கம்மிய குரலில் அவர் பேசியதைக் கேட்ட நான் அவரிடம் சொன்னேன்:

''சும்மா இருங்கள். பேசாதீர்கள். உங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது....''

அந்தக் கணம் தலையை நிமிர்த்திய நான் பார்த்தேன்: மாலுமித் தொப்பி அணிந்த விசித்திர தோற்றம் கொண்ட ஒரு மனிதன் மிகவும் கிளர்ச்சியுள்ள நிலையில் தொழிற் கூடத்திலிருந்து ஓடினான். அவன் இடது கையைக் காற்றில் வீசிக் கொண்டிருந்தான். வலக் கையைச் சட்டைப் பைக்குள் விட்டிருந்தான். விளதீமிர் இலீச்சை நோக்கித் தலை தெறிக்க ஓடி வந்தான்.

அவனது உருவம் முழுதும் மிகவும் சந்தேகத்துக்குரியதாக எனக்குத் தோன்றியது. என் உடலால் விளதீமிர் இலீச்சை, குறிப்பாக அவரது தலையை, மூடிக் கொண்டேன். அனேகமாக அவர் மீது நான் படுத்திருந்தேன். நான் பலங் கொண்ட மட்டும் கத்தினேன்:

''நில்!'' என்றபடி அவனை நோக்கி ரிவால்வரை நீட்டினேன்.

அவன் தொடர்ந்து ஓடி வந்து எங்களை மேலும் மேலும் நெருங்கினான்.

நான் அப்போது கூச்சலிட்டேன்:

''நில்! சுடுகிறேன்....''

விளதீமிர் இலீச்சுக்கு ஒரு சில எட்டுகளே இருக்கையில் அவன் விருட்டென்று இடது புறம் திரும்பி, சட்டைப் பையிலிருந்து கையை எடுக்காமல் வெளி வாயிலை நோக்கி

ஓடத் தொடங்கினன். அந்த நேரத்தில் என் பின்னலிருந்து ஏதோ ஒரு பெண்மணி ஓடி வந்தாள். அவள் கூச்சலிட்டாள்:

''என்ன செய்கிறீர்கள்! சுடாதீர்கள்!''—நான் விளதீமிர் இலீச்சைச் சுடுகிறேன் என்று அவள் நினைத்திருக்க வேண்டும். அவளுக்கு நான் இன்னும் பதில் சொல்லவில்லை. அப்போது தொழிற்கூடத்திலிருந்து ஏதோ ஓர் ஆணின் கூச்சல் கேட்டது: ''இவர் நம்மவர்! நம்மவர்!'' தொழிற்கூடத்திலிருந்து ரிவால்வர்களைக் கைகளில் பிடித்தபடி மூன்று பேர் விளதீமிர் இலீச்சை நோக்கி ஓடி வந்ததைக் கண்டேன். நான் மீண்டும் கத்தினேன்:

''நில்லுங்கள்! யார் நீங்கள்? சுடப் போகிறேன்....''

அவர்கள் உடனே பதில் சொன்னார்கள்:

''நாங்கள் தொழிற்சாலைக் கமிட்டிக்காரர்கள், நண்பரே! நம்மவர்கள்....''

முன்பு தொழிற்சாலைக்கு வந்த போது கண்டிருந்த ஒருவரை அடையாளம் தெரிந்து கொண்ட நான் விளதீமிர் இலீச்சை நெருங்குவதற்கு அவர்களை விட்டேன். இதெல்லாம் மிக வேகமாக, ஒரு சில நிமிடங்களில் நடந்தது.

நான் விளதீமிர் இலீச்சை அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்று அவர்களில் ஒருவர் என்னை வற்புறுத்தினர்.

நான் தீர்மானமாகச் சொன்னேன்:

''எந்த மருத்துவமனைக்கும் கூட்டிச் செல்லப் போவதில்லை. வீட்டுக்குக் கூட்டிச் செல்கிறேன்.''

எங்கள் பேச்சைக் கேட்ட விளதீமிர் இலீச் சொன்னர்:

''வீட்டுக்கு, வீட்டுக்கு.''

நானும் கமிட்டித் தோழர்களும்—அவர்களில் ஒருவர் இராணுவக் கமிசாரகத்தைச் சேர்ந்தவர்—எழுந்து நிற்க விளதீமிர் இலீச்சுக்கு உதவினோம். எங்கள் உதவியுடன் கார் வரை அவரே சில எட்டுகள் நடந்தார். காரில் ஏறுவதற்கு அவருக்கு நாங்கள் உதவினோம். காரின் பின் இருக்கையில் தமது வழக்கமான இடத்தில் அவர் அமர்ந்தார்.

இரண்டு தோழர்கள் காரில் ஏறினார்கள். ஒருவர் என்னருகிலும் மற்றவர் பின் இருக்கையிலும் அமர்ந்தனர். பாதை அனுமதித்த அளவுக்கு மிக வேகமாக நான் கிரெம்ளினுக்குப் போனேன். பின்னே திரும்பிப் பலமுறை விளதீமிர் இலீச்சைப் பார்த்தேன். பாதி தூரம் சென்ற பின் அவர் உடல் முழுதையும் இருக்கையில் வைத்துக் கொண்டு பாதி படுத்திருந்தார். அவர் முனகவில்லை, எத்தகைய ஒலியும் எழுப்பவில்லை. அவரது முகம் வெளிறிப் போயிருந்தது. உள்ளே அமர்ந்திருந்த தோழர் அவரை லேசாகத் தாங்கிப் பிடித்திருந்தார். திரோயித்ஸ்கி வாயிலில் நான் காரை நிறுத்தவில்லை. வாயில் காப்போரை நோக்கி ''லெனின்'' என்று கத்தி விட்டு விளதீமிர் இலீச்சின் வீட்டை நோக்கி கட்டிடத்தின் பின்வாசலுக்குக் காரை ஓட்டினேன். இங்கு நாங்கள் மூவரும் காரிலிருந்து வெளியே வருவதற்கு விளதீமிர் இலீச்சுக்கு உதவினோம். நாங்கள் பிடித்துக் கொள்ள, கஷ்டப்பட்டு அவர் வெளி வந்தார். வலியால் அவதிப்பட்டார் என்று தெரிந்தது, ஆயினும் ஒரு சத்தமும் செய்யவில்லை. நாங்கள் அவரிடம் சொன்னோம்:

''நாங்கள் உங்களைச் சுமந்து செல்கிறோம்....''

அவர் ஒரேயடியாக மறுத்தார். சுமந்து செல்ல விடும்படி நாங்கள் அவரைக் கெஞ்சி, மன்றாடினோம். ஆனால் என்ன சொல்லியும் அவர் கேட்கவில்லை. அவர் உறுதியாகச் சொன்னார்:

''நானே நடந்து போகிறேன்...'' பின்பு என்னைப் பார்த்துச் சொன்னார்: ''என் கோட்டைக் கழற்றி விடுங்கள், நடப்பதற்கு எனக்கு அப்போது எளிதாய் இருக்கும்.''

நான் கவனமாக அவரது கோட்டைக் கழற்றினேன். எங்கள் மீது சாய்ந்தபடி செங்குத்தான படிகளில் ஏறி அவர் இரண்டாவது மாடிக்குச் சென்றார். முற்றிலும் அமைதியாக அவர் படியேறினார். கதவை நெருங்கி மணியை அழுத்தினோம். கதவு திறக்கப்பட்டது. அவரை நேராகப் படுக்கையறைக்குக் கூட்டிச் சென்று கட்டிலில் படுக்க வைத்தேன். அவரது சட்டையைக் கழற்ற விரும்பினேன்,

ஆனால் அது இயலாது போகவே அதனைக் கிழித்து எடுத்தேன்.

இந்த நேரத்தில் மரியா இலீனிச்னா வந்தார். ''என்ன நடந்தது?'' என்று கூச்சலிட்டபடி முதலில் அவரிடமும் பின்னர் என்னிடமும் ஓடி வந்தார்:

''போன் செய்யுங்கள், சீக்கிரம், சீக்கிரம்!''

விளதீமிர் திமீத்ரியெவிச் போன்ச்-புருயேவிச்சுக்கு நான் போன் செய்து நடந்ததை எல்லாம் விளக்கிச் சொன்னேன். அப்போது மரியா இலீனிச்னா மக்கள் கமிசாரவைக்கு ஓடினார். அங்கிருந்து வினகூரவ் அவருடன் வந்தார்.

விளதீமிர் திமீத்ரியெவிச்சுக்கு நான் போன் செய்த பின்பு, நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்கு முடிந்த அளவு எச்சரிக்கையாகத் தகவல் தரும்படி மரியா இலீனிச்னா என்னைக் கேட்டுக் கொண்டார். அப்போது நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா கமிசாரகத்தில் இருந்தார். முகப்புக்கு நான் இறங்கி வந்த போது, மக்கள் கமிசாரவையிலிருந்து ஒருவர் என்னை எட்டிப் பிடித்து, நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்குத் தகவல் தருவதற்காகச் செல்ல என்னுடன் வந்தார். நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்காக நாங்கள் முகப்பில் காத்திருந்தோம். அவர் சீக்கிரமே வந்து சேர்ந்தார். அவரை நான் நெருங்கிச் சென்ற போது, என்னுடைய பதற்றம் நிறைந்த முகத்தைக் கண்ட அவர் ஏதோ நடந்திருக்கிறது என்று ஊகித்துக் கொண்டு, அப்படியே நின்று, என் கண்களை ஊடுருவிப் பார்த்தபடிச் சொன்னார்:

''ஒன்றும் சொல்லாதீர்கள், உயிருடன் இருக்கிறாரா, கொல்லப்பட்டு விட்டாரா, என்று மட்டும் சொல்லுங்கள்....''

''சத்தியமாகச் சொல்கிறேன், அவருக்கு லேசாகக் காயம் பட்டிருக்கிறது'' என்று நான் பதிலளித்தேன்.

ஒரு கணம் அவர் நின்று விட்டு மாடிக்குச் சென்றார். நாங்கள் மௌனமாக அவரைப் பின்தொடர்ந்தோம். வீட்டுக்குள் நுழைந்தோம். நான் இங்கு சில நிமிடங்கள் தங்கியிருந்து பின்னர் வீடு திரும்பினேன்....

சிந்தனையாளர், புரட்சியாளர்

கிரிஸிஸானவ்ஸ்கி

என்னுடன் நட்பு முறையில் உரையாடுவதற்கு விளதீமிர் இலீச் ஒதுக்கிய ஓய்வு நேரத்தின் சில நிமிடங்களில், கடினமான வேலைகளிலிருந்து விளதீமிர் இலீச்சின் கவனத்தைத் திருப்புவதற்கு விஞ்ஞானத் தகவல்களையும் குறிப்பாகத் தொழில் நுட்பத்தின் தொடர் வெற்றிகளையும் பற்றிய பேச்சைவிடச் சிறப்பானது வேறெதுவும் இல்லை என்று அறிந்திருந்தேன். இந்த வெற்றிகளின் வரிசையில், நேரடியாக ருஷ்யாவில் அமுல்படுத்தக் கூடியவையே முதற்கண் அவரது அக்கறையைக் கவர்ந்தன என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் விளதீமிர் இலீச் என்ற மனிதரில், ஆழ்ந்த சிந்தனையாளரும் தீவிரமான புரட்சியாளரும் அசாதாரணமாக ஒன்று கலந்திருந்தனர். இந்த இரண்டாவது பண்பு இடையறாது அவரை இறுதி வரை செயலில் ஈடுபடுத்திற்று, சரியான கருத்திற்குத் தடையாக இருக்கின்ற அனைத்தையும் நிர்மூலமாக்கத் தூண்டிற்று. போராட்ட நிகழ்ச்சிப் போக்கு அவருக்கு மிகவும் பிடித்தமான இயற்கையாக இருந்தது. கோட்பாட்டு வகையானது என்று தோன்றக் கூடிய பேச்சின் ஒரு பகுதியை மும்முரமான நடைமுறையின் ஆழத்திற்கு அவரால் இட்டுச் செல்ல முடிந்தது. நமது எதார்த்த நிலைமைகளில் இத்தகைய மும்முரமான நடைமுறையே நமக்குத் தேவையாக இருந்தது, இருக்கிறது.

சோவியத் ருஷ்யாவின் பணியாளர்களைப் பொருளாதாரத் துறையில் உண்மையான முன்னோடிகளாக அக்டோபர் புரட்சி ஆக்கியிருந்தது. பிரம்மாண்டமான நாடு

நூற்றுண்டுத் தூக்கத்திலிருந்து புரட்சியால் அப்போது தான் தட்டியெழுப்பப்பட்டிருந்தது. நமது இயற்கை வளங்களை அறிந்து கொள்வதில் நாம் உண்மையிலேயே தொடக்க நிலையிலிருந்தோம். இவற்றிலெல்லாம் முழுமை யான அறிவு பெற்றவராகத் திகழ்ந்தார் விளதீமிர் இலீச். அவர் சரியான தத்துவத்திலிருந்து தேவையான நடை முறைக்குத் தீர்மானமாக மாறுவதற்கு வேறு எவரையும் விட அதிகாரம் பெற்றிருந்தார், புதிய சோவியத் ருஷ்யா வின் பேறுகால வேதனையைக் குறைக்க யாவரிலும் சிறந்த திறமை வாய்ந்திருந்தார். அவருடன் நடத்திய கடிதப் போக்குவரத்தை இப்போது மிகக் கவனமாகப் பார்க்கை யில், அவரைப் பற்றிய நினைவுகளைக் கிளறுகையில், எத்த கைய பிரமாண்டமான முந்து திறனுடன், மேதைக்கு இயல்பான முந்து திறனுடன் இந்த மனிதர் வேலை செய் தார் என்பதும், உண்மை பற்றியும், அறியப்படாத முழுமைக்கும் பகுதிகளுக்கும் உள்ள தகவுப் பொருத்தம் பற்றியும் எத்தகைய அசாதாரண நுண்ணுணர்வு கொண் டிருந்தார் என்பதும், அவருடைய தவருகத் தோன்றிய ஒன்றில் தவறு செய்தவர் அடிக்கடி அவர் அல்ல, அவருடைய உடனுழைப்பாளர்களான நாம் மட்டுமே என்பதும் இப்போது தெளிவாகத் தெரிகின்றன.

மிகவும் சிக்கலான தொழில் நுணுக்கப் பிரச்னைகளை மிக வேகமாக விளதீமிர் இலீச் புரிந்து கொண்டதைக் கண்டு, மாணவப் பருவத்தில் தொழில் நுணுக்கத்தை அன்றி சட்டத் துறையை அவர் படிக்க நேர்ந்ததால் எங்களுக்கு இப்போது பெரிய இழப்பு நேர்ந்திருக்கிறது என்று நான் வேடிக்கை செய்வேன். தொழில் நுணுக்கச் சாரத்தை விளதீமிர் இலீச் மிக விரைவாகப் புரிந்து கொண்டார் என்பது மட்டுமின்றி, முதன்மையாகவும் எல்லாவற்றுக்கும் மேலாகவும் அவர் துடியான இயல்பு கொண்டிருந்ததாலும் எல்லோருக்குமே அதைரியத்தைத் தரக் கூடிய தடைகளுடன் அவர் இடைவிடாது போராடத் தயாராயிருந்ததாலும்தான், தொழில் நுட்பத் துறையில் நாட்டை மறு நிர்மாணம் செய்வதில் பெரு நம்பிக்கை

கொண்டிருந்த தொழில் நுட்ப வல்லுனர்களான எங்களுக்கு அவர் நல்கிய ஒத்துழைப்பு மதிப்பிடற்கரியதாக இருந்தது. உண்மையான தொழில் நுட்ப வல்லுனர் என்பவர் முதற்கண் இடைவிடாத போராட்ட வீரர் என்பது உண்மையானுல், தொழில் நுட்பப் படைப்புக்கு விளதீமிர் இலீச்சிடம் பிரம்மாண்டமான வாய்ப்புகள் இருந்தன என்பதில் சந்தேகமில்லே.

இடர் நிறைந்த 1921ஆம் வருடம் கொடுமையான பஞ்ச காலம். விளதீமிர் இலீச்சுக்குக் கிடைத்த சோதனைகள் நிறைந்த கிண்ணத்தில், அவரது சக்தியைக் குலேக்கும் வண்ணம் கடைசித் துளியாக இது விழுந்து அக்கிண்ணத்தை நிரப்பியது.

வதை செய்யும் தூக்கமின்மை அவரது வாழ்க்கையை அப்போதே நஞ்சால் நிறைத்துக் கொண்டிருந்தது. விளதீமிர் இலீச்சின் உடல் நிலே 1922 வசந்தத்தில் மிக மோசமாகி இருந்தது. எனவே நீண்டகால விடுமுறையும், தட்ப வெப்ப நிலே மாற்றச் சிகிச்சையும் அவருக்கு நல்க வேண்டிய அவசியம் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியதாயிற்று. வேலேத் திட்டம் சரியாகவே வகுக்கப்பட்டிருந்தது. ஆனுல் அதனே நிறைவேற்ற முடியாமையால் நாங்கள் பெருந்துயர் அடைந்தோம். மிகத் துரிதமான வேகத்தில் நோய் முன்னேறியது, எங்களே முந்திக் கொண்டது. எனினும் குறித்த பயணத்துக்கு முதல் நாள், 1922 ஏப்ரல் 6ல் விளதீமிர் இலீச் எனக்கு எழுதினுர்:

''கூர்ஸ்க் குபேர்னியாவில் இது வரை காணுத இரும்புக் கனி வளம் இருப்பது 'நிரூபிக்கப் பட்டிருக்கிறது' ('அனேகமாக' என்று நீங்கள் சொன்னீர்கள்) என்று நேற்று மார்தென்ஸ் என்னிடம் கூறினுர்.

''அப்படியானுல் வசந்த காலத்திலேயே 1) அவசியமான குறுகிய இருப்புப் பாதை அங்கு போட வேண்டாமா?

''2) அருகிலிருக்கிற சதுப்பு நிலத்தை (அல்லது சதுப்பு நிலங்களே) அங்கு மின் நிலேயம் நிறுவுவதற்குத் தயார் படுத்த வேண்டாமா?

''இந்தக் கருத்துக்கள் உங்களுக்கு அனுவசியமாகத் தோன்றுவிட்டால் அது பற்றி மார்தென்சுக்கு (எனக்கும் இரண்டு வார்த்தைகள்) எழுதுங்கள்.

''மார்தென்ஸ் அங்கு ஒரு மூன்று வாரங் கழித்துப் போக விரும்புகிறார்....

'' விசேஷமான ஊக்கத்துடன் இந்த வேலையைச் செய்ய வேண்டும். மும்முறை சரிபார்க்கவில்லையேல் வேலை மந்தப்பட்டுவிடும் என்று நான் அஞ்சுகிறேன்.''*

இன்னொரு எடுத்துக்காட்டான ஆவணம் என் முன்னே இருக்கிறது. முற்று ஈர நிலக்கரியைக் கண்டுபிடித்த வரும் 1890ஆம் ஆண்டுகளிலேயே விளதீமிர் இலீச்சுக்கு அறிமுகமாயிருந்தவருமான கிளாஸ்ஸன் முற்று நிலக்கரித் துறைத் தலைவருக்கு ஒரு நகலுடன், வெளி வர்த்தகப் பிரிவுக்கு, ஏழு முழுப் பக்கங்கள் கொண்ட விவரமான கடிதம் ஒன்று எழுதினார். தமது திட்டத்தை நிறைவேற்று வதற்குக் குறுக்கே நிற்கிற தடைகள் பற்றி அவர் புகார் கூறியிருந்தார். தாம் மேற்கொண்டிருந்த வெளி நாட்டுப் பயணத்தையும், ஜெர்மனியில் தாம் கண்ட முற்று நிலக்கரி எடுக்கும் தொழில்நுட்பப் புதுமைகளை யும் கடிதத்தில் கிளாஸ்ஸன் விவரித்திருந்தார். முற்று ஈர நிலக்கரியை 60% ஈரம் வரை பிழிந்து தரக் கூடிய ''மத் ருக்'' அழுத்து இயந்திரங்கள் பற்றியும் இதில் சொல்லி யிருந்தார். விளதீமிர் இலீச்சிடமிருந்து இந்தக் கடிதம் எனக்கு வந்தது. இந்த ஏழு பக்கங்களையும் பலப்பல வித மான ஒற்றை அடிக்கோடுகள் இரட்டை அடிக்கோடுகள் இட்டும், ஓரங்களில் குறிப்புகள் எழுதி, ஆச்சரியக் குறிகள் கேள்விக் குறிகள் இட்டும் வைத்திருந்ததைப் பார்க்க வேண்டுமே. தமது கடிதத்தின் ஒவ்வொரு வார்த்தையும் இத்தகைய பெருத்த கவனத்துடன் ஆராயப்படும் என்று கிளாஸ்ஸனே கூட அனேகமாக எதிர்பார்த்திருக்க மாட் டார். ஜெர்மன் கம்பெனிகள் நாம் செலுத்த வேண்டு மென்று கேட்டிருந்த விலைகள் மிக மிக அதிகம் என்று

* V. I. Lenin, *Collected Works*, "To G. M Krzhizhanovsky", Vol. 35, p. 551.—(ப-ர்.)

விளதீமிர் இலீச் கிளாஸ்ஸனுக்கு மாருகக், கருத்து தெரிவித்திருந்தார் என இந்தக் குறிப்புகள் காட்டுகின்றன. எனினும் நான் எவ்வளவு மறுத்துச் சொல்லியும் முற்ரு ஈர நிலக்கரியைப் பிழியும் இந்த முறையை மாஸ்கோவிற்கு அருகே பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று அவர் வற்புறுத்திஞர். 60% ஈரம் பெருத்த முன்னேற்றம் எனக் கருதலாம் என்றும், மேற்கொண்டு முற்ரு நிலக்கரியை உலர்த்துவது ஒப்பீட்டு அளவில் எளிதே என்றும் கிளாஸ்ஸன் ஏன் நினைக்கிருர் என்று அவர் என்னைத் துருவித் துருவிக் கேட்டார். இந்தக் கடிதம் பெர்லினிலிருந்து 1921 மார்ச்சு 23ல் கிளாஸ்ஸனுல் அனுப்பப்பட்டிருந்தது. அப்போது இந்த துரதிருஷ்டமான வருடத்தில் வசந்த கால விதைப்புக்குப் பெருத்த இடையூறு நேர்ந்திருந்த நேரம். நேரில் கண்டவர்களின் கூற்றுப்படி எப்போதும் இல்லாத வசந்தகால வெப்பம் கருமேகமற்ற வானத்தைக் கவலையுடன் அடிக்கடி பார்க்கும்படி விளதீமிர் இலீச்சை அப்போது நிர்ப்பந்தித்தது....

''ருஷ்யாவை அரசுத்துறையில் மின்மயமாக்கும் மாபெரும் ஆரம்ப கர்த்தர், ஊக்குவிப்போர்'' என்று விளதீமிர் இலீச்சைப் பற்றிச் சொன்ஞர்கள். இந்த வார்த்தைகளில் மிகை ஏதுமில்லை. சோவியத்துக்களின் 8ஆவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் மின்மயமாக்கல் பற்றிய அறிக்கையைச் சேர்த்தது முற்றிலும் விளதீமிர் இலீச்சின் வேலையே. இதனை செயல்படுத்துவது அப்படி ஒன்றும் எளிதாயிருக்கவில்லை என்று என்னுடன் நடத்திய உரையாடல்களில் ஒன்றில் அவர் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டிஞர். ருஷ்யாவை மின்மயமாக்கும் அரசுக் கமிஷனின் வேலையே ஒரு விதத்தில் கட்சியின் வேலைத் திட்டமாக இருக்க வேண்டும் என்று 8ஆவது காங்கிரசில் விளதீமிர் இலீச் சொன்னது அப்போது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இனிமேல் நடக்கப் போகும் காங்கிரசுகளில் இஞ்சினீயர்கள், விவசாய நிபுணர்கள், சோவியத் ருஷ்யாவின் கட்டுமான வேலையில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் ஆகியோர் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் வழக்கமான விஷய

மாக ஆகி விடும் என்று விளதீமிர் இலீச் அறிவித்தவுடன் பெருத்த கரவொலி எழுந்தது.

எங்கள் தொழில் நுட்ப இயலார் வட்டாரத்தில் மின் மயமாக்கல் பற்றிய சிந்தனை வெகு காலத்துக்கு முந்தியே முதிர்ச்சியுற்றிருந்தது. மின்சக்தி வினியோகம் உண்மையில் வளர்ச்சியடைந்ததும், மின் தொழில் நுட்ப இயலாரின் அனைத்து ருஷ்யக் காங்கிரசுகளில் ஏராளமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதும் இதற்குச் சான்று பகர்கின்றன. 1912லேயே மாஸ்கோவுக்கு அருகில் பெரிய வட்டார மின் நிலையம் ஒன்று பிரம்மாண்டமான முற்று நிலக்கரிப் பிரதேசமான பகரோத்ஸ்க் பகுதியில் கட்டுவதற்கான திட்டம் வரையப்பட்டிருந்தது. முற்று நிலக்கரி எடுப்பது, மாஸ்கோ நகர்ப்புற நிலக்கரிப் படிவங்களைப் பயன்படுத்துவது ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் காங்கிரசில், முற்று நிலக்கரியைப் பயன்படுத்தும் வட்டார மின் நிலையங்கள் கட்டுவது ருஷ்யாவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றி 1915ல் ஒரு சிறப்பு அறிக்கையை நான் சமர்ப்பிக்க நேர்ந்தது. புஹ்கெய்ம் என்ற இஞ்சினீயரின் ருஷ்யாவின் பொருளாதார விடுதலைக்காக எனும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சிற்றேடு 1915ஆம் ஆண்டிலேயே வெளிவந்தது. ''ருஷ்யப் பிரதேசத்தை மின்மயமாக்குவது'' இந்த விடுதலை எய்துவதற்கான வழி என்று சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பின்கண்ட வரிகளும் உள்ளன: ''ருஷ்யா மின் மயமாக்கப்படுவது ஒரு காலத்தில் தள்ளி வைக்கப்பட முடியாத அத்தியாவசியத் தேவையாகி விடும். நாடு முழுதுக்கும் பொது நன்மைகளும் உற்பத்தித் திறனும் உயர்வடைவதற்கு இது அவசியமாகி விடும்....''

மின்மயமாக்கலுடன் தொடர்புடைய நமது பொருளாதாரத்தின் பலவிதமான முன்னேற்றங்களைப் பற்றிய கருத்துக்கள் முதல் உலகப் போருக்கு முன்னரே நெடுங் காலமாகச் சர்ச்சையில் இருந்தன என்று காட்டி நிரூபிக்கத்தக்க எத்தனையோ உதாரணங்களைத் தர முடியும்.

ஆயினும், நமது பொருளாதாரக் கட்டுமானத்தினது

மின்மயமாக்கலின் வீச்சு அனைத்தும் ஒன்றித்த சோஷலிசப் பொருளாதாரத் திட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியே என்பதும், இதெல்லாம் விளதீமிர் இலீச்சிடமிருந்தே தோன்றியது என்பதும், வீச்சிலும் தரத்திலும் அக்டோபருக்கு முந்திய கடந்த காலத்து மின்மயமாக்கல் அனைத்துக்கும் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தோன்றியது என்பதும் சந்தேகத்திற்கிடமில்லாதவை ஆகும்.

மின்மயமாக்கலைத் தீர்மானமாக ஆதரித்துப் பணியாற்றிய போதே, நமது பொருளாதாரப் பின்தங்கலையும், குவிந்துள்ள மூலதனங்களில் நம்முடைய பெருத்த ஏழ்மையையும் விளதீமிர் இலீச் போதிய அளவு கணக்கிலெடுத்துக் கொண்டார். புள்ளி விவரங்களை நேராக மூல நூல்களிலிருந்தே தாம் ஆழ்ந்து அறிந்திருந்ததைப் பல தொகுதி நூல்களில் அவர் ஆவணங்களாகத் தந்திருப்பதைக் கொண்டு இதையெல்லாம் அவர் முற்றுகக் கண்டார், எதார்த்தமாக எண்ணிப் பார்த்தார் என்று தெரிந்து கொள்ளலாம். அதே சமயம், சமுதாயப் புரட்சி என்னும் ஏர் ருஷ்யச் சமவெளியை முதன் முதலில் உழுகிறது என்றும், இந்த வேலை இருக்கையில் தொழில் நுணுக்கம் வகிக்கும் பாத்திரத்தை மிகைப்படுத்துவது கடினம் என்றும் அவர் அறிந்திருந்தார்.

எவ்வளவோ புரட்சிகரத் துணிச்சல், கொண்டிருந்தாலும் விளதீமிர் இலீச் மிக உண்மையான எதார்த்தம் எனும் அடித்தரை மீது இரு கால்களையும் ஊன்றி வேறு எவரையும் விட உறுதியாக நின்ருர். இது மட்டும் இன்றி, இன்னும் மேலாக, அதன் அடியாழத்திலிருந்தே முளைத்து வளர்ந்தவர் போல இருந்தார் அவர், ஏனெனில் கோடிக் கணக்கான மக்கள் திரளின் பொக்கிஷங்களான சிந்தனைகள், உணர்ச்சிகள் ஆகியவற்றை சிறப்புத் திறனுடன் ஊடுருவும் வல்லமையைத் தம் காலத்தவர்களில் வேறெவரையும் விட அதிகமாகப் பெற்றிருந்தார் அவர். மக்கள் திரளுடன் அவர் ஏதோ நேரடியான விசேஷ உறவு கொண்டிருந்தது போலிருந்தது. விளதீமிர் இலீச்சினது பேச்சின் சிறப்பான எளிமையிலும், மக்களுக்கு இயல்பான அவரது

சொற்களின் தீஞ்சுவையிலும் விஞ்ஞானச் சிந்தனை அனைத் திலுமே இந்த உறவு வெளிப்பட்டது.

ருஷ்யாவை மின்மயமாக்கும் அரசுக் கமிஷன் என்னுல் ஒழுங்கமைக்கப்பட்டு 1920 பிப்ரவரி கடைசி முதல் தனது வேலையைத் தொடங்கியது. இந்தக் கமிஷன் தோன்றிய தற்கு முழுமுதற் காரணம் விளதீமிர் இலீச்சே ஆவார். இந்தக் கமிஷனின் வேலை ஆரம்பத்திலிருந்தே விளதீமிர் இலீச்சின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. கமிஷனின் சில உறுப்பினர்களுடன் அவர் நேரடியாக அறிமுகம் செய்து கொண்டார். எங்கள் வேலையின் பிரதானப் பணிகள் பற்றி என் மூலமாகத் துல்லியமாக மனக்கருத்துக் கொண்டிருந் தார். நாங்கள் எங்கள் வேலையில் அக்கறைகள், மனிதர் கள் ஆகியவற்றின் குறுகிய வட்டத்திற்குள் அடைபட்டு விடக்கூடாது என்று அவர் அஞ்சினுர். மின்மயமாக்கல் என்ற கருத்தே மிக எடுப்பாகப் பிரசாரம் ஆகும் விதத் தில் வேலை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினுர்.

1920ம் ஆண்டின் தொடக்கத்தில் நாங்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்து வந்தோம் என்பதைத் தோழர்கள் நினைவுபடுத்திக் கொள்வார்களாக. ருஷ்யாவில் அப்போது இன்னும் போர்முனை இருந்து வந்தது. ஒத்தி வைக்கப்பட முடியாத அரசாங்கத் தேவைகளை நிறைவேற்றுவதில் நமக்கு நேர்ந்த மிகப்பெரிய கஷ்டங்கள் மூலம் போருக்குப் பிந்திய சீரழிவு ஒவ்வோர் எட்டிலும் தன்னைக் காட்டிக் கொண்டது. இந்தப் பிரம்மாண்டமான பாரம் அனைத்தும் முதலில் விளதீமிர் இலீச்சின் தோள்கள் மீதே, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைக் காப்பதற்காக எத்தகைய பாரத் தையும் ஏற்றுக் கொள்ள மிகப் பெரும் தன்னலத் தியா கத்தைச் செய்யத் தயாராயிருந்த அத்தோள்களின் மீதே, விழுந்தன.

எங்கள் வேலைகள் நடந்து வருவதையொட்டிக் குறிப் பிட்ட ஏதேனும் ஒரு பிரச்னை பற்றி விவாதிப்பதற்காகப் பனிக்கால மாலை வேளைகளில் அடிக்கடி என்னை அவர் அழைப்பார். இது போன்ற வேலைகள் மேற்கு நாடுகளில் எப்படி நடந்து வருகின்றன என்பது பற்றி நான் தரும்

தகவல்களை மிகக் கவனமாகக் கேட்பார். ருஷ்யாவை மின் மயமாக்குவது பற்றி விளதீமிர் இலீச்சுடன் தாம் நடத்திய உரையாடலைப் புகழ்பெற்ற ஆங்கிலேய எழுத்தாளர் எச். ஜி. வெல்ஸ் எப்படி நினைவு கூர்ந்தார் என்பதை எண்ணிப் பாருங்கள். இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டுக்கே மின்மயமாக்கல் ஏற்றது என்றும் ருஷ்யப் பாலைவனங்களைப் பொறுத்தவரை இது கற்பனைமயமானது என்றும் திடவுறுதி கொண்டிருந்தார் இவ்வெழுத்தாளர். எனினும் விளதீமிர் இலீச்சின் மனவுறுதி தமக்கு ஊசலாட்டத்தை ஏற்படுத்தியது என்று ஒத்துக் கொண்டார். இந்தக் காரியத்தில் லெனின் மூளை ந்தால் ருஷ்யாவில் மின் மயமாக்கல் சாத்தியமே என்று கூட அவர் எண்ணினார்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் சக்தி பற்றிய ஆழமான கணக்குகளைத் தவிர, புரட்சிச் சூறுவளியால் உற்சாகமூட்டப் பெற்ற ருஷ்ய உழைக்கும் மக்களின் மாபெரும் வல்லமையில் அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கையும் விளதீமிர் இலீச்சிடம் இருந்தது. விளதீமிர் இலீச்சுடன் நடத்திய இத்தகைய உரையாடல்களுக்குப் பின் ஆற்றலின் புதிய எழுச்சியுடன், நமது போராட்டத்தின் வெற்றிகர முடிவு பற்றி முன்னிலும் உறுதியான நம்பிக்கையுடன் நான் எத்தனை முறை சென்றிருக்கிறேன்! 1920ன் இறுதியில், அனைத்து ருஷ்ய சோவியத்துக்களின் 8ஆவது காங்கிரசுக்கு சமர்ப்பித்த ருஷ்ய மின்மயமாக்கல் திட்டம் குறித்த அறிக்கையின் முன்னுரையில், வாழ்க்கையை உண்மையாகக் கட்டுபவர்களின் உறுதியான கரங்கள் பற்றி நான் எழுதிய போது, எனது மனக் கண்ணின் முன்னால், கோடிக்கணக்கான தொழிலாளர், விவசாயிகளின் அணிகள் மட்டுமின்றி, அவர்களது படைப்பாற்றலில் விசேஷ நம்பிக்கை கொண்டிருந்த ஊக்கமும் உறுதியும் நிறைந்த அவர்களின் தலைவரும் தோன்றினார்.

விளதீமிர் இலீச்சுடன் நடத்திய ஓர் உரையாடலில் மின்சார பல்புகள் உற்பத்தியில் அமெரிக்கா அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய புள்ளிவிவரத்தை அவருக்குச் சொன்

னேன். அமெரிக்காவின் பத்துக் கோடி மக்கள்தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால் மின்சார ஒளி ஜனநாயகத் தன்மை கொண்டதாகத் தெரியவந்தது. மிகக் கடுமையான ஆரம்ப பத்து ஆண்டுகளுக்குப் பின் சோவியத் அமைப்பினது நிலைமைகளில், விஞ்ஞான, தொழில் நுட்ப வெற்றிகளை அமெரிக்காவை விடத் தீர்மானமான வேகத்தில் மக்களிடையே பரப்ப முடியும் என்று விளதீமிர் இலீச்சும் நானும் முடிவுக்கு வந்தோம். நமது முயற்சிகளின் வெற்றிகளது சாரம் முழுதும் ஒரேயொரு தீர்மானமான விஷயத்தையே முற்றிலும் பொறுத்திருக்கும்: மக்கள் திரள்களின் நலன்களுடன் தொடர்புடைய எந்தக் கருத்தையும் அமுல் படுத்துவதில் பரவலான மக்கள் திரளுடன் ஒளிவு மறைவற்ற; நேரடியான, பாசாங்கு இல்லாத தொடர்பு இங்கு இருப்பது போல உலகத்தில் வேறெங்கும் இல்லை. இது இப்படியானல் கார்ல் மார்க்சால் குறிப்பிடப்பட்ட பொதுவிதி பொருளாதாரப் படைப்பில் தவிர்க்கவியலாதவாறு நிறைவேறும். எந்தவொரு வரலாற்றுச் செயலின் உற்பத்தித் திறனும் அச்செயலால் ஈர்க்கப்பட்டுள்ள மக்கள் திரளுடன் நேரடியாகத் தகவுப் பொருத்தம் கொண்டது என்கிறது இவ்விதி. நமது பிரகடன முயற்சிகள் உண்மையான கட்டுமானத்தை அவ்வப்போது தாண்டிச் செல்கின்றன என்பதில் சந்தேகமில்லை. பிரகடனத்தில் சட்டத்தின் வறட்டுச் சூத்திரத்தை மட்டுமின்றி பிரசாரத்தின் உயிர்ப்புள்ள வார்த்தையையும் வைத்து உணர்வு பூர்வமாகத்தானே நாம் இவ்வாறு தாண்டிச் செல்கிறோம்.

இந்த உரையாடலுக்குப் பின்பு சில வாரங்கள் சென்றதும் விளதீமிர் இலீச்சுக்கே உரித்தான கடிதம் ஒன்றை நான் அவரிடமிருந்து பெற்றேன். கடிதம் பின்வருமாறு:

''எனக்கு இத்தகைய எண்ணம் உதித்திருக்கிறது.

''மின்சாரத்தைப் பிரசாரம் செய்ய வேண்டும். எப்படி? வார்த்தையால் மட்டுமல்ல, உதாரணத்தாலும் இவ்வாறு செய்ய வேண்டும்.

''இதற்கு என்ன அர்த்தம்? மிக முக்கியமானது அதனை மக்களிடையே பரப்புவது. இதற்காக, ருஷ்ய சோவியத்

சோஷலிசக் கூட்டுக் குடியரசிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் மின்னொளி தருவதற்கான திட்டத்தை இப்போதே வகுக்க வேண்டும்.

''இது நீண்ட காலத் திட்டம். ஏனெனில் 2 கோடி (—4 கோடி?) பல்புகள், மின்கம்பிகள் நம்மிடம் நீண்ட காலத்துக்குப் போதாது.

''எனினும், ஒரு சில வருடங்களுக்காவது திட்டம் உடனடியாக வேண்டும்.

''இது முதலாவது.

''இரண்டாவதாக குறுகிய திட்டம் ஒன்றை உடனடியாக வகுக்க வேண்டும். பின்னர், இது மூன்றாவது, மிக முக்கியமானது, மக்கள் திரள் உடனடியாக வேலை தொடங்குவதற்காக போட்டியையும் விருப்ப வேலையையும் பொது மக்களிடம் விட வேண்டும்.''*

இந்த வார்த்தைகள் அவற்றின் துடியான ஆசிரியருக்கு எவ்வளவு இயல்பானவை! நமது கிராமங்களில் மின்சார விளக்குகள் ''இலீச் விளக்குகள்'' என்று அழைக்கப்படுவது சரி என்பதற்கு இவை எவ்வளவு இயல்பான எடுத்துக் காட்டுகள்!

மின்மயமாக்கல் பற்றிய விவர அறிக்கையை ஒன்பது மாத கால வரையறைக்குள் முடிக்கும் பொருட்டுப் பெரும் அவசரத்துடன் தயாரிக்க வேண்டியிருந்தது. இந்தப் புத்தகத்தின் பல அத்தியாயங்களைப் படித்துப் பார்க்காமலே அனேகமாக டைப்ரைட்டரிலிருந்து நேரடியாக அச்சகத்துக்கு அனுப்ப வேண்டியதாய் இருந்தது. எங்கள் தோள்களின் பின்னே நின்றார் அசாதாரண கவனம் கொண்ட, கூரிய விமர்சனம் செய்யும் இந்த நூலின் முதல் வாசகர்: அச்சுத் தாள்கள் திருத்தத்துக்காகத் தமது முகவரிக்கு வர வேண்டும் என்று விளதீமிர் இலீச் கோரினார். இந்த நாட்களில் நான் எவ்வளவு கவலை கொண்டிருந்தேன் என்றும் தொலைபேசியில் அழைப்புக்காகக் காத்திருக்கையில்

---

* V. I. Lenin, *Collected Works*, "To G. M. Krzhizhanovsky", Vol. 35, p. 467.—(ப-ர்.)

எவ்வளவு பதட்டப்பட்டேன் என்றும் நினைத்துப் பார்க்கிறேன். விவசாயப் பிரச்னை பற்றிய அத்தியாயம் என்னைக் குறிப்பாகத் தொல்லைக்குள்ளாக்கியது. இந்தப் பிரச்னையில் மிகப் பெரும் நிபுணராக விளங்கினார் விளதீமிர் இலீச். சிறப்பான ''மின் ஆற்றல்'' நோக்கில் செம்மைப்படுத்துவதில் இந்த அத்தியாயம்தான் மிகவும் கஷ்டமானதாக இருந்தது. எங்களது இந்த நட்புமுறைக் குழு உழைப்புடன் அவர் கொண்டிருந்த உறவினை நான் நினைத்துப் பார்க்கையில் எனது மனத்தில் இன்று வரை மகிழ்ச்சி நிறைகிறது.

வெற்றிடங்களும், குறைகளும் இந்த நூலில் நிறைய இருந்தன. இப்புத்தகத்தின் தலைவிதிக்காக நாங்கள் அஞ்சவில்லை. ஏனெனில், இதன் முதல் விமர்சகராக, வாசகராக இருந்தவர் கூரிய, ஊடுருவும் தன்மை கொண்ட கண்கள் படைத்தவரல்லவா? இதை அவரது எதிரிகள் கூடச் சந்தேகிக்கவில்லை. பிரிக்க முடியாத ஒற்றுமையுடன் புதிய, பிரகாசமான, மகிழ்ச்சி நிறைந்த, சகோதர வாழ்வைப் படைக்குமாறு எவை பணிக்கப் பட்டுள்ளனவோ, அந்த ஒரே மேதைவாய்ந்த அறிவும் அதே உறுதியுள்ள கரமுமே சமுதாயப் புரட்சியின் சுக்கானையும் புதிய தொழில் நுட்பம் என்னும் பிரம்மாண்டமான டிராக்டரையும் செலுத்தின என்பதற்கு இந்த நூல் சான்று பகர்கிறது.

* * *

தனது பன்முகப்பட்ட தன்மைகள் அனைத்திலும் மதிப்பு வாய்ந்தவன் மனிதன். மேதை மிக்க மனிதாபிமானிகளின் மாதிரிப் பிரதிநிதியாக நாம் அழைக்கத் தக்க அரிய இனத்தைச் சேர்ந்தவனாக இவன் இருந்தால் குறிப்பாக இக்கூற்று பொருந்தும்.

மிக எளியவராய், மிகப் பரவலான தமது சூழலுக்கு எட்டத் தக்கவராய், உழைக்கும் மக்கள், தொல்லைக்குள்ளான மக்கள் ஆகிய அனைவரின் மீதும் தன்னலத் தியாகத்தால் நிறைந்த நேசம் கொண்டவராய் விளங்கிய நமது வி. இ. உல்யானவ்-லெனின் இந்த மனிதர்களைச் சேர்ந்தவராகத்தான் இருந்தார்....

நீர்மின்நிலையம் கட்டுவோம்

கிராப்தியோ

1918 ஜனவரி. குளிர்ந்த பனிக்கால பெத்ரோகிராத் பயங்கர சம்பவங்களை எதிர்நோக்கி இருந்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சியினது பிறப்பிடத்தின் பக்கம் தலையீட்டாளர்கள் தங்கள் படைகளைச் செலுத்தினர்.

இந்தக் கடிய நாட்களில் சோவியத் அரசாங்கத்தின் தலைவரும் கட்சியின் வழிகாட்டியுமான விளதீமிர் இலீச் நாட்டின் அழிவுபட்டிருந்த பொருளாதாரத்தை மறுநிர்மாணம் செய்வதற்கான தமது திட்டங்களை வகுத்து வந்தார். வல்ஹோவ் நீர்மின்நிலையத்திற்கான மதிப்பீடுகளைச் செய்யும்படி விளதீமிர் இலீச் பணித்திருக்கிறார் என்று என்னிடம் சொன்னார் ஸ்மிதோவிச்.

நான் வியப்படைந்தேன். சமாதான காலத்திலேயே ஜார் ருஷ்யா வேண்டாம் என்று விட்டுவிட்ட பிரம்மாண்டமான நீர்மின்நிலையக் கட்டுமானத்தை இத்தகைய கடினமான காலத்தில் தொடங்குவது ஆபத்தானது என்று முதல் பார்வையில் தோன்றியது.

வல்ஹோவ் நீர்மின்நிலையத்திற்காக நடந்த பயன் தராத முந்திய போராட்டம் இந்த நேரத்தில் எனக்கு நினைவுக்கு வந்தது. இந்த நீர்மின்நிலையத்துக்கான முதல் உருவரைகள் *1911*ல் என்னால் தயாரிக்கப்பட்டன. இந்த வேலையில் மூன்றாண்டுகளை நான் செலவிட்டேன். பின்னர் உருவரை அரசாங்கத்திடம் தரப்பட்டது. பிரம்மாண்டமான பிரதேசத்தில் ஒரு நீர்மின்நிலையத்தைக் கட்டுவதற்கு ஜார் அரசாங்கம் சக்தியற்றதாக இருந்தது....

முதலாளித்துவ நாடுகளில் எப்போதும் நிகழ்வதே

நடந்தது. நாட்டுக்கு லாபகரமான, மலிவான நீர்மின் னுற்றல், மின்சாரக் கம்பெனிகளுக்குப் பிரம்மாண்டமான நஷ்டம் ஏற்படும் ஆபத்தை விளைத்தது. வல்ஹோவ் நிலைய உருவரையை உடைப்பில் போடுவதற்குத் தம்மாலான அனைத்தையும் இவை செய்தன. ''1886ஆம் வருட சமுதாயம்'' வல்ஹோவ் ஆற்றங்கரையில் நிலம் வாங்கியது. கட்டுமானம் சாத்தியமற்றது ஆகியது.

வல்ஹோவ் கட்டுமானம், புரட்சிக்குப் பின்னுல் லெனின் முன்முயற்சியால்தான் தோன்றுமாறு விதிக்கப்பட்டிருந்தது.

1918 ஜனவரி. ஸ்மிதோவிச் என்னிடம் சொன்னுர்:

''வல்ஹோவ் நிலையத்தைக் கண்டிப்பாகக் கட்டிவிட வேண்டும் என்று விளதீமிர் இலீச் விரும்புகிருர். சில தினங்களுக்குள் மதிப்பீடு வரைந்து தரும்படி அவர் கோருகிருர்....''

நான் மகிழ்ச்சியுடன் வேலையில் ஈடுபட்டேன். வெகு காலத்துக்கு முன்பே மறக்கப்பட்டு விட்ட அமைப்பு வரைபடங்களை வெளியிலெடுத்தேன். அவசரம் காட்ட வேண்டும். வல்ஹோவ் கட்டுமானம் பற்றிய பிரச்னையை சோவியத் மக்கள் கமிசாரவையின் கூட்டத்தில் ஒரு வார காலத்தில் இலீச் வைக்க விரும்பினுர்.

அரசாங்கக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் வல்ஹோவ் பிரச்னை இவ்வாறு சேர்க்கப்பட்டது. முதல் சோவியத் நீர் மின்நிலையம் பற்றி லெனின் தாமே பேச விரும்பினுர்.

ஆனுல் கடுமையான புரட்சிகர அன்ருட வேலைகள் மாற்றவியலாததாய் இருந்தன. சோவியத் மக்கள் கமிசாரவையின் குறிப்பிட்ட கூட்டம் நடைபெறவில்லை. அரசாங்கம் மாஸ்கோவிற்கு இடம் மாறிற்று.

சிறிது காலம் சென்ற பின் மீண்டும் வல்ஹோவ் கட்டுமானம் பற்றி லெனின் நினைவு கூர்ந்தார். பார்க்கப் போனுல் அதனை அவர் ஒருபோதும் மறந்து விடவில்லை. தமது சிறந்த கருத்தை நிறைவேற்றுவதைத் தள்ளிப் போடும்படி நிலைமைகள் அவரைத் தற்காலிகமாக நிர்ப்பந்தித்தன.

1918 ஜூலையில் நான் விளதீமிர் இலீச்சிடம் போனேன். சில நிமிடங்கள் உரையாடல் நடந்தது. வல்ஹோவ் நிலையத்தைக் கட்டுவோம்! இது ஓர் அற்புதமான நேரம். வெகு தொலைவுக்கு முன்னே பார்க்கிற, அச்சமற்ற, கலக்கமுறாத, மேதை மிக்க பாட்டாளி வர்க்கத் தலைவரை நான் அப்போது முதன் முதல் பார்த்தேன்.

அந்தக் கடினமான காலத்தில் பிரம்மாண்டமான பொருளாதாரக் கட்டுமானத்தைத் தொடங்குவதற்கு, லெனினது வியத்தகு புரட்சிகர நுண்ணுணர்வு தேவையாய் இருந்தது. மாற்றமுறாதவராய் இருந்தார் லெனின். வல்ஹோவ் நிலையத்தைக் கட்டுவது பற்றிய தீர்மானத்திற்கு சோவியத் மக்கள் கமிசாரவையின் அங்கீகாரம் பெற்றார்.

முதல் பண ஒதுக்கீடுகளைச் செய்தது அரசாங்கம். கட்டுமானம் தொடங்கி விட்டது.

வல்ஹோவ் நிலையத்தின் முதல் கட்டுமானப் பணியாளர்கட்குக் கஷ்டமாக இருந்தது. ஆட்கள், சாதனங்கள், பணம் ஆகியவை போதவில்லை. ஆனால் எதிர்காலத்தை நாங்கள் உற்சாகத்துடன் பார்த்தோம். ஏனெனில், கடினமான நேரத்தில் விளதீமிர் இலீச் உதவியும் பாதுகாப்பும் நல்குவார் என்று எங்களுக்குத் தெரிந்திருந்தது.

வெண்காவல் படை ஜெனரல்களின் பீரங்கி முழங்கிய போதும், சிறந்தவை அனைத்தும் போர்முனைக்கு அனுப்பப்பட்ட போதும், இளம் சோவியத் குடியரசுக்கு மிகக் கஷ்டமான மாதங்களில் கூட வல்ஹோவை லெனின் மறந்துவிடவில்லை.

கட்டுமானத்துக்கே தடங்கல் ஏற்படுமோ என்ற அச்சம் எங்களை ஆட்கொள்ளும் அளவுக்கு வல்ஹோவ் கட்டுமானத்துக்கு வந்த பொருள்கள் குறைந்த போது விளதீமிர் இலீச்சை அணுகுவது என்று நான் முடிவு செய்தேன். அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன், பதிலுக்காகப் பொறுமையின்றிக் காத்திருந்தேன். எப்போதும் போல காரியத்தின் மூலம் பதிலிறுத்தார் லெனின். சில நாட்களுக்குள் தேவையான அனைத்தும் எங்களுக்கு வழங்கப்பட்டது.

வல்ஹோவ் நிலையத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்ட சில தோழர்கள் கண்டிக்கப்பட்டனர்.

இவ்வாறாக விளதீமிர் இலீச்சின் நேரடியான உதவியுடன், அக்காலத்தின் அளவுப்படி பிரம்மாண்டமானதாக விளங்கிய கட்டுமானம் வளர்ந்தது.

1921ல் நடந்த, உழைப்பு, பாதுகாப்பு சோவியத்தின் வழக்கமான கூட்டம் எனக்கு நினைவுக்கு வருகிறது. லெனின் தலைமை தாங்கினார். தம்மருகே என்னை உட்காரும்படிச் செய்து கடைசிச் செய்திகள் பற்றி ஆவலுடன் என்னிடம் கேள்விகள் கேட்டார். விளதீமிர் இலீச்சின் ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு ஆணையையும் கேட்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது! அவரது ஒவ்வொரு அறிவுரையும் எத்தகைய ஆவலுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது!

உழைப்பு, பாதுகாப்பு சோவியத்தின் கூட்டத்தில் முக்கியமான பிரச்னை முன் நின்றது. வெளிநாட்டுக் கருவிகள் வாங்குவதற்காக அன்னியச் செலாவணி வல்ஹோவுக்கு முதன் முதலாகத் தேவைப்பட்டது. டர்பைன்கள் எங்களுக்குத் தேவையாய் இருந்தன. முதல் சோவியத் மின் நிலையத்துக்கான முதல் டர்பைன்கள். சற்றும் யோசிக்காமல் லெனின் பிரேரணையை முன்வைத்தார். 65 லட்சம் தங்க ரூபிள்கள் பெற்றது வல்ஹோவ்.

பல நாடுகளின் கம்பெனிகள் முன்வைத்த பிரேரணைகளை விவாதித்த பின்பு ஸ்வீடன் டர்பைன்களுக்கு ஆர்டர் கொடுத்தோம். நான் ஸ்டாக்ஹோமுக்குச் சென்று வர நேர்ந்தது. ஆர்டர் கொடுத்து முடிந்த பின்பு, பேச்சு வார்த்தைகளை முறித்து விட்டு மற்ற கம்பெனிகளை அணுக வேண்டும் என திடீரென்று எனக்கு மாஸ்கோவிலிருந்து தகவல் வந்தது. நிலையத்திற்குச் சாதனங்கள் இல்லாமல் போகுமே என்ற எண்ணம் என்னை நிம்மதியாக இருக்க விடவில்லை. லெனினுக்குத் தந்தியடித்தேன். தந்தியின் முதல் வார்த்தைகள் பின்கண்டவாறு தொடங்கின என்று நினைக்கிறேன்: ''திரும்பத் திரும்ப அதே கதை. எல்லாம் தயாரான பின்பு, ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்

டும்....'' எடுத்த காரியத்தை முடிப்பதற்கு லெனினிடம் நான் அனுமதி கோரினேன். அனுமதி பெற்றேன். வல்ஹோவுக்கான டர்பைன்களுக்கு ஆர்டர் கொடுக்கப் பட்டது.

பின்னர், விளதீமிர் இலீச்சின் உடல்நிலை முறையாகக் காரியங்களைச் செய்வதற்கு அவரை அனுமதிக்காத போதும் கூட, வல்ஹோவ் கட்டுமானம் பற்றி அவ்வப் போது அறிக்கை எழுதித் தரும்படி என்னிடம் கோரினர். டஜன் கணக்கான இத்தகைய அறிக்கைகள் லெனினுக்குத் தோழர் கர்புனேவ் வசம் அனுப்பப்பட்டன. வல்ஹோவ் கட்டுமானத்திற்குத் தடங்கல் ஏற்படுத்திய சிற்றதிகாரி களை இரக்கங்காட்டாது கண்டித்துத் திருத்தினர் லெனின்.

வல்ஹோவ் நிலையம் வேலை செய்யத் தொடங்கியதை லெனின் காணவில்லை. ஆனல் அது அவரது நம்பிக்கைகளை மெய்ப்பித்தது.

மாபெரும் வழியனுப்பு வார்த்தைகள்

ஸாரவ்

கம்சமோலினது மூன்றுவது காங்கிரசின் தொடக்க நாள்—கம்சமோலின் வரலாற்றில் சிறப்பு மிக்க நாள்—பலப்பல விவரங்களில் என் நினைவுக்கு வருகிறது.

அது 1920 அக்டோபர் 2ஆம் நாள்.

குளிர்ந்த அந்தி சோகம் சூழ்ந்த, கடிய மாஸ்கோவின் மீது கவிந்தது. சீரழிவுடன் போராட்டம் பற்றியும், டைபஸ் காய்ச்சல் அபாயம் பற்றியும் கூறும் தீர்மானங் களும் துண்டுப் பிரசுரங்களும் லோஸ்குத்னயா விடுதிக் கதவுகளில் ஒட்டப்பட்டிருந்தன.

தெருவிலோ, உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் உரத்த குரலில் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் இளைஞர்கள் கூட்டம் நடைபோட்டது.

த்வெர்ஸ்கயா தெருவில் காங்கிரஸ் பிரதிநிதிகளின் குழு நுழைந்தது. டிராம் சாலைகளால் நெரிசலாகியிருந்த, கல்பாவிய குறுகிய சாலையின் குண்டு குழிகளைக் குதித்துத் தாண்டி வலது புறத்துக்குப் பலர் ஏற்கெனவே போயிருந் தனர்.... இன்றைய கோர்க்கி சாலை அன்று அப்படியிருந் தது.

மாஸ்கோ சோவியத் சதுக்கத்தின் தோல் கோட்டு அணிந்த அடர் முடி இளைஞர் ஒருவர் பிரதிநிதிகளுக்கு மத்தியில் காணப்பட்டார். அவர் தொப்பியை வீசி ஆட்டியபடி கணீரென்ற குரலில் திம்யான் பேத்னியின் பாடலை உணர்ச்சி ததும்பப் படித்தார்:

"தடைகள் அனைத்தும் உடைபடவில்லை,
முடிவினைக் கணிக்க அவசரம் வேண்டாம்.

நாற்புறமும் கொடும் புல்லர்கள் நம்மை,
கூற்றென நெருப்பால் சூழ்வது காணீர்!''

இடிபட்டிருந்த நடைபாதை மீது நகர்ந்தபடி கடைகளின் காட்சிப் பெட்டிகளுக்கு முன்னே அவ்வப்போது நின்று கொண்டிருந்தோம். சுவரொட்டிகள் அங்கு ஒட்டப்பட்டிருந்தன. விராங்கெலை முறியடிக்கும் படியும் பெலொருஷ்யாவிலிருந்து தலையீட்டாளர்களை விரட்டும் படியும் வசனங்களிலும், பாட்டுக்களிலும் சுவரொட்டிகள் அறைகூவல் விடுத்தன. பிரகாசமான சுவரொட்டியில் நின்ற செஞ்சேனை வீரன் **"சுயவிருப்பத் தொண்டர் படையில் சேர பெயர் பதிவு செய்தாயா?"** என்று எங்கள் ஒவ்வொருவரையும் கேட்டான்.

இந்தச் சரியான கேள்விக்குத் தகுந்த பதிலை நாங்கள் காங்கிரசிலேயே தரவிருந்தோம். அப்போது கம்சமோல் அதனைச் செய்தாக வேண்டும்.

* * *

மண்டபம் நிறைந்து வழிந்தது.

தலைமைக் குழு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு வரவேற்புரை தொடங்கியது. கம்சமோலைப் பற்றி அப்போது அவ்வளவு அதிகமாகத் தெரியாது. அதை வரவேற்ற பேச்சுக்கள் குறைவாகவே இருந்தன. இந்த ''வெற்றிடத்தைக்'' கம்சமோல் உறுப்பினர்கள் தாமே இட்டு நிரப்ப வேண்டியதாயிற்று.

ஒவ்வொருவரையும், அதாவது ஒவ்வொரு குழுவையும் நாங்கள் எங்களுக்குள் மனப்பூர்வமாக வரவேற்றுக் கொண்டோம். உக்ரேனியர்கள் மாஸ்கோவாசிகளை வரவேற்றார்கள். இதற்குப் பதில் கிடைத்தது. யூரல்காரர்கள் பெத்ரோகிராத்வாசிகளைத் தலைவணங்கினர், சைபீரியாக்காரர்கள் பெலொருஷ்யர்களை வாழ்த்தினர், மத்திய ஆசியக் குழுவினர் வோல்காப் பகுதிக் குழுவை வரவேற்றனர்.

எல்லா வரவேற்புரைகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிக்கு வாழ்த்துக் கூறப்பட்டது. இதற்கு விசுவாச மாக இருப்பதாக கம்சமோல் உறுப்பினர் தமது முதல் எட்டுக்களிலேயே வாக்குறுதி அளித்தனர். மாபெரும் அக்டோபர் இடிப்புயலால் மனக்கிளர்ச்சியூட்டப்பட்ட புரட்சிகர இளைஞர்களின் இதயங்கள் எதிர்காலம் பற்றிய அருமையான நம்பிக்கைகளால் நிறைந்திருந்தன. ஆனால், நமது வாலிபர்களின் எந்த நம்பிக்கையும், எந்தக் கனவும் கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிவுத் திறனையும் தீர்க்க தரி சனத்தையுமே சார்ந்து நின்றது.

லெனினால் நிறுவப்பட்ட கட்சியின் பகுத்தறிவே ஒளி விளக்காகும். இதில்லாமல் மிகச் சிறந்த நமது எந்த முயற்சி களும் பயனீட்டாது. இருட்டில் தடுமாறி, உண்மையான வழியிலிருந்து நாம் தவறிப் போக நேர்ந்திருக்கும்....

ஸ்மலேன்ஸ்க் குழுவின் சார்பில் இது பற்றி பொன்னிற முடி கொண்ட ஓர் இளைஞர் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

இப்பேச்சின் நடுவில் கேட்ட கரவொலிகள் திடீரென்று வலுவடைந்து நீண்ட ஆரவாரமாக மாறின. இந்த ஆர வாரத்துக்கு ஸ்மலேன்ஸ்க் இளைஞர் காரணமே இல்லை. அவர் இதைப் புரிந்து கொண்டு மேடையை விட்டுப் போய் விட்டார். ஒருவேளை மேடையிலிருந்த மேசையை லெனின் நெருங்கியதை அவர் பார்த்திருக்கக் கூடும். மண்டபத் தின் முதல் வரிசையிலிருந்த நாங்கள் லெனினை நன்றாகப் பார்க்க முடிந்தது. விரிந்த இளங் குளிர்க் கோட்டும், குறுகிய வெல்வெட்டுக் காலரும், தொப்பியும் அணிந் திருந்தார் அவர். கோட்டையும் தொப்பியையும் கழற்றி நாற்காலியின் மீது வைத்து விட்டு மேசையோரம் இருந்த நாற்காலியின் மீது அவர் அமர்ந்தார். மேடையிலிருந் தோரிடம் சிறிது பேசி விட்டு புத்தகத்தின் மீதோ காகிதங் களின் மீதோ குனிந்து கொண்டார்.

மண்டபம் மங்கலான ஒளி கொண்டிருந்தது. பின் வரிசைகளிலிருந்த டஜன் கணக்கான இளைஞர்கள் விளதீமிர் இலீச்சை அருகில் பார்ப்பதற்காக நடைபாதை வழியாக முண்டியடித்துக் கொண்டு முன்வந்ததில் ஆச்

சரியமில்லை. ஆச்சரியகரமானது வேறென்று: நான் உட்பட பலர் விரைவில் மேடை மீது இருந்தோம். சிலர் லெனினுக்கு அருகிலேயே கூட இருந்தனர்.

இந்த நேரத்தில் அவர் மிகவும் முனைப்புடன் தமது வேலையில் ஈடுபட்டிருந்தார். எந்த ஆரவாரமும், எந்த ''உர்ரா'' கூச்சலும் லெனினுக்குக் கேட்கவில்லை என்று தோன்றியது. மண்டபத்திலிருந்து தன்னிச்சையாக முண்டியடித்து மேடைக்குப் போன எங்களால் விளைந்த ஒழுங்கீனத்தை எங்கள் நற்காலம், அவர் கவனிக்கவில்லை. இது தானாக நிகழ்ந்தது. மண்டபத்தில் இட நெருக்கடி இருந்ததனால் அல்ல, மேடையில் காலியிடம் நிறைய இருந்ததனால் அல்ல இது நிகழ்ந்தது. விளதீமிர் இலீச் தலையை நிமிர்த்தினார். மேடைக்கு வந்த அழைக்கப்படாத விருந்தினர்களான எங்கள் அனைவரையும் புன்னகை யுடன் நிதானமாகக் கண்களைச் சுழற்றிப் பார்த்தார்.

பின்னர் விட்டுப் போன வேலையை அவர் மீண்டும் தொடர்ந்தார். தமது பேச்சு தொடங்குவதற்கு முன்பு சில நிமிடங்கள் இலீச் என்னதான் செய்து கொண்டிருந் தார்? நாங்கள் வியப்படையும் வண்ணம் அவர் வரைந்து கொண்டிருந்தார். குழாயும் கூரையுமுள்ள வீடு ஒன்று அவர் வரைந்து கொண்டிருந்தார், ''பள்ளிக்கூடம்'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் படத்தின் தலைப்பு லெனின் பேச்சுடன் ஏதா வது தொடர்பு கொண்டிருக்கும் என்று எங்களில் ஒரு வருக்கும் தோன்றவே இல்லை.

* * *

லெனின் மேடையின் ஓரத்துக்கே வந்தார். பேச்சு முடிந்த பின்பு கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதுதான் அவர் மேடை நடுவே வந்தார்.

கூட்டத்தினர் லெனினைப் பேசத் தொடங்க நெடு நேரம் விடவில்லை: உற்சாக ஆர்ப்பரிப்புக்கள், குழுக் கூச்சல்கள், கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வாழ்த்துக்கள், அதன் நிறுவகருக்கும் தலைவருக்கும் வாழ்த்துக்கள்.

''இன்டர்நாஷனல்'' பாடலை இரண்டு-மூன்று முறை பாடினர்.

விளதீமிர் இலீச் ஒதுங்கி நின்று எல்லோருடனும் சேர்ந்து பாடினார்.

பின்னர் மேடையின் ஓரத்தில் அவர் நடந்தார். நின்று, கொந்தளித்துக் கொண்டிருந்த மண்டபத்தை நோக்கி விரலசைத்து மிரட்டினார். தீர்மானமாக பயமுறுத்தினார். அமைதி நிலவப் போவது போலத் தோன்றி பின்னர் திடீரென்று இடிச் சிரிப்பால் மண்டபம் அதிர்ந்தது!

விளதீமிர் இலீச் விரலால் கடுமையாகத்தான் பயமுறுத்தினார். ஆனால் இந்தக் கடுமையை அவரால் கடைசி வரை காட்ட முடியவில்லை. அவர் புன்னகைத்தார். லெனின் புன்னகையோ தனி விதமானது. அது மற்றவரைத் தொற்றிக் கொள்ளும் தன்மையது. தீப்பொறி போல் வரிசைகளில் சென்று மகிழ்ச்சிப் பிழம்பாக மண்டபம் முழுதையும் பற்றிக் கொண்டது. வாலிபர்களின், விவரித்தற்கரிய, ஒளி வீசும் சிரிப்பினது கட்டுப்படுத்த முடியாத நட்புக் கொண்ட முழக்கமாக அது மாறியது. இளைஞர்களின் மனநிலையை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்ட உறவு மிகுந்த மாபெரும் லெனினுடன் சந்தித்ததால் எங்களுக்கு ஏற்பட்ட சொல்லற்கரிய மகிழ்ச்சி மிகுந்த மனநிலைக்கு இது இன்னொரு சான்றாகும்.

கோட்டுப் பையிலிருந்து கைக் கடிகாரத்தை வெளியிலெடுத்தார் விளதீமிர் இலீச். தலைக்கு மேல் அதனை உயர்த்தினார். பல அர்த்தத்துடன் கடிகார முகத்தைச் சுட்டிக் காட்டினார்: நேரம் போய்க் கொண்டிருக்கிறது வாலிபர்களே, நேரம் பொன்னானது.

இது வார்த்தைகளின்றியே விளங்கியது.

முழு அமைதி நிலவியது. நாங்கள் லெனினது வார்த்தைகளைக் கேட்டோம். மெதுவாகவும், மெல்லியதாகவும் உரையாடல் போலவும் வீட்டில் பேசுவது போலவும் அவர் குரல் ஒலித்தது.

மூன்றாவது காங்கிரசில் லெனின் நிகழ்த்திய பேச்சு சாராம்சத்தில் ஓர் உரையாடலின் தன்மையே கொண்

டிருந்தது. மனித இனத்தின் மிகப் பெரும் அறிஞர்களும் கனவாய் மட்டுமே காண முடிந்த சமுதாயத்தைக் கட்டு வதற்கும், கட்டி முடிப்பதற்கும் அழைக்கப்பட்ட இளந் தலைமுறையின் வாழ்க்கையில் மிகப் பிரதானமாக இருந்த விஷயத்தைப் பற்றிய காரியப் பற்றுள்ள, மனப்பூர்வ மான பேச்சு அது.

''தோழர்களே, இளம் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் அடிப்படைக் கடமைகள் பற்றிய தலைப்பில் நான் உங் களுடன் இன்று உரையாட விரும்புகிறேன்....''—இத் தகைய வார்த்தைகளுடன் லெனினது பேச்சுத் தொடங் கியது.

இளைஞர்களின் அடிப்படைக் கடமைகளை ஒரே வார்த் தையால் வெளியிட்டு விட முடியும் என்று அவர் சொன்ன போது எல்லோரும் வியப்படைந்தனர். அந்த ஒரு வார்த்தை கற்க என்ற வார்த்தையே என்று தெரிந்த போது எங்கள் வியப்பு மேலும் வளர்ந்தது. அப்போது இன்னும் கிரீமியாவில் இருந்த விராங்கெலை என்ன செய்வது? பெலொருஷ்யாவில் அப்போது இன்னும் எஜமானத்தனம் பண்ணிக் கொண்டிருந்தவர்களை என்ன செய்வது? முந்தைய கம்சமோல் காங்கிரசுகள், மாநாடு கள் ஆகியவை செய்த உதாரணத்தைப் பின்பற்றி எங்கள் மூன்றுவது காங்கிரசில் கலந்து கொண்டவர்கள் அனை வரும் சோவியத் அரசிற்கு எதிராக ஆயுதந் தாங்கிய விரோதிகளை முறியடிப்பதற்கு உதவுவதற்காக செல்ல வேண்டும் என்று நாங்கள் முழு உறுதி கொண்டிருந்தோம்.

லெனின் இது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. எங்களது நேரடியான உதவி இல்லாமலேயே எதிரிகள் முறியடிக்க படுவார்கள் என்பதில் அவருக்குச் சந்தேகம் இருக்கவில்லை என்று இதற்கு அர்த்தமாயிற்று. இந்த முறியடிப்புக்குக் கட்சி ஏற்கெனவே ஏற்பாடு செய்திருக்க வேண்டும். கட்சி முன்னோக்கிப் பார்த்தது. எங்களை விடத் தொலைவில் பார்த்தது. லெனினது மனக் கண்ணில் சமாதான காலம், வாழ்க்கையின் புதிய பருவம், புதிய கடமைகள் காட்சி யளிக்கின்றன.

தொழிலாளி-விவசாயிகளின் ஆட்சியை ஆதரிக்கிற காரியத்திலும் முதலாளித்துவக் கொள்ளைக்காரர்களுக்கு எதிரான போராட்டத்திலும் எங்களது கம்சமோல் கடமைகளை நாங்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறோம் என்று லெனின் சொன்னார். இது ஒரு புகழ்ச்சி போல ஒலித்தது.

ஆனால், இப்போது இது போதாது என்று தொடர்ந்து சொன்னார் அவர்.

இப்போது வரிசையில் நிற்கிற புதிய கடமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்: பொருளாதார, கட்டுமான, கலாச்சாரக் கடமைகள் அவை. இதுவும் போதாது. இந்தச் சிக்கலான கடமைகளைச் செய்து முடிக்கத் தம்மைத் தாமே தயார் செய்து கொள்ளத் தொடங்க வேண்டும்.

* * *

விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் குழந்தைகளான, கம்சமோல் உறுப்பினர்களின் முதல் தலைமுறையின் பிரதிநிதிகளான நாங்கள் மகிழ்ச்சியுடன் பின்கண்டவாறு பாடினோம்:

> ''நம்முலகமான புத்துலகு கட்டுவோம்,
> ஏதுமற்றிருந்த நாங்கள் எல்லாமாக மாறுவோம்.''

ஆனால், எல்லாமாக மாறுவதற்கான வாய்ப்பு பற்றிய திட்டவட்டமான கற்பனை எங்களிடம் இருக்கவில்லை என்று நான் சொல்லத்தான் வேண்டும்.

உண்மையான வடிவத்தில் இதற்கான வாய்ப்பு பற்றிய எண்ணமே அடக்கமற்றதாகவும், அதே சமயம் பல கடமைகளுக்கு ஆளாக்குவதாகவும் தோன்றியது.

கட்சிக் காரியத்துக்காகவும், மக்கள் நலன்களுக்காகவும் போராடுகிறவனாக, சோவியத் ஆட்சியின் பாதுகாவலனாக மாறுவது ஒருவேளை போதுமா?

இல்லை, போதாது.

இஞ்சினீயர்களாக, எழுத்தாளர்களாக, விஞ்ஞானி களாக, இசை வல்லுனர்களாக, போதகர்களாக, கலைஞர் களாக மாறுவதற்குத் திறன் படைத்தவர்களாய், அதே நேரத்தில் போராட்ட வீரர்களாயும் இருக்க வேண்டும் என்றுதான் கட்சிக் காரியமும் மக்கள் நலன்களும் கோரு கின்றன.

பழைய கலாச்சாரத்தை நாம் அணுக வேண்டியது பற்றிக் குறிப்பாக நாங்கள் குழம்பினோம். பழைய கலாச் சாரம் பற்றி, பாட்டாளி வர்க்கத்தவர் என்று தம்மை அழைத்துக் கொண்ட இலக்கியவாதிகள் மத்தியிலும் புரட்சியின் தொடக்கத்தில் அராஜகத் தனமான கருத்துக் கள் நிலவின. குப்பையென்றும், கந்தலென்றும், இகழத் தக்கதென்றும், அழிக்கப்பட வேண்டியது என்றும் அதனைப் பார்த்தார்கள் இவர்கள். மூலச் சிறப்புள்ள ருஷ்ய, அன்னிய நாடகங்களை விகாரப்படுத்திய சில நாடக அமைப்பாளர்களின் இடதுசாரித் திரிபுகள் எதற்கும் லாயக்கற்றவை!

பழைய கலாச்சாரத்தையும் மூலச் சிறப்புள்ள இலக் கியங்களையும் வெறுத்துப் பழிக்கும் கவிதைகளைக் கம்ச மோல் கூட்டங்களிலும் அவ்வப்போது ஒப்பிப்பதைக் கேட்கலாம்.

இத்தகைய செய்யுள்கள் எல்லா நேரங்களிலும் எதிர்த்துத் தாக்கப்படவில்லை.

பழைய கலாச்சாரத்தை அணுகுவதையும், புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதையும் பற்றிய மிக முக்கியமான பிரச்னைகளில் தெளிவேற்படுத்துவதற்காக லெனின் எங்கள் காங்கிரசுக்கு வந்தார்.

கடந்த காலக் கலாச்சாரம் பற்றிய அடிப்படையான அறிவும் விமர்சன பூர்வமான கிரகிப்பும் இன்றி எத்தகைய புதிய கலாச்சாரத்தையும் கட்டிவிட முடியாது என்று ஆழமாகவும் ஆதாரபூர்வமாகவும் விளக்கினார்.

ராஃபயேலை ஒதுக்கி விடுவதும், மியூசியங்களில் உள்ள பொக்கிஷங்களை வெறுப்பதும் கூடவே கூடாது என்று தெரிந்தது.

லெனின் பேச்சிலிருந்து இதை நாங்கள் புரிந்து கொண்டோம்.

கலைப் பூக்களில், சீர்கேட்டையும் வீழ்ச்சியையும் மணம் பரப்பும் முதலாளித்துவப் போலிக் கலைப் பூவை மட்டுமே மிதித்துத் துவைக்க வேண்டும் என்று நாங்கள் புரிந்து கொண்டோம்.

மனித இனம் தனது வரலாறு முழுவதிலும் சேர்த்து வைத்திருக்கிற அறிவுத் தொகுதி அனைத்தையும் கிரகித்துக் கொள்வதற்காக, நமது கம்யூனிச வருங்காலத்திற்காக நாம் விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும் என்று தெரிந்தது.

இதில்லாமல் புதிய சமுதாயத்தை வெற்றிகரமாகக் கட்டி முடிக்க முடியாது. கம்யூனிசம் பற்றிப் புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை நுனிப்புல் மேய்வது போல கிரகித்துக் கொள்வதைக் கண்டித்தபடி இவ்வாறு பேசினுர் லெனின்.

தத்துவத்தை நடைமுறையுடன் ஒன்றுசேர்க்க வேண்டும். கல்வி, பயிற்சியின் ஒவ்வொரு எட்டையும் உழைப்பாளர்களின் அன்ருடப் போராட்டத்துடனும், மக்களது வாழ்க்கையுடனும் அவர்களைப் பற்றிய கவனத்துடனும் இணைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் லெனின்.

கேள்விகளில் ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இந்தக் கருத்தை விளதீமிர் இலீச் மேலும் வலியுறுத்திஞர்.

கேள்வி பின்கண்டவாறு:

''தோழர் லெனின்! கிராமத்தில் மசகு ஏன் இல்லை என்று சொல்லுங்கள்!'' இக்கேள்வி அப்பாவித்தனமானது என்றும் இடத்திற்கு ஏற்றது அல்ல என்றும் கருதி பலர் சிரித்தனர்.

கம்யூனிஸ்ட் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய பேச்சுடன் நேரடித் தொடர்புடைய இந்தப் பிரச்னை மிகவும் முக்கியமானது என்ருர் விளதீமிர் இலீச். மசகும், ஆணியும், கெரசினும், தீப்பெட்டியும் கிராமத்தில் ஏன் இல்லை என்று கம்யூனிஸ்டுக்குப் பதில் சொல்லத் தெரிய வேண்டும். அது மட்டுமல்ல! மசகு உற்பத்தி உட்பட,

நமது உற்பத்தியைச் சீராக்குவதில் ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்வது கம்யூனிஸ்டின் கடமை. தத்துவத்தைக் கைக்கொள்கிற போது மக்களது வாழ்க்கை, தேவைகள் ஆகியவற்றைப் புறக்கணிக்காதே. கம்யூனிஸ்ட் இப்படித்தான் இருக்க வேண்டும்!...

இளைஞர்களுக்கு லெனின் விடுத்த ஆணைகள், அறிவுரைகள், அறைகூவல்கள் ஆகியவை கம்சமோல் வேலைத் திட்டத்தின் அடிப்படை ஆயிற்று. அதே போதில் வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு இளமங்கைக்கும், இளைஞனுக்கும், அவ்வாழ்க்கையை இது வரை காணு அழகு மிக்கதாக மாற்றுவதற்காக வழங்கிய மதிப்பிற்கரிய வழியனுப்பு வார்த்தைகளாகவும் இவை விளங்கின.

சோவியத் நாட்டின் ஒவ்வொரு உழைப்பாளியும் மேலும் மேலும் சிறப்புற வாழ்வதற்கு ஏற்ப மக்கள் நலனைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று கட்சிக்கு ஆணையிட்டார் லெனின். இந்த ஆணையைக் கம்யூனிஸ்டுகளின் கட்சி புனிதமாக நிறைவேற்றுகிறது. மக்களின் பொருள்வகை, கலாச்சார நிலைமைகளில் புதிய ஏற்றத்திற்காக அபரிமிதமான பொருள்களை நாட்டில் உற்பத்தி செய்யும் வரலாற்றுப் பணியை நிறைவேற்றுவதில் இப்போது முனைந்துள்ளது.

கம்யூனிஸ்டுகளின் முதல் உதவியாளர்களான கம்சமோல் உறுப்பினர்கள் இந்த நற்பணியை நிறைவேற்றுவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். புதிய நிலத்தை நோக்கி துணிவு மிக்க அணிவகுப்பைத் தொடங்கி வைப்பவர்களாக அவர்கள் விளங்கினர். பெரும் பகுதிகளான கன்னி நிலங்களையும் தரிசு நிலங்களையும் பண்படுத்தத் தொடங்கினார்கள் அவர்கள்.

உறங்கும் பிரதேசங்களைத் தட்டியெழுப்பவும், அவற்றை மலர்ந்து களிக்குமாறு செய்யவும், சோஷலிச அரசுக்கும் அதன் தகுதி வாய்ந்த குடிமக்களுக்கும் தாமதமின்றி நற்பணி புரியுமாறு நிர்ப்பந்திக்கவும் செய்வதுடன் கம்சமோல் உறுப்பினர்களின் எண்ணங்களும் நம்பிக்கைகளும் தொடர்புடையவை ஆகும்.

விவேகக் கட்சி வழிவந்த நாங்கள்,
இளையோர் தமது பெருமையைக் காப்போம்.
கம்சமோல் புகழின் புதுவழி நின்று,
மக்கள் மகிழ்ச்சியைப் பன்மடங்கு ஆக்குவோம்!

மக்களுக்குச் சேவை புரிவது, எப்போதும் எல்லாவற்றிலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு உதவுவது, 1920ல் கம்சமோல் உறுப்பினர்களுக்கு லெனின் சொன்ன வழியனுப்பு வார்த்தைகளை ஒருபோதும் மறவாதிருப்பது—புகழ்மிக்க இளந் தலைமுறையின், உண்மையான, அசைத்தற்கரிய மரபுகளின் முற்போக்குப் பிரதிநிதிகள் இப்படித்தான் இன்று சொல்கிறார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில்

பேலா கூன்

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் போது, 1921 ஜூலை முதல் நாட்கள் ஒன்றில், காங்கிரசில் ஜூன் முதல் தேதி லெனின் பேருரை நிகழ்த்திய பின்பு,* மத்திய ஜெர்மனியில் மார்ச்சில் நடந்த எழுச்சிக்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவராயும் ''தாக்குதல் தத்துவத்தை''**

---

* கம்யூனிஸ்டு அகிலத்தின் நடைமுறை உத்தியை ஆதரித்து லெனின் பேசியது இங்கு குறிப்பிடப்படுகிறது (V. I, Lenin, *Collected Works*, "Speech in Defence of the Tactics of the Communist International", Vol. 32, pp. 468—478).—(**ப-ர்.**)

** ஒன்றுபட்டிருந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் ''இடதுசாரிப்'' பெரும்பான்மையால் ஆதரிக்கப்பட்ட ''தாக்குதல் தத்துவத்தின்'' ஆதரவாளர்கள் தாக்குதல் தொடுப்பதுதான் திட்டவட்டமான அரசியல் நிலைமைகள் எதையும் பொறுத்தில்லாமல் எந்தவொரு நிலைமையிலும் சரியான ஒரேயொரு வழி என்று கருதி, அகால எழுச்சிப் பாதையில் தொழிலாளர்களைத் தள்ளினர். இவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் பரவலான மக்கள் திரளிடையில் நீண்ட காலத்துக்கு அன்றாட வேலை செய்ய வேண்டிய அவசியத்தைக் குறைத்து மதிப்பிட்டார்கள். எதார்த்தமான முன்தேவைகளையும் அதிகமாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மத்திய ஜெர்மனியில் கம்யூனிச இயக்கத்தின் புரட்சிகர மையத்தை அழித்தொழிக்கும் நோக்கத்துடன், பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமில்லாத நேரத்தில் தாக்குதல் தொடுக்குமாறு அதனைத் தூண்டி விடுவதற்குத் ''தாக்குதல் தத்துவத்தை'' ஜெர்மானிய முதலாளித்துவ வர்க்கம் பயன்படுத்திக் கொண்டது. 1921 மார்ச்சில் வேலைநிறுத்தத்

உருவாக்கியவர்களில் ஒருவராயும் இருந்தவருடன் லெனின் உரையாடினர். இந்த உரையாடலின் போது, காங்கிரசில் நிகழ்த்திய உரையை விட மிக மென்மையாக, ஆனல் அதற்கு ஒருசிறிதும் குறையாத நிர்ணயத்துடனும் தீர்மானமாகவும் சரியான, ஒரேயொரு சரியான போல்ஷிவிக் நடைமுறை உத்திக்கு வந்த எதிர்ப்பைச் சமாளிக்க லெனின் முயன்றார். இதில் வெற்றிபெற மூன்ருவது காங்கிரசில் லெனின் கூடப் பெரு முயற்சி செய்ய வேண்டியதாயிற்று. நிலைமையைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்வதும், வர்க்கச் சக்திகளின் பலாபல நிலைமையை ஆதாரபூர்வமாக மதிப்பீடு செய்வதும், ஆயுத எழுச்சிக்குத் துல்லியமாகத் தயாரிப்புச் செய்வதும் எவ்வளவு அவசியம் என்று வெகு நிர்ணயமாக லெனின் எடுத்துக் காட்டினர். வர்க்க விரோதியின் ஆத்திரமூட்டலுக்கு ஆட்பட்டு விடக் கூடாது என்றும், வர்க்க விரோதி தனக்குச் சாதகமான தருணத்தில் தூண்டி விட முயலும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையைப் பலியிட்டு விடக் கூடாது என்றும் குறிப்பாக அவர் கோடிட்டுக் காட்டினர்.

''போராட்டம், பிரசாரம் ஆகியவை மூலம் நல்ல கம்யூனிஸ்டைப் பயிற்றுவிப்பது சிறிய விஷயமல்ல. ஒரு முன்னணிப் படை முழுவதையும் பயிற்றுவிப்பதோ இன்னும் கடினம். முன்னணிப் படைக்கு மாற்றுக் கண்டுபிடிப்பது கஷ்டம். எனவே இப்படையைப் பாதுகாக்க வேண்

தால் பீடிக்கப்பட்ட மத்திய ஜெர்மனிப் பகுதியில் போலீஸ் பிரிவுகள் நிறுத்தப்பட்டன. ஆயுத எழுச்சியாக மாறிய பொது வேலைநிறுத்தத்தால் தொழிலாளர்கள் இதற்குப் பதிலளித்தனர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி மார்ச்சு 24ல் பொது வேலைநிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது. ஆனல் நாடு முழுவதிலும் இதற்குப் போதுமான ஆதரவு கிட்டவில்லை. மத்திய ஜெர்மனியில் தனிமைப் பட்டிருந்த எழுச்சி விரைவாக நசுக்கப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் ''தாக்குதல் தத்துவம்'' கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாயிற்று. காங்கிரசின் தீர்மானங்களில் இது கண்டனம் செய்யப்பட்டது.—(ப-ர்.)

டும், காரணமின்றி அவனை ஆபத்துக்குள்ளாக்கக் கூடாது'' என்றார் லெனின்.

லெனின் தந்த கடுமையான ''சம்மட்டி அடியிலிருந்து'' தப்பிப்பதற்காகத் தற்காப்பு மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட ''தாக்குதல் தத்துவத்தின்'' ஆதரவாளர், ''இடதுசாரி'' வழுவல்களிலிருந்து பேச்சை மாற்றி ''நடுநிலை'' வழுவல்களின் ஆபத்து பற்றிப் பேசத் தொடங்கினார்.

காங்கிரசின் அரசியல் கமிஷனிலும், முழுக் கூட்டத்திலும் தாம் ஏற்கெனவே சொன்ன, '' 'நடுநிலைவாதத்துடன்' நடத்தும் போராட்டத்தை விளையாட்டாகவும் வேட்டையாகவும் மாற்றியபடி'' மூன்றுவது காங்கிரசின் ''இடதுசாரிப் பிரிவு'' புரிந்த தவறு பற்றி மீண்டும் பேசினார் லெனின். கம்யூனிஸ்டு அகிலம் தொடங்கப்பட்ட காலத்தையும், அதனுள் அன்று முதல் நடந்து வரும் போராட்டத்தையும் பின்நோக்கிப் பார்த்தபடி, மெதுவாகவும், ஆலோசனையுடனும், ஒவ்வொரு வார்த்தையும் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டியவாறு அவர் பேசத் தொடங்கினார். அவரது சிந்தனையோ அவர் தந்த உருவகமோ அவருக்குப் புதியவை அல்ல. ஆனால் அவற்றுக்கு ஒரு வடிவமைப்பு இந்தக் கணத்தில்தான் கிட்டியிருக்க வேண்டும்.

''கம்யூனிஸ்டு அகிலத்தை நாம் தொடங்கிய போது, கம்யூனிஸ்டு அகிலம், ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி, வாகை சூடிய புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், குறிப்பாக சோவியத்துக்கள் பற்றிய கருத்து ஆகியவை சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு காந்த சக்தியாக விளங்கின. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சியாளராக விளங்கிய, அல்லது புரட்சியாளர் என்று தம்மை அழைத்துக் கொண்ட அனைவரையும் சோவியத்துக்கள் பற்றிய கருத்து தன்பால் இழுத்தது'' என்றார் லெனின்.

''புரட்சியாளராக இல்லாமல் வெறுமே தம்மை அவ்வாறு காட்டிக் கொண்டவர்கள் கூட சோவியத்துக்கள் பற்றிய கருத்தின்பால் ஈர்க்கப்படுவதாகப் பாவனை செய்தார்கள்'' என்றார் உடனுரையாடியவர்.

''முற்றிலும் சரி'' என்றார் லெனின். ''இதன் காரண மாகத்தான் உங்கள் தவறுகளையும் உங்கள் அனுபவத்தை யும் கணக்கிலெடுத்துக் கொண்டு 21 நிபந்தனைகளை* வகுத் தோம். காந்தத்தை நோக்கி ஈர்க்கப் படுவதெல்லாம் அதே போன்ற காந்த உருக்கே என்பது உண்மையா?'' உடனிருந்தவரின் அருகே குனிந்து சொன்னார் லெனின்.

''இல்லை!'' அவர் உளக்கிளர்ச்சியுடன் தொடர்ந்தார். ''அடிக்கடி, பெரும்பாலும் இப்படி இருக்கலாம்: காந் தத்தை நோக்கி ஈர்க்கப்படுபவை அனைத்தும் சுத்தமான உருக்காக இல்லாமல் கசடு நிறைந்ததாய் இருக்கலாம். சுத்தமான உருக்கு கிட்டுவதற்கு, முன்னால் பல முறை சுத் தப்படுத்தல் அவசியமாகும். ஆமாம், நீண்டகாலச் சுத்தப் படுத்தல் அவசியம். பலப்பல சுத்தமாகாமலே இருந்து விடலாம். 'நடுநிலை', அராஜகவாதக் கசடிலிருந்து நாம் விடுபடுவதற்காகத்தான் 21 நிபந்தனைகள் இருக்கின்றன.

''நீங்கள் எவ்வளவுதான் புகழ்ந்த போதும் எங்கள் கட்சியும் உடனடியாக உருக்காகி விடவில்லை. அது உருக்காவதற்கு மூன்று புரட்சிகள் தேவையாக இருந்தன. இன்னும் அதில் நிறையக் கசடு இருக்கிறது. கம்யூனிஸ்டு அகிலத்தை நோக்கி ஈர்க்கப்படும் அனைத்திலிருந்தும் கசடை அகற்றுவதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும். நீங்கள் லேவி** பற்றிச் சொல்வது சரி

---

* கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதற்கு 21 நிபந்தனை கள் புது மாதிரியான கட்சி அமைப்பது பற்றிய லெனினது கோட்பாடுகளின் அடிப்படையில் வகுக்கப் பட்டன. 1920 ஜூலை-ஆகஸ்டில் நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் இவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. கம்யூனிஸ்டு அகிலத்துப் பிரிவுகளுக் குள் ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதமும் ''வலதுசாரி'' சந்தர்ப்பவாதமும் நுழைந்து விடாமல் இந்த நிபந்தனை கள் தடுத்தன.—(ப-ர்.)

** மத்திய ஜெர்மனியில் மார்ச்சு மாதம் நடந்த எழுச்சிக்குப் பின்பு, இவ்வெழுச்சிக்குத் தீவிர எதிரியாக இருந்தவரான லேவி ஜெர்மானிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியை பக்கூனின்வாதம் நிறைந்தது என்று

யாக இருக்கலாம். நீங்கள் லேவியை விடச் சிறந்த புரட்சியாளர்கள் என்று நான் நம்புகிறேன். லேவியை விடச் சீக்கிரமாக நீங்கள் புரட்சி செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், உங்கள் தவறுகள் பற்றிய பிரச்னைகள் பலவற்றில் அவர் எழுதுவது சரியே.

''லேவி நீக்கப்பட்டதுடன் கசடுகளை அகற்றுகிற வேலை முடிந்து விடவில்லை. மக்கள் திரளின் இடையில் நடுநிலை வாதத்துடன் நீங்கள் வெற்றிகரமாகப் போராட விரும்பினால் 'இடதுசாரி' வழுவல்களிலிருந்த நீங்களும் உங்களிடம் உள்ள கசடுகளை அகற்ற வேண்டும்.''

கம்யூனிஸ்டு அகிலத்தின் தோற்றம் பற்றியும், வழுவல்களுடன் போராட வேண்டிய அவசியத்தையும், நிபந்தனைகளைப் பற்றியும் லெனின் சொன்னது இதுதான்.

குற்றம் சாட்டினார். ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினரில் லட்சக் கணக்கானவர்கள் நடத்திய போராட்டத்தை ''பக்கூனின்வாதக் கலகம்'' என்று அழைத்தார். இதற்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். லேவியை இறுதியாகக் கண்டனம் செய்த கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசுக்குப் பின்பு, கம்யூனிசத்தின் விரோதியாகப் பாவிக்கப்பட்டு அவர் கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து நீக்கப்பட்டார்.—(ப-ர்.)

என்றென்றும் மக்களுடன்

லெனின்—தலைவர், தோழர், மனிதர்

கர்பீன்ஸ்கி

சாமானிய உழைப்பாளி மக்களை லெனின் நேசித்தார். லெனினது சவ அடக்கத்தின் போது இது பற்றி நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு நன்ருகச் சொன்ஞர்:

''எல்லா உழைப்பாளர்களின் பாலும் அவரது நெஞ்சம் ஆர்வமிக்க அன்பு கொண்டு துடித்தது.''

சோவியத் அரசாங்கத்தின் தலைவராக இருந்த போது விளதீமிர் இலீச் தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும் விருப்பமுடன் உரையாடினூர். மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், மக்கள் கமிசாரவை உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்தை அறிவது போன்றே தொழிலாளரின், விவசாயியின் மனநிலையை அறிவதும் அவருக்கு முக்கியமானதாகும்.

தொழிலாளர்களுடன் உரையாடுவதற்குக் குறிப்பாக விரும்பினூர் விளதீமிர் இலீச். தமது சிந்தனைகளை அவர்களுடன் அவர் பகிர்ந்து கொண்டார். அவர்களது கருத்துக்களை மிகவும் மதித்தார்.

பெத்னதா (''ஏழ்மை'') என்ற பத்திரிகையில் வந்த விவசாயிகளின் கடிதங்களை உயர்வாக மதித்தார்.

''இவையல்லவா உண்மையான மனித ஆவணங்கள்! எந்தவொரு பேச்சிலும் நான் இதைக் கேட்க முடியாது!''

பெத்னதாவின் ஆசிரியராக இருந்த நான் விவசாயிகளின் கடிதங்களை அவரிடம் எடுத்து வரும்போது என்னிடம் அவர் இவ்வாறு சொன்ஞர். கிராமத்தில் வாழ்க்கை எப்படி இருக்கிறது, கிராமத்தின் தேவை என்ன என்று அவர் நீண்ட நேரம் கூர்ந்து கேட்பார். ஒரு கடிதத்தைக்

கையிலெடுத்துக் கொண்டு கவனமாகப் பார்ப்பார். வ்பெரி யோத், புரொலித்தாரி ("பாட்டாளி") என்ற பத்திரிகை களுக்காக, தொழிலாளர்கள் எழுதிய கடிதங்களை எவ் வளவு ஆர்வமுடன் அவர் படித்தார், திருத்திஞர் என்பது எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

1920—1921 பனிக்காலத்தில் நடந்த உரையாடல் குறிப்பாக என் நினைவில் பசுமையாக இருக்கிறது. இது கஷ்டமான காலம். உள்நாட்டுப் போர் முடிந்த நேரம். உழைப்பாளர்களின் தியாகங்களும் இழப்புக்களும் உச்ச கட்டத்தை அடைந்திருந்த நேரம். பெத்னதாவுக்கு ஏராள மான கடிதங்களை எழுதியது கிராமம். ஒவ்வொரு கடிதத் தையும் பற்றி விளதீமிர் இலீச் என்னை நிறையக் கேள்வி கள் கேட்டார்.

"இதோ, சோவியத் ஆட்சி ஜார் ஆட்சியை விட மோசம் என்று எழுதுகிறார்கள்" என்றேன் நான்.

"ஜார் ஆட்சியை விட மோசமா?" என்று திரும்பக் கேட்டு விட்டுக் கண்களை நெரித்துச் சிரித்தார் விளதீமிர் இலீச். "எழுதுவது யார்? குலாக்கா? மத்தியதர விவ சாயியா?"

விவசாயிகள் கடிதங்களிலிருந்து மேற்கோள்கள் தந்து, கிராமத்திலுள்ள நிலைமை பற்றி விவரமான அறிக்கை சமர்ப்பிக்கும்படி அவர் கோரிஞர். உரையாடல் அத் துடன் முடிந்தது.

கட்டாயத் தானியக் கொள்முதல்* பற்றியும், விவ சாயிகளின் கடிய நிலைமை பற்றியும் ஐம்பதுக்கு மேற்பட்ட கடிதங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. லெனினது சொந்த அறிக்கையில் இவை சேர்க்கப்பட் டன. விவசாயிகள் கடிதங்களின் பொழிப்பு வீணுகப் போக வில்லை என்று நான் விரைவில் உறுதி கொண்டேன்.

---

* கட்டாயத் தானியக் கொள்முதல்—உணவுப் பொருள் சேகரிப்பதற்காக அரசு கடைப்பிடித்த நிர்ப்பந்த முறை. அன்னிய இராணுவத் தலையீட்டின் போது, உள்நாட்டுப் போரின் போது (1918—1921) இம்முறையைச் சோவியத் அரசு கடைப்பிடித்தது. விவசாயிகளிட

கட்சியின் 10ஆவது காங்கிரசில் லெனின் சமர்ப்பித்த கட்டாயத் தானியக் கொள்முதலுக்குப் பதிலாக உணவுப் பொருள் வரி விதிப்பது பற்றிய அறிக்கையைக் கேட்ட நான் விவசாயிகளின் கடிதங்களை லெனின் இதற்கு அடிப் படையாகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று பல சந்தர்ப் பங்களில் உணர்ந்தேன்.

அதிலிருந்து பெத்னதாவின் ஒழுங்கான அறிக்கைகள் தமக்குக் கிட்ட வேண்டும் என்று விளதீமிர் இலீச் கோரினார். விளதீமிர் இலீச் நுணுக்கி நுணுக்கி எழுதிய ஒரு துண்டுக் காகிதம் என்னிடம் இன்னும் இருக்கிறது. அதை அப்படியே கீழே தருகிறேன்:

''26. 1. 1922.

தோழர் கர்பீன்ஸ்கி!

பின்கண்டவை பற்றி எனக்குச் சுருக்கமாக (அதிகபட்சம் 2—3 பக்கங்கள்) எழுத மாட்டீர்களா? விவசாயிகளிட மிருந்து பெத்னதா பத்திரிகைக்கு எத்தனை கடிதங்கள் வந்திருக்கின்றன? முக்கியமாக (குறிப்பாக, முக்கியமாக), புதியதாக இக்கடிதங்களில் என்ன இருக்கிறது? அவர்கள் மனநிலை எப்படி? முக்கியமான பிரச்னை என்ன?

இரண்டு மாதத்திற்கு ஒருமுறை (அடுத்தது 15.3. 1922) இத்தகைய கடிதங்கள் நீங்கள் எழுத முடியுமா?

அ) கடிதங்களின் சராசரி எண்ணிக்கை

ஆ) மனநிலை

இ) மிக முக்கியமான பிரச்னை.

கம்யூனிச வாழ்த்துக்களுடன்

லெனின்''*

மிருந்த அதிகப்படியான உணவுப் பொருளையும், தீவனத் தையும் நிர்ணயமான ஒரு விலை கொடுத்து அரசு எடுத்துக் கொண்டது. 1921ல் கட்டாயத் தானியக் கொள்முத லுக்குப் பதிலாக நிர்ணயமான உணவுப் பொருள் வரி விதிக்கப்பட்டது. இது விவசாயிகட்கு அதிக அனுகூல மானது.—(ப-ர்.)

* V. I. Lenin, *Collected Works*, "To V. A. Karpinsky", Vol. 35, p. 543.—(ப-ர்.)

அரசு, கட்சிப் பணிகளில் மனித ஆற்றலுக்கு மேல் அதிகமாக ஈடுபடுத்தி உழைத்து வந்த விளதீமிர் இலீச் பார்வையாளர்களை வரவேற்கவும் நேரம் கண்டுபிடித்தார். தாமே அவர்களை வரவேற்று அவர்களுடன் உரையாடினார். அரசின் தலைவருக்கு இது அவசியம் என்று அவர் கருதியதால் மட்டும் இவ்வாறு அவர் செய்யவில்லை. மக்களுடன் உயிர்ப்புள்ள உரையாடல் நிகழ்த்த வேண்டிய ஒரு கட்டாயத் தேவையை அவர் உணர்ந்ததே இதற்கு முக்கியக் காரணம்.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வாகனங்கள் மூலமாகவும் கால்நடையாகவும் விவசாயிப் பிரதிநிதிகள் லெனினிடம் வந்தார்கள். விவசாயிப் பிரதிநிதிகளைச் சந்திக்க விசேஷ தினம் வைத்திருந்தார் லெனின்.

குறித்த நாளில் கைத்தறித் துணிக் கோட்டுக்களும், மரவுரிச் சோடுகளும் அணிந்து தோள்களில் மூட்டை முடிச்சுகளுடன் அவர்கள் கிரெம்ளினுக்கு வந்தார்கள். மூட்டை முடிச்சுகளைத் தரையிலும் சுவற்ருேரமாகவும் வைத்து விட்டு பதட்டத்துடன் கிசுகிசுத்துக் கொண்டு மக்கள் கமிசாரவைத் தலைவரை, விளதீமிர் இலீச்சைப் பார்ப்பதற்கு எப்போது தம்மை அழைப்பார்கள் என்று காத்திருந்தனர்.

சிறிது நேரமே அவர்கள் காத்திருக்க நேர்ந்தது. விரைவில் அவர்கள் கூப்பிடப்பட்டார்கள். இடுப்பு வார்களை இழுத்துக் கட்டியபடி, உள்ளங் கையால் தலைமுடியை நீவி விட்டுக் கொண்டு மரியாதையுடன் லெனினது அறைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அவரோ மேசைக்குப் பின்னுலிருந்து அவர்களை நோக்கி எழுந்து வந்தார். ஒவ்வொருவருடனும் அன்புடன் கை குலுக்கிவிட்டு, விருந்தினர்களை உட்கார வைத்தார்.

''தாத்தா, நீங்கள் இந்தச் சாய்வு நாற்காலியில் உட்காருங்கள்!''

ஒவ்வொருவரின் பெயரையும், குடும்பப் பெயரையும், தந்தை பெயரையும், அவர் எங்கிருந்து வருகிருர் என்

பதையும் விளதீமிர் இலீச் கேட்டார். எளிய மனப்பூர்வமான உரையாடல் தொடங்கியது.

விளதீமிர் இலீச் எல்லோரையும் நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொருவரையும் குடும்பப் பெயர், தந்தை பெயர் சொல்லி அழைத்தது வந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியது. அவர்களது கிராமங்களின் தேவைகள் என்ன என்றும், அவர்களிடம் இருக்கும் நிலம் எத்தகையது என்றும் அவர் அறிந்திருந்ததும் அவர்களைச் சுரண்டுகிற நிலச் சுவான்தாரரின் பெயரையும் கூட விளதீமிர் இலீச் சொன்னதும் விவசாயிகளை இன்னும் அதிகமாக வியப்பில் ஆழ்த்தியது. நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்தின் பொருளாதாரத்தையும் மிகவும் நன்ருக லெனின் ஆய்வு செய்திருந்தார் என்பது பற்றி விவசாயிகட்கு எதுவும் தெரியாது.

வரவேற்பறையில் ஒருநாள் பின்கண்ட சம்பவம் நடந்தது. வந்தவர்களில் ஒருவர் திடீரென்று குதித்தெழுந்து மிகவும் பதற்றத்துடன் சொன்ஞர்:

''தோழர் லெனின், இதெல்லாம் என்ன?! அவர்கள் எங்களை முன் போலவே கசக்கிப் பிழிகிருர்கள், கசக்கிப் பிழிகிருர்கள்!''

விளதீமிர் இலீச்சுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இவான் ரதியோனவிச், அமைதி கொள்ளுங்கள். என்னவென்று விளக்கிச் சொல்லுங்கள். அவர்கள் என்பது யார்?''

''யார் என்கிறீர்களா? எங்கள் கிராம சோவியத்துக் காரர்கள்! அநியாய வரிகள் தண்டி எங்களை வாட்டி வதைக்கிருர்கள்!''

''அவர்களைத் தேர்ந்தெடுத்தது யார்?''

''நாங்கள்தான். வேறு யார்?...''

''வேறு ஆட்களைத் தேர்ந்தெடுங்களேன்!''

''அப்படி முடியுமா என்ன?''

''முடியும். அப்படித்தான் செய்ய வேண்டும். மக்களின் நம்பிக்கைக்கு நியாயமாக நடந்து கொள்ளாத எந்த சோவியத் பிரதிநிதியையும், அவரது பணியின் காலம் முடிவதற்குள் ஒதுக்கி வேருெருவரைத் தேர்ந்தெடுக்க

சோவியத் சட்டம் அனுமதிக்கிறது. இதுதான் விஷயம் இவான் ரதியோனவிச்!''

இத்தகைய உரையாடல்களுக்குப் பின்பு அவசியமான சந்தர்ப்பங்களில் உடனடியாக ஆணைகள் பிறப்பித்தார் விளதீமிர் இலீச். தொழிலாளர்கள், விவசாயிகளுடன் நடந்த உரையாடல்களில் கிடைத்த தகவல்கள் அவ்வப் போது தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கு அடிப்படை யாகத் திகழ்ந்திருக்கின்றன.

புத்திலவ் தொழிற்சாலையில் லெனின்

தனிலவ்

கேரென்ஸ்கியை முறியடிப்பதற்காக இராணுவ-புரட்சிக் கமிட்டி ஸ்மோல்னி மாளிகையில் படைப் பிரிவுகளை அவசர அவசரமாக ஒழுங்கமைத்தது. பெத்ரோகிராதில் பொதுவான படைதிரட்டலுக்காகக் காத்திராமல் புத்திலவ் தொழிற்சாலைக்காரர்கள் தாமாகவே செங்காவல் படைப் பிரிவுகளை அமைத்து, தொழிற்சாலையிலிருந்து நேரடியாக, மேற்குப் போர்முனைக்கும், கிராஸ்னயே செலோவுக்கும், தய்த்சீவுக்கும், லூகாவுக்கும் ரயில்களிலும் கால்நடையாகவும் எதிர்ப்புரட்சி இராணுவத்தை முறியடிக்கக் கிளம்பினார்கள்....

லூகா காடுகளில் கேரென்ஸ்கி படைப் பிரிவுகளை நாங்கள் சந்திக்க நேர்ந்தது. நாங்கள் அவர்கள் மீது தோட்டாக்களைப் பொழிந்தோம். அவர்கள் எலிகளைப் போல ஓடினார்கள். ஆனால், பீரங்கிகளுக்குப் பார்வைக் கண்ணாடிகளோ தொலைபேசித் தொடர்புக்கான கம்பிகளோ கருவிகளோ எங்களிடம் போதவில்லை.....

போர்முனைக்குப் பார்வைக் கண்ணாடிகளும் தொலைபேசிக் கருவிகளும் கொண்டு வருவதற்காக அன்தோனவ்-அவ்சேன்கோ—படைப்பிரிவுக்கு இவர் கமாண்டர்—என்னை அவசரமாகப் புத்திலவ் தொழிற்சாலைக்கு அனுப்பினார்....

புத்திலவ் தொழிற்சாலையின் முந்தைய ரயில் பெட்டிப் பிரிவு இருந்த தொழிற்சாலைக் கமிட்டியில் என் தோழரும் நானும் 1917 அக்டோபர் 28—29 இரவில் முறை வேலை பார்த்தோம். முற்றத்தில் ஈரமாகவும் குளிராகவும் இருந்தது. பசி வேறு. தொழிற்சாலைத் தோட்டக்காரர் எங்

களுக்குக் கொண்டு தந்த உருளைக் கிழங்கைப் படைவீர னின் கலயத்தில் அடுப்பின் மீது இட்டு வேக வைத்தோம். தேநீர் தயாரித்து, சம்பவங்களைப் பற்றிப் பேசிக் கொண் டிருக்கிறோம்.

சுமார் இரவு ஒரு மணிக்கு வெளிவாசலுக்கு இட்டுச் செல்லும் பக்கத்து அறையில் இரண்டு நபர்கள் தோன் றினார்கள். ஒருவர் தோல் கோட்டும் தோல் டிராயரும் ருஷ்யக் காலணிகளும் அணிந்திருந்தார். இடுப்பில் ரிவால் வர் தொங்கியது. இரண்டாவது நபர்—நடுத்தர உயரம். இலையுதிர் கால மேல் கோட்டு அணிந்திருந்தார். காலரைத் தூக்கி விட்டிருந்தார். தலையில் தொப்பி.

முதலாவது ஆள் யார் என்று எனக்கு இப்போது நினை வில்லை. ஆனால் மேல் கோட்டு அணிந்திருந்தவர் லெனின்.

இவ்வளவு நேரம் கழித்து லெனின் தொழிற்சாலையில் என்ன செய்கிறார் என்று நாங்கள் சிறிது பதட்டப்பட் டோம்.... அவர்கள் எங்கள் அறைக்கு வந்தார்கள். லெனின் கேள்விகள் கேட்டார்:

''தொழிற்சாலையில் தொழிலாளர்கள் மனநிலை எப்படி இருக்கிறது?''

''ஆட்சியைப் பிடித்துக் கொண்டது பற்றித் தொழி லாளர்கள் என்ன சொல்கிறார்கள்?''

''போர்முனைக்குத் தொழிலாளர்கள் போகிறார்களா?''

''மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் களும் எப்படி நடந்து கொள்கிறார்கள்?''

''உணவுப் பொருள்கள் கிட்டுகின்றனவா?''

''தொழிற்சாலையில் எரிபொருள் இருக்கிறதா?''

''படைவீரர்களின் எத்தனை பிரிவுகளைப் போர் முனைக்கு நீங்கள் அனுப்பியிருக்கிறீர்கள்?''

''அவர்களிடம் நல்ல ஆயுதங்கள் இருக்கின்றனவா? நன்றாக அவர்கள் போராடுகிறார்களா? பீதி கொண்ட மனநிலை அவர்களிடம் நிலவுகிறதா?''

தொழிற்சாலையில் தொழிலாளர்களின் மனநிலை நன்றாக இருக்கிறது என்றும் பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்கள் போர்முனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்

கள் என்றும் நாங்கள் விளக்கிக் கூறினோம். ஆரம்பத்தில் ஆயுதங்கள் போதவில்லை, இப்போது போதுமான அளவு இருக்கின்றன. அதிகப்படியான படைப்பிரிவுகளை ஒழுங்கமைக்கிறோம். நிலக்கரி சுமந்து போகும் ரயில் பெட்டிகளைக் கொண்டு, தொழிற்சாலையில் உள்ள விசேஷ உருக்கின் உதவியால் நாங்கள் நல்லதொரு கவச ரயில் கட்டினோம்....

பின்னர் அவருக்குத் தேநீரும் வேக வைத்த உருளைக் கிழங்கும் கொடுத்து உபசரித்தோம்:

''விளதீமிர் இலீச், சாப்பிட விரும்புகிறீர்களா?''

ஆர்வமுடன் அவர் இதற்கு இணங்கினார்:

''சந்தோஷமாகச் சாப்பிடுவோம்.''

அவர் ரொட்டியுடன் உருளைக் கிழங்கு சாப்பிட்டார், ஒரு குவளைத் தேநீர் அருந்தினார்.... அவர் ஆவலுடன் சாப்பிட்டார். நீண்ட நேரமாக அவர் சாப்பிடவில்லை என்று தெரிந்தது. முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்.

இங்கு வந்த காரணத்தைக் கேட்ட போது அவர் சொன்னார்:

''கிராஸ்னயே செலோவில் அவ்சேன்கோவை நான் பார்த்தேன். திரும்பும் வழியில், புத்திலவ் தொழிற்சாலையில் நிலைமை எப்படி இருக்கிறது என்று அறிந்து போக இங்கு வந்தேன்....''

நாங்கள் நால்வர் உட்கார்ந்திருந்தோம். அரைமணி நேரம் லெனின் எங்களுடன் உரையாடினார்.

அப்போது வெகுநேரம் ஆகியிருந்தது. அன்புடன் எங்களிடமிருந்து அவர் விடை பெறுகையில் வலுவுடன் கை குலுக்கினார். வெற்றி கிட்டட்டும் என்று வாழ்த்தினார். நாங்கள் வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தொழிற்சாலையின் வெளிவாயில் வரை அவரை நாங்கள் வழியனுப்பினோம். தொழிற்சாலைக் கமிட்டி அறைக்கு திரும்பிய போது இந்தச் சந்திப்பால் விளைந்த மகிழ்ச்சி உணர்ச்சியால் நாங்கள் நிறைந்திருந்தோம்.

தோழர் லெனினைப் பற்றி

கரல்யோவ்

1921 மே மாதம் வரை இவானவோ-வஸ்நெசேன்ஸ்கில் இடையருது வேலை செய்துவந்த நான், இவானவோ-வஸ்நெசேன்ஸ்க் குபேர்னியா தொழிற்சாலைத் தொழிலாளர்களின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், விளதீமிர் இலீச்சை அடிக்கடி சந்திக்க நேர்ந்தது. இவானவோ-வஸ்நெசேன்ஸ்க் தொழிலாளர்களிடமிருந்து வேதனைகள், தேவைகள், மகிழ்ச்சிகள் ஆகிய அனைத்தையும் நான் அவருக்குக் கொண்டு வந்தேன். பதிலுக்கு, தொழிலாளர்களுக்காக இலீச்சிடமிருந்து வாழ்த்துக்களைத் தவிர, சில சமயங்களில் தொழிலாளர்களின் கடிய நிலையை மேம்படுத்துவதற்காகப் பொருள்வகை நலன்களைக் கொண்டு வந்தேன். இலீச்சை இழந்ததால் நேர்ந்துள்ள பொதுவான துக்க நேரத்தில், இழப்பு ஏற்படுத்திய பாரம் அனைத்தையும் இவானவோ தொழிலாளர்கள் உணருகிருர்கள். மிகக் கடுமையான சோதனைக் காலத்தில் ஆறுதல் வார்த்தைகளோடு மட்டுமின்றி காரியங்களோடும் எங்களிடம் வந்த மனிதராக அவரை அவர்கள் நினைவு கொண்டிருக்கிருர்கள், நினைத்துப் போற்றுவார்கள்.

1920 வசந்த காலத்தில், அடைத்திருந்த வளையத்தை அகலப்படுத்தி, ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் பிரதேசத்தை செஞ்சேனை பரவலாக்கிய போது, தொழிலாளர்களிடமும் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமும் தொழில் துறையை மீண்டும் தொடங்குவது பற்றிய எண்ணம் உடனடியாகத் தோன்றியது. துருக்கிஸ்தான் சோவியத் கைகளில் இருக்கிறது; அப்படியாளுல் பஞ்சு கிடைக்கும். கிரோஸ்

ணியும் தன்பாசும் நம்மிடம்; அப்படியானல் நிலக்கரி, எண்ணெய்—எரிபொருள் கிட்டும். மூளைக்கு வேலை கொடுத்தால் மூடியிருக்கும்ஆலைகளில் சிலவற்றை வேறிடங்களுக்கு மாற்றி, அவற்றைச் சிறந்த ஆலைகளாக ஒன்றுசேர்க்கலாம். இவானவோவில் இருந்த துணியாலைத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களையும் பொருளாதார நிர்வாகிகளையும் கொண்ட பல கூட்டங்கள் நடத்தியது. குபேர்னியாவில் இருக்கிற பதிற்றுக் கணக்கான சில்லறை நிர்வாகங்களை சுயாட்சி கொண்ட ஒரேயொரு பெரிய குபேர்னியா நிர்வாகமாக மாற்றிஞல்தான் இந்த எண்ணத்தை நிறைவேற்ற முடியும் என்று இந்தக் கூட்டங்களில் ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆலைகளில் இருக்கின்ற அனைத்தையும் துல்லியமாகக் கணக்கெடுக்க வேண்டும். சிறந்த ஆலைகளைத் தேவையான வேலையில் ஈடுபடுத்த வேண்டும்.

இவானவோ தொழிலாளர் நிறுவனங்கள் காரியங்களைத் தள்ளிப் போடவில்லை. குபேர்னியாவிலிருந்த எல்லா இடங்களுக்கும் 18 நிபுணர்களை அவை அனுப்பின. குறிப்பிடப் பட்ட சூழ்நிலைகளில் மத்திய நிர்வாகத்தின் குறைந்த பட்ச ஆதரவுடன், ஆறு மாத காலத்தில் குடியரசுக்கு 8,5 கோடி மீட்டர் துணி உற்பத்தி செய்து கொடுக்க முடியும் என்று உறுதிப்படுத்துகிற விவரங்கள் விரைவில் அவற்றுக்குக் கிடைத்தன.

நகல் வேலைத்திட்டத்துடன் மத்திய நிர்வாகத்திடம் சென்றேன். பிரதான துணியாலை நிர்வாகமும், துணியாலைத் தொழிலாளர்களின் சங்கமும் துரதிருஷ்டவசமாக, திட்டத்தை ஒத்துக் கொள்ளவில்லை, சோர்வு மனப்பான்மையுடன் அதைப் பார்த்தன. மற்ற தலைவர்களோ நான் சொல்வதைச் சரியாகக் கேட்கவில்லை. தொடங்கி விட்ட வேலையை உடைப்பில் போட மனம் வரவில்லை. குடியரசில் துணித் தேவையோ மிக அதிகமாக இருந்தது. தோழர் லெனின் மீதே இறுதி நம்பிக்கை வைத்திருந்தோம்.

1917ல் தொழிற்சங்கங்களின் அனைத்து ருஷ்ய மாநாட்டில், கம்யூனிஸ்டுகளின் பிரிவில் லெனினை நான் முதன்

முதல் சந்தித்ததை நினைத்துப் பார்த்தேன். அவரைப் பார்ப்பதற்காக முயற்சி செய்யத் தொடங்கினேன். அவர் என்னை அழைத்தார்.... எதற்காக வந்தேன், ஏன் அவரை அணுகினேன் என்று சுருக்கமாக அவரிடம் சொன்னேன். லெனின் என்னருகே வந்து என் தோள்களைப் பிடித்துக் கொண்டு கேட்டார்: ''எட்டு கோடி மீட்டருக்கு மேலாகத் துணி உற்பத்தி செய்ய முடியும் என்பது உண்மை தானா?'' இதற்கு ஆதரவாக நல்ல அடிப்படைகள் கொண்ட விவரங்கள் இருக்கின்றன என்று நான் பதில் சொன்னேன். என் கைகளில் இருந்த மொத்தமான காகிதக் கட்டைப் பார்த்த வி. இ. லெனின் ஒரு பெருமூச்சுடன் சொன்னார்: ''விவரங்கள் நல்லவையாக இருக்கலாம். ஆனால் அவற்றை இப்போது படிக்கப் போவது யார்? மக்கள் கமிசாரகம் இந்த ஆண்டு மக்களுக்கு சுமார் 6 கோடி மீட்டர் துணிதான் வழங்க விரும்புகிறது. ஆறு மாத வேலையில் இன்னும், 8,5 கோடி மீட்டர் கிடைத்தால் நன்றாகத்தான் இருக்கும். இப்போது காரியாலயத்துக்குப் போங்கள். உங்கள் கோரிக்கைகளை சுருக்கமான அம்சங்களில் எழுதிக் கொடுங்கள்.''

நான் வரைந்து தந்த 18 அம்சங்களை விளதீமிர் இலீச் பார்த்தார். கோட்பாடு பூர்வமாக அவற்றை ஒத்துக் கொண்டார். இரண்டாவது நாள், சம்பந்தப்பட்ட இலாகாக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கமிஷன் கூடியது. அன்று மாலையே நான் வாசித்த சிறிய அறிக்கைக்குப் பிறகு உழைப்பு,பாதுகாப்பு சோவியத்துக்குப் போயிற்று பிரச்னை. விளதீமிர் இலீச் நேரத்தை மதித்தது போல நாமும் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர் அனைத்திற்கும் முன்னேற்பாடு செய்தார். இவானவோ-வஸ்நெசேன்ஸ்குக்கு ரயில் கிளம்புகிற நேரத்தை முன்னதாகவே என்னிடம் கேட்டு வைத்துக்கொண்டார். மாலை ஏழு மணிக்கு முதலாவதாக விவாதிக்கப்பட இப்பிரச்னையை முன்வைத்தார். செயலாளர் மூலம் காரை அழைத்தார். 7.40க்கு லெனின்பால் நன்றியுணர்வுடன் மகிழ்ச்சி கொண்டு வெது வெதுப்பான ரயில் பெட்டியில் பயணம் செய்தேன்.

இவானவோவுக்குத் திரும்பி வந்த பின்பு ஆலையின் உணவு விடுதியில் உடனடியாகக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கிருந்த பல்லாயிரம் தொழிலாளர்கள் லெனினுக்கு ஒரு முகமாக நன்றி சொன்னார்கள்.

இரண்டு மாதங்கள் சென்றன. தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களை ஆலைகளுக்குக் கவர்வதற்காகவும், ஆலைகளில் கம்யூனிஸ்டு நிறுவனங்களை அமைப்பதற்காகவும் மிக அதிக முயற்சிகள் செய்தன. சோவியத் அலுவலகங்களில் இருந்த 25% பணியாளர்களை ஆலை வேலைக்கு ஒன்று திரட்டின. தொழிலாளர்கள் ஒவ்வொரு நாளும் உற்பத்தித் திறனை அதிகரித்தனர். இந்த நேரத்தில் லெனினுக்கு முன்னால் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட மத்திய இலாகாக்களின் பிரதிநிதிகள் தமது பொறுப்புக்களை ஒரு சிறிதும் நிறைவேற்றவில்லை. மீண்டும் மாஸ்கோ பயணம். இலாகாத் தலைவர்களிடம் மீண்டும் பயனற்ற நடைகள். மறுபடியும் நான் இலீச்சை அணுகினேன்.

கிசெலேவ், ஸீதிலெவ், நான் ஆகிய மூவரையும் தோழர் லெனின் 1920 நவம்பர் 15ல் வரவேற்றார். அவரது முதல் வார்த்தைகள்: ''தோழர்களே, வெற்றிக்கு வாழ்த்துக்கள்''. பெரிகோப் கைப்பற்றப்பட்டு விட்டதுபற்றி அப்பொழுதுதான் வானொலித் தந்தி அவருக்கு வந்திருந்தது. இவானவோ தொழிற்துறையின் தேவைகளை நான் சொல்லத் தொடங்கினேன். பார்வைக்கு எனது பேச்சையே லெனின் கேட்காதது போலத் தோன்றியது. எனது பேச்சுடன் சம்பந்தமில்லாதது போன்ற டஜன் கணக்கான கேள்விகளை அவர் பொழிந்தார்: ''தொழிலாளர்கள் காய்கறித் தோட்டங்களில் எவ்வளவு விளைச்சல் பெற்றார்கள்? அவர்கள் எப்படித் தோட்டம் போட்டார்கள்? எதைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்துகிறார்கள்? வீட்டு வசதி எப்படி?'' தொழிலாளர்களின் குழந்தைகளையும் அவர் மறந்து விடவில்லை.* உள்ளூர்ப் பத்திரிகை எத்தனை பிரதி

---

* குழந்தைகளின் மீது குறிப்பாக நேசம் கொண்டிருந்தார் தோழர் லெனின். குபேர்னியா சம்பந்தமான

கள் வினியோகமாகிறது என்று கேட்டார். ஆண்டு மலர் என்ற தகவல் நூல் நாங்கள் மூவாயிரம் பிரதிகள் வெளியிட்டோம் என்று நான் தவருகச் சொன்னபோது, உடனடியாக எனது தவறை அவர் திருத்திஞர்: ''மூவாயிரமல்ல தோழர் கரல்யோவ், ஐந்தாயிரம்.'' எங்கள் ஆண்டு மலர் அவர் மேசை மீது இருந்தது. பின் அட்டையில் ''அச்சிட்டது 5000 பிரதிகள்'' என்று எழுதப்பட்டிருந்தது. காகிதப் பற்றுக்குறையால் 8000 பிரதிகள் மட்டுமே அச்சாகி வந்த பத்திரிகைப் பிரதிகளின் எண்ணிக்கை போதாது என்று தோழர் லெனின் சுட்டிக் காட்டிஞர். ஆண்டு மலர் வெளியிடுவதில் அவ்வளவு காகிதம் செலவிட்டிருக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டார். காய்கறித் தோட்டங்களைத் தொழிலாளர்கள் பண்படுத்துகிருர்கள் என்றும், குதிரைகள் இல்லாததால் 10—15 ஆட்களாகச் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களே ஏர்கட்டி இழுக்கிருர்கள் என்றும் நான் சொன்ன போது, விவசாயத் துறை மக்கள் கமிசார் தோழர் சேரெதாவுக்கு லெனின் உடனடியாக ஒரு குறிப்பு எழுதிஞர்: ''வெளிநாட்டிலிருந்து பெத்ரோகிராதுக்கு வந்திருக்கும் இருபது மின்சார ஏர்களில் மூன்றை இவானவோ தொழிலாளர்களுக்காக அனுப்பவும்....''

இவ்வாறு உரையாடல் நடத்தியவாறு இருந்ததால் நான் நினைத்தேன்: ''எனது அறிக்கைக்கு அதோகதிதான். பிரதானமானதை லெனின் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனல், உரையாடல் முடிந்த பின்பு, நான் சொன்னவற்றில் ஒரு வார்த்தையைக் கூட லெனின் விட்டுவிடவில்லை என்றும், தமது முடிவுகளை அவர் ஏற்கெனவே செய்து விட்டார் என்றும் தெரிந்தது. இத்தகைய திறன் கண்டு நான் திகைப்படைந்தேன். இந்த முறை எல்லாவற்றையும் பற்றி அவருடன் நிறையப் பேசிய, உடனடிப் பிரச்னைகள் அனைத்தையும் சொல்லி விட்ட திருப்தி

வேலைகளுடன் நான் வந்த போதெல்லாம் குழந்தைகளின் வாழ்க்கை பற்றி விவரமாகக் கேள்விகள் கேட்டார்.—(ஆ-ர்.)

எனக்குக் கிடைத்தது. வி. இ. லெனின் நல்ல மனநிலை கொண்டிருந்தார். வார்த்தைகளை வெளியிடுகின்ற விதத்தில் எத்தகைய கூச்சமும் நாம் அடையாதவாறு லெனின் நம்மைக் கவர்ந்தார். எல்லாவற்றையும் அவரிடம் கொட்டி விடுவோம். நாம் மறந்து விடுவதையோ கேள்விகள் மூலம் வெளிக் கொணர்ந்து விடுவார். இந்தத் தடவை எங்கள் உரையாடல் ஒன்றரை மணி நேரம் நடந்தது. இரண்டு நாள் கழித்து நான் இவானவோ வந்து தொழிலாளர்களிடம் லெனினைப் பார்த்ததால் விளைந்த பயனைச் சொன்னேன்''.

ஒவ்வொரு முறை வரும் போதும் தம்மை வந்து சந்திக்குமாறும் எங்கள் வெற்றிகளைப் பற்றிச் சொல்லுமாறும் லெனின் சொன்ன ஆலோசனையைப் பயன்படுத்திக் கொண்டு நான் இந்தப் பணிக் காலத்தில் விளதீமிர் இலீச்சைப் பலமுறை சந்தித்தேன். உணவுப் பொருள்களுக்காகத் தமது பிரதேசங்களுக்குச் சென்று வர விசேஷ ரயில்கள் பெறுகின்ற உரிமையும், தமது சொந்த சக்திகளைக் கொண்டு அளவு இல்லாத எண்ணிக்கையில் ரயில் பெட்டிகளைப் பழுது பார்க்கிற உரிமையும், உணவுப் பொருள்களுக்காகவும் எண்ணெய்க்காகவும் பயண மார்க்கங்களுக்கு ஏற்பாடு செய்கின்ற உரிமையும் இவானவோ தொழிலாளர்களுக்காக இலீச்சின் மூலம் நான் பெற்றேன். துணி மணிகள் எடுத்துச் செல்வதற்காக மாஸ்கோவிலிருந்து 20 லாரிகள் எங்களுக்கு வழங்கப்பட்டன. அதற்கு மேலும் மற்ற பல பொருள்கள் வழங்கப்பட்டன. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அதிகப்படி ரேஷன் கொடுக்கப்பட்டது. மிகக் கடிய நேரத்தில் தோழர் லெனின் தங்களுக்கு எப்படிப் பட்டவராய் இருந்தார் என்பதை இவானவோ-வஸ்நெசேன்ஸ்க் தொழிலாளர்கள் தமது ஆயுள் முழுதும் நினைவில் கொண்டிருப்பர். வெளிப்படுகின்ற முன்முயற்சியையும் ஆற்றலையும் அவர் நன்கு போற்றினர், தொழிலாளர்கள் அவரது நம்பிக்கையை நியாயப்படுத்தினர். உதாரணமாக, குறிப்பிடப்பட்ட ஆறுமாத காலத்தில் மத்திய நிர்வாகம் 50% அளவுக்கே திட்டமிட்ட மூலப்

பொருள்கள் தந்திருந்தும் தொழிலாளர்கள் 8 கோடியே 26 லட்சம் மீட்டர் துணியைக் குடியரசுக்கு வழங்கினர்....

இவானவோ தொழிலாளர்களுக்காக லெனின் செய்தது ஏராளம். மிகவும் கடினமான நேரத்தில் இலீச் எப்போதும் அவர்களுக்கு உதவி புரிய விரைந்து வந்தார். உதாரணமாக, அவரது ஒத்துழைப்பால் 1920ல் இவானவோ தொழிலாளர்களுக்கு, மாஸ்கோ, பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த அளவுக்குச் சமமாக உணவுப் பொருள்கள் கிடைத்தன. செரேத்ஸ்க் ஆலைகளுக்கு முற்று நிலக்கரி இல்லை. வேலை நின்று போகக் கூடிய அபாயம் தோன்றியது. கஸ்த்ரமா குபேர்னியாவிலிருந்த கஸ்மினீஞே சதுப்புக்களிலிருந்து அவர்களுக்கு முற்று நிலக்கரி வழங்கும் சாத்தியப்பாட்டைக் கண்டார் லெனின். ஷுய்ஸ்க் ஆலைகளுக்கு எரிபொருள் போதவில்லை, பக்கத்துப் பிரதேசத்தில் இருந்த 3000 கன மீட்டர் முற்று நிலக்கரியை ஆலைகளுக்கு வழங்குவதென்று லெனின் முடிவு செய்தார். இரும்பு வேலை செய்பவர்களும், மற்றவர்களும் இருப்புப் பாதை வேலைக்காகவும் இராணுவ இலாகா வேலைக்காகவும் ஒன்று திரட்டப்பட்டார்கள். இவானவோ குபேர்னியாவை இந்தச் சேவையிலிருந்து விடுவிக்கும்படிக் கோரினர் லெனின். வெளி நாட்டிலிருந்து தானியம் வந்தது. லெனினது உதவியால் இதில் ஒரு பகுதி இவானவோ தொழிலாளர்களுக்குப் போயிற்று. தனித்தனி ரயில் பெட்டிகளிலும் முழு ரயில்களிலும் மிகவும் நெருக்கடியான நேரத்தில் உணவுப் பொருள்களை அவர் மூலம் பெற்றோம். பண நெருக்கடிகளின் போதும் பல முறை இவானவோ தொழிலாளர்களுக்குக் உதவியிருக்கிறார் லெனின். அவர் புரிந்த உதவிகள் அனைத்தையும் எண்ணி விட முடியாது.

சோவியத்துக்களின் அனைத்து ருஷ்யப் பதினொன்றுவது காங்கிரசில் 1924 ஜனவரி 22ல் கலீனின் வெளியிட்ட, விளதீமிர் இலீச்சின் மரணம் பற்றிய அறிக்கை எங்களை இடியாய்த் தாக்கித் திடுக்கிட வைத்தது. சில வேளைகளில் மிகக் கைப்பாயிருந்த தொழிலாளி வாழ்க்கையில்

எத்தனையோ கஷ்டங்களைக் கண்டிருந்த நான் தாங்க முடியாமல் தடுமாறினேன், என்னவோ தொண்டையை அடைத்தது, கண்களிலிருந்து நீர் பொங்கி வழிந்தது....

ஜனவரி 23ல் இலீச்சினது சவப் பெட்டியின் அருகே, இறுதி மரியாதை அணிவகுப்பில் பத்து நிமிட நேரத்திற்கு நின்றிருந்த நான் லெனினது முகத்தில் எனக்கு இனிய அம்சங்களை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தேன். மிஞ்சிய எனது ஆயுட் காலம் முழுதுக்கும் அவற்றை மனத்தில் பதித்துக் கொண்டேன். அவரது ஆணைகளுக்குக் கடைசி வரை விசுவாசமாக இருப்பது என்றும் நியாயத்திற்காகவும், ஒடுக்கப்பட்டோருக்காகவும், சுரண்டப்படுவோருக்காகவும் அவர்களின் இறுதி விடுதலைக்காகவும் தேவையானால் உயிரையும் தருவது என்றும் நான் இன்னொரு முறை இங்கு உறுதி எடுத்துக் கொண்டேன்.

லெனினது வரவேற்பறையில் புத்தீலவ் தொழிலாளி

இவனேவ்

1918ஆம் ஆண்டு. பெத்ரோகிராதில் பஞ்சம் நிலவியது.

புத்தீலவ் தொழிற்சாலையில் அப்போது கொதிகலப் பிரிவில் அடையாளமிடும் தொழிலாளராக நான் வேலை செய்து வந்தேன். தொழிற்சாலைக் கமிட்டியின் அனுமதியுடன் தொழிற்கூடக் கூட்டத்தில் உணவுப் பொருள்கள் வாங்குவதற்கான கமிஷன் ஒன்றைத் தேர்ந்தெடுத்தோம். உத்தரவு பெற்றுக் கொண்டு ரஸ்தோவ்-யாரஸ்லாவ்ஸ்கிக்குக் காய்கறி வாங்குவதற்காகப் போனோம்.

அதே நேரத்தில் மற்றத் தொழிற்கூடங்கள் உணவுப் பொருள்கள் வாங்குவதற்காகத் தமது சொந்தப் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. தொடர்பற்ற இந்தப் பயணங்களால் அதிகப் பயனிருக்கவில்லை. இதன் விளைவாக 1918 ஏப்ரலில் தொழிற்சாலை முழுதுக்குமாக ஒற்றைக் கொள் முதல் கமிஷன் ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். காய்கறிகள் வாங்குவதற்கான குபேர்னியாக்கள் எங்களுக்கு ஒதுக்கப் பட்டன. உத்தரவுகள் தரப்பட்டன.

பலவிடங்களுக்கு நான் மேற்கொண்ட பயணம் பஞ்சத்திற்கான உண்மையான காரணத்தை எனக்கு எடுத்துக் காட்டியது. நாட்டில் போதுமான தானியம் இருந்தது. ஆனால், குலாக்குகளின் எதிர்ப்பும், சில குபேர்னியாக்களின் உணவுப் பொருள் கமிட்டிகளில் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்கள் புரிந்த சீர்குலைவும் தொழில் மையங்களுக்கு உணவுப் பொருள்கள் தருவதில் இடையூறுகளைத்

தோற்றுவித்தன. பஞ்சத்துடன் நடந்து வந்த போராட்டத்திற்கு மேலும் அதிகமான ஒழுங்கமைப்புத் தன்மை தர வேண்டியிருந்தது. இந்த நோக்கத்துடன் 1918 மேயில் உணவுப் பொருள்கள் பற்றிய நிலைமையை விவரமாக லெனினிடம் எடுத்துச் சொல்வதற்காக புத்திலவ்காரர்கள் என்னை மாஸ்கோவிற்கு அனுப்பினர்.

தலைநகருக்கு வந்தவுடன் எனக்கு விளதீமிர் இலீச் தமது வேலையறையில் பேட்டியளித்தார். பெத்ரோகிராதில் நிலவும் பஞ்சத்தையும், தொழிற்சாலையில் இருக்கும் நிலைமையையும், தொழிலாளர்களின் மனநிலையையும் பற்றி நான் அவரிடம் சொன்னேன். அவ்வப்போது என்னை இலீச் இடைமறித்து குறிப்பிட்ட சில சம்பவங்களைப் பற்றி இன்னும் விவரமாகச் சொல்லும்படிக் கேட்டுக் கொண்டார். நாட்டில் உணவுப் பொருள் கஷ்டங்களைத் தோற்றுவிக்கிறவை என்று நான் கருதிய காரணங்களைப் பற்றிச் சொன்னேன்.

நாட்டுப்புற முதலாளி வர்க்கத்துடன் போராடுவதற்காக, உணவுப் பொருள் மக்கள் கமிசாருக்கு விசேஷ அதிகாரங்கள் வழங்குவது பற்றி மக்கள் கமிசாரவையால் அப்பொழுதுதான் மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்தை உரையாடலின்போது எழுது மேசையிலிருந்து வெளியே எடுத்தார். இந்த ஆவணத்தைப் படித்து விட்டு அதில் கையெழுத்திட்டு, புத்திலவ்காரர்களுக்கு எடுத்துச் செல்வதற்காக என்னிடம் கொடுத்தார்.

உணவுப் பொருள் பற்றிய காரியத்தை நாட்டில் சீராக்குவதற்குத் தீர்மானமான நடவடிக்கைகளைத் தொழிலாளர்-விவசாயிகளின் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்று பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்குச் சொல்லும்படி விளதீமிர் இலீச் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

பெத்ரோகிராத் தொழிலாளர்களைக் கொண்ட உணவுப் பொருள் பிரிவுகள் அமைக்கும்படிக் கோரும் வேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்றை உணவுப் பொருள் மக்கள் கமிசாருக்கு என் முன்னேயே எழுதினார்

லெனின். இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிற, புத்திலவ் தொழிற்சாலைத் தொழிலாளியான அந்திரேய் வசீலியெவிச் இவனேவ் உணவுப் பொருள் விஷயமாகத் தம்மிடம் வந்திருந்தார் என்றும், பஞ்சத்துடன் நடக்கிற போராட்டத்தில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றித் தாம் அவருக்குச் சொன்னதாகவும் கடிதத்தில் அவர் மேலும் சுட்டிக் காட்டியிருந்தார். ''பெத்ரோகிராதின் சிறந்த தொழிலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, 20000 பேரைக் கொண்ட நம்பகமான தொழிலாளர் படை கட்டுப்பாடு கொண்ட, இரக்கங் காட்டாத இராணுவப் படையெடுப்பைக் கிராமத்து முதலாளித்துவ வர்க்கத்தின் மீதும் லஞ்சப் பேர்வழிகள் மீதும் நடத்தவில்லை என்றால் பஞ்சமும் புரட்சியின் அழிவும் தவிர்க்க முடியாததே''* என்று எழுதினார் லெனின்.

பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு நான் படித்துக் காட்டும் வண்ணம், உணவுப் பொருள் படைகளுக்குப் பரவலான அதிகாரங்கள் தரப்பட்டிருப்பதாகக் கூறும் கடிதத்தை பெற்று ஆவணத்தை என்னிடம் கொடுக்கும்படி மக்கள் கமிசாரை லெனின் கேட்டுக் கொண்டார்.

எங்கள் உரையாடல் முடிவுக்கு வந்தது. அடுத்த நாளே நான் தொழிற்சாலைக்குப் போய்ச் சேர வேண்டியிருந்தது. எனவே பெத்ரோகிராதுக்குப் பயணம் செய்வதில் எனக்கு உதவி செய்யும்படி நான் விளதீமிர் இலீச்சைக் கேட்டுக் கொண்டேன். நிகோலாய் ரயில் நிலையத்தின் தலைவருக்கு என் முன்னலேயே போன் செய்து அவரிடம் சொன்னார்:

''இங்கு புத்திலவ் தொழிற்சாலைத் தொழிலாளி என்னிடம் வந்திருக்கிறார். அவர் நாளை தொழிற்சாலையில் இருக்க வேண்டும். விரைவு வண்டியில் அவருக்கு ஓர் இடம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.''

ரயிலில் உட்கார்ந்து கொண்டு லெனினைச் சந்தித்தது பற்றி நான் நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தேன்.

---

* லெனினது தொகுப்பு XVIII, பக்கம் 163.—(ப-ர்.)

அவரது ஆணைகளையும் அறிவுரைகளையும், தலைவரின் பிரகாசமான, கவர்ச்சி மிக்க உருவத்தையும் நினைவில் கொண்டுவர முயன்றேன். லெனினது எளிமையும், பெத்ரோகிராத் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதியான என் மீது அவர் கொண்ட பிரம்மாண்டமான கவனமும் என்னை வியப்புக்குள்ளாக்கின. விளதீமிர் இலீச்சுடன் பேசிய போது நான் கூச்சமோ குழப்பமோ அடையவில்லை.

லெனினுடன் நடந்த உரையாடல் பற்றியும், பெத்ரோகிராத் பாட்டாளி வர்க்கத்திற்கு முன் அவர் ஒப்படைத்துள்ள பணிகள் பற்றியும் தொழிற்சாலைக் கூட்டங்களில் தொழிலாளர்களிடம் நான் விவரமாகச் சொன்னேன். உணவுப் பொருள் படைப்பிரிவுகள் தொழிற்சாலையில் உருவாகத் தொடங்கின. 1918 ஜூன் தொடக்கத்தில் இப்படைப் பிரிவுகள் உணவுப் பொருள் கள் சேகரிக்கச் சென்றன.

மாஸ்கோவிலிருந்து நான் திரும்பி வந்தவுடனே, பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு "பஞ்சம் பற்றி" வி. இ. லெனின் எழுதிய கடிதம் பிராவ்தாவில் பிரசுரிக்கப் பட்டது. அது பின்கண்டவாறு தொடங்கியது:

"தோழர்களே! சில நாட்களுக்கு முன் உங்கள் பிரதிநிதி, கட்சித் தோழர், புத்திலவ் தொழிற்சாலையின் தொழிலாளி என்னிடம் வந்திருந்தார். பெத்ரோகிராதில் நிலவும் பஞ்சம் தோற்றுவித்துள்ள மிகக் கடுமையான நிலைமையை அவர் என்னிடம் வர்ணித்தார்...."*

முதலாளித்துவ அறிவாளிகளும், சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களின் சில தனிப்பட்ட பத்திரிகைகளும் கூட லெனின் கடிதத்தின் இந்தப் பகுதி பற்றி சந்தேகம் வெளியிட்டனர். சதோவாயா தெருவை நான் ஒரு நாள் கடந்து செல்கையில் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் பத்திரி கையில் வந்த கட்டுரையில் "லெனினிடம் ஒரு தொழி லாளி" என்ற வார்த்தைகள் மேற்கோள் குறிகளுக்குள்

---

* V. I. Lenin, *Collected Works*, "On the Famine", Vol. 27, p. 391.—(ப-ர்.)

இருந்தன. புத்திலவ் தொழிலாளி லெனினைக் கண்டு வந்தார் என்பது ''லெனினே கற்பனை செய்து கொண்டது'' என்றும், அதனால்தான் தொழிலாளியின் பெயரை அவர் வெளியிடவில்லை என்றும் கட்டுரையில் சொல்லப்பட்டிருந்தது.

கேடு கெட்ட முதலாளித்துவப் பத்திரிகையின் அவதூறு என்னிடம் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. வீட்டுக்கு வந்த பின், நான்தான் லெனினைக் கண்டு வந்தவன் என்றும், நீண்ட நேரம் அவருடன் நான் உரையாடினேன் என்றும் இப்பத்திரிகைக்கு விவரமாகக் கடிதம் எழுதினேன். ஆனால், எதிர்பார்த்தபடி பத்திரிகையிலிருந்து பதிலேதும் வரவில்லை.

கிரெம்ளினில் லெனினுடன் விவசாயிகள்

ஆல்பெர்ட் ரைஸ் வில்லியம்ஸ்

இது 13 ஆண்டுகளுக்கு முன்பு* நடந்தது. அமெரிக்காவுக்கு நான் பயணமாவதற்கு முன்பு கிரெம்ளினில் லெனின் எனக்குப் பேட்டியளித்தார். வழக்கம் போல வரவேற்பறையில் பலவிதமான நபர்களைக் கொண்ட கூட்டம் அவருக்காகக் காத்திருந்தது. வெளிநாட்டுத் தூதுவர்கள், பணியாளர்கள், படை அதிகாரிகள், பத்திரிகை நிருபர்கள், பழைய முதலாளித்துவ மாதிரி மனிதர்கள் ஆகியோர் கூட்டத்தில் இருந்தனர். இத்தகையோர் சமூகத்தில் லெனின் எத்தகைய திருப்தியும் அடைந்திருக்க முடியாது என்பது சொல்லாமலே விளங்கும். தாம் வகிக்கும் பதவியின் கடமையை அவர் வெறுமே, முடிந்த அளவு அவசரமாகச் செய்தார். தம் பணித் தோழர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருடன்தான் அவருக்கு இயற்கையான ஒரே தொடர்பு இருந்தது. தமது நேரம் முழுதையும் அவர்களுக்கே அர்ப்பணிக்க அவர் விரும்பினார். தேர்வு செய்ய வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்ட போது இவர்களே முதலிடம் பெற்றனர். கடைசிப் பேட்டி இதில் எனக்கு இறுதியாக உறுதி ஏற்படுத்திற்று.

இந்தத் தடவை வரவேற்பறையில் மிகவும் ஏராளமானோர் இருந்தனர். எனது முறைக்காக நான் வெகு நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று. இது ஓர் அசாதாரணமான விஷயம். எப்போதும் குறிப்பிட்ட நேரத்தில்

---

* 1918 வசந்த காலத்தில் நடந்தது. நினைவுக் குறிப்புகள் 1931ல் எழுதப்பட்டன.—(ப-ர்.)

துல்லியமாக அவர் ஆட்களை வரவேற்பார். ஏதோ அரசுத் துறைக் காரியம் அவரது கவனம் முழுதையும் கவர்ந்திருக் கிறது என்று ஊகிக்க வேண்டியிருந்தது.

அரை மணி, ஒரு மணி, ஒன்றரை மணி நேரம் ஆயிற்று... எப்போது அழைப்பார்கள் என்று பொறுமை யின்றி எதிர்பார்த்தவாறு நாங்கள் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தோம். இதற்கிடையில் லெனினது அறை யிலிருந்து அவரைப் பார்க்க வந்தவரின் குரல் ஒரு சீரான வேகத்தில் கேட்டது. லெனினது இத்தகைய கனிவு மிக்க நீண்ட நேரப் பேட்டிக்கு உரிய பெரிய மனிதர் யார்?

கடைசியாகக் கதவு திறந்தது. எல்லோரும் வியப் படையும் வண்ணம், எல்லோரது ஊகங்களும் பொய்யா கும் வண்ணம், வரவேற்பறைக்கு வந்தவர் ஏதோ வெளி நாட்டுத் தூதுவரோ, பெரிய மனிதரோ அல்ல, பறட்டைத் தலை கொண்ட, அரைக் கோட்டும் மரவுரிச் சோடுகளும் அணிந்த சரியான ஏழை விவசாயி. இவரைப் போன்றோர் சோவியத் நாட்டில் கோடிக் கணக்கானோர்.

நான் அறைக்குள் நுழைந்த போது லெனின் சொன் னார்: ''மன்னித்துக் கொள்ளுங்கள். இவர் தம்போவ் விவ சாயி. மின்மயமாக்கல், கூட்டுப் பண்ணைகள் அமைத்தல், பொருளாதாரக் கொள்கை ஆகியவை பற்றிய பிரச்னை களை நாங்கள் விவாதித்தோம். அவரது கருத்தை அறிவது எனக்கு அவ்வளவு சுவையாக இருந்ததால், நேரத்தைப் பற்றி முற்றிலும் மறந்து விட்டேன்.''

பல்கலைக் கழகத்தில் படித்துத் தேறியவர், சொந்த நூல்களில் முப்பது தொகுதிகள் பிரசுரித்துள்ளவர், நிறை யப் பயணம் செய்தவர் என்ற வகையில் இந்தத் தம்போவ் விவசாயியை விட லெனின் தத்துவ ரீதியில் எண்ணிறந்த அளவு அதிகம் அறிந்திருந்தார். வேறொரு புறத்திலிருந்து வாழ்க்கை, உழைப்பு எனும் கடிய பள்ளியின் மூலம் இந்த விவசாயி நிறைய நடைமுறை அனுபவம் பெற்றிருந்தார், வாழ்க்கை ஈட்டிய அனுபவம் தந்த அறிவு பெற்றிருந் தார். இதெல்லாம் விளதீமிர் இலீச்சிடம் மிகுந்த அக் கறையை ஏற்படுத்தின. விவசாயியின் எண்ணத்தையும்

குறிப்பிட்ட பிரச்னை பற்றிய அவரது கருத்தையும் அறிந்து கொள்வது அவருக்கு அவசியமாக இருந்தது. உண்மையில் பெரியோரான எல்லா மனிதர்களையும் போலவே, மிகவும் கல்வியறிவற்ற பாமரன் சொல்வதையும் லெனின் விருப்ப முடன் காது கொடுத்துக் கேட்டார். அவரிடமிருந்தும் நிறையக் கிரகித்துக் கொண்டார். இதன் மூலமாக பல் வேறு இடங்களிலிருந்து வந்த மிகவும் பல்வேறு விதமான மனிதர்களும் தந்த விஷயங்களிலிருந்து தமது தகவல்களை அவர் வெகுவாக விரிவுபடுத்திக் கொண்டார். காரியப் பற்றுடன் ஆயிரக் கணக்கான உண்மைகளைச் சேகரித்து அவை பற்றிச் சிந்தித்தார், அவற்றைச் சீர்தூக்கிப் பார்த் தார், ஒப்பிட்டார், பகுப்பாய்வு செய்தார். எதிரிகளுக்கு உள்ளதை விட அதிகமான அனுகூலம் ஒன்றை அவருக்கு இது தந்தது. வெற்றிகரமான தந்திரங்களால் அவர்களைத் தாண்டிச் செல்ல அவரால் முடிந்தது. சைபீரிய விவசா யியோ, செஞ்சேனை வீரனோ, தோன் ஆற்றுப் பிரதேசக் கசாக்கோ என்ன நினைக்கிறார், எப்படி உணர்கிறார் என்பது லெனினுக்கு முற்றும் தெளிவாகத் தெரிந்தது. புத் தீலவ் தொழிற்சாலைத் தொழிலாளி, வோல்கா ஆற்றுச் சுமை தூக்குவோர், மாஸ்கோ நெசவாலைத் தொழிலாளி ஆகியோரின் எண்ணங்களில் ஊடுருவி அவர்களது விருப் பங்களை ஊகித்தறிந்தார் அவர். அவர்களுடன் நேரடி யாகவோ, நம்பகமான தோழர்கள் மூலமாகவோ அவர் உரையாடினார். அவர்களிடமிருந்து என்ன விஷயம் கிடைக்கும் என்று அறிந்திருந்தார். அவர்கள் உண்மை யாகவே ஏராளமான தகவல்களை அவருக்கு வழங்கினர்.

பார்வையாளர்களை மிக விருப்பமுடன் அவர் வர வேற்றதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று. மற்றொரு காரணம், தமது அறிவை, புரட்சியின் உந்து சக்திகள் பற்றிய அறிவை, சோஷலிசத்தை எப்படிக் கட்ட வேண்டும் என்பது பற்றிய அறிவை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள அவர் விரும்பியது ஆகும்.

இன்னும் அதிக முக்கியமான காரணம் அவர்களை அவர் நேசித்தார், ஆழ்ந்து நேசித்தார் என்பது ஆகும். அவர்

களாலும் லெனின் நேசிக்கப்பட்டார். ஒட்டுண்ணிகளும் முதலாளித்துவச் சேவகர்களும் பொருள்மதிப்புகளில் சூதாட்டம் நடத்துவோரும் கள்ள வர்த்தகம் செய்வோருமான வங்கிக்காரர்கள், தரகர்கள் ஆகியோரை எந்த அளவுக்கு அவர் வெறுத்தாரோ, அந்த அளவுக்கு பொருள்களை உற்பத்தி செய்வோர் மீது—நிலக்கரி, கல், உலோகம் ஆகியவற்றில் வேலை செய்கிற தொழிலாளர்கள் மீதும், வயல்களிலும் காடுகளிலும் உழைப்பவர்கள் மீதும்—அவர் அன்பு கொண்டிருந்தார்.

....ஒரு தம்போவ் விவசாயியை மட்டுமின்றி, இத்தகைய கோடிக்கணக்கான விவசாயிகளை வரவேற்கப் பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன் லெனின் தயாராய் இருந்தார்.

மறத்தற்கரிய நிகழ்ச்சி

வினக்ராதவ்

1920 பிப்ரவரி 27ல் நான் விளதீமிர் இலீச் லெனினது வரவேற்பறையில் இருந்தேன். கிராமத்து ஆசிரியர்களின் தேவைகள் பற்றி அவருடன் உரையாடினேன். பல்லாண்டுகள் கழிந்த பின்பு இன்று, இந்த மறத்தற்கரிய சந்திப்பைத் தெளிவாக, மனக் கண்ணில் மிகச் சிறு விவரங்களிலும் காண்கிறேன்.

அது பின்கண்டவாறு நிகழ்ந்தது:

கடுமையான 1920ஆம் ஆண்டு தொடங்கியது. ருஷ்யா முழுவதையும் போலவே, வெஸ்யகோன்ஸ்க் ஜில்லாவிலும் புதிய வாழ்க்கை நிலை பெற்று வந்தது. அப்போது நடந்த கடிய வர்க்கப் போராட்டம் தன்னலமின்றி மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று ஆசிரியர்களிடம் கோரியது. எழுத்தறிவின்மையைக் களைவதற்கு இளம் சோவியத் ஆட்சிக்கு நாங்கள் தீவிரமாக உதவினோம். நூலகங்களையும், குடிசைப்-படிப்பகங்களையும், பள்ளிக்குப் புறம்பான குழந்தைக் கிளப்புகளையும் நாங்கள் கிராமங்களில் உருவாக்கினோம். நூற்றாண்டு கால அறியாமையிலிருந்து விரைவில் அவர்களைக் கரையேற்றுவதற்காக உத்வேகமிக்க உயிர்ப்புள்ள வார்த்தைகளால் மக்கள் திரள்களை நாங்கள் தட்டியெழுப்பினோம்.

1920 ஜனவரி நடுவில் வெஸ்யகோன்ஸ்கில் கல்வி சோஷலிசக் கலாசாரப் பணியாளர்களின் மாவட்டக் காங்கிரஸ் நடந்தது. அப்போது வெஸ்யகோன்ஸ்க் ஆசிரியர்

கழகத்தின் செயற்குழுத் தலைவராக நான் இருந்தேன். ஆசிரியர்களின் வேலை, வாழ்க்கை ஆகியவற்றின் முக்கியமான பிரச்னைகள் மூன்று நாட்கள் காங்கிரசில் விவாதிக்கப்பட்டன. கிராமத்திலும், நகரத்திலும் நடந்து வந்த கலாசார-கல்வி வேலை பற்றிச் சொன்ன பிரதிநிதிகள் ஆசிரியர்களின் மிகவும் கடுமையான பொருளாதார நிலைமையை விவரித்தார்கள். ரொட்டி, காலணி, துணி போன்றவை போதவில்லை. ஒரு வருடம் முழுதுக்கும் தலைக்கு இரண்டு பவுண்டு கெரசின்தான் எங்களுக்குக் கிடைத்தது. வாசகர் மாநாடுகளும் சொற்பொழிவுகளும் எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான வகுப்புக்களும் கூடச் சிறுய் வத்தியின் ஒளியில்தான் நடத்த வேண்டியிருந்தது.

ரொட்டியும் மற்ற சில பொருள்களும் கிராமங்களுக்குள் இருந்ததை நாங்கள் கண்டோம். அறிவுஜீவிகளின் தேவைகளைக் கிராம அதிகாரிகள் சரிவரக் கவனிக்கவில்லை. ஆசிரியர்களின் நிலையை உயர்த்தும்படி மத்திய ஆட்சி நிறுவனங்களிடம் விண்ணப்பிப்பதற்காக ஒரு பிரதிநிதியை அனுப்புவது என்று காங்கிரஸ் முடிவு செய்தது.

காங்கிரஸ் பிரதிநிதியாக என்னைத் தேர்ந்தெடுத்தது. எனது தோழர்களின் ஆணையைக் கவனமாக மறைத்து வைத்தபடி நான் நீண்ட பயணம் தொடங்கினேன். மூன்று தினங்களில் குளிர்ந்த, வெண் பனி மூடிய மாஸ்கோவிற்கு வந்து சேர்ந்தேன்.

பிப்ரவரி 27ல் கிரெம்ளினுக்குக் கிளம்பினேன். எனது அத்தாட்சிப் பத்திரத்துடன் நான் மாளிகைக்குள் சுலபமாக நுழைந்தேன். பள்ளிக்குப் புறம்பான கல்விப் பணியாளர்களின் மாநாடு இரண்டாவது மாடியில் நடந்தது.... எனக்கு அறிமுகமாயிருந்த குருப்ஸ்கயாவை இடைவேளையில் சந்தித்தேன். நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ளு நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டார்.

''நீங்கள் விளதீமிர் இலீச்சுடன் பேச வேண்டும்'' என்றார் அவர்.

''இதுதான் எனது பயணத்தின் நோக்கமும். ஆனால், அவர் மிகவும் வேலையாய் இருக்கிறார் என்று சொல்கிறார்களே'' என்று நான் பதிலிறுத்தேன்.

இளம் சோவியத் குடியரசு போலந்து வெண்காவல் படையினருடன் போர் தொடங்கவிருந்தது என்று நான் அறிந்தேன்.

''எப்படியாயினும், விளதீமிர் இலீச் எப்போது உங்களைப் பார்க்க முடியும் என்று நான் அறிந்து வருகிறேன்'' என்று வற்புறுத்தலுடன் சொல்லிவிட்டு மாளிகையின் மறு பகுதிக்குச் சென்றார் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா. இன்றே ஆலோசனைக் கூட்டம் முடிந்தவுடன் அவர் உங்களைச் சந்திப்பார் என்று ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்து சொன்னார் அவர். அதுவரை மாநாட்டிற்கு வந்து அதன் வேலையில் பங்கெடுத்துக் கொள்ளும்படி என்னை அழைத்தார்.

நூலகப் பிரச்னை நிகழ்ச்சி நிரலில் இருந்தது என்பது எனக்கு நினைவு இருக்கிறது. புத்தகத்தை எத்தகைய நடவடிக்கைகளால் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் அருகே கொண்டு வருவது, நெருங்கி வந்து கொண்டிருந்த புத்தகப் பஞ்சத்தை எப்படித் தடுப்பது என்று விவாதிக்கப்பட்டது. தனிப்பட்டவர்களின் நூலகங்களை ஜப்தி செய்யலாம் என்று பலர் கருத்து வெளியிட்டனர். வெஸ்யகோன்ஸ்க் ஜில்லாவில் பள்ளிக்குப் புறம்பான கல்வித் துறையில் அப்போது பணியாற்றி வந்த எனக்குக் கிராம நூலகங்களின் தேவை என்ன என்று நன்கு தெரிந்திருந்தது. நூலகப் பிரச்னை பற்றிய விவாதத்தில் கலந்து கொள்ள நான் தயாரானேன். பேச்சாளர் பட்டியலில் பெயரைக் கூடப் பதிவு செய்து கொண்டேன். ஆனால் அதற்குள் மக்கள் கமிசாரவைச் செயலாளர் ஃபதியேவா ஹாலுக்குள் நுழைந்து விளதீமிர் இலீச் வேலையை முடித்து விட்டார் என்றும் வெஸ்யகோன்ஸ்க் ஆசிரியர்களின் பிரதிநிதியை வரவேற்க விரும்புகிறார் என்றும் குருப்ஸ்கயாவிடம் சொன்னார்.

ஃபதியேவாவுடன் மாளிகையின் பலப்பல அறைகளைக்

கடந்து சென்றேன். மாஸ்கோ அப்போது எரிபொருள் நெருக்கடியால் தவித்துக் கொண்டிருந்தது. மாளிகைக்குள் குளிராய் இருந்தது. பணியாளர்கள் குளிர் தாங்கும் ஆடைகள் அணிந்திருந்தனர். எங்கெங்கும் மேசைகளுக்கு அருகில் மும்முரமாய் வேலை நடந்து கொண்டிருந்தது. எங்களை யாரும் கவனிக்கவில்லை போலிருந்தது.

லெனினது அறைக்கு முன்னுல் ஒளி நிறைந்த பெரிய ஹால் இருந்தது. ஹால் முழுதும் மேசைகள். அவற்றுக்கு அருகில் உட்கார்ந்திருந்த பணியாளர்கள் அனைவரும் தமது வேலையில் ஈடுபட்டிருந்தனர். தேவையான ஆவணங்களை எடுப்பதற்காக நான் ஒரு நிமிடம் நின்றேன், கடியாரத்தைப் பார்த்தேன், அப்போது பகல் இரண்டு மணி.

பின்னர் நான் அறைக்குள் அழைக்கப்பட்டேன். உயரமான வெள்ளைக் கதவுகளைக் கடந்து உள்ளே போனேன். விளதீமிர் இலீச் அலுவல் மேசைக்குப் பின்னுலிருந்து முன் வந்து, வரவேற்புப் புன்னகையுடன் என்னை நோக்கிச் சில எட்டுகள் எடுத்து வைத்தார். கைகுலுக்கிவிட்டு என்னை அமரச் சொன்னுர்.

இந்த மனிதரின் எளிமை என்னை அக்கணமே வியப்புக்குள்ளாக்கியது. பின்னர் அவருடன் உரையாடிய நேரம் முழுதும் நான் ஒரு சிறிதும் கூச்சமடையவில்லை. பேச்சு எவ்வளவுக்கு எவ்வளவு நீண்டதோ அவ்வளவுக்கு அவ்வளவு பேசிக் கொண்டே, சுலபமாகவும் வெளிப்படையாகவும் பேசிக் கொண்டே இருக்கத் தோன்றியது.

நான் வந்த விஷயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டுவிட்டு இலீச் கேள்வி கேட்டார்:

''உங்கள் ஆசிரியர்கள் சோவியத் ஆட்சியின்பால் இப்போது என்ன போக்கைக் கடைப்பிடிக்கிருர்கள்?''

''ஆசிரியர் திரள் ஒருபோதும் சோவியத் ஆட்சிக்கு எதிராக இருந்ததில்லை என்று நீங்கள் நம்பலாம், தோழர் லெனின். நாங்கள் மக்களுக்காக நேர்மையாக உழைக்கிருேம்'' என்றேன் நான்.

அதே நேரத்தில் ஜில்லாவில் நிலவிய ஒழுங்கீனங்களைப்

பற்றிச் சொன்னேன் நான். ''ஆமாம், ஆமாம்... சரிதான்....'' என்று எனக்கு உற்சாகமூட்டும் வண்ணம் பலமுறை வார்த்தைகளால் சொன்னார், அல்லது தலையாட்டினார்.

பின்னர் அவர் கேட்டார்:

''அரசாணைகள் இப்போது ஆசிரியர்களுக்குக் கிட்டுகின்றனவா?''

''ஆமாம், கிடைக்கின்றன. இப்போது கிராமத்தில் வேலை செய்கிற ஆசிரியருக்கு அரசாணைகள் அதிகம் தேவைப்படுகின்றன. எதையேனும் குறித்து ஆலோசனைகளோ விளக்கங்களோ கேட்பதற்காக நம்பிக்கையுடனும் விருப்புடனும் ஆசிரியரிடம் வருகிறார் விவசாயி. மக்கள் கல்வித் துறை வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா செயற்குழுவுடன் சேர்ந்து, இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஜில்லாவின் எல்லாப் பள்ளிகட்கும் அச்சிட்ட வடிவில் இந்த அரசாணைகளை வினியோகிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறது. இவற்றை நேரடியாக அமுல் படுத்துகிறவர்களாக ஆசிரியர்கள் விளங்குகிறார்கள். விவசாயியின் உணர்வு சிறிது சிறிதாகத் தெளிவடைந்து வருகிறது. வாழ்க்கை சீராக இயங்கத் தொடங்கி இருக்கிறது. ஆனால், ஏதோ சில காரணங்களால் மத்திய ஆட்சியின் உத்திரவுகளும் அரசாணைகளும் கிராமங்களில் எல்லா நேரங்களிலும் நிறைவேற்றப்படுவதில்லை'' என்று நான் கூறினேன்.

''தோதர்ஸ்கியின் புத்தகம் வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா பற்றி எழுதப்பட்டது தானே?'' என்று கேட்டார் இலீச்.

''ஆமாம், வெஸ்யகோன்ஸ்க் பற்றித்தான்'' என்று நான் பதிலளித்தேன்.

''நல்ல புத்தகம்''—உற்சாகத்துடன் சொன்னார் விளதீமிர் இலீச். ''நான் அதைப் படித்தேன். வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா செயற்குழு அரைவை இயந்திரம் ஒன்றை ஒரு சொந்தக்காரரிடமிருந்து கைப்பற்றி அதைச் செலுத்தும் பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தது

பற்றிக் கூறப்பட்டிருப்பது எனக்கு மிகவும் பிடித்தது. இது முற்றிலும் சரியான வழி. வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா செயற்குழுவின் வேலை கவனத்திற்கு உரியது. அதன் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் முன்னாள் பெத்ரோகிராத் தொழிலாளர்கள் என்று நான் கேள்விப் பட்டேன். அது உண்மையா?''

''உண்மைதான். மற்ற இடங்களில் இருந்ததை விட எங்கள் ஜில்லாவில் புரட்சிக்காலத்தில் தடுமாற்றம் குறைவாக இருந்தது என்பதும் கூட உண்மை. ஜில்லா செயற் குழு உறுப்பினர்கள் நன்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதிகம் வளர்ச்சி பெற்றவரும் கல்வி பெற்றவருமான கம்யூனிஸ்ட் தோதர்ஸ்கி அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தினார்.''

''தோதர்ஸ்கி இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று அக்கறையுடன் கேட்டார் இலீச்.

''போரிடும் படையில்'' என்றேன் நான்.

''என்னுடைய வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவியுங் கள்'' என்று கேட்டுக் கொண்டார் லெனின்.

அவினீசி-சுதா ரயில் பாதை போடுகிற வேலை எப்படி நடக்கிறது என்றறிய மிகுந்த ஆர்வம் காட்டினார் விளதீமிர் இலீச். ரயில் பாதையின் படத்தைக் கொண்ட சிறு நோட்டு ஒன்றைக் கோட்டின் பக்கவாட்டுப் பையிலிருந்து வெளியே எடுத்தார். மேசையின் மீது நோட்டை வைத்துக் கொண்டு எனக்கு அறிமுகமான சொந்த இடங்களை இருவருமாகப் பார்த்தோம்.

வெஸ்யகோன்ஸ்க் ஜில்லாவின் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான் என்றும், பெத்ரோகிராதில் நேவா கப்பல் கட்டும் தொழிற்சாலையிலும் இயந்திரத் தொழிற் சாலையிலும் தொழிலாளியாக இருந்தவன் என்றும், கடிய உழைப்பின் மூலம் கல்வி நிலையங்கள் பலவற்றில் படித்துத் தேறியவன் என்றும் அறிந்த லெனின் நான் விஞ்ஞானப் பயிற்சியை நிறுத்தி விட்டது குறித்து வருத்தம் தெரிவித்தார். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பள்ளிக்

கூடம் அமைப்பது எவ்வளவு அவசியமானது என்று அவர் விவரமாகச் சொன்னார்.

அவர் கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் நான் துல்லியமான, உண்மையான விடையளித்தேன். ஆசிரியர்களின் வாழ்க்கை, வேலை, இல்லாமைகள், உள்ளூர் நிறுவனங்களுடன் அவர்கள் கொண்டுள்ள பரஸ்பர உறவுகள் ஆகியவை பற்றிக் குறிப்பாக நான் விவரமாய்ச் சொல்ல நேர்ந்தது.

எல்லாவற்றையும் செவிமடுத்த விளதீமிர் இலீச் உணவுப் பொருள் மக்கள் கமிசாரகத்துக்குக் கடிதம் எழுதத் தொடங்கினார். கமிசாரகத்தின் உறுப்பினர்களிடம் நேரடியாக இதனைக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு ஆலோசனை சொன்னார். ஃபதியேவாவை அறைக்குக் கூப்பிட்டு உணவுப் பொருள் மக்கள் கமிசாரகத்தில் என்னை எப்பொழுது வரவேற்க முடியும் என்று தொலைபேசி மூலம் அறியும்படிக் கேட்டுக் கொண்டார். மக்கள் கமிசாரகத்துக்கு, அரை மணி நேரம் பொறுத்து நான் வர வேண்டும் என்று சில நிமிடங்கள் கழித்துத் தோழர் ஃபதியேவா வந்து சொன்னார்.

மேசை மீது குனிந்து லெனின் எழுதிக் கொண்டிருக்கையில் அமைதியாக அவரைக் கவனிக்க எதுவும் தடையாய் இருக்கவில்லை. எனக்குப் பக்கவாட்டில் விளதீமிர் இலீச் அமர்ந்திருந்தார். ஆற்றலும் அழித்தற்கரிய சித்தவுறுதியும் கொண்டு விளங்கியது அவரது முகம். மாபெரும் கம்யூனிஸ்டும் பிரம்மாண்டமான அரசின் தலைவருமான லெனின் அதே நேரத்தில் எளியவராகவும் பழுப்புக் கட்டமிட்ட நைந்த உடையணிந்த சாதாரணமானவராயும் திகழ்ந்தார்.... தொழிற்சாலையின் மேஸ்திரி அல்லது இஞ்சினீயருக்கும் அவருக்கும் வேறுபாடு காண்பது வேறொரு இடத்தில் என்றால் முடியாது. அன்றும் இன்றும் உலகம் முழுதும் மிக நிறையப் பேசப்படுகிற இந்த மனிதரைப் பற்றிய அம்சங்களை மிகச் சிறு விவரங்களிலும் நான் நினைவில் கொள்ள விரும்பினேன்.

கடிதம் எழுதி முடிக்கப்பட்டது. அதை என்னிடம்

கொடுத்துக் காரியாலயத்தில் வரிசை எண் இட்டுக் கொள்ளும்படிக் கூறினார் லெனின்.

விடைபெறுவதற்காக நான் நாற்காலியிலிருந்து எழுந்தேன். ஆனால் விளதீமிர் இலீச் என்னை நிறுத்திக் கனிவுடன் சொன்னார்.

''நமது ஆசிரியர்கள் சோவியத் ஆட்சியின் ஆதரவு தமக்குக் கிட்டும் என்று எப்போதும் உறுதியாக நம்பலாம். ஆசிரியருக்காக எங்கள் கதவு எப்போதும் திறந்தே கிடக்கும். என்னுடைய வாழ்த்துக்களுடன் இது பற்றி அவர்களுக்குச் சொல்லுங்கள்.''

இவ்வாறு சொல்லி வலுவாக என்னுடன் கைகுலுக்கி விட்டு கதவு வரை வந்து என்னை வழியனுப்பினார்.

நான் அறையிலிருந்து வெளி வந்து கடியாரத்தை எடுத்தேன். அப்போது மணி இரண்டே முக்கால். உரையாடல் முக்கால் மணி நேரம் நடந்திருக்கிறது. அந்த நேரம் எனக்கு மிகவும் குறைவாகத் தோன்றியது. லெனின் அருகே அவ்வளவு சுதந்திரமாகவும் எளிதாகவும் இருப்பதை உணர்ந்தேன்.

காரியாலயத்தில் நான் வரிசை எண் கேட்டு லெனின் கடிதத்தில் அதனை இட்டேன். லெனினுடன் நடந்த பேச்சின் சாரத்தை அப்படியே பாதுகாப்பதற்காக மேசையருகே உட்கார்ந்து நோட்டுப் புத்தகத்தில் விரைவாக அதை எழுதத் தொடங்கினேன். இந்த நேரத்தில் அறைக் கதவு திறந்தது. அறையிலிருந்து ஹாலுக்கு வந்த விளதீமிர் இலீச், நான் நிதானம் காட்டாமல் மக்கள் கமிசாரகத்துக்கு சென்று கமிசாரக உறுப்பினர் யாரையாவது பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று என்னிடம் சொன்னார். நான் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்த பொழுது, உணவுப் பொருள் மக்கள் கமிசாரகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது பிரச்னையைத் தீர்த்திருக்கிறார் அவர் என்று பின்னர் தெரிந்தது. எனது பங்கிற்கு நான் செய்ய வேண்டியதாக ஒரு சிறு சடங்கே மிச்சமிருந்தது.

உணவுப் பொருள் மக்கள் கமிசாரக உறுப்பினரான

தோழர் ஹலாதவ் வி. இ. லெனினது கடிதத்தை நினைவுச் சின்னமாக எனக்கு அன்புடன் திருப்பித் தந்தார். அது பின்கண்டவாறு:

''1920 பிப்ரவரி 27

வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா ஆசிரியர் கழகத்தின் செயற் குழுத் தலைவரான தோழர் வினக்ராதவ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பம் கொணர்ந்திருக்கிறார்.

விஷயத்தின் சாரம்—ஆசிரியர்களுக்கு (ஜில்லாவில் சுமார் 500 பேர்) அதிகப்படி அளவு ரேஷனாக ரொட்டியும் உருளைக் கிழங்கும், காலணி அல்லது தோலும் வழங்குவதற்காக வெஸ்யகோன்ஸ்க் ஜில்லா உணவுப் பொருள் கமிட்டிக்கு உத்திரவிடுக.

உள்ளூர் இருப்பிலிருந்தே இரண்டையும் தர வேண்டும்: ஜில்லாவில் அதிகப்படியாக இருக்கிறது.

தேவையான தகவல்களை இன்றே பெறவும் (தோழர் நாளை இங்கிருந்து புறப்படுகிறார்) பின்னர் எனக்கு தொலை பேசி மூலம் பதில் தரவும் (நாளை பாதுகாப்புச் சோவியத்தில் முடிவு செய்வோம்).

லெனின்''*

வெஸ்யகோன்ஸ்குக்கு நான் திரும்பி வந்த பின்பு மாஸ்கோவிலிருந்து பார்சல் வந்தது. பத்தாயிரம் மீட்டருக்கு அதிகமான அளவு விதவிதமான துணிகள் எங்கள் ஆசிரியர்களுக்காக வந்திருந்தன: கம்பளித்துணி, பட்டுத் துணி, சீட்டித் துணி, கொஞ்சம் வெல்வெட்டும் கூட அதில் இருந்தது. உள்ளூர் இருப்பிலிருந்து எங்களுக்கு ரேஷன் அதிகரிக்கப்பட்டது. கெரசின் தரும் அளவு மிகவும் உயர்த்தப்பட்டது என்பதே மிக முக்கியமானது ஆகும். பயணத்தைப் பற்றிய விவர அறிக்கையுடன் உரை நிகழ்த்தி, ''நமது ஆசிரியர்கள் சோவியத் ஆட்சியின் ஆதரவு தமக்குக் கிட்டும் என்று எப்போதும்

---

* லெனினது தொகுப்பு XXXIV, பக்கம் 270.—(ப-ர்.)

உறுதியாக நம்பலாம். ஆசிரியருக்காக எங்கள் கதவு எப்போதும் திறந்தே கிடக்கும்'' என்று விளதீமிர் இலீச் கூறிய வார்த்தைகளை நான் சொன்ன போது ஆசிரியர்கள் மாநாட்டில் ஏற்பட்ட உற்சாகத்தை வார்த்தைகளில் சொல்வது கஷ்டம்.

சுபோத்னிக் செய்கிறார் லெனின்

பரிசோவ்

1920 மே முதல் நாள் ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகளின்) மத்தியக் கமிட்டி அனைத்து ருஷ்ய சுபோத்னிக்குக்கு ஏற்பாடு செய்தது. நாட்டின் ஒரு பகுதியில் கூட அன்று வேலை நடக்காமல் இருக்கவில்லை. நானும் இராணுவப் பள்ளி மாணவர்களும்—இது கிரெம்ளினில் நடந்தது—கிரெம்ளின் முற்றத்தில் வேலை செய்யப் போனோம். கிரெம்ளின் சதுக்கத்தின் ஒரு பகுதியில் பலவிதமான குப்பையும் கட்டுமானப் பொருள்களும் கிடந்தன. இது சாதாரண இராணுவப் பயிற்சிகளுக்குத் தொந்தரவாக இருந்தது.*

இராணுவப் பயிற்சி வகுப்புகளின் கமிசார் என்ற வகையில் நான் வலது சாரியில் இருந்தேன். அப்போது கிரெம்ளின் மேற்பார்வையாளர் பீட்டர்சன் என்னை அணுகி பின்கண்டவாறு சொன்னார்:

''சுபோத்னிக்கில் பங்கெடுத்துக் கொள்ள தோழர் லெனின் வந்திருக்கிறார்.''

---

* சுபோத்னிக்—*விடுமுறை நாட்களிலோ வேலைநேரத்திற்கு அதிகமாகவோ தாய் நாட்டுக்குப் பயனுள்ள வகையில் சோவியத் மக்கள் சுயமாக இலவசவேலை செய்வதற்கு இப்பெயர். மாஸ்கோ-கசான் ரயில்பாதை சர்திரோவச்னயா டெப்போவில்1919 மே 10 சனிக்கிழமை (சனிக்கிழமைக்கு ருஷ்ய மொழியில் ''சுபோதா'' என்று பெயர்)தொழிலாளர்களின் முன்முயற்சியால் முதல் முறை சுபோத்னிக் நடந்தது. அன்று முதல் இத்தகைய வேலை சுபோத்னிக் என்று அழைக்கப்படுகிறது.*—(ப-ர்.)

நான் இலீச்சைக் கண்டேன். நைந்து போன ஆடையும் பூட்சுகளும் அணிந்து, ஆணைகளுக்காகக் காத்துக் கொண்டு, எங்களிடமிருந்து சில எட்டுகள் தூரத்தில் அவர் நின்றிருந்தார்.

எங்களுக்கிடையே முதுநிலையினர் என்ற வகையில் எனக்கு வலது புறத்தில் நிற்குமாறு அவரிடம் நான் சொன்னேன். சட்டென அவ்வாறு செய்தார். அவசரமாகச் சொன்னார்:

''நான் என்ன செய்ய வேண்டுமென்று கூறுங்கள்.''

சுபோத்னிக்கை வழிநடத்துபவர் உத்திரவிடுவது கேட்டது:

''வரிசைகள் அணிவகுத்து நிற்க!''

குறிப்பிட்ட வேலை இடத்துக்கு நாங்கள் சென்றோம், இரண்டிரண்டு பேராகச் சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருந்தது. நான் விளதீமிர் இலீச்சுடன் ஜோடி சேர்ந்தேன். இருவரும் நீண்ட கட்டைகளைச் சுமந்து செல்லத் தொடங்கினோம்.

கட்டையின் மெல்லிய பகுதியை அன்றிப் பருத்த பகுதியையே அவர் தூக்கத் தலைப்பட்டார். நானோ இலேசாக இருந்த முனையை அவருக்குக் கொடுக்க முயன்றேன். அதனால் எங்களிடையே சச்சரவு மூண்டது.

''நீங்கள் என்னை விட அதிகமாக பாரமான பகுதியைத் தூக்குகிறீர்கள்'' என்றார் அவர்.

''உங்களுக்கு 50 வயது, எனக்கோ 28 தான்'' என்று கூறி, எனவே நான் செய்வதே சரி என்று அவருக்குக் காட்டினேன் நான்.

மிகச் சிறப்பாக அவர் வேலை செய்தார். அவர் நடக்கவில்லை, ஓடினார். மற்றவர்களை முந்தினார், அவசரப்பட்டார். விரைவாக வேலை செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்டுவது போலிருந்தது அவரது வேலை. நான் களைத்துப் போனேன். வேலை செய்த மற்றவர்களும் ஓய்வெடுக்க உட்கார்ந்தனர். இராணுவப் பள்ளி மாணவர்களுடன் தோழர் லெனின் உட்கார்ந்து கொண்டார்.

வெயில் பிரகாசமாக இருந்தது. வேலை செய்தவர்

களுக்கு உற்சாகமூட்டியது இசை. உடலுழைப்புச் செய்வதை விட அதிக மகிழ்ச்சி தரக் கூடியது வேறெதுவும் இல்லை என்று இந்த நேரத்தில் எல்லோருக்கும் தோன்றியது. குழுவில் ஒருவர் புகை பிடிக்கும்படி லெனினிடம் கூறினார்.

''இல்லை. நான் புகைபிடிப்பதில்லை. உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது மற்றவர்களுடன் சேர்ந்து அளவுக்கு மீறி ஒருமுறை நான் புகைபிடித்தது நினைவிருக்கிறது. அதனால் எனது உடல் நிலை மோசமாயிற்று. அன்றிலிருந்து நான் புகைபிடிப்பதில்லை.''

ஓய்வுக்குப் பின்னால் பாரமான ஓக் மரக் கட்டைகளைத் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. ஒவ்வொரு கட்டையையும் ஆறு பேர் சேர்ந்து தூக்க வேண்டியிருந்தது. உரிய இடத்துக்குக் கொண்டு போவதற்குள் இரண்டு முறை ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று....

இராணுவப் பள்ளி மாணவர்களுடன் நான்கு மணி நேரம் விளதீமிர் இலீச் வேலை செய்தார்.

கடிய உடலுழைப்பில் தோழர் லெனினுடன் நான் ஈடுபட்டிருந்த இந்த நான்கு மணி நேரமும் ஆயுள் முழுதும் என் நினைவில் பதிந்திருக்கும்.

கட்சி உறுப்பினன் அல்லாத, சைபீரிய விவசாயியான நான் விளதீமிர் இலீச்சைக் கண்டதும் இதனுல் விளைந்ததும்

செர்ஞேவ்

நான் சைபீரியாவிலிருந்து அவரிடம் வந்தேன். அந்தக் காலத்தில் சைபீரியாவிலிருந்து அவரிடம் வந்து சேர்வது எளிய விவசாயிக்கு எளிய காரியம் அல்ல. நான் வீட்டிலிருந்து புறப்பட்டு இரண்டு மாதங்கள் ஆயின. சந்திக்கும் வழியை இந்த இரண்டு மாதங்களும் தேடிக் கொண்டிருந்தேன்.

லெனினிடம் வந்து சேர்கிற வரை என் வழியில் நிறைய விந்தைகள் நடந்தன. 1921 பிப்ரவரியில் லெனின் எனக்கு மதியம் ஒரு மணிக்குப் பேட்டியளிப்பார் என்று காலையில் அறிந்தேன். ஒரு மணி நேரம் முன்னுல் மக்கள் கமிசாரவையை அடைந்தேன். செயலாளர் தோழர் க்ளெய்சருக்கு நான் போன் செய்ய வேண்டும் என்ருர்கள். போன் செய்ய எனக்குத் தெரியாது. முறை வேலை செய்து வந்த பெண்மணியை எனக்குப் பதிலாகப் போன் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். எல்லோரும் சிரித்தார்கள். ஆனுல் முறை வேலை செய்த பெண்மணி தயை கூர்ந்து எனக்குப் பதில் பேசினுர். பன்னிரண்டரை மணிக்குக் கண்டிப்பாக நான் அங்கு இருக்க வேண்டும் என்று பின்பு என்னிடம் சொன்னுர். இனித்தான் நான் அனுமதிச் சீட்டுக்கள் வாங்க வேண்டும். நான் குழம்பினேன் பதட்டப்பட்டேன். கிரெம்ளினுக்குள் போக அனுமதிச் சீட்டு, பின்னர் கட்டிடத்துக்குள் நுழைய ஓர் அனுமதிச் சீட்டு, பின்னர் மேலும் மேலும் சீட்டுக்கள். நீண்ட மென்மயிர்த்தோல் மேல்கோட்டு அணிந்த ஒரு பைத்தியம் போல நான் எங்கெங்கும் ஓடிக் கொண்டிருந்தேன். ஆனுல் எனது

அத்தாட்சிப் பத்திரங்கள் எல்லா இடங்களிலும் கவனத்தைக் கவர்ந்தன. கடைசியாக நான் மூன்ருவது மாடிக்கு வந்து விட்டேன்.

செயலாளர் என்னை வரவேற்றுக் கேட்டார்: ''நீங்கள் தாமே செர்னேவ்?''

''ஆம், நான் தான்''.

''உட்காருங்கள்''.

கடைசியாக நான் கொஞ்சம் அமைதியானேன், நிதானம் அடைந்தேன். எண்ணங்களை ஒன்று திரட்டினேன். ஒரு 15 நிமிடம் இவ்வாறு உட்கார்ந்திருந்தேன. இந்த நேரம் எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது.

இறுதியாக இன்னெரு செயலாளர் வெளிவந்து, தம் பின்னே வருமாறு என்னை அழைத்தார். லெனினுக்கு மிக அருகில் இருந்தேன் போலும். கடைசியாக விளதீமிர் இலீச்சின் அறையிலிருந்து ஒருவர் வெளிவந்தார். அறைக்குள் செல்லுமாறு என்னிடம் கூறப்பட்டது. அப்போது நான் முற்றிலும் அமைதியாக இருந்தேன். இப்போது போல எல்லாம் நினைவிருக்கிறது: உயர்ந்த முக்கியத்துவமுள்ள பார்வையாளரிடம் போல எழுந்து என்னை நோக்கி வந்தார் விளதீமிர் இலீச். அன்புடன் கைகுலுக்கினுர். ''சைபீரியாவிலிருந்து புதிதாக என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

நான் அவரிடம் சொன்னேன்:

''எனது எண்ணங்களைக் காகிதத்தில் எழுதியிருக்கிறேன். படிப்பதற்கு அனுமதியுங்கள்''.

''நல்லது, படியுங்கள், உட்காருங்கள்''.

அவரும் நானும் உட்கார்ந்தோம். எதிரெதிராக அல்ல, நான் மேசை ஓரத்தில் அமர்ந்தேன். அவர் பாதி திரும்பி என்னைப் பார்த்தார்.

நான் படிக்கத் தொடங்கிய போது என் வசமின்றியே அவரைக் கவனித்தேன், அவரது முகத்தைப் பார்த்தேன். முதலில் அவரது முகம் ஒரு சலிப்பை, களைப்பைக் காட்டுவது போலிருந்தது. ''உங்கள் அறிக்கைகளுடன் நீங்கள் எனக்குச் சலிப்பூட்டுகிறீர்கள்'' என்று சொல்வது போ

லிருந்தது. ஆனுல் படிக்கப் படிக்க அவரது முகம் எடுப்பாக மாற்றமடைந்தது தெரிந்தது. இடது கண் அடிக்கடி சுருங்கியது. பலமுறை விருட்டென்று என்னை நிமிர்ந்து பார்த்தார். பார்த்து மீண்டும் கண்களைச் சுருக்கினுர். மிகப் பெரும் முக்கியத்துவமுள்ள பிரச்னை இந்தத் தலையில் இப்போது தீர்க்கப்படுகிறது, சில நிமிடங்களில் தீர்க்கப்படப் போகிறது என்று கண்டேன். இந்தக் கணத்தில் எவ்வளவோ விஷயங்களை அவர் கிரகித்துக் கொண்டதையும் நடுக்கமற்ற கையால் துணித்து அகற்றியதையும் நான் உணர்ந்தேன்.

சைபீரியாவில் கட்டாயத் தானியக் கொள்முதலுக்குப் பதிலாக வரி விதிக்கும்படி எனது அறிக்கை கூறியது.

நான் படித்து முடித்த பின்பு அவர் என்னிடம் கேட்டார்:

''நீங்கள் யார்?''

நான் சைபீரியக் கடுங்காவல் முகாமுக்கு அனுப்பப்பட்டவன் என்றும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் கட்சி உறுப்பினனுக இருந்ததால் கடுங்காவல் முகாமுக்கு அனுப்பப்பட்டேன் என்றும், இப்போது எக்கட்சியையும் சேராதவன் என்று நான் என்னைக் கருதுவதாகவும், சைபீரியாவில் விவசாயம் செய்து வருவதாகவும் சொன்னேன்.

''வருமானத்துக்கு ஏற்ப அதிகரிக்கும் வரி விதிப்பை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?''

நான் விவரித்தேன். அவர் சிறிது யோசிப்பது போலிருந்தது. மௌனமாக இருந்தார். பின்பு என்னிடம் சொன்ஞர்: ''உங்கள் கடிதத்தைப் பிராவ்தாவில் அச்சிடுவதற்கு நீங்கள் இசைகிறீர்களா?'' ''இசைகிறேன்'' என்கிறேன் நான். என்னை அழைப்பதற்கு எப்படி இயலும் என்று என்னிடம் கேட்டார். செரெப்ரியகோவ் மூலமாக என்றேன்.

''உங்கள் அறிக்கையில், வருமானத்துக்கு ஏற்ப அதிகரிக்கும் வரி விதிப்பை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள் என்பதையும் நீங்கள் யார் என்பதையும் சேர்த்து எழுதுங்கள்''.

நாங்கள் எழுந்தோம். காரியாலயத்துக்கு என்னை அவர் கூட்டி வந்து பேனாவும் மையும் வாங்கிக் கொடுத்தார். எனக்குப் பேனாவால் எழுதத் தெரியாது என்று நான் சொல்லவே, அவர் சிரித்து எனக்கு பென்சில் தரும்படிக் கூறினார். நாங்கள் பிரிந்தோம்.

லெனின் மகத்தானவராக விளங்குவது எதனால்?

காரணம் இதுதான். என்னை ஓர் அசாதாரணமான மனிதர் என்று கருதி அவர் நான் சொல்வதைக் கேட்கவில்லை. **என் மூலமாக விவசாயிகள் அனைவரும் சொல்வதை அவர் கேட்டார். ஏழை மக்கள் அனைவரது வாழ்க்கையிலும் நிலவுகிற சிக்கலான நிலைமை முழுவதையும் என் மூலம் அவர் கணக்கிட்டார்.**

அவரிடம் செல்வதற்கு முன்பு நான் பல பேரிடம் பேசினேன். பலரும் பின்கண்டவாறு என்னிடம் சொன்னார்கள்: "நீ சொல்வது சரியாகவே இருக்கலாம். எனினும் நீ சொல்கிறபடி எதுவும் நடக்காது". தவிரவும், இத்தகைய கருத்துக்களுடனேயே மற்ற பார்வையாளர்களும் உதாரணமாக, சைபீரியாவைச் சேர்ந்த சகலோவ் போன்றவர்கள் லெனினிடம் சென்றிருக்கிறார்கள் (சகலோவும் நானும் ஆச்சரியப்படும் அளவுக்கு ஒரே கருத்து கொண்டிருந்தோம்).

மாற்றத்திற்கான காலம் இது வல்ல என்று எல்லோரும் சொல்வது போலிருந்தது.

ஆனால் விளதீமிர் இலீச் பலரையும் போல இருக்கவில்லை. அவர் தத்துவத்தால் கட்டுண்டு இருக்கவில்லை. வாழ்க்கையை, சம்பவங்களை, புரட்சியை அவர் ஆழ்ந்து புரிந்து கொண்டார். புரட்சியை வழிநடத்தினார்....

பொதுமக்களின் சித்தத்தை முதுநிலையினர் என்ற வகையில் அவர் உருவாக்கினார். அவரே எல்லா நெளிவு சுளிவுகளையும் கொண்ட பொதுமக்களின் ஆன்மா.

இதுதான் விளதீமிர் இலீச்சின் மறைவினால்* பேரிழப்பு

---

* நினைவுக் குறிப்புகள் 1924ல் எழுதப்பட்டன. — (ப-ர்.)

ஏற்படக் காரணமாகும். எனவேதான் கட்சி உறுப்பினர் கள் மட்டுமின்றி கட்சியைச் சேராத எங்களது ஆன்மாவும் இடையருது வேதனையுறுகிறது.

ஆனல் அவரது திறமை மிக்க அனுபவம் வீணுகி விட வில்லை.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தாமல் குழு முறை உழைப்பின் ஆணைகளை நாம் அமுல் நடத்துகிருேம்.

மிகப் பெரியவர்
மிக எளியவர்

போதகர், நண்பர்

ஸ்தாசவா

நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு குருப்ஸ்கயாவின் மூலமாக நான் விளதீமிர் இலீச்சுடன் அறிமுகம் செய்து கொண்டேன். நானும் குருப்ஸ்கயாவும் ஞாயிறுப் பள்ளியில் ஆசிரியைகளாக வேலை பார்த்தோம். பின்னர், ஆசிரியைகளே நிறுவிய ''பாடப் புத்தகங்களின் நடமாடும் மியூசியத்தில்'' நாங்கள் வேலை செய்தோம். சைபீரியச் சிறைவாசத்துக்குப் பின் விளதீமிர் இலீச்சும் பின்னர் நதேஸ்தா சன்ஸ்தன்தீனவ்னுவும் வெளிநாட்டுக்குப் போனார்கள். நாங்கள் கடிதப் போக்குவரத்து நடத்தி வந்தோம். 1905ஆம் ஆண்டு வரை கட்சிப் பணிகள் பற்றித் தீவிரமான கடிதப் போக்குவரத்து எங்களுக்குள் தொடர்ந்து நடந்து வந்தது.

புதிய மனிதர்களைக் கவராததற்காக, கட்சியின் இரண்டாவது மூன்றாவது காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் லெனின் எங்களை எப்படிச் சாடினார் என்பது நினைவு வருகிறது. எங்கள் அணிகளில் எதிரிகள் நுழைந்து விடக் கூடாதே என்ற அச்சத்துடன் உண்மையிலேயே மிகவும் எச்சரிக்கையுடன்தான் நாங்கள் ஆட்களைத் தேர்ந்தெடுத்தோம் என்பதைச் சொல்லிவிட வேண்டும். தோல்விகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஆட்கள் போதவில்லை என்று நாங்கள் வழக்கமாகப் புகார் செய்தோம்.

விளதீமிர் இலீச் கடிதங்கள் ஒன்றில் எழுதினார்: ''இளைஞர்கள் சக்தி தேவை. ஆட்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களை ஆங்காங்கு சுட்டுக் கொல்லும் படி கூட நான் ஆலோசனை சொல்லுவேன். ருஷ்யாவில் மக்கள் கூட்டம் இருக்கிறது. பரவலாகவும் துணிவாகவும், துணி

வாகவும் பரவலாகவும், இன்னும் ஒரு முறை பரவலாக வும் துணிவாகவும் இளைஞர்களை, அவர்களுக்குப் பயப்படாமல் தேர்ந்தெடுக்க மட்டும் வேண்டும்.... அசைவின்மை, பதவிக்கு மதிப்பு போன்ற பழைய பழக்கங்களைத் தூக்கியெறியுங்கள். இளைஞர்களைக் கொண்டு வ்பெரியோத் வாதிகளின் நூற்றுக் கணக்கான குழுக்களை உருவாக்குங்கள். எங்கெங்கும் வேலை செய்ய அவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.''*

இந்தச் சிறப்புமிக்க லெனினது வார்த்தைகளில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர ஆற்றலில் ஆழமும் ஆர்வமும் நிறைந்த நம்பிக்கை வெளியிடப்படுகிறது.

1904ல் நான் கைது செய்யப்பட்டேன்.

1904 நவம்பரில் நான் உண்ணாவிரதம் இருந்த பின்பு சிறையிலிருந்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டேன். ஆனால், எங்கள் காரியமாகக் கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒரு பகுதியினர் இன்னும் சிறையிலிருந்தனர்.

புதிய குற்றவியல் சட்டப்படி, எங்கள் வழக்கை நீதிமன்றம்தான் பகிரங்க அமர்வில் விசாரிக்க வேண்டும், முன்பு போல நிர்வாக முறையில் அரசியல் போலீசார் விசாரிக்கக் கூடாது. அதையொட்டி ஒரு கேள்வி எழுந்தது: நீதிமன்றத்தில் எப்படி நடந்து கொள்வது? எத்தகைய உத்தியைக் கடைப்பிடிப்பது? தோழர்களின் ஆணையின்படி இந்தக் கேள்விகளை விளதீமிர் இலீச்சிடம் நான் கேட்டேன். தமது பதில் கடிதத்தில், விளதீமிர் இலீச் ''பூர்வாங்கக் கருத்துக்கள்'' என்று தாம் கூறியவற்றை வெளியிட்டார்.

மத்தியக் கமிட்டியின் அலுவலக வேலைகள் அனைத்தையும் ஜெனீவாவில் நிர்வகிப்பதற்காக 1905ஆம் ஆண்டு செப்டம்பரில் நான் அங்கு அனுப்பப்பட்டேன். ஜெனீவாவிற்கு வந்து சேர்ந்த பின் லெனின் குடும்பத்தினரிடம்—நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா, அவரது அன்னை யெலிஸ

---

* V. I. Lenin, *Collected Works*, "A Letter to A. A. Bogdanov and S. I. Gusev" (February 11, 1905), Vol. 8, p. 146.—(ப-ர்.)

வேத்தா வசீலியெவ்ஞ ஆகியோருடன் விளதீமிர் இலீச் வசித்த வீட்டுக்குப் போனேன்.

நான் வந்த போது விளதீமிர் இலீச்சை மட்டுமே அங்கு கண்டேன். உடனடியாக என்னைப் பொது அறைக்கு அவர் கூட்டிச் சென்ருர். இந்த அறை சமையலறையாகவும் சாப் பிடுமிடமாகவும் இருந்தது. பெத்ரோகிராதிலும், ருஷ்யா விலும், பெத்ரோகிராத் கமிட்டியிலும் மத்தியக் கமிட்டி யிலும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று என்னை ஏராளமான கேள்விகள் கேட்டார். பின்னர் திடீரென்று அவர் குதித்தெழுந்து, ''கொஞ்சம் பொறுங்கள்'' என்று சொன்ஞர். நான் ஏதோ தவறு செய்து விட்டேன் என்று நினைத்தேன். விளதீமிர் இலீச் பண்ட அலமாரி அருகே சென்று அங்கிருந்து கெட்டிலை எடுத்து, அதில் தண்ணீர் விட்டு, எரிவாயு அடுப்பைப் பற்ற வைத்து, மேசையைத் தேநீருக்காகத் தயார் செய்து அதன் பின்னர் என்னுடன் உரையாடலைத் தொடர்ந்தார். விளதீமிர் இலீச் அடிக்கடி தாமே வீட்டு வேலைகளைச் செய்து வந்தார். அவர்கள் வீட்டில் யார் ஒழிவாக இருக்கிருரோ அவர் வீட்டு வேலையைச் செய்வது என்பதே முறையாக இருந்தது.

லெனின் குடும்பத்தில் எப்போதும் நட்பு நிலவியது. தமது மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பு நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ குருப்ஸ்கயா என்னிடம் சொன்னது எனக்கு நினைவு வருகிறது. விளதீமிர் இலீச் பீட்டர்ஸ்பர்க் சிறையில் இருந்தது பற்றிப் பேச்சு வந்தது. அரசியல் கைதிகளுடன் தொடர்பு கொள்வதற்காகக் கற்பனையான ''மணமகன்களையும்'' ''மணப்பெண்களையும்'' கட்சி தயார் செய்தது. இந்த ''மணமகன்கள்'' ''மணப்பெண் கள்'' மூலமாக கைதிகளுடன் தொடர்பு கொள்ளப் பட்டிருந்தது, அவர்கள் அரசியல் வாழ்க்கையிலிருந்து துண்டுபட்டிருக்கவில்லை.

ஒரு முறை விளதீமிர் இலீச் தமது சகோதரிகளில் ஒரு வரின் மூலமாக, தம்மைப் பார்க்க ''மணப்பெண்'' வர வேண்டும் என்று நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞவுக்குச் சொல்லி அனுப்பிஞராம்.

நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு சொன்னர்: ''நான் போக வேண்டுமா வேறு யாராவது செல்ல வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை! நான் போனேன். நான் தான் வர வேண்டும் என்று விளதீமிர் இலீச் மெய்யாகவே விரும்பியிருக்கிறார்.''

விளதீமிர் இலீச் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னுவை ஒரு மார்க்சிஸ்ட் என்ற முறையில் உயர்வாக மதித்தார். அவருடன் ஆலோசனை செய்யாமல் தமது கட்டுரைகளை இலீச் வெளியிட்டதில்லை.

விளதீமிர் இலீச் கேள்வி கேட்பதும் செவி மடுப்பதும் தனி வகையானவை. கேள்விகளைக் கேட்டுக் கொண்டே, தமக்கு வேண்டிய விஷயத்தைச் சொல்லுகிற வழியில் பேசிக் கொண்டிருப்பவரை அவர் திருப்பி விடுவார். தமக்கு அக்கறையுள்ள பிரச்னைகளைப் பற்றிக் கூறுமாறு நிர்ப்பந்திப்பார். விளதீமிர் இலீச்சுடன் நான் முதல் முறை நடத்திய ஜெனீவா உரையாடலின் போதும் இந்த முறையில் ருஷ்யாவில் இருக்கும் நிலைமை பற்றி நான் சொல்லக் கூடியதையெல்லாம் அவர் தெரிந்து கொண்டார்.

1905 கோடை காலத்தில் மருத்துவர்கள், ஆசிரியர்கள், வக்கீல்கள் மற்ற அறிவுஜீவிக் குழுவினர் ஆகியோரின் காங்கிரசுகள் நடந்தன. அவர்கள் சங்கங்கள் ஏற்படுத்தினர். அவை ''சங்கங்களின் சங்கத்தை'' உருவாக்கின. இந்தக் காங்கிரசுகளிலும் சங்கங்களிலும் மிதவாதிகளுடன் நாங்கள் எப்படிப் போராடினேம் என்று நான் விளதீமிர் இலீச்சுக்குச் சொன்னேன். விளதீமிர் இலீச் நான் கூறியதைக் கேட்டு விட்டுச் சொன்னர்:

''இது பற்றி இங்கு இருக்கும் ருஷ்யக் காலனியில்* நீங்கள் உரை நிகழ்த்த வேண்டும்.''

---

* ஜெனீவா உயர் கல்விக் கூடங்களில் படித்துக் கொண்டிருந்த, அல்லது அங்கு வாழ்ந்து வந்த ருஷ்யர்கள் அனைவரையும் ருஷ்யக் காலனி என்று விளதீமிர் இலீச் அழைத்தார்.—(ஆ-ர்.)

ஒருபோதும் கூட்டத்தில் உரை நிகழ்த்தியதில்லை என்பதால் நான் மனச்சோர்வு கொண்டேன். இந்த உரை அவசியமானது என்று என்னிடம் வற்புறுத்திக் கூறினார் விளதீமிர் இலீச். இந்த உரையைத் தயாரிக்கும் நிகழ்ச்சிப் போக்கில் விளதீமிர் இலீச் எத்தகைய சிறந்த ஆசிரியராகவும் தோழராகவும் விளங்குகிறார் என்று நான் கண்டேன். உரை எழுதப்பட்டுள்ள முறையிலும் பின்னர் அதன் கருத்துக்களிலும் இருந்த குறைகளை அவர் சுட்டிக் காட்டினார். கூட்டத்துக்கு அவர் தலைமை தாங்கினார். உரை முடிந்த பின்பு மீண்டும் சில வார்த்தைகளில் எனது தவறுகளைச் சுட்டிக் காட்டினார்.

1905 அக்டோபர் 20ல் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் கூட்டத்தில் விளதீமிர் இலீச் பேசியதை நான் முதல் முறையாகக் கேட்டேன். ருஷ்ய அரசியல் சம்பவங்கள் பற்றி லெனின் உரை நிகழ்த்தினார். விளதீமிர் இலீச்சின் உரையில் எனக்கு வியப்பூட்டியது என்ன? அவர் உரை நிகழ்த்திய போது போல்ஷிவிக்குகள் மட்டுமன்றி மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களும் கூடக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். எனினும் உரையின் போது எத்தகைய மறுப்பும், எத்தகைய ஆட்சேபக் குரலும் கிளம்பவில்லை. உரை முடிந்த பின்பு, ''கேள்விகள் உண்டா'' என்று தலைவர் வினவிய போது ஒரு கேள்வியும் கேட்கப்படவில்லை. மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப்-புரட்சியாளர்களும் உரையை முற்றிலும் ஒத்துக் கொண்டார்களா என்ன? இல்லை, இல்லை! லெனினது தர்க்க வாதத்தின் ஆற்றலுக்கு எல்லோரும் கீழ்ப்படிந்து விட்டனர். அடுத்த நாள்தான் நினைவு திரும்பிய மென்ஷிவிக்குகள், இலீச்சின் உரையில் வெளியிடப்பட்ட கோட்பாடுகளைச் சூடு பறக்க மறுத்தார்கள்.

வெளிப்பார்வைக்கு விளதீமிர் இலீச் மிகவும் எளிமையாகப் பேசினார். சாதாரணமாக அவர் முன்னும் பின்னும் நடப்பார், அவ்வப்போது வெயிஸ்ட் கோட்டுக்கைத் துளையில் கட்டை விரல்களை நுழைப்பார், சில சமயங்

களில் சுட்டு விரலை நீட்டியபடி வலக்கையை முன்புறம் வீசுவார்.

தோழர்களின் மீது எப்போதும் விசேஷமாகக் கவனம் செலுத்தினார் விளதீமிர் இலீச். 1905ஆம் வருடத்து இறுதியில் எனது சொந்த வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். ஜெனீவாவில் நான் விடுதியில் வசித்து வந்தேன். ஒருநாள் விளதீமிர் இலீச் என்னிடம் வந்து மாஸ்கோவில் பவுமானுடன் எப்படி வேலை செய்தேன், நாங்கள் ஒன்றாகச் சிறையில் எப்படிக் கழித்தோம் என்று கேள்விகள் கேட்டார். பவுமான் தனிக் கொட்டடியில் இருந்தார் என்றும், அவருடன் தொடர்பு கொள்வதற்காகவும், சம்பவங்கள் எல்லாவற்றையும் அவருக்குச் சொல்வதற்காகவும் நாங்கள் சிறையில் வழி தேடினோம் என்றும் சொன்னேன். நீதி மன்றம் எங்கள் வழக்கு விசாரணையைச் செய்ய மறுத்த பின்பு பவுமானை ஜாமீனில் விடுவிப்பதற்காகப் பாடுபட்டோம். ஆனால் அது நடக்கவில்லை. நான் சொன்னதைக் கேட்டுவிட்டு விளதீமிர் இலீச் கூறினார்:

''நிகோலாய் எர்னெஸ்தவிச்சை விடுவிப்பதற்கு நதியாவால்* முடிந்திருக்கிறது. ஆயினும், இதனால் துன்பமே விளைந்தது. ஏனெனில், சிறையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டவுடனேயே கறுப்பு நூற்றுவர்களால்** கொல்லப்பட்டு விட்டார்.''

இவ்வாறு சொல்லி விட்டு பவுமான் கொல்லப்பட்டது பற்றிய செய்தி தாங்கிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை அவர் என்னிடம் தந்தார். நான் பவுமானுடன் கொண்

---

* பவுமானின் மனைவி கபிதலீனா பலிகார்பவ்னா மெத்வேதெவா இங்கு குறிப்பிடப்படுகிறார். இவருக்கு நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா குஸ்மினா என்று கட்சிப் புனைபெயர் இருந்தது.— (ஆ-ர்.)

** **கறுப்பு நூற்றுவர்** — புரட்சிகர இயக்கத்துடன் போராடுவதற்காகவும், முற்போக்குப் பணியாளர்களைக் கொலை செய்வதற்காகவும் போலீசும் முடியரசு நிறுவனங்களும் 1905—1907ல் உருவாக்கிய ஆயுதந்தாங்கிய குண்டர் கும்பல்.—(ப-ர்.)

டிருந்த நட்பு பற்றித் தெரிந்திருந்த விளதீமிர் இலீச் அவரது கொலை பற்றி நான் பத்திரிகையிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடாது என்று விரும்பினார்.

ஜெனீவாவில் விளதீமிர் இலீச்சுடன் ஒரு சிறிது காலமே வேலை செய்ய நேர்ந்தது. ஏனெனில் ருஷ்யாவில் புரட்சி தொடங்கி விட்டது, லெனினால் வெளிநாட்டில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. முதல் வாய்ப்புக் கிட்டிய வுடனேயே அங்கிருந்து கிளம்பி பின்லாந்து வழியாக ருஷ்யா திரும்பினார் லெனின். பெத்ரோகிராதுக்குத் திரும் பியவுடன் அவர் முதல் வேலையாக ''இரத்த ஞாயிறு'' பலி கொண்டவர்கள் புதைக்கப்பட்டிருந்த பிரியப்ர ஸேன்ஸ்கயே இடுகாட்டுக்குச் சென்றார். 1905 ஜனவரி 9ல் நடந்த சம்பவத்துக்குத் தாம் எத்தகைய முக்கியத்து வம் தந்தார் என்பதை இதன் மூலம் வெளிக்காட்டினார் விளதீமிர் இலீச்.

1906 ஜனவரியில்தான் நான் மீண்டும் விளதீமிர் இலீச்சைப் பார்த்தேன். ஏனெனில் ருஷ்யாவுக்கு அவர் திரும்பிய போது ஜெனீவாவிலிருந்த அலுவலக வேலைகளை எல்லாம் முடிக்க வேண்டிய பொறுப்பை அவர் என் னிடம் ஒப்படைத்திருந்தார்.

1906ஆம் வருட காலத்து நினைவுகளில் ஸ்டாக்ஹோம் காங்கிரஸ் முடிந்து விளதீமிர் இலீச் திரும்பி வந்தது மனத் தில் பசுமையாய் இருக்கிறது. ஸ்டாக்ஹோமிலிருந்து வருகிற வழியில் காகாவில் லெனின் சில நாட்கள் தங்கி னார். அங்கு காடேட்டுகள் பற்றிய தமது கட்டுரையைச் செப்பமிட்டார்.

இந்த நேரத்தில் காங்கிரஸ் பிரதிநிதிகளை வெளி நாட்டுக்கும், வெளிநாட்டிலிருந்து ருஷ்யாவுக்கும் அனுப்ப வேண்டிய வேலையை நான் செய்ய நேர்ந்தது. ஆயுதம் வாங்குவதற்காக வெளிநாட்டுக்குச் சென்று கொண் டிருந்த, தெற்கிலிருந்து வந்த தோழர்களை ஸ்வீடன் வழியாக அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. ஏனெனில் ருஷ்யாவின் தென் பகுதியில் ஆயுதந்தாங்கிய எழுச்சிக்காக

போல்ஷிவிக்குகள் இன்னும் தயார் செய்து கொண்டிருந்தனர்.

காகசஸ் பகுதியிலிருந்து வந்த தோழர்களில் ஒரு ஜார்ஜியரும் இருந்தார். திஃபிலீசில் காடேட்டுகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று அவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்ட நான், இந்தத் தகவல் விளதீமிர் இலீச் எழுதும் கட்டுரைக்குப் பயனுள்ளதாய் இருக்கும் என்று நினைத்து, அவரை லெனினிடம் அனுப்பி வைத்தேன். யாரிடம் அனுப்புகிறேன் என்று அவரிடம் நான் சொல்லவில்லை. சற்று நேரம் கழித்து என்னிடம் திரும்பி வந்த தோழர் கேட்டார்:

''லெனினிடம் என்னை அனுப்புகிறாய் என்று நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

நான் பதில் சொன்னேன்:

''நான் உன்னை லெனினிடம் அனுப்புகிறேன் என்று நீ தெரிந்து கொண்டால், எல்லாவற்றையும் எளிதாகவும் தெளிவாகவும் சொல்வதற்குப் பதிலாக நீ உன்னுடைய அறிக்கையை அழகு படுத்தத் தொடங்குவாய்''.

முதலில் பீட்டர்ஸ்பர்கில் ஐகரோத்னி நெடுஞ்சாலையிலும், பின்னர் தெரியோகிலும் நடந்த கட்சி மாநாடு நினைவுக்கு வருகிறது. தெரியோகில் போல்ஷிவிக் பேச்சாளர்களும் மென்ஷிவிக் பேச்சாளர்களும்* உரை நிகழ்த்தினர். ஃபியோதர் டான் நிகழ்த்திய உரை நினைவுக்கு வருகிறது. பழைய ஜார் கால ஜெனரல் படைவீரர்களிடம் பேசுவது போல அங்கிருந்தவர்களைப் பார்த்து அவர் பேசினார்: அவர்களிடம் அவர் பெரிய மனிதப் பாங்கில் நடந்து கொண்டார். அவருக்குப் பின்னால் விளதீமிர் இலீச் பேசினார். அவர் தெளிவாகவும் உருவகமாகவும் பேசினார். உரை முடிந்த பின் தோழர்கள் அவரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டார்கள். விளதீமிர் இலீச் எங்கள் வழிகாட்டியாய் இருந்ததோடு எங்களுக்கு மிக நெருங்கிய

* ஸ்டாக்ஹோம் காங்கிரசுக்குப் பின் எல்லா அமைப்புகளும் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன.—(ஆ-ர்.)

நண்பராயும் விளங்கினார். எல்லா விதமான இன்னல்களுடனும் எல்லாக் குழப்பங்களுடனும், எத்தகைய பிரச்னையுடனும்—அரசியல் பிரச்னை மட்டுமின்றி சொந்தப் பிரச்னையுடனும்—நாங்கள் அவரிடம் போக முடிந்தது.

1906ல் அரசாங்க டூமாவிற்குத் தேர்தல் நடந்தது. பீட்டர்ஸ்பர்க் கமிட்டி, மத்தியக் கமிட்டியைப் போலவே ஒன்றிணைந்திருந்தது. டூமாவை பகிஷ்கரிக்கும் படி நாங்கள் கிளர்ச்சி நடத்தினோம். என்னிடமிருந்த கிளர்ச்சியாளர்கள் பட்டியலில் விளதீமிர் இலீச்சின் பெயரும் இருந்தது. இத்தகைய ஒரு பேச்சாளர் இல்லையே என்று மென்ஷிவிக்குகள் வருத்தப்பட்டது எனக்கு நினைவு வருகிறது.

வி. இ. லெனினின் விசேஷமான கட்டுப்பாட்டு உணர்ச்சி பற்றிக் குறிப்பிட வேண்டும். உரை நிகழ்த்துவதற்கு அவர் எங்கு போக வேண்டும் என்று சொல்வதற்காக எங்காவது வரும்படி (நாங்கள் சட்டவிரோதமாகப் பணி புரிந்தோம்) நான் அவரை அழைத்த போது அவர் வராமல் இருந்த சந்தர்ப்பம் ஒன்று கூட இல்லை. அதே போல அவர் தாமதமாக வந்த சந்தர்ப்பமும் எதுவும் இல்லை. அவரது உரையின் போது எத்தனை பேர் இருந்தார்கள், எத்தகைய கேள்விகள் கேட்கப்பட்டன, அவரை நாங்கள் அனுப்பிய அமைப்பில் உள்ள குறைபாடுகள் என்ன என்றெல்லாம் அடுத்த நாள் லெனின் சரியாகத் தகவல் தருவார்.

லெனினது கட்டுப்பாட்டு உணர்ச்சிக்கு இன்னும் ஓர் உதாரணம் தருகிறேன். இது முற்றிலும் வேறு காலம் சம்பந்தப்பட்டது. 1918ல் விளதீமிர் இலீச் பெத்ரோகிராதிலிருந்து மாஸ்கோவிற்கு வந்து கிரெம்ளினில் குடியேறிய பின்பு இது நடந்தது.

விளதீமிர் இலீச்சின் வீட்டுக்கு இட்டுச் சென்ற நடைகூடத்தில் கிரெம்ளின் மேற்பார்வையாளர் அனைத்து ருஷ்ய மத்தியச் செயற்குழுப் பள்ளி மாணவர்களைக் காவலுக்கு நிறுத்தியிருந்தார். விளதீமிர் இலீச்சை அடையாளம் தெரியாத இளைஞர்கள் அங்கு நிறைய இருந்தனர்.

லெனினது வீட்டுக்கு அனுமதிச் சீட்டு இல்லாமல் எவரையும் விடக் கூடாது என்று மேற்பார்வையாளர் உத்தரவிட்டிருந்தார். மக்கள் கமிசாரவையில் தமது அறைக்குள் ஒருநாள் லெனின் சென்ற போது நிரந்தர அனுமதிச் சீட்டை வீட்டில் மறந்து வைத்து விட்டு வந்திருந்தார். பகலில் அவருக்குத் தமது வீட்டிலிருந்து என்னவோ தேவையாய் இருந்தது. அவர் வீட்டுக்குப் போனார். முறை வேலை பார்க்கும் காவல் மாணவரை அவர் நெருங்கிய போது அவரிடம் அனுமதிச் சீட்டு கேட்டார் காவல்காரர். விளதீமிர் இலீச் தமது வீட்டுக் கதவைக் காட்டிச் சொன்னார்:

"இதுதான் எனது வீட்டுக் கதவு...."

காவலாளி சொன்னார்:

"எனக்குத் தெரியாது. அனுமதிச் சீட்டு இன்றி யாரையும் உள்ளே விடக் கூடாது என்று உத்தரவு இருக்கிறது."

விளதீமிர் இலீச் திரும்பினார். நிர்வாகியின் காரியாலயத்துக்குச் சென்று ஒரு முறை உள்ளே போவதற்கான அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டு வீட்டிற்குள் போனார்.

24 மணி நேர முறைவேலை முடிந்தது. முறைவேலைக் காவலாளி தனது கமாண்டரை அணுகி அனுமதிச் சீட்டு இல்லாமல் ஒருவர் வந்த சம்பவம் பற்றிச் சொன்னார். அவருக்கு இது பற்றி ஏற்கெனவே தெரிந்திருந்தது. காவலாளி சொன்னதைக் கேட்டு விட்டு அவரிடம் கமாண்டர் கேட்டார்:

"நீ யாரை உள்ளே விடவில்லை என்று தெரியுமா?"

"தெரியாது."

"மக்கள் கமிசாரவை தலைவர் லெனினை."

காவலாளி விளதீமிர் இலீச்சிடம் மன்னிப்புக் கேட்பதற்காக ஓடினார்.

ஆனால் விளதீமிர் இலீச் சொன்னார்:

"நீங்கள் மன்னிப்புக் கேட்பதற்கு ஒன்றுமில்லை. கிரெம்ளின் பகுதியின் மேற்பார்வையாளர் இட்ட ஆணையோ, உத்தரவோ ஒரு சட்டம், மக்கள் கமிசாரவையின் தலைவனான நான் இந்தச் சட்டத்தை எப்படி மீற முடியும்? தவறு செய்தவன் நான். நீங்கள் செய்தது சரி."

லெனினை நெருக்கமாகத் தெரிந்த எங்களை, விளதீமிர் இலீச்சின் அசாதாரண உழைப்புப் பற்று வியப்புக்குள்ளாக்கியது. கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளராக நான் பணி புரிந்த காலமான 1917—1920 என் நினைவுக்கு வருகிறது. நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞவோ மரியா இலீனிச்ஞவோ என்னிடம் வந்தார்கள் அல்லது தொலை பேசியில் சொன்னார்கள்:

''தூக்கமின்மை உண்டாகும் வரை விளதீமிர் இலீச் வேலை செய்திருக்கிறார். ஏதாவது நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.''

அப்போது, விளதீமிர் இலீச்சுக்கு விடுமுறை அளிப்பது பற்றி தீர்மானம் நிறைவேற்றும்படி மத்தியக் கமிட்டி உறுப்பினர்களைத் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டேன். தீர்மானம் நிறைவேறிய பின்பு விளதீமிர் இலீச்சுக்குப் போன் செய்தேன்:

''விளதீமிர் இலீச், உங்களுக்குச் சில நாட்கள் விடு முறை தருவது என்று மத்தியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.''

கோபம் நிறைந்த குரல் டெலிபோனில் பதில் சொல் லிற்று:

''எப்போது விடுமுறை எடுக்க வேண்டும் என்று உத் தரவு போடுகிறீர்கள்?''

மத்தியக் கமிட்டியின் தீர்மானம் கண்டு விளதீமிர் இலீச் வாக்குவாதம் செய்யவில்லை. விடுமுறை பெற்றுக் கொண்டு அவர் வேட்டைக்குப் போனார், காளான்கள் பறித்துச் சேகரித்தார், ஆனால் வேலை மட்டும் செய்யவே இல்லை. கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானத்தைக் கறாராக நிறைவேற்றினார். பொதுவாகவே, மத்தியக் கமிட்டியின் தீர்மானங்களை லெனின் மிகவும் காரியப் பற்றுடன் அணுகினார்.

தோழர்களின் உடல் நலத்தைக் கனிவுடன் பேணினார் லெனின். உதாரணமாக திசியுருப்பாவை அவர் கவனித்துக் கொண்டது இவ்வாறு. தோழர் திசியுருப்பா தமது ஆரோக்கியத்தைப் பேணாதிருந்தார். விளதீமிர்

இலீச் இதை அனுமதிக்கவில்லை. கம்யூனிஸ்டுகள் அரசாங்கச் சொத்து ஆவர். அதனை விரயமாக்க அனுமதிக்கப் பட மாட்டாது என்பார் அவர். ''அரசாங்கச் சொத்தைக் கையாள்வதில் முற்றிலும் தகாத முறையில் நடந்து கொள்கிறார்'' திசியுருப்பா என்று முதலில் லேசாக அவருக்கு எழுதினார் லெனின். இதனால் பயன் விளையாத தால் அவருக்குக் கடுமையான உத்தரவு எழுதினார்:

''அரசாங்கச் சொத்தை எச்சரிக்கையின்றிக் கை யாண்டதற்காக (இருமுறை நோய் தாக்கியிருக்கிறது) திசியுருப்பாவுக்கு:

முதல் எச்சரிக்கை தரப்படுகிறது. உடனடியாக வீட்டுக்குப் போகும்படி உத்தரவு இடப்படுகிறது....

லெனின்''

ஜெர்சின்ஸ்கி இரத்த வாந்தி எடுக்கும் வரை வேலை செய்திருக்கிறார் என்றும் ஓய்வெடுத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை என்றும் அறிந்த விளதீமிர் இலீச், எனக்கு போன் செய்து, ஜெர்சின்ஸ்கி நரஃபோமின்ஸ்குக்குப் போவதற்காக இரண்டு வார விடுமுறை கொடுக்கும் தீர் மானம் ஒன்றை மத்தியக் கமிட்டி எடுக்க வேண்டும் என்று ஆலோசனை சொன்னார். அப்போது நரஃபோமின்ஸ்கில் மாஸ்கோவுக்கு அருகில் சிறந்த அரசாங்கப் பண்ணை இருந் தது. அங்கு ஜெர்சின்ஸ்கிக்கு நல்ல உணவு கிடைக்கும். சிறு விவரங்களைக் கூடத் தீர ஆலோசிக்கும் விளதீமிர் இலீச், அரசுப் பண்ணையில் டெலிபோன் இல்லை என்பதை யும் எனவே ஜெர்சின்ஸ்கி மாஸ்கோவிற்குப் போன் செய்யாமல் சிறப்பாக ஓய்வெடுத்துக் கொள்ள முடியும் என்பதையும் கணக்கிலெடுத்துக் கொண்டார்.

அப்போது மத்தியக் கமிட்டியின் செயலாளர் அரசியல் பணிகள் மட்டும் செய்து வரவில்லை. பொருள் வினியோகத் தையும் அவர் கவனிக்க வேண்டி இருந்தது. ஏதோ ஒரு தோழருக்குப் பனித் தொப்பியும், வேறொருவருக்கு நீண்ட காலணிகளும், இன்னும் வேறொருவருக்கு வேறேதாவதும் கிடைக்கச் செய்யுமாறு அடிக்கடி விளதீமிர் இலீச் எனக்கு

போன் செய்தார். தமது ஆணைகள் நிறைவேற்றப் பட்டுள்ளனவா என்று அடுத்த நாள் கண்டிப்பாக அவர் பரிசோதித்தார்.

விளதீமிர் இலீச் அசாதாரண அடக்கம் கொண்டிருந் தார். இதன் தொடர்பாக சில உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கேள்விப் பட்டியல் ஒன்றில் ''எந்தெந்த மொழிகள் தெரியும்?'' என்ற கேள்விக்கு விளதீமிர் இலீச் பதில் எழுதினார்: ''ஆங்கிலம், ஜெர்மன், மோசமாக—பிரெஞ்சு, மிக மோசமாக—இத்தாலிய மொழி.''

1920ஆம் ஆண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டா வது காங்கிரஸ் நடந்த போது, விளதீமிர் இலீச் தமது உரையில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை செய்த தவறுகளை விமர்சனம் செய்தார், சொந்த முறை யில் இத்தாலியரான செராட்டியை விமர்சித்தார். ஜெர் மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பற்றிப் பேசப்பட்ட போது விளதீமிர் இலீச் ஜெர்மன் மொழியில் பேசினார். பின்னர் செராட்டியின் தவறுகளைப் பற்றிப் பேசத் தொடங்குகையில் உடனே பிரெஞ்சு மொழியில் பேச்சை மாற்றினார். கிரெம்ளின் மாளிகையில் நடந்த இந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். மண்ட பத்தில் கிளம்பிய இரைச்சலை நான் நினைவு கூர்கிறேன். இப்போதுதான் ஜெர்மன் மொழியில் சிறப்பாகப் பேசிய ஒரு ருஷ்யர் அதே போல பிரெஞ்சு மொழியிலும் பேசு வதை அன்னியத் தோழர்களால் நினைத்தும் பார்க்க முடிய வில்லை. இப்படித்தான் விளதீமிர் இலீச் மொழிகளை ''மோசமாகத்'' தெரிந்திருந்தார்!

லெனினது அடக்கத்துக்கு இன்னொரு உதாரணம். அவருக்கு இசை மிகவும் பிடிக்கும். அவரது அன்னை மரியா அலெக்சாந்தரவ்னு நன்கு பியானே வாசிப்பார். குழந்தைகள் அவர் வாசிப்பதைத் தொடர்ந்து கேட் பார்கள். 1919லோ 1920லோ திசியுருப்பாவின் வீட்டில் மாலைக் கூட்டம் நடந்தது. பியானே வாசிப்பவர் ஒருவர் பெத்கோவினின் *Appassionata* என்ற இசைப்படைப்பை

வாசித்தார். இது லெனினுக்கு நன்கு தெரிந்தது, மிகவும் விருப்பமானது. நான் விளதீமிர் இலீச்சை நெருங்கி வாசித்த முறை அவருக்குத் திருப்தி தந்ததா என்று கேட்டேன்.

''நீங்கள் என்னை எதற்குக் கேட்கிறீர்கள்? எனது அபிப்பிராயத்திற்கு என்ன முக்கியத்துவம்? நான் ஓர் இசை ரசிகன் மட்டுமே'' என்றார்.

லெனினது வேலை முறையில் ஒரு சுவையான விவரம். பற்பல காகிதங்கள் எழுதிக் கொண்டிருப்பதுடன் அவர் போராட்டம் நடத்தினார். விளதீமிர் இலீச் ஓர் ஆணை பிறப்பித்திருந்தார்: முடிந்த அளவுக்கு டெலிபோனிலேயே எல்லாவற்றையும் பேசி முடிவு செய்வது, கடிதப் போக்கு வரத்து நடத்தாமலிருப்பது. அவரும் முடிந்த போதெல்லாம் டெலிபோன் மூலமே நேரடியாக ஆணைகள் பிறப்பித்தார்.

பார்வையாளர்களை வெகு கவனத்துடன் வரவேற்றார் லெனின். ஒவ்வொரு பணியாளரும் இதே போல் நடந்து கொள்ள வேண்டும் என்று கோரினார். யாராவது ஒருவருக்குப் பேட்டி கொடுப்பதாக அவர் நேரம் குறித்திருந்து, குறித்த நேரத்தில் அவரை வரவேற்க முடியாது என்று காலையில் அவர் அறிந்தால், அவர் நேரடியாகவே (செயலாளர் மூலமாக அல்ல) அந்தத் தோழருக்குப் போன் செய்து, குறித்த நேரத்தில் அவருக்குப் பேட்டி கொடுக்கத் தம்மால் இயலாது என்று கூறி எப்போது அவரை வரவேற்க முடியும் என்பதற்கான நேரத்தைப் பற்றி உடன்பாடு செய்து கொள்வார். தோழருக்குப் பேட்டி கொடுக்க வேண்டிய நேரம் நெருங்கி வந்து, அவசர வேலைகள் (இத்தகைய வேலைகள் அப்போது ஏராளமாய் இருந்தன) வந்திருப்பவரை வரவேற்பதற்கு விளதீமிர் இலீச்சுக்கு வாய்ப்பளிக்கவில்லை என்றால், வரவேற்பறைக்குத் தமது செயலாளரை அனுப்பிப் பார்வையாளரிடம் கூறச் சொல்வார்: ''காத்திருக்காதீர்கள், வீணாக உட்கார்ந்திருக்காதீர்கள், நேரத்தை இழக்காதீர்கள், விளதீமிர் இலீச்சால் உங்களுக்குப் பேட்டியளிக்க முடியாது.'' பின்னர் அந்தத் தோழர் பேட்டிக்கு எப்போது வரலாம் என்பது பற்றிச்

செயலாளர் நேரங் குறிக்க வேண்டும், விளதீமிர் இலீச் அவருக்குப் போன் செய்வதற்காக அவரது டெலிபோன் எண்ணைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

நேரத்திற்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தார் விளதீமிர் இலீச். கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டம் சாதாரணமாக காலை 10 மணிக்குக் குறிக்கப்பட்டிருக்கும். 10.15க்குள் விளதீமிர் இலீச் கூட்டத்தைத் தொடங்குவார். பேச்சாளர்களின் நேரம் கறாராக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. வழக்கமாக அவர்களில் ஒவ்வொருவருக்கும் இரண்டு நிமிடம் கொடுக்கப்பட்டிருந்தது. விளதீமிர் இலீச் கடிகாரத்தின் மூலம் பேச்சாளரைக் கவனித்துக் கொண்டிருப்பார். கூட்டத்தின் போது ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருப்பதை விளதீமிர் இலீச் பொறுக்க மாட்டார். யாராவது ஒருவர் எங்காவது பேசத் தொடங்கினுல் அவர் உடனே விரலசைத்து மிரட்டுவார்: ''த்சு, த்சு.'' பின்னர் ''எழுதுங்கள்'' என்று சைகை காட்டுவார். தோழருக்கு ஏதாவது சொல்ல வேண்டுமாஞல் எழுதிக் காட்டுங்கள், உங்கள் பேச்சுக்களால் மற்றவர்களுக்குத் தொந்தரவு செய்யாதீர்கள். எனவே கூட்ட நேரங்களில் காகிதக் குறிப்புகள் பெருமளவில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவாறே, அதே நேரத்தில், தமக்குத் தேவையான முடிவுகளைக் குறித்துக் கொள்வார், அங்கிருந்தவர்களுடன் குறிப்புகளைப் பரிமாறிக் கொள்வார்.

கிராமத்தில் இருந்த நிலைமை விளதீமிர் இலீச்சுக்கு எவ்வளவு ஆழ்ந்த அக்கறையை ஏற்படுத்திற்று என்று எனக்குத் தெரிந்திருந்தது. கிராமத்திலிருந்து வந்தவர்கள் சுவையான தகவல்களைச் சொன்ஞல் அவர்களை நான் லெனினிடம் அனுப்பி வைப்பேன். தமக்குப் புதிய தகவல்களைத் தரக் கூடிய மனிதர்களை நான் அவரிடம் அனுப்பி வைப்பது விளதீமிர் இலீச்சுக்குப் பழகிப் போயிற்று. அவரது செயலாளர்கள் எனக்கு அடிக்கடி போன் செய்து சொல்லுவார்கள்:

''குறிப்பிட்ட தோழர் விளதீமிர் இலீச்சைப் பார்க்க வேண்டும் என்கிருர். அவரை வரவேற்று அவருடன் உரை

யாடுங்கள். அவர் ஏதாவது புதிய தகவல் தர முடியும் என்று நீங்கள் கண்டால் அவரை விளதீமிர் இலீச்சிடம் அனுப்பி வையுங்கள். இல்லையேல் தோழரின் கோரிக்கையை நீங்களே, ஒருவேளை நிறைவேற்றி விடுங்கள்.''

முடிந்த அளவுக்கு விளதீமிர் இலீச்சின் சுமையைக் குறைப்பது உண்மையிலேயே எங்கள் கடமையாய் இருந்தது.

விளதீமிர் இலீச் மிகவும் மகிழ்ச்சியுடையவராயும் நேரடியாகக் காரியங்களில் பங்கு கொள்பவராகவும் இருந்தார். மத்தியக் கமிட்டிக் கூட்டங்களில் பெருத்த சிரிப்பு வெடிப்பதை அடிக்கடி கேட்கலாம், ஏனெனில் விளதீமிர் இலீச் சிரிக்கத் தொடங்கியிருப்பார். அந்த மகிழ்ச்சிச் சிரிப்பு மற்றவர்களைத் தொற்றிக் கொள்ளும்.

1919லோ 1920லோ—சரியாக எனக்கு நினைவில்லை—விளதீமிர் இலீச் என்னை அழைத்து பெரிய அரசியல் பணி ஒன்றை ஒப்படைத்தார். நான் இந்த வேலையை ஒத்துக் கொள்ள மறுத்தேன். நான் ஒரு ஒழுங்கமைப்பாளர்தானே தவிர, இத்தகைய பணியை மேற்கொள்ளத் தகுந்த அளவுக்குத் தத்துவ வல்லமை என்னிடம் இருப்பதாக உணரவில்லை என்றும் காரணம் கூறினேன். விளதீமிர் இலீச் தந்திரமாக முகஞ்சுளித்து என்னைக் கேள்வி கேட்கத் தொடங்கினார்:

''ரபோச்சயா மீசிலுடன் ('தொழிலாளர் சிந்தனை') நீங்கள் போராடினீர்களா?''

''போராடினேன்.''

'' 'பொருளாதாரவாதிகளுடன்' போராடினீர்களா?''

''ஆமாம்.''

''மென்ஷிவிக்குகளுடன்?''

''ஆமாம்.''

''கலைப்புவாதிகளுடன்?''

''ஆமாம்.''

''அப்படியானால் போங்கள். இந்தப் பணியை நிறைவேற்றுங்கள்.''

இந்தக் கேள்விகளால், புத்தகத்திலிருந்து மட்டுமல்ல,

வாழ்க்கையிலிருந்தும் நாம் கற்றுக் கொள்கிறோம் என்று எடுத்துக் காட்டினார் லெனின்.

வாழ்க்கையை ஆழமாகப் பயில்வது, மக்கள் மத்தியில் வேலை செய்வது, மக்களது நலன்களையும் கோரிக்கைகளையும் நன்கு தெரிந்து கொள்வது, பொது மக்களின் வளமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வது—இவற்றை விளதீமிர் இலீச் எங்களுக்கு இடையருது கற்றுக் கொடுத்தார்.

என் நினைவுகளில் லெனின்

ஸெத்கின்

மீளாத் துயரால் நாம் ஒவ்வொருவரும் பீடிக்கப்பட்டிருக்கிறோம்.* மாற்றீடில்லாதவர் ஒருவர் நம்மை விட்டு மறைந்து விட்டார் என்பதுணர்ந்து நாம் எல்லோரும் கலங்கி நிற்கிறோம். நம்மைவிட்டுச் சென்றவரின் உயிருள்ள பசுமையான நினைவு சோகமிக்க இருள் சூழ்ந்த இந்நேரத்திலே நம் முன்னே எழுகிறது. இருளைக் கிழித்துக் கொண்டு பாயும் மின்வெட்டுப் போல இந்நினைவு, மாபெரும் இத்தலைவரிடத்தே உருக்கொண்ட மாமனிதரை நமக்குப் பளிச்செனப் புலப்படுத்துகிறது. மகத்தான தலைவர் என்பதன் மாண்பும், மகத்தான மனிதர் என்பதன் மாண்பும் இசைவுடன் இணைந்து பொருந்தியதன் முத்திரை லெனினுடைய குணநலன்களில் பதிந்துள்ளது. இந்தச் சிறப்பியல்பின் விளைவாய் லெனினது உரு—பாரிஸ் கம்யூன் வீரர்களது அரும்பெரும் தியாகத்தைப் போற்றி மார்க்ஸ் கூறியது போல—''உலக தொழிலாளி வர்க்கத்தின் விசால நெஞ்சத்தில் பொறிக்கப் பெற்று நிலைபேறுடையதாகி விட்டது.'' இதைத்தான் கம்யூனிசத்திற்காகப் போராடுபவரின் அதிருஷ்டமான விதி என்று மார்க்ஸ் அழைத்தார். ஏனெனில் உழைப்பாளிப் பெருங்குடி மக்கள்—செல்வத்துக்குப் பலியானோர் எல்லோரும், முதலாளித்துவ உலகத்துக்குரிய பொய்க்கூற்றுகளையும் கபட நாடகத்தையும் அறியாதோர் அனைவரும் — நுண்ணயம்

* நினைவுக்குறிப்புகள் 1924 ஜனவரியில் எழுதப் பட்டன.—(ப-ர்.)

படைத்த தமது உள்ளுணர்ச்சியால் உண்மைக்கும் பொய்க்கும், எளிமை உருவான பெருந்தன்மைக்கும் படாடோபமான வீறுப்புக்கும், தம்பால் காட்டப்படும் உள்ளன்புக்கும் வெறும் அகம்பாவத்தின் வெளியீடான செல்வாக்கு வேட்டைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் கண்டு உணர்ந்து விடுகின்றனர்.

எந்நாளும் மறக்க முடியாத நம் தலைவரும் நண்பருமான லெனினைப் பற்றிய எனது நேரடி நினைவுகளின் களஞ்சியத்திலுள்ளவை அனைத்தையும் ஒரு சிறு விவரம் கூட விடாமல் பொது மக்களுக்கு அறிவிப்பது எனது கடமையாகுமெனக் கருதுகிறேன். இது விளதீமிர் இலீச்சுக்கு நான் ஆற்ற வேண்டிய கடமையாகும். அவர் தமது செயல் அனைத்தையும் யாருக்காகப் பணித்துக் கொண்டாரோ அந்தப் பாட்டாளி வர்க்கத்தாருக்கும், பொதுவாக உழைப்பாளி மக்கள் அனைவருக்கும், சுரண்டப்படுவோர் யாவருக்கும், அடிமைத் தளைகளால் விலங்கிடப்பட்டு ஒடுக்கப்படுவோர் உலகின் எப்பகுதியில் இருப்போராயினும் அவர்கள் எல்லோருக்கும், லெனின் தன் அன்பைச் சொரிந்து புரட்சி வீரர்களாகவும் உயர்ந்ததொரு சமுதாய அமைப்பின் படைப்பாளர்களாகவும் பெருமையுடன் போற்றிப் பாராட்டிய அவர்கள் அனைவருக்கும் நான் ஆற்ற வேண்டிய கடமையாகும்.

அனைத்து உலகையும் ஆட்டிக் குலுக்கிய ருஷ்யப் புரட்சி வெடித்தபின் முதன் முதலாய் 1920ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தின் தொடக்கத்தில் நான் லெனினைச் சந்தித்தேன். நான் மாஸ்கோ வந்தடைந்தவுடனே கட்சிக் கூட்டம் ஒன்றில்—கிரெம்ளினில் ஸ்வெர்த்லோவ் மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றதென்று நினைக்கிறேன்—அவரைச் சந்தித்தேன். லெனினிடம் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. வயதிலுங்கூட எனக்கு அவர் முன்பிருந்தது போலவே தோன்றினார். நன்கு பிரஷ் செய்யப்பட்ட அதே எளிய ஜாக்கெட்டுதான், முதல் முறையாய் நான் 1907ல் ஷ்டுட்கார்ட்டில் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் உலகக் காங்கிரசில் அவரைப் பார்த்த போது

அவர் போட்டிருந்த அதே ஜாக்கெட்டுதான், அணிந்திருந்தார் என்று நிச்சயமாய்ச் சொல்வேன். சிறப்பியல்பு ஒவ்வொன்றையும் கண்டு கொண்டுவிடும் கலைஞனின் கூர்மையான பார்வையைப் பெற்றிருந்த ரோஸா லுக்சம்பர்க் அப்பொழுது எனக்கு லெனினைச் சுட்டிக்காட்டிக் கூறினார்: ''அதோ பார், அவரைப் பார்த்து வைத்துக் கொள். அவர் தான் லெனின். அவருடைய நெற்றியைக் கவனி: எவ்வளவு உறுதியும் திடச்சித்தமும் அதில் தெரிகிறது பார்.''

பேச்சிலும் சரி, நடத்தையிலும் சரி லெனினிடம் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. சில நேரங்களில் விவாதங்கள் மிகவும் விறுவிறுப்பாய் இருந்தன, ஏன் உணர்ச்சி ததும்புவனவாயும் இருந்தன. முன்பு இரண்டாவது அகிலத்தின் காங்கிரசுகளில் எப்படியோ, அதே போல இப்பொழுதும் லெனின் விவாதத்தின் போக்கை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தார், அமைதி குலையாது சுய-கட்டுப்பாடு மிக்கவராய் இருந்தார்; இந்த அமைதி அவருடைய உள்ளூரக் கருத்தூன்றிய ஆழ்ந்த சிந்தனையையும் அயராத சக்தியையும் நெகிழ்வையும் வெளிப்படுத்துவதாய் இருந்தது. அவர் குறுக்கிட்டுச் சொன்னவையும், இடையிடையே கூறிய கருத்துக்களும், பிறகு மேடையிலிருந்து முறையாக நிகழ்த்திய சொற்பொழிவுகளும் இவற்றை நன்கு புலப்படுத்தின. கவனிக்கப்பட வேண்டியது எதுவும் அவருடைய கூர்மையான பார்வையிலும் தெளிவான சிந்தையிலும் படாமல் தப்பவில்லை என்பது தெரிந்தது. அந்தக் கூட்டத்தின் போது நான் லெனினது ஒப்பற்ற தனிச் சிறப்புகளால் வெகுவாகக் கவரப்பட்டேன். இதற்கு முன்பும் இக்கூட்டத்துக்குப் பிற்பாடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவை என்னைக் கவரத் தவறியதில்லை. அவருடைய எளிமையும் உள்ளன்பும் ஆர்வமும் தோழர்களுடன் பழகுகையில் வெளிப்பட்ட அவரது இயற்கையான வெள்ளை மனமும் லெனினுக்கே உரிய தனிச் சிறப்புகளாகும். ''இயற்கையான வெள்ளை மனம்'' என்று ஏன் கூறுகிறேன் என்றால், அவர் நடந்து கொண்டதைப் போலல்லாது வேறு எம்முறையிலும் நடந்து கொள்ள முடியாதவர்,

அதுவே அவர் இயற்கை சுபாவம் என்பது தெளிவாக என் மனதுக்குத் தெரிந்தது. தோழர்களிடம் அவர் அனுசரித்த போக்கு அவருடைய அகத்தின் இயல்பான உருவை வெளிப்படுத்திற்று.

அதிகாரத்தை வென்று கொள்வதற்கான போரில் உணர்வுபூர்வமாக இறங்கி, ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் குறிக்கோளை விளக்கிக் கூறி அதை அடைவதற்கான பாதையைச் சுட்டிக்காட்டிய ஒரு கட்சியின் தனிப் பெருந் தலைவர் லெனின். இவர்களுடைய முழு நம்பிக்கைக்கும் உரித்தான இக்கட்சி, நாட்டை நிர்வாகம் செய்து பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைச் செயல்படுத்துகிறது. உலகின் முதலாவது பாட்டாளி வர்க்க அரசாகிய மாபெரும் ஒரு நாட்டின் தலைவர் லெனின். அவருடைய சிந்தனைகளும் விருப்பங்களும் சோவியத் ருஷ்யாவின் எல்லைகளுக்கு அப்பாலுமுள்ள கோடானு கோடியான மக்களின் மனத்தில் குடிகொண்டிருக்கின்றன. எந்தப் பிரச்சினையாயினும் அது பற்றிய அவர் கருத்துக்கு நாடெங்கணும் தீர்மானமான செல்வாக்கு உண்டு. ஒடுக்குமுறையும் அடிமை நிலையும் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் அவருடைய பெயர் நன்னம்பிக்கையின், விடுதலையின் சின்னமாய் ஒலித்திடுகிறது.

''தோழர் லெனின் எங்களைக் கம்யூனிசத்துக்கு அழைத்துச் செல்கிறார். எவ்வளவுதான் இன்னல்கள் வரினும் நாங்கள் கலங்காது நின்று பாடுபடுவோம்'' என்று ருஷ்யத் தொழிலாளர்கள் பறைசாற்றினர். ஒப்பில்லாத சமுதாயம், மனிதகுலத்தின் மகோன்னத சமுதாயம் உதயமாகிறதென்னும் உணர்வால் உந்தப்பட்டு, பட்டினியால் வாடி, கொடுங் குளிரில் நடுங்கிய நிலையிலும், உறுதியோடு போர்முனைக்கு விரைந்தோடினர்; அல்லது சொல்லொணுக் கடுஞ் சோதனைக்கிடையே நாட்டின் பொருளாதார வாழ்வைப் புனரமைக்கும் பிரம்மாண்டப் பணியிலே முழுமூச்சுடன் ஈடுபட்டனர்.

''நிலப்பிரபுக்கள் திரும்பி வந்து நிலத்தை எங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்வார்கள் என்று நாங்கள் அஞ்சத்

தேவையில்லை. இலீச்சும் போல்ஷிவிக்குகளும் செஞ்சேனை வீரர்களுடன் சேர்ந்து வந்து எங்களுக்குத் துணை புரிவார்கள்.'' நிலப் பசி தீர்ந்துவிட்ட விவசாயிகள் இப்படித்தான் கணக்கிட்டனர்.

''லெனின் நீடூழி வாழ்க!''—இத்தாலியில் மாதாகோயில் சுவர்களில் சகஜமாய்க் காணப்பட்ட கோஷம் அது. இத்தாலியப் பாட்டாளிகள் ருஷ்யப் புரட்சியைத் தமக்கு விடுதலைக்கு வழி வகுத்த புரட்சியாகக் கொண்டாடினர். அமெரிக்கா, ஜப்பான், இந்தியா—எல்லா இடங்களிலும், பண மூட்டைகளது ஆட்சியை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தியோர் எல்லோருக்கும் லெனினது பெயர் அணி திரட்டும் போர் முழக்கமாகி விட்டது.

லெனின் பேசிய முறை ஆடம்பரமின்றி எவ்வளவு எளிதாய் அமைவாய் இருந்தது! ஆயினும் அவர் மகத்தானதொரு வரலாற்றுப் பணியை ஏற்கெனவே செய்து முடித்திருந்தார். எல்லையற்ற நம்பிக்கையின், அளவிலாப் பெரும் பொறுப்பின், ஓயாத உழைப்பின் பிரம்மாண்டச் சுமையை அவர் தாங்கியிருந்தார். தோழர்களது அணிவரிசையிலே அவர் இரண்டறக் கலந்து ஒன்றியிருந்தார்; அவர்களை ஒத்த ஒருவராகவே, மிகப் பலருள் ஒருவராகவே இருந்தார். ''பெருந் தலைவர்கள்'' என்பார்களே, அவர்களைப் போலல்லாது, லெனின் எவ்வகையிலும் நாட்டாண்மை புரிய நினைத்ததில்லை; அதற்குரிய சைகையோ முகபாவனையோ கூட அவரிடம் காணப்பட்டதில்லை. இது போன்ற முறைகள் எல்லாம் அவருடைய இயற்கைக்கே முரணானவை. மெய்யாகவே அவர் மனதை அள்ளும் மாமனிதர். ஏவலாளர்கள் இடையறுது அவரிடம் வந்து பொதுத் துறையையும் படைத்துறையையும் சேர்ந்த பல்வேறு நிலையங்களிலிருந்தும் செய்திகளும் குறிப்புகளும் கொடுப்பார்கள்; உடனே வேகமாய்ச் சில வரிகளில் அவர் தமது பதிலை எழுதிக் கொடுப்பார். எல்லோருக்கும் லெனினது இதமான புன்சிரிப்பும் நேசமான தலையசைப்பும் கிடைக்கும். உடனே அவர்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியால் முகம் மலர்ந்து விடும். அமர்வுகளின் போது, பொறுப்பான உயர் அதி

காரிகளுடன் அவசரப் பிரச்சினைகள் குறித்து இடையிடையே உரையாடுவார். அப்பொழுது அவர், இதனுல் ஏனையோருக்கு இடையூறு ஏற்படாதபடிப் பார்த்துக் கொள்வார். இடைவேளை அறிவிக்கப்பட்டதும் லெனின் ஒரு பெருந் தாக்குதலையே சமாளிக்க வேண்டியதாகி விடும். நாற்புறமிருந்தும் கூட்டமாய் அவரைப் பலரும் சூழ்ந்து கொண்டு விடுவார்கள்—பெத்ரோகிராத், மாஸ்கோ, புரட்சி இயக்கத்தின் மற்றும் பல்வேறு கேந்திரங்களிலிருந்து வந்த ஆடவரும் பெண்டிரும் வளைத்துக் கொண்டு விடுவார்கள். குறிப்பாக இளைஞர்கள் ஏராளமானேர் கூடிக் கொண்டு அவரைத் தொல்லை செய்வார்கள். ஒவ்வொருவரும் தமது அருமைத் திட்டத்துக்கு அவருடைய ஆதரவை நாடுவர். இவ்வாருக மனுக்களும் விசாரிப்புகளும் ஆலோசனைகளும் அவர் மீது பொழியப் படும்.

மிகுந்த பொறுமையோடு அவர் யாவற்றையும் கவனமாய்க் கேட்டு ஒவ்வொருவருக்கும் பதிலளிப்பார். கட்சி வேலை பற்றியதாயிருப்பினும் அல்லது சொந்த இன்னல்கள் பற்றியதாயிருப்பினும் ஒவ்வொரு முறையீட்டையும் அவர் ஆழ்ந்த அனுதாப உணர்வுடன் காது கொடுத்துக் கேட்பார், உதவி செய்ய எந்நேரமும் தயாராயிருப்பார். இளைஞர்களுடன் அவர் நடந்து கொண்ட முறையைக் கண்ட போது எங்கள் உள்ளம் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தது. நடுத்தர வயதுள்ளோர் பலரும் வேறு எதுவுமின்றி தமது வயது மட்டுமே தமக்கு இணையற்ற மேன்மையும் சிறப்பும் அளித்து விடுவதாய் நினைத்துக் கொண்டு ஆடம்பரமாய் ஆரம்பித்துவிடும் அந்த உபதேசத் தோரணையும் அகம்பாவ முறையும் பகட்டுப் புலமையும் சிறிதுமின்றி, கலப்பற்ற தோழமைப் போக்குடையவராய் நடந்து கொண்டார்.

எப்பொழுதுமே லெனின் சரிநிகர் சமானமானவர்களில் ஒருவராகவே, ஏனைய எல்லோருக்கும் ஒத்தவராகவே நடந்து கொண்டார். பெரும் தலைவருக்குரிய சாயல் கிஞ்சிற்றும் அவரிடம் இருக்கவில்லை. கட்சியில் அவருக்

கிருந்த உயர் மதிப்புக்கு, இலட்சியத் தலைவர், தோழர் என்ற முறையில் அவர் பெற்றிருந்த செல்வாக்கே காரண மாகும். அவர் நம்மைப் புரிந்து கொள்ளக் கூடியவர், ஏனை யோரும் இதே போலத் தன்னைப் புரிந்து கொள்ள வேண்டு மென விரும்புகிறவர் என்னும் உணர்வுடன்தான் எல்லோ ரும் அவருடைய மேன்மைக்கு அடி பணிந்தனர். லெனினைச் சுற்றிலும் நிலவிய இந்த இதமான சூழலுடன் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ''பெருந் தலைவர்களது'' விரைப்பான படாடோபத்தை ஒப்பிட்ட போது எனக்கு வருத்தமாய் இருந்தது. ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி எபெர்ட் ''திருவாளர் ஜனாதிபதி'' ஆனதும் முதலாளித் துவ வர்க்கத்தாரின் பழக்க வழக்கங்களையும் முறைகளை யும் காப்பியடிக்க முயன்று சிறிதும் இங்கிதமின்றி அவர் நடந்து கொண்டதானது எனக்கு மடமையின் உச்சிமுடி யாகவே தோன்றியது. எபெர்ட் மனித மாண்பெனும் உணர்வை அறவே இழந்திருந்தார். ஆனால் உண்மையில், ''புரட்சி செய்வதற்காக'' லெனினைப் போலப் ''பாடுபடு வதற்கான ஆர்வமும் துணிவும்'' என்றுமே இந்தக் கன வான்களுக்கு இருந்ததில்லை. இத்தகையோர் பாதுகாத்து நிற்கையில், முதலாளித்துவ வர்க்கத்தினர் ஹென்ரிஷ் ஹேய்னெயின் காலத்தில் முப்பத்தைந்து மன்னர்கள் ஆண்ட போது, அவர்கள் உறங்க முடிந்ததைக் காட்டிலும் நிம் மதியாகக் குறட்டைவிட்டு உறங்கலாம்—வரலாற்று வழி யில் தயாராகி, வரலாற்று வழியில் அவசியமாகி விடும் நிகழ்ச்சிக் கோவையிலிருந்து இங்கும் முடிவில் புரட்சி வெடித்து, இந்தச் சமுதாயத்தைப் பார்த்து ''உஷார்!'' என்று கர்ஜிக்கும் வரையில் நிம்மதியாகக் குறட்டைவிட்டு உறங்கலாம்.

* * *

கட்சி மாநாட்டில் அவரைப் பற்றி என் மனத்தில் பதிந்து, அவருடன் நான் பல முறை உரையாடியதன் வாயி லாய் உறுதியடைந்திருந்த இக்கருத்துக்கள், லெனின் இல்லத்துக்கு முதன்முறையாக நான் சென்றிருந்த போது



வி. இ. லெனின். *1920*

துருப்புக்கள் போர் முனைக்குச் செல்லுமுன் ஸ்வெர்த்லோவின் பெயர் இடப்பட்ட சதுக்கத்தில் வி. இ. லெனின் உரையாற்றும் காட்சி. 1920



வி. இ. லெனின் கிரெம்ளினில் இருந்த தமது படிப்பறையில்.
1918



விவசாயத் துறைப் பிரிவு மற்றும் ஏழை மக்கள் கமிட்டிகளின்
முதல் அகில ருஷ்யக் காங்கிரசின் தலைமைக் குழுவில்
யூனியன்களின் அரண்மனையில் வி. இ. லெனினும்
யா. மி. ஸ்வெர்த்லோவும். 1918

கிரெம்ளினில் வி. இ. லெனின் வசித்து வந்த குடியிருப்பு.

கிரெம்ளினில் வி. இ. லெனின் வசித்து வந்த குடியிருப்பு.

கோர்க்கி-லெனின்ஸ்கியில் வி. இ. லெனின், ந. க. குரூப்ஸ்கயா,
ஆ. இ. உல்யானவா-எலிசாரவா. 1922

அசைக்க முடியாதபடி நிலை பெற்று விட்டன. லெனின் கிரெம்ளினில் வசித்து வந்தார். சில காவலர்கள் அனுமதியளித்த பிறகே எவரும் அவரிடம் போய்ச் சேர முடியும்—புரட்சியின் தலைவர்களைக் கொல்வதற்கு அக் காலத்தில் எதிர்ப் புரட்சியாளர்கள் ஓயாது செய்துவந்த பயங்கரவாத முயற்சிகளே இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கைக்குக் காரணம். கண்ணைப் பறிக்கும் அதியற்புதமான அரசாங்க மாளிகைகளில் சில சமயம் லெனின் வரவேற்பு விருந்துகள் நடத்துவது உண்டு. ஆனால் அவர் தமது குடும்பத்தாருடன் வசித்து வந்த அவருடைய குடித்தனப் பகுதி ஆடம்பரமின்றி எளிமையாய் இருந்தது. ''மாஸ்கோவின் மாபெரும் சர்வாதிகாரி'' வசித்துவந்த அறைகளைக் காட்டிலும் வசதியான நன்கு அமைந்த தொழிலாளர் குடித்தனப் பகுதிகள் பலவற்றையும் நான் பார்த்திருக்கிறேன்.

லெனினுடைய மனைவியும் அவருடைய தங்கையும் அப்பொழுதுதான் இரவு உணவருந்திக் கொண்டிருந்தனர். என்னையும் சேர்ந்து கொள்ளுமாறு ஆர்வமுடன் அழைத்தனர். தேநீர், கரிய ரொட்டி, வெண்ணை, பாலாடை இவை அடங்கிய அந்தச் சாப்பாடு அக்காலத்திய சராசரி சோவியத் அலுவலகச் சிப்பந்தியின் எளிய இரவு உண்டியாகும். ''விருந்தாளியைச் சிறப்பிக்கும் பொருட்டு'' கடைசியாகச் சாப்பிட ஏதாவது ''இனிப்பு'' தேடிக் கொண்டு வருவதற்காக அவர் தங்கை எழுந்து சென்றார். அதிருஷ்டவசமாய்க் கொஞ்சம் பழப் பாகு இருந்த ஜாடி ஒன்று கிடைத்தது. விவசாயிகள் ''அவர்களுடைய இலீச்சுக்கு'' என்று மாவும் வெண்ணெயும் முட்டையும் பழங்களும் ஏராளமாய் அனுப்பிவந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்த நல்ல பண்டங்களில் எவையும் லெனினுடைய இல்லத்தில் தங்குவதில்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். பெருவாரியான உழைப்பாளி மக்களைப் போலத் தாமும் எளிமையாகவே வாழ வேண்டும் என்னும் கோட்பாட்டை லெனின் குடும்பத்தார் கண்டிப்புடன் அனுசரித்ததால், எல்லாம் மருத்துவமனைகளுக்கும்

அனுதைக் குழந்தைகளின் இல்லங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன.

1915 மார்ச்சில் பெர்ன் சர்வதேச மாதர் சோஷலிஸ்டு மாநாடு நடைபெற்றதற்குப் பிற்பாடு, நான் லெனின் மனைவி தோழர் குருப்ஸ்கயாவை இப்பொழுதுதான் பார்த்தேன். அன்பு தவழும் மென்மையான கண்களையுடைய அவரது கவர்ச்சியான முகத்தில் அவருடைய பலத்தை அரித்துத் தின்று வந்த அந்த ஆபத்தான நோயின் அறிகுறிகளைத் தெளிவாகக் காண முடிந்தது. இது ஒன்றைத் தவிர்த்து மற்றபடி அவர் மாற்றமின்றி முன்பிருந்தது போலவே தோன்றினுர்—ஒளிவுமறைவற்ற நேர்மையின், எளிமையின், ஓரளவு துறவியையொத்த கடுந் தூய்மையின் உருவாகவே இருந்தார். வழவழப்பாய்ப் பின்புறம் சீவி முடிந்து விடப் பெற்ற அவர் கூந்தலும், அவர் உடுத்தியிருந்த எளிய உடுப்பும் வேலைகளை எல்லாம் காலத்தில் முடித்து விட முடியுமா என்று எந்நேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த களைப்புற்ற தொழிலாளி மனைவியின் தோற்றத்தை அவருக்கு அளித்தன. முதலாளித்துவக் கருத்தோட்டத்தின்படியும் வழக்கின்படியும் ''மாபெரும் ருஷ்ய நாட்டின் மங்கையர்க்கு முதல்வரான'' தோழர் குருப்ஸ்கயா, ஒடுக்கப்பட்டு நலிவுறும் மனித குலத்தின் இலட்சியத்திற்குப் பற்றுறுதியுடன் பணியாற்றுவதில் முதல்வரே என்பதில் ஐயமில்லை. வாழ்க்கையின் குறிக்கோள், இலட்சியம் இவற்றில் நிலவிய மனப்பூர்வமான கருத்தொற்றுமையே இவரையும் லெனினையும் இணைத்த பிணைப்பு. லெனினுடைய வலக் கரமாகவும், மிகச் சிறந்த தலைமைச் செயலாளராகவும், திட நம்பிக்கை கொண்ட அவரது சித்தாந்தத் துணைவராகவும், அவருடைய கருத்துக்களை விளக்கமாய் எடுத்துரைப்பதில் அனுபவமிக்கவராகவும், நண்பர்களையும் ஆதரவாளர்களையும் விவேகத்துடனும் சாமர்த்தியத்துடனும் தேடித் தருவதற்காகவும் தொழிலாளர்களிடத்தே அவருடைய கருத்துக்களைப் பரப்புவதற்காகவும் அயராது பாடுபடுகிறவராகவும் இருந்தார் குருப்ஸ்கயா. இது தவிர, தனக்கென தனிச் செயல்துறையாக

அவர் கொண்டிருந்த பொதுக் கல்வி, பயிற்சித் துறைக்கு உடல் பொருள் ஆவி அனைத்தையும் பணித்திருந்தார்.

தோழர் குரூப்ஸ்கயா கிரெம்ளினில் "லெனின் மனைவியாக" இருந்தார் என்பதாக நினைப்பது நகைக்கத்தக்கதாகும் என்பதுடன் அவதூறுமாகும். அவர் வேலை செய்து வந்தார்; கணவரின் கவலைகளைப் பகிர்ந்து கொண்டார்; லெனினுடன் வாழ்ந்த காலம் முழுவதிலும், மற்றும் தலைமறைவு வாழ்க்கைக்கும் கடுமையான அடக்குமுறைக்குமுரிய நிலைமைகள் காரணமாய் இருவரும் பிரிந்திருந்த போதும் செய்து வந்தது போலவே, இப்பொழுதும் லெனினைப் பேணிக் காத்துவந்தார். தாய் ஒருவருக்கு மட்டுமே சாத்தியமான பரிவுடன் அவர் லெனினது வசிப்பிடத்தை "இனிமை தரும் இல்லமாய்" மாற்றியிருந்தார். லெனினுடைய தங்கை அவருக்கு இப்பணியில் மிகுந்த அன்புடன் துணை புரிந்தார். அற்பத்தனமான அந்த ஜெர்மானியரின் மாய்மாலப் பொருளிலல்ல, அங்கு வசித்தும் வேலை செய்தும் வந்தவர்களை இணைத்த உறவுகளைப் பிரதிபலித்து அங்கு நிறைந்திருந்த அந்த ஆன்மீகச் செழுமையை உணர்த்தும் பொருளில்தான் "இனிமை தரும் இல்லம்" என்கிறேன். அவர்களுடைய உறவுகளில் உண்மையும் உள்ளத் தூய்மையும் பரஸ்பர நல்லுணர்வும் ஆக்கம் செலுத்தியது நன்கு புலப்பட்டது. தோழர் குரூப்ஸ்கயாவுடன் அதுவரை எனக்கு நேரடியாக அதிகப் பழக்கம் இல்லை என்றாலும், அவருடைய பேச்சும் அன்பு மிகுந்த உபசாரமும் உடனே எனக்குப் பல காலம் பழகி மிகவும் நெருக்கமாகிவிட்ட ஒருவருடன் இருக்கிறோமென்ற இதமான உணர்வை உண்டாக்கின. லெனின் வந்து சேர்ந்த போது—சிறிது நேரத்துக்கெல்லாம் குடும்பத்தினர் எல்லோரது மகிழ்ச்சிகர வரவேற்புக்கிடையே அங்கே ஒரு பெரிய பூனை தோன்றிக் "காண்போரைக் கலங்கச் செய்யும் அந்தப் பயங்கரவாதத் தலைவரின்" தோள் மீது இலாவகமாய்த் தாவி, பிறகு வசதியாக அவருடைய முழங்கால்கள் மீது சுருண்டுப் படுத்துக் கொண்டு விட்டது—நான் என் வீட்டிலே இருப்பது போலவே, அல்லது ரோஸா லுக்சம்பர்கின்

வீட்டில் அவர் நண்பர்கள் யாவருக்கும் அவரது நினைவுச் சின்னமாகிவிட்ட ரோஸா பூனையான மிமியுடன் இருப்பது போலவே இருந்தது.

நாங்கள் மூன்று பெண்களும் கலை, கல்வி, குழந்தை வளர்ப்பு குறித்து விவாதித்துக் கொண்டிருப்பதை லெனின் கண்டார். போல்ஷிவிக்குகள் புரிந்துவந்த ஈடிணையற்ற மகத்தான கலாசாரப் பணிகள் குறித்து, கலையும் கல்வியும் ஓங்கிவளர ஒளிமிகுந்த புதிய பாதைகள் வகுப்பதில் முனைந்துள்ள ஆக்க சக்திகள் நாட்டில் கிளர்ந்தெழுந்து விட்டது குறித்து எனது வியப்பைத் தெரிவித்து அப்பொழுது நான் உற்சாகமாய்ப் பேசிக் கொண்டிருந்தேன். நான் கண்ணுற்றவற்றில் பெரும் பகுதியானவை இன்னமும் உத்தேசமானவையாகவே, இருட்டில் துழாவிச் செல்வதாகவே, சோதனை முயற்சிகளாகவே எனக்குப் பட்டன என்பதையும், கலாசாரத் துறையில் புதிய உள்ளடக்கமும் புதிய வடிவங்களும் புதிய வழிகளும் காண ஊக்கமுடன் செய்யப்பட்டுவரும் முயற்சிகளுடன் கூடவே நவீன மோஸ்தரைப் பின்பற்றுவதிலும், மேலைய மாதிரிகளைக் கண்மூடித்தனமாய்க் காப்பியடிப்பதிலும் மோகங் கொள்ளும் இயற்கைக்கு முரணான போக்குகளும் சில நேரங்களில் தலைதூக்குவதாக எனக்குத் தோன்றின என்பதையும் நான் மறைக்காமல் கூறினேன். உடனே லெனின் அளவிலா ஆர்வமுடன் இந்த உரையாடலில் இறங்கினார்.

''புதிய சக்திகள் விழித்தெழுவதும், சோவியத் ருஷ்யாவில் புதிய கலையையும் கலாசாரத்தையும் படைப்பிக்கும் பணியில் அவை ஈடுபடுத்தப்படுவதும் நல்லதுதான், ரொம்ப ரொம்ப நல்லதுதான். அவை புயல் வேகத்தில் வளர்ச்சியுறுவது புரிந்து கொள்ளக் கூடியதே. இது பயன் தருவதே ஆகும். பல நூற்றாண்டுகளாய்க் கவனியாது இருந்து விட்டதால் நேர்ந்த நஷ்டத்தை நாம் ஈடுசெய்து கொண்டாக வேண்டும், ஈடுசெய்ய வேண்டுமென்பதே நமது விருப்பமுங்கூட. அல்லோலகல்லோலமாய்ப் பொங்கியெழுவதும், புதுப்புது கோஷங்களைத் தேடித் துடிதுடித்துக் கொண்டு ஓடுவதும், சில கலைப் போக்குகள் குறித்

தும் சிந்தனைத் துறைகள் குறித்தும் 'ஆகா, ஓகோ' என்று கூச்சலிட்டு ஒரு நாள் சில கோஷங்களைப் போற்றிப் புகழ்வதும், மறு நாளே 'கழுவிலேற்று' என்று கூச்சலிட்டு அக்கோஷங்களை நிராகரிப்பதும் ஆகிய இவை எல்லாம் தவிர்க்க முடியாதவையே.

''இதுகாறும் கட்டுண்டு கிடந்த சக்திகள் அனைத்தையும் புரட்சியானது விடுவித்துக் கிளர்த்தி விடுகிறது; வாழ்க்கையின் அடியாழங்களிலிருந்து அவற்றை வெளிப்படுத்தி மேற்பரப்புக்குக் கொண்டுவருகிறது. புதுப்பாணிகளாலும், ஜாரிஸ்டு அரசவையினரது நிலையற்ற அற்ப மனப்போக்குகளாலும், மற்றும் பிரபுக் குலத்தோர், முதலாளித்துவ வர்க்கத்தாரது விருப்பார்வங்களாலும், சபலங்களாலும் எங்களுடைய ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை ஆகியவற்றின் வளர்ச்சி எப்படி பாதிக்கப்பட்டதென்பதை உதாரணமாய் எடுத்துக் கொள்ளலாம். தனியார் சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில் கலைஞர்கள் சந்தைக்காகவே கலைப் படைப்புகளைத் தயாரிக்கின்றனர்; இவற்றை வாங்கிக் கொள்ளக் கூடிய வாடிக்கைகாரர்கள் அவர்களுக்குத் தேவையாகி விடுகிறது. இந்த அற்ப நிலைமைகளின் ஆதிக்கத்திலிருந்து கலைஞர்களை எங்கள் புரட்சி விடுவித்தது. சோவியத் அரசை அது அவர்களது காவலனாகவும் அவர்களது படைப்புகளுக்கான புரவலனாகவும் மாற்றி விட்டது. ஒவ்வொரு கலைஞனுக்கும், தன்னைக் கலைஞனாகக் கருதும் ஒவ்வொருவருக்கும், தங்குதடையின்றி சுதந்திரமாய்ப் படைப்பிப்பதற்கு, எதையும் பொருட்படுத்தாது தனது இலட்சியப் பாதையைப் பின்பற்றிச் செல்வதற்கு உரிமையுண்டு.

''ஆனால் நாம் கம்யூனிஸ்டுகள், குழப்பத்தை வளர விட்டுவிட்டு, கைகட்டிக் கொண்டு நாம் சும்மா நிற்கலாகாது. நன்கு வகுக்கப்பெற்ற ஒரு திட்டத்தின்படி இந்த வளர்ச்சிப்போக்கை நாம் வழிநடத்திச் சென்றாக வேண்டும்; இதன் விளைவுகளை உருவாக்கிச் சென்றாக வேண்டும். இன்னமும் நாம் இந்நிலையிலிருந்து தொலைவில், நெடுந் தொலைவில் இருக்கிறோம். டாக்டர் கார்ல்ஷ்டாட்டுகள்

எங்களிடையிலும் இருக்கிறார்கள் என்பதாகத் தெரிகிறது.* நாம் 'ஓவியக்கலையில் மரபு எதிர்ப்பாளர்களாய்' அளவு மீறிச் சென்று விட்டோம். 'பழமையானதாய்' இருப்பினும் எழிலுடையதாயின் அதை அழிவின்றிப் பேணிக் காப்பதும், முன்னுதாரணமாய்க் கொள்வதும், நமக்குரிய துவக்க நிலையாய் ஏற்பதும் அவசியமாகும். மெய்யாகவே எழில் படைத்த ஒன்றை, 'பழையது' என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கிவிடுவதா? மேலும் வளர்ந்து முன்னேறுவதற்கான துவக்க நிலையாக ஏற்காது புறக்கணிப்பதா? ''புதியது' என்ற ஒரே காரணத்துக்காகப் புதியதை மறுபேச்சின்றிக் கைகட்டித் தொழ வேண்டிய தெய்வமாக வைத்துக் கும்பிடுவதா? அபத்தம்! அபத்தத்திலும் அபத்தம்! இதில் பெரும் பகுதி வெறும் கபடக் கூத்தும், கலைத் துறையில் மேலைய நாடுகளில் ஆட்சி செலுத்தும் பாணிகளைத் தம்மையும் அறியாமல் வழிபடும் போக்குமேயன்றி வேறல்ல. நாம் சிறந்த புரட்சியாளர்கள்தான், ஆயினும் 'நவீனக் கலைத் துறையிலும் நாம் ஒன்றும் சப்பையில்லை' என்பதாகக் காட்டுவது நமது கடமையாகுமென்ற உணர்வு எப்படியோ நம்மிடையே தோன்றி விட்டது. என்னைப் பொறுத்தவரை இத்துறையில் நான் 'ஒரு காட்டுமிராண்டியே' என்பதாகத் துணிவுடன் அறிவிக்க விரும்புகிறேன். அகவுணர்வுவாதம் [expressionism], குறிக்கலைவாதம் [futurism], கனப்பரிமாணவாதம் [cubism] இத்தியாதி 'வாதங்களின்' கலைப் படைப்புகளை என்னால் கலை மேதாவிலாசத்தின் தலையாய வெளியீடுகளாகக் கருத முடியவில்லை. என்னால் இவற்றைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனக்கு இவை இனிமை பயப்பதாயில்லை.''

இதற்குமேல் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்ள

---

* கார்ல்ஷ்டாட் (1480—1541)—மகா சீர்திருத்தத்தின் தலைசிறந்த பிரமுகர். கத்தோலிக்க குருபீடத்தை எதிர்த்துப் போராடினார். உயர் பள்ளி, விஞ்ஞானம், பொதுவாகக் கலை ஆகியவற்றை எதிர்த்த உரைகளின் பேரில் பிரபலமானவர்.—(ப-ர்.)

முடியவில்லை. என்னுடைய திருஷ்டியும் இதே போல மங்கலாய்த்தான் இருக்கிறதென்பதை ஒத்துக் கொண்டேன். உணர்ச்சி வளமிக்க முகத்தைக் கலை வடிவில் மூக்கும் முழியுமாய்க் காட்டாது ஏன் முக்கோணங்களாகத் தீட்ட வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை என்றேன். புரட்சிகரச் செயல் ஆர்வமானது, எல்லா உறுப்புகளும் இணைந்து பொருந்தி ஒரு முழுத் தொகுதியாயுள்ள அமைப்பான மனித உடலை இரு கோல்கள் மீது தூக்கி நிறுத்தப்பட்டு ஐந்து கூர்முனைகளைக் கொண்ட இரு முட்கரண்டிகளையுடைய தொளதொளப்பான சாக்கு மூட்டையாக ஏன் மாற்றிவிட வேண்டுமென்பதை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை என்றேன்.

லெனின் வாய்விட்டுச் சிரித்து விட்டார்.

''ஆம், கிளாரா, நம்மால் இவற்றைப் புரிந்து கொள்ள முடியாதுதான். நாம் இருவரும் வயதான கிழங்கள். புரட்சி சம்பந்தமான விவகாரங்களிலாவது நாம் இளமைத் துடிப்புடையோராய் முன்னிலையாளர்களிடையே இருக்கிருேமே, அது போதும் நமக்கு. இந்தப் புதிய கலையுடன்கூட நம்மால் நடைபோட முடியாது; பின்னிலையிலே தான் சென்று கொண்டிருக்க வேண்டும்.

''ஆனுல் கலையைப் பற்றி நமக்குள்ள அபிப்பிராயம் இங்கு அவ்வளவு முக்கியமானதல்ல. லட்சோபலட்சக் கணக்கான மக்களிடையே ஒரு சில நூறு பேருக்கு அல்லது ஓராயிரம் பேருக்குங்கூட கலையால் ஏற்படும் விளைவு என்னவென்பது அதிக முக்கியத்துவமுடையதல்ல. கலையானது மக்களுக்கு உரியதாகும். உழைப்பாளி மக்கள் திரளிடையே அதன் வேர்கள் ஆழப் பதிந்திருக்க வேண்டும். அது அவர்களுக்குப் புரியக் கூடியதாய் இருக்க வேண்டும்; அவர்களது நேசத்துக்கு உரியதாய் இருக்க வேண்டும். அது அவர்களுடைய உணர்வுகளையும் சிந்தனையையும் சித்தத்தையும் ஒன்றிணைத்திட வேண்டும்; உயர்த்திட வேண்டும். அவர்களிடத்தே அது கலை உணர்ச்சியைத் தட்டியெழுப்பிச் செயல்பட வைத்து வளர்த்திட வேண்டும். பெருந்திரளான தொழிலாளி, விவசாயி மக்களுக்குச்

சாதாரண கறுப்பு ரொட்டியே அவசரத் தேவையாயிருக்கும் ஒரு நேரத்தில் சொற்பச் சிறுபான்மையோருக்கு நாம் அருஞ்சுவை விருந்துணவு தயாரித்தளித்துக் கொண்டிருப்பதா?—இதனை அதன் நேர்பொருளில் மட்டுமின்றி அதன் உருவகப் பொருளிலும் உணர்ந்து செயல்பட வேண்டுமென்பது தெளிவு. ஏனெனில் எந்நேரமும் தொழிலாளர்களையும் விவசாயிகளையுமே நாம் நம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். நாம் நிர்வகிக்கவும் கணக்கிடவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதெல்லாம் இவர்களை முன்னிட்டுதான். இது கலை, பண்பாட்டுத் துறைக்கும் பொருந்துவதாகும்.

''கலை மேலும் மேலும் மக்களையும், மக்கள் மேலும் மேலும் கலையையும் நெருங்கிவர வேண்டுமாயின், முதலில் நாம் பொதுவான கல்வி, பண்பாட்டுத் தரங்களை உயர்த்தியாக வேண்டும். இது சம்பந்தமாய் நாம் எந்நிலையில் இருக்கிறோம்? நாம் அதிகாரத்துக்கு வந்த பிற்பாடு சாதிக்கப் பெற்றுள்ள அளவு கடந்த கலாசார முன்னேற்றத்தை உற்சாகமாய் மெச்சிப் பேசுகிறீர்கள். இத்துறையில் நாம் நிறைய சாதித்திருக்கிறோம் என்று நிச்சயமாய்க் கூறலாம்—அது உண்மையேயன்றி தற்புகழ்ச்சியாகாது. எல்லா நாடுகளிலுமுள்ள மென்ஷிவிக்குகளும் உங்கள் நாட்டைச் சேர்ந்த காவுத்ஸ்கியும் எங்கள் மீது குற்றம் சாட்டுவது போல நாங்கள் 'தலைகளைச் சீவி' யதோடன்றி, மிகப் பல தலைகளை அறிவொளி பெறச் செய்தும் இருக்கிறோம். ஆனால் இங்கு 'மிகப் பல' என்பது, கடந்த காலத்துடன் ஒப்பு நோக்குகையில் மட்டும்தான், கடந்த காலத்தில் ஆதிக்கம் புரிந்த வர்க்கங்களும் கும்பல்களும் செய்த கேடுகளுடன் ஒப்புநோக்குகையில் மட்டும்தான் பொருந்துவதாகும். பொதுவாகக் கல்வியறிவு, கலாசாரத் தாகத்தைத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு அளவு கடந்தவாறு உண்டாக்கியுள்ளோம். இது பெத்ரோகிராத், மாஸ்கோ ஏனைய பல தொழில் கேந்திரங்களுக்கு மட்டுமின்றி, இவற்றிலிருந்து நெடுந்தொலைவுகளிலுள்ள ஏராளமான கிராமங்களுக்கும் பொருந்தும். அதேபோதில் நாங்கள் வறுமைப்

பிணியால் பீடிக்கப்பட்ட மக்களாகவே, முற்றிலும் ஒட்டாண்டிகளாகவே இருக்கிருேம். எழுத்தறியாமையை எதிர்த்து மெய்யான, விடாப்பிடியான போராட்டம் நடத்துகிருேம் என்பது உண்மைதான். பெரியவை சிறியவை என்னும் பேதமின்றி எல்லா ஊர்களிலும் எல் லாக் கிராமங்களிலும் நூலகங்களும் குடிசை-படிப்பகங் களும் நிறுவுகிருேம். எல்லா வகையான பயிற்சித் திட்டங் களுக்கும் ஏற்பாடு செய்கிருேம். நாடெங்கிலும் நல்ல நாட கங்களும் இசை நிகழ்ச்சிகளும் நடத்துகிருேம். 'நடமாடும் கண்காட்சிகளேயும்', 'அறிவொளி ரயில்களேயும்' அனுப்பி வைக்கிருேம். ஆணுலும் திரும்பவும் கூறுகிறேன்: சர்வசா தாரணமான அறிவும் மிகவும் ஆரம்ப நிலேக் கலாசாரமு மின்றி இருளில் வதையும் கோடானு கோடியான எம் மக் களுக்கு இவையெல்லாம் எம்மட்டில்? உதாரணமாய் மாஸ் கோவில் இன்று ஒரு பத்தாயிரம் பேரும் நாளே இன்ெருரு பத்தாயிரம் பேரும் நமது நாடக மன்றங்கள் அளிக்கும் அதியற்புத நாடங்களேக் கண்டு களிப்புறலாம்; ஆனுல் அதேபோதில் கோடானு கோடியானேர் எண்ணும் எழுத்தும் அறிய இப்பொழுதுதான் முயற்சி செய்து வருகின்றனர்; பூமி தட்டையானதல்ல, உருண்டையானது, உலகம் ஆளப்படுவது இயற்கை விதிகளாலேயே அன்றிப் பேய் பிசாசுகளாலும் மந்திரவாதிகளாலும் 'தேவலோ கத்திலுள்ள ஆண்டவனுலும்' அல்ல என்பதை உணர் வதற்குப் போதுமான கலாசார நிலேயை வந்தடைய முயன்று வருகிருர்கள்.''

''தோழர் லெனின், எழுத்தறியாமை குறித்து இப்படி வேதனேப்பட வேண்டாம்'' என்றேன் நான். ''சில வழிகளில் இது உங்களுக்குப் புரட்சியைச் சுலப மாக்கியுள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகளுடைய உள்ளங்கள் முதலாளித்துவக் கருத்துக்களால் நிரப்பப் பட்டு பாழாக்கப்படுவதை இது தடுத்திருக்கிறது. உங் களுடைய கிளர்ச்சியும் பிரசாரமும் கன்னி நிலத்திலே விதைத்துப் பயிர் செய்கின்றன. முதலில் ஒரு பெருங்

காட்டை வெட்டியகற்ற வேண்டியிராத ஓரிடத்தில் விதைப்பதும் அறுப்பதும் எளிதல்லவா?''

''ஆம், அது உண்மைதான்'' என்று திரும்பவும் லெனின் பேசத் தொடங்கினர். ''ஆனால் குறிப்பிட்ட வரம்புகளுக் குள்தான், அல்லது இன்னும் கறாராய்ச் சொல்வதெனில் எங்களுடைய போராட்டத்தில் குறிப்பிட்ட ஒரு கட்டத் தில் மட்டுமேதான் அது உண்மையாகும். அதிகாரத்தைப் பெறுவதற்கான போராட்டத்தின் போது பழைய அரசு இயந்திரத்தை அழித்திடுவது அவசியமாயிருந்த காலத்தில் எங்களால் எழுத்தறியாமையைச் சகித்துக் கொள்ள முடிந்தது. ஆனல் நமது குறிக்கோள் அழித்திடுவதல்லவே. மேலும் சிறப்பான ஒன்றைப் படைக்கும் நோக்கத்துடன் தான் அழித்திடுகிறேம். புனரமைப்புப் பணிக்கு எழுத்தறி யாமை ஏற்றதல்ல, சிறிதும் ஒவ்வாததாகும். புனரமைப் பானது மார்க்சின் கருத்துப்படி தொழிலாளர்களுக்குரிய, விவசாயிகளுக்குமுரிய என்று நான் சேர்த்துக் கொள் கிறேன், பணியாகும். அவர்கள் சுதந்திரமடைய விரும்பி ஞல் இப்பணியை அவர்கள் செய்தே ஆக வேண்டும். நமது சோவியத் அமைப்பு இப்பணியைச் சுலபமாக்குகிறது. இவ் வமைப்பின் விளைவாய்ப் பல்லாயிரக் கணக்கான சாதாரண உழைப்பாளி மக்கள் புனரமைப்புப் பணியைத் துரிதமாய்ச் செய்து முடிப்பதற்கு இன்று பல்வேறு சோவியத்துக் களிலும் சோவியத் நிறுவனங்களிலும் பயிற்சி பெற்று வரு கிருர்கள். இவர்கள் உங்கள் நாட்டில் கூறுவார்களே அது போல 'வாழ்வின் உச்சமான' காளைப் பருவத்திலுள்ள ஆட வரும் பெண்டிருமாவர். இவர்களில் மிகப் பெருவாரியா ேனார் பழைய ஆட்சியில் வளர்ந்து ஆளானவர்கள், ஆகவே கல்விப் பயிற்சியோ கலாசார வளர்ச்சியோ பெருதவர் கள்; ஆனல் இப்பொழுது இவர்கள் அடங்காத அறிவுத் தாகமுடையவர்களாகி விட்டனர். சோவியத் பணிகளுக் காக ஆடவரும் பெண்டிருமான புதிய புதிய படை வரிசை களைத் திரட்டி, அவர்களுக்கு நடைமுறை வேலைகளிலும் தத்துவார்த்தத்திலும் ஓரளவு கல்விப் பயிற்சியளிக்க நாங் கள் உறுதி பூண்டுள்ளோம். ஆயினும் ஆக்க முறையில்

தலைமை தாங்கவல்ல ஊழியர்களில் நாட்டிற்குள்ள தேவைகளை முழு அளவுக்கு எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. பழைய வகையைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தாரை ஈடுபடுத்திக் கொள்ளும்படியான நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதன் பயனாய் இங்கு அதிகார வர்க்கம் ஒன்று தலைதூக்கியுள்ளது. இதனை நான் அடியோடு வெறுக்கிறேன். குறிப்பிட்ட எந்த அதிகார வர்க்க நபரையும் மனதிற் கொண்டு இதை நான் கூறவில்லை. அவர் மிகவும் கெட்டிக்காரராகவே இருக்கலாம். நான் வெறுப்பது அதிகார வர்க்க அமைப்பைத்தான். உச்சியிலிருந்து அடி மட்டம் வரை இது இயக்கத்தைக் குலைத்து ஊழலை வளர்த்திடும் தன்மை கொண்டுள்ளது. மிகவும் விரிவான அளவில் மக்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்திடுவதானது, அதிகார வர்க்கத்தை ஒடுக்குவதற்கும் களைந்தெறிவதற்குமான பயனுறுதி மிக்கதோர் வழியாகும்.

''வருங்கால வளர்ச்சிக்கு நமக்குள்ள வாய்ப்புகள் யாவை? பாட்டாளி வர்க்க, விவசாயி இளைஞர்களும் யுவதிகளும் படிப்பதற்கும் கலாசாரம் பயின்று வளர்ச்சியுறுவதற்கும் அற்புதமான ஏற்பாடுகள் செய்திருக்கிறோம், மெய்யாகவே சிறந்த நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஆனால் இங்கும்கூட சங்கடமான அதே கேள்வி நம் முன்னே எழுகிறது: எங்களுடைய மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இவையெல்லாம் எம் மட்டில்? இதைவிட இன்னும் மோசமானது என்னவெனில், குழந்தைப் பள்ளிகளும் அனாதைக் குழந்தைகளின் இல்லங்களும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் எண்ணிக்கையில் சிறிதும் போதுமானதாயில்லை. லட்சோப லட்சக் கணக்கான குழந்தைகள் தக்கபடி வளர்க்கப்படாமலே, கல்வி இல்லாமலே ஆளாகி வருகின்றனர். இவர்கள் தமது தந்தையரும் பாட்டன்மார்களும் எப்படி இருந்தனரோ அதே போல அறியாமை இருளில் மூழ்கியவர்களாகவே, கலாசார வளர்ச்சி இல்லாதோராகவே இருந்து வருகின்றனர். இதன் விளைவாய் எவ்வளவு ஆற்றல் மலராமலே அழிந்துவிடுகிறது, அறிவொளி பெற வேண்டுமென்ற ஆவல்

காலுக்கடியில் மிதிபட்டு நசுக்கப்படுகிறது! வளரும் தலைமுறையினரது இன்ப வாழ்வின் கண்ணோட்டத்தில் இது மிகக் கொடுங் குற்றமே ஆகும்; கம்யூனிச சமுதாயமாக மாற்றப்பட வேண்டிய சோவியத் அரசின் செல்வத்தை அதனிடமிருந்து கொள்ளையிடுவது போன்றதாகும். பேரபாயம் விளைவிக்கும் ஒரு நிலைமை இது.''

வழக்கமாய் அமைதியாய் இருக்கும் லெனின் குரலில் ஆத்திரம் பொங்கிற்று.

''எங்கள் மூவரையும் மட்டுமே வைத்துக் கொண்டு இப்படி அவர் கிளர்ச்சிகர முறையில் சொற்பொழிவாற்றுவாராயின், இப்பிரச்னை எப்படி அவர் உள்ளத்தைக் குமுறச் செய்வதாய் இருக்க வேண்டும்'' என்று நான் நினைத்துக் கொண்டேன். எங்களில் ஒருவர்—அது யாரென்று தெளிவாய் எனக்கு ஞாபகமில்லை—கலை, கலாசாரத் துறைகளில் நடைபெற்ற மிக மோசமான பல சம்பவங்களையும் பற்றிப் பேச முற்பட்டு, ''காலத்தின் நிலைமைகளே'' அவற்றுக்குக் காரணமென்று குறிப்பிட்டதும், லெனின் வெடுக்கென பதிலளித்தார்:

''எனக்குத் தெரியும் அதெல்லாம்! தற்காலத்தின் அபாயங்களையும் இன்னல்களையும் panem et circenses [ரொட்டியும் சர்க்கஸ் காட்சிகளும் கேளிக்கைகளும்] வழங்கிச் சமாளித்துவிடலாம் என்று மெய்யாகவே நம்புவோர் பலரும் இருக்கிறார்கள். ரொட்டியால் நிச்சயம் இவற்றைச் சமாளிக்கலாம். கேளிக்கைகளைப் பொறுத்தவரை அவையும் வழங்கப்படட்டும்—எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் கேளிக்கைகள் உண்மையில் உயர்ந்த கலையாகமாட்டா என்பதை மறக்கலாகாது. அவற்றை ஓரளவு சுவையான பொழுதுபோக்கென்றே சொல்வேன். தவிரவும் நமது தொழிலாளர்களும் விவசாயிகளும் ரோமானிய லும்பன்-பாட்டாளிகளைப் போன்றவர்களல்ல. அவர்கள் அரசின் செலவில் பராமரிக்கப்படவில்லை, மாறாக அவர்கள் தான் தமது உழைப்பைக் கொண்டு அரசைப் பராமரித்து வருகிறார்கள். அவர்கள் புரட்சியை 'உண்டாக்கி', பெருக் கெடுத்து ஓடும்படி தமது இரத்தத்தைச் சிந்தி அளப்பருந்

தியாகங்கள் புரிந்து புரட்சியின் இலட்சியத்தைப் பாது காத்தனர். நிச்சயம் நமது தொழிலாளர்களும் விவசாயி களும் கேளிக்கைகளைக் காட்டிலும் சிறப்பானவற்றைப் பெறத் தகுதியுடையவர்கள். மெய்யாகவே மகத்தான கலையை அனுபவிக்கும் உரிமையுடையவர்கள். எனவே தான் பொதுக் கல்வியையும் போதனையையும் மிகப் பெரும் அளவில் அளித்திடுவதை நாம் தலையாய பணி யாகக் கொண்டு பாடுபடுகிறோம். தானியப் பிரச்னை தீர்க்கப்படுமாயின், இது கலாசாரத்துக்கான அடித் தளத்தை அமைத்துக் கொடுக்கிறது. இந்த அடித்தளத்தின் மீது மெய்யாகவே புதியதான மாபெரும் கம்யூனிசக் கலை உதித்தெழும். இக்கலை அதன் உள்ளடக்கத்துக்கு ஏற்ற தொரு வடிவத்தைத் தோற்றுவிக்கும், இவ்வழியில் நமது 'அறிவுத் துறையினரால்' தீர்க்கப்பட வேண்டிய அளவிலா முக்கியத்துவம் வாய்ந்த புனிதப் பணிகள் பல வும் உள்ளன. இப்பணிகளைப் புரிந்து கொண்டு அவற்றைச் செய்து முடிப்பதன் மூலம் அவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குத் தாம் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்து வார்கள். கம்யூனிஸ்டு அறிக்கையில் ஒப்பற்ற தேர்ந்த முறையில் விவரிக்கப்பட்டிருக்கும் கேடுகெட்ட வாழ்க்கை நிலைமைகளிலிருந்து விடுபட்டுக் கண்கொளா வனப்பு மிக்க பெருவெளியை வந்தடைவதற்கான கதவுகளை அவர் களுக்கும் இப்புரட்சி விரியத் திறந்து வைத்தது.''

அன்று இரவு—ஏற்கெனவே நெடுநேரமாகி விட்டது—வேறு பல பொருள்கள் குறித்தும் நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தோம். ஆனால் கலை, கலாசாரம், பொதுக் கல்வி, இளந் தலைமுறையை வளர்த்து ஆளாக்குதல் இவை குறித்து லெனின் கூறியவற்றால் என் மனதில் பதிந்த தடங் களுடன் ஒப்பிட்டால் இந்த விவாதங்கள் விட்டுச் சென்ற தடம் மங்கலானதே ஆகும்.

அந்தக் குளிர் கால இரவன்று தலை கிறுகிறுக்க நான் என் இருப்பிடத்துக்குத் திரும்பிய போது, ''உழைப்பாளி மக்களிடத்து எவ்வளவு ஆர்வமிக்க, தூய அன்பு கொண்டுள்ளார்'' என்ற எண்ணம் என் மனத்துள் பளிச்

சிட்டு எழுந்தது. ''இவரைப் போய் உணர்வற்றச் சிந்தனை இயந்திரமாகவும், மக்களை 'வரலாற்று மூலக்கூறுகளாக' மட்டுமே கொண்டு அவர்களை ஆட்டப் பந்துகளாகப் பாவித்து, சிறிதும் மனம் கலங்காது விளையாடும் முரட்டுத் தனமான சூத்திரம் பேசும் பிடிவாதக்காரராகவும் கருதுவோரும் இருக்கிறார்களே'' என்று வியந்து கொண்டேன்.

லெனின் அதரத்திலிருந்து உதிர்ந்த கருத்துரைகளின் முக்கிய விவரங்களை உடனுக்குடன் நான் சுருக்கமாய் எழுதி வைத்துக் கொண்டேன்—அவை என்னை அந்த அளவுக்கு உணர்ச்சி வயப்படுத்தி விட்டன. புரட்சிகர சோவியத் ருஷ்யாவின் புனித பூமியில் நான் தங்கியிருந்த முதல் முறையின் போது இவ்வாறுதான் நான் குறிப்பெழுதி வைத்துக் கொண்டேன். நான் சிறப்புக்குரியதாய்க் கருதிய ஒவ்வொரு விவரத்தையும் நாள் தவறாமல் என்னுடைய நாட்குறிப்பில் எழுதி வந்தேன்.

லெனின் பெரியது பற்றிச் சிந்தித்தார், சிறியதையும் மறந்து விடவில்லை

கொல்லந்தாய்

பெரிய, முக்கியமான விஷயங்களை சிந்திக்கிற போதே நிகழ்ந்து வரும் சில்லரை விஷயங்களையும் எப்படி விளதீமிர் இலீச்சால் மறக்க முடியாமல் இருக்கிறது என்பது என்னை எப்போதும் வியப்புக்குள்ளாக்கியது. புதிய, உலகத்தில் இதுவரை இல்லாத அரசை உருவாக்கிவருகிற போதே, சிறிய விஷயங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அரசில், குறிப்பாக சோஷலிச அரசில் கணக்கெடுப்பும் ஒழுங்கும் இருக்க வேண்டியது அவசியம் என்பதை நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் கற்றுக் கொடுக்க ஒரு சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விடாதது எப்படி? ஓர் உதாரணம் தருகிறேன்.

1917 டிசம்பர் மாதம். கிறிஸ்துமஸ் பண்டிகை நெருங்கி வந்தது, ஆனால் அது பற்றி ஸ்மோல்னி மாளிகையிலுள்ள நாங்கள் யாரும் சிந்திக்கவில்லை. கொதிகலத்தில் கொந்தளிப்பது போல ஸ்மோல்னி மாளிகையில் வேலை கொந்தளித்துக் கொண்டிருந்தது. பனிக்காலம் இன்னும் நிலைபெறவில்லை. இளகிய வெண்பனி பெய்து கொண்டிருந்தது. நேவாவுக்கருகே குளிர்ந்த, வடக்கத்திய காற்று வீசிக் கொண்டிருந்தது.

கிறிஸ்துமசின் போது சில நாட்களுக்கு ஊருக்கு வெளியே போய் வரலாம் என்று நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு விளதீமிர் இலீச்சை வற்புறுத்த முயன்றார். விளதீமிர் இலீச்சுக்கு வேலையில் இடைவேளை அவசியம் என்று நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னு கூறினார். லெனினுக்குத்

தூக்கமின்மையும் களைப்பும் தோன்றத் தொடங்கியிருந்தன.

பின்லாந்தில், கரேல்ஸ்கி பூசந்தியில் உள்ள ஆரோக்கிய விடுதியான ''ஹலீலாவின்'' தலைவர், அரசு அறச் செயல் மக்கள் கமிசாரகத்துக்கு வந்து, ஆரோக்கிய விடுதியில் வெதுவெதுப்பான பிரகாசமான புதிய தனி வீடு ஒன்று இருக்கிறது என்றும் அதனை லெனினது முழு உபயோகத்துக்காகத் தாம் விருப்பமுடன் தருவதாகவும் சொன்னார். ஆனால் விளதீமிர் இலீச் எங்கள் வற்புறுத்தல்கள் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கு சுற்றிலும் அற்புதமான காடு இருக்கிறது என்றும் எவ்வளவு முறை வேண்டுமானாலும் வேட்டைக்குப் போகலாம் என்றும் நாங்கள் சொல்லிய போது விளதீமிர் இலீச் பதிலிறுத்தார்: ''வேட்டையாடுவது நல்ல விஷயமே. ஆனால் நம்மிடம் ஏராளமான வேலை இருக்கிறதே. வேலையைத் தொடங்கி விட்டோம். இரண்டு மாதத்தில் புதிய அரசை நிலைநிறுத்துவது போல்ஷிவிக்குகளால் கூட முடியாது. இதற்குக் குறைந்த பட்சம் பத்து ஆண்டுகள் வேண்டும்.''

நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னா இடைமறித்துச் சொன்னார்: ''அதற்காக இந்தக் காலம் முழுதும் இடையறாது நீ எழுது மேசைக்கு அருகே உட்கார்ந்திருக்கப் போகிறாயா, என்ன?'' ''அதை அப்புறம் பார்க்கலாம்'' என்றார் விளதீமிர் இலீச்.

ஒரு சில நாட்கள் சென்றன. இந்த மூன்று அல்லது ஐந்து நாட்களில் ஊருக்கு வெளியே இருந்து ஒரு முழு நூலே எழுதலாமே, ஸ்மோல்னி மாளிகையில் இதற்கான வாய்ப்பே இல்லையே என்ற எண்ணம் விளதீமிர் இலீச்சுக்கு வந்தது. இந்த எண்ணத்தால் அவர் உற்சாகமடைந்தார். காலையில் நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவிடம் சொன்னார்: ''கொல்லந்தாய் வேலை செய்யும் மக்கள் கமிசாரகத்திற்குக் காட்டில் தனி வீடு ஒன்று உண்மையாகவே இருக்குமானால், அங்கு எனக்கு யாரும் தொந்தரவு தர மாட்டார்கள் என்றால் நான் கிளம்பத் தயார்.''

விளதீமிர் இலீச்சை ஓய்வு விடுதிக்கு வழியனுப்புவதற்

...A PUBL...

காக டிசம்பர் 24ல் பின்லாந்து ரயில் நிலையத்துக்கு வந்தேன். விளதீமிர் இலீச், நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ, மரியா இலீனிச்ஞ ஆகியோர் அப்போதுதான் ரயில் பெட்டிக்குள் நுழைந்திருந்தார்கள். யாரும் கவனிக்காமல் இருப்பதற்காக சன்னலுக்கு அருகில், ஒரு மூலையில் விளதீமிர் இலீச் உட்கார்ந்தார். அவருக்கு அருகில் மரியா இலீனிச்ஞ உட்கார்ந்திருந்தார். எதிரே நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ அமர்ந்திருந்தார். எளிய பயணிகள் பெட்டியில் பயணம் செய்வது பாதுகாப்பானது என்று விளதீமிர் இலீச் எண்ணிஞர். அதே பெட்டியில் இரண்டு செஞ்சேனை வீரர்களும் விசுவாசமான பின்லாந்துத் தோழரும் அமர்வார்கள்.

நைந்து போன இலையுதிர்கால மேல் கோட்டு அணிந் திருந்தார் விளதீமிர் இலீச். வெளிநாட்டிலிருந்து வரும் போது இதைத்தான் அணிந்திருந்தார். கடிய உறைபனி இருந்த போதும் நமுதாத் தொப்பி அணிந்திருந்தார். எனக்குப் பின்னுல் பெட்டிக்குள் ஒரு தோழர் ஏறிஞர். அவர் மூன்று மென்மயிர்த்தோல் கோட்டுகளும் காதுகளை மூடத்தக்க மென்மயிர்த்தோல் தொப்பியும் கொண்டு வந் தார். ''மிகவும் குளிராகவுள்ள திறந்த வெளியில், வழுக்கு வண்டியில் போகும் போது இதை நீங்கள் அணிந்து கொள்ளுங்கள். ரயில் நிலையத்திலிருந்து ஆரோக்கிய விடுதிக்கு நீண்ட தூரம் இருக்கிறது. மக்கள் கமிசாரகக் கிடங்கிலிருந்து இக்கோட்டுகளை எடுத்தோம்'' என்று நான் விளதீமிர் இலீச்சைப் பார்த்துச் சொன்னேன். ''அது தெரிகிறது'' என்ருர் விளதீமிர் இலீச், ஒரு கோட்டின் விளிம்பைப் புரட்டிப் பார்த்தார். அதில் கிடங்கின் எண்ணும் பொருளின் எண்ணும் தைக்கப்பட்டிருந்தன. ''கோட்டுகளை நாங்கள் பாதுகாத்து வைக்க வேண்டும், மறந்து விடக் கூடாது என்பதற்காகவா இவ்வாறு செய் திருக்கிறீர்கள்? அரசுப் பொருள்களைக் கணக்காக வைக்க வேண்டும். அவ்வாறே செய்ய வேண்டும்.''

நானும் தம்முடன் வர வேண்டும் என்று விளதீமிர் இலீச் விரும்பிஞர். ஆனுல் மக்கள் கமிசாரகத்தின் அவசர

நடப்பு வேலைகள் என்னை நிறுத்தி வைத்தன. தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவிக்கு ஏற்பாடு செய்வது பிரதான வேலையாயிருந்தது. நான் சற்று கழித்து வருகிறேன் என்று உறுதி கூறினேன்.

தம்மிடம் பின்லாந்துப் பணம் இல்லை என்று திடீரென்று விளதீமிர் இலீச்சுக்கு நினைவு வந்தது: ''ரயில் நிலையத்தில் சுமை தூக்குவோருக்குக் கொடுக்கவும் வேறு ஏதாவது அவசியமான சில்லறைச் செலவுகளுக்காகவும் ஒரு நூறு பின்லாந்து மார்க்குகளாவது உங்களால் ஏற்பாடு செய்ய முடிந்தால் நல்லது.''

நான் பாங்குக்கு ஓடினேன். என்னிடம் பணம் குறைவாகவே இருந்தது. 100 பின்லாந்து மார்க்குகள் என்னுல் திரட்ட முடியவில்லை.

விளதீமிர் இலீச் சொன்னூர்: ''வீடு தனியாகவும் பிரகாசமாகவும் இருக்கிறது என்கிறீர்கள். காட்டில் வேட்டையாட முடியுமா? அங்கு முயல்கள் உண்டா?'' முயல்கள் இருப்பதாக உறுதி கூற முடியாது என்றும் அனேகமாக அணில்கள் அங்கு இருக்கலாம் என்றும் நான் பதில் சொன்னேன். ''அணில்களைச் சுடுவது குழந்தை விளையாட்டு''. நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ன சொன்னூர்: ''மூன்று நாட்களும் எழுது மேசைக்கு அருகில் உட்கார்ந்திருக்காமல் காட்டில் உலாவுவது என்று விளதீமிர் இலீச் முடிவு செய்தால், அதுவே போதும்.'' ''அங்கு அறைக்குள்ளும் சுத்தமான காற்று இருக்கும்'' என்று இடைமறித்துச் சொன்னூர் விளதீமிர் இலீச்.

வண்டி நகர்ந்தது. மக்கள் கமிசாரவைத் தலைவர் சாதாரண இரண்டாம் வகுப்புப் பயணியைக் போலப் பிரயாணம் செய்கிருர் என்ற எண்ணமே சுற்றியுள்ள யாருக்கும் வரவில்லை.

சில நாட்கள் கழித்து விளதீமிர் இலீச் மீண்டும் ஸ்மோல்னி மாளிகையில் வேலை செய்தார்.

விளதீமிர் இலீச்சிடமிருந்து, அவர் கையால் எழுதப் பட்ட குறிப்பு ஒன்றை நான் பெற்றேன்:

''உங்கள் மக்கள் கமிசாரகக் கிடங்கைச் சேர்ந்த

கோட்டுகளை நல்ல முறையில், நன்றியுடன் அனுப்பியிருக்கிறேன். இவை எங்களுக்கு மிகவும் பயன்பட்டன. நாங்கள் பனிப்புயலில் ஒரு முறை மாட்டிக் கொண்டோம். 'ஹலீலாவில்' நன்ருக இருந்தது. பின்லாந்து மார்க்குகளை நான் இப்போது அனுப்பவில்லை. நான் சுமாராகக் கணக்குப் போட்டதின்படி அது ருஷ்யப் பணம் 83 ரூபிள்களுக்குச் சமம். இதை நான் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். பண வசதி உங்களுக்குப் போதாது என்று எனக்குத் தெரியும். உங்கள் லெனின்''.

பிரம்மாண்டமான அரசுப் பணிகள் அனைத்தின் மத்தியிலும் இத்தகைய சில்லறை விஷயங்களை அவர் நினைவில் வைத்திருக்க முடிந்ததும், தோழர்கள் மீது எப்போதும் கவனம் கொண்டிருந்ததும் விளதீமிர் இலீச்சுக்கே உரிய பண்பாகும்.

லெனினது விருந்தினராக

செரஃபிமோவிச்

காங்கிரசுகளிலும் மாநாடுகளிலும் விளதீமிர் இலீச் பேசியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். தமக்கு முன்னும் பின்னும் பேசுகிற பேச்சாளர்களை விடக் குறைந்த நேரமே லெனின் சாதாரணமாகப் பேசுவார். ஆனால் அவரது பேச்சுக்கள் ஏற்படுத்தும் மனப்பதிவுகளோ எப்போதும் மிகப் பெரியவையாக இருக்கும்.

லெனினுடன் நேருக்கு நேர் நான் ஒரு முறைதான் பேசியிருக்கிறேன். அந்த மறக்க முடியாத ஒரேயொரு நாளைப் பற்றி, நான் லெனினது விருந்தினராக இருந்த நாளைப் பற்றி இன்று சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாள் மாலை நேரம் எனது வீட்டின் வாயில் மணி அடித்தது. ஒரு மனிதர் உள்ளே வந்து சொன்னார்:

''உங்களுக்காகத் தோழர் லெனின் கார் அனுப்பி யிருக்கிறார்.''

சுமார் ஐந்து நிமிட நேரத்தில் நான் கிரெம்ளினில் இருந்தேன். இளம் செஞ்சேனை வீரன் என்னை மேல் மாடிக்குக் கூட்டிச் சென்றார். அங்கு லெனினது இருப்பிடம் இருந்தது. முன் அறைக்குள் வந்த நான் மேல் கோட்டைக் கழற்றத் தொடங்கினேன். அப்போது வேகமான, லேசான நடைச் சத்தம் கேட்டது. உள் அறைகளிலிருந்து லெனின் வெளிவந்தார். என்னை ஒரு முறை மேலும் கீழும் நோட்டம் விட்டவுடன் கனிவுடன் கைகுலுக்கி விட்டு, அன்புடன் சொன்னார்:

''உள்ளே வாருங்கள், உள்ளே வாருங்கள்.''

நாங்கள் உணவு அருந்தும் அறைக்கு வந்தோம். அந்த

அறை குறுகலானது. ஆனால் நேர்த்தியாகவும் வசதியாகவும் இருந்தது. அங்கு எளிமையான மிகவும் பழசாகிப் போன மேசை நாற்காலிகள் இருந்தன. நான் அடிக்கடி தொழிலாளர்களின் வீடுகளுக்குப் போயிருக்கிறேன். அவர்களது வீடுகள் இதைவிடக் கணிசமான அளவு வசதிகள் கொண்டதாய் இருக்கும். ஒருவேளை, இப்போது உழைக்கும் மக்கள் எத்தகைய நிலைமைகளில் வாழ்கிறார்களோ அதே நிலைமைகளில் நாமும் வாழ வேண்டும் எனும் கோட்பாட்டை லெனின் கறாராகக் கடைப்பிடிக்கிறார் போலும்.

''எப்படி இருக்கிறீர்கள்? யாரை அதிகம் சந்திக்கிறீர்கள்? தொழிலாளர்களையா, அறிவாளிகளையா? சொல்லுங்கள்'' நான் ஓடி விடுவேனோ என்பது போல் விளதீமிர் இலீச் வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்துப் பேசினார்.

''அவர்களைக் கொஞ்சம் இவர்களைக் கொஞ்சம் சந்திக்கிறேன்....''

எனக்குக் கூச்சமாக இருந்தது. ''நான் லெனினிடம் என்னத்தைச் சொல்லி விடப் போகிறேன், நான் சொல்லக் கூடியதெல்லாம் அவருக்கு ரொம்ப காலமாகத் தெரிந்ததே. நான் சொல்வதில் அவருக்கு என்ன சுவாரஸ்யம் கிட்டும்'' என்று நினைத்தேன்.

நுண்ணுணர்வுடன் எனது சங்கடத்தைக் கண்டு கொண்ட விளதீமிர் இலீச், எனக்கு நிதானிப்பதற்கு நேரம் கொடுப்பதற்காக நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்னாவைப் பார்த்துச் சொன்னார்:

''நீ எங்களுக்குக் கொஞ்சம் தேநீர் கொடேன்....''

மனிதர்களுக்கு உயரே நின்று, அதே நேரத்தில் பெருமை பாராட்டாமலும் எளிய மனிதர்களிடம் உயிர்ப்புள்ள அக்கறையை இழந்து விடாமலும் இருக்கும் இன்னொரு மனிதரை நான் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

அன்று மாலை நான் லெனினை முற்றிலும் புதியதொரு மனிதராகக் கண்டேன். காங்கிரசுகளிலும் மாநாடுகளிலும் நான் முன்பு கண்ட தலைவரையும் சொற்பொழிவாளரையும் போல அவர் காட்சியளிக்கவில்லை. என் முன்னால்

புதிய லெனின் நின்றார். இவர் மிகச் சிறந்த தோழர், மகிழ்ச்சி நிறைந்த மனிதர், உலகம் முழுவதையும்பற்றி உயிர்ப்புள்ள களைப்பற்ற அக்கறை கொண்டவர், மிக மென்மையாகவும் நேசத்துடனும் மக்களை அணுகுகிறவர்.

''ஏதாவது எழுதுகிறீர்களா?'' என்று அவர் கேட்டார்.

''இப்போது எழுதுவது கஷ்டம் நிறுவன வேலைகள் நிறைய இருக்கின்றன.''

இலீச் முகஞ் சுளித்தார்.

''ஆமாம், நிறுவன வேலைகள் இப்போது நம் நாட்டில் நிறைய இருக்கின்றன. எழுத்தாளர்களான நீங்கள் தொழிலாளர்களை இலக்கியத்தின்பால் ஈர்க்க வேண்டும். இதில் முயற்சிகள் அனைத்தையும் ஈடுபடுத்த வேண்டும். தொழிலாளியின் ஒவ்வொரு சிறுகதையைக் கண்டும் இதய பூர்வ மகிழ்ச்சி கொள்ள வேண்டும். உங்கள் பத்திரிகைகளில் தொழிலாளர்கள் எழுதுகிறார்களா?''

''குறைவாகவே, விளதீமிர் இலீச். அறிவும் கலாசாரமும் போதவில்லை போலும்.''

சிரிக்கின்ற சுருங்கிய கண்களால் அவர் என்னைப் பார்த்தார்:

''அது பரவாயில்லை. எழுதக் கற்றுக் கொள்வார்கள். அப்போது அருமையான, உலகிலேயே முதலாவது பாட்டாளி வர்க்க இலக்கியம் நம்மிடம் இருக்கும்....''

மனிதன் மீதும் ருஷ்யக் கலையின் மீதும் கொண்ட தெளிவான நம்பிக்கை இவ்வார்த்தைகளில் ஒலித்தன. தொழிலாளி மக்களின் மீது அணையாத செயல்பூர்வ நம்பிக்கையும் நேசமும் இவற்றில் தொனித்தன.

மேசை மீது சமவார் — தேநீர்க் கொதிகலம் — வைக்கப்பட்டது. அது நசுங்கி, தேய்ந்து போயிருந்தது. உணவுப் பொருள் உபசரிப்பு அற்புதமான எளிமை கொண்டிருந்தது.

எளிதில் திருப்தி கொண்டு விடுகிற, காலையிலிருந்து இரவு வரை கடிய வேலை செய்து வருகிற விளதீமிர் இலீச் தம்மைப் பற்றி முற்றிலும் மறந்து விட்டார். இப்போது, லெனினது மேசைக்கருகே உட்கார்ந்திருக்கும் போது,

எங்கோ குக்கிராமத்தில் உல்லாசமாகத் தேநீர் அருந்து கிறோம் என்றும், எச்சரிக்கையாக சர்க்கரையை மிச்சம் பிடித்தவாறு, வாய் வேகும்படி கொதிக்கும் தேநீர் பருகுகிறோம் என்றும் எனக்குத் தோன்றியது.

புன்னகை செய்தபடிச் சுருங்கிய கண்களுடன் லெனின் நான் சொல்லப் போவதற்காக இன்னும் காத்திருந்தார்.

''தொழிலாளர்களைப் பற்றி விளதீமிர் இலீச்சுக்குச் சொல்ல வேண்டியது அவசியம். அதற்காகத்தானே, தமது பிரமாண்டமான வேலையின் காரணமாக தன்னிடமிருந்து அவ்வப்போது தள்ளிப் போகிற உலகத்தை எட்டிப் பார்ப் பதற்காக அவர் என்னை அழைத்திருக்கிறார்'' என்று நான் நினைத்தேன்.

''....லோசினி ஒஸ்திரவ் ரயில் நிலையத்துக்கு நான் அண்மையில் போயிருந்தேன்'' என்று நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசத் தொடங்கினேன். ''அங்கு பெரிய ஆயுதசாலை இருக்கிறது. அதில் ஆயிரத்துக்கு மேற் பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.''

விளதீமிர் இலீச் நகர்ந்து வந்து என்னிடம் குனிந்து கொண்டார். அன்புடனும் அக்கறையுடனும் காது கொடுத்துக் கேட்டார். அவருக்கே உரிய வியத்தகு உயிர்ப் புடனும் அக்கறையுடனும் தெளிவுடனும், தொழிலாளர் களின் வாழ்க்கையைப் பற்றியும் அவர்களது ஊதியம் பற்றியும், வேலை பற்றியும், பள்ளிகள் பற்றியும், ஓய்வு பற்றியும் அவர் என்னைக் கேள்விகள் கேட்டார். இந்தக் கச்சிதமான கூரிய கேள்விகளிலிருந்து, தொழிலாளி வர்க் கம் இந்த நேரத்தில் எப்படி வாழ்ந்து வருகிறது என்பதை ஆழமாக ஆதார பூர்வமாகப் புரிந்து கொள்கிற லெனி னிடம் இருந்த ஏதோ ஒரு தனிவகை நுண்ணுணர்வை நான் கண்டேன். லெனினது பேச்சில் வார்த்தைகள் மட்டாக வும் சிந்தனைகள் மிகுந்தும் இருந்தன.

இலீச்சின் அக்கறையை உணர்ந்த நான் ஆயுதசாலைத் தொழிலாளர்கள் தமக்கு ஒரு கிளப்பு ஒன்று கட்டிக் கொள்ளுவதற்குத் திட்டமிட்டது பற்றி அந்த மாலை நேரத்தில் சொன்னேன். பணமோ கட்டுமானப் பொருள்

களோ அவர்களிடம் இல்லை. வட்டாரச் செயற்குழுவால் உதவிக்கு வர முடியவில்லை. அப்போது, ஆயுதசாலைத் தொழிலாளர்கள் குதிரை லாயத்தைக் கிளப்பாக மாற்றுவது என்று விசேஷக் கூட்டத்தில் முடிவு செய்தார்கள்.

லெனின் நான் சொன்னதைக் கவனமாகக் கேட்டார். கன்னப் பொட்டிலிருந்து இமையோரம் சுருக்கங்கள் ஓடின. கண்கள் வேடிக்கையும் கனிவும் கொண்டு ஒளிர்ந்தன.

''கொஞ்சம் பொறுங்கள். குதிரை லாயத்தைக் கிளப்பாக மாற்றுவது எப்படி?'' முழு உயிரோட்டமும் சளைக்காத அக்கறையும் கொண்டு கேட்டார் லெனின்.

''லோசினி ஒஸ்திரவில் பணக்கார நிலப்பிரபு ஒருவர் முன்பு வாழ்ந்து வந்தார். முதல் தரமான பந்தயக் குதிரைகள் அவரிடம் இருந்தன. இக்குதிரைகளுக்காக பிரம்மாண்டமான லாயம் கட்டப்பட்டிருந்தது. தொழிலாளர்கள் வரிந்து கட்டிக் கொண்டு லாயத்தை நாடக அரங்காக மாற்றத் தொடங்கினார்கள். அவ்விடத்தைச் சுத்தப்படுத்தினார்கள், வெள்ளையடித்தார்கள், சன்னல்கள் கட்டினார்கள், தரைகள் பாவினார்கள், மேடை அமைத்தார்கள், மேசை நாற்காலிகள் செய்து போட்டார்கள், மின்சார இணைப்புக் கொடுத்தார்கள். எல்லாம் செய்து முடித்த பின்பு கலைஞர்களைக் கூட்டி வருவதற்காக ஒரு குழுவை மாஸ்கோவிற்கு அனுப்பினார்கள். கலைஞர்கள் மகிழ்ச்சியுடன் அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். புதிய நாடக அரங்கின் திறப்பு விழாவுக்குக் கிராமம் முழுதும் வந்தது. இது ஓர் அற்புதப் பண்டிகையாக இருந்தது.''

இலீச் உற்சாகத்துடன் காது கொடுத்துக் கேட்டார். அவரது கண்கள் ஒளிர்ந்தன.

''அப்புறம், அப்புறம்'' என்று என்னை அவசரப்படுத்தினார்.

''அப்புறம்-அப்புறம்'' என்ற வார்த்தைகளின் மூலம் ஏராளமான அர்த்த வித்தியாசங்களை லெனினால் தர முடிந்தது. எச்சரிக்கையான சந்தேகத்திலிருந்து, மனத்தை உறுத்தும் கேலியிலிருந்து, தலைவிதியின் ''தவறுகளை'' எல்

லாம் புரிந்து கொள்கிற கூரிய மதி படைத்த மனிதருக்கு எட்டுகிற அங்கீகரிக்கும் ஊக்கமூட்டல் வரை அர்த்த வித்தியாசங்கள் இவ்வார்த்தைகளில் இருந்தன.

''....இப்படியாகத் தொழிலாளர்கள் தமது சக்திகளைக் கொண்டு குதிரை லாயத்திலிருந்து நாகரிகமான 'பிரபுக் கள் மன்றம்' ஒன்று கட்டினர்.''

விளதீமிர் இலீச்சின் கண்கள் அணையாத பிரகாசமான ஒளி கொண்டு சுடர் விட்டன. கட்டுக் குட்டாகப் பருமனாக இருந்த அவர் கோட்டின் முன் மடிப்பைப் பிடித்துக் கொண்டு குதித்தெழுந்தார். அற்புதமான லெனினது குழந்தைச் சிரிப்பு சிரித்தார். விளதீமிர் இலீச் சிரித்ததைப் போல, மற்றேரைத் தொற்றிக் கொள்கிறபடிச் சிரிக்க முடிக்கிற வேறு மனிதரை நான் ஒருபோதும் சந்தித்ததில்லை. கடிய எதார்த்தவாதி மாபெரும் வரலாற்றுப் பணிகளைச் செய்கிற மனிதர் குழந்தைத்தனமாகக் கண்ணீர் வரும் வரை சிரிக்க முடியும் என்பது விசித்திரமாகக் கூட இருந்தது. மூச்சுத் திணறும் வண்ணம் சிரித்த இலீச் கஷ்டப்பட்டு அதை அடக்கிக் கொண்டு சொன்னுர்:

''தொழிலாளி மட்டுமே 'பிரபுக்கள் மன்றத்தைக்' குதிரை லாயத்திலிருந்து கட்ட முடியும். அவன் அது மட்டுமா கட்டுவான்—அவகாசம் கொடுங்கள்....''

நான் விளதீமிர் இலீச்சைப் பற்றி முன்னர் ஒருபோதும் கேள்விப்படாமலும், அவரை ஒருபோதும் காணுமலும் தொழிலாளி வர்க்கத்தை விளதீமிர் இலீச் எப்படி அணுகினுர் என்பதை ஒருபோதும் அறியாமலும் இருந்தால் கூட இந்த வார்த்தைகள், இதைவிட அதிகமாக மனப் பூர்வமான தாய்மைக் கனிவுள்ள சிரிப்பு, வாழ்க்கையைப் படைக்கிற தொழிலாளி-படைப்பாளி மீது அவர் கொண்டிருந்த அன்பு, நம்பிக்கை பெருமை ஆகியவற்றின் முழு ஆழத்தையும் நான் புரிந்து கொள்ளச் செய்திருக்கும்.

லெனினது சிந்தனை திசை காட்டியின் முள்ளைப் போல உழைக்கும் மக்களின் வர்க்க நலன்களின் பக்கமே எப் போதும் திரும்பி இருந்தது.

சிரிப்பினுல் வந்த கண்ணீரைத் துடைத்தவாறு

காரியப் பற்றுடனும் பெருத்த உறுதியுடனும் மெதுவாக லெனின் சொன்னர்:

''வாழ்க்கையின் எஜமானர்களாக இருப்பதற்கான தமது உரிமைக்காகப் பயங்கரத் தியாகம் புரிந்திருக்கிருர்கள் தொழிலாளர்கள். இறுதியில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். இது வரலாற்றின் சித்தம்.''

நடைகூடத்தில் ஏதோ சத்தத்தைக் கேட்ட நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ அவசரமாக வெளியே போனர். திரும்பி வந்து விளதீமிர் இலீச்சின் காதுகளில் என்னவோ சொன்னர்.

லெனினது முகம் ஒரேயடியாக வெளிறிப் போயிற்று. கண்பார்வை நேராக, கடிய-கேலி நிறைந்ததாயிற்று, நோக்கில் உறுதியும் வளையாமையும் வந்து விட்டன. இப்போது அவர் மகிழ்ச்சி நிறைந்து உரையாடுபவர் அல்ல. தொழிலாளி வர்க்கத்தின் தலைவர். பாட்டாளி வர்க்கச் சக்திகளின் மேதை மிக்க தளபதி.

''நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள்'' என்ருர் லெனின். ''ரஸ்தோவில் நமது படைகளை வெண்படையினர் முறியடித்து விட்டார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. நான் வேலை செய்யப் போக வேண்டும்.''

இத்துடன் எங்கள் உரையாடல் முடிந்தது. விளதீமிர் இலீச்சின் மீதிருந்த கண்களைக் கஷ்டத்துடன் அகற்றியபடி நான் அங்கிருந்து அகன்றேன்.

ரஸ்தோவிலிருந்து வெண்படையினர் துரத்தப்பட்டு விட்டார்கள் என்றும், நவரஸ்ஸீய்ஸ்குக்கு செஞ்சேனை அவர்களை விரட்டுகிறது என்றும் இரண்டு நாள் கழித்துத் தகவல் வந்தது. இன்னும் சில நாட்கள் சென்றபின் வெண் பெருஞ்சேனை கடலுக்குத் துரத்தப்பட்டது என்றறிந்தது நாடு.

லெனினது மனித வடிவம்

குருப்ஸ்கயா

லெனினது மனித வடிவத்தில் இளைஞர்கள் பெருத்த அக்கறை காட்டுகிருர்கள். இந்தப் பிரச்னை பற்றி நான் இன்று பேச விரும்புகிறேன்.... லெனின் ஒரு புரட்சிகர மார்க்சியவாதியாகவும் கூட்டுத்துவவாதியாகவும் இதய பூர்வமாக விளங்கினர். ஒரேயொரு குறிக்கோளுக்காக—சோஷலிச வெற்றிக்கான போராட்டத்திற்காக— அவரது வாழ்க்கையும் பணிகளும் முழுமையாக அர்ப்பணிக்கப் பட்டிருந்தன. இது அவரது உணர்ச்சிகளிலும் சிந்தனை களிலும் முத்திரை பதித்தது. சிறு கடைமைத் தனிநபர் வாதிகளிடம் காணப்படும் பல விதமான சில்லரைத் தனமும், அற்பப் பொருமை, வைரம், வஞ்சம், அகந்தை, ஆகிய அனைத்தும் அவருக்கு அன்னியமானவை.

லெனின் போராடினர். பிரச்னைகளைக் கடுமையாக முன்வைத்தார். ஆனல் சொந்த விஷயம் எதையும் சச்சரவுக்குள் அவர் கொண்டு வந்ததில்லை. பிரச்னைகளைக் காரிய நோக்கில் அணுகினர். அதனல்தான் அவரது கடுமை கண்டு தோழர்கள் மனம் புண்படவில்லை. அவர் மனிதர்களை மிகவும் கூர்ந்து கவனித்தார். அவர்கள் சொன்னதைக் காது கொடுத்துக் கேட்டார். சாரத்தைப் புரிந்து கொள்ள முயன்ருர்.எனவேதான் முக்கியமற்ற பல சில்லரை விஷயங் களைக் கொண்டு மனிதனுடைய தன்மையைக் கண்டு கொள்ள அவருக்கு முடிந்தது. மிக நுண்ணுணர்வுடன் மனிதர்களை அவரால் அணுக முடிந்தது. அவர்களிடம் உள்ள, பொதுக் காரியத்துக்குப் பயன்படுத்தத்தக்க நல்ல, மதிப்பு மிக்க அம்சங்களை அவரால் வெளிக் கொணர முடிந்தது.

லெனினிடம் வந்த ஒருவன் வேருெருவனக மாறி விடு

வதை நான் நிரந்தரமாகக் கண்காணிக்க நேர்ந்தது. இதற்காகத் தோழர்கள் இலீச்சை நேசித்தார்கள். அவர்களுடன் பழகியதால் வேறு ஒருவர் அரிதாகப் பெறக் கூடிய அளவு படிப்பினைகளைப் பெற்றார் இலீச். வாழ்க்கையிலிருந்து, மனிதர்களிடமிருந்து கற்றுக் கொள்ள எல்லோராலும் முடியாது. இலீச்சால் அது முடிந்தது. ஒருவரிடமும் அவர் தந்திரம் புரியவில்லை, எதையும் மறைத்துப் பேசவில்லை. எவர் கண்ணிலும் மண்ணைத் தூவவில்லை. அவரது நேர்மையையும் ஒளிவு மறைவின்மையையும் மக்கள் உணர்ந்தனர்.

தோழர்கள் பால் பரிவு கொள்வது அவருக்கே உரிய பண்பாக இருந்தது. சிறையில் இருக்கையிலும், சுதந்திரமாய் இருக்கும் போதும், சைபீரியவாசத்திலும் வெளி நாடுகளில் வாழ்ந்த காலத்திலும், மக்கள் கமிசாரவைத் தலைவரான போதும் கூட அவர்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொண்டார் அவர். தோழர்கள் பால் மட்டுமல்ல, தமது உதவி தேவைப்பட்ட தொலைதூர மனிதர்கள் மீதும் அவர் பரிவு காட்டினார். என்னிடம் இருக்கிற இலீச்சின் ஒரேயொரு கடிதத்தில் பின்கண்ட வாக்கியம் இருக்கிறது: ''சில சமயங்களில் உதவி பற்றி உனக்கு வருகிற கடிதங்களை நான் படிக்கிறேன், முடிந்ததைச் செய்ய முயல்கிறேன்.'' இலீச்சிடம் மற்ற வேலைகள் ஏராளமாய் இருந்த 1919 கோடைகாலத்தில் இது நடந்தது. உள்நாட்டுப் போர் முழுமூச்சாக நடந்து கொண்டிருந்தது. அதே கடிதத்தில் அவர் எழுதுகிறார்: ''கிரீமியா மீண்டும் வெண்படையினரிடம் இருப்பது போலத் தெரிகிறது.'' அளவுக்கு மேல் அதிகமாக இருந்தன வேலைகள். ஆனால் மக்களுக்கு உதவி செய்ய வேண்டி இருந்த போது தமக்கு நேரமில்லை என்று இலீச் சொன்னதை நான் ஒருபோதும் கேட்கவில்லை.

லெனின் நல்ல மனிதர் என்று சிலர் சொல்கிறார்கள். நற்பண்பு பற்றிய பழைய வழக்குச் சொற்களிலிருந்து எடுக்கப்பட்ட ''நல்லவர்'' என்ற வார்த்தை லெனினுக்கு அவ்வளவு பொருத்தமில்லை. இது போதுமானதாயில்லை, துல்லியமாயுமில்லை.

பழைய காலத்துக்கே மிகவும் உரியதாயிருந்தது போலக் குடும்பக் காரியத்துக்குள், குழு விவகாரத்துக்குள் அடைபட்டுக் கிடக்கும் பழக்கம் இலீச்சிடம் ஒரு போதும் இருக்கவில்லை. சொந்த விவகாரத்தை சமுதாய விவகாரத்திலிருந்து அவர் ஒருபோதும் பிரித்ததில்லை. இது ஒரே முழுமையாக அவரிடம் ஒன்றுசேர்ந்திருந்தது. மனிதர்களிடம் அவர் தீவிரமான பற்று கொண்டிருந்தார். பிளெஹானவிடம் அவர் கொண்டிருந்த பற்று எடுத்துக் காட்டானது. இந்தப் பற்றினுல் அவர் நிறையப் பயன் அடைந்தார். ஆனுல் பிளெஹானவ் தவறு புரிகிருர் என்று அவர் கண்ட போதும் காரியத்துக்கு பிளெஹானவின் கருத்து தீமை புரியும் என்று அவர் கண்ட போதும் முழு மூச்சுடன் அவருடன் போராடுவதற்கு இது தடையாக இருக்கவில்லை. பிளெஹானவ் தற்காப்புவாதியாக மாறிய போது அவருடன் உறவை முற்றிலும் முறித்துக் கொள்ள அவர் தயங்கவில்லை.

குறிக்கோளில் பெற்ற வெற்றிகள் லெனினுக்கு ஆழ்ந்த மகிழ்ச்சியைத் தந்தன. குறிக்கோள் அவருடைய வாழ்க்கையாயிருந்தது. அதனை அவர் நேசித்தார். அவர் அதனுல் கவரப்பட்டார். பொது மக்களை முடிந்த வரை அதிகமாக நெருங்க அவர் விரும்பினுர். அவரால் இவ்வாறு செய்ய முடிந்தது. தொழிலாளர்களுடன் கொண்ட தொடர்பு அவருக்கே நிறையப் பயன் தந்தது. ஒவ்வொரு கட்டத்திலும் பாட்டாளி வர்க்கப் போராட்டக் கடமைகள் பற்றிய உண்மையான புரிவை அது அவருக்குத் தந்தது. ஒரு விஞ்ஞானப் பணியாளராக, பிரசாரகராக, இலக்கியவாதியாக, பத்திரிகையாசிரியராக, ஒழுங்கமைப்பாளராக அவர் வேலை செய்ததைக் கவனமாக நாம் ஆராய்ந்தால் அவரை ஒரு மனிதராக நாம் புரிந்து கொள்வோம். லெனினது கட்டுரைகளிலும் பேச்சுக்களிலும் இறைந்து கிடக்கிற ஆயிரக் கணக்கான குறிப்புகள், தனித்தனிச் சொற்ருெடர்கள், தொடர் மொழிகள் ஆகியவற்றில் கூட்டுத்துவவாதியாக, தொழிலாளர் குறிக்கோளுக்கான போராட்ட வீரராக இலீச் எனும் தனி நபர் காட்சியளிக்

கிறார். கூட்டுத்துவவாதியாக, தொழிலாளர் குறிக்கோளுக்கான போராட்ட வீரராக இருப்பது பெருத்த இன்பம். தனது கண்ணோட்டம் எப்படி விரிவடைகிறது, வாழ்க்கை பற்றிய புரிவு எப்படி ஆழமடைகிறது, செயல் பரப்பு எப்படி விரிவடைகிறது, வேலை செய்யும் திறன் எப்படி வளர்கிறது என்று ஒருவன் எல்லா நேரங்களிலும் உணர்கிறான். பொது மக்களது வளர்ச்சியோடு கூடவே, குறிக்கோளின் வளர்ச்சியோடு கூடவே தான் எப்படி வளர்கிறான் என்று அவன் உணர்கிறான். எனவேதான் மற்றவரைத் தொற்றிக் கொள்கிறபடி சிரித்தார் இலீச், மகிழ்ச்சிகரமாக வேடிக்கை செய்தார், ''வாழ்க்கையின் பசிய மரத்தை'' நேசித்தார். வாழ்க்கை அவருக்கு ஏராளமாக இன்பங்களை நல்கியது. பாட்டாளி வர்க்கப் புரட்சியும் சோஷலிசக் கட்டுமானமும் நடந்த யுகத்தில் அல்லாமல் வேறொரு யுகத்தில் லெனின் வாழ்ந்திருந்தால் அவர் இருந்தபடி இருந்திருக்க முடியாது. பாட்டாளி வர்க்கக் குறிக்கோளில் வெற்றி கிட்டும் என்ற ஆழமான நம்பிக்கையையும், ஆழமான அவசியமான தொலைநோக்கையும் மார்க்சியத் தத்துவம் அவருக்கு வழங்கியது. பாட்டாளி வர்க்கக் குறிக்கோளுக்காக பாட்டாளி வர்க்கத்துக்கு மிக அருகில் இருந்து அவர் போராடியதும் பணியாற்றியதும் எதிர்கால மனிதரின் பண்புகளை அவரிடம் வளர்த்தன.

இலீச்சை ஒரு மனிதராகப் புரிந்து கொள்வது சோஷலிசக் கட்டுமானம் என்பது என்ன என்று இன்னும் ஆழமாகவும் சிறப்பாகவும் புரிந்து கொள்வதாகும்; சோஷலிச அமைப்பினது மனிதனின் வடிவத்தை உணர்ந்து கொள்வதாகும்.

இலீச்சுடன் உரையாடல்

குஸ்பாசிலிருந்து, பிரக்கப்பியேவ்ஸ்கிலிருந்து வேலை நிமித்தமாக வந்த ஒரு பழைய தொழிலாளி ருதகோவ் அண்மையில்* என்னிடம் வந்தார். 90ஆம் ஆண்டுகளில்

* நினைவுக் குறிப்புக்கள் 1935ல் எழுதப்பட்டன.—(ப-ர்.)

அவர் பீட்டர்ஸ்பர்கில், நார்வ்ஸ்க் எல்லைக் காவல் நிலையப் பகுதியில் வேலை செய்தார். இவர் தோழர் பாபுஷ்கினுக்கு மிகவும் நெருங்கியவர். அந்தக் காலத்தின் உணர்வு பூர்வமான, செயலூக்கம் மிக்க தொழிலாளர்களில் ஒருவர். மாலை நேர ஞாயிற்றுக் கிழமைப் பள்ளியில் அவர் எனது மாணவராய் இருந்தார். நாங்கள் 40 வருடமாக ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. மாஸ்கோவிற்கு வந்த அவர் என் வீட்டுக்கு வந்தார். நாங்கள் மிகவும் கிளர்ச்சி அடைந்தோம். அவரது வாழ்க்கை பற்றியும், சிறையிலிருந்தது பற்றியும், சைபீரியச் சிறைக் குடியிருப்பு வாழ்க்கை பற்றியும், 1905க்குப் பின் சைபீரியாவிலேயே தங்கிவிட்டது பற்றியும் அவர் அவசர அவசரமாகச் சொன்னார். ''மகன் இஞ்சினீயர், மகள் கல்லூரியில் படிக்கிறாள். நாங்கள் எல்லோரும் கம்யூனிஸ்டுகள்'' என்றார் அவர். ''அன்று நாம் சொன்னதெல்லாம் இப்போது நிறைவேறுகிறது'' என்று பின்பு கிளர்ச்சி பொங்கக் கூறினார். நாங்கள் மிகவும் பதட்டத்துடன் இருந்ததால் அவர் தமது முகவரியைச் சொல்ல மறந்து விட்டார்.

ஆம், நமது சாதனைகளைப் பற்றி கிழவர்களான நாங்கள் விசேஷமாக அனுபவ உணர்ச்சி கொள்கிறோம், எதைப் பற்றி நினைத்தோமோ, எதற்காக நீண்டகாலம் போராடினோமோ அது உயிருள்ள, திட்டவட்டமான வடிவில் நிறைவேறுவதைக் காண்பதே இந்த விசேஷ உணர்ச்சி. எங்கள் தலைமுறையிடம், மிக நெருக்கமாக லெனினை அறிந்தவரிடம், அவருடன் வேலை செய்தவரிடம், மகிழ்ச்சி உணர்ச்சியுடன், இவற்றை எல்லாம் லெனின் காணவில்லையே, அவர் இவ்வளவு சீக்கிரம் மறைந்து விட்டாரே என்ற கூரிய சோக உணர்ச்சியும் கலந்து வருகிறது.

அவர் மறையாமல் இருக்க முடியாது. அவரது சிந்தனை இடையறாது இறுக்கத்துடன் வேலை செய்தது. இறுதியாக அவரைக் கொலை செய்த அந்த நோய் முன்னேறி வந்த போது கறாரான கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் படி அவரை வற்புறுத்தினார்கள் மருத்துவர்கள். மதிய உணவுக்குப் பின்பு இரண்டு மணி நேரம் படுத்திருக்குமாறு

உத்தரவிட்டார்கள். முதலில் இலீச் இந்தக் கட்டுப் பாட்டுக்குப் பணிந்தார். ஆனால் மருத்துவரின் கோரிக் கையைச் சந்தேகத்துடன் பார்த்தார். ''நான் சிந்திக்கா மலிருக்குமாறு அவர்களால் செய்ய முடியாது'' என்றார் அவர். படுக்கையில் படுத்திருக்கும் போதும், உலாவு கின்ற போதும், எளிய அன்றாட விவகாரங்களைப் பற்றிய பேச்சின் போதும் தமது வாழ்வு முழுதையும், தமது சக்தியனைத்தையும், வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியை யும் அர்ப்பணித்து விட்ட பணியைப் பற்றியே அலுப்பு சலிப்பின்றி அவர் சிந்தித்து வந்தார்.

குறிப்பிட்ட நேரத்தில் தம்மைப் பதட்டப்படுத்திய அக்கறைப்படுத்திய விஷயத்தைப் பற்றி உலாவும் போது இலீச் பேசுவார். அவரது பிறந்த தினத்தன்று அவருடன் ஒதுக்கமாகக் காட்டுக்குச் சென்று விடுகிற பழக்கம் எங்கள் குடும்பத்தில் எப்படியோ ஏற்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் அவரது கவனத்தை விசேஷமாகக் கவர்ந்த விஷயம் பற்றி உலாவும் போது அவர் பேசுவார். வசந்த காலக் காற்று, சுனை விடத் தொடங்கியிருந்த காடு, விரிந்து கொண்டிருந்த இலை மொக்குகள் ஆகிய யாவும் விசேஷமானதொரு மனநிலையைத் தோற்றுவித்தன, சிந் தனையை முன்னோக்கிச் செலுத்தின. அப்போது எதிர் காலத்திற்குள் எட்டிப் பார்க்க வேண்டுமென்று விருப்ப மேற்பட்டது. லெனினுடைய வாழ்வின் இறுதிக் காலத்தில் நடந்த இத்தகைய ஓர் உரையாடல் நினைவிலிருக்கிறது.

லெனின் விஞ்ஞானத்திற்கு எத்தகைய பிரம்மாண்ட மான முக்கியத்துவம் தந்தார் என்பதை யாவரும் அறி வார்கள். சோவியத்துக்களின் மூன்றாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் அவர் ஆற்றிய உரை எல்லோருக்கும் நினை விருக்கும். அதில் அவர் சொன்னார்: ''முன்னர் மனித அறிவு அனைத்தும், அவனுடைய மேதை அனைத்தும், தொழில் நுட்ப, கலாசார நலன்களை ஒரு சாராருக்கு நல்கவும் மறு சாராருக்கோ மிக அத்தியாவசியமான கல்வியையும் வளர்ச்சியையும் கூட மறுக்கவுமே பயன் பட்டன. இப்போதோ தொழில் நுட்ப அற்புதங்கள்

அனைத்தும், கலாசார வெற்றிகள் அனைத்தும் பொதுமக்களின் உடைமைகளாகி விடும். இன்று முதல் மனித அறிவும் மேதையும் வன்முறைக் கருவிகளாகவும் சுரண்டல் கருவிகளாகவும் ஒரு போதும் மாற மாட்டா''*. இது சோவியத்துக்களின் நாட்டைக் குறித்தது. முதலாளித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கம் விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளை நாளுக்கு நாள் அதிக அளவில் தனது ஏகாதிபத்திய நோக்கங்களுக்குச் சேவை செய்ய வைக்கிறது. தான் வெகு ஆவலுடன் கனவு காண்கிற புதிய கொள்ளைப் போரில் ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பையும் அது பயன்படுத்த முயல்கிறது. கடைசி ஏகாதிபத்திய உலகப் போரை விட இன்னும் அதிக அழிவுப் போராக புதிய போரை நிகழ்த்த விரும்புகிறது. நாசகாரச் சூறுவளியாக இதனை மாற்ற விரும்புகிறது.

தாய்நாட்டை, சோவியத்துக்களின் நாட்டைத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க தற்காப்புக்காகத் தீவிரமாகத் தயாரிப்புச் செய்ய நேர்ந்தது. விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகள் அனைத்தையும் தற்காப்புக்காகப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. நமது நாடு லெனின் இருந்த காலத்திலேயே இவ்வாறு செய்தது. இப்போதும் கட்சியின் தலைமையின் கீழ் இவ்வாறு செய்கிறது. தற்காப்புக்காக நமது நாடு தயாராய் இருக்கிறது. உலகம் முழுதும் சோஷலிசம் வெற்றி பெறுவதுதான் புதிய போர் பற்றிய கனவுக்கு முடிவுகட்டும்.

லெனினது பிறந்த நாட்களில் ஒன்றில் உலாவலின் போது இலீச்சுடன் இவ்விஷயம் குறித்து நடந்த உரையாடல் எனக்கு நினைவு வருகிறது. நிகழ்ந்து வரும் பல்வேறு சம்பவங்களைப் பற்றி முதலில் அவர் பேசினார். நாங்கள் காட்டிற்குள் வெகு தொலைவு சென்று விட்ட போது அவர் மௌனமானார். பின்னர் ஒரு புதுப்புனைவு பற்றிப்

* V. I. Lenin, *Collected Works*, "Summing-up-Speech at the Congress" (January 18, 1918), Third All-Russia Congress of Soviets, Vol. 26, p. 481-482.—(ப-ர்.)

பேசத் தொடங்கினார். விஞ்ஞான, தொழில் நுட்பப் புதுப் புனைவுகள் சோவியத் நாட்டின் பாதுகாப்பை மிகவும் வலுவுள்ளதாக்கும் என்றும், எனவே அதன் மீது எத்தகைய தாக்குதலும் சாத்தியமில்லாமல் போகும் என்றும் சொன்னார். பின்னர் பேச்சு மாறியது: முதலாளித்துவ வர்க்கத்தின் கைகளில் ஆட்சியதிகாரம் இருக்கும் போது உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்காக அதனை இவ்வர்க்கம் பயன்படுத்துகிறது என்றும், உணர்வு பூர்வமான ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஆட்சியதிகாரம் வந்துவிடும் போது எல்லாவிதமான சுரண்டல்களையும் ஒழிப்பதற்கு அதனை இவ்வர்க்கம் உபயோகிக்கும் என்றும், எல்லாவிதமான படுகொலைகளுக்கும் முடிவு கட்டும் என்றும் அவர் சொன்னார். விளதீமிர் இலீச் தமது கனவுகளையும் உள்ளார்ந்த ஆசைகளையும் பற்றிப் பேசும் போது வழக்கமாகச் செய்வது போல மேலும் மேலும் தணிந்த குரலில், அனேகமாகக் கிசுகிசுவென்று பேசினார். இலீச்சின் பொதுவான கருத்துக்களுடன் இசைந்திருந்தது இந்தப் பேச்சு. என் ஞாபக சக்தி சுருக்கெழுத்துத் திறன் கொண்டது இல்லையே என்று எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது.

இந்த உரையாடல் முடிந்த பின் சென்ற காலத்தில், கம்யூனிஸ்டு கட்சி கடைப்பிடித்த கொள்கையின் காரணமாக சோவியத் நாடு தொழில் நுட்ப வலிமை பெற்றதாயிற்று.

இந்த வருடங்களில் தொழில் வல்லுனர்கள், சோவியத் நாட்டின் உழைப்பாளர்கள் ஆகியோர் எவ்வாறு தயாரானார்கள், அவர்களது அரசியல் உணர்வும் போராட்டத் திறமையும் எங்ஙனம் உருவாயின என்று நமக்குத் தெரியும்.

சோவியத் நாட்டில் இப்போது நடந்து வரும் நவீன வேலைகள் அனைத்திலும் இலீச்சின் பங்கு எத்தகையது என்று நமக்குத் தெரியும். பற்பல ஆண்டுகளுக்குப் போதுமான வலிய ஆற்றலை அவர் நாட்டினருக்கு ஏற்றியிருக்கிறார்.

ஆசிரியர்களின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகள்

இவனேவ் *ஆந்திரேய் வசீலியெவிச் (1888—1977)—1907—1919ல் புத்திலவ் தொழிற்சாலையின் தொழிலாளி. 1918 ஏப்ரலில் உணவுப் பொருள்கள் வாங்கும் பொதுத் தொழிற்சாலைக் கமிஷனின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெத்ரோகிராத் தொழிலாளர்களின் உணவுப்பொருள் நிலைமை பற்றிய அறிக்கையுடன் மாஸ்கோவில் வி. இ. லெனினைச் சந்தித்தார். 1924 முதல் மின்நிலையங்கள் கட்டுமானத்தில் பணியாற்றினார். அடுத்த ஆண்டுகளில் இஞ்சினீயராக இருந்தார்.*

உல்யானவா-எலிசாரவா *ஆன்னு இலீனிச்னு (1864—1935)—கம்யூனிஸ்டுக் கட்சியின் முதிய உறுப்பினர். வி. இ. லெனினின் சகோதரி. 1886 முதல் புரட்சி இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளத் தொடங்கினார். 1898 இலையுதிர் காலத்தில் ரு. ச. ஜ. தொ. க. மாஸ்கோ கமிட்டியின் உறுப்பினரானார். 1900—1905ல்* **இஸ்க்ரா** *நிறுவனங்களிலும், சட்ட விரோதப் போல்ஷிவிக் பத்திரிகைகளிலும் வேலை செய்தார்,* **வ்பெரியோத்** *என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர். 1904—1906ல் வெளிநாட்டில் இருந்த போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டியுடன் தொடர்பு கொண்டிருந்தார். போல்ஷிவிக்குகளின் பீட்டர்ஸ்பர்க் கமிட்டியின் பண விவகாரங்களைக் கவனித்து வந்தார். 1909—1910ல் சராத்தவில் புரட்சிப் பணி*

புரிந்தார். 1912—1914ல் போல்ஷிவிக் பத்திரிகைகளான பிராவ்தா, ப்ரோஸ்வெஷ்சேனியே ("அறிவொளி"), ரபோத்னித்சா ("பெண் தொழிலாளி") ஆகியவற்றின் வேலைகளில் பங்கு கொண்டார். பல முறை கைதானார். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் பிராவ்தா பத்திரிகை ஆசிரியர் குழுவின் செயலாளர், த்காச் ("நெசவாளர்") பத்திரிகையின் ஆசிரியர். 1918—1921ல் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் சமுதாயப் பராமரிப்பு மக்கள் கமிசாரகம், கல்வி சம்பந்தமான மக்கள் கமிசாரகம் ஆகியவற்றில் குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவுக்குத் தலைவர். ரு.க.க. (போ.) மத்தியக் கமிட்டியின் கட்சி வரலாற்றுத் துறையையும் வி. இ. லெனின் இன்ஸ்டிடியூட்டையும் ஒழுங்கமைக்கும் வேலையில் ஊக்கத்துடன் பங்கெடுத்துக் கொண்டார். இந்த இன்ஸ்டிடியூட்டின் விஞ்ஞானப் பணியாளராக இருந்தார். புரொலித்தார்ஸ்கயா ரெவலூத்சியா ("பாட்டாளி வர்க்கப் புரட்சி") எனும் பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராய் இருந்தார்.

எமெல்யானவ் நிகோலாய் அலெக்சாந்தரவிச் (1871—1958)—தொழிலாளி. புரட்சிகர இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். 1904 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். 1905ல் செஸ்த்ரோரெத்ஸ்கில் தொழிற்சாலைப் போராட்டக் கமிட்டியை நிறுவினார். பின்லாந்திலிருந்து ருஷ்யாவுக்கு சட்டவிரோத இலக்கியத்தைக் கொண்டு செல்வதில் பங்கு கொண்டவர். புரட்சிகர நடவடிக்கைக்காக அடக்குமுறைக்கு உள்ளானார். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு பெத்ரோகிராத் சோவியத்தின் உறுப்பினர். 1917 ஜூலை—ஆகஸ்டில் ரஸ்லீவில் இவரது வீட்டில் வி. இ. லெனின் மறைந்து வாழ்ந்தார். அக்டோபர் புரட்சியில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். 1921ல் அவர் கிரன்ஷ்தாத் கலவரத்தை ஒடுக்கு

வதில் பங்கு பற்றினர். அடுத்த ஆண்டுகளில் பொருளாதாரப் பணியில் ஈடுபட்டார்.

கரல்யோவ் கிரிகோரி குஸ்மீச் (1885—1931)—1905 முதல் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். இவானவோ-வஸ்நெசேன்ஸ்க் நூல் ஆலைத் தொழிலாளி. 1917 ஜூலையில் பெத்ரோகிராதில் நடந்த தொழிற் சங்கங்களின் அனைத்து ருஷ்ய மாநாட்டில் பங்கு கொண்டவர். 1921 வரை இவானவோ-வஸ்நெசேன்ஸ்கில் சோவியத், பொருளாதார, தொழிற்சங்கத்தில் வேலை செய்தவர். பின்னர் கட்சியின் மத்தியக் கமிட்டியில் வேலை செய்தார்.

கர்பீன்ஸ்கி வியசெஸ்லாவ் அலெக்சேயெவிச் (1880—1965)—கம்யூனிஸ்டுக் கட்சியின் முதிய தலைவர்களில் ஒருவர். கட்சியின் பிரபலமான இலக்கியவாதி-பிரசாரகர். பொருளாதார விஞ்ஞானங்களின் டாக்டர். சோவியத் உழைப்பின் வீரர். 1898 முதல் ரு.ச.ஜ.தொ.க.யின் உறுப்பினர், போல்ஷிவிக். பலமுறை கைது செய்யப்பட்டார். 1904ல் வெளிநாட்டில் குடியேறினர். அங்கு போல்ஷிவிக் பத்திரிகைகளான வ்பெரியோத், புரொலித்தாரி ஆகியவற்றில் பணியாற்றினர். ஜெனீவாவில் ரு.ச.ஜ.தொ.க. மத்தியக் கமிட்டியின் நூலகத்துக்கும், பத்திரிகை ஆலயத்துக்கும் தலைவராக இருந்தார். 1914—1917ல் கட்சியின் மத்தியப் பத்திரிகையான சொத்ஸியால்-டெமக்ராட்டில் (''சமூக-ஜனநாயகவாதி'') வேலை செய்தார். 1917 டிசம்பரில் ருஷ்யா திரும்பினர். அதிலிருந்து பொறுப்புள்ள சோவியத், கட்சிப் பணிகளில் இருந்தார். 1918—1927ல் பிராவ்தா பத்திரிகை ஆசிரியர் குழுவின் உறுப்பினர். பெத்னதா பத்திரிகையின் ஆசிரியர். மற்ற பத்திரிகைகள் சஞ்சிகைகள் பலவற்றின் ஆசிரியர் குழு உறுப்பினர். 1936—1937ல் அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டியில் வேலை

செய்தார். 1937 முதல் விஞ்ஞான, பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

கனேட்ஸ்கி யாகோவ் ஸ்தனிஸ்லாவவிச் (1879—1937)—போலந்துத் தொழிலாளர் இயக்கத்தில் பிரபலமானவர், போலந்து, லிதுவேனியா சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிரதான நிர்வாகத்தின் உறுப்பினர். ரு.ச.ஜ.தொ. க.யின் 5ஆவது காங்கிரசில் மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1917ல் பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு போல்ஷிவிக் மத்தியக் கமிட்டியின் வெளிநாட்டுப் பிரிவினது உறுப்பினர். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு ருஷ்யாவுக்கு வந்தார். சில மக்கள் கமிசாரகங்களிலும் ராஜியத் துறையிலும் வேலை செய்தார்.

கிராப்தியோ ஹென்ரிஹ் ஓஸிப்பவிச் (1869—1949)—சோவியத் விஞ்ஞானி, ஆற்றலியல் நிபுணர், பொறியாளர், சோவியத் நாட்டின் நீர்மின்நிலையக் கட்டுமானங்களில் முன்னணி விஞ்ஞானிகளில் ஒருவர். விஞ்ஞானப் பேரவை உறுப்பினர். 1921 முதல் 1927வரை வல்ஹோவ் நீர்மின் நிலையத்தின் பிரதான இஞ்சினீயர். ருஷ்யாவை மின்மயமாக்கும் அரசு கமிஷனின் வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டார். பின்னர் பல பெரிய நீர்மின் நிலையங்களின் கட்டுமானத்தை நிர்வகித்தார்.

கிரிஸிஸானவ்ஸ்கி கிளேப் மக்ஸிமிலியானவிச் (1872—1959)—கம்யூனிஸ்டுக் கட்சியின் முதுபெரும் உறுப்பினர். சோவியத் அரசின் பிரபலமான பிரமுகர். ஆற்றல் துறை விஞ்ஞானி. விஞ்ஞானப் பேரவை உறுப்பினர். 1893 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். பீட்டர்ஸ்பர்க் ''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்தின்'' நிறுவகர்களில் ஒருவர். 1895 டிசம்பரில் கைது செய்யப்பட்டார். 1897ல் கிழக்கு சைபீரியாவுக்கு மூன்றாண்டு காலத்

துக்குக் கடத்தப்பட்டார். கீவில் 1905—1907ல் நடந்த புரட்சிகரச் சம்பவங்களில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு மாஸ்கோவின் ஆற்றல் துறையை மறுநிர்மாணம் செய்யவும் வளர்க்கவும் பணியாற்றினர். 1920ல் ருஷ்யாவை மின்மயமாக்கும் அரசுக் கமிஷனுக்குத் தலைவராக இருந்தார். 1921—1930ல் அரசுத் திட்டக் கமிஷனுக்குத் தலைவர். அடுத்த ஆண்டுகளில் பல மக்கள் கமிசாரகங்களில் வேலை செய்தார். சோவியத் யூனியன் மத்தியச் செயற்குழுவின் உயர் தொழில் நுட்பக் கல்விக் கமிட்டிக்குத் தலைவர். 1929 முதல் 1939 வரை அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டியின் உறுப்பினர். சோவியத் விஞ்ஞானப் பேரவையின் துணைத்தலைவர். இவரது முன்முயற்சியால் 1930ல் தொடங்கப்பட்ட சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஆற்றல் துறை இன்ஸ்டிடியூட்டுக்கு டைரெக்டர்.

கில் ஸ்திபான் கசிமீரவிச் (1888—1965)—1930 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். 1917 முதல் 1924 வரை வி. இ. லெனினது காரோட்டி.

கினியாசெவ் விளதீமிர் அலெக்சாந்தரவிச் (1871—1925) —பெத்ரோகிராதில் துறைமுகத் தொழிலாளி. 1890 முதல் தலைமறைவு அரசியல் குழுக்களின் நிறுவனத்தில் பங்கெடுத்துக் கொண்டவர். 1894 முதல் இவரது வீட்டில் குழுப் பயிற்சிகள் நடந்தன. இக்குழுவிற்கு வி.இ. லெனின் தலைவராக இருந்தார். பீட்டர்ஸ்பர்க் ''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்தின்'' உறுப்பினர். 1896ல் கைது செய்யப்பட்டு வியாத்கா குபேர்னியாவுக்கு அனுப்பப்பட்டார்.

குரூப்ஸ்கயா நதேஸ்தா கன்ஸ்தன்தீனவ்ன (1869—1939) —கட்சியின் சோவியத் அரசின் தலைசிறந்த பிரமுகர். போதனை இயல் வல்லுனர். வி. இ. லெனினின் துணை

வியார். 1898 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். 1890ல் பீட்டர்ஸ்பர்கில் மாணவர் மார்க்சியக் குழுவில் சேர்ந்தார். 1891 முதல் 1896 வரை தொழிலாளர்களுக்கான ஞாயிற்றுக் கிழமை மாலைநேரப் பள்ளியில் பணியாற்றினர். பீட்டர்ஸ்பர்க் ''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டக் கழகத்தில்'' 1895ல் சேர்ந்தார். 1896ல் கைதுசெய்யப்பட்டார். மூன்ருண்டு காலத்திற்கு சைபீரியச் சிறை வாசத்தண்டனை விதிக்கப்பட்டார். இத்தண்டனையை ஷுஷென்ஸ்கயே கிராமத்தில் வி. இ. லெனினுடனும் பின்னர் ஊஃபாவிலும் கழித்தார். 1901 வசந்தகாலத்தில் வெளிநாட்டில் குடியேறினர். இஸ்க்ரா பத்திரிகையின் செயலாளராகவும் பின்னர் வ்பெரியோத் என்ற போல்ஷிவிக் பத்திரிகையின் செயலாளராகவும் பணியாற்றினர். 1905—1907 புரட்சிக் காலத்தில் பீட்டர்ஸ்பர்கில் நிறுவனக்-கட்சிப் பணி புரிந்தார். போல்ஷிவிக்குகளின் மத்தியக் கமிட்டிச் செயலாளராக இருந்தார். 1907ல் வெளிநாட்டுக்கு மீண்டும் போனர். ருஷ்யாவின் கட்சி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் இங்கு லெனினுக்கு உதவினர். 1917 ஏப்ரலில் பெத்ரோகிராதுக்குத் திரும்பி வந்து ரு.ச.ஜ. தொ. க. மத்தியக் கமிட்டியின் செயலகத்திலும் பத்திரிகைப் பிரிவிலும் பணியாற்றினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்பு ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் கல்வி சம்பந்தமான மக்கள் கமிசாரகத்தின் உறுப்பினராஞர். 1929 முதல் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் கல்வி சம்பந்தமான மக்கள் கமிசாரகத்தில் துணைத் தலைவர். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழுவின் உறுப்பினர். கட்சியின் முதலாவது, ஐந்தாவது காங்கிரசுகளைத் தவிர எல்லாக் காங்கிரசுகளிலும் கலந்து கொண்டார். 1924—1927ல் அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போ.) மத்தியக் கட்டுப்பாட்டுக் கமிஷனின் உறுப்

பினர். 1927 முதல் அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டி உறுப்பினர்.

கூன் பேலா (1886—1939)—சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபலமான பிரமுகர். ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1914ல் இராணுவத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டார். 1916ல் போர்க் கைதியானார். தோம்ஸ்கில் போர்க் கைதியாக இருந்த போது ரு.ச.ஜ. தொ. க. (போ.)வில் சேர்ந்தார், ரகசியக் கட்சி வேலை செய்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பின்பு உள்நாட்டுப் போரில் தீவிரமாக ஈடுபட்டார். 1918 இலையுதிர் காலத்தில் ஹங்கேரிக்குத் திரும்பினார். 1919 மார்ச்சில் ஹங்கேரிய சோவியத் குடியரசை அமைத்தவர்களில், அதன் தலைவர்களில் ஒருவர். ஹங்கேரியப் புரட்சி தோல்வியுற்ற பிறகு (1919 ஆகஸ்டு) சோவியத் ருஷ்யாவிற்கு வந்தார். தெற்குப் போர் முனையின் புரட்சி இராணுவ சோவியத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர் கிரீமியாவின் புரட்சிக் கமிட்டியின் தலைவர். 1921—1923ல் யூரலில் நிர்வாகக் கட்சிப் பணி புரிந்தார். கம்யூனிஸ்டு அகிலத்தை உருவாக்குவதில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். 1921 முதல் கம்யூனிஸ்டு அகிலச் செயற்குழு உறுப்பினர்.

கொல்லந்தாய் அலெக்சாந்த்ரா மிஹைலவ்னா (1872—1952)—90ஆம் ஆண்டுகளிலிருந்து புரட்சிகர இயக்கத்திலிருந்தார். முதல் ருஷ்யப் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டார். 1906—1915ல் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்தார். 1915 முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். 1908—1917ல் வெளிநாட்டில் வாழ்ந்தார். 1917 பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு ருஷ்யாவுக்குத் திரும்பினார். கட்சியின் 6ஆவது காங்கிரசில் மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியில் தீவிர

மாகப் பங்கெடுத்துக் கொண்டார். 1917 அக்டோபருக்குப்பின் அரசு அறச் செயல் மக்கள் கமிசார். 1918ல் பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கைக்கு எதிராகப் பேசினுர். 1920ல் ரு. க. க. (போ.) மத்தியக் கமிட்டியின் பெண்கள் பிரிவின் தலைவர். 1921ல் அவர் கட்சி விரோதக் குழுவான ''தொழிலாளர் எதிர்ப்பில்'' தீவிரமாகப் பங்கு பற்றினுர். 1921—1922ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் சர்வதேசப் பெண்கள் செயலகத்தின் செயலாளர். 1923 முதல் 1952 வரை பொறுப்பான ராஜிய வேலை செய்தார்.

சிசேரின் கியோர்கி வசீலியெவிச் (1872—1936)—சோவியத் அரசுப் பிரமுகர். தலைசிறந்த ராஜிய நிபுணர். 1904 முதல் 1917வரை வெளிநாட்டில் வாழ்ந்தார். அங்கு 1905ல் ரு. ச. ஐ. தொ. க. உறுப்பினரானுர். எதிர்ப் புரட்சிக் காலத்தில் மென்ஷிவிசத்தின் ஆதரவாளர். முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதி. 1917 இறுதியில் போல்ஷிவிக் நிலையை மேற்கொண்டார். பிரெஸ்ட் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் உறுப்பினர். 1918 முதல் 1930 வரை வெளி விவகாரங்களின் மக்கள் கமிசார். ஜெனேவாவிலும் லோசானிலும் நடந்த சர்வதேச மாநாடுகளில் சோவியத் தூதுக் குழுக்களின் தலைவர். அனைத்து ருஷ்ய மத்தியச் செயற்குழு, சோவியத் யூனியன் மத்தியச் செயற்குழு ஆகியவற்றின் உறுப்பினர். அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போ.) 14ஆவது 15 ஆவது காங்கிரசுகளில் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செமஷ்கோ நிகோலாய் அலெக்சாந்தரவிச் (1874—1949) —சோவியத் அரசின் பிரபல பிரமுகர். சோவியத் உடல் நலத் துறையை ஒழுங்கமைத்தவர்களில் ஒருவர். 1893 முதல் ரு.ச.ஐ.தொ.க. உறுப்பினர். நீஷ்னி நோவ்கரதில் 1905ஆம் வருட புரட்சிச் சம்பவங்களில் பங்கு கொண்டவர். 1906ல் ஒன்பது மாதச் சிறைத்

தண்டனைக்குப்பின்பு வெளி நாட்டுக்குச் சென்று குடியேறினார். 1907ல் ஸ்விட்சர்லாந்துப் போலீசால் கைது செய்யப்பட்டார். ஜார் அரசதிகாரிகளிடம் இவரை ஒப்படைக்க முயன்றது ஸ்விஸ் போலீஸ். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு பாரிசுக்குப் போனார். அங்கு போல்ஷிவிக் கட்சி மத்தியக் கமிட்டியினது வெளிநாட்டு அலுவலகத்துக்குச் செயலாளராக இருந்தார். 1917 அக்டோபர் புரட்சிக்கான தயாரிப்பு வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டார். 1918—1930ல் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் உடல் நலத் துறையின் மக்கள் கமிசார். 1930ல் அனைத்து ருஷ்ய மத்தியச் செயற்குழுவில் வேலை செய்யத் தொடங்கினார். 1922ல் முதல் சமுதாயச் சுகாதாரப் பிரிவை உருவாக்கினார். அதற்கு 27 வருடம் தலைவராக இருந்தார். 1945—1949ல் விஞ்ஞான-ஆராய்ச்சி மருத்துவக் கழகங்களின் டைரெக்டராக இருந்தார்.

செரஃபிமோவிச் அலெக்சாந்தர் செரஃபிமவிச் (1863—1949)—தலைசிறந்த சோவியத் எழுத்தாளர். 1918 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். 1883ல் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் பௌதிக-கணிதவியல் பிரிவில் சேர்ந்தார். இங்கு புரட்சியாளரான லெனினது அண்ணன் அலெக்சாந்தர் இலீச் உல்யானவைச் சந்தித்தார். 1887ல் மூன்றும் அலெக்சாந்தர் கொல்லப்பட்ட போது பிரகடனம் எழுதினார். இதற்காகக் கைது செய்யப்பட்டு அர்காங்கெல்ஸ்க் குபேர்னியாவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு 1890 வரை இருந்தார். சைபீரியச் சிறைவாசக் காலத்தில் இவரது இலக்கியப் பணி தொடங்கியது.

செர்னேவ் ஓஸிப் இவானவிச்—சைபீரிய விவசாயி. சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் கட்சி உறுப்பினராய் இருந்ததால் கைது செய்யப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு

நீஷ்னி நோவ்கரத் குபேர்னியாவில் விவசாயக் கூட்டுறவு ஆசிரியராக இருந்தார். விவசாயப் பத்திரிகையான பெத்னதாவில் பணியாற்றினார். 1924ல் பெத்னதாவின் விவசாய நிருபர்களது முதல் காங்கிரசின் வேலையில் பங்கெடுத்துக் கொண்டார்.

தனீலவ் பியொத்தர் அர்ஹீபவிச் (1889—1940)—புத்திலவ் தொழிற்சாலையின் பழைய தொழிலாளி. 1914 முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர்.

த்ஸ்ஹாகயா மிகயீல் கிரிகோரியெவிச் (1865—1950)—கம்யூனிஸ்டுக் கட்சியின், சோவியத் அரசின் பிரபல பிரமுகர். 1880ல் புரட்சி வேலையைத் தொடங்கினார். 1898 முதல் கட்சி உறுப்பினர். ஜார்ஜியா, காகசஸ் பகுதிகளில் புரட்சிகர சமூக-ஜனநாயக இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர்களில் ஒருவர். பலமுறை கைது செய்யப்பட்டார், சிறைப்பட்டார், சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். 1902—1907ல் காகசஸ் பகுதியில் சட்டவிரோதக் கட்சிப் பணி செய்தார். 1905ல் காகசஸ் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டார். 1907—1917ல் ஜெனீவாவில் வாழ்ந்தார். 1917 ஏப்ரலில் ருஷ்யாவிற்குத் திரும்பினார். 1917—1920ல் கட்சியின் திஃப்லிஸ் கமிட்டி உறுப்பினர். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு உறுப்பினர். சர்வதேசியக் கட்டுப்பாட்டுக் கமிஷனின் தலைமைக் குழு உறுப்பினர். 1920 முதல் 1931 வரை காகசஸ் மத்தியச் செயற்குழுவின் தலைவராகவும் பின்னர் ஜார்ஜிய மத்தியச் செயற்குழுவின் தலைவராகவும் வேலை செய்தார்.

பத்வோய்ஸ்கி நிகோலாய் இலீச் (1880—1948)—ருஷ்யாவின் புரட்சி இயக்கத்தின் பிரபல பிரமுகர். செஞ்சேனையை நிறுவியவர்களில் ஒருவர். 1901 முதல் ரு.ச.ஜ.தொ. க. உறுப்பினர். உக்ரேனியா, யாரஸ்லாவ்ல், இவானவோ-வஸ்நெசேன்ஸ்க், கஸ்த்ரமா,

பகூ, பீட்டர்ஸ்பர்க் ஆகியவற்றிலும் மற்ற நகரங்களிலும் தலைமறைவுப் புரட்சி வேலை செய்தார். பல முறை கைது செய்யப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டார். போல்ஷிவிக் பத்திரிகைகளான **ஸ்வெஸ்தா, பிராவ்தா** ஆகியவற்றில் 1912—1914ல் வேலை செய்தார். 1917 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை ரு.ச.ஜ.தொ.க. (போ.) பெத்ரோகிராத் கமிட்டியிலும் பெத்ரோகிராத் சோவியத்திலும் உறுப்பினர். கட்சியினது மத்தியக் கமிட்டியின் இராணுவ அமைப்பினது தலைவர். **ஸல்தாத்ஸ்கயா பிராவ்தாவின்** (''படைவீரன் உண்மை'') ஆசிரியர். அக்டோபர் நாட்களில் பெத்ரோகிராத் இராணுவப்-புரட்சிக் கமிட்டியின் தலைவர். உள்நாட்டுப் போர், அன்னிய இராணுவத் தலையீட்டுக் காலத்தில் பொறுப்பான இராணுவப் பணியாளர். கட்சியின் 13, 14, 15ஆவது காங்கிரசுகளில் அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கட்டுப்பாட்டுக் கமிஷனின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வாழ்வின் இறுதி ஆண்டுகளில் பிரசார, இலக்கியப் பணி புரிந்தார்.

பயானவா மர்கரித்த வசீலியெவ்னு (1883—1976)—1917 ஏப்ரல் முதல் சோ.க.க. உறுப்பினர். 1902 முதல் புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டவர். அர்கான் கெல்ஸ்க், சிம்ஃபிரோபல், பீட்டர்ஸ்பர்க், ஊஃபா ஆகியவற்றிலும் மற்ற நகர்களிலும் கட்சி வேலை செய்தவர். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு பெத்ரோகிராத் சோவியத்தின் உறுப்பினராக இருந்தார். 1917 ஜூலை தினங்களுக்குப் பின்பு தலைமறைவாய் இருந்த வி.இ.லெனின் சில காலம் இவர் வீட்டில் மறைந்திருந்தார். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு விவசாயத்துறை மக்கள் கமிசாரகத்தில் வேலை செய்தார். பின்னர் மாஸ்கோ விலங்கியல் கழகத்தின் முதல்வராக இருந்தவர். 1925 முதல் 1934 வரை பல்வேறு அமைப்புகளில் பொருளாதார வேலையும் பிற வேலைகளும் செய்தவர். 1933 முதல் சிறப்புப் பென்ஷன்தாரர்.

பப்ரோவ்ஸ்கயா (ஜெலிக்சோன்) த்செத்சிலியா சமோய்லவ்ன (1876—1960)—1898 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினராய் இருந்தவர். 1900ல் ஹார்கவில் கைது செய்யப்பட்டார். ஒரு வருடச் சிறைக்குப் பின்னே வீதெப்ஸ்க் குபேர்னியாவுக்கு அனுப்பப்பட்டார். சிறைக் குடியிருப்பிலிருந்து தப்பியோடி ஸ்விட்சர்லாந்துக்குப் போனுர். இஸ்க்ரா பத்திரிகையின் ஏஜெண்டாக இருந்தார். திஃபிலீஸ், பகூ, மாஸ்கோ, கஸ்த்ரமா, இவானவோ-வஸ்நெசேன்ஸ்க், செர்பூஹோவ் ஆகிய இடங்களில் தலைமறைவுக் கட்சிப் பணி செய்தார். பல முறை கைது செய்யப்பட்டார், சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். 1905, 1917 புரட்சிகர சம்பவங்களில் பங்கெடுத்துக் கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு பெரிய கட்சி, இலக்கியப் பணி புரிந்தார். 1928—1940ல் கம்யூனிஸ்டு அகிலத்தில் பணியாற்றினுர். பின்னர் அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டியின் கீழ் மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின் இன்ஸ்டிடியூட்டில் பணியாற்றினுர்.

பரிசோவ் இலியா இவானவிச் (1892—1941)—1911 முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். பிப்ரவரி, அக்டோபர் புரட்சிகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். 1919—1921ல் கிரெம்ளின் இயந்திரத் துப்பாக்கிப் பயிற்சிப் பிரிவின் கமிசார். ரு.க.க.(போ.) மாஸ்கோ கமிட்டி உறுப்பினர். 1922 முதல் கட்சி, பொருளாதார, சோவியத் வேலையில் பங்கெடுத்துக் கொண்டவர்.

பெத்ரோவ்ஸ்கி கிரிகோரி இவானவிச் (1878—1958)—புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்ட முதியவர்களில் ஒருவர், கட்சி அரசியல் பிரமுகர். 1897 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். பலமுறை கைது செய்யப்பட்டார், சிறையிடப்பட்டார். முதல் ருஷ்யப் புரட்சியில் தீவிரமாகக் கலந்து கொண்டவர். 1912ல்

நான்காவது அரசாங்க டூமாவின் உறுப்பினர். 1914 நவம்பரில் டூமாவின் மற்ற போல்ஷிவிக் உறுப்பினர்களுடன் கைது செய்யப்பட்டார். துருஹான்ஸ்கி வட்டாரத்திற்கும் பின்னர் யாகூத்ஸ்க் பகுதிக்கும் நிரந்தரக் குடியேற்றத்துக்காக அனுப்பப்பட்டார். பிப்ரவரிப் புரட்சி நாட்களில் சமூகப் பாதுகாப்புக் கமிட்டியின் தலைவராகவும், யாகூத்ஸ்க் பகுதிக் கமிசாராகவும் இருந்தார். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு பெத்ரோகிராதிலும், உக்ரேனியாவிலும் தீவிரப் புரட்சிகரப் பணியாற்றினார். 1917—1919ல் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் உள்விவகாரத் துறை மக்கள் கமிசார். 1919—1939ல் அனைத்து உக்ரேனிய மத்தியச் செயற்குழுவின் தலைவர்; சோவியத் யூனியன் மத்தியச் செயற்குழுவின் துணைத்தலைவர். 1921—1939ல் உக்ரேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1926 முதல் 1939 வரை அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழுவின் வேட்பாள உறுப்பினர். 1939 முதல் சோவியத் யூனியனின் புரட்சி மியூசியத்தின் உதவி டைரெக்டர்.

போன்ச்-புருயேவிச் விளதீமிர் திமீத்ரியெவிச் (1873—1955)—கம்யூனிஸ்டுக் கட்சியின் பழைய உறுப்பினர். புரட்சி இயக்கத்தில் 16 வயதிலிருந்து இருந்தவர். ரு. ச. ஜ. தொ. க.யின் இரண்டாவது காங்கிரசுக்குப் பின்பு போல்ஷிவிக். 1903 முதல் ஜெனீவாவில் ரு.ச.ஜ. தொ.க. மத்தியக் கமிட்டிப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். அங்கு நூலகம் ஒன்றையும் ரு.ச.ஜ.தொ.க.மத்தியக் கமிட்டி பத்திரிகை ஆலயத்தையும் நிறுவினார். சட்ட விரோத போல்ஷிவிக் பிரசுரங்கள் பலவற்றை நிறுவுவதிலும் பதிப்பிப்பதிலும் பங்கெடுத்துக் கொண்டார். அக்டோபர் புரட்சியின் முதல் நாட்களிலிருந்து 1920 வரை மக்கள் கமிசாரவையின் காரியங்களை நிர்வகித்தார். வாழ்க்கையின் இறுதி

ஆண்டுகளில் சோவியத் விஞ்ஞானப் பேரவையினது வரலாறு, மதம், நாத்திகம் ஆயின சம்பந்தமான மியூசியத்துக்கு டைரெக்டராயிருந்தார்.

ராஹ்யா ஏய்னோ அப்ராமவிச் (1886—1936)—1903 முதல் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். 1905—1907ல் பின்லாந்து ரயில் பாதையில் பீட்டர்ஸ்பர்கில் வேலை செய்தார். புரட்சி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டார். 1908—1910 பின்லாந்தின் சமூக-ஜனநாயகக் கட்சியின் ருஷ்யப் பிரிவுக்கு செயலாளராயும் பின்னர் தலைவராயும் இருந்தவர். 1917 ஜூலை நாட்களில் கட்சியின் மத்தியக் கமிட்டி பணித்தபடி, தலைமறைவாய் இருந்த லெனினுடன் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டிருந்தவர். 1918ல் பின்லாந்தில் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போது செங்காவல் படைப் பிரிவுகளுக்குக் கமாண்டராக இருந்தவர். 1919ல் யுதேனிச் முனையில் இராணுவ இணைப்புக்களின் கமாண்டர். வாழ்வின் இறுதி ஆண்டுகளில் சிறப்புப் பென்ஷன்தாரர்.

லூனச்சார்ஸ்கி அனதோலி வசீலியெவிச் (1875—1933)—சோவியத் அரசின், சமூகத் துறையின் பிரபலமான பிரமுகர். 1892ல் சமூக-ஜனநாயக அமைப்பில் சேர்ந்தார். ரு.ச.ஜ.தொ. க.யின் இரண்டாவது காங்கிரசுக்குப் பின் போல்ஷிவிக். போல்ஷிவிக் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் உறுப்பினர். முதல் உலகப் போரின் போது சர்வதேசிய நிலையை மேற்கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பின்பு 12 ஆண்டு காலம் ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் கல்வி சம்பந்தமான மக்கள் கமிசாராக இருந்தார். 1929 முதல் சோவியத் யூனியன் மத்தியச் செயற்குழுவின் விஞ்ஞானக் கமிட்டித் தலைவர். 1933 முதல் சோவியத் யூனியனின் அரசியல் பிரதிநிதியாக ஸ்பெயினில் இருந்தார். தலைசிறந்த பேச்சாளர், பொது விவகாரக் கட்டுரையாளர், இலக்கிய விமர்சகர், நாடகாசிரியர்.

வில்லியம்ஸ் *ஆல்பெர்ட் ரைஸ் (1883—1962)—முற்போக்கு அமெரிக்கப் பத்திரிகையாளர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிச் சம்பவங்களில் பங்கெடுத்துக் கொண்டவர். 1918ல் செஞ்சேனை அணிகளில் சேர்ந்தார். லெனினைப் பலமுறை சந்தித்து அவருடன் உரையாடினார். வி. இ. லெனினது அனுமதியுடன் சர்வதேசியப் படையை நிறுவியவர். லெனினுடன் சந்திப்புகள் பற்றிய புத்தகத்தையும்,* **ருஷ்யப் புரட்சியில் மக்கள் திரள்கள்** *எனும் புத்தகத்தையும் அ.ஐ.நா.ல் வெளியிட்டவர்.*

வினக்ராதவ் *அலெக்சாந்தர் அலெக்சாந்தரவிச் (பி. 1883)—பள்ளி ஆசிரியர். வெஸ்யகோன்ஸ்க் மாவட்டத்திலும் த்வெர் குபேர்னியாவிலும் சோவியத் ஆட்சியதிகாரத்தை நிறுவுகிற போராட்டத்தில் பங்கு கொண்டவர். சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளில் வெஸ்யகோன்ஸ்க் நகரப் பள்ளியில் வேலை செய்தார். அதே நேரத்தில் சுற்றியுள்ள கிராமங்களில் பெரிய கலாசார-கல்விப் பணியை நடத்தினார். 1958 முதல் பென்ஷன் பெறுபவர்.*

ஸாரவ் *அலெக்சாந்தர் அலேக்சேயெவிச் (பி. 1904)—சோவியத் கவிஞர். 1918 முதல் 1925 வரை கம்சமோல் வேலையில் இருந்தார். 1920 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். 1921 முதல் இவரது கவிதைகள் அச்சாகத் தொடங்கின.*

ஸெத்கின் *கிளாரா (1857—1933)—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் பிரபலமான தலைவர். 1878 முதல் அவர் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமான பங்கு வகித்தார். ஜெர்மனியில் பெண் தொழிலாளர் மற்றும் பாட்டாளிகள் இயக்கத்தின் தலைவர். சர்வதேச சோஷலிஸ்டு மாதர் ஸ்தாபனங்களில் வேலை செய்தார். ரோஸா லுக்சம்பர்க், லீப்க்னெஹ்ட் ஆகியோருடன் சேர்ந்து ஜெர்மன்*

சமூக-ஜனநாயகக் கட்சியின் ''இடதுசாரிப்'' பிரிவின் தலைவராக இருந்தார். அவர் ''சர்வதேசக்'' குழுவை அமைக்கும் பணியில் பங்குபற்றினார். இதுவே பின்னால் ''ஸ்பார்த்தக்'' கழகம் என்று மீண்டும் அமைக்கப் பட்டது. 1915ல் போர்-எதிர்ப்பு நடவடிக்கைகளுக் காகச் சிறையிலடைக்கப்பட்டார். 1919க்குப் பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். இதே ஆண் டில் அவர் மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். தன் வாழ்வு முழுதிலும் இந்தப் பதவியில் இருந்தார். 1921ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவின் உறுப்பினர் ஆனார். 1924 முதல் சர்வதேசப் புரட்சிப் போராட்ட வீரர்கள் உதவி நிறுவனத்தின் செயற்குழுவின் தலைவராக இருந்தார். ஜெர்மன் நாடாளுமன்றத்திற்குப் பல முறை உறுப் பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்தாசவா யெலேனா திமீத்ரியெவ்னா (1873—1967)— கம்யூனிஸ்டு கட்சி, சோவியத் அரசு ஆகியவற்றின் பிரபல பிரமுகர். 1898 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். சோஷலிச உழைப்பு வீரர் விருது பெற்றவர். பீட்டர்ஸ்பர்க், ஓரியோல், மாஸ் கோ ஆகிய நகரங்களில் தலைமறைவுக் கட்சி வேலை செய்தவர். 1907—1912ல் திஃப்லிஸில் வேலை செய் தார். பிராகில் நடைபெற்ற ஆறுவது அனைத்து ருஷ்ய மாநாட்டில் ரு.ச.ஜ.தொ.க. (போ.) மத்தியக் கமிட்டி யின் காண்டிடேட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். பலமுறை கைது செய்யப்பட்டார். 1913ல் யெனிசேய்ஸ்க் குபேர்னியாவில் குடியேறுவதற்காக அனுப்பப்பட்டார். 1917ல் ரு.ச.ஜ.தொ.க.(போ.) மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழுவின் செயலகத்தை ஒழுங்கமைத்தார். 9ஆவது காங்கிரஸ் வரை கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளராக இருந்தார். 1920ல் கட்சியின் பெத்ரோதிராத் குபேர் னியக் கமிட்டியின் நிர்வாகப் பிரிவுக்குத் தலைவராக

இருந்தார். கீழத்திசை மக்களிடையே பிரசார, நடவடிக்கை ஆகியவற்றுக்கான சோவியத்தின் செயலாளராக பகூவில் வேலை செய்தார். 1921—1938ல் கம்யூனிஸ்டு அகிலம், அனைத்து ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போ.) மத்தியக் கட்டுப்பாட்டுக் கமிஷன், சர்வதேசப் புரட்சிப் போராட்ட வீரர்கள் உதவி நிறுவனம் ஆகியவற்றில் வேலை செய்தார். சர்வதேச இலக்கியம் என்ற பத்திரிகையின் பிரெஞ்சு, ஆங்கில மொழிப் பதிப்புகளுக்கு 1938 முதல் 1946 வரை ஆசிரியர்.

ஸ்வெர்த்லோவா (நோவ்கரத்செவா) க்ளாவ்தியா திமஃபேயெவ்னு (1876—1960)—புரட்சி இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொண்டவர். 1904 முதல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். யாகோவ் மிஹைலவிச் ஸ்வெர்த்லோவின் துணைவியார். யூரல் பிரதேசத்தில் சட்ட விரோதமான புரட்சிகர மார்க்சியக் குழுக்களின் வேலையில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். 1904ல் ரு.ச.ஜ.தொ.க.யின் எகதிரின்புர்க் கமிட்டிக்கும், 1906ல் பேர்ம் கமிட்டிக்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பலமுறை கைது செய்யப்பட்டுக் கடத்தப்பட்டார். 1917—1918ல் ''பிரிபோய்'' எனும் போல்ஷிவிக் பதிப்பகத்துக்குத் தலைவர். 1918 மார்ச்சில் ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டிச் செயலாளரின் உதவியாளராக நியமிக்கப்பட்டார். 1920ல் ரு.க.க. (போ.) மத்தியக் கமிட்டியின் செயலகத்துக்குத் தலைவராக இருந்தார். 1920—1925ல் அனைத்து ருஷ்யச் செயற்குழுவின் குழந்தை நிறுவனங்கள் சம்பந்தமான பிரிவுக்குத் தலைவராக இருந்தார். பின்னர் பல பதிப்பகங்களில் பணியாற்றினார்.

ஷெல்குனேவ் வசீலி அந்திரேயெவிச் (1867—1939)—கட்சியின் முதிய உறுப்பினர். உலோகத் தொழிலாளி. 1886 முதல் புரட்சி இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார். பீட்டர்ஸ்பர்க் ''தொழிலாளி வர்க்க விடுதலைப்

போராட்டக் கழகத்தில்'' பங்கெடுத்துக் கொண்டார். 1901ல், ரு.ச.ஜ.தொ. க. யின் யெக்கத்திரினஸ்லாவ் கமிட்டியிலும் 1902ல் பகூ கமிட்டியிலும் வேலை செய் தார். 1905ல் போல்ஷிவிக்குகளின் பீட்டர்ஸ்பர்க் அமைப்பின் தீவிரப் பணியாளர். பலமுறை கைது செய்யப்பட்டார், சிறையிடப்பட்டார். இதன் காரண மாகக் கடுமையாக நோய் வாய்ப்பட்டார், 1905ல் கண்பார்வை இழந்தார். 1910ல் **ஸ்வெஸ்தா** (''நட் சத்திரம்'') என்ற போல்ஷிவிக் பத்திரிகையை உருவாக்குவதில் பணியாற்றினார். அதன் ஆசிரியராக இருந்தார். பின்னர் **பிராவ்தாவின்** தீவிரப் பணியாளர். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்பு பெத்ரோகிராதி லும், 1918 முதல் மாஸ்கோவிலும் தீவிரக் கட்சிப் பணி புரிந்தார். முதிய போல்ஷிவிக்குகளின் கழகத்தில் வேலை செய்தார்.

ஷ்லிஹ்தெர் அலெக்சாந்தர் கிரிகோரியெவிச் (1868—1940)—கட்சி, சோவியத் அரசுப் பிரமுகர். விஞ் ஞானப் பேரவை உறுப்பினர். 1891 முதல் ரு.ச.ஜ. தொ.க. உறுப்பினர். 1903 முதல் போல்ஷிவிக். முதல் ருஷ்யப் புரட்சியில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். பலமுறை கைது செய்யப்பட்டார், சிறையிடப்பட் டார், சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். 1917 அக் டோபர் தினங்களில் மாஸ்கோ, மாஸ்கோ குபேர்னியா ஆகிய பகுதிகளின் உணவுப் பொருள் கமிசார், இராணுவப்-புரட்சிக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் புரட்சிக்குப் பின் விவசாயத் துறை மக்கள் கமிசார், ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் உணவுப் பொருள் துறை மக்கள் கமிசார். 1919ல் உக்ரேனிய உணவுப் பொருள் துறை மக்கள் கமிசார். 1920ல் தம்போவ் குபேர்னிய செயற்குழுவின் தலைவர், வெளி வர்த்தகத் துறை மக்கள் கமிசாரகத்தின் உறுப் பினர். 1921—1927 ராஜியத் துறைப் பணியாளர். 1927—1930ல் உக்ரேனிய விவசாயத் துறை மக்கள்

கமிசார். அடுத்த ஆண்டுகளில் விஞ்ஞானக் கட்சிப் பணி செய்தார். 1923 முதல் உக்ரேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டி, மத்தியக் கமிட்டியின் அமைப்புப் பிரிவு உறுப்பினர். 1926—1937ல் உக்ரேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழுவின் வேட்பாள உறுப்பினர்.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயைசெய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் —641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

*3—22—75—*D, *மதுரை சாலை;*
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.